
# 1987 அவ்யக்த முரளி



## பொருளடக்கம் -28

18.01.1987 கர்மாதீத் நிலையின் அடையாளங்கள்!

21.01.1987 சுய இராஜ்ய அதிகாரியே விஷ்வ இராஜ்ய அதிகாரி!

23.01.1987 வெற்றி நட்சத்திரத்தின் விசேஷத்தன்மைகள்!

20.02.1987 நினைவு, பவித்திரதா (தூய்மை) மற்றும் உண்மையான சேவாதாரியின் மூன்று ரேகைகள்!

18.03.1987 உண்மையான ஆன்மீக நாயகியின் அடையாளங்கள்!

20.03.1987 அன்பு மற்றும் சத்தியத்தினுடைய அதிகாரத்தின் சமநிலை!

01.10.1987 ஈஸ்வரிய அன்பு -வாழ்க்கை மாற்றத்திற்கான அஸ்திவாரம்!

05.10.1987 பிராமண வாழ்க்கையின் சுகம், திருப்தி மற்றும் மகிழ்ச்சி!

**09.10.1987 அலௌகீக இராஜ்யசபையின் செய்திகள்!**

**14.10.1987 பிராமண வாழ்க்கை -தந்தையிடம் சர்வ சம்பந்தங்களையும் அனுபவம் செய்யக்கூடிய வாழ்க்கை!**

**17.10.1987 பிராமண வாழ்க்கையின் அலங்காரம் – தூய்மை!**

**21.10.1987 தீபராஜா மற்றும் தீபராணிகளின் கதை!**

**25.10.1987 நான்கு விஷயங்களிலிருந்து விடுபட்டு இருங்கள்!**

**29.10.1987 உடல், மனம், செல்வம் மற்றும் சம்மந்தத்தின் சக்தி!**

**02.11.1987 சுயமாற்றத்திற்கு ஆதாரம் -உண்மையான உள்ளத்துடன் உணருதல்!**

**06.11.1987 நிரந்தர சேவாதாரி ஆவதற்கான சாதனம் -நான்கு விதமான சேவைகள்!**

**10.11.1987 சுபசிந்தக்மணி ஆகி விஷ்வத்தை கவலைகளிலிருந்து விடுவித்து விடுங்கள்!**

**14.11.1987 பூஜைக்குரிய தேவ அத்மா ஆவதற்கான சாதனம் -பவித்ரதாவின் சக்தி!**

**18.11.1987 அந்தர்முகி மற்றும் ஏகாந்தவாசி ஸ்திதி!**

**22.11.1987 உதவி செய்யும் கடலிடமிருந்து பலமடங்கு உதவியை பெறுவதற்கான விதி!**

**27.11.1987 எல்லையற்ற வைராக்கியம் உடையவர்களே உண்மையான இராஜரிஷி!**

**06.12.1987 வெற்றிக்கான ஆதாரம் -சிரேஷ்ட விருத்தி (உள்ளுணர்வு)!**

**10.12.1987 உடல், மனம்,பொருள் மற்றும் சம்பந்தத்தின் சிரேஷ்ட வியாபாரம்!**

**14.12.1987 சங்கமயுகத்தின் பிராமண வாழ்க்கையின் மூன்று சிறப்பு அம்சங்கள்!**

**18.12.1987 கர்மாதீத் நிலையின் ஆழமான விளக்கம்!**

**23.12.1987 சிந்தனை சக்தி மற்றும் மூழ்கிய நிலை!**

**27.12.1987 நிச்சய புத்தி வெற்றி ரத்தினங்களின் அடையாளங்கள்!**

## 31.12.1987 புதிய வருடம் -தந்தைக்கு நிகராக மாறவேண்டிய வருடம்!

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!**

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂

# 18.01.1987 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# கர்மாதீத் நிலையின் அடையாளங்கள்!

இன்று அவ்யக்த பாப்தாதா தனது அவ்யக்த ஸ்திதி பவ எனும் வரதானம் பெற்ற குழந்தைகளை அவ்யக்த பரிஸ்தாக்களை சந்திக்க வந்துள்ளார். இந்த அவ்யக்த சந்திப்பு முழு கல்பத்திலேயே ஒரே ஒரு முறை சங்கம யுகத்தில் மட்டுமே நடைபெறுகிறது, சத்யுகத்தில் கூட தேவதைகளின் சந்திப்பு நிகழும், ஆனால் பரிஸ்தாக்களின் சந்திப்பு அவ்யக்த சந்திப்பு இப்போது மட்டுமே நிகழும், நிராகார் பாபாவும், அவ்யக்த பிரம்மாபாபா மூலமாக சந்திப்பை நிகழ்த்துகின்றார். நிராகார் தந்தைக்கும் இந்த பரிஸ்தாக்களின் குழு மிகப் பிரியமானது. எனவே, தனது இருப்பிடத்தை விட்டு ஆகாரி (சூட்சுமவதனம்) மற்றும் சாகாரி (பூலோகம்) உலகில் சந்திப்பை கொண்டாட வருகின்றார். பரிஸ்தா குழந்தைகளின் அன்பின் ஈர்ப்பால் தந்தையும் வேடம், ரூபம் மாறி குழந்தைகளின் உலகில் வர வேண்டியுள்ளது. இந்த சங்கமயுகம் தந்தைக்கும் குழந்தைகளுக்கும் மிகப் பிரியமான வித்தியாசமான உலகமாகும். சினேகம் அனைத்திலும் பெரிய சக்தி பந்தனமேயில்லாத, தேகமேயில்லாத அசரீரியான இறைவனையும் வாடகை மனித உடலில் வர வைத்து விட்டது. இதுவே குழந்தைகள் அன்பின் அடையாளமாகும்.

இன்று நாலாபுறமும் உள்ள குழந்தைகளின் அன்பு, அன்பு கடலான தந்தையுடன் இணைகின்ற தினமாகும். குழந்தைகள் சொல்கிறார்கள் நாங்கள் பாப்தாதாவை சந்திக்க வந்துள்ளோம். குழந்தைகள் தந்தையை சந்திக்க வந்துள்ளார்களா? தந்தை குழந்தைகளை சந்திக்க வந்துள்ளாரா? அல்லது இருவருமே மதுபனில் சந்திக்க வந்துள்ளார்களா? குழந்தைகள் அன்புக் கடலில் மூழ்க வந்துள்ளார்கள் ஆனால் பாபா ஆயிரக்கணக்கான கங்கையில் மூழ்க வந்துள்ளார். ஆகவே கங்கையும், கடலும் சந்திக்கும் விசித்திரமான மேளா இது. அன்புக்கடலில் மூழ்கி கடலுடன் இணைந்து விடுகின்றனர். இன்றைய நாளை பாப்சமான் ஆவதற்கான நினைவு நாள் மற்றும் சக்தி வாய்ந்த நன்னாளாக

கருதப்படுகிறது. ஏன்? இன்றைய நாள் பிரம்மாபாபாவிற்கு இணையாக சம்பன்னம் மற்றும் சம்பூர்ணமாக மாறுவதற்கான நினைவு நாளாகும். பிரம்மா குழந்தைகள் மற்றும் தந்தை ஏனெனில் பிரம்மா குழந்தையாகவும் உள்ளார், தந்தையாகவும் உள்ளார். இன்றைய நாளில் பிரம்மா குழந்தை ரூபத்தில் நல்ல குழந்தையாகி அன்பின் சொரூபமாகி சமநிலைக்கான எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர். மிக பிரியமாகவும் மிகவும் விலகியும் இருப்பதற்கான உதாரணமாக விளங்கினார். பாப்சமான் கர்மாதீத நிலை அதாவது கர்ம பந்தங்களிலிருந்து விடுபட்ட நிலை விலகியிருப்பதற்கான உதாரணமாக திகழ்ந்தார். முழு கல்பத்திலும் கர்மங்களின் கணக்கு வழக்கிலிருந்து விடுபட்டிருப்பதற்கான நிலை காட்டினார். சேவையைத் தவிர வேறெந்த பந்தனமுமில்லை. சிலர் சேவையெனும் பந்தனத்தில் சிக்கிக் கொள்வார். இவர் சேவையின் பந்தனத்திலும் சிக்கியதில்லை. பிரம்மாபாபாவும் சேவாதாரி தான் ஆனால் சேவை மூலமாக எல்லைக்குட்பட்ட கணக்கு வழக்கிலும் ராயலான ஆசைகளில் சிக்கிக் கொள்வார்கள் சிலர். உண்மையான சேவாதாரி அதிலிருந்தும் விடுபட்டிருப்பார். இதனையே கர்மாதீத நிலை என சொல்லப்படும். தேக பந்தனம், தேக உறவுகளின் பந்தனங்களால், சேவையில் சுய நலம் இவையாவும் கர்மாதீத நிலை அமைய விடாது தடை செய்வதாகும். கர்மாதீத் நிலை என்பது ராயல் கணக்கு வழக்கும் இல்லாதிருப்பதாகும்.

கீதா பாடசாலைக்கு நிமித்தமானவர்கள் சேவாதாரிகள் வந்துள்ளீர்கள். சேவையென்பது பிறரையும் விடுவிப்பது. பிறரை விடுவிக்கிறேன் என்று தான் மாட்டிக் கொள்வதில்லை? நஷ்ட மோகா ஆகாமல் அதற்கு பதிலாக லௌகீக குழந்தைகளின் மீதெல்லாம் மோகத்தை விட்டு விட்டு மாணவர்கள் மீது மோகம் ஏற்டவில்லையே இவர் மிக நல்லவர், மிக நல்லவர், நல்லவர் நல்லவர் என்று சொல்லி கடைசியில் எனது என்ற எண்ணம் பந்தனத்தில் மாட்டி விடவில்லையே? தங்கச்சங்கிலியும் மோசமானது தான். இன்றைய நாள், எனது என்ற விசயத்திலிருந்து விடுபடுவது அதாவது கர்மாதீத நிலைக்காக அவ்யக்த தினத்தை கொண்டாடுவது. இதுவே அன்பின் அடையாளமாகும். கர்மாதீத நிலை அடைய வேண்டும் என்ற இலட்சியம் அனைவருக்கும் நன்றாக உள்ளது. இப்போது சோதனை செய்யுங்கள் கர்ம பந்தனங்களிலிருந்து எவ்வளவு தூரம் விடுபட்டுள்ளேன் முதல் விசயம் லௌகீகம் மற்றும் அலௌகீகம்,

கர்மம், சம்மந்தம் அனைத்திலும் தன்னலமின்றி இருப்பது மற்றொன்று முன்தைய பிறவியின் கர்ம கணக்கில் இன்றைய முயற்சியின் பலவீனத்தின் காரணமாக ஏதேனும் வீணான சுபாவம், சம்ஸ்காரத்திற்கு வசமாகாமல் விடுபட்டிருக்கிறேனா? எப்போதாவது ஏதேனும் பலவீனமான சுபாவம் சம்ஸ்காரம் முந்தைய சுபாவம் சம்ஸ்காரம் வசமாக்குகிறதா. பந்தனமற்றவரா பந்தனமுள்ளவரா! நான் விரும்பவில்லை ஆனால் சுபாவம், சம்ஸ்காரம் வசமாகியிருக்கிறேன் என்று சொல்லக் கூடாது அப்படியானால் பந்தனமற்றவர் அல்ல. மேலும் ஏதேனும் சேவை குழு இல்லறத்தின் பிரச்சனைகள் தன் சுயநிலையை உன்னத நிலையை தடுமாறச் செய்கிறதெனில் அதுவும் பந்தனமற்ற நிலை அல்ல. இதிலிருந்தும் விடுதலை. மூன்றாவது பழைய உலகம் பழைய இறுதி தேகத்தின் ஏதேனும் வியாதி தன்னிலையை தடுமாறச் செய்யக் கூடாது இதிலிருந்து விடுதலை. வியாதி வருவது ஒன்று, அதனால் ஆடிப்போவது மற்றொன்று, வருவதாவது இயற்கை!அதனால் ஆடிப்போவது பந்தனத்தின் அடையாளமேயாகும். சுய சிந்தனை, ஞான சிந்தனை பிறர் மீது சுப சிந்தனை வைப்பது இதையெல்லாம் விட்டு விட்டு வியாதியைப் பற்றியே சிந்திப்பது இதிலிருந்து விடுபட்டு இருக்க வேண்டும். சிந்திப்பதே கவலையாகின்றது. இதிலிருந்து விடுபடுவதே கர்மாதீத நிலையாகும். பிரம்மாபாபா இந்த அனைத்து பந்தங்களிலிருந்து விடுபட்டு கர்மாதீத நிலையை அடைந்தார். இன்றைய நாளும் பிரம்மாபாபாவைப் போல கர்மாதீத நிலையை அடைவதற்கான தினமாகும். இன்றைய நாளின் மகிமை புரிந்ததா! நல்லது.

இன்றைய சபை விசேஷமாக சேவாதாரி புண்ணியாத்மாக்களின் சபை, கீதா பாடசாலை திறப்பதென்பது புண்ணியாத்மா ஆவதாகும். அனைத்திலும் பெரிய புண்ணியம் ஒவ்வொரு ஆத்மாவும் சதா காலத்திற்கு அனேக பிறவியின் பாவங்களிலிருந்து விடுவிப்பது இதுவே புண்ணியம். பெயர் நன்றாக உள்ளது, கீதா பாடசாலை. கீதா பாடசாலைகாரர்கள் என்றாலே சதா தானும் கீதை படித்து பிறருக்கும் கற்பிப்பார்கள். கீதை ஞானத்தின் முதல் பாடமே அசரீரியாகுக மற்றும் இறுதி பாடம் மோகத்தை வென்று நினைவின் சொரூபமாகுக! முதல் பாடம் விதி முறையாகும் இறுதி பாடம் அதனால் அடையும் பலனாகும். கீதா பாடசாலைகாரர்கள் எப்பாதும் இந்த பாடம் படிப்பவரா அல்லது முரளி மட்டும் சொல்பவரா? ஏனெனில் உண்மையான கீதா

# 1987 அவ்யக்த முரளி

பாடசாலையின் விதி இதுவே -முதலில் தான் படிப்பது, மாறுவது பிறகு மற்றவருக்கு நிமித்தமாகி பாடம் கற்பிப்பது. கீதா பாடசாலைக்காரர்கள் அனைவரும் இந்த விதிப்படி சேவை செய்கிறீர்களா? ஏனெனில் நீங்கள் அனைவரும் உலகிற்கு முன்பாக பரமாத்மாவின் படிப்பிற்கு உதாரணமாகத் திகழ்பவர்கள். உதாரண வாழ்விற்கு மதிப்பு உள்ளது. உதாரணமான உங்களது வாழ்க்கை அனேகருக்கு அப்படி வாழ வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்குகிறது. ஆக கீதா பாடசாலைகாரர்களுக்கு மிகப் பெரிய பொறுப்பு உள்ளது. உதாரண வாழ்வில் சிறிதே குறை தென்பட்டாலும் அனேக ஆத்மாக்கள் பாக்யத்தை உருவாக்குவதற்குப் பதிலாக வஞ்சிப்பதில் நிமித்தமாகக் கூடும் ஏனெனில் பார்ப்பவர்கள், கேட்பவர்கள் அனைவரும் நேருக்கு நேராக நிமித்தமாக உள்ள உங்களையே பார்ப்பார்கள். பாபா மறைமுகமாக இருக்கின்றார் ஆகவே அப்படி உன்னதமான செயல் செய்து காட்டுங்கள். உங்களைப் பார்த்து அனேக ஆத்மாக்களுக்கு உயர் செயல் செய்து தனது பாக்ய ரேகையை அமைத்துக் கொள்ளட்டும். ஒன்று தன்னை உதாரணமாக உணருங்கள். மற்றொன்று தனது சிம்பல் (அடையாளத்தை) நினைவில் வையுங்கள். சிம்பல் என்ன தெரியுமா? கமல மலர் பாப்தாதா கூறியுள்ளார் கமல மலராகுங்கள். அதனை அமல் படுத்தவில்லையெனில் கமல மலராக முடியாது. எனவே உதாரணம் மற்றும் கமல மலர் இந்த சிம்பளை புத்தியில் வையுங்கள். சேவை எவ்வளவு தான் வளர்ச்சியடைந்தாலும் விலகியும் அன்பாகவும் இருக்க வேண்டும். அன்பானவராக மட்டுமின்றி, விலகியிருந்து அன்பானவராகவும். ஏனெனில் சேவை மீது அன்பு வைப்பது நல்ல விசயம் தான், ஆனால் அன்பு ஈர்ப்பாக மாறி விடக் கூடாது. இதுவே விலகியிருந்து அன்பு செய்வதாகும். சேவைக்கு நிமித்தமானீர்கள் மிக்க நல்லது. புண்ணியாத்மா பெயரும் கிடைத்து விட்டது. எனவே தான் புண்ணிய செயல் செய்பவர்களுக்கான அழைப்பு தரப்பட்டது. இனி போகப் போக பலன் எனும் பாடம் படித்துள்ளீர்கள் அதனை மனோ நிலையில் உள் உணர்வால் பெற வேண்டும். புரிந்ததா? இனி என்ன செய்ய வேண்டும்? நல்லது .

அனைவரும் விசேஷமாக ஒரு விசயத்தில் எதிர்பார்ப்புடன் உள்ளீர்கள்? அது என்ன? (ரிசல்ட் சொல்லலாமா) ரிசல்ட் நீங்கள் சொல்வீர்களா பாபா சொல்லட்டுமா? பாப்தாதா என்ன கூறினார் ரிசல்ட் பெறுவீர்களா? தருவீர்கள்? டிராமா படி நடந்தது அனைத்தும் நன்றாகவே நடந்தது என்றே

சொல்ல வேண்டும். அனைவரும் நல்ல இலட்சியம் வைத்துள்ளீர்கள். லட்சணமும் அவரவர் சக்திக்கேற்ப செயலில் தென்படுகிறது. நீண்ட கால வரதானம் வரிசைக் கிரமாக தாரணை செய்கிறீர்கள் இப்போது வரதானம் பெற்றுள்ளீர்கள். வரதானி மூர்த்தியாகி பாப்சமான் வரதானம் வழங்கும் வள்ளலாகுக. இப்போது பாப்தாதா என்ன விரும்புகின்றார்? வரதானம் கிடைத்து விட்டது. இந்த ஆண்டு நீண்ட காலம் பந்தனமற்றவராகி பாப்சமான் கர்மாதீத நிலைக்கான சிறப்பு பயிற்சி செய்து உலகிற்கு விலகியும் அன்பாகவும் இருக்கும் அனுபவம் செய்ய வையுங்கள். எப்போதாவது அனுபவம் செய்ய வைப்பது என்ற விதி முறையை மாற்றி நீண்ட கால அனுபவங்களின் பலனாக நீண்ட காலம் ஆடாத, அசையாத, உறுதியான, தடைகளற்ற, தவறுகளற்ற, தவறான எண்ணங்களற்ற, தவறான செயலற்ற அதாவது நிராகாரி, நிர்விகாரி, நிர்அகங்காரி இந்த மனோநிலையை உலகிற்கு முன்பு நேரில் காண்பிக்கவும். இதுவே பாப்சமான் ஆவதாகும் புரிந்ததா? ரிசல்டில் முதலில் தன் மீது தானே திருப்தி பெற்றவர் எத்தனை பேர்? ஏனெனில் ஒன்று தன் மீது திருப்தி, மற்றொன்று பிராமண பரிவாரத்தின் மீது திருப்தி, மூன்றாவது பாபாவின் மீது திருப்தி. இம்மூன்றிலும் இன்னும் மதிப்பெண் பெற வேண்டும். ஆக திருப்தியாகுங்கள், திருப்தியாக்குங்கள். பாபாவின் திருப்திமணியாகி சதா மின்னிக் கொண்டிருங்கள். பாப்தாதா குழந்தைகளின் மீது மதிப்பு வைக்கிறார். எனவே, குப்தமாக குறிப்பேடை சொல்கிறார். தேவதையாக மாறுபவர்கள் தான் நீங்கள், எனவே பாப்தாதா அந்த முழுமை நிலையை பார்க்கின்றார். நல்லது

அனைவரும் திருப்தி மணிகள் தானே? வளர்ச்சியைக் கண்டு மகிழ்ச்சியடையுங்கள் நீங்கள் அனைவரும் அபுரோடு வரையிலும் வரிசை வருவதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றீர்களா. இப்போது அறை முழுவதும் நிரம்பியுள்ளது, பிறகு என்ன செய்வீர்கள்? உறங்குவீர்களா அல்லது அகண்ட யோகம் செய்வீர்கள் இதுவும் நடக்கும் எனவே, சிறிதளவிலேயே திருப்தி பெறுங்கள் 3-அடி நிலத்திற்கு பதிலாக ஒரு அடி நிலம் கிடைத்தது அப்போதும் திருப்திபடுங்கள். முன்பு அப்படி இருந்தது என நினைக்காதீர்கள் பரிவார வளர்ச்சியினைக் கண்டு மகிழ்ச்சி அடையுங்கள். ஆகாயம் பூமியும் என்றும் குறையாது, மலைகள் அதிகம் உள்ளது, இது நடக்க வேண்டும் இது கிடைக்க வேண்டும் இதுவே விசயத்தை பெரிதாக்கி விடுகிறது. இந்த தாய்மார்களும் சிந்தனையில்

மூழ்கி விடுகின்றனர். என்ன செய்வது எப்படி செய்வது ஒரு நாள் அப்படியும் வரும் பகலில் வெயிலில் உறங்குவீர்கள் இரவில் விழித்திருப்பீர்கள். அவர்கள் நெருப்பை மூட்டி சுற்றி அமர்ந்து குளிர் காய்கிறார்கள். நீங்கள் யோக அக்னியை மூட்டி அமர்கிறீர்கள். விருப்பமா? கட்டில் வேண்டுமா இருக்கை வேண்டுமா அமர்வதற்கு இந்த மலையை இருக்கை ஆக்கி விடுங்கள். சாதனங்கள் உள்ள மட்டிலும் பயன்படுத்தி சுகம் பெறுங்கள் இல்லையா? மலையே இருக்கையாக மாற்றி விடுங்கள். முதுகு சாய்ந்து ஓய்வு எடுக்க வேண்டும் அல்லவா வேறொன்றுமில்லை 5000-பேர் வந்தால் நாற்காலி போட வேண்டும் மேலும் கூட்டம் அதிகம் ஆனால் கட்டிலை எல்லாம் விட்டு விட வேண்டும். எவரெடி ஆகுங்கள் கட்டில் கிடைத்தாலும் சரி, தரையே கிடைத்தாலும் சரி இப்படித்தான் ஆரம்பத்தில் அதிக பயிற்சி செய்தார்கள். 15-நாட்கள் மருந்து கடை மூடி இருந்தது. கடும் காய்ச்சல் உள்ளவரும் கூட கம்பு ரொட்டி உண்டு மோர் குடித்து வாழ்ந்தார்கள். நோய் வாய்ப்படவில்லை. அனைவரும் ஆரோக்கியமாகவே வாழ்ந்தார்கள். ஆரம்பத்தில் பயிற்சியாவும் கடைசியில் நடைபெறும் இல்லையெனில் நினைத்து பாருங்கள் காய்ச்சலில் மோர் குடித்தால் என்ன ஆகும் என்று உலகில் உள்ளவர்கள் பயந்தே போவார்கள் ஆனால் ஆசீர்வாதம் எனும் மருந்து உடனிருந்தது, எல்லாம் விளையாட்டாயிற்று சோதனை அல்ல, கடினம் அல்ல, தியாகம் இல்லை சுற்றுலா பயணம் போல் ஆனது. அனைவரும் தயாரா. ஏற்பாடு செய்பவரிடம் ஆசிரியர்கள் பெயர் பெற்றுக் கொண்டு செல்வீர்களா. எனவே, அழைப்பதில்லை தக்க சமயத்தில் இந்த சாதனங்களிலிருந்து விலகி சாதனையாளர் ஆவீர்கள். ஆன்மீக மிலிட்டரி அல்லவா! மிலிட்டரி நடிப்பும் நடிக்க வேண்டும் இப்போது அன்பான குடும்பம் வீடு என அனுபவம் செய்கிறீர்கள் ஆனால் தற்சமயத்தில் ஆன்மீக மிலிட்டரி ஆகி அன்புடன் அனைத்தையும் கடந்து விட வேண்டும். இதுவும் மிலிட்டிரியின் சிறப்பம்சம்.

குஜராத்திற்கு விசேஷமான வரதானம் உள்ளது எவரெடியாக இருக்கின்றார்கள். சாக்கு போக்கு சொல்வதில்லை என்ன செய்வது எப்படி செய்வது ரிசர்வேஷன் கிடைக்காது என்று சொல்லாமல் வந்து சேர்ந்து விட்டீர்கள். குஜராத்திற்கு சொல்படி நடப்பவர் என்ற விசேஷ ஆசிர்வாதம் உள்ளது. ஏனெனில் சேவையில் எப்போதும் ஆம் சரி என்றே சொல்கிறார்கள் சற்று கடினமான சேவைகள் எப்போதும் குஜராத்திற்கு

தரப்படுகிறது. ரொட்டி சேவை யார் செய்கிறார்கள், இட ஒதுக்கீடு, அங்கிங்கு ஓடி ஓடி செய்யும் சேவை குஜராத் செய்கிறார்கள் பாப்தாதா எல்லாம் பார்க்கின்றார் பாப்தாதாவிற்கு தெரியாது என்பதில்லை உழைப்பவர்களுக்கு சிறப்பான அன்பும் ப்ராப்தம் ஆகிறது. அருகே இருப்பது பாக்கியமே. பாக்கியத்தை மேலும் உயர்த்துவதற்கான முறையும் நன்றாக வைத்துள்ளார்கள். பாக்கியத்தை வளர்க்கும் விதம் அனைவருக்கும் தெரியாது. சிலருக்கு பாக்கியம் கிடைத்தாலும் வளர்ப்பதில்லை அப்படியே நின்று விடுகிறார்கள் ஆனால் குஜராத் பாக்கியம் பெற்றவர்கள் மேலும் பாக்கியத்தை வளர்த்துக் கொள்கிறார்கள் இதை பார்த்து பாப்தாதா மகிழ்ச்சியடைகின்றார் ஆகவே பாபாவின் விசேஷ ஆசீர்வாதம் இதுவும் பாக்கியத்தை அடையாளமேயாகும். புரிந்ததா?

நாலாபுறமுமிருந்து அன்பான குழந்தைகள் வந்து சேர்ந்துள்ளீர்கள் பாப்தாதாவும் உள்நாட்டு, வெளிநாட்டு அன்பான குழந்தைகளைப் பார்த்து அன்பிற்கு கைமாறாக சதா அழியாத சினேகி பவ எனும் வரதானம் தருகின்றார். அன்பால் வெகு தொலைவிலிருந்து ஓடி வந்துள்ளீர்கள் ஓட்டப் பந்தயத்தில் ஓடி வந்தது போல் மிக அருகே ஓடி வந்துள்ளீர்கள் மிக அருகே நேரில் வந்து விட்டீர்கள் அது போலவே முயற்சியிலும் பறக்கும் கலை மூலமாக பாப்சமான் ஆவது என்றாலே சதா பாபாவிற்கும் அருகே இருப்பதாகும். இங்கு எப்படி எதிரில் வந்துள்ளீர்களோ அப்படியே பறக்கும் கலை மூலமாக பாபாவிற்கு பக்கத்தில் இருங்கள் புரிந்ததா என்ன செய்ய வேண்டும்? அன்பானது உள்ளப் பூர்வமான அன்பு திலாராம் பாபா விடம் நீங்கள் வந்து சேர்வதற்கு முன்னதாகவே வந்து சேர்ந்து விடுகிறது எதிரில் இருந்தாலும் இப்போதெல்லாம் உள்நாட்டு வெளிநாட்டு குழந்தைகள் உடலால் தொலைவில் இருந்தாலும் அனைவரும் மிக மிக அருகாமையில் தில்தக்த் நஷினாக உள்ளார்கள் உள்ளம் தான் அனைத் திலும் மிக நெருங்கிய இடம் ஆகவே நீங்கள் அனைவரும் உள்நாடு வெளிநாட்டில் இல்லை தந்தையின் இதயத்தில் அமர்ந்துள்ளீர்கள் அருகே வந்து விட்டீர்கள் அல்லவா! அனைத்து குழந்தைகளின் அன்பு நினைவுகள் புகார், இனிமையான ஆன்மீக உரையாடல் பரிசுகள் அனைத்தும் பாபாவிடம் வந்து சேர்ந்து விட்டது. பாப்தாதாவும் அன்பான குழந்தைகளுக்கு சதா உழைப்பிலிருந்து விடுபட்டு அன்பிலேயே மூழ்கி

விடுங்கள் என்ற வரதானம் தருகின்றார் அனைவருக்கும் கைமாறு கிடைத்து விட்டதா நல்லது!

அனைத்து சினேகி ஆத்மாக்களுக்கு சதா அருகிலிருக்கும் ஆத்மாக்களுக்கு சதா பந்தனம் இலலாமல் கர்மாதீத நிலையை நீண்ட காலமாக அனுபவம் செய்யும் விசேஷ ஆத்மாக்களுக்கு அனைத்து மன சிம்மாசனத்தில் அமர்ந்துள்ள திருப்தி மணிகளுக்கு பாப்தாதாவின் அவ்யக்த மனோ நிலை அடைக என்ற வரதானமும் அன்பு நினைவும் மற்றும் இரவு வணக்கம் மற்றும் காலை வணக்கம்.

**வரதானம்: பழைய கணக்கை முடித்து புதிய சம்ஸ்காரம் என்ற புத்தாடை அணிந்து கொண்டு பாபாவைப் போன்று முழுமை பெற்றவர் ஆகுக!**

எப்படி தீபாவளி அன்று புத்தாடை அணிகின்றீர்கள் அதுபோலவே நீங்கள் மறுபிறவி எடுத்த நன்னாளில் புதிய சம்ஸ்காரம் என்ற ஆடை அணிந்து புத்தாண்டை கொண்டாடுங்கள். தனது பலவீனங்கள் குற்றங்கள், குறைகள் மிகவும் மிருதுவான மனோ நிலை போன்ற பழைய கணக்குகளை எல்லாம் அழித்து விட்டு உண்மையான தீபாவளி கொண்டாடுங்கள். இந்த புதிய பிறவியில் புதிய சம்ஸ்காரத்தினை கையாளுங்கள் அப்போது பாபாவைப் போன்று முழுமை நிலை அடைவீர்கள்.

**சுலோகன்: சுத்தமான எண்ணங்களெனும் பொக்கிஷம் சேமிப்பாகி விடுவதால் வீண் எண்ணங்களால் நேரம் வீணாகாது!**

✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱

# 21.01.1987 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சுய இராஜ்ய அதிகாரியே விஷ்வ இராஜ்ய அதிகாரி!

இன்று பாக்கியவிதாதா தந்தை தன்னுடைய சர்வ சிரேஷ்ட பாக்கியவான் குழந்தைகளை பார்த்துக் கொண்டு இருக்கின்றார். பாப்தாதாவிற்கு முன்னர் இப்பொழுதும் இந்தக் குழு மட்டும் இல்லை, ஆனால், நாலாபுறங்களிலும் உள்ள பாக்கியவான் குழந்தைகள் உள்ளனர். உள்நாடு மற்றும் வெளி நாட்டின் எந்த மூலையில் வேண்டுமானாலும் இருக்கலாம், ஆனால், எல்லைக்கப்பாற்பட்ட தந்தை எல்லைக்கப்பாற்பட்ட குழந்தைகளை பார்த்துக் கொண்டு இருக்கின்றார். இந்த சாகார வதனத்தில் நிலத்தின் எல்லை என்பது உள்ளது ஆனால், எல்லைக்கப்பாற்பட்ட தந்தையின் திருஷ்டியின் சிருஷ்டியானது எல்லைக்கப்பாற்பட்டது ஆகும். தந்தையின் திருஷ்டியில் அனைத்து பிராமண ஆத்மாக்களின் சிருஷ்டி நிறைந்து உள்ளது. எனவே, திருஷ்டியின் சிருஷ்டியில் அனைவரும் எதிரில் உள்ளனர். அனைத்து பாக்கியவான் குழந்தைகளை பாக்கியவிதாதா பகவான் பார்த்து பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார். எவ்வாறு குழந்தைகள் தந்தையைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றனரோ, அது போன்று தந்தையும் அனைத்து குழந்தைகளையும் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார். எல்லைக்கப்பாற்பட்ட தந்தைக்கு, குழந்தைகளைப் பார்த்து, ஒவ்வொரு குழந்தையும் இந்த விஷ்வத்திற்கு முன் விசேஷ ஆத்மாக்களின் பட்டியலில் உள்ளனர் என்ற ஆன்மிக போதை மற்றும் பெருமை உள்ளது. 16,000-மணி மாலையின் கடைசி மணியாக இருக்கட்டும், ஆனாலும், தந்தைக்கு முன்னால் வருவதனால், தந்தையுடையவராக ஆவதனால் விஷ்வத்திற்கு முன்பு விசேஷ ஆத்மாவே ஆவார். ஆகையினால், வேறு எந்த ஞானத்தின் விஸ்தாரத்தை அறிந்து கொள்ள முடியவில்லையானாலும் ஒரு பாபா என்ற வார்த்தையை உள்ளப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு இருக்கின்றார்கள் மற்றும் உள்ளத்திலிருந்து பிறருக்கு சொல்லி இருக்கின்றார்கள் என்றால் அவர்கள் விசேஷ ஆத்மா ஆகி விட்டார்கள்,

# 1987 அவ்யக்த முரளி

உலகின் முன்னர் மகான் ஆத்மா ஆகி விட்டார்கள், உலகத்தின் முன் மகான் ஆத்மா என்ற சொரூபத்தில் மகிமைக்கு உரியவர்கள் ஆகி விட்டார்கள். அந்தளவு சிரேஷ்டமான மற்றும் சகஜமான பாக்கியம் ஆகும், புரிந்து இருக்கிறீர்களா? ஏனெனில், பாபா என்ற வார்த்தையே சாவி ஆகும். எதனுடைய சாவி? அனைத்து பொக்கிஷங்கள், சிரேஷ்ட பாக்கியத்தினுடைய சாவி. சாவி கிடைத்து விட்டது என்றால் பாக்கியம் மற்றும் பொக்கிஷம் அவசியம் கிடைத்தேயாகும். எனவே, அனைத்து தாய்மார்கள் மற்றும் பாண்டவர்கள் சாவியைப் பெறுவதற்கான அதிகாரி ஆகியிருக்கின்றீர்களா? சாவியைப் போடத் தெரிகிறதா அல்லது அவ்வப்போது சாவியைப் போட முடியவில்லையா? சாவியைப் பயன்படுத்துவதற்கான விதி என்னவென்றால் உள்ளத்தால் அறிந்துகொள்வது மற்றும் ஏற்றுக் கொள்வது என்ப தாகும். வாயினால் மட்டும் சொன்னால் சாவி இருந்தும் திறக்க முடியாது. உள்ளத்தில் இருந்து கூறினால் பொக்கிஷம் சதா ஆஜராகி இருக்கும். அளவற்ற பொக்கிஷம் அல்லவா. அளவற்ற பொக்கிஷமாக இருக்கும் காரணத்தால் எத்தனை குழந்தைகள் உள்ளனரோ, அவர்கள் அனைவரும் அதிகாரிகள் ஆவார்கள். திறந்த பொக்கிஷம், நிறைந்த பொக்கிஷம் ஆகும். பின்னால் வருபவர்களுக்கு பொக்கிஷம் தீர்ந்து விட்டது என்பது கிடையாது. இதுவரை எத்தனை பேர் வந்திருக்கின்றீர்களோ அதாவது தந்தையினுடையவர் ஆகியிருக்கின்றார்களோ மற்றும் வருங்காலத்தில் கூட எத்தனை பேர் தந்தை யினுடையவர் ஆகப்போகின்றவர்களோ, அவர்கள் அனைவருக்கும் கூட பொக்கிஷமானது பல மடங்கு அதிகமாக உள்ளது. ஆகையினால், பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக்கும், யார் எந்தளவு பொக்கிஷத்தை அடைய விரும்புகின்றீர்களோ, அதை திறந்த உள்ளத்தோடு பெற்றுக் கொள்ளுங்கள் என்ற பொன்னான வாய்ப்பைக் கொடுக்கின்றார்கள். வள்ளலிடம் குறை இல்லை, பெறக்கூடியவர்களின் தைரியம் மற்றும் முயற்சியுமே ஆதாரம் ஆகும். முழு கல்பத்திலும் இத்தனை குழந்தைகளைக் கொண்டவரும் மற்றும் ஒவ்வொரு குழந்தையும் பாக்கியவான் குழந்தையாக இருக்கும்படியான எந்தத் தந்தையும் கிடையாது. ஆகையினாலேயே ஆன்மிக பாப்தாதாவிற்கு ஆன்மிக போதை உள்ளது என்று கூறப்பட்டது.

அனைவருடைய மதுபன் வருவதற்கான, சந்திப்பதற்கான ஆசை பூர்த்தியாகி விட்டது. பக்தி மார்க்கத்தின் யாத்திரையை விட மதுபனில்

ஓய்வாக அமர்வதற்கும், தங்குவதற்கும் இடம் கிடைத்துள்ளது அல்லவா. கோவில்களிலோ நின்று கொண்டே தரிசனம் மட்டும் செய்கின்றார்கள். இங்கு ஓய்வாக அமர்ந்துள்ளீர்கள் அல்லவா. அங்கேயோ ஓடுங்கள் ஓடுங்கள், செல்லுங்கள், செல்லுங்கள் என்று கூறுவார்கள். மேலும், இங்கே ஓய்வாக அமர்ந்து கொள்ளுங்கள், ஓய்வாக, நினைவின் மகிழ்ச்சியோடு ஆனந்தத்தைக் கொண்டாடுங்கள். மகிழ்ச்சியைக் கொண்டாடுவதற்காகவே சங்கம யுகத்திற்கு வந்திருக்கின்றீர்கள். எனவே, ஒவ்வொரு நேரமும் நடக்கும்போதும், சுற்றும்போதும், சாப்பிடும்போதும், அருந்தும்போதும் மகிழ்ச்சி என்ற பொக்கிஷத்தை சேமிப்பு செய்தீர்களா? எவ்வளவு சேமித்து இருக்கிறீர்கள்? 21-பிறவிகளுக்கு ஓய்வாக உண்ணும் அளவிற்கு சேமித்து இருக்கின்றீர்களா? மதுபன், விசேஷமாக அனைத்து பொக்கிஷங்களையும் சேமிப்பு செய்வதற்கான இடமாகும். ஏனெனில், இங்கே ஒரு பாபாவைத் தவிர வேறு எவருமில்லை என்பதை சாகார ரூபத்திலும் அனுபவம் செய்கின்றீர்கள். அங்கே புத்தி மூலம் அனுபவம் செய்கின்றீர்கள் ஆனால், இங்கே பிரத்யட்ச சாகார வாழ்வில் கூட தந்தை மற்றும் பிராமண பரிவாரத்தைத் தவிர வேறு எவராவது கண்களுக்குத் தெரிகிறார்களா என்ன? ஒரே ஈடுபாடு, ஒரே விசயம், ஒரே பரிவாரம் மற்றும் ஏக்ரஸ் ஸ்திதி, வேறு எந்த இரசனையும் இல்லை. படிப்பது மற்றும்படிப்பின் மூலம் சக்திசாலி ஆகுவது, மதுபனில் இந்த வேலை மட்டுமே உள்ளது அல்லவா. எத்தனை வகுப்புகள் கேட்கின்றீர்கள்? இங்கு விசேஷமாக சேமிப்பு செய்வதற்கான சாதனம் கிடைக்கிறது, ஆகையினாலேயே அனைவரும் ஓடோடி வந்திருக்கின்றீர்கள். பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும், சதா சுயராஜ்ய அதிகாரி ஸ்திதியில் முன்னேறிக் கொண்டே செல்லுங்கள் என்ற நினைவை ஏற்படுத்துகின்றார். சுயராஜ்ய அதிகாரி -விஷ்வ இராஜ்ய அதிகாரி ஆவதற்கான அடையாளம் இதுவே ஆகும்.

சில குழந்தைகள் பாபாவிடம் உரையாடல் செய்யும்போது நான் எதிர்காலத்தில் என்ன ஆவேன், இராஜா ஆவேனா அல்லது பிரஜை ஆவேனா? என்று கேட்கின்றனர். நான் இராஜா ஆகப்போகிறேனா அல்லது செல்வந்தர் ஆகப்போகிறேனா அல்லது பிரஜை ஆகப்போகிறேனா என்று தன்னைத் தான் ஒரு நாள் சோதித்தீர்கள் என்றால் கூட தெரிந்து விடும் என்று பாப்தாதா குழந்தைகளுக்கு

பதிலளிக்கின்றார்கள். முதலில் அமிர்தவேளையில் இருந்து தன்னுடைய முக்கியமான மூன்று பணிகளின் அதிகாரிகளை, தன்னுடைய சகயோகி, நண்பர் களை சோதனை செய்யுங்கள். அவர்கள் யார்? 1. மனம் அதாவது சங்கல்ப சக்தி. 2. புத்தி அதாவது நிர்ணய சக்தி. 3. கடந்த அல்லது நிகழ்கால சிரேஷ்ட சம்ஸ்காரம். இந்த மூன்றும் விசேஷ அதிகாரிகள் ஆகும். எவ்வாறு தற்காலத்தில் இராஜாவுடன் மகா மந்திரி அல்லது முக்கிய மந்திரி இருப்பார்கள், அவர்களின் சகயோகத்தால் இராஜ்ய காரியம் நடை பெறும். சத்யுகத்தில் மந்திரி இருக்கமாட்டார்கள் ஆனால், நெருக்கமான உறவினர்கள், நண்பர்கள் இருப்பார்கள். எந்த ரூபத்திலாவது, அது நண்பன் என்றோ அல்லது மந்திரி என்றோ புரிந்து கொள்ளுங்கள் ஆனால், இந்த மூன்றும் சுயத்தின் அதிகாரத்தின்படி செயல்படுகின்றனவா? என்பதை சோதனை செய்யுங்கள். இந்த மூன்றின் மீது சுயத்தின் இராஜ்யம் நடக்கிறதா அல்லது இவற்றின் அதிகாரத்தில் நீங்கள் நடக்கின்றீர்களா? மனம் உங்களை இயக்குகிறதா அல்லது நீங்கள் மனதை இயக்கு கின்றீர்களா? என்ன விரும்புகின்றீர்களோ, எப்பொழுது விரும்புகின்றீர்களோ, அவ்வாறே சங்கல்பம் செய்ய முடிகிறதா? எங்கு புத்தியை ஈடுபடுத்த விரும்புகின்றீர்களோ, அங்கு ஈடுபடுத்த முடிகிறதா? அல்லது புத்தி இராஜாவாகிய உங்களை அலைக்கழிக்கிறதா? சமஸ்காரம் உங்களது கட்டுப்பாட்டில் உள்ளதா? அல்லது நீங்கள் சமஸ்காரங்களுக்கு வசமாகி இருக்கின்றீர்களா? இராஜ்யம் என்றால் அதிகாரம் என்று அர்த்தம். இராஜ்ய அதிகாரி எந்த சக்திக்கு, எந்த சமயம், என்ன கட்டளை கொடுத் தாலும், அவை சொன்ன விதிப்படி காரியம் செய்கின்றனவா அல்லது நீங்கள் சொல்வது ஒன்று, அவை செய்வது இன்னொன்று என்ற நிலையில் இருக்கின்றனவா? ஏனெனில், நிரந்தர யோகி அதாவது சுயராஜ்ய அதிகாரி ஆகுவதற்கான விசேஷ சாதனமே மனம் மற்றும் புத்தி ஆகும். மந்திரமே மன்மனாபவ என்பதாகும். யோகத்தை புத்தியோகம் என்று கூறுகின்றனர். ஒருவேளை, இந்த விசேஷ ஆதார ஸ்தம்பம் (தூண்) தன்னுடைய அதிகாரத்தில் இல்லை அல்லது அவ்வப்போது உள்ளது, அவ்வப்போது இல்லை; இப்பொழுது இருக்கிறது, அடுத்த வினாடி இல்லை; மூன்றில் ஒன்று மட்டும் அதிகாரத்திற்கு உட்பட்டு இல்லை என்று வைத்துக் கொள்ளுங்கள், இதை வைத்து நான் இராஜா ஆவேனா அல்லது பிரஜை ஆவேனா என்று சோதனை செய்யுங்கள். நீண்டகால இராஜ்ய அதிகாரியாக இருக்கும் சமஸ்காரம் நீண்டகால எதிர்கால இராஜ்ய

அதிகாரி ஆக்கும். ஒருவேளை, அவ்வப்போது அதிகாரி, அவ்வப்போது அடிமை ஆகி விடுகின்றீர்கள் என்றால் அரைக் கல்பம் அதாவது முழுமையான இராஜ்ய பாக்கியத்தின் அதிகாரத்தை அடைய முடியாது. பாதி காலத்திற்குப் பின் திரேதாயுக இராஜா ஆகமுடியும், காலம் முழுவதும் இராஜ்ய அதிகாரி அதாவது இராஜ்யம் செய்யக்கூடிய இராயல் குடும்பத்தின் நெருக்கமான சம்பந்தத்தில் இருக்க முடியாது. ஒருவேளை, அடிக்கடி அடிமையானால், அதிகாரி ஆகுவதற்கான சமஸ்காரம் இல்லை ஆனால், இராஜ்ய அதிகாரிகளின் இராஜ்யத்தில் இருப்பவர்கள் ஆவார்கள். அவர்கள் என்னவாகி விட்டார்கள்? பிரஜை. இப்பொழுது இராஜா யார் ஆகுவார்கள், பிரஜை யார் ஆவார்கள் என்பது புரிந்ததா? தன்னுடைய கண்ணாடியில் தன்னுடைய அதிர்ஷ்டத்தின் முகத்தைப் பாருங்கள். இந்த ஞானம் கண்ணாடியாகும். அனைவரிடமும் கண்ணாடி உள்ளது அல்லவா. எனவே, தன்னுடைய முகத்தைப் பார்க்க முடிகிறது அல்லவா. இப்பொழுது நீண்டகால அதிகாரி ஆவதற்கான பயிற்சி செய்யுங்கள். இறுதியில் ஆகி விடுவோம் என்று எண்ணாதீர்கள். ஒருவேளை, இறுதியில் ஆனீர்கள் என்றால் கடைசி ஒரு பிறவி கொஞ்சம் இராஜ்யம் செய்வீர்கள் ஆனால், ஒருவேளை நீண்டகால பயிற்சி இப்பொழு திலிருந்து இல்லை அல்லது ஆதியிலிருந்து பயிற்சியாளர் ஆகவில்லை, ஆதியிலிருந்து இப்பொழுது வரை இந்த விசேஷ ஊழியர்கள் உங்களை தங்களுடைய அதிகாரத்தில் நடத்தினால் அல்லது தடுமாற வைத்துக் கொண்டே இருக்கின்றன அதாவது ஏமாற்றத்தைக் கொடுத்துக் கொண்டே இருக்கின்றன துக்க அலையின் அனுபவம் செய்வித்துக் கொண்டே இருக்கின்றன என்றால் இறுதியில் கூட ஏமாற்றம் கிடைத்து விடும். ஏமாற்றம் என்றால் துக்கத்தின் அலை அவசியம் வரும். இறுதியிலும் கூட பச்சாதாபத்தின் துக்க அலை வரும். ஆகையால், பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் நினைவூட்டுகிறார், இராஜா ஆகுங்கள் மற்றும் தன்னுடைய விசேஷ சகயோகி ஊழியர்கள் அல்லது இராஜ்ய அதிகார நண்பர்களை தன்னுடைய அதிகாரத்தினால் கீழ் நடத்துங்கள். புரிந்ததா?

யார் யார் எந்தளவு சுயராஜ்ய அதிகாரி ஆகி இருக்கின்றார்கள்? என்பதை பாப்தாதா பார்க்கின்றார்கள். நல்லது. அனைவரும் என்னவாக விரும்புகின்றீர்கள்? இராஜா ஆக விரும்புகின்றீர்களா? இப்பொழுது சுயராஜ்ய அதிகாரி ஆகியிருக்கின்றீர்களா அல்லது ஆகிக்

கொண்டிருக்கின்றோம், ஆகி விடுவோம் என்று கூறுகின்றீர்களா? வோம், வோம் என்று கூறக்கூடாது. ஆகி விடுவோம் என்று கூறினால், நல்லது, இராஜ்ய பாக்கியத்தைக் கொடுப்பதற்கும், யோசிப் போம் என்று தந்தையும் கூறுவார். நீண்ட காலத்திற்கான சமஸ்காரம் இப்பொழுதிலிருந்தே இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது அல்லவா. உண்மையில், நீண்ட காலமே இல்லை, கொஞ்ச காலமே உள்ளது. ஆனாலும் கூட இவ்வளவு கொஞ்ச காலத்தின் பயிற்சியும் இல்லாமல் போனால் பிறகு, இறுதி நேரத்தில், இறுதியில் நான் ஆகி விடுவேன் என்று நினைத்தேன் என்று புகார் சொல்லக்கூடாது. ஆகையினாலேயே, எப்பொழுது என்பதற்குப் பதிலாக இப்பொழுது என்று கூறப்பட்டது. பின்னால் எப்பொழுதாவது ஆகி விடுவேன் என்பது கூடாது, இப்பொழுது நடந்தே ஆக வேண்டும். ஆகியே தீர வேண்டும். தன் மீது இராஜ்யம் செய்யுங்கள், தன்னுடன் இருக்கும் சக ஆத்மாக்கள் மீது இராஜ்யம் செய்ய ஆரம்பித்து விடக்கூடாது. யார் சுயத்தின் மீது இராஜ்யம் செய்கின்றார்களோ, அவர்களுக்கு முன் இப்பொழுதும் அன்பின் காரணத்தால் உடனிருக்கும் அனைத்து சக ஆத்மாக்களும், அவர்கள் லௌகீக உறவினரோ, அல்லது அலௌகீக பரிவாரத்தினரோ, அனைவரும் உத்தரவு கொடுங்கள், சரி செய்கின்றேன், என்று கூறிக் கொண்டு துணைவர் ஆகியிருக்கின்றனர். சினேகியாகி, துணைவன் ஆகி சரி என்ற பாடத்தை நடைமுறையில் செய்து காண்பிக்கின்றனர். எவ்வாறு பிரஜைகள் இராஜாவின் சகயோகியாக இருப்பார்களோ, சினேகி யாக இருப்பார்களோ, அவ்வாறு உங்களுடைய இந்த அனைத்து கர்மேந்திரி யங்கள், விசேஷ சக்திகள் சதா உங்களுடைய சினேகியாக, சகயோகியாக இருக்கும். மேலும், இதனுடைய பிரபாவமானது சாகாரத்தில் உங்களுடன் சேவைக்குத் துணையாக இருப்பவர்கள் மற்றும் லௌகீக உறவினர்கள், நண்பர்களிடத்தில் ஏற்படும். தெய்வீக பரிவாரத்தில் அதிகாரி ஆகி கட்டளையிடுவது என்பது முடியாது. சுயம் தனது கர்மேந்திரியங்களை கட்டளைப்படி நடத்தினீர்கள் என்றால் தானாகவே நீங்கள் கட்டளையிடுவதற்கு முன்பே அனைத்து உடனிருக்கும் சக ஆத்மாக்கள் உங்களுடைய காரியத்தில் சகயோகி ஆவார்கள். சுயம் சகயோகி ஆகுவார்கள், கட்டளையிடுவதற்கான அவசியமே இருக்காது. சுயம் தன்னுடைய சகயோகத்தைக் கொடுப்பார்கள். ஏனெனில், நீங்கள் சுயராஜ்ய அதிகாரியாக இருக்கின்றீர்கள். இராஜா என்றால் வள்ளல் என்று அர்த்தம். வள்ளல் சொல்ல வேண்டியது இருக்காது. அதாவது கேட்க

வேண்டியது இருக்காது. ஆகவே, அத்தகைய சுயராஜ்ய அதிகாரி ஆகுங்கள். நல்லது. இந்த சந்திப்பு கூட நாடகத்தில் பதிவாகி இருந்தது. ஆஹா நாடகம் என்று சொல்கின்றீர்கள் அல்லவா. உலகத்தினர் சில நேரம் ஐயோ நாடகம் என்று கூறுவார்கள், சில நேரம் ஆஹா நாடகம் என்று கூறுவார்கள். நீங்கள் சதா என்ன கூறுகின்றீர்கள்? ஆஹா நாடகம்! ஆஹா! எப்பொழுது பிராப்தி கிடைக்கிறதோ, அப்பொழுது பிராப்திக்கு முன் எதுவும் கடினமாகத் தோன்றாது. அதுபோன்று எப்பொழுது இவ்வளவு சிரேஷ்டமான பரிவாரத்துடன் சந்திக்கும் பிராப்தி கிடைத்துக் கொண்டு இருக்கிறதோ, அப்பொழுது எந்தக் கடினமானதும், கடினமாகத் தோன்றாது. கடினமாகத் தோன்றுகிறதா? உணவருந்தும் அறையில் நிற்க வேண்டியதாக உள்ளது. உண்ணும் போதும் பிரபுவின் மகிமை பாடுங்கள் மற்றும் வரிசையில் நிற்கும்போதும் கூட பிரபுவின் மகிமை யைப் பாடுங்கள். இந்த வேலையைச் செய்ய வேண்டும் அல்லவா. இதன் ஒத்திகையும் நடந்து கொண்டு இருக்கிறது. இப்பொழுதோ ஒன்றுமே இல்லை. இப்பொழுது மேலும் வளர்ச்சி அடையும் இல்லையா. இவ்வாறு தன்னை வளைத்துக் கொள்வதற்கான பழக்கத்தை ஏற்படுத்துங்கள், சமயம் எப்படி உள்ளதோ, அப்படி தன்னைத் தான் வளைத்துக் கொள்ள முடிய வேண்டும். தரையில் தூங்குவதற்கான பழக்கம் ஏற்பட்டு விட்டது அல்லவா. கட்டில் கிடைக்கவில்லை ஆதலால் தூக்கம் வரவில்லை -இப்படி இல்லை தானே? டென்ட்டில் கூட தங்குவதற்கான பழக்கம் ஏற்பட்டுவிட்டது அல்லவா. நன்றாக இருந்ததா? குளிரவில்லையா? இப்பொழுது முழு அபுவிலும் டென்ட் போட்டு விடலாமா? டென்ட்டில் தூங்குவது நன்றாக இருந்ததா அல்லது அறை வேண்டுமா? முதன்முதலில் எப்பொழுது பாகிஸ்தானில் இருந்தீர்களோ, அப்பொழுது மகாரதிகளையே தரையில் தூங்க வைக்கப்பட்டது நினைவு இருக்கிறதா? புகழ் வாய்ந்த மகாரதிகள் யார் இருந்தார்களோ, அவர்களை ஹாலில் தரையில் மூன்று அடி இடம் கொடுத்து தூங்க வைக்கப்பட்டது. மேலும், எப்பொழுது பிராமண பரிவாரம் விருத்தி ஆனதோ, அப்பொழுதும் எங்கிருந்து ஆரம்பம் செய்யப்பட்டது? டென்ட்டில் இருந்து தான் ஆரம்பிக்கப்பட்டது அல்லவா. முதன்முதலில் யார் வந்தார்களோ, அவர்களும் டென்ட்டிலேயே தங்கினார்கள், டென்ட்டில் இருந்தவர்கள் மகாத்மா ஆகி விட்டார்கள். சாகார பாபாவின் பாகம் இருந்த போதிலும் கூட டென்ட்டிலேயே தங்கினார்கள். எனவே, நீங்களும் அனுபவம் செய்வீர்கள் அல்லவா. ஆகையால், அனைவரும் ஒவ்வொரு விதத்திலும்

# 1987 அவ்யக்த முரளி

குஷியாக இருக்கின்றீர்களா? நல்லது, பிறகு, மேலும் 10000-டென்ட்டை வரவழைத்து கொடுப்போம், ஏற்பாடு செய்வோம். அனைவரும் குளிப்பதற்கான ஏற்பாட்டைப் பற்றி யோசிக்கின்றீர்கள், அதுவும் நடந்தேறி விடும். எப்பொழுது இந்த ஹால் உருவானதோ, அப்பொழுது அனைவரும் என்ன சொன்னார்கள் என்பது நினைவு இருக்கிறதா? இத்தனை பேர் குளிப்பதற்கான இடத்திற்கு என்ன செய்வது? இந்த இலட்சியத்துடன் இது கட்டப்பட்டது, இப்பொழுது பற்றாகுறை ஆகி விட்டது அல்லது எவ்வளவு கட்டுகின்றீர்களோ, அவ்வளவு பற்றாமல் போகத்தான் வேண்டும், ஏனெனில், இறுதியில் எல்லையற்ற நிலைக்குத் தான் செல்ல வேண்டும். நல்லது.

அனைத்து தரப்பு குழந்தைகள் வந்து சேர்ந்து விட்டீர்கள். இது கூட எல்லையற்ற ஹாலின் அலங்காரம் ஆகி விட்டது. கீழேயும் அமர்ந்திருக்கின்றார்கள் (வெவ்வேறு இடங்களில் அமர்ந்து முரளி கேட்டுக் கொண்டு இருக்கின்றார்கள்). இந்த விருத்தி ஏற்படுவது கூட அதிர்ஷ்டத்தின் அடையாளம் ஆகும். விருத்தி ஏற்பட்டு இருக்கிறது, ஆனால், விதிப்பூர்வமாக நடக்க வேண்டும். இங்கு மதுபனிற்கு வந்து விட்டோம், பாபாவையும் பார்த்து விட்டோம், மதுபனையும் பார்த்து விட்டோம், இப்பொழுது விரும்பியபடி நடக்கலாம் என்பது கூடாது. இவ்வாறு செய்யக்கூடாது. ஏனெனில், சில குழந்தைகள் மதுபனிற்கு வராதவரை பக்காவாக இருக்கின்றார்கள், பிறகு, மதுபனைப் பார்த்து விட்ட பிறகு, கொஞ்சம் கவனக்குறைவாக ஆகி விடுகின்றார்கள். கவனக்குறைவு உடையவராக ஆகக்கூடாது. பிராமணன் என்றால் பிராமண வாழ்க்கை என்பதாகும், எனவே, வாழ்க்கை என்பது நாம் எதுவரை இருக்கின் றோமோ, அதுவரை இருக்கும். வாழ்க்கையை உருவாக்கி இருக்கின்றீர்கள் அல்லவா. வாழ்க்கையை உருவாக்கி இருக்கின்றீர்களா அல்லது கொஞ்ச காலத்திற்காக பிராமணன் ஆகியிருக்கின்றீர்களா? சதா தனது பிராமண வாழ்க்கையின் விசேஷத்தன்மைகளைத் தன்னுடன் வைத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில், இந்த விசேஷத் தன்மைகளால் நிகழ்காலமும் சிரேஷ்டமாக உள்ளது மற்றும் எதிர்காலமும் சிரேஷ்டமாக உள்ளது. நல்லது. பாக்கி என்ன உள்ளது? டோலி (வரதானம்). வரதாதாவின் குழந்தைகளாகவே ஆகி விட்டீர்கள். யார் வரதாதாவின் குழந்தைகளாகவே இருக்கின்றார்களோ, அவர்களுடைய ஒவ்வொரு அடியில்

வரதாதாவிடமிருந்து வரதானம் தானாகவே கிடைத்துக் கொண்டு இருக்கிறது. வரதானமே உங்களுடைய பாலனை ஆகும். வரதானங்களின் பாலனையிலேயே வளர்ந்து கொண்டு இருக்கின்றீர்கள். இல்லையென்றால் சிந்தித்துப் பாருங்கள், இவ்வளவு சிரேஷ்ட பிராப்தி கிடைக்கிறது, ஆனால், உழைப்பு என்ன செய்தீர்கள்? உழைப்பே இல்லாமல் எது கிடைக்கிறதோ, அதையே வரதானம் என்று கூறப்படுகிறது. எனவே, உழைப்பு என்ன செய்தீர்கள் மற்றும் பிராப்தி எவ்வளவு சிரேஷ்டமாகக் கிடைத்துள்ளது. பல பிறவிக்கு பிராப்தியின் அதிகாரி ஆகி விட்டீர்கள். எனவே, வரதாதாவின் வரதானம் ஒவ்வொரு அடியிலும் கிடைத்துக் கொண்டு இருக்கிறது. மேலும், சதா கிடைத்துக் கொண்டே இருக்கும். திருஷ்டி மூலம், பேச்சு மூலம், சம்பந்தத்தின் மூலம் வரதானமே வரதானம் கிடைக்கிறது. நல்லது. இப்பொழுது பொன்விழா கொண்டாடுவதற்கான ஏற்பாடு செய்து கொண்டு இருக்கின்றீர்கள். பொன்விழா என்றால் சதா பொன்னான ஸ்திதியில் நிலைத்து இருப்பதற்கான விழா கொண்டாடிக் கொண்டு இருக்கின்றீர்கள். சதா உண்மையான தங்கம், கொஞ்சம் கூட உலோகத்தின் கலப்படம் இல்லை. இதையே பொன் விழா என்று கூறுகின்றார்கள். எனவே, உலகத்தின் முன் தங்கம் போன்ற ஸ்திதியில் நிலைத்து இருக்கக்கூடிய உண்மையான தங்கம் வெளிப்பட வேண்டும். இதற்காக இந்த சேவைக்கான சாதனங்கள் அனைத்தையும் உருவாக்கிக் கொண்டு இருக்கின்றீர்கள், ஏனெனில், உங்களுடைய பொன்னான ஸ்திதி தங்கயுகத்தைக் கொண்டு வரும், பொன்னான உலகைக் கொண்டு வரும். இப்பொழுது உலகம் கொஞ்சம் மாற வேண்டும் என்ற இந்த விருப்பமே அனைவருக்கும் உள்ளது. எனவே, நீங்கள் சுயமாற்றத்தின் மூலம் விஷ்வ மாற்றம் செய்யக்கூடிய விசேஷ ஆத்மாக்கள் ஆவீர்கள். உங்கள் அனைவரையும் பார்த்து, உண்மையில் பொன்னுலகம் வந்தே வந்து விட்டது என்ற நிச்சயம், சுப நம்பிக்கை வர வேண்டும். ஒரு பொருளின் மாதிரியைப் (சாம்பிள்) பார்த்து, ஆம், இது நல்ல பொருள் என்ற நம்பிக்கை வருகிறது அல்லவா. எனவே, பொன்னுலகத்தின் மாதிரி (சாம்பிள்) நீங்கள். பொன்னான ஸ்திதி உடையவர்கள். எனவே, சாம்பிளாகிய உங்களைப் பார்த்து, ஆம், சாம்பிள் தயாராகி விட்டனர், எனவே, அவசியம் அத்தகைய உலகம் வந்தே வந்து விட்டது என்ற நம்பிக்கை ஏற்பட வேண்டும். இத்தகைய சேவையை பொன்விழாவில் செய்வீர்கள் அல்லவா. நம்பிக்கை அற்றவர்களுக்கு நம்பிக்கை கொடுப்பவர் ஆக வேண்டும். நல்லது.

# 1987 அவ்யக்த முரளி

அனைத்து சுயராஜ்ய அதிகாரி, அனைத்து நீண்டகால அதிகாரத்தை அடைவதற்கான பயிற்சி செய்யும் ஆத்மாக்களுக்கு, அனைத்து விஷ்வத்தின் விசேஷ ஆத்மாக்களுக்கு, அனைத்து வரதாதாவின் வரதானங்களால் வளரக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: அலைந்து கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு சரியான இலக்கைக் காண்பிக்கக்கூடிய சைத்தன்ய லைட், மைட் ஹவுஸ் ஆகுக!**

எந்த ஒரு அலைந்து கொண்டிருக்கும் ஆத்மாவிற்கும் சரியான இலக்கைக் காண்பிப்பதற்காக சைத்தன்ய லைட், மைட் ஹவுஸ் ஆகுங்கள். இதற்காக இரண்டு விசயங்கள் கவனத்தில் வைக்க வேண்டும்: 1.ஒவ்வொரு ஆத்மாவின் விருப்பத்தைக் கண்டறிய வேண்டும். எவ்வாறு நாடி பார்க்கத் தெரிந்தவரை தகுதியான மருத்துவர் என்று சொல்லப்படுகிறதோ, அவ்வாறு கண்டறியக்கூடிய சக்தியை சதா பயன்படுத்த வேண்டும். 2. சதா தன்னிடம் அனைத்து பொக்கிஷங்களின் அனுபவத்தை நிலையாக வைத்திருக்க வேண்டும். சொல்லக்கூடாது, ஆனால், அனைத்து சம்பந்தங்களின், சர்வ சக்திகளின் அனுபவத்தை செய்விக்க வேண்டும் என்ற இந்த இலட்சியம் சதா இருக்க வேண்டும்.

**சுலோகன்: பிறரைத் திருத்துவதற்கு (கரெக்ஷன்) பதிலாக ஒரு தந்தையுடன் சரியான தொடர்பு (கனெக்ஷன்) வைத்திடுங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 23.01.1987 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வெற்றி நட்சத்திரத்தின் விசேஷத்தன்மைகள்!

இன்று ஞான சூரியன் (சிவபாபா), ஞான சந்திரன் (பிரம்மாபாபா) தனது ஜொலித்துக் கொண்டிருக்கும் விண்மீன்களை பார்த்துக் கொண்டிருக்கிறார். அது ஆகாயத்தின் நட்சத்திரங்களாக இருக்கிறது, மேலும் நீங்கள் பூமியின் நட்சத்திரங்களாக இருக்கிறீர்கள். அது இயற்கையின் சக்தியாகும். நீங்கள் பரமாத்மாவின் நட்சத்திரங் களாகவும், ஆன்மீக நட்சத்திரங்களாகவும் இருக்கிறீர்கள். அந்த நட்சத்திரங்கள் கூட இரவில் தான் தோன்றுகிறது, ஆன்மீக நட்சத்திரங்களாகவும், ஞான நட்சத்திரங் களாகவும், ஜொலித்துக் கொண்டிருக்கும் நட்சத்திரங்களாகிய நீங்களும் கூட பிரம்மாவின் இரவில் தான் தோன்றுகிறீர்கள். அந்த நட்சத்திரங்கள் இரவை பகலாக மாற்றாது. சூரியன் மட்டும் தான் இரவை பகலாக மாற்றுகிறது ஆனால் நட்சத்திரங்களாகிய நீங்கள் ஞான சூரியன், ஞான சந்திரனுடனோடு இணைந்து இரவை பகலாக மாற்றுகிறீர்கள். எப்படி இயற்கையின் விண்மீன்களில் பலவிதமான நட்சத்திரங்கள் ஜொலித்துக் கொண்டிருக்கின்றன. அதுபோல பரமாத்மாவின் விண்மீன் கூட்டத்தில் கூட வித -விதமான நட்சத்திரங்களாக ஜொலித்துக் கொண்டிருக்கிறீர்கள். சிலர் அருகிலுள்ள நட்சத்திரங்களாகவும், மேலும் சிலர் வெகுதூரத்திலுள்ள நட்சத்திரங்களாகவும் கூட இருக்கின்றன. சிலர் வெற்றி நட்சத்திரங்களாகவும், சிலர் நம்பிக்கை நட்சத்திரங் களாகவும் இருக்கிறார்கள். ஒரு சிலர் ஒரே மனநிலையில் இருக்கக்கூடியவர்களாகவும் இருக்கிறார்கள், மேலும் சிலர் மனநிலையை மாற்றிக் கொண்டேயிருக்கக் கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். அங்கு (இயற்கை) இடம் மாறுகிறது, இங்கு (சங்கமயுகத்தில்) மனநிலை மாறுகிறது. எப்படி இயற்கையின் விண்மீன் கூட்டத்தில் வால் நட்சத்திரம் கூட இருக்கிறது. அதாவது ஒவ்வொரு வி῀யத்திலும், ஒவ்வொரு காரியத்திலும் இது ஏன், இது என்ன -இப்படி

## 1987 அவ்யக்த முரளி

கேள்வி கேட்கக் கூடிய வால் உடையவர்கள் அதாவது கேள்வியை எழுப்பக் கூடிய வால் நட்சத்திரங்கள் இருக்கக் கூடியவர்கள். எப்படி இயற்கையின் வால் நட்சத்திரங் களின் தாக்கம் பூமியின் மீது பாரமாக கருதப்படுகிறது. அப்படி அடிக்கடி கேள்வி கேட்கக் கூடியவர்கள் இந்த பிராமண குடும்பத்தில் சுற்றுப்புற சூழ்நிலையில் பாரமானத் தன்மையை (கடுமை) ஏற்படுத்தி விடுகிறது. அனைவரும் அனுபவசாலிகளாக தான் இருக்கிறீர்கள். தனக்காக கூட எண்ணங்களில் ஏன் மற்றும் என்ன? என்ற வால் வந்து விடுவதால், மன நிலை மற்றும் புத்தியில் தனக்கே சுமை ஆகி விடுகிறது. கூட கூடவே ஒருவேளை ஏதாவது கூட்டத்திற்கு நடுவில் அல்லது சேவையின் காரியத்திற்காக ஏன், என்ன?... அப்படி, எப்படி?...... இந்த கேள்விக்குறியின் வரிசை என்ற வால் முளைத்து விடுகிறது, அதனால் குழுவின் சூழ்நிலை மற்றும் சேவை செய்யும் இடத்தின் சூழ்நிலையை உடனே சுமையாகி விடுகிறது. எனவே தனக்காகவும், குழுவில் மற்றும் சேவையில் பாதிப்பு ஏற்படுகிறது. கூட கூடவே பல இயற்கையின் நட்சத்திரங்கள் மேலிருந்து கீழே விழுந்து விடவும் செய்கிறது, அதனால் என்ன ஆகிறது? கற்களாக. அதேபோல பரமாத்மாவின் நட்சத்திரங்களில் கூட நம்பிக்கை, தொடர்பு மற்றும் சுய -தாரணையின் உயர்ந்த மன நிலையிலிருந்து கீழே வந்து விடுகிறது என்றால், கல் புத்தி ஆகி விடும். எப்படி கல் புத்தி ஆகிறது? கல்லில் எவ்வளவு தான் தண்ணீர் ஊற்றினாலும் கல் உருகாது, நிறம் மாறிவிடும், ஆனால் உருகாது. கல்லுக்கு (கல் புத்தி) எதுவும் தாரணை ஆகாது. அதேபோன்று புத்தி கல்லாகி விடும்பொழுது அந்த சமயத்தில் எவ்வளவு தான், யாராவது நல்ல விஷயங்கள் உணர வைத்தாலும் அனுபவம் செய்ய முடியாது. எவ்வளவு தான் ஞானத்தின் தண்ணீரை ஊற்றினாலும் மாற்றம் ஏற்படாது. விஷயங்கள் (காட்சிகள்) மாறிவிடும், ஆனால் தனக்குள் மாற்றம் ஏற்படாது. இதைத் தான் கல்புத்தி என்று சொல்லப்படுகிறது. எனவே தனக்கு தானே கேளுங்கள் -இந்த பரமாத்மாவின் விண்மீன்களுக்கு மத்தியில், நான் எப்படிப்பட்ட நட்சத்திரமாக இருக்கிறேன்?

அனைத்தையும் விட உயர்ந்த நட்சத்திரமாக இருப்பது வெற்றி நட்சத்திரமாகும். வெற்றி நட்சத்திரம் என்றால், அவர்கள் எப்பொழுதுமே தனது முன்னேற்றத்தில் வெற்றியை அனுபவம் செய்துக் கொண்டேயிருப்பவர்கள், அதாவது தனது முயற்சியின் விதியில் சதா

எளிதாகவே வெற்றியின் அனுபவம் செய்துக் கொண்டேயிருப்பவர்கள். வெற்றி நட்சத்திரமாக இருப்பவர்களின் எண்ணத்தில் கூட தனது முயற்சியில் ஒருபொழுதும் நடக்குமா அல்லது நடக்காதா? செய்ய முடியுமா அல்லது முடியாதா? என்று தெரியவில்லையே -இந்த வெற்றியற்ற தன்மையின் அம்சம் கூட இருக்காது. வெற்றி என்பது நமது பிறப்புரிமை என்ற சுலோகன் இருக்கிறது, அப்படி அவர்கள் தன்னை சதா வெற்றியின் அதிகாரி சொரூபத்தில் அனுபவம் செய்வார்கள். அதிகாரத்தின் அர்த்தமே முயற்சி இல்லாமல், கேட்காமலே அடைந்து விடுவது. எளிதாகவும் இயல்பாகவும் அடைவது தான் அதிகாரி என்று சொல்லபடுகிறது. அப்படி முதலாவது -சுயத்தின் மீது வெற்றி, இரண்டாவது -தனது உற்றார், உறவுகளில் வந்தாலும், பிராமண ஆத்மாக்களாக இருந்தாலும், லௌகீக குடும்பம் மற்றும் லௌகீக வேலையில் வெற்றியின் தொடர்பில், அனைத்து உறவுகளிடத்தில், தொடர்பில் வந்தாலும், தொடர்பில் எவ்வளவு தான் கடினமான விஷயத்தையும் கூட வெற்றியின் அதிகாரத்தின் ஆதாரத்தின் மூலம் சகஜமாக அனுபவம் செய்வார்கள், அதாவது வெற்றியின் முன்னேற்றத்தில் முன்னேறிக் கொண்டேயிருப்பார்கள். ஆமாம், இதற்கு நேரம் ஆகலாம், ஆனால் வெற்றியின் அதிகாரம் அடைந்து கொண்டேயிருப்பார்கள். அவ்வாறு, ஸ்தூல காரியத்திலும், அலௌகீக சேவையின் காரியத்திலும், அதாவது இரண்டு இடத்திலும் காரியத்திலும் வெற்றி, நம்பிக்கை புத்தி வெற்றியை கொடுக்கும். எங்காவாது பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது, ஒரு சில மனிதர்களையும் சகித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது, ஆனால் அப்படி சகித்துக் கொள்வது முன்னேற்றத்திற்கான வழி ஆகி விடுகிறது. பிரச்சனைகளை எதிர்கொள்வது, பிரச்சனைகள் -தனது மனநிலையை முன்னேற்றும் கலையின் சாதனமாகி விடுகிறது, அதாவது ஒவ்வொரு விஷயத்திலும் வெற்றி தானாகவே சகஜமாக மேலும் அவசியம் கிடைத்து விடுகிறது.

**வெற்றி நட்சத்திரத்தின் விசேஷமான அடையாளம்**: ஒருபொழுதும் தனது வெற்றியின் அபிமானம் (பெருமை) இருக்காது, வர்ணனை (விளக்கம்) செய்ய மாட்டார்கள், தனது புகழை பாட மாட்டார்கள் ஆனால் எந்தளவு வெற்றி அடைகிறார்களோ, அந்தளவு தாழ்மையான, பணிவான, அமைதியான சுபாவம் இருக்கும். மேலும் மற்றவர்கள் அவர்களின் புகழை

பாடுவார்கள், ஆனால் அவர்கள் (வெற்றி நட்சத்திரம்) சதா பாபாவின் குணங்களை பாடிக் கொண்டேயிருப்பார்கள். வெற்றியின் நட்சத்திரம் ஒருபொழுதும் கேள்வி (சந்தேகம்) எழுப்ப மாட்டார்கள். எப்பொழுதும் பிந்தி (புள்ளி) சொரூபத்தில் நிலைத்திருந்து ஒவ்வொரு காரியத்திலும் மற்றவர்களையும் கூட நாடகத்தின் புள்ளியின் நினைவை கொடுப்பார்கள், தடைகளை வென்றவர்களாக இருப்பார்கள், சக்திசாலியாக மாற்றி வெற்றியின் குறிக்கோளை அருகாமையில் கொண்டு வருவார்கள். வெற்றியின் நட்சத்திரம் ஒருபொழுதும் எல்லைக்குட்பட்ட வெற்றியை பார்த்து பிராப்தியின் ஸ்திதியில் மிகவும் மகிழ்ச்சியடைவது மேலும் பிரச்சனை வந்து விட்டது அல்லது பிராப்தி குறைவாக கிடைத்து விட்டது என்றால் குஷி கூட குறைந்து விட்டது -அப்படி மனநிலையில் மாற்றத்தை கொண்டு வரக்கூடியவர்களாக இருக்க மாட்டார்கள். எப்பொழுதுமே எல்லைக்கு அப்பாற்பட்ட வெற்றியடைந்த மூர்த்தியாக இருப்பார்கள். ஒரே ரசனை, ஒரே உயர்ந்த மனநிலையில் நிலைத் திருப்பார்கள். வெளிப்புற சூழ்நிலையாக இருந்தாலும், காரியத்தில் வெளித் தோற்றத்தில் மற்றவர்களுக்கு தோல்வியின் அனுபவம் ஆனாலும், வெற்றியின் நட்சத்திரம், தோல்வி அடையும் சூழ்நிலையின் தாக்கத்தில் வர மாட்டார்கள், வெற்றியின் மனப்பான்மை மூலம் தோல்வியை கூட மாற்றி விடுவார்கள். இது தான் வெற்றி நட்சத்திரத்தின் விசேஷத் தன்மையாகும். இப்பொழுது தன்னை தானே கேளுங்கள் -நான் யார்? நம்பிக்கை நட்சத்திரமாக மட்டும் அல்ல, வெற்றி சொரூபமாக இருக்கிறேனா? நம்பிக்கையாளர் ஆவது கூட நல்லது தான், ஆனால் நம்பிக்கையுடைவராகி மட்டும் செல்வது, வெளிப்படையான வெற்றியை அனுபவம் செய்யாமல் இருப்பது, இதில் அவ்வப்பொழுது சக்திசாலியாகவும், அவ்வப்பொழுது மனமுடைந்தவராக இருப்பது இவ்வாறு மேலும் கீழும் ஆவதற்கான அதிகமாக அனுபவம் செய்கிறார்கள். ஒருவேளை ஏதாவது ஒரு விஷயத்தில் அதிகமாக மேலும் கீழும் ஏற்படுவதினால் களைப்பு ஏற்பட்டு விடுகிறது அல்லவா! எனவே இதில் கூட போக போக களைப்பின் அனுபவத்தினால் மனமுடைந்து போய் விடுகிறது. எனவே நம்பிக்கையற்ற நிலையிலிருந்து நம்பிக்கை யுடைவர் ஆவது நல்லது தான், ஆனால் வெற்றி சொரூபத்தை அனுபவம் செய்யக் கூடியவர்கள் சதா உயர்ந்தவர்களாக இருக்கிறார்கள். நல்லது. விண் மீன்களின் கதையை கேட்டீர்களா? மதுபனின் ஹால் (ஓம்சாந்தி பவன்) மட்டும் விண் மீன்களின் கூட்டம் அல்ல, எல்லைக்கு அப்பாற்பட்ட

# 1987 அவ்யக்த முரளி

பிராமண உலகமே விண்மீன்களின் கூட்டமாகத் தான் இருக்கிறது. நல்லது.

வரக்கூடிய அனைத்து புதிய குழந்தைகளுக்கும், புதியவர்களாகவும் இருக்கிறார்கள், பழையவர்களும் கூட பலர் இருக்கிறார்கள். ஏனெனில் அநேக கல்பத்தை சேர்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள், அதனால் மிகவும் பழைமையானவர்களாகவும் இருக்கிறார்கள். எனவே புது குழந்தைகளின் புதுமையாக ஊக்கம் உற்சாகத்தின் சந்திப்பை கொண்டாடுவதற்கான நாடகத்தில் நிச்சயிக்கப்பட்டபடி முழுமையடையும். மிகவும் உற்சாகம் இருக்கிறது அல்லவா. போகப்போக நிபந்தனையின்றி கூட அந்தளவு உற்சாகமாக இருப்பார்கள். சந்திப்பின் குஷியில் நிலைத்திருக்க வேண்டுமல்லவா. குறைவாக வாருங்கள், குறைவாக வாருங்கள் என்று எவ்வளவு தான் சொன்னாலும், யாராவது கேட்கிறார்களா என்ன? இவ்வளவு குழந்தைகள் வந்து தான் ஆக வேண்டும், ஆகையால் வந்து விடுகிறார்கள் என்பதை பார்த்து, பாப்தாதா நாடகப்படி ஒவ்வொரு காட்சியையும் பார்த்து புன்முறுவல் செய்கிறார் அனைவரும் எளிதாகவே சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா? கடினமாக இல்லை தானே? இது கூட நாடகப்படி, சமயத்திற்கு தகுந்தாற்போல், ஒத்திகை நடைபெறுகிறது. அனைவரும் குஷியாக இருக்கிறீர்கள் அல்லவா? கடினமானவற்றை எளிதாக மாற்றக்கூடியவர்கள் அல்லவா? ஒவ்வொரு காரியத்திலும் ஒத்துழைப்பு அளியுங்கள். என்ன கட்டளை கிடைக்கிறதோ, அதற்கேற்றார் போல் ஒத்துழைப்பு கொடுப்பது என்றாலே எளிதாகி விடும். ஒருவேளை ஒத்துழைப்பு அளித்தீர்கள் என்றால், 5000 -நபர்கள் கூட ஒன்றாக இருக்கலாம், (ஓம்சாந்தி பவனின் பரப்பளவு 5000 -நபர்கள் வரை அமரலாம்) ஒத்துழைப்பு அளிக்கவில்லையென்றால், அதாவது கட்டளைப்படி நடக்கவில்லையென்றால், 500 -நபர்கள் கூட ஒன்றாக இருப்பது கடினமாகி விடும். ஆகையால், 5000 -நபர்கள் இல்லை, 500 -நபர்கள் தான் இருந்த மாதிரி உள்ளது என்று அனைவரின் இதயத்திலும் கூறும்படி தாதிஜி அவர்களுக்கு தனது பதிவேட்டை (நடந்து) காட்டுங்கள். இதைத் தான் கடினமானதை எளிதாக்குவது என்று சொல்லப் படுகிறது. எனவே தனது பதிவேடு நன்றாக இருக்கிறதல்லவா? சர்ட்டிபிகேட் (நற்சான்றிதழ்) நன்றாக கிடைத்துக் கொண்டிருக்கிறதா? அவ்வாறு எப்பொழுதும் குஷியாக இருங்கள், மற்றவர்களையும் கூட குஷியடைய

செய்தீர்கள் என்றால், எப்பொழுதுமே கைத்தட்டல் ஒலித்துக் கொண்டேயிருக்கும். நல்ல பதிவேடு இருக்கிறது, ஆகையால் நாடகத் திட்டத்தின்படி இரண்டு முறை சந்திப்பு நடந்திருக்கிறது. இது புதியவர்களின் நலனுக்காக நாடகப்படி நடந்துள்ளது. நல்லது.

சதா ஆன்மீக வெற்றியடைந்த உயர்ந்த நட்சத்திரங்களுக்கு, சதா ஒரே இரசனை என்ற மனநிலையின் மூலம் உலகத்திற்கு வெளிச்சம் தரக்கூடிய, ஞான சூரியன், ஞான சந்திரனோடு சதா கூடவே இருக்கக் கூடிய, சதா உரிமையின் நம்பிக்கை மூலம் குஷி மற்றும் பணிவான மனநிலையில் இருக்கக் கூடிய, அப்படிப்பட்ட பரமாத்மாவின் விண்மீன் கூட்டங்களின் அனைத்து ஜொலித்துக் கொண்டிருக்கும் நட்சத்திரங்களுக்கு ஞான சூரியன், ஞான சந்திரனாகிய பாப்தாதாவின் ஆன்மீக அன்பு நிறைந்த, அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு:** 1. தன்னை சதா தடைகளற்றவர், வெற்றி இரத்தினம் என்று நினைக்கிறீர்களா? தடைகள் வருவது என்பது நல்ல விஷயம் தான், ஆனால் தடைகளிடம் தோல்வியடையக் கூடாது. தடைகள் வருவது என்றாலே என்றென்றும் பலசாலியாக ஆகுங்கள். தடைகளை கூட ஒரு மனோரஞ்சன் (பொழுதுபோக்கு விளையாட்டு) என புரிந்து கொண்டு கடந்துச் செல்வது. இதைத் தான் தடையற்ற வெற்றியாளர் என்று சொல்லப்படுகிறது. எனவே தடைகளை கண்டு பயப்படுவதில்லை தானே? பாபாவுடன் இருக்கிறீர்கள் என்றாலே, பயப்படுவதற்கான எந்த வித விஷயமே இல்லை. தனியாக யாராவது இருக்கிறார்கள் என்றால் தான் பயம் ஏற்படுகிறது ஆனால் ஒருவேளை யாராவது கூடவே இருந்தால் பயம் ஏற்படாது, தைரியசாலி ஆகி விடுவார்கள். எனவே எங்கு பாபாவின் துணை இருக்கிறதோ, அங்கு தடைகளுக்கு பயம் ஏற்படுமா அல்லது நீங்கள் பயப்படுவீர்களா! சர்வசக்திவானுக்கு முன்னால் தடைகள் என்னவாக இருக்கும்? ஒன்றுமே இல்லை. ஆகையால் தடைகள் விளையாட்டாகத் தோன்றும், கடினமாகத் தோன்றாது. தடைகள் நம்மை அனுபவசாலியாகவும் சக்திசாலியாகவும் மாற்றி விடுகிறது. யார் சதா பாபாவின் நினைவு மற்றும் சேவையில் ஈடுபட்டிருக்கிறார்களோ, பிஸியாக இருக்கிறார் களோ, அவர்கள் தடை யற்றவர்களாக இருப்பார்கள். ஒருவேளை புத்தி பிஸியாக இல்லையென்றால் தடைகள் அல்லது மாயா வந்து விடுகிறது. ஒருவேளை பிஸியாக இருந்தால்

மாயாவும் கூட ஒதுங்கிப் போய்விடும். வரவே வராது, போய்விடும். இவர்கள் என்னுடைய நண்பர்கள் கிடையாது, இவர்கள் இப்பொழுது பரமாத்மாவின் நண்பர்களாக இருக்கிறார்கள் என்பதை மாயா கூட தெரிந்து கொள்ளும். எனவே மாயா ஒதுங்கிக் கொள்ளும். பல முறை வெற்றி அடைந்துள்ளேன், ஆகையால் வெற்றியடைவது பெரிய விஷயமில்லை. எந்தவொரு செயல் பலமுறை செய்யபட்டுள்ளதோ, அது எளிதாகி விடும். எனவே பலமுறை வெற்றியடைந்துள்ளோம். எப்பொழுதுமே திருப்தியுடன் இருக்கிறேனா? மாதர்கள் எப்பொழுதும் குஷியுடன் இருக்கிறீர்களா? ஒருபொழுதும் அழுவதில்லையே? எப்பொழுதாவது ஏதாவது பிரச்சனை வந்து விட்டால் அழுகை வருகிறதா? தைரியசாலிகளாக இருக்கிறீர்கள். பாண்டவர்கள் (சகோதரர்கள்) மனதில் அழுவதில்லையே? இது ஏன் நடந்தது, என்ன நடந்தது? -இப்படிப்பட்ட அழுகை வருவதில்லையே? பாபாவினுடையவராக ஆன பிறகு கூட, ஒருவேளை சதா குஷியாக இல்லையென்றால், எப்பொழுது இருப்பீர்கள்? பாபாவினுடையவராக ஆவது என்றாலே, சதா குஷியாக இருப்பது. துக்கமும் இல்லை, துக்கத்தில் அழுவதுமில்லை. அனைத்து துக்கங்களும் விலகி விடுகிறது. எனவே தனது இந்த ஆசீர்வாதத்தை சதா நினைவில் வைக்க வேண்டும். நல்லது.

2. தன்னை இந்த ஆன்மீக தோட்டத்தின் ஆன்மீக ரோஜா என நினைக்கிறீர்களா? அனைத்து மலர் களிலும் ரோஜா மலரின் நறுமணத்தின் காரணத்தினால் அன்பு தோன்றுகிறது. எனவே அது ரோஜா மலர், நீங்கள் அனைவரும் ஆன்மீக ரோஜாக்கள். ஆன்மீக ரோஜா என்றாலே அதில் எப்பொழுதுமே ஆன்மீக நறுமணம் நிறைந்திருக்கும். ஆன்மீக நறுமணத்தை பரப்பக் கூடியவர்கள் யாரை பார்த்தாலும், எங்கு பார்த்தாலும் ஆத்மாவை தான் பார்ப்பார்கள், உடலை பார்க்க மாட்டார்கள். தானும் சதா ஆத்மீக மனநிலையில் நிலைத்திருப்பார்கள், மேலும் மற்றவர்களையும் கூட ஆத்மாவை தான் பார்ப்பார்கள். இதைத் தான் ஆன்மீக ரோஜா என்று சொல்லப் படுகிறது. இது பாபாவின் தோட்டமாக இருக்கிறது. பாபா உயர்ந்ததிலும் உயர்ந்தவராக இருப்பதை போன்று அவரின் தோட்டமும் கூட உயர்ந்ததிலும் உயர்ந்ததாக இருக்கும். ஆன்மீக ரோஜாக்களாகிய நீங்கள் தான் இந்த தோட்டத்தின் விசேஷமான அலங்காரமாக இருக்கிறீர்கள். மேலும் இந்த் ஆன்மீக நறுமணம் பல ஆத்மாக்களுக்கு நன்மை செய்யக் கூடியதாக இருக்கிறது. இன்று

# 1987 அவ்யக்த முரளி

உலகத்தில் என்னவெல்லாம் பிரச்சனைகள் இருப்பதற்கான காரணம் ஒருவர் மற்றவரை ஆத்மாவாக பார்ப்பதில்லை. தேக அபிமானத்தின் காரணத்தினால் தான் அனைத்து பிரச்சனைகளும் வருகிறது. ஆத்ம அபிமானியாகி விட்டால், அனைத்து பிரச்சனைகளும் முடிந்து போய்விடும். எனவே ஆத்மீக ரோஜாவாகிய நீங்கள் உலகத்திற்கு ஆன்மீக நறுமணத்தை பரப்புவதற்கு நிமித்தமாக இருக்கிறீர்கள். அவ்வாறு எப்பொழுதும் குஷி இருக்கிறதா? அவ்வப்பொழுது ஒவ்வொரு மாதிரி கிடையாது. எப்பொழுதுமே ஒரே இரசனை என்ற மனநிலையில் சக்தி நிறைந்திருக்கும். மனநிலை மாறுவதினால் சக்தி குறைந்து விடுகிறது. சதா பாபாவின் நினைவில் இருந்து, எங்கெல்லாம் சேவையின் சாதனம் இருக்கிறதோ, வாய்ப்பை எடுத்துக் கொண்டு முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். பரமாத்மாவின் தோட்டத்தின் ஆன்மீக ரோஜா எனப் புரிந்து கொண்டு ஆன்மீக நறுமணத்தை பரப்பிக் கொண்டேயிருங்கள். எவ்வளவு இனிமையான ஆன்மீக நறுமணமாக இருக்கிறது, இந்த நறுமணத்தை அனைவரும் விரும்புகிறார்கள். இந்த் ஆன்மீக நறுமணம் அநேக ஆத்மாக் களுக்கு நன்மை செய்வதன் கூடவே தனக்கும் நன்மை ஏற்படுகிறது. ஆன்மீக நறுமணம் எவ்வளவு தூரம் வரை பரவுகிறது என்பதை பாப்தாதா பார்க்கிறார். எங்காவது தேக அபிமானம் சிறிதளவு கலப்படம் ஆனாலும் கூட ஆன்மீக நறுமணம் உண்மையான (ஒரிஜினல்) ஆக இருக்காது. சதா இந்த ஆன்மீக நறுமணத்தின் மூலம் மற்றவர்களையும் கூட நறுமணமுள்ளவர்களாக (குணம் நிறைந்தவர்கள்) மாற்றிக் கொண்டே செல்லுங்கள். எப்பொழுதும் உறுதியானவராக இருக்கிறீர்களா? எந்தவித குழப்பமும் நிலை குலைய செய்வதில்லையே? எது நடந்தாலும், கேட்டாலும், பார்த்தாலும் சிறிது கூட குழப்பத்தில் வருவதில்லையே? எதுவும் புதியதல்ல, என்ற நிலையில் குழப்பத்தில் ஏன் வர வேண்டும்? ஏதாவது புதிய விஷயம் என்றால் குழப்பத்தில் வரலாம். ஏன், என்ன, இது அநேக கல்பம் நடந்துள்ளது -இதைத் தான் நாடகத்தின் மீது நம்பிக்கை புத்தி என்று சொல்லப்படுகிறது. சர்வசக்திவான் நம்முடைய துணைவராக இருக்கிறார், ஆகையால் கவலையற்ற மகாராஜாவாக இருக்கிறார். அனைத்து கவலை களையும் பாபாவிடம் ஒப்படைத்து விட்டால், எப்பொழுதும் நாம் கவலையற்ற மகாராஜாவாக இருக்கலாம். சதா ஆன்மீக நறுமணம் பரப்பிக் கொண்டேயிருங்கள், அனைத்து தடைகளும் முடிந்து போய்விடும்.

**வரதானம்: பிரத்யக்ஷதாவின் (பாபாவை வெளிப்படுத்துதல்) சமயத்தை அருகாமையில் கொண்டு வரக்கூடிய சதா சுப சிந்தனையாளர் மற்றும் சுய சிந்தனையாளர் ஆகுக!**

சேவையில் வெற்றி பெறுவதற்கான ஆதாரம் நல்ல எண்ணங்களின் உள்ளுணர்வு. ஏனெனில் உங்களின் இந்த உள்ளுணர்வு ஆத்மாக்களின் கிரஹிக்கும் சக்தி மற்றும் ஆர்வத்தை அதிகரிக்கிறது. இதன் மூலம் சப்தத்தின் (வார்த்தைகள் மூலம் செய்யும்) சேவை எளிதாகவே வெற்றியடைகிறது. மேலும் தன்மீது தானே நல்ல எண்ணங்களை வைக்கக் கூடிய சுயசிந்தனை செய்யும் ஆத்மா சதா மாயா ஃப்ரூப், மற்றவர்களின் பலவீனங்களின் தாக்கத்திலிருந்து, மனிதர்கள் மற்றும் பொருட்களின் ஈர்ப்பிலிருந்து பாதுகாப்பாக இருக்கலாம். எனவே இந்த இரண்டு வரதானங்களை நடைமுறை வாழ்க்கையில் கொண்டு வரும் பொழுது பிரத்யக்ஷதாவின் சமயம் அருகாமையில் வரும்.

**சுலோகன்:தனது எண்ணங்களை கூட சமர்ப்பணம் செய்து விட்டால், அனைத்து பலவீனங்களும் தானாகவே விலகி விடும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 20.02.1987 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நினைவு, பவித்திரதா (தூய்மை) மற்றும் உண்மையான சேவாதாரியின் மூன்று ரேகைகள்!

இன்று அனைவருக்கும் அன்பான, உலக சேவாதாரி பாபா தம்முடைய சதா சேவாதாரியாக இருக்கும் குழந்தைகளைச் சந்திக்க வந்துள்ளார். சேவாதாரி பாப்தாதாவுக்கு சமமான சேவாதாரிக் குழந்தைகள் சதா பிரியமானவர்கள். இன்று விசேஷமாக, சர்வ சேவாதாரிக் குழந்தைகளின் நெற்றியின் மீது ஜொலிக்கின்ற விசேஷமான மூன்று கோடுகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொருவரின் நெற்றியும் திரிமூர்த்தி திலகத்திற்கு சமமாக ஜொலித்துக் கொண்டிருக்கிறது. இந்த மூன்று கோடுகள் எதனுடைய அடையாளம்? இந்த மூன்று விதமான திலகத்தின் மூலமாக ஒவ்வொரு குழந்தையின் நிகழ்கால ரிசல்ட்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒன்று சம்பூர்ண யோகி வாழ்க்கையின் கோடு. இரண்டாவது பவித்ரதாவின் ரேகை அல்லது கோடு. மூன்றாவது உண்மையான சேவாதாரியின் கோடு. மூன்று ரேகைகளிலும் ஒவ்வொரு குழந்தையின் ரிசல்ட்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். நினைவின் கோடு அனைவருக்கும் ஜொலித்துக் கொண்டிருக்கிறது, ஆனால் நம்பர்வார். சிலருடைய கோடு அல்லது ரேகை முதலியவற்றின் மூலம் இது வரை கலப்படமற்ற, அதாவது சதா ஒருவரின் ஈடுபாட்டில் மூழ்கி இருக்கிறார்களா? அல்லது யாராவது நிமித்த ஆத்மாக்களின் மூலமாக பாபாவுடன் சம்மந்தத்தை இணைப்பதற்கான அனுபவியாக உள்ளனரா? நேரடியாக பாபாவின் உதவியாளரா? அல்லது யாராவது ஆத்மாவின் உதவி மூலமாக பாபாவுக்கு உதவியாளரா? ஒன்று நேரடியான கோடு உள்ளவர்கள். இரண்டாவது இடையிடையில் கொஞ்சம் வளைந்த கோடு உள்ளவர்கள். இது தான் நினவு என்ற கோட்டினுடைய விசேஷத் தன்மைகள்.

இரண்டாவது சம்பூர்ண பவித்ரதாவின் கோடு அல்லது ரேகை. ஒன்று, பிராண வாழ்க்கையை எடுத்ததுமே பிராமண வாழ்க்கையின், விசேஷதந்தையின் வரதானம் பெற்று சதா மற்றும் சகஜமாக இந்த வரதானத்தை வாழ்க்கையில் அனுபவம் செய்பவர்கள். அவர்களின் ரேகை ஆரம்பத்திலிருந்து இப்போது வரை நேராக உள்ளது. இரண்டாவது -பிராமண வாழ்க்கையின் இந்த வரதானத்தை அதிகாரத்தின் ரூபத்தில் அனுபவம் செய்வதில்லை, சில நேரம் சகஜமாக, சில நேரம் உழைப்பினால், மிகுந்த முயற்சியோடு தனதாக்கிக் கொள்பவர்கள். அவர்களின் ரேகை சதா நேராக மற்றும் ஜொலிப்பதாக இருப்பதில்லை. உண்மையில் நினைவு அல்லது சேவையின் வெற்றிக்கு ஆதாரம் -பவித்திரதா. வெறுமனே பிரம்மச்சாரி ஆவது என்பது மட்டும் பவித்திரா கிடையாது ஆனால் பவித்திரத்தாவின் சம்பூர்ண ரூபம் -பிரம்மச்சாரியுடன் கூடவே பிரம்மாச் சாரி ஆவதாகும். பிரம்மாச்சாரி என்றால் பிரம்மாவின் நடத்தை நெறி முறைகளின் படி நடப்பவர்கள், அவர்கள் தந்தையைப் பின்பற்றி நடப்பவர் எனச் சொல்லப்படுவார்கள். ஏனென்றால் பிரம்மாதந்தையைப் பின்பற்றி நடக்க வேண்டும். சிவதந்தையின் ஸ்திதிக்கு சமமாக ஆக வேண்டும், ஆனால் நடத்தையில் மற்றும் கர்மத்தில் பிரம்மாதந்தையைப் பின்பற்ற வேண்டும். ஒவ்வோர் அடியிலும் பிரம்மச்சாரி. பிரம்மச்சரிய விரதம் சதா சங்கல்பம் மற்றும் கனவு வரை இருக்க வேண்டும். பவித்திரதாவின் அர்த்தம் -சதா பாபாவைத் துணைவராக்குவது (கம்பேனியன்) மற்றும் பாபாவின் துணையில் (கம்பெனி) சதா இருப்பது. துணைவராக ஆக்கிக் கொண்டு விட்டீர்களா? பாபா என்னுடையவர் -இதுவும் அவசியம், ஆனால் ஒவ்வொரு சமயமும் பாபாவின் துணையும் இருக்க வேண்டும். இது தான் சம்பூர்ண பவித்திரதா எனப்படும். குழுவின் துணை, பரிவாரத்தின் அன்பிற்கான நியமம் என்பது வேறு. அதுவும் அவசியம் ஆனால் பாபாவின் காரணத்தால் தான் இந்தக் குழுவின் அன்பினுடைய துணை உள்ளது -இதை மறக்கக் கூடாது. பரிவாரத்தின் அன்பு உள்ளது, ஆனால் பரிவாரம் யாருடையது? பாபாவுடையது. பாபா இல்லையென்றால் பரிவாரம் எங்கிருந்து வந்தது? பரிவாரத்தின் அன்பு, பரிவாரத்தின் குழு மிக நல்லது ஆனால் பரிவாரத்தின் விதையை மறந்து விடக் கூடாது. பாபாவை மறந்து, பரிவாரத்தையே துணையாக ஆக்கிக் கொண்டு விடுகின்றனர். இடையிடையில் பாபாவை விட்டு விட்டால் காலி இடம் ஆகி விடும். அங்கே மாயா வந்து விடும். ஆகவே அன்பில் இருந்து

கொண்டே, அன்பைக் கொடுத்துக் கொண்டு, பெற்றுக் கொண்டு, சமூகத்தை மறக்கக் கூடாது. இது தான் பவித்திரதா எனப்படும். புரிந்து கொள்வதிலோ நீங்கள் சாமர்த்தியசாலிகள் தாம் இல்லையா?

அநேகக் குழந்தைகளுக்கு சம்பூர்ண பவித்திரதாவின் ஸ்திதியில் முன்னேறிச் செல்வதில் கடினமாக உழைக்க வேண்டி உள்ளது. அதனால் இடையிடையில் சிலருக்கு துணையை உருவாக்கிக் கொள்வதற்கான சங்கல்பமும் வருகிறது மற்றும் துணையும் அவசியம் -இந்த சங்கல்பமும் வருகிறது. சந்நியாசியாகவோ ஆகக் கூடாது ஆனால் ஆத்மாக்களின் துணையில் இருந்து கொண்டு, தந்தையின் துணையை மறந்து விடாதீர்கள். இல்லையென்றால் சமயத்தில் அந்தத் துணையின் நினைவு வரும் மற்றும் தந்தையின் நினைவு மறந்து போகும். ஆக, சமயத்தில் ஏமாற்றம் நிகழ முடியும். ஏனென்றால் சாகார சரீரதாரிகளின் உதவி பெறுவது பழக்கமாகி விட்டது என்றால் அவ்யக்த தந்தை மற்றும் நிராகாரத் தந்தை பின்னால் நினைவு வரும், முதலில் சரீரதாரி நினைவு வரும். எந்த ஒரு சமயத்திலாவது சாகார சரீரதாரியின் உதவி நினைவு வந்தால் நம்பர் ஒன்னாக அவர் ஆகி விடுகிறார், இரண்டாவது நம்பராக பாபா ஆகி விடுகிறார். யார் பாபாவை இரண்டாவது நம்பரில் வைக்கிறாரோ, அப்போது அவருக்கு என்ன பதவி கிடைக்கும்? நம்பர் ஒன்னா, இரண்டாவதா? வெறுமனே சகயோகம் பெறுவது, சிநேகியாக இருப்பது என்பது வேறு விˆயம் ஆனால் ஆதரவை உருவாக்கிக் கொள்வது வேறு விˆயம். இது மிகவும் ஆழமான விˆயமாகும். இதை யதார்த்த ரீதியில் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு சிலர் சங்கட்டனில் சிநேகி ஆவதற்கு பதிலாக விலகியவராகவும் ஆகி விடுகின்றனர். பயப்படுகிறார்கள், சிக்கிக் கொள் வோமோ என்னவோ தெரியாது, அதைவிட விலகி இருப்பது சரியாக இருக்கும் என நினைக் கின்றனர் ஆனால் அப்படி இல்லை. 21 -பிறவிகளிலும் இல்லறத்தில், பரிவாரத்தில் இருக்க வேண்டும் இல்லையா? பயத்தின் காரணத்தால் விலகி விடுகின்றனர், விலகியவராக ஆகி விடுகின்றனர் என்றால் அது கர்ம சந்நியாசியின் சம்ஸ்காரம் ஆகி விடுகிறது. கர்மயோகி ஆக வேண்டும், கர்ம சந்நியாசியாக அல்ல. குழுவில் இருக்க வேண்டும். சிநேகி ஆக வேண்டும் ஆனால் புத்திக்கு ஆதரவாக ஒரு பாபா மட்டும் இருக்க வேண்டும், ஒரு பாபா தவிர வேறு யாரும் இல்லை. புத்தியை எந்த ஓர் ஆத்மாவின் துணை அல்லது குணம் அல்லது ஏதேனும் விசேஷதா

கவர்ந்திழுக்கக் கூடாது. இது தான் பவித்திரதா எனச் சொல்லப்படுவதாகும்.

பவித்ரதாவில் முயற்சி செய்ய வேண்டியுள்ளது -இதிலிருந்து உறுதியாகிறது, வரதாதா தந்தை யிடமிருந்து ஜென்மத்தின் வரதானத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை. வரதானத்தில் முயற்சி இருப்பதில்லை. ஒவ்வொரு பிராமண ஆத்மாவுக்கும் பிராமண ஜென்மத்தின் முதல் வரதானம் -பவித்திரமாகுக, யோகி ஆகுக என்ற வரதானம் கிடைத்துள்ளது. ஆகவே தன்னைத் தான் கேட்டுக் கொள்ளுங்கள் -பவித்திரதாவின் வரதானியா? அல்லது கடின முயற்சியால் பவித்திரதாவைத் தன்னுடையதாக ஆக்குபவரா? இதை நினைவு வையுங்கள் -நம்முடையது பிராமண ஜென்மம். வெறுமனே வாழ்க்கை மாற்றம் மட்டுமில்லை, ஆனால் பிராமண ஜென்மத்தின் ஆதாரத்தில் வாழ்க்கையின் மாற்றம். ஜென்மத்தின் சம்ஸ்காரம் மிக சகஜமான தாகவும் இயல்பானதாகவும் இருக்கும். தங்களுக்குள்ளும் சொல்கின்றனர் இல்லையா -எனது ஜென்மத்தில் இருந்தே இந்த மாதிரி சம்ஸ்காரங்கள் உள்ளன. பிராமண ஜென்மத்தின் வரதானமே பவித்திரமாகுக, யோகி ஆகுக. வரதானமும் கூட, ஒரிஜினல் சம்ஸ்காரமும் கூட. வாழ்க்கையில் இரண்டு விஷயங்கள் அவசியம். ஒன்று -கம்பேனியன், இன்னொன்று -கம்பெனி. அதனால் திரிகாலதரிசி பாபா அனைவரின் தேவைகளை அறிந்து கொண்டு, பெரிய கம்பேனியன் மற்றும் பெரிய கம்பெனி கொடுக்கிறார். விசேஷமாக இரட்டை வெளி நாட்டுக் குழந்தைகளுக்கு இரண்டுமே வேண்டும். அதனால் பாப்தாதா ஜென்மம் எடுத்ததுமே கம்பேனியனின் அனுபவத்தைச் செய்வித்திருக்கிறார். சுமங்கலி ஆக்கியிருக்கிறார். ஜென்மம் எடுத்ததுமே கம்பேனியன் கிடைத்து விட்டார் இல்லையா? கம்பேனியன் கிடைத்து விட்டாரா அல்லது இன்னும் தேடிக் கொண்டிருக்கிறீர்களா? ஆக, பவித்திரதாவை ஒரிஜினல் சம்ஸ்கார ரூபத்தில் அனுபவம் செய்ய வேண்டும். இதைத் தான் சிரேஷ்டமான கோடு அல்லது சிரேஷ்ட ரேகை உள்ளவர்கள் எனச் சொல்கின்றனர். அஸ்திவாரம் பக்காவாக உள்ளது இல்லையா?

மூன்றாவது கோடு உண்மையான சேவாதாரியினுடையது. இந்த சோவாதாரியின் கோடும் கூட அனைவரின் நெற்றியின் மீது உள்ளது.

சேவை இல்லாமல் அவர்களால் இருக்க முடியாது. சேவை பிராமண வாழ்க்கையை சதா நிர்விக்னமாக்குகிற சாதனமாகவும் உள்ளது மற்றும் சேவையில் தான் விக்னங்களின் பேப்பர் அதிகம் வருகிறது. நிர்விக்ன சேவாதாரி உண்மையான சேவாதாரி எனச் சொல்லப்படுகிறார். விக்னங்கள் வருவதும் கூட டிராமாவில் விதிக்கப்பட்டுள்ளது. வரத்தான் செய்யும் மற்றும் வந்து கொண்டே இருக்கும். ஏனென்றால் இந்த விக்னங்கள் அல்லது பேப்பர்கள் அனுபவி ஆக்குகின்றன. இதை விக்னம் எனப் புரிந்து கொள்ளாமல், அனுபவத்தின் முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது -இந்த உணர்வுடன் பார்ப்பீர்களானால் முன்னேற்றத்தின் ஏணிப்படி அனுபவமாகும். இதிலிருந்து இன்னும் முன்னேற வேண்டும். ஏனென்றால் சேவை என்பதன் அர்த்தம், குழுவின், அனைத்து ஆத்மாக்களின் ஆசிர்வாதங்களை அனுபவம் செய்வதாகும். சேவை என்பது அனைவரின் ஆசிர்வாதங்கள் கிடைப் பதற்கான சாதனமாகும். இந்த விதியின் மூலம், இந்த உள்ளுணர்வுடன் பார்ப்பீர்களானால் சதா அந்த மாதிரி அனுபவம் செய்வீர்கள் – அனுபவத் தின் அத்தாரிட்டி நம்மை மேலும் முன்னேறச் செய்து கொண்டிருக்கிறது. விக்னத்தை விக்னமாகப் புரிந்து கொள்ளாதீர்கள். மேலும் விக்னத்திற்காக நிமித்தமாகியுள்ள ஆத்மாவை விக்னத்தை ஏற்படுத்தும் (விக்னகாரி) ஆத்மா எனப் புரிந்து கொள்ளாதீர்கள். அனுபவி ஆக்குகிற ஆசிரியர் எனப் புரிந்து கொள்ளுங்கள். நிந்தனை செய்பவர் என் நண்பர் எனச் சொல்கிறீர்கள் என்றால் விக்னங் களைக் கடந்து செல்ல வைத்து அனுபவி ஆக்கும் ஆசிரியர் ஆகிறார் இல்லையா? படிப்பினை தந்தார் இல்லையா? எப்படி இன்றைய உலகில் நோய்களைப் போக்குகிற டாக்டர்கள் உடற்பயிற்சி செய்ய வைக்கிறார்கள், அந்த உடற்பயிற்சியில் முதலில் வலி இருக்கும் ஆனால் அந்த வேதனை சதா காலத்திற்கும் வலியற்றவராக ஆக்குவதற்கு நிமித்தமாக உள்ளது. யாருக்கு இந்தப் புரிதல் இல்லையோ, அவர்கள் கதறுவார்கள் -இவரோ இன்னும் அதிக வேதனையை உண்டாக்கி விட்டார் எனச் சொல்வார்கள் ஆனால் இந்த வேதனைக்குள் மருந்து அடங்கியுள்ளது. இதே விதமாக வடிவம் விக்னமாக இருக்கலாம், உங்களுக்கு விக்னம் செய்யக்கூடிய ஆத்மா காணப் படுகிறார் ஆனால் சதா காலத்திற்கும் விக்னங்களைக் கடந்து செல்வதற்கு நிமித்தமாக, அசையாத வராக ஆக்குவதற்கு நிமித்தமாக அவர் தாம் ஆகிறார். அதனால் சதா நிர்விக்ன சேவாதாரியாக இருப்பவர் தாம் உண்மையான சேவாதாரி எனச் சொல்லப்படுகிறார். அத்தகைய

## 1987 அவ்யக்த முரளி

சிரேஷ்ட ரேகை உள்ளவர் உண்மையான சேவாதாரி எனச் சொல்லப்படுவார்.

சேவையில் எப்போதும் தூய புத்தி, தூய விருத்தி மற்றும் தூய கர்மம் வெற்றிக்கான சகஜ ஆதாரமாகும். எந்த ஒரு சேவையின் காரியத்தையும் ஆரம்பிக்கும் போது முதலில் சோதித்துப் பாருங்கள் -புத்தியில் எந்த ஆத்மாவைப் பற்றியாவது தூய்மைக்கு பதிலாக கடந்து போன விஷயங்களின் நினைவு கொஞ்சமாவது இருக்குமானால், அதே விருத்தி, திருஷ்டியுடன் அவரைப் பார்க்கவும் பேசவும் வேண்டி உள்ளது. ஆக, சேவையினால் தூய்மையின் மூலமாக நடைபெற வேண்டிய சம்பூர்ண வெற்றி ஏற்படுவதில்லை. நடந்து முடிந்த விˆயங்களை மற்றும் விருத்திகள் முதலியவற்றை முடித்து விட வேண்டும். இது தான் தூய்மையாகும். நடந்து முடிந்தவற்றை சங்கல்பம் செய்வதும் கூட கொஞ்சம் சதவிகிதத்தில் லேசான பாவமாகிறது. சங்கல்பம் கூட சிருஷ்டியை உருவாக்கி விடுகிறது. வர்ணனை செய்வதோ இன்னும் பெரிய விஷயம் ஆனால் சங்கல்பம் செய்வதால் கூட பழைய சங்கல்பத்தின் ஸ்மிருதியானது, சிருஷ்டி அல்லது வாயு மண்டலத்தையும் கூட அது போல் ஆக்கி விடுகிறது. பிறகு சொல்லி விடுகின்றனர் -நான் சொன்னேன் இல்லையா, அப்படியே நடந்து விட்டது இல்லையா? ஆனால் ஏன் நடந்தது? உங்களது பலவீனமான, வீணான சங்கல்பம் இந்த வீணான வாயுமண்டலத்தின் சிருஷ்டியை உருவாக்கியது. அதனால் சதா உண்மையான சேவாதாரி என்றால் பழைய வைப்ரேˆன்களை முடித்து விடுபவர்கள். எப்படி விஞ்ஞானிகள் சஸ்திரங்கள் (ஆயுதங்கள்) மூலம் சஸ்திரங்களை அழித்து விடுகின்றனர், ஒரு விமானத்தின் மூலம் இன்னொரு விமானத்தை வீழ்த்தி விடுகின்றனர். யுத்தம் செய்கின்றனர் என்றால் அழித்து விடுகின்றனர் இல்லையா? ஆக, உங்களுடைய சுத்த வைப்ரேˆன்கள், சுத்த வைப்ரேஷன்களை இமர்ஜ் செய்ய முடியும் மற்றும் வீணான வைப்ரேஷன்களை அழிக்க முடியும். சங்கல்பம் சங்கல்பத்தை அழிக்க முடியும். உங்களுடையது சக்திசாலி சங்கல்பம் என்றால் சக்திசாலி சங்கல்பம் வீணான சங்கல்பத்தை அவசியம் அழித்து விடும். புரிந்ததா? சேவையில் முதலில் தூய்மை, அதாவது பவித்திரதாவின் சக்தி வேண்டும். இந்த மூன்று ரேகைகள் ஜொலிப்புடன் காணப்படுகின்றன.

சேவையின் விசேஷதாக்கள் பற்றி இன்னும் அநேக விஷயங்கள் கேட்டிருக்கவும் செய்கிறீர்கள். அனைத்து விஷயங்களின் சாரம் -சுயநலமற்ற, நிர்விகல்ப ஸ்திதி மூலம் சேவை செய்வது வெற்றிக்கான ஆதாரமாகும். இந்த சேவையில் தான் தானும் திருப்தியாக, புன்சிரிப்புடன் இருப்பீர்கள், மற்றவர்களும் திருப்தியாக இருப்பார்கள். சேவை இல்லாமல் குழு இருப்பதில்லை. குழுவில் பல்வேறு விஷயங்கள், பலவிதமான சிந்தனைகள், பலவிதமான வழிமுறைகள், சாதனங்கள் -இவை இருக்கத் தான் செய்யும் ஆனால் பிரச்சினைகள் வந்தாலும், பலவித சாதனங்கள் கேட்டாலும் கூட சுயம் சதா வேற்றுமையில் இருப்பதை ஒரு தந்தையின் நினைவில் ஒருங்கிணைக்கக் கூடிய, ஏக்ரஸ் ஸ்திதி உள்ளவர்களாக இருங்கள். ஒரு போதும் குழப்பமடை யாதீர்கள் -இப்போது என்ன செய்வது, அநேக சிந்தனைகள் ஆகி விட்டன, யாருடையதை ஏற்றுக் கொள்வது, யாருடையதை ஏற்றுக் கொள்ளாமல் விடுவது? சுயநலமற்ற, நிர்விகல்ப உணர்வுடன் நிர்ணயம் செய்வீர்களானால் ஒரு போதும் யாருக்கும் எந்த ஒரு வீணான சங்கல்பமும் வராது. ஏனென்றால் சேவை இல்லாமலும் இருக்க முடியாது, நினைவு இல்லமாலும் இருக்க முடியாது. அதனால் சேவையையும் அதிகரித்துக் கொண்டே செல்லுங்கள். தன்னையும் கூட அன்பு, சகயோகம் மற்றும் சுயநலமற்ற உணர்வில் முன்னேறச் செய்து கொண்டே செல்லுங்கள். புரிந்ததா?

உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் சிறியவர்கள், பெரியவர்கள் அனைவரும் ஊக்கம் -உற்சாகத்துடன் சேவையின் நிரூபணத்தைக் கொடுத்தார்கள். வெளிநாட்டு சேவையின் காரியமும் கூட வெற்றிகரமாக நிறைவடைந்தது மற்றும் உள்நாட்டிலும் கூட அனைவரின் சகயோகத்தினால் அனைத்துக் காரியங்களும் நிறைவடைந்தன, வெற்றியடைந்தன. பாப்தாதா குழந்தைகளின் சேவை யின் ஈடுபாட்டைப் பார்த்து மகிழ்ச்சிடைகிறார். அனைவர்க்கும் பாபாவைப் பிரத்தி யட்சம் செய்வதற்கான லட்சியம் நன்றாக இருந்தது மற்றும் பாபாவின் அன்பில் கடின உழைப்பை அன்பாக மாற்றி, காரியத்தின் பிரத்தியட்ச பலனைக் காட்டினீர்கள். குழந்தைகள் அனைவரும் விசேஷமாக சேவையின் நிமித்தமாக வந்துள்ளனர். பாப்தாதாவும் ஆஹா குழந்தாய் ஆஹா! என்ற பாடலைப் பாடுகிறார். அனைவரும் மிக நன்றாகச் செய்தீர்கள். சிலர் செய்தனர், சிலர் செய்ய வில்லை என்பதில்லை. சிறிய இடமாக

இருந்தாலும் சரி, பெரிய இடமாக இருந்தாலும் சரி, சிறிய இடத்துக்காரர்களும் குறைவாகச் செய்யவில்லை. அதனால் அனைவரின் சிரேஷ்ட பாவனைகள் மற்றும் சிரேஷ்ட விருப்பங்களால் காரியங்கள் நன்றாக இருந்தன. சதா நன்றாகவே இருக்கும். சமயத்தையும் நன்றாக ஈடுபடுத்தினீர்கள், சங்கல்பத்தையும் நன்றாக ஈடுபடுத்தினீர்கள், பிளான் உருவாக்கினீர்கள் என்றால் சங்கல்பம் செய்தீர்கள் இல்லையா? சரீரத்தின் சக்தியையும் ஈடுபடுத்தினீர்கள், செல்வத்தின் சக்தியையும் ஈடுபடுத்தினீர்கள், குழுவின் சக்தியையும் ஈடுபடுத்தினீர்கள். சர்வ சக்திகளின் ஆகுதிகளால் சேவையின் யக்ஞம் இரண்டு பக்கங்களிலும் (உள்நாடு மற்றும் வெளி நாடுகள்) வெற்றி யடைந்தது. காரியம் மிக நன்றாக இருந்தது. சரியாகச் செய்தார்களா இல்லையா -இந்தக் கேள்வியே இல்லை. சதா சரியாக இருந்துள்ளது மற்றும் சதா சரியாகவே இருக்கும். மல்ட்டி மில்லியன் பீஸ் காரியம் செய்தாலும் சரி, கோல்டன் ஜுபிலியின் காரியம் செய்தாலும் சரி -இரண்டு காரியங்களுமே அழகாக இருந்தன. எந்த விதிப்படி செய்தீர்களோ, அந்த விதியும் சரியாக உள்ளது. எங்கெங்கோ பொருள்களின் விலையை அதிகரிப்பதற்காக திரைக்குள் அந்தப் பொருள் வைக்கப் படுகிறது. திரையானது விலைமதிப்பை இன்னும் கூட அதிகரித்து விடுகிறது மற்றும் தெரிந்து கொள்ளும் ஆவல் ஏற்படுகிறது -என்னவென்று பார்க்கலாம் என்று. திரைக்கு உள்ளே உள்ளதென்றால் அவசியம் அதில் ஏதோ இருக்கும் என்று தோன்றுகிறது ஆனால் இதே திரை பிரத்தியட்சதாவிற்கான திரையாக மாறி விடும். இப்போது பூமியை உருவாக்கி விட்டீர்கள். பூமியில் விதை போடப்படும் போது உள்ளுக்குள் மறைந்திருக்குமாறு போடப்படுகிறது. பொருளை வெளியில் வைப்பதில்லை, உள்ளே மறைவாக வைக்கின்றனர் ஆனால் மறைவாக வைக்கப்பட்ட விதையின் மலர்கள், பழங்களின் சொரூபம் தான் வெளிப் படை யாகத் தெரிகின்றது. ஆக, இப்போது விதை போடப் பட்டுள்ளது. மரம் வெளியில் ஸ்டேஜ் மீது தானாகவே வந்து கொண்டிருக்கும்.

குஷியில் நடனமாடிக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? ஆஹா பாபா என்று சொல்கிறீர்கள் ஆனால் ஆஹா சேவை என்றும் சொல்கிறீர்கள். நல்லது. செய்திகள் அனைத்தையுமே பாப்தாதா கேட்டு விட்டார். இந்த சேவை மூலம் உள்நாட்டு வெளிநாட்டுக் குழு மூலம் வர்க்கங்களின் சேவை நடந்தது. இது நாலாபுறமும் ஒரே சமயத்தில் ஒரே குரலை

ஒலிக்கச் செய்வதற்கான அல்லது பரவச் செய்வதற்கான சாதனம் நன்றாக உள்ளது. இனியும் கூட என்ன நிகழ்ச்சிகள் நடத்தினாலும் சரி, ஆனால் ஒரே சமயத்தில் உள்நாடு -வெளிநாடுகளில் நாலாபுறமும் ஒரே விதமான சேவையின் பலன் சொரூபமாக மதுபனில் குழு ரூபத்தில் இருக்கிறீர்கள். நாலாபுறமும் ஒரே அலை இருக்கும் காரணத்தால் அனைவரிடமும் ஊக்கம் -உற்சாகமும் ஏற்படுகிறது மற்றும் நாலாபுறமும் ஆன்மிகப் பந்தயம் நடைபெறுகிறது -ரேஸ், ரீஸ் (பொறாமை) அல்ல. அதாவது நாம் இன்னும் அதிகத்திலும் அதிகமாக சேவையின் நிரூபணம் கொடுக்க வேண்டும். ஆக, இந்த ஊக்கத்துடன் நாலாபுறமும் பெயர் ஒலிக்கின்றது. அதனால் எந்த ஒரு வர்க்கத்தினுடையதையும் உருவாக்குங்கள் ஆனால் நாலாபுறமும் ஒரே ரூபத்தில் ஒரே விதமான சேவை ஒரே வழி முறைப்படி செய்வதற்கான கவனம் வையுங்கள். அப்போது அந்த ஆத்மாக்களுக்கும் கூட நாலா புறத்தின் குழுவைப் பார்த்து ஊக்கம் வருகிறது, முன்னேறுவதற்கான வாய்ப்பு கிடைக்கிறது. இந்த விதியின் மூலம் திட்டத்தை உருவாக்கி, முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். முதலில் அவரவரின் பகுதியில் அந்த வர்க்கத்தின் சேவை செய்து, சின்னச்சின்ன குழுக்களின் ரூபத்தில் நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டே இருங்கள். மேலும் அந்தக் குழுவின் மூலம் விசேஷ ஆத்மாக்கள் யார் இருக்கிறார்களோ, அவர்களை இந்தப் பெரிய குழுவுக்காகத் தயார் செய்யுங்கள் ஆனால் ஒவ்வொரு சென்டர் அல்லது அக்கம்பக்கம் ஒன்றாகச் சேர்ந்து செய்யுங்கள். ஏனென்றால் அநேகர் இங்கு வரை வந்து சேர முடியவில்லை என்றால் அங்கேயே கூட குழுவின் நிகழ்ச்சி என்ன நடைபெறுகிறதோ, அதனாலும் கூட அவர்களுக்கு லாபம் கிடைக்கிறது. ஆகவே முதலில் சின்னச்சின்ன சிநேக சந்திப்புகளை நிகழ்த்துங்கள். பிறகு மண்டல அளவில் ஒன்றாகச் சேர்த்து குழுவாக நடத்துங்கள். பிறகு மதுபனின் பெரிய குழு உருவாக வேண்டும். ஆக, முதலில் இருந்தே அனுபவி ஆகிப் பிறகு இங்கு வரை வருவார்கள் ஆனால் இதற்காக உள்நாடு -வெளிநாடுகளில் ஒரே தலைப்பு இருக்க வேண்டும், ஒரே வர்க்கத்தின் நிகழ்ச்சியாக இருக்க வேண்டும். இரண்டு -நான்கு வர்க்கத்தினர் ஒன்றாகச் சேர்ந்து நடத்துகிற மாதிரி அத்தகைய தலைப்புகளும் உள்ளன. தலைப்புகள் விசாலமாக இருந்தால் இரண்டு -மூன்று வர்க்கங்களுக்கும் கூட அதே தலைப்பின் நடுவே வர முடியும். ஆக, இப்போது உள்நாடு -வெளிநாடுகளின் தர்மத் தலைவர்கள், அரசாங்கத்

தலைவர்கள் மற்றும் அறிவியல் தலைவர்கள் -இந்த மூவரின் சேம்பிள்களைத் தயார் செய்யுங்கள். நல்லது.

சர்வ பவித்திரதாவின் வரதானத்தின் அதிகாரி ஆத்மாக்களுக்கு, சதா ஏக்ரஸ், நிரந்தர யோகி வாழ்க்கையின் அனுபவி ஆத்மாக்களுக்கு, சதா ஒவ்வொரு சங்கல்பம், ஒவ்வொரு சமயம், உண்மையான சேவாதாரி ஆகக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, உலக -சிநேகி, உலக சேவாதாரி பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் நமஸ்தே.

**வரதானம்: கம்பைண்டு (இணைந்த) சொரூபத்தின் நினைவின் மூலம் மறதியற்றவராக ஆகக்கூடிய நிரந்தர யோகி ஆகுக!**

எந்தக் குழந்தைகள் தங்களை பாபாவுடன் இணைந்தவராக அனுபவம் செய்கிறார்களோ, அவர்களுக்கு நிரந்தர யோகி ஆகுக என்ற வரதானம் இயல்பாகவே கிடைத்து விடுகிறது. ஏனென்றால் அவர்கள் எங்கே இருந்தாலும் சந்திப்பின் திருவிழா நடந்து கொண்டே இருக்கிறது. அவர்களை யாராவது எவ்வளவு தான் மறக்கடிக்க முயற்சி செய்தாலும் மறக்காதவர்களாக உள்ளனர். அத்தகைய மறதியற்ற குழந்தைகள், பாபாவுக்கு மிகப் பிரியமானவர்கள், அவர்கள் தான் நிரந்தர யோகிகள். ஏனென்றால் அன்பின் அடையாளம் -இயல்பான நினைவு. அவர்களின் சங்கல்ப ரூப நகத்தையும் கூட மாயாவினால் அசைக்க முடியாது.

**சுலோகன்: காரணத்தைச் சொல்வதற்கு பதிலாக அதற்கான நிவாரணம் செய்வீர்களானால் ஆசிர்வாதங்களுக்கு அதிகாரி ஆகி விடுவீர்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 18.03.1987 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உண்மையான ஆன்மீக நாயகியின் அடையாளங்கள்!

இன்று ஆன்மீக நாயகன் தனது ஆன்மீக நாயகி ஆத்மாக்களை சந்திப்பதற்காக வந்திருக்கின்றார். முழு கல்பத்திலும் இந்த நேரத்தில் மட்டுமே ஆன்மீக நாயகள் மற்றும் நாயகியின் சந்திப்பு ஏற்படுகிறது. பாப்தாதா தனது ஒவ்வொரு ஆன்மீக நாயகி ஆத்மாவைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார் -எவ்வாறு ஆன்மீக ஈர்ப்பில் ஈர்க்கப்பட்டு தனது உண்மையான நாயகனை அறிந்து கொண்டார்கள், அடைந்து விட்டார்கள்! காணாமல் போயிருந்த நாயகிகளைப் பார்த்து நாயகனும் குஷியடைகின்றார் -மீண்டும் தங்களது உண்மையான புகழிடத்தை அடைந்து விட்டீர்கள். இவ்வாறு அனைத்து பிராப்திகளையும் கொடுக்கக் கூடிய நாயகள் வேறு யாரும் கிடைக்க முடியாது. ஆன்மீக நாயகன் சதா தனது ஆன்மீக நாயகிகளை சந்திப்பதற்காக எங்கு வருகின்றார்? எவ்வாறு சிரேஷ்ட நாயகன் மற்றும் நாயகியோ, அவ்வாறே சந்திப்பதற்கும் சிரேஷ்ட இடத்தில் வருகின்றார். சந்திப்பு செய்யக் கூடிய அந்த இடம் எது? இந்த இடம் தான், இந்த இடத்திற்கு எந்த பெயர் வேண்டுமென்றாலும் கூறிக் கொள்ளுங்கள், அனைத்து பெயர்களும் இந்த இடத்திற்கு கொடுக்க முடியும். பொதுவாக சந்திப்பு செய்வதற்கு மிகவும் பிரியமான இடம் எது? சந்திப்பானது ஒன்று பூந்தோடத்தில் இருக்கும் அல்லது கடற்கரையில் இருக்கும். இதை நீங்கள் பீச் என்று கூறுகிறீர்கள். ஆக இப்போது எங்கு அமர்ந்திருக்கிறீர்கள்? ஞானக்கடலின் கடற்கரையில் ஆன்மீக சந்திப்பிற்கான இடத்தில் அமர்ந்திருக்கிறீர்கள். ஆன்மீக அல்லது இறை பூந்தோட்டமாகும் (அல்லாவின் பூந்தோட்டம்). பல வகையான பூந்தோட்டங்களை பார்த்திருக்கிறீர்கள் ஆனால் இது போன்ற பூந்தோட்டம், இங்கு ஒன்றை விட மற்றொன்று அதிகமாக மலர்ந்திருக்கும் மலராக இருக்கின்றது, ஒவ்வொன்றும் சிரேஷ்ட அழகின் மூலம் தனது நறுமணத்தை பரப்பிக் கொண்டிருக் கிறது. அப்படிப்பட்ட பூந்தோட்டமாகும். இந்த தோட்டத்தின்

நடுவில் பாப்தாதா அல்லது நாயகன் சந்திப்பதற்காக வருகின்றார். அங்கு பல கடற்கரைகளை பார்த்திருப்பீர்கள், ஆனால் இப்படிப்பட்ட கடற்கரையை எங்கேயாவது பார்த்திருப்பீர்களா? -இங்கு ஞானக் கடலின் அன்பின் அலைகள், சக்திகளின் அலைகள் என்று விதவிதமான அலைகள் சதா காலத்திற்கும் புத்துணர்வு ஏற்படுத்தி விடுகிறது. இந்த இடம் பிடித்திருக்கிறது அல்லவா? சுத்தமாகவும் இருக்கிறது மற்றும் ரம்மியமாகவும் இருக்கிறது. அழகாகவும் இருக்கிறது. அந்த அளவிற்கு பிராப்தியும் இருக்கிறது. இப்படிப்பட்ட மனதை மகிழ்விக்கக் கூடிய விசேஷ இடத்தை நாயகிகளாகிய உங்களுக்காகவே நாயகன் உருவாக்கியிருக்கின்றார். இங்கு வருவதன் மூலம் அன்பின் அலைகளுக்குள் வந்தவுடன் பல வகையான கடின உழைப்பிலிருந்து விடுபட்ட விடுகிறீர்கள். அனைத்தை யும் விட மிகப் பெரிய கடின உழைப்பு -நினைவில் இயற்கையாக இருப்பது. அதை சகஜமாக அனுபவம் செய்கிறீர்கள். வேறு எந்த கடின உழைப்பிலிருந்து விடுபடுகிறீர்கள்? லௌகீக காரியங்களிலிருந்தும் விடுபட்டு விடுகிறீர்கள். உணவு சமைப்பதிலிருந்தும் விடுபட்டு விடுகிறீர்கள். அனைத்தும் தயாராக கிடைக்கிறது அல்லவா! நினைவும் தானாகவே அனுபவம் ஆகிறது. ஞான இரத்தினங்களின் பையும் நிறைந்து கொண்டே இருக்கிறது. இப்படிப்பட்ட இடத்தில் கடின உழைப்பிலிருந்தும் விடுபட்டு விடுகிறீர்கள் மற்றும் அன்பில் மூழ்கி விடுகின்றீர்கள்.

அன்பின் அடையாளமாக விசேஷமாக கூறப்படக் கூடிய விசயம் -இரண்டு பேர், இரண்டாக இல்லாமல் இருவரும் இணைந்து ஒன்றாக ஆகி விடுவர். இதைத் தான் கலந்து விடுவது என்று கூறுகின்றனர். பக்தர்கள் இந்த அன்பான ஸ்திதியைத் தான் கலந்து விடுவது அல்லது ஐக்கியமாகி விடுவது என்று கூறி விட்டனர். ஐக்கியமாவதன் பொருளை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. அன்பில் ஐக்கியமாவது என்பது ஸ்திதியாகும் ஆனால் அவர்கள் ஸ்திதிக்குப் பதிலாக ஆத்மாவின் நிலையை சதா காலத்திற்கும் சமாப்தி செய்வதாக புரிந்திருக் கின்றனர். ஐக்கியமாவது என்றால் சமம் ஆவதாகும். தந்தையின் அல்லது ஆன்மீக நாயகனின் சந்திப்பில் மூழ்கி விடும்போது பாபசமான் ஆவதற்கான அதாவது ஐக்கியமாகும் அதாவது சமம் ஆவதற்கான அனுபவம் செய்கிறீர்கள். இந்த ஸ்திதியைத் தான் பக்தர்கள் ஐக்கியமாவது என்று கூறுகின்றனர். மூழ்கவும் செய்கிறீர்கள், கலந்து விடுகிறீர்கள் ஆனால் இது சந்திப்பின்

அன்பான ஸ்திதியின் அனுபவமாகும். புரிந்ததா! ஆகையால் பாப்தாதா தனது நாயகிகளை பார்த்துக் கொண்டிருக்கின்றார்.

உண்மையான நாயகி என்றால் சதா நாயகி, இயல்பான நாயகி ஆவர். உண்மையான நாயகியின் விசேஷதாவை அறிவீர்கள். இருப்பினும் அவர்களது முக்கிய அடையாளங்கள் -முதல் அடையாளம் -நேரத்திற்கு தகுந்தாற் போன்று ஒரு நாயகனிடம் சர்வ சம்பந்தத்தின் அனுபவம் செய்வது. நாயகன் ஒருவர் தான் ஆனால் ஒருவருடன் அனைத்து சம்பந்தங்களும் வைப்பதாகும். எந்த சம்பந்தம் விரும்புகிறீர்களோ மற்றும் எந்த நேரத்தில் எந்த சம்பந்தம் அவசியமோ, அந்த நேரத்தில் அந்த சம்பந்தத்தின் ரூபத்தில் அன்பின் அனுபவம் செய்வதாகும். ஆக முதல் அடையாளம் -சர்வ சம்பந்தத்தின் அனுபவம். சர்வ என்ற வார்த்தையை மேற்கோள் காட்டுகின்றார். வெறும் சம்பந்தம் மட்டும் இருக்கக் கூடாது. சில குறும்புக்கார நாயகிகளும் இருக் கின்றனர், தனக்கு சம்பந்தம் ஏற்பட்டு விட்டதாக நினைக்கின்றனர் ஆனால் சர்வ சம்பந்தம் ஏற்பட்டிருக்கிறதா? இரண்டாவது விசயம் -சரியான நேரத்தில் சம்பந்தத்தின் அனுபவம் ஏற்படுகிறதா? ஞானத்தின் ஆதாரத்தில் சம்பந்தம் இருக்கிறதா? அல்லது உள்ளப்பூர்வமான அனுபவத்தின் ஆதாரத்தில் சம்பந்தம் இருக்கிறதா? சத்தியமான உள்ளத்தில் பாப்தாதா மகிழ்ச்சியடைவார். புத்தி நன்றாக வேலை செய்தால் பார்த்து மகிழ்ச்சி அடைந்து விடமாட்டார், திலாராம் உள்ளத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைவார். ஆகையால் உள்ளத்தின் அனுபவத்தை உள்ளம் அறிந்து கொள்ளும், திலாராம் அறிவார். ஐக்கியமாகும் இடம் உள்ளம் என்று கூறப்படுகிறது, புத்தி அல்ல. ஞானம் வைத்துக் கொள்ளும் இடம் புத்தியாகும் ஆனால் நாயகனை வைத்துக் கொள்ளும் இடம் உள்ளம் ஆகும். நாயகிகளின் விசயங்களைத் தான் நாயகன் கூறுவார் அல்லவா! சில நாயகிகள் புத்தியை அதிகம் பயன்படுத்துகின்றனர், ஆனால் உள்ளத்தின் மூலம் புத்தியின் உழைப்பு பாதியாக ஆகி விடுகிறது. யார் உள்ளப்பூர்வமாக சேவை செய்கிறார்களோ அல்லது நினைவு செய்கிறார் களோ, அவர்களது உழைப்பு குறைந்து விடும் மற்றும் திருப்தி அதிகமாக இருக்கும். மேலும் யார் உள்ளப்பூர்வமான அன்புடன் நினைவு செய்யவில்லையோ, ஞானத்தின் ஆதாரத்தில் மட்டும் புத்தியினால் நினைவு செய்கிறார்களோ அல்லது சேவை செய்கிறார்களோ அவர்கள் அதிக உழைப்பு செய்ய வேண்டியிருக்கும், திருப்தி குறைவாக இருக்கும்.

வெற்றி கிடைத்தாலும் கூட உள்ளத்தில் திருப்தி குறைவாக இருக்கும். நன்றாகத் தான் நடந்தது, ஆனாலும் என்று சிந்தித்துக் கொண்டே இருப்பார்கள், கூறிக் கொண்டே இருப்பார்கள். உள்ளப்பூர்வமானவர்கள் சதா திருப்தியின் பாடல் பாடிக் கொண்டே இருப்பார்கள். உள்ளப்பூர்வமான திருப்தியின் பாடல் வாயின் திருப்திக் கான பாடல் கிடையாது. உண்மையான நாயகிகளாக இருப்பவர்கள் உள்ளப்பூர்வமாக நேரத்திற்கு தகுந்தாற் போன்று சர்வ சம்பந்தத்தின் அனுபவம் செய்வார்கள்.

இரண்டாவது அடையாளம் -உண்மையான நாயகிகள் ஒவ்வொரு பிரச்சனையின் போதும், ஒவ்வொரு காரியத்தின் போதும் சதா பிராப்திக்கான குஷியுடன் இருப்பார்கள். ஒன்று அனுபவம், மற்றொன்று அதனால் கிடைக்கும் பிராப்தி. சிலர் ஆம், அவர் எனது தந்தையாகவும் இருக்கின்றார், நாயகனாகவும் இருக்கின்றார் என்று அனுபவமும் செய்கின்றனர், குழந்தையாகவும் இருக்கின்றார் ஆனால் எவ்வளவு பிராப்தியை விரும்புகின்றார்களோ அவ்வளவு ஏற்படுவது கிடையாது. தந்தையாக இருக்கின்றார், ஆனால் ஆஸ்திக்கான பிராப்தியின் குஷி இருப்பது கிடையாது. சர்வ சம்பந்தத் தின் அனுபவத்தின் கூடவே பிராப்திக்கான அனுபவமும் இருக்க வேண்டும். தந்தை என்ற சம்பந்தத்தின் மூலம் சதா ஆஸ்திக்கான பிராப்தியை உணர வேண்டும், நிறைந்திருக்க வேண்டும். சத்குருவின் மூலம் சதா வரதானங்களினால் சம்பன்ன ஸ்திதி அல்லது சதா சம்பன்ன சொரூபத் தின் அனுபவம் ஏற்பட வேண்டும். ஆக பிராப்தியின் அனுபவம் ஏற்படுவதம் அவசியமாகும். அது சம்பந்தங்களின் அனுபவமாகும், இது பிராப்திகளின் அனுபவமாகும். சிலருக்கு சர்வ பிராப்திகளின் அனுபவம் ஏற்படுவது கிடையாது. மாஸ்டர் சர்வசக்திவனாக இருக்கின்றனர், ஆனால் சரியான நேரத்தில் சக்திகள் பிராப்தியாவது கிடையாது. பிராப்தியின் அனுபவம் இல்லையெனில் பிராப்தி யிலும் குறை இருக்கிறது. ஆக அனுபவத்தின் கூடவே பிராப்தி சொரூபமாகவும் ஆக வேண்டும் -இது தான் உண்மையான நாயகியின் அடையாளமாகும்.

மூன்றாவது அடையாளம் -எந்த நாயகிக்கு அனுபவமும் இருக்கிறதோ, பிராப்தியும் இருக்கிறதோ அவர்கள் சதா திருப்தியாக இருப்பார்கள். எந்த விசயத்திலும் அபிராப்தி ஆத்மாவாக இருக்க மாட்டார்கள். ஆக திருப்தி

-இது நாயகியின் விசேஷதா ஆகும். எங்கு பிராப்தி இருக்கிறதோ, அங்கு அவசியம் திருப்தி இருக்கும். ஒருவேளை திருப்தியில்லையெனில் அவசியம் பிராப்தியில் குறையிருக்கும். மேலும் பிராப்தியில்லை எனில் சர்வ சம்பந்தங்களின் அனுபவத்தில் குறையிருக்கும். ஆக மூன்று அடையாளங்கள் -அனுபவம், பிராப்தி மற்றும் திருப்தி. சதா திருப்தி ஆத்மா. எப்படிப்பட்ட நேரமாக இருந்தாலும், எந்த சூழ்நிலையாக இருந்தாலும், சேவைக்கான இடம் எப்படிப்பட்டதாக இருந்தாலும், சேவைக்கு துணையாக இருப்பவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும், ஒவ்வொரு சூழ்நிலையிலும், ஒவ்வொரு நடத்தையிலும் திருப்தியாக இருக்க வேண்டும். இவ்வாறு உண்மையான நாயகி களாக இருக்கிறீர்கள் தானே? திருப்தியான ஆத்மாவிடம் எந்த எல்லைக்குட்பட்ட இச்சைகள் இருக்காது ஆனால் திருப்தியான ஆத்மாக்கள் மிகவும் குறைவாகத் தான் இருக்கின்றனர். ஏதாவது ஒரு விசயத்தில், அதாவது மரியாதைக்கான அல்லது புகழுக்கான பசியில் இருக்கின்றனர். பசியுடன் இருப்பவர்கள் ஒருபோதும் திருப்தியடைய மாட்டார்கள். யாருடைய வயிறு சதா நிறைந்திருக்கிறதோ அவர்கள் திருப்தியாக இருப்பார்கள். சரீத்திற்கு உணவு பசி இருப்பது போன்று மனதிற்கும் பசி இருக்கிறது -மரியாதை, புகழ், தீர்வு, சாதனம். இது மனதிற்கான பசியாகும். சரீரத்தில் (வயிறு) நிறைந்தவர்கள் சதா திருப்தியாக இருப்பது போன்று, மனம் நிறைந்திருப்பவர்கள் சதா திருப்தியாக இருப்பார்கள். திருப்தி என்பது நிறைந்திருப்பதன் அடையாளமாகும். நிறைந்த ஆத்மாவாக இல்லையெனில் அது சரீர பசியோ அல்லது மனதிற்கான பசியோ அவர்களுக்கு எவ்வளவு கிடைத்தாலும், அதிக மாகவே கிடைக்கும், ஆனால் நிறையாத ஆத்மாவாக இருக்கின்ற காரணத்தினால் சதா அதிருப்தியுடன் இருப்பார்கள். இராயலாக இருப்பவர்கள், சிறிது அடைந்ததும் திருப்தி யடைந்து விடுவார்கள். இராயல் ஆத்மாக்களின் அடையாளம் -சதா நிறைந்திருப்பார்கள், ஒரு ரொட்டி கிடைத் தாலும் திருப்தியாகி விடுவார்கள், 36-வகையான உணவு கிடைத்தாலும் திருப்தியடைந்து விடுவார்கள். நிறைவு இல்லாதவர்களுக்கு 36-வகையான உணவு கிடைத் தாலும் திருப்தியடையமாட்டார்கள். ஏனெனில் மனம் பசியுடன் இருக்கிறது. உண்மையான நாயகியின் அடையாளம் -சதா திருப்தி ஆத்மாவாக இருப்பார்கள். ஆக மூன்று அடையாளங் களையும் சோதியுங்கள். நான் யாருக்கு நாயகியாக இருக்கின்றேன், யார் சதா சம்பன்னமாக இருக்கின்றாரோ அப்படிப்பட்ட

நாயகனுக்கு நாயகியாக இருக்கின்றேன் என்று சதா நினையுங்கள். ஆக ஒருபோதும் திருப்தியை விட்டு விடாதீர்கள். சேவையை விட்டு விடுங்கள், ஆனால் திருப்தியை விட்டு விடாதீர்கள். எந்த சேவை அதிருப்தியை உருவாக்குகிறதோ, அந்த சேவை சேவை கிடையாது. சேவை என்பதன் பொருள் பலன் கொடுக்கக் கூடியது சேவை. ஆக உண்மையான நாயகிகள் அனைத்து எல்லைக்குட்பட்ட ஆசைகளிலிருந்து விடுபட்டு சதா சம்பன்னமாக மற்றும் சமமாக இருப்பார்கள்.

இன்று நாயகிகளின் கதைகளை கூறிக் கொண்டிருக்கின்றார். வேடிக்கை விளையாட்டும் அதிகம் செய்கின்றனர். நாயகனும் அதை பார்த்து பார்த்து புன்முறுவல் செய்கின்றார். வேடிக்கை, விளையாட்டு விளையாடுங்கள், ஆனால் நாயகனை நாயகன் என்று புரிந்து கொண்டு அவர் எதிரில் செய்யுங்கள், மற்றவர்களது எதிரில் அல்ல. வித விதமான எல்லைக்குட்பட்ட சுபாவம், சன்ஸ்காரத்திற்கான வேடிக்கை, விளையாட்டு செய்கிறீர்கள். எங்கு என்னுடைய சுபாவம், என்னுடைய சம்ஸ்காரம் என்ற வார்த்தை வருகிறதோ, அங்கு வேடிக்கை, விளையாட்டு ஆரம்ப மாகி விடுகிறது. தந்தையின் சுபாவம் எதுவோ, அதுவே என்னுடைய சுபாவமாகும். என்னுடைய சுபாவம் தந்தையின் சுபாவத்திலிருந்து தனிப்பட்டதாக இருக்கவே முடியாது. அது மாயையின் சுபாவமாகும், மாற்றான் சுபாவமாகும். அதை எப்படி என்னுடையத என்று கூறுவீர்கள்? மாயை மாற்றானுடையது, என்னுடையது அல்ல. தந்தை என்னுடையவர். என்னுடைய சுபாவம் என்றால் தந்தையின் சுபாவமாகும். மாயையின் சுபாவத்தை என்னுடையது என்று கூறுவதும் தவறாகும். என்னுடையது என்ற வார்த்தையே வலையில் மாட்ட வைத்து விடுகிறது அதாவது சக்கரத்தில் கொண்டு வந்து விடுகிறது. நாயகிகள் நாயகனின் முன் இப்படிப்பட்ட வேடிக்கை விளையாட்டையும் காண்பிக்கின்றனர். எது தந்தையினுடையதோ, அது என்னுடையது. பக்தியிலும் ஒவ்வொரு விசயத்திலும் இதையே கூறுவர் -எது உன்னுடையதோ, அது என்னுடையது, என்னுடையது என்று எதுவும் கிடையாது ஆனால் எது உன்னுடையதோ அது என்னுடையது. தந்தையின் சங்கல்பம் எதுவோ, அது என்னுடைய சங்கல்பம். தந்தையின் சேவைக்கான சுபாவ -சம்ஸ்காரம், அது என்னுடையது. இதனால் என்ன ஏற்படும்? எல்லைக்குட்பட்ட எனது, உனதாக ஆகி விடும். உன்னுடையதெல்லாம் என்னுடையதாக, என்னுடையது என்று தனிப்பட்டு எதுவுமில்லை.

எதுவெல்லாம் தந்தையிடமிருந்து தனிப்பட்டதாக இருக்கிறதோ, அது என்னுடையது கிடையவே கிடையாது. அது மாயையின் வலையாகும். ஆகையால் இந்த எல்லைக்குட்பட்ட வேடிக்கை, விளையாட்டிலிருந்து விடுபட்டு ஆன்மீக போதை -நான் உன்னுடையவன், நீ என்னுடையவன். விதவிதமான சம்பந்தங்களின் அனுபவங்கள் என்ற ஆன்மீக விளையாட்டு விளையாடுங்கள் ஆனால் அந்த விளையாட்டு விளையாடாதீர்கள். சம்பந்தங்கள் வைப்பதிலும் ஆன்மீக போதையுடன் இருக்க முடியும். அன்பிற்கான போதை மிகவும் நல்லதாகும். சில நேரம் நண்பன் என்ற சம்பந்தத்தின் அன்பின் போதையை அனுபவம் செய்யுங்கள். அது விளையாட்டு கிடையாது, ஆனால் தனிப்பட்ட விசயமாகும். அன்பான விளையாட்டு அன்பானதாக இருப்பும். எவ்வாறு சிறு குழந்தை மிகவும் அன்பு மற்றும் தூய்மையாக இருக்கின்ற காரணத்தினால் அதன் விளையாட்டு அனைவருக்கும் மிகவும் நன்றாக பிடிக்கும். குழந்தைகளிடம் சுத்தம் மற்றும் தூய்மை இருக்கும். பெரியவர்கள் யாராவது விளையாட்டு காட்டினால் அதை கெட்டதாக நினைப்பர். ஒருவேளை வேடிக்கை, விளையாட்டு விளையாடியே ஆக வேண்டும் எனில் தந்தையிடம் வித விதமான சம்பந்தத்தின், அன்பின், தூய்மையின் வேடிக்கை, விளையாட்டு விளையாடுங்கள்.

சதா கை மற்றும் துணை தான் உண்மையான நாயகன் நாயகியின் அடையாளமாகும். துணை மற்றும் கையை விட்டு விடாதீர்கள். சதா புத்தி என்ற துணை இருக்க வேண்டும் மற்றும் ஒவ்வொரு காரியத்திலும் தந்தையின் சகயோகம் என்ற கை இருக்க வேண்டும். ஒருவருக்கொருவரின் சகயோகத்தின் அடையாளமாக கை மீது கை வைத்திருப்பதாக காண்பிக்கின்றனர் அல்லவா! ஆக சதா தந்தைக்கு சகயோகியாக ஆக வேண்டும் லி இது தான் சதா கை மீது கை வைப்பதாகும். மேலும் சதா புத்தியில் சதா துணையாக வைத்துக் கொள்ள வேண்டும். மனதில் ஈடுபாடு, புத்தியில் துணை. இந்த ஸ்திதியில் இருப்பது என்றால் உண்மை யான நாயகன் மற்றும் நாயகியாக இருக்கிறீர்கள். புரிந்ததா? சதா துணையாக இருப்போம் என்று உறுதிமொழி செய்திருக்கிறீர்கள். அவ்வப்பொழுது துணையாக இருப்பது என்பது உறுதிமொழியல்ல. மனதின் ஈடுபாடு சில நேரங்களில் நாயகனிடம், சில நேரங்களில் இல்லாமல் இருப்பது என்பது சதா துணையாக இல்லை என்று ஆகி விடுகிறது அல்லவா! ஆகையால்

உண்மையான நாயகி என்ற இந்த சுவமானத்தில் இருங்கள். திருஷ்டி யிலும் நாயகன், விருக்தியிலும் நாயகன், சிருஷ்டியிலும் நாயகன்.

ஆக இரு நாயகன் மற்றும் நாயகிகளின் சபையாகும். பூந்தோட்டமாகவும் இருக்கிறது, கடற்கரை யாகவும் இருக்கிறது. இது மிகவும் ஆச்சரியமான தனிப்பட்ட கடற்கரையாகும், அதாவது ஆயிரக் கணக்கானவர்களின் நடுவில் தனிப்பட்டதாக இருக்கிறது. நாயகனுக்கு என்னிடத்தில் தனிப்பட்ட அன்பு இருக்கிறது என்று ஒவ்வொருவரும் அனுபவம் செய்கின்றனர். ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட அன்பான உணர்வு ஏற்படுவது தான் அதிசயமான நாயகன் மற்றும் நாயகி. நாயகன் ஒருவர் தான், ஆனால் அனைவருக்கும். அனைவரின் உரிமையும் மிக அதிகமாக இருக்கிறது. ஒவ்வொருவருக்கும் உரிமை இருக்கிறது. உரிமையில் நம்பர் கிடையாது. உரிமையை பிராப்தியாக அடைவதில் நம்பர் உருவாகி விடுகிறது. இறை பூந்தோடத்தில் கை மற்றும் துணையுடன் கைகோர்த்து நடந்து கொண்டிருக்கின்றேன் அல்லது அமர்ந்திருக்கின்றேன். ஆன்மீக விதையுடன் கை மற்றும் துணையாக இருந்து கொண்டாடிக் கொண்டிருக்கின்றேன் என்ற நினைவு சதா இருக்கும் போது சதா மன மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள், சதா குஷியாக இருப்பீர்கள், சதா சம்பன்னமாக இருப்பீர்கள். நல்லது.

இந்த இரட்டை அயல்நாட்டினரும் இரட்டை அதிஷ்டசாலிகள் ஆவர். இன்றைக்குள் வந்து சேர்ந்தது மிகவும் நல்லதாகும். நாளடைவில் என்ன மாற்றங்கள் ஏற்படும், அது நாடகமாகும். ஆனாலும் இரட்டை அதிர்ஷ்சாலிகள் ஆவீர்கள். சரியான நேரத்தில் வந்து சேர்ந்து விட்டீர்கள். நல்லது.

சதா அழிவற்ற நாயகி ஆகி ஆன்மீக நாயகனுடன் அன்பான சம்பந்தம் வைக்கக் கூடிய, சதா தன்னை அனைத்து பிராப்திகளில் சம்பன்ன அனுபவம் செய்யக் கூடிய, சதா ஒவ்வொரு ஸ்திதி மற்றும் பிரச்சனையிலும் நிறைந்திருக்கக் கூடிய, சதா திருப்தி என்ற பொக்கிஷத்தில் நிறைந்தவர்களாக ஆகி மற்றவர்களையும் நிறைந்தவர்களாக ஆக்கக் கூடிய, இவ்வாறு சதா துணை மற்றும் கைகோர்க்கக் கூடிய உண்மையான நாயகிகளுக்கு ஆன்மீக நாயகனின் உள்ளப்பூர்வமான அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

**வரதானம்: சதா சிரேஷ்ட மற்றும் புது வகையான சேவையின் மூலம் விருத்தி செய்யக் கூடிய சகஜ சேவாதாரி ஆகுக!**

சங்கல்பத்தின் மூலம் ஈஸ்வரிய சேவை செய்வது என்பதும் சேவைக்கான சிரேஷ்ட மற்றும் புது வகையாகும். நகைக்கடையாளர் தினமும் காலையில் தனது ஒவ்வொரு ரத்தினத் தையும் சோதிப்பார் -சுத்தமாக இருக்கிறதா? ஜொலிப்பு நன்றாக இருக்கின்றதா? சரியான இடத்தில் இருக் கின்றதா? அதே போன்று தினமும் அமிர்தவேளையில் தனது தொடர்பில் வரக் கூடிய ஆத்மாக்களின் மீது சங்கல்பத்தின் மூலம் பார்வையை சுற்றுங்கள் -நீங்கள் எந்த அளவிற்கு அவர்களை சங்கல்பத்தினால் நினைவு செய்வீர்களோ, அந்த அளவிற்கு அந்த சங்கல்பம் அவர்களை சென்றடையும். இவ்வாறு சேவைக்கான புது முறையை கடைபிடித்து விருத்தி செய்து கொண்டே முன்னேறுங்கள். உங்களது சகயோகத்திற்கான சூட்சும சக்தியானது ஆத்மாக்களை உங்கள் பக்கம் தானாகவே கவர்ச்சிக்கும்.

**சுலோகன்: சாக்குபோக்கு கூறுவதை உள்ளடக்குங்கள், மேலும் எல்லையற்ற வைராக்கிய விருத்தியை வெளிப்படுத்துங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 20.03.1987 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அன்பு மற்றும் சத்தியத்தினுடைய அதிகாரத்தின் சமநிலை!

இன்று சத்திய தந்தை, சத்திய ஆசிரியர், சத்குரு தன்னுடைய சத்தியத்தின் சக்தி நிறைந்த சத்தியமான குழந்தைகளை சந்திப்பதற்காக வந்திருக்கின்றார்கள். அனைத்தையும்விட உயர்ந்ததிலும் உயர்ந்த சக்தி அல்லது அதிகாரம் (அத்தாரிட்டி) சத்தியத்தின் சக்தியே ஆகும். சத்தியம் என்பது இரண்டு அர்த்தத்தில் கூறப்படுகின்றது. ஒன்று -சத்தியம் என்றால் உண்மை; இரண்டாவது -சத்தியம் என்றால் அழிவற்றது. இந்த இரண்டு அர்த்தங் களின்படி சத்தியத்தின் சக்தி அனைத்தையும்விட உயர்ந்தது ஆகும். தந்தையை சத்தியமான தந்தை என்று கூறப் படுகின்றது. தந்தையரோ அநேகர் இருக்கின்றார்கள், ஆனால், சத்தியமான தந்தை ஒருவரே ஆவார். சத்தியமான ஆசிரியர், சத்குரு ஒருவரே ஆவார். சத்தியமான வரையே பரமாத்மா என்று கூறுகின்றார்கள் அதாவது பரம ஆத்மாவினுடைய விசேஷத் தன்மை சத்தியம் ஆகும். சத்தியமே சிவம். என்ற உங்களுடைய பாடலும் உள்ளது. சத்தியம் சிவம் சுந்தரம் என்று உலகத்திலும் கூறுகின்றார்கள். கூடவே, பரமாத்ம தந்தையை சத் சித் ஆனந்த சொரூபமானவர் என்று கூறுகின்றனர். ஆத்மாக்களாகிய உங்களையும் சத் சித் ஆனந்த சொரூபம் என்று கூறுகின்றனர். எனவே, சத்தியம் என்ற வார்த்தைக்கு மிகுந்த மகிமை உள்ளது. மேலும், எப்பொழுதாவது ஒரு காரியத்தை அதிகாரப்பூர்வமாக சொல்லும் பொழுது நான் சத்தியமானவன், ஆகையினால், அதிகாரப்பூர்வமாக சொல்கின்றேன் என்று கூறுவார்கள். சத்தியத்தின் படகு தடுமாறும் ஆனால், மூழ்காது என்பது சத்தியத்திற்காக சொல்லப்படும் மகிமையாகும். சத்திய மானவர்கள் நடனம் ஆடிக் கொண்டே இருப்பார்கள் என்று நீங்களும் கூட கூறுகின்றீர்கள். சத்தியத்தின் சக்தி உடையவர்கள் சதா நடனம் ஆடிக் கொண்டே இருப்பார்கள், ஒருபொழுதும் வாடிப் போகமாட்டார்கள், எதிலும் சிக்கிக் கொள்ள மாட்டார்கள், பயப்படமாட்டார்கள், பலவீனம் அடைய மாட்டார்கள்.

# 1987 அவ்யக்த முரளி

சத்தியத்தின் சக்தி உடையவர்கள் சதா குஷியில் நடனம் ஆடிக் கொண்டே இருப்பார்கள். சக்திசாலியாக இருப்பார்கள், அவர்களிடம் எதிர்கொள்ளும் சக்தி இருக்கும், ஆகையினால், பயப்பட மாட்டார்கள். சத்தியத்தை தங்கத்திற்கு சமமானது என்று கூறுவார்கள், அசத்தியத்தை மண்ணிற்கு சமமானது என்று கூறுவார்கள். பக்தியில் கூட யார் பரமாத்மாவுடன் அன்பு கொண்டிருப்பார்களோ, அவர்களை சத்சங்கி அதாவது சத்தியமானவருடன் தொடர்பில் இருக்கக்கூடியவர் என்று கூறப்படுகிறது. மேலும், இறுதியில் ஆத்மா எப்பொழுது சரீரத்தை விடுகின்றதோ, அப்பொழுது கூட என்ன கூறுகின்றார்கள்? சத்தியமானவர் உடன் இருக் கின்றார் என்று கூறுகின்றார்கள். எனவே, சத்தியம் என்பது அழிவற்றது, சத்தியம் என்பது உண்மை ஆகும். சத்தியத்தின் சக்தி மகான் சக்தியாகும். நிகழ் காலத்தில் பெரும்பான்மை யானோர் உங்கள் அனைவரையும் பார்த்து என்ன கூறுகின்றார்கள்? இவர்களிடம் சத்தியத்தின் சக்தி இருக்கின்றது, ஆகையினால் தான் இத்தனை காலம் முன்னேற்றம் அடைந்து கொண்டே இருக்கின்றார்கள் என்று கூறுகின்றார்கள். சத்தியம் ஒருபொழுதும் அசைவதில்லை, உறுதியாக இருக்கின்றது. சத்தியமானது, வளர்ச்சி அடைவதற்கான விதியாகும். சத்தியத்தின் சக்தி மூலம் சத்யுகத்தை உருவாக்குகின்றீர்கள், சுயம் தானும் சத்திய நாராயணராக, சத்திய லெட்சுமியாக ஆகின்றீர்கள். இது சத்திய ஞானம் ஆகும், சத்திய தந்தையின் ஞானம் ஆகும். ஆகையினால், உலகத்திலிருந்து தனிப்பட்டது மற்றும் அன்பானது ஆகும்.

இன்று பாப்தாதா, சத்திய ஞானத்தினுடைய சத்தியத்தின் அதிகாரத்தை குழந்தைகள் எந்தளவு தாரணை செய்திருக்கின்றார்கள் என்று அனைத்து குழந்தைகளையும் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். சத்தியம் ஒவ்வொரு ஆத்மாவையும் கவர்ச்சி செய்கிறது. இன்றைய உலகம் பொய்யான கண்டமாக உள்ளது, அனைத்தும் பொய்யாக உள்ளது அதாவது அனைத்திலும் பொய் கலந்து இருக்கிறது. ஆனாலும், சத்தியத்தின் சக்தி உடையவர்களே வெற்றியாளர்கள் ஆகின்றார்கள். குஷி மற்றும் பயமற்றதன்மை சத்தியத்தின் பிராப்தி ஆகும். சத்தியம் பேசக் கூடியவர்கள் சதா பயமற்றவர்களாக இருப்பார்கள். அவர்களுக்கு ஒருபொழுதும் பயம் ஏற்படாது. யார் சத்தியமாக இல்லையோ, அவர்களுக்கு அவசியம் பயம் இருக்கும். நீங்கள் அனைவரும் சத்தியத்தின் சக்தி கொண்டிருக் கக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக்கள்

ஆவீர்கள். சத்திய ஞானம், சத்திய தந்தை, சத்திய பிராப்தி, சத்திய நினைவு, சத்திய குணம், சத்திய சக்திகள் ஆகிய அனைத்து பிராப்திகளும் உள்ளன. எனவே, இத்தகைய அதிகாரத்தின் போதை இருக்கிறதா? அதிகாரம் என்பதன் அர்த்தம் அபிமானம் என்பது அல்ல. எந்தளவு பெரியதிலும் பெரிய அதிகாரம் (அத்தாரிட்டி) இருக்கிறதோ, அந்தளவு அவர்களுடைய விருத்தியில் ஆன்மிக அதிகாரம் (அத்தாரிட்டி) இருக்கும். பேச்சில் அன்பு மற்றும் பணிவு இருக்கும். இதுவே அத்தாரிட்டியின் அடையாளம் ஆகும். எவ்வாறு நீங்கள் மரத்தின் உதாரணம் கொடுக்கின்றீர்கள், மரத்தில் எப்பொழுது பழத்தின் அத்தாரிட்டி முழுமையாக வந்து விடுகிறதோ, அப்பொழுது மரம் தணிந்து அதாவது பணிவாகி சேவை செய்கிறது, அவ்வாறு ஆன்மிக அதிகாரம் உடைய குழந்தைகள் எந்தளவு உயர்ந்த அதிகாரிகளாக இருப்பார்களோ, அந்தளவு பணிவானவர்களாக மற்றும் அனைவருக்கும் அன்பானவர்களாக இருப்பார்கள் ஆனால், சத்தியத்தின் அதிகாரம் உடையவர்கள் நிரகங்காரியாக இருப்பார்கள். எனவே, அத்தாரிட்டியும் இருக்கிறது, போதையும் இருக்கிறது மற்றும் நிரகங்காரியாகவும் இருக்கின்றார்கள் என்றால் இதையே சத்திய ஞானத்தின் பிரத்யட்ச சொரூபம் என்று கூறப் படுகிறது.

எவ்வாறு இந்த பொய்யான கண்டத்தில், தந்தை பிரம்மாவை சத்தியத்தினுடைய அத்தாரிட்டி யின் பிரத்யட் சமான, சாகார சொரூபமாக பார்த்து இருக்கின்றீர்கள் அல்லவா. அவருடைய அத்தாரிட்டியான பேச்சு ஒருபொழுதும் கூட அகங்காரத்தின் உணர்வை ஏற்படுத் தாது. முரளி கேட்கும்பொழுது எவ்வளவு அத்தாரிட்டியான வார்த்தைகளாக இருக்கும்! ஆனால், அபிமானத்துடன் கூடியதாக இருக்காது. அத்தாரிட்டியான பேச்சில் அன்பு கலந்திருக் கிறது, பணிவு இருக்கிறது, நிரகங்காரதன்மை இருக்கிறது, ஆகையினால், அத்தாரிட்டியான பேச்சு அன்பானதாக இருக்கின்றது. அன்பானதாக மட்டும் இல்லை, ஆனால், பிரபாவத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருக்கிறது. தந்தையை பின்பற்ற வேண்டும் அல்லவா. சேவையில் மற்றும் கர்மத்தில் தந்தை பிரம்மாவை பின்பற்ற வேண்டும். ஏனெனில், சாகாரி உலகத்தில் சாகார உதாரணம் ஆவார், சாம்பிள் (மாதிரி) ஆவார். எவ்வாறு தந்தை பிரம்மாவை, கர்மத்தில், சேவையில், முகத்தில், ஒவ்வொரு நடத்தையில், நடமாடும் அதிகார சொரூபமாக பார்த்தீர்களோ, அவ்வாறு தந்தையை பின்பற்றக்

கூடியவர்களிடத் திலும் கூட அன்பு மற்றும் அத்தாரிட்டி (அதிகாரம்), பணிவு மற்றும் மகான் தன்மை ஆகிய இரண்டும் இணைந்தே தென்பட வேண்டும். அன்பு மட்டும் தென்படுகிறது மற்றும் அத்தாரிட்டி மறைந்து விடுகிறது அல்லது அத்தாரிட்டி தென்படுகிறது மற்றும் அன்பு மறைந்து விடுகிறது என்பது கூடாது. எவ்வாறு தந்தை பிரம்மாவை பார்த்து இருக்கின்றீர்கள் மற்றும் இப்பொழுதும் கூட முரளி கேட்கின்றீர்கள். நடைமுறை சான்று உள்ளது. குழந்தை களே, குழந்தைகளே என்றும் கூறுவார், ஆனால், அதிகாரத்தையும் காண்பிப்பார். அன்போடு குழந்தைகளே என்றும் கூறுவார் மற்றும் அத்தாரிட்டியோடு அறிவுரையும் கொடுப்பார். சத்திய ஞானத்தை பிரத்யட்சமும் செய்வார், ஆனால், குழந்தைகளே, குழந்தைகளே என்று அழைத்து புதிய ஞானம் முழுவதையும் தெளிவுபடுத்துவார். இதையே அன்பு மற்றும் சத்தியத்தினுடைய அத்தாரிட்டியின் சமநிலை என்று கூறப்படுகிறது. எனவே, நிகழ்கால சமயம், சேவையில் இந்த சமநிலைக்கு அடிக்கோடிடுங்கள்.

நிலத்தை உருவாக்குவதில் ஸ்தாபனை காலத்திலிருந்து இப்பொழுது வரை 50-வருடங்கள் முடிவடைந்து விட்டன. வெளிநாட்டு நிலம் கூட இப்பொழுது போதுமான அளவு உருவாகி விட்டது. 50-வருடங்கள் ஆகவில்லை, ஆனால், உருவான உருவாக்கப்பட்ட சாதனங்களால் வந்திருக்கின்றீர்கள், ஆகையினால், துவக்கத்தின் 50-வருடங்களும் மற்றும் இப்போதைய 5-வருடங்களும் சமமானது ஆகும். நாங்கள் தாமதமாக வந்திருந்தாலும் வேகமாக முன்னேறி முதல் எண்ணில் வந்திருப்பவர்கள் ஆவோம் (லாஸ்ட் ஸோ ஃபாஸ்ட் ஸோ ஃபர்ஸ்ட்) என்று இரட்டை அயல்நாட்டினர் அனைவரும் கூறுகின்றனர். எனவே, சமயத்தில் கூட வேகமாக முன்னேறி முதல் எண்ணில் வருவீர்கள் அல்லவா. கட்டாயமாக பயமற்ற தன்மையின் அதிகாரத்தைக் கொண்டிருங்கள். ஒரே ஒரு தந்தையின் புதிய ஞானமே சத்திய ஞானம் ஆகும் மற்றும் புதிய ஞானத்தின் மூலம் புதிய உலகம் ஸ்தாபனை ஆகிறது -இந்த அத்தாரிட்டி மற்றும் போதை சொரூபத்தில் வெளிப்பட (எமர்ஜ்) வேண்டும். 50-வருடங்களாக மறைத்து வைத்திருந்தீர்கள் ஆனால், இதன் அர்த்தம், யார் வந்தாலும் அவர்களுக்கு முதலிலேயே புதிய ஞானத்தின் புதிய விசயங்களைச் சொல்லி குழப்பிவிட வேண்டும் என்பது கிடையாது, இந்த நோக்கம் கிடையாது. நிலம், நாடி, சமயம் ஆகிய இவை அனைத்தையும்

பார்த்து ஞானம் கொடுக்க வேண்டும் -இதுவே ஞானம் நிறைந்து இருப்பவர்களின் அடையாளம் ஆகும். ஆத்மாவின் விருப்பத்தைப் பாருங்கள், நாடி பாருங்கள், நிலத்தை உருவாக்குங்கள், ஆனால், உள்ளுக்குள் சத்தியத்தினுடைய பயமற்ற தன்மையின் சக்தி கட்டாயமாக இருக்க வேண்டும். உலகத்தினர் என்ன கூறுவார்களோ என்ற இந்த பயம் கூடாது. பயமற்ற வராகி நிலத்தை உருவாக்குங்கள். இந்த ஞானமோ புதியது, சிலரால் புரிந்து கொள்ளவே முடியாது என்று சில குழந்தைகள் நினைக்கின்றனர் ஆனால், புத்தியற்றவர்களுக்குத் தானே புரிய வைக்க வேண்டும். மனிதர்கள் எத்தகையவர்களாக இருக்கின்றார் களோ, அதற்கேற்றார் போல் வடிவமைப்பை உருவாக்க வேண்டியதும் அவசியம் ஆகும் ஆனால், மனிதர்களுடைய பிரபாவத்தில் வந்து விடாதீர்கள். தங்களுடைய சத்திய ஞானத்தினுடைய அதிகாரத்தினால் மனிதரை பரிவர்த்தனை செய்தே ஆக வேண்டும் என்ற இந்த இலட்சியத்தை மறவாதீர்கள்.

இதுவரை என்ன செய்து இருக்கின்றீர்களோ, அது சரியே. செய்ய வேண்டியதாக இருந்தது, அவசியமானதாக இருந்தது, ஏனெனில், நிலத்தை உருவாக்க வேண்டியதாக இருந்தது ஆனால், எதுவரை நிலத்தை உருவாக்குவீர்கள்? மேலும் எவ்வளவு சமயம் தேவை? மருந்து கொடுக்கும்பொழுது கூட முதலிலேயே அதிக சக்தி வாய்ந்ததைக் கொடுக்க மாட்டார்கள், முதலில் குறைவான வீரியம் உடையது கொடுக்கப்படுகிறது ஆனால், சக்தி வாய்ந்த மருந்தைக் கொடுக்கவே இல்லை, வீரியம் குறைந்த மருந்துகளை மட்டும் கொடுப்பது என்பது கூடாது. ஒரு பலவீனமானவருக்கு அதிக சக்தி கொண்ட மருந்து கொடுப்பதும் கூட தவறாகும். கண்டறியும் சக்தியும் தேவை ஆனால், தங்களுடைய சத்தியமான புதிய ஞானத்தின் அதிகாரமும் கட்டாயமாக இருக்க வேண்டும். உங்களுடைய சூட்சுமமான அத்தாரிட்டியின் விருத்தி தான் அவர்களுடைய விருத்திகளை மாற்ற மடையச் செய்யும். இதுவே நிலமாக உருவாகும். மேலும், விசேஷமாக சேவை செய்து எப்பொழுது மதுபன் வரை வந்து சேருகின்றீர்களோ, அப்பொழுது குறைந்ததிலும் குறைந்தது அவர்களுக்கு இது அவசியம் தெரிந்திருக்க வேண்டும். இந்த பூமியில் அவர்களுடைய நிலமும் உருவாகி விடுகின்றது. எவ்வளவு தான் பாறைப் போன்ற நிலமாகவும் இருக்கலாம், எந்த தர்மத்தினராகவும் இருக்கலாம், எத்தகைய பதவி வகிப்பவராகவும் இருக்கலாம், ஆனால்,

இந்த பூமியில் அவர்களும் கூட மென்மையானவர்கள் ஆகி விடுகின்றனர் மற்றும் மென்மையான நிலமாக ஆகி விடும் காரணத்தினால் அதில் என்ன விதை போட்டாலும் அதற்கான பலன் சகஜமாக வெளிப்படும். பயம் மட்டும் கொள்ளாதீர்கள், அவசியம் பயமற்றவர்களாக ஆகுங்கள். யுக்தியுடன் கொடுங்கள். இத்தகைய பூமிக்கு நான் வந்திருக்கின்றேன், ஆனாலும், பரமாத்ம ஞானம் எது? என்பது தெரியவில்லை என்று அவர்கள் உங்களைப் பற்றி இந்தப் புகார் செய்யும்படியாக ஆகி விடக்கூடாது. பரமாத்ம பூமியில் வந்து பரம ஆத்மாவினுடைய பிரத்யட்சத்தாவின் செய்தியை அவசியம் பெற்றுச் செல்ல வேண்டும். அத்தாரிட்டிக்கான இலட்சியம் இருக்க வேண்டும்.

தற்கால உலகத்தின் கணக்குபடியும் கூட புதுமைத்தன்மைக்கு மகத்துவம் உள்ளது. பிறகு, யாராவது முறையற்ற புதிய ஃபேஷனை (நாகரீகம்) உருவாக்கினாலும் கூட அதை பின்பற்றுகின்றனர். முன்பிருந்த ஓவியத்தைப் பாருங்கள் எவ்வளவு சிறந்ததாக இருந்தது! தற்காலத்தின் ஓவியமோ அதற்கு முன்னால் ஒரு கோடு போல் இருக்கின்றது ஆனால், நவீன ஓவியத்தை விரும்புகின்றனர். ஒவ்வொரு விஷயத்திலும் மனிதர்கள் புதுமையை விரும்புகின்றனர். மேலும், புதுமைத்தன்மை தானாகவே தன்பக்கம் கவர்ச்சி செய்யும். ஆகையினால், புதுமைத்தன்மை, சத்தியம், மகான்தன்மை ஆகியவற்றின் போதை அவசியம் இருக்க வேண்டும். பிறகு, சமயம் மற்றும் மனிதரைப் பார்த்து சேவை செய்யுங்கள். புதிய உலகிற்கான புதிய ஞானத்தை அவசியம் பிரத்யட்சம் செய்ய வேண்டும் என்ற இந்த இலட்சியத்தை கட்டாயமாகக் கொண்டிருங்கள். இப்பொழுது அன்பு மற்றும் சாந்தி பிரத்யட்சம் ஆகியிருக்கிறது. தந்தையினுடைய அன்புக் கடலின் சொரூபம், சாந்திக் கடலின் சொரூபத்தை பிரத்யட்சம் செய்து விட்டீர்கள் ஆனால், ஞான சொரூப ஆத்மா மற்றும் ஞானக் கடலான தந்தை பற்றிய இந்த புதிய ஞானத்தை எவ்விதமாகக் கொடுக்கலாம் என்ற திட்டத்தை இப்பொழுது குறைவாகவே உருவாக்கி இருக்கின்றீர்கள். புதிய உலகிற்கான புதிய ஞானம் இது என்ற இந்த வார்த்தைகள் அனைவருடைய வாயிலிருந்தும் வெளிப்படும் சமயம் வரும். இப்பொழுது நன்றாக உள்ளது என்று மட்டும் கூறுகின்றனர், புதியது என்று கூறவில்லை. நினைவின் பாடத்தை நன்றாக பிரத்யட்சம் செய்திருக்கின்றீர்கள், ஆகையினால், நிலம் நன்றாக உருவாகி விட்டது, மேலும் நிலத்தை உருவாக்க வேண்டும் -முதலில்

செய்த அவசியமான காரியமும் தேவையானதே. என்ன செய்து இருக்கின்றீர்களோ, அது மிகவும் நன்றாக செய்து இருக்கின்றீர்கள் மற்றும் அதிகமாக செய்திருக்கின்றீர்கள், உடல், மனம், செல்வத்தை ஈடுபடுத்தி செய்திருக்கின்றீர்கள். அதற்காக பரிசும் கொடுக்கின்றார்கள்.

முதலில் எப்பொழுது வெளிநாட்டிற்கு சென்றார்களோ, அப்பொழுது இந்த மும்மூர்த்தி சித்திரத்தை பற்றி புரிய வைப்பதை எவ்வளவு கடினமானதாக நினைத்தார்கள்! இப்பொழுது மும்மூர்த்தி சித்திரத்தைப் பார்த்தே கவர்ச்சிக்கப்படுகின்றார்கள். இந்த ஏணிப்படி சித்திர மானது பாரதத்தின் கதை என்று நினைத்தார்கள் ஆனால், வெளிநாட்டில் இந்தச் சித்திரங் களைப் பார்த்தே கவர்ச்சிக்கப்படுகின்றார்கள். எனவே, இந்தப் புது விசயத்தை எவ்விதத்தில் சொல்ல வேண்டும் என்று எவ்வாறு திட்டம் தீட்டினீர்களோ, அதுபோல் இப்பொழுதும் புதிய கண்டு பிடிப்பு செய்யுங்கள். இதை செய்து தானே ஆக வேண்டும் என்று நினைக்காதீர்கள். புதுமையின் மகான்தன்மையினுடைய சக்தியை தாரணை செய்ய வேண்டும் என்பது மட்டுமே பாப்தாதாவினுடைய இலட்சியம் ஆகும். இதை மறக்காதீர்கள். உலகிற்குப் புரிய வைக்க வேண்டும், உலகத்தின் விசயங்களால் பயப்படாதீர்கள். தங்களுக்கான முறையை புதியதாகக் கண்டுபிடியுங்கள். ஏனெனில், கண்டுபிடிப்பாளர்கள் குழந்தைகளாகிய நீங்களே ஆவீர்கள் அல்லவா. சேவையினுடைய திட்டத்தை குழந்தைகளே அறிந்து இருக்கிறீர்கள். எத்தகைய இலட்சியம் வைத்தீர்களோ, அதற்கேற்றபடியான திட்டம் மிகவும் நல்லதிலும் நல்லதாக உருவாகி விடும் மற்றும் வெற்றியோ ஏற்கனவே பிறப்பதிகாரமாக உள்ளது. ஆகையினால், புதுமையை பிரத்யட்சம் செய்யுங்கள். ஞானத்தின் ஆழமான விசயங்கள் என்ன இருக் கின்றனவோ, அவற்றை தெளிவுபடுத்துவதற்கான விதி உங்களிடம் மிகவும் நன்றாக உள்ளது மற்றும் தெளிவாக உள்ளது. ஒவ்வொரு கருத்தையும் அறிவுப்பூர்வமாக தெளிவுபடுத்த முடியும். அதிகாரப்பூர்வமானதாக இருக்க வேண்டும். ஏதோ மனதில் தோன்றிய அல்லது கற்பனையான விசயங்கள் கிடையாது. யதார்த்தமானது ஆகும். அனுபவம் உள்ளது. அனுபவத் தின் (அத்தாரிட்டி), ஞானத்தின் அதிகாரம், சத்தியத்தின் அதிகாரம் எத்தனை அதிகாரங்கள் உள்ளன! எனவே, அதிகாரம் மற்றும் அன்பு ஆகிய இரண்டையும் காரியத்தில் ஒருசேர ஈடுபடுத்துங்கள்.

உழைத்து சேவை செய்து செய்து இந்தளவு வளர்ச்சி அடையச் செய்திருக்கின்றீர்கள் என்று பாப்தாதா குஷி அடைகின்றார்கள், மேலும், வளர்ச்சி அடையச் செய்து கொண்டே இருப்பீர்கள், அது உள்நாடோ அல்லது வெளிநாடோ. உள்நாட்டில் கூட மனிதர் மற்றும் நாடி பார்த்து சேவை செய்வதில் வெற்றி கிடைக்கிறது. வெளி நாட்டிலும் கூட இந்த விதியினால் வெற்றி கிடைக்கிறது. முதலில் தொடர்பில் கொண்டு வருகிறீர்கள் -இது நிலம் உருவாகுவதாகும். தொடர்பில் கொண்டு வந்த பிறகு சம்பந்தத்தில் கொண்டு வாருங்கள், தொடர்போடு மட்டும் விட்டுவிடாதீர்கள். சம்பந்தத்தில் கொண்டு வந்த பிறகு, அவர்களை புத்தியால் சமர்ப்பணம் செய்ய வைத்திடுங்கள். இது இறுதி நிலையாகும். தொடர்பில் கொண்டு வருவதும் அவசியம் ஆகும், பிறகு, சம்பந்தத்தில் கொண்டு வர வேண்டும். சம்பந்தத்தில் வர வர, தந்தை என்ன கூறினாரோ, அதுவே சத்தியமானது ஆகும் என்ற சமர்ப்பண புத்தி வந்து விடும். பிறகு, கேள்வி எழாது. பாபா என்ன கூறுகின்றாரோ, அதுவே சரியானது ஆகும், ஏனெனில், அனுபவம் ஏற்பட்டுவிட்டால் பிறகு, கேள்வி முடிவடைந்து விடுகிறது. இதையே சமர்ப்பண புத்தி என்று சொல்லப்படுகிறது, இதில் அனைத்தும் தெளிவாக அனுபவம் ஆகிறது. உறுதியாக சமர்ப்பண புத்தி வரை கொண்டு வந்து விட வேண்டும் என்ற இந்த இலட்சியம் கொள்ளுங்கள். அப்பொழுதே மைக் தயாராகி விட்டார்கள் என்று கூறலாம். மைக் என்ன சப்தம் எழுப்புவார்கள்? இவர்களது ஞானம் நன்றாக உள்ளது என்று மட்டும் அல்ல. இது புதிய ஞானம் ஆகும், இதுவே புதிய உலகத்தை கொண்டு வரும் என்ற இந்த சப்தம் வர வேண்டும், அப்பொழுதே கும்பகர்ணர்கள் கண் விழிப்பார்கள் அல்லவா. இல்லையெனில், கண்களைத் திறக்க மட்டும் செய்கின்றார்கள், மிகவும் நன்றாக உள்ளது, மிகவும் நன்றாக உள்ளது என்று கூறி விட்ட பிறகு தூக்கம் வந்து விடுகிறது. ஆகையினால், எவ்வாறு சுயம் குழந்தையிலிருந்து எஜமானன் ஆகி விட்டீர்கள் அல்லவா, அவ்வாறு உருவாக்குங்கள். அவர் களை சாதாரண பிரஜை நிலை வரை மட்டும் கொண்டு வராதீர்கள், ஆனால், இராஜ்ய அதிகாரி ஆக்குங்கள். எந்த விதிப்படி செய்தால் குழப்பம் அடையவும்மாட்டார்கள் மற்றும் புத்தியும் சமர்ப்பணம் ஆகி விடும் என்பதற்கான திட்டத்தை உருவாக்குங்கள். புதியதாகவும் தோன்ற வேண்டும், குழப்பத் தையும் அனுபவம்

செய்யக்கூடாது. அன்பு மற்றும் புதுமைத் தன்மையின் அதிகாரம் தெரிய வேண்டும்.

இப்பொழுது வரை ரிசல்ட், சேவையின் விதி, பிராமணர்களின் விருத்தி என்ன இருக்கிறதோ, அது மிகவும் நன்றாக இருக்கிறது. ஏனெனில், முன்னர் விதையை குப்தமாக வைத்திருந் தீர்கள், அதுவும் அவசியமானதே ஆகும். விதை குப்தமாக வைக்கப்படுகிறது, வெளியில் வைக்கும்பொழுது பலன் தராது. நிலத்திற்கு அடியில் விதை விதைக்கப்படுகிறது, ஆனால், நிலத்திற்கு உள்ளேயே இருந்து விடக்கூடாது. வெளியில் பிரத்யட்சம் ஆகவேண்டும், பலன் சொரூபம் ஆகவேண்டும் -இது அடுத்த நிலை ஆகும். புரிந்ததா? புதுமை யாகச் செய்ய வேண்டும் என்ற இலட்சியம் வையுங்கள். இந்த வருடமே நடந்து விடும் என்பது கிடையாது ஆனால், இலட்சியமானது விதையையும் கூட வெளியே பிரத்யட்சம் செய்யும். நேரடியாகச் சென்றவுடன் சொற்பொழிவாற்ற ஆரம்பத்து விடக்கூடாது. முதலில் சத்தியத்தின் சக்தி யினுடைய உணர்வை ஏற்படுத்துவதற்கான சொற்பொழிவாற்ற வேண்டும். அனை வருடைய வாயிலிருந்தும், இறுதியில் அந்த நாளும் வந்தது என்பது வெளிப்பட வேண்டும். நாம் அனைவரும் ஒன்றே, ஒருவருடையவர்கள் என்று அனைத்து தர்மத்தினரும் இணைந்து கூறுவதாக நாடகத்தில் காண்பிக்கின்றீர்கள் அல்லவா. இதை நாடகமாகக் காண்பிக்கின்றீர்கள், இதை நடைமுறையில் மேடையில் அனைத்து தர்மத்தினரும் சேர்ந்து ஒன்றுபோல் சொல்ல வேண்டும். தந்தை ஒருவர், ஒரே ஞானம், ஒரே இலட்சியம், ஒரே வீடு இதுவே ஆகும் என்ற இந்த ஒலி இப்பொழுது கேட்க வேண்டும். எப்பொழுது எல்லைக்கப்பாற் பட்ட மேடையில் இத்தகைய காட்சி வருமோ, அப்பொழுது பிரத்யட்சதாவின் கொடி பறக்கும் மற்றும் இந்தக் கொடிக்குக் கீழே அனைவரும் இந்தப் பாடல் பாடுவார்கள். அனைவருடைய வாயிலிருந்தும் பாபா நம்முடையவர் என்ற ஒரு சப்தம் வெளிப்படும், அப்பொழுதே பிரத்யட்ச ரூபத்தில் சிவராத்திரி கொண்டாடப்பட்டதாகக் கூறலாம். இருள் முடிந்து பொன்னான காலை யினுடைய காட்சி தென்படும். இதையே இன்று மற்றும் நாளை என்பதன் விளையாட்டு என்று கூறப்படுகிறது. இன்று இருள், நாளை பொன்னான காலைப்பொழுது. இது கடைசி திரை ஆகும். புரிந்ததா?

மற்றபடி என்ன திட்டம் தீட்டி இருக்கின்றீர்களோ, அது நன்றாக உள்ளது. ஒவ்வொரு இடத்தினுடைய நிலத்தின் அனுசாரம் திட்டம் போட வேண்டியதாக உள்ளது. நிலத்தின் அனுசாரம் விதியில் ஒருவேளை ஏதாவது மாற்றம் செய்ய வேண்டியது இருக்கிறது என்றால் அது ஒன்றும் பெரிய விசயம் அல்ல. இறுதியில் அனைவரையும் தயார் செய்து மதுபன் பூமியில் அவசியம் முத்திரை பதிக்க வேண்டும். வெவ்வேறு துறையினரை தயார் செய்து அவசியம் முத்திரை பதிக்க வேண்டும். பாஸ்போர்ட்டில் கூட முத்திரை இல்லாமல் செல்ல அனுமதிக்க மாட்டார்கள் அல்லவா. எனவே, இங்கு மதுபனில் தான் முத்திரையிடப்படும்.

இவர்கள் அனைவருமே சமர்ப்பணம் ஆனவர்கள். ஒருவேளை, இவர்கள் சமர்ப்பணம் ஆகவில்லையெனில் சேவைக்கு நிமித்தமாக எவ்வாறு ஆகியிருப்பார்கள்! சமர்ப்பணம் ஆனவர்கள் நீங்கள், ஆகையினாலேயே, பிரம்மாகுமார், பிரம்மாகுமாரி ஆகி சேவைக்கு நிமித்தம் ஆகியிருக்கின்றீர்கள். உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ கிறிஸ்துவகுமாரி அல்லது பௌத்தகுமாரி ஆகி எவரும் சேவை செய்யவில்லையே? பி.கு. ஆகியே சேவை செய்கின்றீர்கள் அல்லவா. எனவே, சமர்ப்பண பிராமணர்களுடைய பட்டியலில் அனைவரும் இருக்கின்றீர்கள். இப்பொழுது பிறரையும் ஆக்கவேண்டும். மறுபிறப்பு எடுத்து விட்டீர்கள். பிராமணன் ஆகி விட்டீர்கள். என்னுடைய பாபா என்று குழந்தைகள் கூறுகின்றார்கள், உடனே பாபா, உன்னுடையவர் ஆகி விட்டேன் என்று கூறுகின்றார். எனவே, சமர்ப்பணம் ஆகி விட்டீர்கள் அல்லவா. நீங்கள் இல்லறத்தில் இருக்கின்றீர்களோ அல்லது சென்டரில் இருக்கின்றீர்களோ, ஆனால், என்னுடைய பாபா என்று உள்ளத்தில் இருந்து கூறினீர்கள், உடனே தந்தை தன்னுடையவர் ஆக்கி விட்டார். இதுவோ உள்ளத்தின் வியாபாரம் ஆகும். வாயினால் செய்யும் ஸ்தூல வியாபாரம் கிடையாது. இது உள்ளத் தினுடையது ஆகும். சரண்டர் (சமர்ப்பணம்) என்றால் ஸ்ரீமத்திற்கு அண்டர் (கீழ்) இருப்பவர்கள். முழு சபையும் சமர்ப்பணம் ஆனவர்கள் அல்லவா, ஆகையினால், போட்டோவும் எடுக்கப்பட்டது அல்லவா. இப்பொழுது சித்திரத்தில் வந்து விட்டீர்கள், அதனால் மாற முடியாது. பரமாத்ம வீட்டில் சித்திரத்தில் வருவது என்பது ஒன்றும் குறைவான பாக்கியம் அல்ல. இது ஸ்தூல போட்டோ அல்ல,

ஆனால், தந்தை யினுடைய உள்ளத்தில் போட்டோ எடுக்கப்பட்டுவிட்டது. நல்லது.

அனைத்து சத்தியத்தின் அதிகாரம் உடைய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, அனைத்து புதுமை மற்றும் மகான்தன்மையை பிரத்யட்சம் செய்யக்கூடிய உண்மையான சேவாதாரி குழந்தை களுக்கு, அனைத்து அன்பு மற்றும் அதிகாரத்தின் சமநிலையில் இருக்கக்கூடிய, ஒவ்வொரு அடியிலும் தந்தை மூலம் ஆசிர்வாதம் பெறுவதற்கான அதிகாரி சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, அனைத்து சத்தியமான அதாவது அழிவற்ற இரத்தினங்களுக்கு, அழிவற்ற நடிப்பு நடிக்கக் கூடியவர்களுக்கு, அழிவற்ற பொக்கிஷத்தின் குழந்தைகள் மற்றும் எஜமானர் களுக்கு விஷ்வ படைப்பாளரான சத்தியமான தந்தை, சத்தியமான ஆசிரியர், சத்குருவினுடைய அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: மனதின் மௌனத்தால் சேவையில் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கக்கூடிய வெற்றி சொரூபம் ஆகுக!**

எவ்வாறு முதன் முதலில் மௌன விரதத்தில் இருந்தபோது அனைவரும் ஃப்ரீயாக இருந்தீர்களோ, நேரம் சேமிப்பானதோ, அதுபோல் இப்பொழுது மனதினுடைய மௌனம் இருங்கள், இதன் மூலம் வீண் எண்ணங்கள் வரவேகூடாது. எவ்வாறு வாயிலிருந்து சப்தம் வெளிப் படவில்லையோ, அவ்வாறு வீண் சங்கல்பம் வரக்கூடாது. இதுவே மனதின் மௌனம் ஆகும். இதனால் நேரம் சேமிப்பாகி விடும். இந்த மனதின் மௌனத்தினால் சேவையில் அப்பேர்பட்ட புதிய கண்டுபிடிப்புகள் உருவாகும், அதன் மூலம் உழைப்பு குறைவாகவும் மற்றும் வெற்றி அதிகமாகவும் ஏற்படும். எவ்வாறு அறிவியல் சாதனம் நொடியில் விதியை அடையச் செய்கின்றதோ, அவ்வாறு இந்த அமைதி சக்தி மூலம் நொடியில் விதி பிராப்தம் ஆகும்.

**சுலோகன்: யார் சுயம் சமர்ப்பண ஸ்திதியில் இருக்கின்றார்களோ, அவர்களுக்கு முன்னால் அனைவருடைய சகயோகமும் சமர்ப்பணம் ஆகி விடுகிறது!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 01.10.1987 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஈஸ்வரிய அன்பு -வாழ்க்கை மாற்றத்திற்கான அஸ்திவாரம்!

இன்று அன்புக்கடலானவர் தம்முடைய அன்பான குழந்தைகளுடன் சந்திப்பதற்காக வந்துள்ளார். தந்தை மற்றும் குழந்தைகளின் அன்பு உலகத்தை அன்பு என்ற கயிற்றில் கட்டிப் போட்டுக் கொண்டுள்ளது. எப்போது அன்புக்கடல் மற்றும் அன்பு நிறைந்த நதிகளின் சந்திப்பு நடைபெறுகிறதோ, அப்போது அன்பு நிறைந்த நதியும் கூட தந்தைக்கு சமமான மாஸ்டர் அன்புக்கடலாக ஆகி விடுகிறது. அதனால் உலக ஆத்மாக்கள் அன்பின் அனுபவத் தினால் தாமாகவே அருகில் வந்து கொண்டே இருக்கின்றனர். பவித்திரமான அன்பு அல்லது ஈஸ்வரிய அன்பை எவ்வளவு தான் அறியாத ஆத்மாக்களாக இருந் தாலும், நீண்ட காலமாக பரிவாரத்தின் அன்பிலிருந்து வஞ்சிக்கப்பட்ட, கல்லுக்கு சமமான ஆத்மாக்களாக இருந்தாலும் அத்தகைய கல்லுக்குச் சமமான ஆத்மாக்களும் கூட ஈஸ்வரிய பரிவாரத்தின் அன்பினால் உருகும் நீராக மாறி விடுகின்றனர். இது தான் ஈஸ்வரிய பரிவாரத்தின் அன்பினுடைய அற்புதம். எவ்வளவு தான் விலகியிருந்த போதிலும் ஈஸ்வரிய அன்பு காந்தத்தைப் போல் தானாக அருகில் கொண்டு வந்து விடும். இதைத் தான் ஈஸ்வரிய அன்பின் பிரத்தியட்ச பலன் என்று சொல்கின்றனர். எவ்வளவு தான் ஒருவர் தன்னை தனி வழியில் செல்பவராக நினைத்தாலும் ஈஸ்வரிய அன்பானது சகயோகி ஆக்கி தங்களுக்குள் ஒருவர் என்ற முன்னேறுவதற்கான கயிற்றில் கட்டிப் போட்டு விடுகிறது. அந்த மாதிரி அனுபவம் செய்திருக்கிறீர்கள் இல்லையா?

அன்பு முதலில் சகயோகி ஆக்குகிறது. சகயோகியாக மாற்றி மாற்றி தானாகவே சமயத்தில் அனைவரையும் சகஜயோகியாகவும் மாற்றி விடுகிறது. சகயோகி ஆவதற்கான அடையாளம் -இன்று சகயோகியாக இருப்பவர் நாளை சகஜயோகி ஆகி விடுவார். ஈஸ்வரிய அன்பு மாற்றத்திற்கான அஸ்திவாரம் அல்லது வாழ்க்கை மாற்றத் திற்கான

விதை சொரூபமாகும். எந்த ஆத்மாக்களுக்குள் ஈஸ்வரிய அன்பின் அனுபவம் என்ற விதை விழுகிறதோ, அப்போது இந்த விதை, சகயோகி ஆவதற்கான மரத்தைத் தானாகவே உருவாக்கிக் கொண்டே இருக்கும். மேலும் சமயத்தில் சகஜயோகி ஆவதற்கான பலன் (பழம்) காணப்படும். ஏனென்றால் மாற்றத் திற்கான விதை அவசியம் பலனைக் காண்பிக்கும். சில பலன்கள் விரைவாக வெளிப்படும். சில பலன்கள் சமயத்தில் வெளிப்படும். நாலாபுறமும் பாருங்கள், நீங்கள் அனைவரும் மாஸ்டர் அன்புக்கடல், உலக சேவாதாரிக் குழந்தைகள் என்ன காரியம் செய்து கொண்டிருக்கிறீர்கள்? உலகத்தில் ஈஸ்வரிய பரிவாரத்தின் அன்பு என்ற விதையை விதைத்துக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் எங்கே சென்றாலும், நாஸ்திகராயிருந்தாலும் சரி, ஆஸ்திகராயிருந்தாலும் சரி, தந்தையை அறியாதவராக இருந்தாலும் சரி, ஏற்றுக் கொள்ளாதவராக இருந்தாலும் சரி, ஆனால் அவசியம் இதை அனுபவம் செய்வார்கள், அதாவது இந்த மாதிரி ஈஸ்வரிய பரிவாரத்தின் அன்பு -சிவ வம்சி பிரம்மாகுமார் -பிரம்மாகுமாரிகளிடம் கிடைக்கிறது. இது வேறு எங்கும் கிடைப்பதில்லை. மேலும் இதையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள், அதாவது இந்த சிநேகம் அல்லது அன்பு சாதாரணமானதன்று. இது அலௌகிக அன்பு அல்லது ஈஸ்வரிய சிநேகமாகும். ஆக, மறை முகமாக நாஸ்திகரிலிருந்து ஆஸ்திகர் ஆகி விட்டனர் இல்லையா? ஈஸ்வரிய அன்பு உள்ளது என்றால் அது எங்கிருந்து வந்தது? கிரணங்கள் சூரியன் இருப்பதைத் தாமாகவே நிரூபிக் கின்றன. ஈஸ்வரிய அன்பு, அலௌகிக அன்பு, சுயநலமற்ற அன்பு தானாகவே வள்ளல் தந்தை இருக்கிறார் என்பதை நிரூபிக்கிறது. மறைமுகமாக ஈஸ்வரிய சிநேகத்தின் அன்பு மூலமாக அன்புக்கடல் தந்தையுடன் சம்மந்தம் இணைக்கப் படுகிறது ஆனால் அதைத் தெரிந்து கொள்ள வில்லை. ஏனென்றால் விதை முதலில் மறைமுகமாக உள்ளது. மரம் தெளிவாகக் காணப்படுகிறது. ஆக, ஈஸ்வரிய அன்பு என்ற விதை அனைவரையும் சகயோகியிலிருந்து சகஜயோகியாக, பிரத்தியட்ச ரூபத்தில் சமயத்தின் பிரமாணம் பிரத்தியட்சம் செய்து கொண்டிருக்கிறது மற்றும் செய்து கொண்டு இருக்கும். ஆக, அனைவரும் ஈஸ்வரிய அன்பின் விதையை விதைப்பதற்கான சேவை செய்தனர். சகயோகி ஆக்குவ தற்கான சுப பாவனை மற்றும் சுப விருப்பம் என்ற விசேஷமான இரண்டு இலை களையும் பிரத்தியட்சமாகப் பார்த்தீர்கள். இப்போது இந்தத் தண்டு (அடிமரம்) விருத்தியடைந்து பிரத்தியட்ச பலனை அளிக்கும்.

# 1987 அவ்யக்த முரளி

பாப்தாதா அனைத்துக் குழந்தைகளின் பலவிதமான சேவையைப் பார்த்து மகிழ்ச்சி யடைகிறார். சொற்பொழிவு செய்யக்கூடிய குழந்தைகளாயினும் ஸ்தூல சேவை செய்யக் கூடிய குழந்தைகளாயினும் அனைவரின் சகயோகத்தின் சேவையினால் வெற்றியின் பலன் கிடைக் கிறது. காவல் பணி செய்பவராயினும் சமையல் தொடர்பான சேவை செய்பவராயினும் எப்படி ஐந்து விரல்களின் சகயோகத்தினால் இப்படி நடக்கும் என எவ்வளவு யோசித்திருந்தீர்களோ, அந்த யோசனை மூலம் ஆயிரம் மடங்கு அதிக சுலபமாகக் காரியம் நடைபெற்று விட்டது. இது யார் செய்த அற்புதம்? அனைவருடைய தாகும். எந்தக் காரியத்தில் சகயோகி ஆனீர்களோ, சுத்தமாகவும் வைத்துக் கொண்டீர்கள், மேஜையை சுத்தம் செய்தீர்கள், ஆனால் அனைவரின் சகயோகத்தின் முடிவு (ரிசல்ட்) என்பது வெற்றி தான். இந்தக் குழுவின் சக்தி மிக உயர்ந்ததாகும். பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார் -மதுபன் வரக்கூடிய குழந்தைகள் மட்டுமில்லை, ஆனால் யார் சாகாரத்தில் கூட இருந்ததில்லையோ, நாலாபுறம் உள்ள பிராமணக் குழந்தைகளின், தேசத்தின் அல்லது வெளிநாடுகளின் -அனைவரின் மனதின் சுப பாவனை மற்றும் சுப விருப்பத்தின் சகயோகம் இருந்தது. இந்த சர்வ ஆத்மாக்களின் சுப பாவனை, சுப விருப்பத்தின் கோட்டை ஆத்மாக்களை மாற்றி விடுகிறது. நிமித்தமாக சக்திகள் இருந்தாலும் சரி, பாண்டவர்கள் இருந்தாலும் சரி. விசேஷமாக ஒவ்வொரு காரியத்திலும் நிமித்த சேவாதாரியாக ஆகவே செய்கிறார்கள் ஆனால் வாயுமண்டலத்தின் கோட்டை யானது அனைவரின் சகயோகத்தினால் தான் உருவாகிறது. நிமித்தமாகக் கூடிய குழந்தைகளுக்கும் கூட பாப்தாதா வாழ்த்து சொல்கிறார் ஆனால் அனைவரையும் விட அதிக வாழ்த்து ஒவ்வொரு குழந்தைக்கும் சொல்கிறார். தந்தைக்குக் குழந்தைகள் என்ன வாழ்த்து சொல்வார்கள்? ஏனென்றால் தந்தையோ அவ்யக்தமாகி விட்டார். வ்யக்தத் திலோ குழந்தைகளை நிமித்தமாக்கியுள்ளார். அதனால் பாப்தாதா சதா குழந்தைகளின் மகிமையைத் தான் பாடுகிறார். நீங்கள் தந்தையின் பாடலைப் பாடுங்கள். தந்தை உங்கள் பாடலைப் பாடுவார்.

என்னென்ன செய்தீர்களோ, மிக நன்றாகவே செய்தீர்கள். சொற்பொழிவு செய்பவர்கள் நன்றாகச் செய்தார்கள். மேடையை அலங்கரிப்பவர்கள் நன்றாக அலங்கரித்தார்கள் மற்றும் விசேஷமாக யோக யுக்த் உணவு சமைப்பவர்கள், பரிமாறுபவர்கள், காய்கறி நறுக்குகிறவர்கள் இருந்தனர்.

முதல் அஸ்திவாரமாகவோ காய்கறி நறுக்கப் படுகிறது. காய்கறி நறுக்கவில்லை என்றால் உணவு எப்படித் தயாராகும்? அனைத்துத் துறைகளைச் சேர்ந்தவர்களும் அனைத்து விதமான சேவைகளுக்கும் நிமித்தமாக இருந்தனர். கேட்டீர்கள் இல்லையா -சுத்தம் செய்பவர்கள் சுத்தம் செய்யவில்லை என்றாலும் கூட பிரபாவம் ஏற்படாது. ஒவ்வொருவரின் முகமும் ஈஸ்வரிய அன்பு நிறைந்ததாக இல்லை என்றால் சேவையின் வெற்றி எப்படி ஏற்படும்? அனைவரும் என்னென்ன காரியம் செய்தார்களோ, நிறைந்த அன்புடன் செய்தார்கள். அதனால் அவர்களிடமும் கூட அன்பின் விதை விதைக்கப்பட்டது. ஊக்கம் -உற்சாகத்துடன் செய்தனர். அதனால் அவர்களிடமும் கூட ஊக்கம் -உற்சாகம் இருந்தது. வேற்றுமை இருந்த போதிலும் அன்பின் கயிற்றின் காரணத்தால் ஒற்றுமையின் விஷயங்களையே பேசிக் கொண்டிருந்தார்கள். இது வாயுமண்டலத்தின் குடை நிழலினுடைய விசேஷமாக இருந்தது. வாயுமண்டலம் குடை நிழலாக ஆகி விடுகிறது. ஆகவே குடை நிழலின் கீழே இருக்கிற காரணத்தால் எத்தகைய சம்ஸ்காரம் உள்ளவர்களும் அன்பின் பிரபாவத்தில் மூழ்கியவராக இருந்தனர். புரிந்ததா? அனைவருக்கும் பெரியதிலும் பெரிய பொறுப்பு இருந்தது. அனைவரும் சேவை செய்தனர். அவர்கள் எவ்வளவு தான் வேறு ஏதாவது பேச விரும்பினாலும் வாயுமண்டலத்தின் காரணத்தால் பேச முடிவதில்லை. மனதில் ஏதாவது யோசித்தாலும் கூட வாயிலிருந்து வெளிப்படாது. ஏனென்றால் உங்கள் அனைவரின் பிரத்தியட்ச வாழ்க்கை மாற்றத்தைப் பார்த்து அவர்களிடமும் கூட மாற்றத்திற்கான தூண்டுதல் தானாக வந்து கொண்டிருக்கும். பிரத்தியட்ச பிரமாணத்தைப் பார்த்தீர்கள் இல்லையா? சாஸ்திர பிரமாணத்தையும் விட, அனைத்திலும் பெரியது பிரத்தியட்ச பிரமாணமாகும். பிரத்தியட்ச பிரமாணத்திற்கு முன்னால் மற்ற அனைத்துப் பிரமாணங்களும் உள்ளடங்கிப் போய் விடும். சேவையின் ரிசல்ட் இவ்வாறு இருந்தது. இப்போதும் கூட அதே அன்பின் சகயோகத்தின் விசேஷத்தினால் இன்னும் சமீபத்தில் கொண்டு வந்து கொண்டிருப்பீர்களானால் இன்னும் கூட சகயோகத்தில் முன்னேறிக் கொண்டே செல்வீர்கள். பிறகும் கூட எப்போது அனைத்து அதிகாரங்களின் சகயோகம் கிடைக்கிறதோ, அப்போது பிரத்தியட்சதாவின் (பாபாவை வெளிப்படுத்துதல்) முழக்கம் ஓங்கி ஒலிக்கும்.

விசேஷமாக அனைத்து அதிகாரத்தினரும் ஒன்றாகக் கூடி ஒரே சப்தத்தை ஓங்கி ஒலிக்கச் செய்யும் போது தான் பிரத்தியட்சதாவின் திரை உலகத்தின் முன்னால் திறக்கப்படும். தற்சமயம் உருவாக்கியுள்ள பிளான் அதற்காகத் தான் உருவாக்கப்பட்டது இல்லையா? அனைத்து வர்க்கத்தவர்களும் அதாவது அனைத்து அதிகாரத்தவர்களும் தொடர்பில், சகயோகத்தில் வர வேண்டும், சிநேகத்தில் வருகின்றனர் என்றால் பிறகு சம்மந்தத்தில் வந்து சகஜயோகி ஆகி விடுவார்கள். எந்த ஓர் அதிகாரத்தினராவது சகயோகத்தில் வரவில்லை என்றால் அனைவரின் சகயோகத்திற்கான காரியம் என்ன வைக்கப்பட்டுள்ளதோ, அது எப்படி வெற்றி பெறும்? இப்போது விசேஷ அதிகாரத்தினரின் அஸ்திவாரம் இடப்பட்டுள்ளது. தர்மத்தின் அதிகாரம் அனைத்திலும் பெரியதிலும் பெரிய அதிகாரம் இல்லையா? அந்த விசேஷ அதிகாரத்தின் மூலம் அஸ்திவாரம் ஆரம்ப மாயிற்று. சிநேகத்தின் பிரபாவத்தைப் பார்த்தீர்கள் இல்லையா? இல்லையென்றால் மக்கள் என்ன சொல்லிக் கொண்டிருந்தார்கள்? அவ்வளவு பேரையும் ஒரே நேரத்தில் உங்களால் எப்படி அழைக்க முடிகிறது? (இந்தியாவின் அனைத்து மகா மண்டலேஸ்வரர்களின் முதல் மகாநாடு). அவர்களும் கூட ஆச்சரியப்பட்டார்கள் இல்லையா? ஆனால் ஈஸ்வரிய அன்பின் கயிறு ஒன்றாக இருந்தது. அதனால் வேற்றுமையின் சிந்தனை இருந்த போதிலும் கூட சகயோகி ஆவதற்கான சிந்தனை ஒன்றாகவே இருந்தது. அது போல் இப்போது அனைத்து அதிகாரத்தினரையும் சகயோகி ஆக்குங்கள். அவர்கள் அதுபோல் ஆகிறார்கள் என்றாலும் கூட இன்னும் சமீபமாக, சகயோகிகளாக, ஆக்கிக் கொண்டே செல்லுங்கள். ஏனென்றால் இப்போது பொன்விழா முடிந்தது என்றால் இப்போதிலிருந்து இன்னும் பிரத்தியட்சதாவின் சமீபமாக வந்து விட்டீர்கள். வைரவிழா என்றால் பிரத்தியட் சதாவின் முரசை ஓங்கி ஒலிக்கச் செய்ய வேண்டும். ஆக, இந்த வருடத்திலிருந்து பிரத்தியட் சதாவின் திரை இப்போது திறக்கத் தொடங்கியுள்ளது. ஒரு பக்கம் வெளிநாடுகள் மூலமாக பாரதத்தில் பிரத்தியட்சதா ஏற்பட்டது. இன்னொரு பக்கம் நிமித்த மகாமண்டலேஸ்வரர்கள் மூலம் காரியத்தின் உயர்வினுடைய வெற்றி. வெளிநாட்டில் ஐ.நா.வைச் சேர்ந்தவர்கள் நிமித்த மானார்கள். அவர்களும் விசேஷமான புகழ் பெற்றவர்கள் மற்றும் பாரதத்திலும் புகழ் பெற்ற தர்மத் தலைவர்கள் உள்ளனர். ஆக, தர்மத்தின் அதிகாரத்தினர் மூலம் தர்ம ஆத்மாக்களின் பிரத்தியட்சதா நடைபெற வேண்டும் -இது தான்

# 1987 அவ்யக்த முரளி

பிரத்தியட்சதாவின் திரை விலகுவதின் ஆரம்பமாகும். இன்னும் திறப்பது என்பது ஆரம்ப நிலையில் தான் உள்ளது. இப்போது திறக்கப்போகிறது. இன்னும் முழுமையாகத் திறக்கவில்லை. ஆரம்பமாகியிருக்கிறது. வெளிநாட்டுக் குழந்தைகள் காரியத்திற்கு நிமித்தமாகியுள்ளனர் என்றால் இதுவும் கூட விசேஷ காரியமாக இருந்தது. பிரத்தியட்சதாவின் விசேஷ காரியத்தில் இந்தக் காரியத்தின் காரணத்தால் நிமித்தமாகி விட்டனர். ஆகவே பாப்தாதா வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு, இந்தக் கடைசிப் பிரத்தியட் சதாவின் ஹீரோ பார்ட்டில் நிமித்தமாவதற்கான சேவைக்காகவும் விசேஷ வாழ்த்துகள் தந்து கொண்டிருக்கிறார். பாரதத்தில் குழப்பத்தை ஏற்படுத்தினீர்கள் இல்லையா? அனைவரின் காதுகள் வரை சப்தம் சென்று சேர்ந்தது. வெளிநாட்டிலிருந்து வந்த இந்த சப்தம் பாரதத்தின் கும்பகர்ணர்களை எழுப்புவதற்கு நிமித்தமாகவோ ஆகி விட்டது ஆனால் இப்போது சப்தம் மட்டுமே சென்றுள்ளது. இப்போது இன்னும் கூட எழுப்ப வேண்டியுள்ளது, விழிப்படையச் செய்ய வேண்டி உள்ளது. இப்போது காதுகள் வரை மட்டும் சப்தம் சென்று சேர்ந்துள்ளது. தூங்கி விட்டவர்களுக்கு காதில் சப்தம் சென்றால் கொஞ்சம் அசைந்து கொடுக்கின்றனர் இல்லையா? குழப்பத்தையோ ஏற்படுத்துகிறீர்கள் இல்லையா? ஆக, குழப்பம் உருவானது. குழப்பத்தில் கொஞ்சம் விழித்துக் கொண்டுள்ளனர். இதுவும் கொஞ்சம் தான் எனப் புரிந்து கொண்டுள்ளனர். எப்போது வேகமாக சப்தமிடுகிறீர்களோ, அப்போது உடனே விழித்துக் கொள்வார்கள். இப்போது முதலிலேயே கூட கொஞ்சம் வேகமான சப்தமாக இருந்தது. எப்போது அனைத்து அதிகாரத்தினரும் ஒன்றாக ஸ்டேஜ் மீது சிநேக சந்திப்பை நடத்து கின்றனரோ, அப்போது அற்புதம் அநாயாசமாக நிகழ்ந்து விடும். அனைத்து அதிகாரங்களைச் சேர்ந்த ஆத்மாக்கள் மூலமாக ஈஸ்வரிய காரியத்தின் பிரத்தியட்சதா ஆரம்பமாகும் போது பிரத்தியட்சதாவின் திரை முழுமையாக விலகும். அதனால் இப்போது என்ன புரோகிராம் செய்து கொண்டி ருக்கிறீர்களோ, அதில் இந்த லட்சியம் வைக்க வேண்டும் -அதாவது அனைத்து அதிகாரங்களைச் சேர்ந்தவர்களின் இணைந்த சந்திப்பு நடைபெற வேண்டும். அனைத்து வர்க்கங்களைச் சேர்ந்தவர்களின் சிநேக சந்திப்போ நடைபெற முடியும். எப்படி சாதாரண சாதுக்களை அழைப்பது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை ஆனால் இந்த மகாமண்டலேஸ்வரர்களை அழைத்திருக்கிறீர்கள் இல்லையா? இந்தக் கூட்டத்தில் சங்கராச்சாரியாரும் வந்தால் இன்னும் அழகாக இருக்கும்

ஆனால் இப்போது அவருடைய பாக்கியமும் கூட திறந்து கொண்டு விடும். பிறகும் கூட உள்ளுக்குள் அவர் சகயோகியாகவே உள்ளார். குழந்தைகள் முயற்சியை நன்றாகச் செய்திருக்கிறீர்கள் ஆனால் உலக மக்களின் அபிப்பிராயத்தையும் பார்க்க வேண்டி உள்ளது. அந்த நாளும் கூட வரும், அனைத்து அதிகாரங்களைச் சேர்ந்தவர்களும் ஒன்று கூடி சொல்வார்கள், சிரேஷ்ட அதிகாரம் என்பது ஈஸ்வரிய அதிகாரம், ஆன்மிக அதிகாரம் தான் என்றால் ஒரு பரமாத்ம -அதிகாரம் தான் . எனவே நீண்ட காலத்தின் பிளானை உருவாக்கியிருக்கிறீர்கள் இல்லையா? அனைவரையும் அன்பின் கயிற்றில் இணைத்து அருகில் கொண்டு வாருங்கள் -அதற்காகத் தான் இவ்வளவு சமயம் கிடைத்துள்ளது. இந்த அன்பு காந்தமாக ஆகி விடும். அதன் மூலம் அனைவரும் ஒரே குழு ரூபத்தில் பாபாவின் ஸ்டேஜில் வந்து சேர வேண்டும். அந்த மாதிரி பிளான் உருவாக்கியிருக்கிறீர்கள் இல்லையா? நல்லது.

சேவாதாரிகளுக்கு சேவையின் பிரத்தியட்ச பலனும் கிடைத்து விட்டது. இல்லையென்றால் இப்போது நம்பர் புதிய குழந்தைகளுடையது இல்லையா? நீங்களோ சந்திப்பைக் கொண்டாடிக் கொண்டாடி இப்போது வானப்ரஸ்த அவஸ்தா வரை வந்து சேர்ந்திருக்கிறீர்கள்.இப்போது உங்களுடைய சிறிய சகோதர -சகோதரிகளுக்கு வாய்ப்பைக் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். சுயம் வானப்ரஸ்த் ஆகி விட்டீர்கள். அதனால் மற்றவர்களுக்கு வாய்ப்பைக் கொடுத்திருக்கிறீர்கள். ஆசையோ அனைவருக்கும் அதிகரித்துக் கொண்டு தான் போகும். அனைவரும் சொல்வார்கள் -இப்போதும் சந்திப்பதற்கான வாய்ப்பு கிடைக்க வேண்டும். எவ்வளவு சந்திக்கிறீர்களோ, அவ்வளவு ஆசை அதிகரித்துக் கொண்டே போகும். பிறகு என்ன செய்வீர்கள்? மற்றவர்களுக்கு வாய்ப் பளிப்பதும் கூட சுயம் திருப்தியின் அனுபவம் செய்வதாகும். ஏனென்றால் பழையவர்களோ அனுபவஸ்தர்கள், பிராப்தி சொரூபமாக இருப்பவர்கள். ஆக, பிராப்தி சொரூப ஆத்மாக்கள் அனைவர் மீதும் சுப பாவனை வைப்பவர்கள், மற்றவர்களை முன்னால் வைப்பவர்கள். அல்லது நாமே சந்திக்கலாம் என நினைக்கிறீர்களா? இதிலும் சுயநலமற் றவராக ஆக வேண்டும். புத்திசாலிகள் நீங்கள். முதல் -இடை -கடை பற்றிப் புரிந்திருப்பவர்கள். சமயத்தைப் பற்றியும் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். இயற்கையின் பிரபாவத்தைப் பற்றியும் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். பார்ட்டையும் கூடப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். பாப்தாதாவும் சதா

குழந்தைகளோடு சந்திக்க விரும்புகிறார். குழந்தைகள் சந்திக்க விரும்புகின்றனர் என்றால் முதலில் பாபா விரும்புகிறார். அப்போது குழந்தைகளும் விரும்புகின்றனர் ஆனால் பாபாவுக்கோ சமயத்தையும் இயற்கையையும் பார்க்க வேண்டி உள்ளது இல்லையா? இந்த உலகத்திற்கு வருகிறார் என்றால் உலகத்தின் அனைத்து விஷயங் களையும் பார்க்க வேண்டி உள்ளது. இதிலிருந்து தூரமாக அவ்யக்த வதனத்தில் இருக்கிறார் என்றால் அங்கோ தண்ணீரின், சமயத்தின், இருப்பது -வசிப்பது முதலானவற்றின் பிரச்சினை எதுவும் கிடையாது. குஜராத்தைச் சேர்ந்தவர்கள் அருகில் இருக்கிறார்கள். ஆகவே இதனுடைய பலனும் கிடைத்துள்ளது இல்லையா? இதுவும் கூட குஜராத்காரர்களின் சிறப்பாகும். சதா எவர் -ரெடியாக இருக்கின்றனர். சதா ஹாஞ்ஜி என்ற பாடம் பக்காவாக உள்ளது மற்றும் எங்கெல்லாம் தங்குவதற்கான இருப்பிடம் கிடைக் கிறதோ, அங்கே தங்கி விடவும் செய்கிறார்கள். ஒவ்வொரு பரஸ்திதியிலும் குஷியாக இருப்பதற்கான சிறப்பும் உள்ளது. குஜராத்தில் விருத்தியும் நன்றாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சேவையின் ஊக்கம் -உற்சாகம் தன்னையும் நிர்விக்ன மாக ஆக்குகிறது, மற்றவர்களுக்கும் நன்மை செய்கிறது. சேவை பாவனைக்கும் வெற்றி உள்ளது. சேவை பாவனையில் அகம்பாவம் வந்து விட்டால் அதனை சேவை பாவனை எனச் சொல்ல மாட்டார்கள். சேவை பாவனை இருந்தால் அது வெற்றியைத் தரும். அகம்பாவம் கலந்து விடுமானால் கடின உழைப்பும் அதிகம், சமயமும் அதிகம். பிறகும் கூட தனக்குத் திருப்தி ஏற்படாது. சேவை பாவனை உள்ள குழந்தைகள் சதா தானும் முன்னேறிக் கொண்டு மற்றவர்களையும் முன்னேறச் செய்வார்கள். சதா பறக்கும் கலையின் அனுபவம் செய்வார்கள். நல்ல தைரியம் உள்ளவர்கள். எங்கே தைரியம் உள்ளதோ, பாப்தாதாவும் ஒவ்வொரு சமயமும் காரியத்தில் உதவியாளராக இருப்பார்.

மகாரதியோ மகாதானியாகவே இருக்கிறார். சேவைக்காக வந்துள்ள மகாரதிகள் அனைவரும் மகாதானிகளாக, வரதானிகளாக இருக்கிறீர்கள் இல்லையா? மற்றவர்களுக்கு வாய்ப்பளிப்பதும் கூட மகாதானம், வரதானமாகும். எப்படி சமயமோ. அது போல் பார்ட் நடிப்பதிலும் தேடிக் கண்டெடுக்கப்பட்ட அனைத்துக் குழந்தைகளும் சதா சகயோகியாக இருந்து கொண்டுள்ளனர், இனிமேலும் இருப்பார்கள். ஆசையோ

இருக்கும். ஏனென்றால் இது சுப ஆசையாகும் ஆனால் இதை உள்ளடக்கவும் அறிந்துள்ளனர். அதனால் அனைவரும் சதா திருப்தியாக உள்ளனர்.

பாப்தாதாவும் விரும்புகிறார் -ஒவ்வொரு குழந்தையுடனும் சந்திக்க வேண்டும் மற்றும் சமயத்தின் எல்லையும் இருக்கக் கூடாது ஆனால் உங்களுடைய உலகத்தில் இந்த அனைத்து எல்லைகளையும் பார்க்க வேண்டி உள்ளது. இல்லையென்றால் ஒவ்வொரு விசேஷ ரத்தினத் தின் மகிமையைப் பாடினால் எவ்வளவு பெரியது! குறைந்தது ஒவ்வொரு குழந்தையின் விசேஷதாவைப் பற்றி ஒவ்வொரு பாடலையோ உருவாக்க முடியும் ஆனால் அதனால் சொல்கிறார், வதனத்திற்கு வாருங்கள். அங்கே எந்த ஓர் எல்லையும் கிடையாது. நல்லது.

சதா ஈஸ்வரிய அன்பில் மூழ்கி, சதா ஒவ்வொரு விநாடியும் அனைவரின் சகயோகி ஆகக்கூடிய, சதா பிரத்தியட்சதாவின் திரையை விலக்கி, பாபாவை உலகத்திற்கு முன்பாகப் பிரத்தியட்சம் செய்யக்கூடிய, சதா சர்வ ஆத்மாக்களுக்கும் பிரத்தியட்ச பிரமாண (நடைமுறை உதாரண) சொரூபமாகி, கவரக்கூடிய, சதா தந்தை மற்றும் அனைவரின் காரியங்களில் சகயோகி ஆகி, ஒருவரின் பெயரைப் புகழ் பெறச் செய்யக்கூடிய -அத்தகைய உலகின் இஷ்ட (விருப்பமான, பூஜைக்குரிய) குழந்தைகளுக்கு உலகத்தின் விசேஷமான குழந்தை களுக்கு பாப்தாதாவின் அதி சிநேக சம்பன்ன அன்பு நினைவுகள். அதனுடன் கூடவே அனைத்து உள்நாடு மற்றும் வெளிநாடுகளின், அன்பினால் தந்தைக்கு முன்னால் வந்து சேர்ந்திருக்கக் கூடிய அனைத்து சமீபமான குழந்தைகளுக்கு சேவையின் வாழ்த்துகளோடு கூடவே பாப்தாதாவின் விசேஷ அன்பு நினைவுகளை ஏற்றுக் கொள்ளவும்.

**வரதானம்: ஞானம் நிறைந்தவர் என்ற விசேஷதா மூலம் சம்ஸ்காரங்களின் மோதலில் இருந்து தப்பிக்கக் கூடிய தாமரை மலருக்கு சமமாக அன்பானவர் மற்றும் சாட்சி ஆகுக!**

சம்ஸ்காரங்களோ கடைசி வரை சிலருக்கு தாசியினுடையவையாக, சிலருக்கு இராஜாவுடையவையாக இருக்கும். சம்ஸ்காரங்கள் மாறட்டும் என்று காத்திருக்காதீர்கள் ஆனால் என் மீது யாருடைய பிரபாவமும்

இருக்கக் கூடாது. ஏனென்றால் ஒன்று, ஒவ்வொருவரின் சம்ஸ்காரங்களும் வெவ்வேறு. இரண்டாவது, மாயாவின் ரூபத்தை எடுத்துக் கொண்டும் வருகின்றன. அதனால் எந்த ஒரு தீர்வையும் மரியாதாவின் கோட்டுக்கு உள்ளே இருந்தவாறு செய்யுங்கள். பலவித சம்ஸ்காரங்கள் இருந்த போதும் மோதல் இருக்கக் கூடாது. இதற்காக ஞானம் நிறைந்தவர் ஆகி தாமரை மலருக்கு சமமாக விலகியவராகவும் சாட்சியாகவும் இருங்கள்.

**சுலோகன்: விடா முயற்சி அல்லது கடின முயற்சி செய்வதற்கு பதிலாக மனமகிழ்ச்சியுடன் புருஷார்த்தம் செய்யுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 05.10.1987 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிராமண வாழ்க்கையின் சுகம், திருப்தி மற்றும் மகிழ்ச்சி!

இன்று பாப்தாதா நாலாபுறம் உள்ள தம்முடைய மிகவும் செல்லமான, தேடிக் கண்டெடுக்கப்பட்ட பிராமணக் குழந்தைகளுக்குள் விசேஷ பிராமண வாழ்க்கையின் விசேஷதா நிறைந்த குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். இன்று அமிர்தவேளை பாப்தாதா அனைத்து பிராமணக் குழந்தை களில் இருந்து அந்த விசேஷ ஆத்மாக்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தார் -சதா திருப்தியின் மூலம் தாங்களும் சதா திருப்தியாக இருந்துள்ளனர் மற்றும் பிறருக்கும் தங்களின் திருஷ்டி, விருத்தி மற்றும் கிருத்தி (செயல்) மூலம் திருப்தியின் அனுபூதி செய்வித்தே வந்துள்ளனர். இன்று சதா சங்கல்பத்தில், பேச்சில், குழுவின் சம்மந்தம் -தொடர்பில், கர்மத்தில் திருப்தியின் பொன்மலர் களை பாப்தாதா மூலம் தங்கள் மீது பொழிவிக்கின்ற அனுபவம் செய்யக்கூடிய மற்றும் அனைவர் மீதும் திருப்தியின் பொன்மலர்களை சதா பொழியச் செய்து கொண்டே இருக்கின்ற அப்படிப்பட்ட திருப்திமணிகளின் மாலையை பாப்தாதா உருட்டிக் கொண்டிருந்தார். அத்தகைய திருப்தியான ஆத்மாக்கள் நாலாபுறமும் இருந்து சிலர் தென்பட்டனர். மாலை பெரியதாக உருவாகவில்லை, சிறிய மாலை ஒன்று உருவானது. பாப்தாதா அடிக்கடி திருப்திமணிகளின் மாலையைப் பார்த்து மகிழ்ச்சியடைந்து கொண்டிருந்தார். ஏனென்றால் அப்படிப்பட்ட திருப்திமணிகள் தாம் பாப்தாதாவின் கழுத்து மாலை ஆகின்றனர், இராஜ்ய அதிகாரி ஆகின்றனர் மற்றும் பக்தர்கள் நினைவு செய்வதற்கான மாலை ஆகின்றனர்.

பாப்தாதா மற்றக் குழந்தைகளையும் பார்த்துக் கொண்டிருந்தார் -அவர்கள் சில நேரம் திருப்தியாக இருந்து சில நேரம் அதிருப்தியின் சங்கல்பம் என்ற நிழலுக்குள் வந்து விடுகின்றனர் மற்றும் பிறகு வெளியில் வந்து விடுகின்றனர். சிக்கிக் கொள்வதில்லை. மூன்றாவது

## 1987 அவ்யக்த முரளி

குழந்தைகள் சில நேரம் சங்கல்பத்தின் அதிருப்தி, சில நேரம் தன் மீது தானே அதிருப்தி அடைவது, சில நேரம் பரிஸ்திதிகளின் மூலம் அதிருப்தி, சில நேரம் தனது குழப்பத்தின் மூலம் அதிருப்தி மற்றும் சில நேரம் சிறிய -பெரிய வி'யங்களால் அதிருப்தி -இந்தச் சக்கரத்திலேயே செல்கின்றனர் மற்றும் வெளிவருகின்றனர். பிறகு மீண்டும் சிக்கிக் கொண்டே இருக்கின்றனர். அந்த மாதிரி மாலை யையும் பார்த்தார். ஆக, மூன்று மாலைகள் தயாராயின. அனைவருமே மணிகள் தாம் ஆனால் திருப்திமணிகளின் ஜொலிப்பு மற்றும் மற்ற இரண்டு விதமான மணிகளின் ஜொலிப்பு என்னவாக இருக்கும் -இதையோ நீங்களே அறிந்து கொள்ளலாம். பிரம்மாபாபா அடிக்கடி மூன்று மாலை களையும் பார்த்துப் புன்சிரிக்கவும் செய்கிறார். அதோடு கூடவே இரண்டாவது நம்பர் மாலையின் மணிகள் முதல் மாலையில் வர வேண்டும் என்று முயற்சி செய்து கொண்டிருந்தார். ஆன்மிக உரையாடல் நடந்து கொண்டிருந்தது, ஏனென்றால் இரண்டாவது மாலையின் ஒரு சில மணிகள் மிகக் கொஞ்சமாக அதிருப்தியின் நிழல் மட்டும் இருந்த காரணத்தால் முதல் மாலையிலிருந்து வஞ்சிக்கப்பட்டவர்களாக இருந்தனர். இதை மாற்றம் செய்து எப்படியாவது முதல் மாலையில் கொண்டு வர வேண்டும். ஒவ்வொருவரின் குணங்கள், சக்திகள், சேவை -அனைத்தையும் முன்னால் கொண்டு வந்து அடிக்கடி இதைத் தான் சொன்னார், அதாவது இதை முதல் நம்பரில் கொண்டு வர வேண்டும். அது போல் சுமார் 25-30 மணிகள் இருந்தனர். அவர்களைப் பற்றி பிரம்மாபாபாவின் விசேஷ உரையாடல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பிரம்மாபாபா சொன்னார் -முதல் நம்பர் மாலையில் இந்த மணிகளையும் வைக்க வேண்டும் ஆனால் பிறகு தாமே புன்சிரிப்புடன் இதைச் சொன்னார் -பாபா இவர்களை முதல் நம்பரில் அவசியம் கொண்டு வந்து காட்டுவார். ஆக, அத்தகைய விசேஷ மணிகளும் இருந்தனர்.

இவ்வாறு ஆன்மிக உரையாடல் நடக்கும் போது ஒரு விஷயம் வெளிப்பட்டது, அதாவது அதிருப்திக்கான விசேஷ காரணம் என்ன? சங்கமயுகத்தின் விசேஷ வரதானமே திருப்தி தான் என்றால் பிறகும் வரதாதாவிடம் வரதானம் பெற்ற வரதானி ஆத்மாக்கள் இரண்டாம் நம்பர் மாலையில் ஏன் வருகின்றனர்? திருப்தியின் விதை அனைத்துப் பிராப்திகளும் ஆகும். அதிருப்தியின் விதை, ஸ்தூல மற்றும் சூட்சும அப்பிராப்தி (இல்லாமை). இப்போது பிராமணர்களுக்கான மகிமை

# 1987 அவ்யக்த முரளி

-பிராமணர்களின் கஜானாவில் அல்லது பிராமணர்களின் வாழ்க்கையில் கிடைக்காத பொருள் எதுவும் இல்லை. பிறகு அதிருப்தி ஏன்? வரதாதா வரதானம் கொடுப்பதில் வித்தியாசம் வைத்தாரா அல்லது பெற்றுக் கொள்பவர்கள் வித்தியாசமாக எடுத்துக் கொண்டார்களா, என்னவா யிற்று? எப்போது வரதாதா, வள்ளலின் கஜானா நிறைந்ததாக உள்ளதோ, அவ்வளவு நிறைவாக உள்ளது -உங்களுடைய அதாவது சிரேஷ்ட நிமித்த ஆத்மாக்களின் நீண்டகாலத்தின் பிரம்மா குமார் -பிரம்மாகுமாரிகள் ஆகி விட்டவர்கள். அவர்களின் 21-பிறவிகளின் வம்சாவளி மற்றும் பிறகு அவர்களுடைய பக்தர்கள், பக்தர்களுக்கும் வம்சாவளி, அவர்களும் கூட அந்தப் பிராப்திகளின் ஆதாரத்தில் சென்று கொண்டே இருப்பார்கள். இவ்வளவு பெரிய பிராப்தி, பிறகும் அதிருப்தி ஏன்? அளவற்ற கஜானா அனைவருக்கும் கிடைத்துள்ளது -ஒருவர் மூலமாக, ஒரே மாதிரி, ஒரே சமயத்தில், ஒரே விதியின் மூலம் ஆனால் கிடைத்துள்ள கஜானாவை ஒவ்வொரு சமயம் காரியத்தில் ஈடுபடுத்துவதில்லை. அதாவது ஸ்மிருதியில் வைப்பதில்லை. வாய் வார்த்தையினால் குஷியடைகிறார்கள் ஆனால் மனதால் குஷியடைவதில்லை. புத்தியின் குஷி உள்ளது, மனதின் குஷி இல்லை. காரணம்? பிராப்திகளின் கஜானாக்களை ஸ்மிருதி சொரூபமாகி, காரியத்தில் ஈடுபடுத்துவதில்லை. ஸ்மிருதி உள்ளது, ஆனால் ஸ்மிருதி சொரூபத்தில் வருவதில்லை. பிராப்தி எல்லையற்றது ஆனால் அவற்றை அங்கங்கே எல்லைக்குட்பட்ட பிராப்தியாக மாற்றி விடுகிறீர்கள். இந்தக் காரணத்தால் எல்லைக்குட்பட்டது, அதாவது அல்பகால பிராப்திக் கான ஆசை, எல்லையற்ற பிராப்தியின் பலன் சொரூபம், அதனால் சதா திருப்தியின் அனுபவமாக இருக்கும் அதிலிருந்து வஞ்சிக்கப் பட்டவராக ஆக்கி விடுகிறது. எல்லைக்குட்பட்ட பிராப்தியில் எல்லைக்குட்பட்டதைப் போட்டு விடுகிறது. அதனால் அதிருப்தியின் அனுபவம் ஏற்படுகிறது. அதிலிருந்து வஞ்சித்து விடுகிறது. எல்லைக்குட்பட்ட பிராப்தி மனங்களில் (குறிப்பிட்ட வரை யறையை) எல்லையைப் போட்டு விடுகிறது. அதனால் அதிருப்தியின் அனுபவம் ஏற்படுகிறது. சேவைக்கு எல்லை வைத்து விடுகின்றனர். ஏனென்றால் எல்லைக்குட்பட்ட ஆசையின் பலனாக மனம் விரும்பிய பலன் கிடைப்பதில்லை. எல்லைக்குட்பட்ட ஆசைகளின் பலன் அற்பகாலத்தில் பூர்த்தியாகக் கூடியது. அதனால் அவ்வப்போது திருப்தி, அவ்வப்போது அதிருப்தி ஏற்பட்டு விடுகிறது. எல்லைக்குட்பட்டது, எல்லையற்றதை அனுபவம்

செய்ய விடாது. அதனால் சோதித்துப் பாருங்கள் -மனதின் அதாவது சுயத்தின் திருப்தி, அனைவரின் திருப்தி அனுபவ மாகிறதா?

திருப்தியின் அடையாளம் -அவர்கள் மனதால், இதயத்தால், அனைவருடனும், பாபாவுடனும், டிராமாவுடனும் திருப்தியாக இருப்பார்கள். அவர்களது மனம் மற்றும் உடலில் சதா மகிழ்ச்சியின் அலை காணப்படும். எந்த ஒரு பரிஸ்திதி வந்தாலும், கணக்கு -வழக்கை முடிப்பதற்காக யாரேனும் ஆத்மா எதிர்கொள்வதற்காக முன்னால் வந்தாலும், சரீரத்தின் கர்மபோகம் எதிர்கொள்வதாக வந்து கொண்டிருந்தாலும் எல்லைக்குட்பட்ட ஆசைகளில் இருந்து விடுபட்ட ஆத்மா திருப்தியின் காரணத்தால் சதா மகிழ்ச்சியின் ஒளியில் ஜொலிக்கும் நட்சத்திரமாகக் காணப்படுவார். மகிழ்ச்சி நிறைந்த உள்ளம் கொண்டவர் ஒரு போதும் எந்த ஒரு விஷயத்திலும் கேள்வி கேட்பவராக இருக்க மாட்டார். கேள்வி இருந்தால் மகிழ்ச்சி இல்லை. திருப்தியடைந்தவர்களின் அடையாளம் -அவர்கள் சதா சுயநலமற்றவராக, சதா அனைவரையும் குற்றமற்றறவராக அனுபவம் செய்வார்கள். வேறு யார் மீதும் குற்றம் சுமத்த மாட்டார்கள் -பாக்கிய விதாதா மீது, எனது பாக்கியத்தை இப்படி உருவாக்கி விட்டீர்கள் என்றோ, டிராமா மீது -டிராமாவில் எனக்குப் பார்ட்டே இது போல் தான் உள்ளது என்றோ, இவர்களின் சுபாவ -சம்ஸ்காரம் இது போல் உள்ளது என்று மனிதர்கள் மீதோ, இயற்கையின் வாயுமண்டலம் இப்படி உள்ளது என்று இயற்கையின் மீதோ. எனது சரீரமே இப்படித் தான் என்று சரீரத்தின் மீதோ குற்றம் சுமத்த மாட்டார்கள். திருப்தியானவர் என்றால் சதா சுயநலமற்றவர், குற்றமற்ற விருத்தி -திருஷ்டி உள்ளவர். ஆக, சங்கமயுகத்தின் விசேஷதா திருப்தியாகும் மற்றும் திருப்தியின் அடையாளம் மகிழ்ச்சி. இது பிராமண வாழ்க்கையின் விசேஷ பிராப்தி. திருப்தி இல்லை, மகிழ்ச்சி இல்லை என்றால் பிராமணர் ஆனதற்கான நன்மையைப் பெற்றுக் கொள்ளவில்லை. பிராமண வாழ்க்கையின் சுகமே திருப்தி, மகிழ்ச்சி தான். பிராமண வாழ்க்கை அமைந்தது, அதன் சுகத்தை அடையவில்லை என்றால் பெயரளவுக்கு பிராமணர் ஆனீர்களா, பிராப்தி சொரூப பிராமணர் ஆனீர்களா? ஆக, பாப்தாதா பிராமணக் குழந்தைகள் அனைவர்க்கும் இந்த ஸ்மிருதியைத் தான் கொடுத்துக் கொண்டிருக்கிறார் -பிராமணர் ஆனீர்கள், அஹோ சௌபாக்கியம்! ஆனால் பிராமண வாழ்க்கையின் ஆஸ்தி, சொத்து திருப்தி தான். மற்றும்

## 1987 அவ்யக்த முரளி

பிராமண வாழ்க்கையின் ஆளுமை (பர்சனாலிட்டி) மகிழ்ச்சியாகும். இந்த அனுபவத்திலிருந்து ஒரு போதும் வஞ்சிக்கப் பட்டவர்களாக இருந்து விடக் கூடாது. அதிகாரிகள் (உரிமை யுள்ளவர்கள்) நீங்கள். எப்போது வள்ளல், வரதாதா திறந்த மனதோடு பிராப்திகளின் கஜானாவைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார், கொடுத்து விட்டார் என்றால் நன்றாகத் தனது சொத்து மற்றும் பர்சனாலிட்டியை அனுபவத்தில் கொண்டு வாருங்கள். மற்றவர்களையும் அனுபவி ஆக்குங்கள். புரிந்ததா? ஒவ்வொருவரும் தன்னைத் தான் கேட்டுக் கொள்ளுங்கள் -நான் எந்த நம்பர் மாலையில் இருக்கிறேன்? மாலையில் இருக்கவே செய்கிறீர்கள், ஆனால் எந்த நம்பரின் மாலையில் இருக்கிறேன்? நல்லது.

இன்று இராஜஸ்தான் மற்றும் உ.பி. குழுவினர் உள்ளனர். இராஜஸ்தான் என்றால் இராஜ்ய சம்ஸ்காரம் உள்ளவர்கள். ஒவ்வொரு சங்கல்பத்திலும் சொரூபத்திலும் இராஜ்ய சம்ஸ்காரத்தை நடைமுறையில் கொண்டு வருபவர்கள். அதாவது பிரத்தியட்சமாகக் காண்பிப்பவர்கள். இவர்களைத் தான் இராஜஸ்தான் நிவாசி எனச் சொல்வது. அப்படிப்பட்டவர்கள் தாம் இல்லையா? ஒரு போதும் பிரஜையாக ஆகி விடுவதில்லை தானே? வசமாகி விட்டீர்கள் என்றால் பிரஜை எனச் சொல்வார்கள். மாலிக் என்றால் இராஜா. சில நேரம் இராஜா, சில நேரம் பிரஜை என்று அப்படி இல்லை. சதா இராஜ்ய சம்ஸ்காரம் தானாகவே ஸ்மிருதி சொரூபத்தில் இருக்க வேண்டும். அத்தகைய இராஜஸ்தான் நிவாசி குழந்தைகளுக்கு மகத்துவமும் உள்ளது. இராஜாவை அனைவரும் சதா உயர்ந்த பார்வையில் பார்ப்பார்கள் மற்றும் இராஜாவுக்கு உயர்ந்த ஸ்தானமும் அளிப்பார்கள். இராஜா எப்போதுமே சிம்மாசனத்தில் அமர்வார். பிரஜைகள் கீழே அமர்வார்கள். ஆக, இராஜஸ்தானின் இராஜ்ய சம்ஸ்காரம் உள்ள ஆத்மாக்கள் என்றால் சதா உயர்ந்த ஸ்திதி என்ற இருப்பிடத்தில் இருப்பவர்கள். அந்த மாதிரி ஆகி விட்டீர்களா அல்லது ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? ஆகியிருக்கிறீர்கள் மற்றும் சம்பன்னம் ஆகத் தான் வேண்டும். இராஜஸ்தானின் மகிமை குறைந்தது கிடையாது. ஸ்தாபனைக்கான தலைமை நிலையமே இராஜஸ்தானில் தான் உள்ளது. ஆகவே உயர்ந்தவர்கள் ஆகிறீர்கள் இல்லையா? பெயராலும் உயர்ந்தவர்கள், செயலாலும் உயர்ந்தவர்கள். இத்தகைய இராஜஸ்தானின் குழந்தைகள் தங்கள் வீட்டில் வந்து சேர்ந்து விட்டீர்கள். புரிந்ததா?

# 1987 அவ்யக்த முரளி

உ.பி. (உத்தரப் பிரதேசம்)யின் பூமி விசேஷ பாவன பூமி எனப் பாடப்பட்டுள்ளது. பாவனமாக்கக் கூடிய கங்கை நதியும் அங்கே உள்ளது மற்றும் பக்தி மார்க்கத்தின்படி கிருஷ்ணரின் பூமியும் உ.பி. யில் தான் உள்ளது. பூமியின் மகிமை அதிகம். கிருஷ்ண லீலா, ஜன்மபூமி பார்க்க வேண்டுமானாலும் உ.பி.க்குத் தான் செல்வார்கள். ஆக, உ.பி.காரர்களுக்கு விசேஷதா உள்ளது. சதா பாவனமாகி மற்றும் பாவனமாக்குவதற்கான விசே'தா நிறைந்தவர்கள். எப்படி பாபாவின் மகிமை பதித -பாவனர் என்று உள்ளது உ.பி.காரர்களுக்கும் பாப் -சமான் மகிமை உள்ளது. பதித -பாவனி ஆத்மாக்கள் நீங்கள். பாக்கியத்தின் நட்சத்திரம் ஜொலித்துக் கொண்டிருக்கிறது. அந்த மாதிரி பாக்கியவான் இருப்பிடம் மற்றும் ஸ்திதி -இரண்டுக்கும் மகிமை உள்ளது. சதா பாவனம் -இது ஸ்திதியின் மகிமை. ஆக, அத்தகைய பாக்கியவான் என்று தன்னைப் புரிந்து கொள்கிறீர்களா? சதா தனது பாக்கியத்தைப் பார்த்து மகிழ்ந்து, தானும் சதா மகிழ்ச்சியாக இருங்கள் மற்றும் மற்றவர்களையும் மகிழ்வித்துக் கொண்டே செல்லுங்கள். ஏனென்றால் மலர்ந்த முகம் உள்ளவர் தானாகவே கவர்ச்சி மூர்த்தியாக இருப்பார். எப்படி ஸ்தூல நதி தன் பக்கம் ஈர்க்கிறது இல்லையா? ஈர்க்கப் பட்டு யாத்திரிகர்கள் செல்கின்றனர். எவ்வளவு தான் கஷ்டங்களை அடைந்தாலும் சரி, பிறகும் பாவனமாவதற்கான கவர்ச்சி ஈர்க்கின்றது. ஆக, இந்தப் பாவனமாக்குவதற்கான காரியத்தின் நினைவுச்சின்னம் உ.பி. யில் உள்ளது. இதே போல் மகிழ்ச்சியான மற்றும் கவரக்கூடிய மூர்த்தியாக ஆக வேண்டும். புரிந்ததா?

மூன்றாவது குருப் இரட்டை வெளிநாட்டினருடையதும் உள்ளது. இரட்டை வெளிநாட்டினர் என்றால் சதா விதேசி (வேறு தேசத்தவர்) பாபாவைக் கவர்ந்திழுப்பவர்கள். ஏனென்றால் சமமாக உள்ளனர் இல்லையா? பாபாவும் விதேசி, நீங்களும் விதேசி. சமமாக உள்ளவர்கள் அன்பானவராக இருப்பார்கள். தாய் -தந்தையை விடவும் நண்பர்கள் அதிக அன்புக்குரியவர்களாக உள்ளனர். ஆக, இரட்டை வெளிநாட்டினர் பாப் -சமான் சதா இந்த தேகம் மற்றும் தேகத்தின் கவர்ச்சியிலிருந்து விடுபட்ட விதேசி, அசரீரி, அவ்யக்தமாக இருப்பவர்கள். ஆக, பாபா தமக்கு சமமாக அசரீரி, அவ்யக்த ஸ்திதி உள்ள குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். பந்தயத்தில் நல்ல வேகத்தில் சென்று கொண்டுள்ளனர். சேவையில் பலவித சாதனங்கள் மற்றும் பல்வேறு விதிகள் மூலம்

பந்தயத்தில் முன்னால் நல்ல வேகத்தில் சென்று கொண்டிருக்கிறார்கள். விதியையும் கடைப்பிடித்து, விருத்தியையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர். அதனால் பாப்தாதா நாலாபுறம் உள்ள இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு சேவையின் வாழ்த்தும் சொல்கிறார் மற்றும் சுயத்தின் வளர்ச்சிக்கான ஸ்மிருதியையும் கொடுக்கிறார். சுயத்தின் முன்னேற்றத்தில் சதா பறக்கும் கலை மூலம் பறந்து கொண்டே இருங்கள். சுய முன்னேற்றம் மற்றும் சேவையின் முன்னேற்றத்தின் சமநிலை மூலம் சதா பாபாவின் ஆசிர்வாதத்திற்கு அதிகாரியாக உள்ளனர் மற்றும் சதா இருப்பார்கள். நல்லது.

நாலாவது குரூப் எஞ்சியிருப்பது மதுபன் நிவாசிகள். இவர்களோ சதா (இங்கே -மதுபனில்) இருக்கவே செய்கிறார்கள். இதயத்தில் இருப்பவர்கள் அடுப்படியில் (சமையலறையில் -வீட்டின் முக்கிய இடத்தில்) இருக்கிறார்கள். அடுப்படியில் இருப்பவர்கள் (பாப்தாதாவின்) இதயத்தில் இருக்கிறார்கள். அனைத்திலும் அதிகமாக விதிபூர்வமாக சமைக்கப்படும் பிரம்மா போஜனமும் மதுபனில் இருக்கும். அனைவரிலும் தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லமானவர்களும் மதுபன் நிவாசிகள் தாம். அனைத்து முக்கிய நிகழ்ச்சிகளும் மதுபனில் நடைபெறுகின்றன. அனைவரையும் விட நேரடியாக முரளிகளும் மதுபன்வாசிகள் தாம் கேட்கின்றனர். ஆக, மதுபன் நிவாசிகள் சதா சிரேஷ்ட பாக்கியத்திற்கு அதிகாரி ஆத்மாக்கள். சேவையும் மனதார செய்கிறார்கள். அதனால் மதுபன் நிவாசிகளுக்கு, பாப்தாதா மற்றும் அனைத்து பிராமணர்களின் மனதின் ஆசிர்வாதம் கிடைத்துக் கொண்டே இருக்கிறது. நல்லது.

நாலாபுறமும் உள்ள பாப்தாதாவின் விசேஷ திருப்திமணிகளுக்கு பாப்தாதாவின் விசேஷ அன்பு நினைவுகள். அதோடு கூடவே அனைத்து பாக்கியசாலி பிராமண வாழ்க்கையை அடையக்கூடிய கோடியில் ஒரு சிலர், அதிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில தேடிக் கண்டெடுக்கப்பட்ட ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் சுப சங்கல்பங்களை நிறைவு செய்யக்கூடிய ஆத்மாக்களுக்கு, சங்கமயுக பிராமண வாழ்க்கையின் சொத்துக்கு சம்பூர்ண அதிகாரத்தை அடையக்கூடிய ஆத்மாக் களுக்கு விதாதா மற்றும் வரதாதா பாப்தாதாவின் மிக -மிக அன்பு நினைவுகளை சுவீகாரம் செய்து கொள்ளவும்.

# 1987 அவ்யக்த முரளி

தாதி ஜானகிஜி மற்றும் தாதி சந்திரமணிஜி சேவைகளுக்காக செல்வதற்கு பாப்தாதாவிடம் விடை பெற்றுக் கொள்கின்றனர்; சென்று கொண்டிருக்கிறீர்களா அல்லது (பாபாவை உங்களுக்குள்) நிறைத்துக் கொண்டிருக்கிறீர்களா? நீங்கள் சென்றாலும் அல்லது வந்தாலும் சதா நிறைந்திருக்கிறீர்கள். பாப்தாதா மிக முக்கியமான விசேஷமான குழந்தைகளை ஒரு போதும் தனியாகப் பார்ப்பதே இல்லை. ஆகாரத்தில் என்றாலும் சாகாரத்தில் என்றாலும் சதா கூடவே இருக்கிறீர்கள். ஏனென்றால் மகாவீர் குழந்தைகள் தாம் இந்த உறுதிமொழியை நிறைவேற்றுகிறார்கள் -அதாவது ஒவ்வொரு நேரமும் கூடவே இருப்போம், கூடவே செல்வோம். மிகச் சிலர் தாம் இந்த உறுதிமொழியை நிறைவேற்றுகின்றனர். எனவே அத்தகைய மகாவீர் குழந்தைகள், விசேஷமான குழந்தைகள் எங்கே சென்றாலும் பாபாவை உடன் அழைத்துச் செல்கின்றனர். மேலும் பாபா சதா வதனத்திலும் அவர்களைக் கூடவே வைத்துக் கொள்கிறார். ஒவ்வோரடியிலும் பாபா துணையைத் தருகிறார். அதனால் சென்று கொண்டிருக்கிறீர்களா, வந்து கொண்டிருக்கிறீர்களா -என்ன சொல்வீர்கள்? அதனால் சொன்னோம் -சென்று கொண்டிருக்கிறீர்களா அல்லது நிறைந்து கொண்டிருக்கிறீர்களா என்று. இதே போல் கூடவே இருந்துஇருந்து சமமாக ஆகி நிறைந்து விடுவீர்கள். வீட்டில் கொஞ்ச சமயத்திற்கு ஓய்வெடுப்பீர்கள், உடனிருப்பீர்கள். பிறகு நீங்கள் இராஜ்யம் செய்வதை பாபா மேலே இருந்து பார்ப்பார் ஆனால் துணையைக் கொஞ்ச சமயத்திற்கு அனுபவம் செய்ய வேண்டும். நல்லது.

(இன்று பாப்தாதா, நீங்கள் அற்புதமான மாலையை உருவாக்கினீர்கள்) நீங்களும் கூட மாலையை உருவாக்குகிறீர்கள் இல்லையா? மாலை இப்போதோ சிறியதாக உள்ளது. இப்போது இன்னும் பெரியதாக ஆகும். இப்போது யார் கொஞ்சம் அவ்வப்போது மூர்ச்சை அடைந்து விடுகிறார்களோ, அவர்களைக் கொஞ்ச சமயத்தில் இயற்கையின் அல்லது சமயத்தின் சப்தம் விழிப்புணர்வில் கொண்டு வரும். பிறகு மாலை பெரியதாக ஆகி விடும். நல்லது நீங்கள் எங்கே சென்றாலும் பாப்தாதாவின் வரதானியாகவோ இருக்கிறீர்கள். உங்களுடைய ஒவ்வோரடியிலும் தந்தையின் வரதானம் அனைவருக்கும் கிடைத்துக் கொண்டே இருக்கும். பார்ப்பீர்களானால் பாபாவின் வரதானத்தை திருஷ்டி மூலம் பெற்றுக் கொள்வார்கள். பேசுவீர்களானால்

வார்த்தையின் மூலம் வரதானம் பெறுவார்கள். கர்மத்தின் மூலம் கூட வரதானத்தையே பெறுவார்கள். நடக்கும் போதும் சுற்றி வரும் போதும் வரதானங்களின் மழை பொழியச் செய்வதற்காகச் சென்று கொண்டிருக்கிறீர்கள். இப்போது வந்து கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு வரதானத்தின் அல்லது மகாதானத் தின் அவசியம் தான் உள்ளது. நீங்கள் செல்கிறீர்கள் என்றால் திறந்த மனதோடு அவர்களுக்கு பாபாவின் வரதானம் கிடைப்பதாகும். நல்லது

**வரதானம்: புத்தி என்ற கால்கள் மூலம் இந்த ஐந்து தத்துவங்களின் கவர்ச்சியிலிருந்து விடுபட்டு இருக்கக் கூடிய ஃபரிஸ்தா சொரூபம் ஆகுக!**

ஃபரிஸ்தாக்களுக்கு எப்போதும் பிரகாசமான உடலைக் காட்டுகின்றனர். ஒளி உடல் உள்ளவர்கள் இந்த தேகத்தின் நினைவில் (ஸ்மிருதியில்) இருந்தும் விடுபட்டு இருப்பார்கள். அவர்களின் புத்தி என்ற கால் இந்த ஐந்து தத்துவங்களின் கவர்ச்சியிலிருந்து உயரத்தில் அதாவது அப்பாற்பட்ட நிலலையில் இருக்கும். அத்தகைய ஃபரிஸ்தாக்களை மாயா அல்லது எந்த ஒரு மாயாவியும் தொடகூட முடியாது ஆனால் எப்போது நீங்கள் ஒரு போதும் யாருடைய அடிமையாகவும் இல்லாதிருக்கிறீர்களோ, அப்போது தான் இது நடக்கும். சரீரத்திற்கு கூட அதிகாரி ஆகி நடந்து கொள்ள வேண்டும். மாயாவுக்கு கூட அதிகாரி ஆக வேண்டும். லௌகிக மற்றும் அலௌகிக சம்மந்தங்களின் அடிமைத் தனத்திலும் வரக்கூடாது.

**சுலோகன்: சரீரத்தைப் பார்ப்பதற்கான பழக்கம் இருக்குமானால் சரீரத்தைப் பாருங்கள், லைட் ரூபத்தில் நிலைத்திருங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 09.10.1987 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அலௌகீக இராஜ்யசபையின் செய்திகள்!

இன்றைக்கு பாப்தாதா தனது சுயராஜ்ய அதிகாரி குழந்தைகளின் இராஜ்ய சபையை பார்த்துக் கொண்டிருக்கிறார். இந்த சங்கமயுகத்தின் விசித்திரமான, சிறந்த பெருமையுடைய அலௌகீக இராஜ்ய சபை முழு கல்பத்திலும் தனிப்பட்டதாகவும் மிகவுமே பிரியமானதாகவும் இருக்கிறது. இந்த இராஜ்ய சபையின் ஆன்மீக பொலிவு, ஆன்மீக கமல ஆசனம், ஆன்மீக கிரீடம் மற்றும் திலகம், முகத்தின் பிரகாசம், மனநிலையின் (ஸ்திதி) சிறந்த (ஸ்மிருதி) நினைவின் வாயு மண்டலத்தின் அலௌகீகமான நறுமணம் மிகவுமே ரமணிகரமான, மிகவுமே கவரக் கூடியதாக இருக்கிறது. அப்பேர்ப்பட்ட சபையை பார்த்து, பாப்தாதா ஒவ்வொரு இராஜ்ய அதிகாரி ஆத்மாவை யும் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். எவ்வளவு பெரிய இராஜ்ய சபை ஆகும். ஒவ்வொரு பிராமண குழந்தையும் சுயராஜ்ய அதிகாரி ஆவார்கள். ஆக எத்தனை பிராமண குழந்தைகள் இருக்கிறார்கள். அனைத்து பிராமண குழந்தைகளின் இராஜ்ய சபையையும் ஒன்று சேர்த்தீர்கள் என்றால் எவ்வளவு பெரிய இராஜ்ய சபை ஆகி விடும். இவ்வளவு பெரிய இராஜ்ய சபை எந்தவொரு யுகத்திலும் இருக்காது. இது போல உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையின் அனைத்து குழந்தைகளும் சுயராஜ்ய அதிகாரி ஆகிறார்கள் என்பதே இந்த சங்கமயுகத்தின் விசேஷத் தன்மை ஆகும். அப்படியும் லௌகீக குடும்பத்தில் ஒவ்வொரு தந்தையும் தனது குழந்தைகளுக்கு இந்த என்னுடைய குழந்தை ராஜா மகன் ஆவார் என்று கூறுவார் மேலும் எனது ஒவ்வொரு குழந்தையும் இராஜா ஆக வேண்டும் என்ற விருப்பம் கொண்டிருப்பார் ஆனால் எல்லா குழந்தைகளும் இராஜாவாக ஆகவே முடியாது. இந்த பழமொழி பரமாத்மா தந்தை யினுடையதை காப்பி செய்துள்ளார்கள். இச்சமயத்தில் பாப்தாதாவின் அனைத்து குழந்தைகளும் இராஜயோகி அதாவது சுயத்தின் மீது இராஜாவாக வரிசைக்கிரமமாக அவசியம் இருக்கிறார்கள் ஆனால்

இருப்பது அனைவருமே இராஜயோகியாக. பிரஜையோகிகள் என்று யாருமே இல்லை. எனவே பாப்தாதா எல்லையில்லாத இராஜ்ய சபையை பார்த்துக் கொண்டிருந்தார். எல்லோரும் தங்களை சுயராஜ்ய அதிகாரி என்று நினைக்கிறீர்கள் அல்லவா? புதிது புதிதாக வந்திருக்கும் குழந்தைகள் இராஜ்ய அதிகாரி ஆவீர்களா? இல்லை இனிமேல் தான் ஆக வேண்டி இருக்கிறதா? புதிது புதிதாக இருக்கிறார்கள். எனவே சந்திக்க, பழக கற்றுக் கொண்டு இருக்கிறார்கள். அவ்யக்த தந்தையின் அவ்யக்த விஷயங்களை புரிந்து கொள்வதற்கான பழக்கமும் ஏற்பட்டு கொண்டே போயிருக்கும். இருப்பினும் ஆத்மாக்களாகிய நாம் அனைவரும் எவ்வளவு பாக்கியவான் ஆவோம் என்று இந்த பாக்கியத்தை சமயம் வரும் பொழுது இப்பொழுதைய பாக்கியத்தை விட அதிக மானதாக நினைத்துக் கொள்வார்கள்.

எனவே அலௌகீக இராஜ்ய சபையின் சமாச்சாரத்தை பாப்தாதா கூறிக் கொண்டிருந்தார். விசேஷமாக அனைத்து குழந்தைகளின் கிரீடம் மற்றும் முகத்தின் பிரகாசத்தின் மீது விரும்பா விடினும் கவனம் சென்று கொண்டிருந்தது. கிரீடம் பிராமண வாழ்க்கையின் விசேஷத் தூய்மையினுடைய அறிகுறி ஆகும். முகத்தின் பிரகாசம் ஆத்மீக நிலையில் நிலைத்திருப்பதற்கான ஆத்மீகத்தின் பிரகாசம் ஆகும். சாதாரண முறையில் கூட எந்தவொரு நபரை பார்க்கும் பொழுதும் எல்லாவற்றிற்கும் முதலாக பார்வை முகத்தின் பக்கம் தான் போகும். இந்த முகம் தான் (விருத்தி) உள்ளுணர்வு மற்றும் (ஸ்திதி) மனநிலையின் கண்ணாடி ஆகும். எனவே பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார் -பிரகாசமோ எல்லோரிடமுமே இருந்தது ஆனால் ஒருவர் எப்பொழுதும் ஆன்மீகத்தின் நிலையில் நிலைத்திருப்பவர்கள், இயல்பான மற்றும் எளிதான நிலை உடையவர்கள் மேலும் இரண்டாமவர் எப்பொழுதும் ஆன்மீக நிலையின் பயிற்சி மூலமாக நிலைத்திருப்பவர்கள். ஒருவர் எளிதான நிலையில் நிலைத்திருப்பவர்கள் மற்றவர் பிரயத்தனம் செய்து நிலைத்திருப்பவர்கள் அதாவது ஒருவர் சகஜயோகியாக இருப்பார் மற்றவர் (புருஷார்த்தம்) முயற்சி மூலமாக யோகியாக இருப்பார். இருவரினுடைய பிரகாசத்திலும் வித்தியாசம் இருந்தது. முதலாமவரினுடையது இயற்கையான அழகாக இருந்தது மேலும் இரண்டாமவரினுடையது புருஷார்த்தம் மூலமாக அழகு இருந்தது. எப்படி தற்காலத்தில் கூட மேக் அப் -அலங்காரம் செய்து அழகாக ஆகிறார்கள்

அல்லவா? இயற்கையான அழகினுடைய பிரகாசம் எப்பொழுதும் ஒரே ரசனையுடம் கூடியதாக இருக்கும் மேலும் இரண்டாவது அழகு சில நேரங்களில் மிகவும் நன்றாகவும் மற்றும் சில நேரங்களில் சதவிகிதத்திலும் இருக்கும். ஒன்று போல ஒரே சீராக இருப்ப தில்லை. எனவே சதா சகஜயோகி இயல்பான யோகி நிலை முதல் நம்பர் சுயராஜ்ய அதிகாரியாக ஆக்குகிறது. அனைத்து குழந்தைகளினுடைய வாக்குறுதியே பிராமண வாழ்க்கை என்றால் ஒரு தந்தை தான் உலகம் அல்லது ஒரு தந்தை இரண்டாமவர் என்று யாருமே இல்லை, உலகமே தந்தை தான், மற்றவர் யாருமே இல்லை என்றிருக்கும் பொழுது இயல்பாகவும் எளிதாகவும் சகஜயோகி நிலை எப்பொழுதும் இருக்கும் அல்லவா? இல்லை உழைப்பு செய்ய வேண்டி இருக்குமா? ஒருவேளை வேறு யாராவது இருக்கிறார்கள் என்றால் இங்கு புத்தி போகக் கூடாது, அங்கு போகக் கூடாது என்று உழைப்பு செய்ய வேண்டி இருக்கும் ஆனால் ஒரு தந்தை தான் அனைத்துமாக இருக்கிறார் என்றால் புத்தி எங்கே போகும்? போகவே முடியாது என்றிருக்கும் பொழுது அப்பியாசம் என்ன செய்வீர்கள்? அப்பியாசத்தில் கூட வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. ஒன்று இயல்பான பயிற்சி இருக்கவே இருக்கிறது என்பது மேலும் இரண்டாவதாக இருப்பது உழைப்பினுடன் கூடிய அப்பியாசம். எனவே சுயராஜ்ய அதிகாரி குழந்தைகள் எளிய பயிற்சியாளர் ஆவது -இது தான் சகஜயோகி -இயல்பான யோகியின் அடையாளம் ஆகும். அவர்களுடைய முகத்தின் பிரகாசம் அலௌகீகமாக இருக்கும். அவர்களுடைய முகத்தை பார்த்த உடனேயே மற்ற ஆத்மாக்கள் இவர் சிறந்த பிராப்தி சொரூபமான சகஜயோகி ஆவார் என்பதை அனுபவம் செய்வார்கள். எப்படி ஸ்தூல செல்வம் அல்லது ஸ்தூல பதவியின் பிராப்தியின் பிரகாசம் இவர் செல்வந்தரினுடைய குலத்தினர் அல்லது உயர்ந்த பதவியின் அதிகாரி ஆவார் என்று முகத்தின் மூலமாகவே தெரிய வருகிறது. அதேபோல இந்த சிறந்த பிராப்தி, சிறந்த இராஜ்ய அதிகாரம் அதாவது சிறந்த பதவியின் பிராப்தியின் போதை அல்லது பிரகாசம் முகத்தின் மூலம் தென்படுகிறது. இவர்கள் ஏதோ அடைந்துள்ளார்கள். பிராப்தி சொரூபமான ஆத்மாக்கள் ஆவார்கள் என்பதை தூரத்திலிருந்தே அனுபவம் செய்வார்கள். அதேபோல அனைத்து இராஜ்ய அதிகாரி குழந்தைகளின் முகங்கள் பிரகாசித்துக் கொண்டிருப்பதாக தென்பட வேண்டும். உழைப்பினுடைய அறிகுறி தென்படக் கூடாது. பிராப்தியின் அறிகுறி தென்பட வேண்டும் இப்பொழுது கூட பாருங்கள் ஒரு சில குழந்தைகளின் முகங்களை

பார்த்து இவர்கள் ஏதோ அடைந்துள்ளார்கள் என்றே கூறுகிறார்கள் மேலும் ஒரு சில குழந்தைகளின் முகங்களை பார்த்து உயர்ந்த குறிக்கோள் ஆகும் ஆனால் தியாகம் கூட மிக உயர்ந்ததாக செய்துள்ளார்கள் என்றும் கூறுகிறார்கள். தியாகம் தென்படுகிறது. பாக்கியம் முகத்தின் மூலமாக தென்படுவது இல்லை. அல்லது மிகவும் நல்ல உழைப்பு செய்து கொண்டிருக்கிறார்கள் என்று இப்படி கூறுவார்கள்.

ஒவ்வொரு குழந்தையினுடைய முகத்தின் மூலம் சகஜயோகியின் பிரகாசம் தென்பட வேண்டும், சிறந்த பிராப்தியின் போதையின் பிரகாசம் தென்பட வேண்டும் என்பதையே பாப்தாதா பார்க்க விரும்புகிறார். ஏனெனில் பிராப்திகளின் களஞ்சியமான தந்தையின் குழந்தைகள் ஆவீர்கள். சங்கமயுகத்தின் பிராப்திகளின் வரதானி நேரத்தின் அதிகாரி ஆவீர்கள். நிரந்தர யோகம் எப்படி செய்வது அல்லது நிரந்தர அனுபவம் செய்து களஞ்சியத்தின் அனுபவம் எப்படி செய்வது -என்று இதுவரையும் கூட இதே உழைப்பிலேயே நேரத்தை இழக்காதீர்கள் ஆனால் பிராப்தி சொரூபத்தின் பாக்கியத்தை எளிதாக அனுபவம் செய்யுங்கள். முடிவிற்கான நேரம் நெருங்கி கொண்டிருக்கிறது. இதுவரையும் ஏதாவதொரு விஷயத்தின் உழைப்பிலேயே ஈடுபட்டு கொண்டி ருந்தீர்கள் என்றால் பிராப்திக்கான நேரமோ முடிந்து போய் விடும். பிறகு பிராப்தி சொரூபத்தின் அனுபவம் எப்பொழுது செய்வீர்கள்? சங்கமயுகத்திற்கு பிராமண ஆத்மாக்களுக்கு சர்வ பிராப்தி பவ என்ற வரதானம் உள்ளது சதா புருஷார்த்திபவ என்ற வரதானம் கிடையாது. பிராப்தி பவ என்ற வரதானம் உள்ளது. பிராப்தி பவ என்ற வரதானம் எடைய ஆத்மா ஒரு பொழுதும் அலட்சியத் தன்மையில் வர முடியாது. எனவே அவர்களுக்கு உழைப்பு செய்ய வேண்டி இருக்காது. எனவே புரிந்ததா, என்ன ஆக வேண்டும் என்று.

இராஜ்ய சபையின் இராஜ்ய அதிகாரி ஆவதற்கான விசேஷதன்மை என்ன என்பது தெளிவா கியது அல்லவா? இராஜ்ய அதிகாரி ஆவீர்கள் அல்லவா? இல்லை அதிகாரி ஆக இருக்கிறோமோ இல்லையா என்று இப்பொழுது யோசித்துக் கொண்டிருக்கிறீர்களா? விதாதாவின் (விதியை அமைப்பவரின்) குழந்தைகள் (வரதாதா) வரமளிக்கும் வள்ளலின் குழந்தைகள் ஆகி விட்டீர்கள், இராஜா என்றால் விதாதா -அளிப்பவர்.

அப்ராப்தி என்று எதுவுமே கிடையாது, பின் எதை பெறுவீர்கள்? எனவே புரிந்ததா? புது புது குழந்தைகள் இந்த அனுபவத்தில் இருக்க வேண்டும். போராட்டத்திலேயே நேரத்தை இழக்கக் கூடாது. ஒருவேளை போரட்டத்திலேயே நேரத்தை இழந்தீர்கள் என்றால் கடைசி நேரத்திலும் (அந்த் மதி) யுத்தத்திலேயே இருப்பீர்கள். பிறகு என்ன ஆக வேண்டி இருக்கும்? சந்திர வம்சத்தில் செல்வீர்களா இல்லை சூரிய வம்சத்தில் செல்வீர்காளா? போராடுபவர்களோ சந்திரவம்சத்தில் செல்வார்கள். நடந்து கொண்டிருக்கிறோம், செய்து கொண்டிருக்கிறோம், ஆகியே விடுவோம், போய் சேர்ந்து விடுவோம் .. .. .. இதுவரையும் இப்பேர்ப் பட்ட இலட்சியம் கொண்டிருக்காதீர்கள். இப்பொழுது இல்லை என்றால் எப்பொழுதும் இல்லை. ஆக வேண்டும் என்றால் இப்பொழுதே ஆக வேண்டும், பெற வேண்டும் என்றால் இப்பொழுதே பெற வேண்டும் -இப்பேர்ப்பட்ட ஊக்கம் உற்சாகம் உடையவர்களே குறித்த சமயத்தில் தங்களது சம்பூர்ண குறிக்கோளை அடையக் கூடியவர்களாக இருப்பார்கள். திரேதாவில் இராமர் சீதையாக ஆவதற்கு யாருமே தயாராக இல்லை. சத்யுக சூரிய வம்சத்தில் வர வேண்டும்என்றால் -சூரிய வம்சம் என்பதன் பொருள் சதா மாஸ்டர் விதாதா மற்றும் வரதாதா -பெறக் கூடிய விருப்பம் கொண்டவர்கள் அல்ல. உதவி கிடைத்து விட வேண்டும், இப்படி ஆகி விட்டால் மிகவும் நன்றாக இருக்கும், புருஷார்த்தத்தில் நல்ல நம்பர் எடுப்போம் என்பதில்லை. உதவி கிடைத்துக் கொண்டிருக்கிறது, எல்லாமே ஆகி கொண்டிருக்கிறது -இதற்கு தான் சுயராஜ்ய அதிகாரி குழந்தைகள் என்று கூறுவார்கள். முன்னேறி செல்ல வேண்டுமா? இல்லை பின்னால் வந்துள்ளோம் என்பதற்காக பின்னாலேயே இருக்க வேண்டுமா? முன்னேறி செல்வதற்கான எளிய வழியாவது -சகஜயோகி (ஸ்வதஹ) இயல்பான யோகி ஆகுங்கள். மிகவும் சகஜமானது. இருப்பதே ஒரே ஒரு தந்தை இரண்டாவது என்று யாருமே இல்லை என்றிருக்கும் பொழுது எங்கே போவீர்கள்? பிராப்தியே பிராப்தி ஆகும். பிறகு ஏன் உழைப்பு பிடிக்கும்? எனவே பிராப்திக்கான நேரத்தின் இலாபத்தை எடுங்கள். சர்வ பிராப்தி சொரூபம் ஆகுங்கள். புரிந்ததா? ஒவ்வொரு குழந்தை கூட -கடைசியில் வருபவராக இருந்தாலும் சரி, ஸ்தாபனையின் ஆரம்பத்தில் வருபவராக இருந்தாலும் சரி, ஒவ்வொரு குழந்தையும் முதல் நம்பர் ஆக வேண்டும் என்றே தான் பாப்தாதா விரும்புகிறார். இராஜா ஆகுங்கள், பிரஜை அல்ல. நல்லது.

மகாராஷ்டிரம் மற்றும் மத்திய பிரதேசத்தின் குரூப் வந்துள்ளார்கள். பாருங்கள், மகா என்ற வார்த்தை எவ்வளவு நன்றாக இருக்கிறது. மகாராஷ்டிரம் என்ற இடம் கூட மகா என்ற வார்த்தையை கொண்டதாக இருக்கிறது. மேலும் ஆக வேண்டியதும் கூட மகான் ஆக. மகான் ஆகவே ஆகி விட்டீர்கள் அல்லவா? ஏனெனில் தந்தையினுடையவர் ஆவது என்றாலே மகான் ஆகி விட்டீர்கள். மகான் ஆத்மாக்கள் ஆவீர்கள். பிராமணர் என்றாலே மகான். ஒவ்வொரு செயலும் மகான். ஒவ்வொரு வார்த்தையும் மகான். ஒவ்வொரு சங்கல்பம் கூட மகான் ஆகும். அலௌகீகமானவர்களாக ஆகி விட்டீர்கள் அல்லவா? எனவே மகாராஷ்டிரத்தினர் எப்பொழுதுமே மகான் ஆவோம் என்ற (ஸ்மிருதி) நினைவு சொரூபம் ஆகுங்கள். பிராமணர் என்றால் மகான் குடுமி ஆவார்கள் அல்லவா?

**மத்திய பிரதேசம்** -சதா மத்யாஜீ பவ என்ற போதையில் இருப்பவர்கள். மன் மனா பவ என்பதுடன் கூடவே மத்யாஜீ பவ என்ற வரதானம் கூட இருக்கிறது. எனவே தங்களுடைய சொர்க்கத்தின் சொரூபம் -இதற்கு மத்யாஜீ பவ என்று கூறுவார்கள். எனவே தங்களது சிறந்த பிராப்தியின் போதையில் இருப்பவர்கள் -அதாவது மத்யாஜீ பவ என்ற மந்திரத்தின் சொரூபத்தில் நிலைத்திருப்பவர்கள். அவர்களும் மகான் ஆகி விட்டார்கள். மத்யாஜீ பவ ஆக இருக்கிறார்கள் என்றால் மன் மனா பவ ஆகக் கூட அவசியம் இருப்பார்கள். எனவே மத்திய பிரதேசம் என்றால் மகா மந்திரத்தின் சொரூபம் ஆகக் கூடியவர்கள். எனவே இருவருமே அவரவரினுடைய விசேஷ தன்மை காரணமாக மகான் ஆவீர்கள். புரிந்ததா? நீங்கள் யார் என்று? எப்பொழுதிலிருந்து முதல் பாடம் ஆரம்பித்தீர்களோ அது கூட நான் யார் என்ற பாடத்தை தானே ஆரம்பித்தீர்கள். தந்தை கூட அதே விஷயத்தை நினைவூட்டுகிறார். இது பற்றியே மனனம் செய்யுங்கள். வார்த்தை நான் யார் என்ற ஒன்றே ஆகும் ஆனால் இதற்கான விடைகள் எவ்வளவு இருக்கின்றன. நான் யார் என்பதற்கான (லிஸ்ட்) பட்டியல் எடுத்து வாருங்கள். நல்லது.

நாலா புறங்களின் சர்வ பிராப்தி சொரூப சிறந்த ஆத்மாக்களுக்கு, அனைத்து அலௌகீக இராஜ்ய சபை அதிகாரி மகான் ஆத்மாக்களுக்கு, சதா ஆத்மீக தன்மையின் பிரகாசத்தை தாரணை செய்யக் கூடிய விசேஷ ஆத்மாக்களுக்கு சதா (ஸ்வதஹ) இயல்பான யோகி, சகஜ யோகி,

உயர்ந்ததிலும் உயர்ந்த ஆத்மாக்களுக்கு உயர்ந்ததிலும் உயர்ந்த பாப்தாதாவின் சிநேகம் நிறைந்த அன்பு நினைவுகள் உரித்தாகுக.

**அவ்யக்த பாப்தாதாவுடன் (டபுள் விதேசி) வெளிநாட்டு சகோதர சகோதரிகள் சந்திப்பு:** இரட்டை வெளி நாட்டினர் என்றால் எப்பொழுதும் தங்களது சுய சொரூபம், சுய தேசம் மற்றும் சுய இராஜ்யத்தின் நினைவில் இருப்பவர்கள். இரட்டை வெளிநாட்டினர்கள் விசேஷமாக என்ன சேவை செய்ய வேண்டும்? இப்பொழுது (சைலன்ஸ்) அமைதி சக்தியின் அனுபவத்தை விசேஷமான ரூபத்தில் ஆத்மாக்களுக்கு செய்வியுங்கள். இது கூட விசேஷ சேவை ஆகும். எப்படி (சையன்ஸ் பவர்) அறிவியலின் சக்தி பிரசித்தி பெற்றதாக இருக்கிறது அல்லவா? அறிவியல் என்பது என்ன என்று ஒவ்வொரு குழந்தைக்குக் கூட தெரியும். அதே போல (சைலன்ஸ் பவர்) அமைதியின் சக்தி (சைன்ஸ்) அறிவியலை விடவும் உயர்ந்தது ஆகும். அந்த நாளும் வரப் போகிறது. சைலன்ஸ் பவர் -ன் வெளிப்பாடு (பிரத்யட்சதா) என்றால் தந்தையின் வெளிப்பாடு ஆகும். எப்படி அறிவியல் கண்கூடான நிரூபணம் காண்பித்து கொண்டிருக்கிறது, அதே போல சைலன்ஸ் பவர் -அமைதியின் சக்தியினுடைய (பிராக்டிகல் ப்ரூஃப்) நடைமுறை நிரூபணம் உங்கள் அனைவரது வாழ்க்கை ஆகும். இவ்வளவு பேர்கள் -அனைவரினுடைய கண் கூடான நிரூபணம் தென்படும் பொழுது விரும்பாவிடினும் கூட அனைவரின் பார்வையில் எளிதாக வந்து விடுவார்கள். எப்படி முந்தைய வருடம் இந்த அமைதியின் நிகழ்ச்சியினுடைய சேவை செய்தீர்கள் அல்லவா? இதை மேடையில் நடைமுறையில் காண்பித்தீர்கள். அதே போல நடந்தாலும் சென்றாலும் அமைதியின் மாடல் -வடிவமாக தென்பட வேண்டும். அப்பொழுது விஞ்ஞானிகளின் பார்வை கூட அமைதியின் சக்தி கொண்டவர்கள் மீது அவசியம் செல்லும். புரிந்ததா? அறிவியலின் கண்டுபிடிப்புக்கள் வெளி நாட்டில் அதிகமாக ஏற்படுகின்றது. எனவே சைலன்ஸ் பவர் -அமைதியின் சக்தியின் சப்தம் கூட அங்கிருந்து எளிதாக பரவும். சேவையின் இலட்சியமோ இருக்கவே இருக்கிறது. அனைவருக்கும் ஊக்கம் உற்சாகம் கூட இருக்கிறது. சேவையின்றி இருக்க முடியாது. எப்படி உணவு இல்லாமல் இருக்க முடியாதோ, அதே போல சேவை இல்லாமலும் இவர்களால் இருக்க முடிவதில்லை. எனவே பாப்தாதா மகிழ்ச்சியாக இருக்கிறார். நல்லது.

**பார்ட்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:** சுயதரிசன சக்கரதாரி (சிரேஷ்ட) சிறந்த ஆத்மாக்களாக ஆகி விட்டுள்ளீர்கள். இது போல அனுபவம் செய்கிறீர்களா? சுயத்தின் தரிசனம் ஆகி விட்டுள்ளது அல்லவா? தன்னைத் தானே அறிந்து கொள்வது என்றால் சுயத்தின் தரிசனம் ஆவது. மேலும் சக்கரத்தின் ஞானத்தை அறிந்து கொள்வது என்றால் சுயதரிசன சக்கரதாரி ஆகி விடுவது. சுயதரிசன சக்கரதாரியாக ஆகி விடும் பொழுது மற்ற எல்லா சக்கரங்களும் முடிந்து போய் விடுகின்றன. தேக உணர்வினுடைய சக்கரம், சம்பந்தத்தினுடைய சக்கரம், பிரச்சினைகளின் சக்கரம் -மாயையினுடைய எவ்வளவு சக்கரங்கள் இருக்கின்றன ஆனால் சுய தரிசன சக்கரதாரி ஆகி விடும் பொழுது இந்த எல்லா சக்கரங்களும் முடிந்து போய் விடுகின்றன. எல்லா சக்கரங்களிலிருந்தும் வெளியேறி விடுகிறீர்கள். இல்லையென்றால் வலையில் சிக்கிக் கொண்டு விடுகிறீர்கள். ஆக முதலில் சிக்கி இருந்தீர்கள். இப்பொழுது வெளியேறி வந்து விட்டீர்கள். 63-பிறவிகளோ அநேக சக்கரங்களில் சிக்கிக் கொண்டு இருந்தீர்கள் மற்றும் இச்சமயத்தில் இந்த சக்கரங்களிலிருந்து வெளியேறி வந்து விட்டீர்கள். எனவே மீண்டும் சிக்கி கொள்ளக் கூடாது. அனுபவம் செய்து பார்த்து விட்டீர்கள் அல்லவா? அநேக சக்கரங்களில் சிக்கிக் கொண்டு விடும் பொழுது அனைத்தையும் இழந்து விட்டீர்கள் மேலும் சுயதரிசன சக்கரதாரி ஆகி விடும் பொழுது தந்தை கிடைத்து விட்டார். ஆக எல்லாமே கிடைத்து விட்டது. எனவே சுயதரிசன சக்கரதாரி ஆகி மாயையை வென்றவராக ஆகி முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். இதனால் எப்பொழுதும் லேசாக இருப்பீர்கள். எந்தவொருவிதமான சுமை யும் அனுபவம் ஆகாது. சுமை தான் கீழே இழுத்து வருகிறது. மேலும் லேசாக ஆகி விடும் பொழுது உயர பறந்து கொண்டே இருப்பீர்கள். எனவே பறக்கக் கூடியவர்கள் ஆவீர்கள் அல்லவா? பலவீனமானவர்கள் ஒன்றும் இல்லையே? ஒருவேளை ஒரு சிறகு கூட பலவீனமாக இருந்தது என்றால் அது கீழே இழுத்து வந்து விடும். பறப்பதற்கு விடாது. எனவே இரண்டு சிறகுகளுமே வலுவாக இருந்தது என்றால் இயல்பாகவே பறந்து கொண்டே இருப்பீர்கள். சுயதரிசன சக்கரதாரி ஆவது என்றால் பறக்கும் கலையில் செல்வது. நல்லது.

இராஜயோகி சிறந்த யோகி ஆத்மாக்கள் ஆவீர்கள் அல்லவா? சாதாரண வாழ்க்கையிலிருந்து சகஜயோகி இராஜயோகி ஆகி விட்டீர்கள்.

# 1987 அவ்யக்த முரளி

அப்பேர்ப்பட்ட சிறந்த யோகி ஆத்மாக்கள் எப்பொழுதுமே அதீந்திரிய சுகத்தின் ஊஞ்சலில் ஊஞ்சலாடுவார்கள். ஹட யோகிகள் யோகத்தின் மூலமாக சரீரத்தை உயர உயர்த்துகிறார்கள் மேலும் பறப்பதற்கான அப்பியாசம் செய்கிறார்கள். உண்மையில் இராஜயோகிகளாக நீங்கள் உயர்ந்த நிலையை அனுபவம் செய்கிறீர்கள். இதைத் தான் அவர்கள் காப்பி செய்து சரீரத்தை உயர உயர்த்துகிறார்கள் ஆனால் நீங்கள் எங்கு இருந்தாலும் உயர்ந்த நிலையில் இருக்கிறீர்கள். எனவே யோகிகள் உயர்ந்து இருப்பார்கள் என்று கூறுகிறார்கள். எனவே மன நிலையின் இடம் உயர்ந்ததாக இருக்கிறது. ஏனெனில் டபிள் லைட் -லேசாகவும் ஒளியானவராகவும் ஆகி விட்டுள்ளீர்கள். அப்படியும் ஃபரிஷ்தாக்களைப் பற்றி கூறும் பொழுது ஃபரிஷ்தாக்களின் பாதங்கள் பூமியில் இருப்பதில்லை என்று கூறப்படுகிறது. ஃபரிஷ்தா என்றால் அவருடைய புத்தி என்ற பாதம் பூமி மீது இல்லாதிருக்க வேண்டும். அதாவது தேக உணர்வில் இல்லாமல் இருக்க வேண்டும். தேக உணர்விலிருந்து சதா உயர்ந்து -அப்பேர்ப்பட்ட ஃபரிஷ்தா அதாவது இராஜயோகி ஆகி விட்டீர்கள். இப்பொழுது இந்த பழைய உலகத்தின் மீது எந்தவொரு பற்றுதலும் கிடையாது. சேவை செய்வது என்பது தனி விஷயம் ஆனால் பற்றுதல் இல்லாமல் இருக்கட்டும். யோகி ஆவது என்றால் தந்தை மற்றும் நான், மூன்றாமவர் என்று யாரும் இல்லை. எனவே நாம் இராஜயோகி, சதா ஃபரிஷ்தா ஆவோம் என்ற இதே நினைவில் எப்பொழுதும் இருங்கள். இந்த நினைவின் மூலமாக எப்பொழுதும் முன்னேறிக் கொண்டே இருப்பீர்கள். இராஜயோகி எப்பொழுதும் எல்லைக்கப்பாற்பட்ட அதிபதி ஆவார். எல்லைக்குட்பட்ட எஜமானர் அல்ல. எல்லைக்குட்பட்டவைகளிலிருந்து வெளியேறி வந்து விட்டீர்கள். எல்லை யில்லாத அதிகாரம் கிடைத்து விட்டது -இதே குஷியில் இருங்கள். எப்படி எல்லையில்லாத தந்தை இருக்கிறாரோ, அதே போல எல்லையில்லாத குஷியில் இருங்கள், போதையில் இருங்கள். நல்லது.

விடை பெறும் பொழுது: அனைத்து அமிர்தவேளையின் வரதானம் உடைய குழந்தைகளுக்கு வரதாதா -வரமளிக்கும் வள்ளலான தந்தையின் பொன்னான அன்பு நினைவுகள் உரித்தாகுக. கூடவே பொன்னான உலகத்தை அமைப்பதற்கான சேவையில் எப்பொழுதும் திட்டங்களை மனனம் செய்து கொண்டிருக்கும் மேலும் எப்பொழுதும் சேவையில் உயிருக்குயிராக ஆழ்ந்த அன்புடன் உடல், மனம்,

# 1987 அவ்யக்த முரளி

பொருளாலே சகயோகியாக இருக்கும் ஆத்மாக்கள் அனைவருக்கும் பாப்தாதா குட் மார்னிங், டைமண்டு மார்னிங் கூறிக் கொண்டிருக்கிறார். மேலும் எப்பொழுதும் டைமண்டு (வைரம்) ஆகி இந்த டைமண்டு யுகத்தின் விசேஷத் தன்மையை வரதானம் மற்றும் ஆஸ்தியாக பெற்று சுயம் தாங்களும் பொன்னான நிலையில் நிலைத்திருங்கள். மேலும் மற்றவர்களுக்கும் அவ்வாறே அனுபவம் செய்வித்துக் கொண்டு இருங்கள். எனவே நாலா புறங்களின் டபுள் ஹீரோ குழந்தைகளுக்கு டைமண்டு மார்னிங். நல்லது.

**வரதானம்: கருணையுள்ளத்தின் பாவனை மூலமாக அபகாரிகள் (தீங்கு செய்பவர்கள்) மீதும் உபகாரம் (உதவி) செய்யக் கூடிய சுப சிந்தனையாளர் ஆவீர்களாக!**

எப்பேர்ப்பட்ட எந்தவொரு ஆத்மா -சதோகுணம் உடையவராகட்டும், தமோகுணம் உடையவரா கட்டும் அவர்கள் தொடர்பில் வருகிறார்கள் என்றாலும் சரி -ஆனால் எல்லாரிடத்தும் சுபசிந்தனை யாளர் அதாவது அபகாரி மீதும் உபகாரம் செய்பவர்கள் (தீங்கு செய்பவருக்கும் உதவி செய்பவர்கள்) ஆவீர்கள். ஒரு பொழுதும் எந்தவொரு ஆத்மா மீதும் வெறுப்பின் பார்வை இருக்கக் கூடாது.. ஏனெனில் இவர் அறியாமைக்கு வசப்பட்டுள்ளார். ஞானமில்லாதவராக இருக்கிறார் என்பதை அறிந்துள்ளீர்கள். அவர்கள் மீது கருணை அல்லது அன்பு வர வேண்டும். வெறுப்பு அல்ல. இவர் ஏன் இவ்வாறு செய்தார் என்று இப்படி சுப சிந்தனையாளரான ஆத்மா யோசிக்க மாட்டார் ஆனால் இந்த ஆத்மாவிற்கு எப்படி நன்மை செய்ய முடியும் என்று யோசிப்பார் -இது தான் சுப சிந்தனையாளரின் நிலை ஆகும்,

**சுலோகன்: தபஸ்யாவின் பலத்தின் மூலமாக நடக்க முடியாததையும் நடத்திக் காட்டக் கூடிய வெற்றியின் மூர்த்தி ஆகுங்கள்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 14.10.1987 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிராமண வாழ்க்கை -தந்தையிடம் சர்வ சம்பந்தங்களையும் அனுபவம் செய்யக்கூடிய வாழ்க்கை!

இன்று பாப்தாதா தன்னுடைய அநேக முறை சந்திப்பு செய்திருக்கும், அநேக கல்பங்களிலாக சந்திப்பு செய்து வரக் கூடிய குழந்தைகளை மீண்டும் சந்திப்பதற்காக வந்திருக்கின்றார். இந்த அலௌகீக, அவ்யக்த சந்திப்பானது எதிர்கால பொன்னுலகிலும் இருக்க முடியாது. இது இந்த நேரத்தின், இந்த விசேஷ யுகத்திற்கான வரதானமாகும், தந்தை மற்றும் குழந்தைகளின் சந்திப்பு. ஆகையால் தான் இந்த யுகத்தின் பெயரே சங்கமயுகம், அதாவது சந்திப்பு கொண்டாடக் கூடிய யுகமாகும். இப்படிப்பட்ட யுகத்தில் இவ்வாறு விசேஷ சந்திப்பு கொண்டாடக் கூடிய விசேஷ நடிப்பு நடிக்கும் ஆத்மாக்கள் நீங்கள். பாப்தாதாவும் இவ்வாறு கோடியில் சில சிரேஷ்ட பாக்கியவான் ஆத்மாக்களைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார், மேலும் நினைவுபடுத்துகின்றார். ஆரம்பத்திலிருந்து கடைசி வரை எத்தனை விசயங்களை நினைவுபடுத்தியிருக்கின்றார்? நினைத்துப் பாருங்கள், மீக நீண்ட பட்டியல் ஆகி விடும். அதிக விசயங்களை நினைவுபடுத்தியிருக்கின்றார், இதன் மூலம் நீங்கள் அனைவரும் நினைவு சொரூபமாக ஆகி விட்டீர்கள். பக்தியில் நினைவு சொரூப ஆத்மாக்களாகிய உங்களது நினைவார்த் தமாக பக்தர்களும் ஒவ்வொரு நேரத்தில் கீர்த்தனை செய்து கொண்டிருக்கின்றனர். நினைவு சொரூப ஆத்மாக்களாகிய உங்களது ஒவ்வொரு காரியத்தின் விசேசதாவை கீர்த்தனை (மகிமை) செய்கின்றனர். பக்தியின் விசேசதாவே ஜெபித்தல் அதாவது கீர்த்தனை செய்வதாகும். கீர்த்தனை செய்து செய்து அதிலேயே எவ்வளவு மூழ்கி விடுகின்றனர். அல்ப காலத்திற்கு அவர்களுக்கும் வேறு எந்த நினைவும் இருப்பது கிடையாது. கீர்த்தனை செய்து செய்து அதில் மூழ்கி விடுகின்றனர் அதாவது அன்பில் இலயித்து விடுகின்றனர். இந்த அல்ப

கால அனுபவம் அந்த ஆத்மாக்களுக்கு எவ்வளவு பிரிய மானதாக மற்றும் தனிப்பட்டதாக இருக்கிறது! இது ஏன் நடைபெறுகிறது? ஏனெனில் எந்த ஆத்மாவின் கீர்த்தனை செய்கிறார்களோ, அந்த ஆத்மாக்களே தந்தையின் அன்பில் சதா மூழ்கியிருந்தனர், தந்தையின் அனைத்து பிராப்திகளில் சதா மூழ்கியிருந்தனர். ஆகையால் இப்படிப்பட்ட ஆத்மாக்களின் கீர்த்தனை செய்வதால் அந்த பக்தர்களுக்கு அல்ப காலத்திற்கு தங்களது வரதானி ஆத்மாக்களின் மூலம் அஞ்சலி ரூபத்தில் அனுபவம் பிராப்தியாக கிடைத்து விடுகிறது. ஆக சிந்தித்துப் பாருங்கள், கீர்த்தனை செய்யக் கூடிய பக்த ஆத்மாக்களுக்கே இவ்வளவு அலௌகீக அனுபவம் ஏற்படும் பொழுது நீங்கள் நினைவு சொரூபமாக, வரதாதாவாக, விதாதாவாக இருக்கும் ஆத்மாக் களுக்கு நடைமுறை வாழ்க்கையில் எவ்வளவு அனுபவங்கள் கிடைத்திருக்கும். இந்த அனுபவங் களின் மூலம் சதா முன்னேறிக் கொண்டே செல்லுங்கள்.

ஒவ்வொரு அடியிலும் வித விதமாக நினைவு சொரூபத்தின் அனுபவம் செய்து கொண்டே செல்லுங்கள். நேரம் எப்படியோ, காரியங்கள் எப்படியோ அவ்வாறு சொரூபத்தின் நினைவு வெளிப் படையான ரூபத்தில் அனுபவம் செய்யுங்கள். எவ்வாறு அமிர்தவேளை நாளின் ஆரம்பமாகும் அவ்வமயம் தந்தையுடன் சந்திப்பு செய்து மாஸ்டர் வரதாதா ஆகி வரதாதாவிடமிருந்து வரதானம் அடையக் கூடிய சிரேஷ்ட ஆத்மா நான், பாக்கியவிதாதாவிடமிருந்து நேரடியாக பாக்கியத்தை பிராப்தியாக அடையக் கூடிய பத்மாபதம் பாக்கியசாலி ஆத்மாவாக இருக்கிறேன் இந்த சிரேஷ்ட சொரூபத்தை நினைவில் கொண்டு வாருங்கள். வரதானி நேரமாகும், வரதாதா, விதாதா கூடவே இருக்கின்றார். மாஸ்டர் வரதானி ஆகி சுயம் சம்பன்னமாக ஆகிக் கொண்டிருக்கிறீர்கள். மேலும் மற்ற ஆத்மாக்களுக்கும் வரதானம் கொடுக்கக் கூடிய வரதானி ஆத்மாக்களாக இருக்கிறீர்கள் இந்த நினைவு சொரூபத்தை வெளிப்படுத்துங்கள். இது இருக்கவே செய்கிறது என்று நினைக்காதீர்கள் ஆனால் வித விதமான நினைவு சொரூபத்தை நேரத்திற்கு தகுந்தாற் போன்று அனுபவம் செய்யும் பொழுது மிகவும் விசித்திரமான குஷி, விசித்திரமான பிராப்திகளின் பொக்கிஷங்களாக ஆகி விடு வீர்கள். மேலும் சதா உள்ளப்பூர்வமாக பிராப்திக்கான பாட்டு வார்த்தைகளால் கூற முடியாத அளவிற்கு தானாகவே வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் எதை அடைய வேண்டுமோ அதை அடைந்து விட்டேன். இதே போன்று நேரம் மற்றும்

காரியத்திற்கு தகுந்தாற் போன்று நினைவு சொரூபத்தின் அனுபவம் செய்து கொண்டே செல்லுங்கள். முரளி கேட்கின்றீர்கள் எனில் நான் இறை மாணவ வாழ்க்கை அதாவது பகவானின் மாணவன், பகவானே எனக்காக பரந்தாமத்திலிருந்து படிப்பு கற்பிக்க வந்திருக்கின்றார் என்ற நினைவு இருக்க வேண்டும். சுயம் பகவான் வருவதே விசேஷ பிராப்தியாகும். இந்த நினைவு சொரூபத்தின் மூலம் முரளி கேட்கும் போது எவ்வளவு போதை ஏற்படும்! சாதாரண முறையில், நியமப்படி கூறுபவர்கள் கூறிக் கொண்டிருக்கிறார்கள், கேட்பவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் எனில் அந்த அளவிற்கு போதையின் அனுபவம் இருக்காது ஆனால் நான் பகவானின் மாணவன் இந்த நினைவை நினைவில் கொண்டு வந்து கேளுங்கள், அப்பொழுது அலௌகீக போதையின் அனுபவம் ஏற்படும். புரிந்ததா?

நேரத்திற்கு தகுந்தாற் போன்று வித விதமான நினைவு சொரூபத்தை அனுபவம் செய்வதில் எவ்வளவு அனுபவம் ஏற்படும்! இவ்வாறு முழு நாளும் ஒவ்வொரு காரியமும் செய்யும் போது தந்தையின் துணையின் நினைவு சொரூபம் ஆகிக் கொண்டே செல்லுங்கள் சில நேரங்களில் பகவானின் நண்பன் மற்றும் துணைவன் ரூபத்தில், சில நேரங்களில் வாழ்க்கை துணை ரூபத்தில், சில நேரங்களில் பகவான் என்னுடைய செல்லக் குழந்தை அதாவது முதல் உரிமையாளர், வாரிசு குழந்தை என்ற ரூபத்தில். சில குழந்தைகள் மிக அழகாக மற்றும் மிகவும் தகுதியானவர்களாக இருக்கின்றார்கள் எனில் அந்த தாய், தந்தைக்கு என்னுடைய குழந்தை குல தீபமாக அல்லது குலத்தின் பெயரை வெளிப்படுத்தக் கூடியவர் என்ற போதை இருக்கும். பகவானே குழந்தையாக ஆகி விட்டால், அவரது பெயர் எவ்வளவு பிரபலமாகி விடும்! அவரது குலத்திற்கு எவ்வளவு நன்மைகள் ஏற்படும்! ஆக எப்பொழுது உலக சூழ்நிலைகள் அல்லது வித விதமான பிரச்சனைகளினால் நீங்கள் உங்களை தனிமையாக அல்லது உதாசீனமாக அனுபவம் செய்வீர்களோ, அப்பொழுது அழகான குழந்தையின் ரூபத்தில் விளையாடுங்கள், நண்பன் ரூபத்தில் விளையாடுங்கள். களைப்படைந்து விடுகிறீர்கள் எனில் தாய் ரூபத்தில் மடியில் உறங்கி விடுங்கள். மனம் உடைந்து விடுகிறீர்கள் எனில் சர்வ சக்திவான் சொரூபத்தின் மூலம் மாஸ்டர் சர்வசக்திவான் என்ற நினைவு சொரூபத்தின் அனுபவம் செய்யும் பொழுது மனம் உடைந்த நிலை மாறி மனம் மகிழ்ச்சி ஏற்பட்டு விடும். வித

விதமான நேரத்தில் வித விதமான சம்மந்தத்தின் மூலம், வித விதமான தனது சொரூபத்தின் நினைவை வெளிப்படையான ரூபத்தில் அனுபவம் செய்யம் போது தந்தையின் துணை சதா அனுபவம் செய்வீர்கள் மற்றும் இந்த சங்கமயுக பிராமண வாழ்க்கை சதா விலை மதிக்க முடியாதது என்ற அனுபவம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். மேலும் இந்த அளவிற்கு சர்வ சம்மந்தம் வைப்பதில் பிசியாக இருந்தீர்கள் எனில் மாயை வருவதற்கான நேரமும் இருக்காது. ஒரு பெரிய குடும்பத்தைச் சார்ந்தவர்கள் நாம் குடும்பத்தை கவனிப்பதில் அந்த அளவிற்கு பிசியாக இருப்பதால் மற்ற விசயங்கள் நினைவில் இருப்பது கிடையாது என்று கூறுவர். ஏனெனில் குடும்பம் மிகவும் பெரியது. பிரபுவின் மீது அன்பு செலுத்தக் கூடிய பிராமண ஆத்மாக்களாகிய உங்களது குடும்பம் எவ்வளவு பெரியது! பிரபுவின் அன்பான உங்களது குடும்பம் தூங்கும் போதும் இருக்கின்றது. யோக நித்திரையாக இருந்தது எனில் உங்களது தூக்கம், தூக்கம் இல்லை ஆனால் யோக நித்திரையாகும். தூக்கத்திலும் பிரபு சந்திப்பு செய்து கொண்டிருக்க முடியும். யோகா என்பதன் பொருள் சந்திப்பாகும். யோக நித்திரை என்றால் அசரீரி ஸ்திதிக்கான அனுபவமாகும். இதுவும் பிரபுவின் அன்பு அல்லவா! ஆக உங்களைப் போன்ற பெரியதிலும் பெரிய குடும்பம் வேறு யாருக்கும் கிடையாது. ஒரு விநாடி கூட உங்களுக்கு ஓய்வு கிடையாது. ஏனெனில் பக்தியில் பக்தர்களின் ரூபத்திலும் பாட்டு பாடி வந்தீர்கள் பிரபு, வெகு நாட்களுக்குப் பிறகு நீங்கள் கிடைத்திருக்கின்றீர்கள், எனவே ஒவ்வொரு விநாடிக்கான கணக்கையும் முழுமையாக எடுத்துக் கொள்வேன். ஒவ்வொரு விநாடியும் கணக்கு பார்க்கக் கூடியவர்கள். முழு கல்பத்திலும் சந்திப்பதற்கான கணக்கை இந்த சிறிய ஒரு பிறவியில் முழுமையாக்குகிறீர்கள். ஐயாயிரம் ஆண்டுகள் என்ற கணக்கில் இந்த சிறிய பிறவி என்பது சிறிது நாட்களுக்கான கணக்கு ஆகி விடுகிறது அல்லவா! எனவே குறுகிய நாட்களில் இந்த அளவிற்கு நீண்ட காலத்திற்கான கணக்கை முடித்து விட வேண்டும். அதனால் தான் சுவாசத்திற்கு சுவாசம் நினைவு செய்யுங்கள் என்று கூறுகின்றார். பக்தர்கள் கீர்த்தனை செய்கின்றனர், நீங்கள் நினைவு சொரூபமாக ஆகின்றீர்கள். ஆக உங்களுக்கு ஒரு விநாடியாவது ஓய்வு இருக்கிறதா? எவ்வளவு பெரிய குடும்பம் ஆகும். இந்த குடும்பத்திற்கு முன் அந்த சிறிய குடும்பம் ஈர்க்க முடியாது, மேலும் எளிதாக, தானாகவே தேக சகிதமாக தேக சம்மந்தங்கள் மற்றும் தேக பொருட்கள் அல்லது பிராப்திகளிலிருந்து நஷ்டமோகா, நினைவு

சொரூபமாக ஆகி விடுவீர்கள். இந்த கடைசி பேப்பர் தான் மாலையில் வரிசைக்கிரமம் மணிகளாக ஆக்குகிறது.

அமிர்தவேளையிலிருந்து யோக நித்திரை வரை வித விதமான நினைவு சொரூபத்தின் அனுபவி களாக ஆகி விடும் போது, வெகு கால நினைவு சொரூபத்தின் அனுபவம் கடைசியில் நினைவு சொரூபத்திற்கான கேள்வியில் நேர்மையுடன் தேர்ச்சியாளர்களாக ஆக்கி விடும். மிகவும் மகிழ்ச்சி கரமான வாழ்க்கையாக அனுபவம் செய்வீர்கள். ஏனெனில் வாழ்க்கையில் ஒவ்வொரு மனித ஆத்மாவும் விரும்புவது வெரைட்டி (பல விதங்கள்). ஆக முழு நாளும் இந்த வித விதமான சம்மந்தம், வித விதமான சொரூபத்தின் விதங்களை அனுபவம் செய்யுங்கள். உலகத்தினர்களும் கூறுகின்றனர் அல்லவா -தந்தை அவசியம் தான், ஆனால் தந்தையின் கூடவே வாழ்க்கை துணையின் அனுபவம் இல்லையெனில் வாழ்க்கை அரைகுறை என்று நினைக்கின்றனர். குழந்தை இல்லையென்றாலும் அரை குறை வாழ்க்கை என்று நினைக்கின்றனர். ஒவ்வொரு சம்மந்தமும் தான் முழுமையான வாழ்க்கை என்று நினைக்கின்றனர். ஆக இந்த பிராமண வாழ்க்கை பகவானுடன் சர்வ சம்மந்தத்தின் அனுபவம் செய்யக் கூடிய சம்பன்ன வாழ்க்கையாகும். ஒரு சம்மந்தத்திலும் குறை வைக்கக் கூடாது. பகவானிடத்தில் ஒரு சம்மந்தம் குறைந்தாலும், ஏதாவது ஒரு ஆத்மா அந்த சம்மந்தத்தில் தன் பக்கம் ஈர்த்து விடும். ஒரு சில குழந்தைகள் சில சமயம் சொல்கின்றனர். தந்தையின் ரூபத்தில் இருக்கின்றார், ஆனால் நண்பன் அல்லது தோழி இது சிறிய ரூபம் அல்லவா, அதற்கு ஆத்மாக்கள் தேவை. ஏனெனில் தந்தை உயர்ந்தவர் அல்லவா! ஆனால் பரமாத்மவின் சம்மந்தத்தின் நடுவில் எந்த ஒரு சிறிய அல்லது இலேசான ஆத்மாவின் சம்மந்தம் கலப்படமாகும் போது சர்வ என்ற சப்தம் சமாப்தி ஆகி விடுகிறது. மேலும் முடிந்த அளவு (யதா சக்தி) சக்திக் கேற்ப என்ற வரிசையில் வந்து விடுவர். பிராமணர்களின் மொழியில் ஒவ்வொரு விசயத்திலும் சர்வ என்ற வார்த்தை வருகின்றது. எங்கு சர்வ இருக்கின்றதோ, அங்கு தான் சம்பன்னமும் இருக்கும். ஒருவேளை இரண்டு கலைகள் குறைந்து விட்டாலும், இரண்டாவது மாலையின் மணிகளாக ஆகி விடுவீர்கள். ஆகையால் சர்வ சம்மந்தத்தின் சர்வ நினைவு சொரூபமாக ஆகுங்கள். புரிந்ததா? பகவான் சர்வ சம்பந்தத்தின் அனுபவம் செய்விப்பதற்கு முன்வரும் போது, வாய்ப்புகளை எடுத்துக்

கொள்ள வேண்டும் அல்லவா! இப்படிப்பட்ட தங்கமான வாய்ப்பு பகவானைத் தவிர மற்றும் இந்த நேரம் தவிர வேறு ஒருபோதும், வேறு யாரும் செய்ய முடியாது. யாராவது தந்தையாக ஆகி, குழந்தையாகவும் ஆக முடியுமா? இது ஒரே ஒருவரின் மகிமையாகும். ஒரே ஒருவரின் மகான் நிலையாகும். ஆகையால் சர்வ சம்மந்தத்தின் மூலம் நினைவு சொரூபமாக ஆக வேண்டும். இதில் மஜா இருக்கிறது தானே? பிராமண பிறவி எதற்காக எடுத்திருக்கிறீர்கள்? மஜாவுடன் இருப்பதற்கு மற்றும் மகிழ்ச்சியுடன் இருப்பதற்காக. ஆக இந்த அலௌகீக மகிழ்ச்சியை கொண்டாடுங்கள். மஜாவிற்கான வாழ்க்கையை அனுபவம் செய்யுங்கள். நல்லது.

(**அஹமதாபாத்தின் சகோதாரர் ஹன்ஸ்முக் சரீரம் விட்ட பிறகு பாப்தாதா கூறிய மகாவாக்கியங்கள்):** எந்தக் குழந்தை எந்த சம்ஸ்காரத்தோடு உடலை விட்டுப் போகிறதோ அவருடைய சடலமும் பாடையும் கூட அதே காரியத்தை தான் செய்கிறது. சேவையில் உற்சாகத்தில் இருப்பவர்கள் கடைசி வரை சேவை செய்து கொண்டிருப்பார்கள். அஞ்ஞானி மனிதர்கள் முழு வாழ்க்கையும் அழுது கொண்டிருந்தார்கள் என்றால் கடைசியில் இன்னும் அதிகமாக அழுவார்கள். இங்கு பிராமண வாழ்க்கையில் சேவையில் இருக்கிறார்கள் என்றால் கடைசி வரை சேவையின் சாதனமாகி விடுகிறார்கள். வித்தியாசம் இருக்கிறது அல்லவா? நீங்கள் அங்கு எந்த ஒரு சடலத்தையும், பாடையும் பாாக்கப்போவதில்லை. சேவை செய்வதற்காக சென்றீர்கள் இல்லையா? நான்கு புறமும் சேவையின் சூழ்நிலை இருந்தது அல்லவா! பிராமண வாழ்க்கையே சேவைக்காகத்தான் இருக்கிறது. எனவே ஒவ்வொரு விஷயத்திலும் உண்மையான பிராமண சேவாதாரியின் சேவை நடந்து கொண்டு இருக்கிறது. அந்த மாதிரியான ஆத்மாவை யாராவது நினைவு செய்தாலும் அவருடைய சேவை தான் முன்னால் வரும். மஞ்சுளாவோ (ஹன்ஸ்முக் சகோதரரின் யுகல்) சிவ சக்திதான். நல்லது.

**இன்று டெல்லி சபையினர் (தர்பார்) இருக்கின்றனர்**: இராஜ்ய சபையினர்களாக இருக்கிறீர்களா? அல்லது சபையை பார்க்கக் கூடியவர்களாக இருக்கிறீர்களா? சபையில் இராஜ்யம் செய்பவர்கள் மற்றும் பார்க்கக் கூடியவர்கள் இருவரும் அமர்ந்திருப்பர். நீங்கள்

அனைவரும் யார்? டெல்லியில் இரண்டு விசேஷதாக இருக்கிறது. ஒன்று டெல்லி திலாராமின் உள்ளம் ஆகும், மற்றொன்று இராஜ்ய சிம்மாசன இடமாகும். உள்ளம் எனில் உள்ளத்தில் யார் இருப்பார்கள்? திலாராம். ஆக டெல்லியில் வசிப்பவர்கள் என்றால் உள்ளத்தில் சதா திலாராமை வைத்திருப்பவர்கள். இவ்வாறு அனுபவி ஆத்மாக்கள் மற்றும் இப்பொழுதே சுய இராஜ்ய அதிகாரி மற்றும் எதிர்காலத்தில் விஸ்வ இராஜ்ய அதிகாரிகளாக இருக்கின்றனர். உள்ளத்தில் திலாராம் இருக்கின்றார் எனில் இராஜ்ய அதிகாரிகளாக இப்பொழுது இருக்கிறீர்கள் மற்றும் சதா இருப்பீர்கள். எனவே என் வாழ்க்கையில் இந்த இரண்டு விசேஷதா இருக்கின்றதா? என்று பாருங்கள். உள்ளத்தில் திலாராம், பிறகு அதிகாரி களாகவும் இருக்கிறீர்கள். இப்படிப்பட்ட தங்கமான வாய்ப்பு, தங்கத்தை விட வைர வாய்ப்பு எடுத்துக் கொள்பவர்கள் எவ்வளவு பாக்கியசாலிகள் ஆவர்! நல்லது.

உள்நாட்டில், அயல்நாட்டில் இப்போது எல்லையற்ற சேவைக்கான மிக நல்ல சாதனம் கிடைத்திருக்கிறது. பெயருக்கு ஏற்றாற் போன்று காரியமும் அழகாக இருக்கிறது. பெயர் கேட்டதும் அனைவருக் கும் ஆர்வம் ஏற்படுகின்றது அனைவரின் அன்பு மற்றும் சகயோகத்தின் மூலம் சுகமான உலகம். இது மிக நீண்ட காரியமாகும். ஒரு ஆண்டை விட அதிகம் இருக்கிறது. பெயர் கேட்டதும் எவ்வாறு அனைவருக்கும் ஆர்வம் ஏற்படுகிறதோ, அதே போன்று காரியமும் ஆர்வத்துடன் செய்யுங்கள். அழகான பெயரைக் கேட்டதும் மகிழ்ச்சியடைவது போன்று காரியங்கள் நிறைவடையும் போதும் மகிழ்ச்சி அடைவர். பிரத்யட்சதா என்ற திரை அசைவதற்கு அதாவது திரை விலக்க ஆதாரம் உருவாகியிருக்கிறது, மேலும் உருவாகிக் கொண்டிருக்கும் என்பதையும் கூறியிருக்கின்றார் அல்லவா! அனைவருக்கும் உதவி செய்பவர்கள் காரியத்தின் பெயர் எப்படியோ, அப்படியே சொரூபமாக ஆகி எளிதாக காரியங்கள் செய்து கொண்டிருந்தால் பெயரளவிற்கு உழைப்பு இருக்கும், ஆனால் வெற்றி பல மடங்கு அனுபவம் செய்வீர்கள். செய்விப்பவர் நிமித்தமாக்கி செய்வித்துக் கொண்டிருக்கின்றார் என்பதை அனுபவம் செய்வீர்கள். நான் செய்து கொண்டிருக்கின்றேன் இல்லை. இவ்வாறு இருப்பவர்கள் சகயோகிகளாக ஆக முடியாது. செய்விப்பவர் செய்வித்துக் கொண்டிருக்கின்றார், நடத்துபவர் காரியங்களை நடத்திக் கொண்டிருக்கின்றார். உங்கள் அனைவருக்கும் ஜெகதம்பாவின்

# 1987 அவ்யக்த முரளி

சுலோகன் நினைவில் இருக்கும் நடத்துபவர் நடத்திக் கொண்டிருக்கின்றார். இந்த சுலோகனை சதா நினைவு சொரூபத்தில் கொண்டு வரும் போது வெற்றி பிராப்தியாக கிடைத்துக் கொண்டிருக்கும். மற்றபடி நாலாபுறமும் ஆர்வம், உற்சாகம் நன்றாக இருக்கிறது. எங்கு ஆர்வம், உற்சாகம் இருக்கிறதோ, அங்கு சுயம் வெற்றி நெருக்கத்தில் வந்து கழுத்து மாலையாக ஆகி விடும். இந்த விசால காரியம் பல ஆத்மாக்களை சகயோகிகளாக ஆக்கி நெருக்கத்தில் கொண்டு வரும். ஏனெனில் பிரதட்சதா என்ற திரை விலகிய பின் இந்த விசால மேடையில் ஒவ்வொரு வர்கத்தைச் சார்ந்த நடிகர்கள் மேடையில் பிரத்யட்சம் ஆக வேண்டும். ஒவ்வொரு வர்க்கம் என்றால் உலகின் அனைத்து ஆத்மாக்கள் என்ற வெரைட்டி மரம் குழு ரூபத்தில் இருப்பது. நமக்கு செய்தி கிடைக்கவில்லை என்று எந்த ஒரு வர்க்கத்தினரும் புகார் கூறக் கூடாது. ஆகையால் தலைவர்களிலிருந்து குடிசையில் உள்ளவர்கள் வரை வர்க்கம் இருக்கிறது. அனைவரையும் விட நன்றாக படித்த மிக உயர்ந்த விஞ்ஞானிகள், பிறகு படிக்காதவர்கள் அவர்களுக்கும் இந்த ஞானம் கொடுக்க வேண்டும், இதுவும் சேவையாகும். ஆக அனைத்து வர்க்கம் என்றால் உலகின் ஒவ்வொரு ஆத்மாவிற்கும் செய்தி கொண்டு போய் சேர்ப்பதாகும். எவ்வளவு பெரிய காரியமாகும்! எனக்கு சேவைக்கான வாய்ப்பு கிடைக்கவில்லை என்று யாரும் கூற முடியாது. நோயாளியாக இருக்கிறீர்களா, நோயாளிகளுக்கு சேவை செய்யுங்கள். படிக்காதவர்கள் படிக்காதவர்களுக்கு சேவை செய்யுங்கள். எந்த சேவை செய்ய முடியுமோ வாய்ப்பு இருக்கிறது. நல்லது. வார்த்தைகளினால் கூற முடியவில்லை எனில் மனதின் வாயுமண்டலத்தின் மூலம் சுகமான மனோ பாவம் (எண்ணம்) சுகமான ஸ்திதியின் மூலம் சுகமான உலகை உருவாக்குங்கள். என்னால் செய்ய முடியாது, நேரம் கிடையாது என்ற யாரும் சாக்கு போக்கு கூற முடியாது. எழுந்தாலும் அமர்ந்தாலும் 10-10 நிமிடங்கள் சேவை செய்யுங்கள். விரல் கொடுப்பீர்கள் தானே? எங்கும் செல்ல முடியவில்லை, உடல் நிலை சரியில்லை எனில் வீட்டில் அமர்ந்து கொண்டே செய்யுங்கள் ஆனால் அவசியம் சகயோகிகளாக ஆக வேண்டும், அப்போது தான் அனைவரின் சகயோகமும் கிடைக்கும். நல்லது.

ஊக்கம் உற்சாகத்தை பார்த்து பாப்தாதாவும் குஷியடைகின்றார். இப்பொழுது பிரத்யட்சதா என்ற திரையை விலக்கி காண்பிக்க வேண்டும்

என்ற ஈடுபாடு அனைவரிடத்திலும் இருக்கிறது. ஆரம்பம் ஆகி விட்டது அல்லவா! பிறகு எளிதாகிக் கொண்டே செல்லும். அயல்நாட்டுக் குழந்தைகளின் திட்டங்களும் பாப்தாதாவிடம் வந்து சேர்கிறது. தானம் ஆர்வத்துடன் இருக்கின்றனர், மேலும் அனைவரின் சகயோகமும் ஆர்வம், உற்சாகத்துடன் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆர்வமுடை யவர்களுக்கு ஆர்வம், உற்சாகமுடையவர்களுக்கு உற்சாகம் கிடைக்கிறது. இந்த சந்திப்பும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ஆக மிகவும் விமரிசையாக இந்த காரியத்தில் முன்னேறுங்கள். எதுவெல்லாம் உருவாக்கியிருக்கிறீர்களோ, தந்தை மற்றும் அனைத்து பிராமணர்களின் சகயோகம், சுபவிருப்பம் சுபபாவனையின் மூலம் ஆர்வம், உற்சாகத்துடன் மேலும் முன்னேறிக் கொண்டே இருக்கும். நல்லது.

நாலாபுறமும் சதா நினைவு மற்றும் சேவையில் ஆர்வம், உற்சாகம் உடைய சிரேஷ்ட குழந்தைகளுக்கு, சதா ஒவ்வொரு காரியத்தில் நினைவு சொரூபத்தின் அனுபவம் செய்யக் கூடிய அனுபவி ஆத்மாக்களுக்கு, சதா ஒவ்வொரு காரியத்திலும் சர்வ சம்மந்தத்தின் அனுபவம் செய்யக் கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா பிராமண வாழ்க்கையை மஜா நிறைந்த வாழ்க்கையாக ஆக்கக் கூடிய மகான் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் மிக அன்பு நிறைந்த அன்பு நினைவுகளை சுவிகாரம் செய்யுங்கள்.

**வரதானம்: சங்கமயுகத்தில் ஒன்றுக்கு நூறு மடங்கு உடனடிப் பலன் பிராப்தியாக அடையக் கூடிய பத்மாபதம் பாக்கியசாலி ஆகுக!**

சங்கமயுகம் ஒன்றுக்கு நூறு மடங்கு உடனடிப் பலன் கொடுக்கக் கூடியது. ஒரே ஒரு முறை நான் பாபாவினுடையவன், நான் மாஸ்டர் சர்வசக்திவான் என்று சங்கல்பம் செய்தால் போதும், மாயாஜீத் ஆகக் கூடிய, வெற்றியாளர் ஆகக் கூடிய போதையின் அனுபவம் ஏற்படும். சிரேஷ்ட சங்கல்பம் செய்வது -இது தான் விதையாகும். மேலும் அதற்கான மிகப் பெரிய பலன் சுயம் பரமாத்மத் தந்தை சாகார மனித ரூபத்தில் சந்திக்க வருகின்றார். இந்த பலனில் அனைத்து பலன்களும் வந்து விடுகின்றன.

**சுலோகன்: யாருடைய முகம் மற்றும் நடத்தையில் தூய்மையின் அழகு மற்றும் ராயல்டியின் அனுபவம் ஆகிறதோ, அவர்கள் தான் உண்மையான பிராமணர்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 17.10.1987 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிராமண வாழ்க்கையின் அலங்காரம் – தூய்மை!

இன்று பாப்தாதா தங்களுடைய விஷ்வத்தின் நாலாபுறங்களிலும் இருக்கக்கூடிய விசேஷமான பூஜைக்குரியவர்களாக ஆகப்போகின்ற குழந்தைகளைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். முழு விஷ்வத்தில் எவ்வளவு குறைவானவர்கள் விலைமதிப்பற்ற இரத்தினங்களாக, பூஜைக்குரியவர்களாக ஆகியிருக்கின்றார்கள்! பூஜிக்கத்தக்க ஆத்மாக்களே உலகத்திற்கு விசேஷமாக ஒளியைக் கொடுக்கும் கண்மணிகள் ஆகின்றார்கள். எவ்வாறு இந்த சரீரத்தில் கண்மணி இல்லை என்றால் வெளிச்சம் இல்லையோ, அவ்வாறு விஷ்வத்தில் பூஜிக்கத்தக்க, உலகின் ஒளியான சிரேஷ்ட ஆத்மாக் களாகிய நீங்கள் இல்லாமல் விஷ்வத்திற்கும் மகத்துவம் இல்லை. தங்கயுகம் அல்லது ஆதியுகம் அல்லது சதோபிரதான யுகம், புதிய உலகம் விசேஷ ஆத்மாக்களாகிய உங்களுடன் தான் ஆரம்பம் ஆகின்றது. புதிய உலகத்தின் ஆதாரமூர்த்தி, பூஜிக்கத்தக்க ஆத்மாக்கள் நீங்கள் ஆவீர்கள். எனவே, ஆத்மாக்களாகிய உங்களுக்கு எவ்வளவு மகத்துவம் உள்ளது! பூஜைக்குரிய ஆத்மாக்களாகிய நீங்கள் உலகிற்கு புதிய வெளிச்சம் ஆவீர்கள். உங்களுடைய முன்னேற்றக் கலை உலகத்தை சிரேஷ்டமான கலையில் கொண்டு வருவதற்கு நிமித்தம் ஆகிறது. நீங்கள் இறங்கும் கலையில் வருகிறீர்கள் எனில், உலகிற்கும் இறங்கும் கலை ஏற்பட்டு விடுகிறது. நீங்கள் மாறுகின்றீர்கள் என்றால் உலகமும் மாறி விடுகிறது. அந்தளவு மகான் மற்றும் மகத்துவம் உடைய ஆத்மாக்கள் ஆவீர்கள்.

இன்று பாப்தாதா அனைத்து குழந்தைகளையும் பார்த்துக் கொண்டு இருந்தார்கள் பிராமணன் ஆகுவது என்றால் பூஜிக்கத்தக்கவராக ஆகுவது என்று அர்த்தம். ஏனெனில், பிராமணரிலிருந்து தேவதை ஆகின்றீர்கள், மேலும், தேவதைகள் என்றால் பூஜிக்கத்தக்கவர்கள். அனைத்து தேவதைகளும் பூஜிக்கத்தக்கவர்களே, ஆனாலும், அவசியம்

வரிசைக்கிரமமாக உள்ளனர். சில தேவதைகளுக்கு பூஜையானது முறைப்படி மற்றும் நியமப்படி நடக்கிறது மற்றும் சிலருடைய பூஜையானது முறைப்படி, நியமப்படி நடப்பதில்லை. சிலருடைய ஒவ்வொரு கர்மத்திற்கும் பூஜை நடக்கிறது மற்றும் சிலருடைய ஒவ்வொரு கர்மத்திற்கும் பூஜை நடப்பதில்லை. சிலருக்கு முறைப்படி ஒவ்வொரு தினமும் அலங்காரம் நடக்கிறது மற்றும் சிலருக்கு அலங்காரமானது தினமும் செய்யப்படுவதில்லை, மேலோட்டமாக கொஞ்சம் அலங்காரம் செய்கின்றார்கள், ஆனால், முறைப்படி செய்வதில்லை. சிலருக்கு முன் முழு நாளும் கீர்த்தனை பாடப்படுகிறது மற்றும் சிலருக்கு முன் அவ்வப்போது கீர்த்தனை பாடப்படுகிறது. இந்த அனைத்திற்குமான காரணம் என்ன? அனைவருமே பிராமணர்கள் என்று அழைக்கப்படுகின்றனர், ஞானம் யோகத்தின் படிப்பை அனைவரும்படிக்கின்றனர், ஆனாலும், இவ்வளவு வித்தியாசம் ஏன்? தாரணை செய்வதில் வித்தியாசம் உள்ளது. பிறகும் கூட விசேஷமாக எந்த தாரணைகளின் ஆதாரத்தில் வரிசைக்கிரமமாக ஆகின்றனர், அறிவீர்களா?

பூஜிக்கத்தக்கவராக ஆகுவதற்கான விசேஷ ஆதாரம் தூய்மை ஆகும். எந்தளவு அனைத்து விதமான தூய்மையை தனதாக்குகின்றார்களோ, அந்தளவே அனைத்து விதமான பூஜைக்குரிய வர்களாகவும் ஆகின்றனர். மேலும், யார் நிரந்தரமாக முறைப்படி ஆதி, அனாதி விசேஷ குணத்தின் ரூபத்தில் தூய்மையை சகஜமாக தனதாக்குகின்றார்களோ, அவர்களே முறைப்படியான பூஜைக்குரியவர்களாக ஆகின்றனர். அனைத்து விதமான தூய்மை என்றால் என்ன? ஆத்மாக்கள் சுலபமாக, தானாக ஒவ்வொரு எண்ணத்தில், பேச்சில், கர்மத்தில், ஞானி மற்றும் அஞ்ஞானி ஆத்மாக்கள் ஆகிய அனைவருடைய தொடர்பில், சதா தூய்மையான விருத்தி (உள்ளுணர்வு), திருஷ்டி, அதிர்வலைகள் (வைப்பிரேˆன்) மூலம் யதார்த்தமான தொடர்பு மற்றும் சம்பந்தத்தை பரிபாலனை செய்கின்றார்கள் எனில், இதையே அனைத்து விதமான தூய்மை என்று கூறப்படுகிறது. கனவிலும் கூட தனக்காகவோ அல்லது வேறு எந்த ஆத்மாவிற்காகவோ அனைத்து விதமான தூய்மையிலிருந்து எந்தவொரு குறைபாடும் இருக்கக் கூடாது. கனவில் கூட பிரம்மச்சரியம் துண்டிக்கப்படுகிறது அல்லது யாரோ ஒரு ஆத்மாவிற்காக ஏதோ ஒரு விதமான பொறாமை அல்லது ஆவேசத்திற்கு வசமாகி கர்மம்

செய்யப்பட்டுவிடுகிறது அல்லது பேச்சு வெளிப்பட்டுவிடுகிறது, நடத்தை கோபத்தின் அம்ச ரூபத்தில் இருக்கிறது என்றால் இது கூட தூய்மை துண்டிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படும். கனவினுடைய பிரபாவம் கூட ஏற்படுகிறது எனில் சாகாரத்தில் செய்யப்பட்ட கர்மத்தின் பிரபாவம் எவ்வளவு ஏற்படும், சிந்தியுங்கள். ஆகையினால், உடைந்த மூர்த்தி ஒருபொழுதும் பூஜைக்குரியதாக ஆவதில்லை. உடைந்த மூர்த்திகள் கோவில்களில் இருக்காது, தற்காலத்து அருங்காட்சியகங்களில் இருக்கின்றன. அங்கு பக்தர்கள் வரமாட்டார்கள். மிகப் பழமையான மூர்த்திகள் இருக்கின்றன என்ற இந்த மகிமை மட்டுமே இருக்கும், அவ்வளவுதான். அவர்கள் ஸ்தூல அவையங்கள் உடைந்திருக்கும் மூர்த்தியை உடைபட்ட மூர்த்தியாகக் கூறுகின்றனர், ஆனால், உண்மையில் ஏதாவது ஒருவித தூய்மையில் குறை இருக்கிறது எனில், அவர்கள் பூஜைக்குரிய பதவியில் இருந்து துண்டிக்கப்பட்டவர் ஆகி விடுகின்றனர். இவ்வாறு நான்கு விதமான தூய்மை முறைப்படி இருக்கிறது என்றால் பூஜையும் முறைப்படி நடக்கும்.

எண்ணம், சொல், செயல் (செயலில் சம்பந்தம், தொடர்பு வந்து விடுகிறது) மற்றும் கனவிலும் கூட தூய்மை இருக்க வேண்டும், இதையே சம்பூரணத் தூய்மை என்று சொல்லப்படுகிறது. சில குழந்தைகள் கவனக்குறைவில் வரும் காரணத்தினால் பெரியவர்களையோ அல்லது சிறியவர் களையோ, என்னுடைய உணர்வு மிகவும் நன்றாக உள்ளது ஆனால், வார்த்தை வெளிப்பட்டுவிட்டது, அல்லது எனது இலட்சியம் அப்படி இல்லை, ஆனால், நடந்து விட்டது, அல்லது விளையாட்டாக சொல்லிவிட்டேன் அல்லது செய்து விட்டேன் என்று கூறுகின்றார்கள். இந்த விசயத்தில் சமாளிப்பதற்கு முயற்சி செய்கின்றார்கள். இந்த கவனக்குறைவான நிலை சம்பூரண பூஜைக்குரிய நிலையை வரிசைக்கிரமத்தில் கொண்டு வந்து விடுகிறது. இது கூட தூய்மையற்ற நிலையின் கணக்கில் சேர்ந்து விடுகிறது. பூஜிக்கத்தக்க தூய்மையான ஆத்மாக்களின் அடையாளமாக அவர் களிடம் நான்கு விதமான தூய்மையும் இயல்பாக, சகஜமாக மற்றும் சதா இருக்கும் என்று சொல்லப் பட்டது அல்லவா. அவர்கள் சிந்திக்க வேண்டியதிருக்காது, ஆனால், தூய்மையின் தாரணையானது தானாகவே யதார்த்தமான (சரியான) எண்ணம், பேச்சு, கர்மம் மற்றும் கனவை வரவழைக்கிறது. யதார்த்தம் என்றால் ஒன்று யுக்தியுக்த் (ஞானம் நிறைந்த நிலை), இரண்டாவது

-யதார்த்தம் என்றால் ஒவ்வொரு எண்ணத்திலும் அர்த்தம் இருக்கும், அர்த்தமற்றதாக இருக்காது. அப்படியே பேசிவிட்டேன், வெளிப்பட்டுவிட்டது, செய்து விட்டேன், நடந்து விட்டது என்பது இருக்காது. அத்தகைய தூய்மையான ஆத்மா சதா ஒவ்வொரு கர்மத்தில் அதாவது தினச்சரியத்தில் யதார்த்தமாக யுக்தியுக்தாக இருப்பார்கள். ஆகையினால், பூஜை கூட அவர்களுடைய ஒவ்வொரு கர்மத்திற்கும் நடக்கிறது அதாவது முழு தினச்சரியத்திற்கும் (தினப்படி செயல்பாடு) நடக்கிறது. எழுந்ததில் இருந்து தூங்கும் வரை விதவிதமான கர்மத்தின் தரிசனம் நடைபெறுகிறது. ஒருவேளை, பிராமண வாழ்க்கையில் உருவாக்கப்பட்ட தினச்சரியத்தின் அனுசாரம் எந்தவொரு கர்மமும் யதார்த்தமாக மற்றும் நிரந்தர மாக செய்யவில்லை எனில், அதனுடைய வித்தியாசத்தின் காரணத்தினால் பூஜையிலும் கூட வித்தியாசம் ஏற்படும். உதாரணத்திற்கு, ஒருவர் அமிர்தவேளை எழுவதற்கான தினச்சரியத்தில் விதிப்பூர்வமாக நடக்கவில்லை எனில், பூஜையில் கூட அவருடைய பூஜாரியும் அந்த விதியில் முன்பின்னாக இருப்பார் அதாவது பூஜாரியும் சமயத்தில் எழுந்து பூஜை செய்யமாட்டார், எப்பொழுது வருகின்றாரோ அப்பொழுது செய்வார். அதாவது அமிர்தவேளை விழிப்பான நிலையில் அனுபவம் செய்யவில்லை, வலுக்கட்டாயமாக அல்லது சிலநேரம் சோம்பேறித்தனமாக, சில நேரம் சுறுசுறுப் பாக அமர்ந்தால் பூஜாரியும் கூட வலுக்கட்டாயமாக அல்லது சோம்பேறிதனத்துடன் பூஜை செய்வார், முறைப்படி பூஜை செய்யமாட்டார். இவ்வாறு ஒவ்வொரு தினப்படி கர்மத்தின் பிரபாவமானது பூஜிக்கத்தக்கவர் ஆகுவதில் ஏற்படுகிறது. முறைப்படி நடக்காதிருப்பது, ஏதாவது ஒரு தினச்சரியத் தில் ஏற்ற இறக்கமாகுவது என்பது கூட தூய்மையற்ற நிலையின் அம்சத்தில் கணக்கிடப்படுகிறது. ஏனெனில், அலட்சியம் மற்றும் சோம்பேறித்தனம் கூட விகாரம் ஆகும். எது யதார்த்த கர்மம் இல்லையோ, அது விகாரம் ஆகும். எனவே, தூய்மையற்ற நிலையின் அம்சம் ஆகி விட்டது அல்லவா. இந்தக் காரணத்தினால் பூஜ்ய பதவியில் வரிசைக்கிரமம் ஆகி விடுகிறது. எனவே, எது அஸ்திவாரமாக இருக்கிறது? தூய்மை.

தூய்மையின் தாரணையானது மிகவும் ஆழமானது ஆகும். தூய்மையின் ஆதாரத்தில தான் கர்மம் செய்வதற்கான விதி மற்றும் விளைவின் ஆதாரம் உள்ளது. தூய்மை மேலோட்டமாக கடைபிடிக்கக்கூடிய பெரிய

விசயம் மட்டும் அல்ல. பிரம்மச்சாரியாக இருப்பது அல்லது மோகமற்றவராக ஆகியிருப்பது -இதை மட்டும் தூய்மை என்று சொல்ல முடியாது. தூய்மை என்பது பிராமண வாழ்க்கையின் அலங்காரம் ஆகும். எனவே, ஒவ்வொரு நேரமும் முகம் மற்றும் நடத்தையின் மூலம் தூய்மையினுடைய அலங்காரத்தின் அனுபவம் பிறருக்கு ஏற்பட வேண்டும். பார்வையில், வாயில், கைகளில், பாதங்களில் சதா தூய்மையின் அலங்காரம் வெளிப்படையாகத் தெரிய வேண்டும். எவர் உங்கள் முகத்தைப் பார்த்தாலும் உங்கள் தோற்றத்தில் இருந்து அவர்களுக்கு தூய்மையின் அனுபவம் ஏற்பட வேண்டும். எவ்வாறு தேகத்தின் பிற அம்சங்களை வர்ணனை செய்கின்றார்களோ, அவ்வாறு, இவர்களுடைய தோற்றத்தில் தூய்மை தென்படுகிறது, கண்களில் தூய்மையின் ஒளி இருக்கிறது, வாயில் தூய்மையின் புன்சிரிப்பு இருக்கிறது என்ற வர்ணனை செய்ய வேண்டும். வேறு எந்த விசயமும் அவர்களுடைய பார்வைக்குத் தெரியவே கூடாது. இவர்களையே தூய்மை என்ற அலங்காரத்தால் அலங்கரிக்கப்பட்ட மூர்த்தி என்று சொல்லப்படுகிறது. புரிந்ததா? தூய்மையைப் பற்றி மேலும் ஆழமான விசயங்கள் உள்ளன. அதை பிறகு கூறிக் கொண்டே இருப்போம். எவ்வாறு கர்மங்களின் நிலையானது ஆழமானதோ, அதுபோல் தூய்மையின் விளக்கமும் (அர்த்தமும்) மிகவும் ஆழமானதாகும் மேலும், தூய்மையே அஸ்திவாரம் ஆகும். நல்லது.

இன்று குஜராத் மாநிலத்திலிருந்து வந்திருக்கின்றீர்கள். குஜராத்தைச் சேர்ந்தவர்கள் எப்பொழுதும் இலகுவானவர்களாகி ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் இருப்பார்கள். சரீரத்தால் எவ்வளவு தான் பருமனாக இருந்தாலும் இலகுவானவராகி நடனமாடுவார்கள். குஜராத்தின் விசேஷத் தன்மையே சதா இலகுவாக இருப்பது, சதா மகிழ்ச்சியில் நடனமாடிக் கொண்டிருப்பது மற்றும் தந்தையினுடைய அல்லது தன்னுடைய பிராப்திகளின் பாடலை பாடிக் கொண்டே இருப்பதாகும். குழந்தைப் பருவத்தில் இருந்தே நன்றாக ஆடவும் பாடவும் செய்வார்கள். பிராமண வாழ்க்கையில் என்ன செய்கின்றீர்கள்? பிராமண வாழ்க்கை என்றால் மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையாகும். கர்பா நடனம் ஆடும்போது மகிழ்ச்சியில் வந்து விடுகின்றீர்கள் அல்லவா. ஒருவேளை, மகிழ்ச்சி வரவில்லை என்றால் அதிகமாக ஆட முடியாது. மகிழ்ச்சி மற்றும் போதையில் இருக்கும்பொழுது களைப்பு ஏற்படுவதில்லை,

களைப்படையாதவர்கள் ஆகி விடுகின்றனர். எனவே, பிராமண வாழ்க்கை என்றால் சதா மகிழ்ச்சியில் இருப்பதற்கான வாழ்க்கை ஆகும். அது ஸ்தூல மகிழ்ச்சி மற்றும் பிராமண வாழ்க்கையில் மனதின் மகிழ்ச்சி உள்ளது. சதா மனமானது மகிழ்ச்சியில் நடனமாடிக் கொண்டும், பாடிக் கொண்டும் இருக்க வேண்டும். அந்த மக்கள் இலகுவானவராகி நடனமாடும், பாடும் பயிற்சி உடையவர்கள். ஆகையால், இவர்களுக்கு இந்த பிராமண வாழ்க்கையிலும் கூட டபுள் லைட்டாக (இலகுவாக) ஆகுவது கடினமாக இருப்பதில்லை. எனவே, குஜராத் என்றால் சதா இலகுவாக இருக்கும் பயிற்சி உடையவர்கள் என்றும் கூறலாம், வரதானி என்றும் கூறலாம். எனவே, முழு குஜராத்திற்கும் டபுள் லைட் என்ற வரதானம் கிடைத்து விட்டது. முரளி மூலம் கூட வரதானம் கிடைக்கிறது அல்லவா.

உங்களுடைய இந்த உலகத்தில் சக்திக்கேற்ப, சமயத்திற்கேற்ப என்பது உள்ளது என்று சொல்லப்பட்டது அல்லவா. யதா (எப்படி) மற்றும் ததா (அப்படி). மேலும், வதனத்திலோ யதா, ததா என்ற மொழியே கிடையாது. இங்கு பகல் இருப்பதால் இரவையும் பார்க்க வேண்டியதாக உள்ளது. அங்கே பகலும் இல்லை, இரவும் இல்லை, சூரியனும் உதயமாகுவதில்லை, சந்திரனும் உதயமாகு வதில்லை. இரண்டையும் கடந்த இடமாகும். வரவேண்டியதும் அங்கு தான் அல்லவா. எதுவரை? என்று குழந்தைகள் உரையாடலில் கேட்டீர்கள் அல்லவா. நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்று நீங்கள் அனைவரும் கூறினீர்கள் என்றால் இப்பொழுதே செய்து விடுவோம் என்று பாப்தாதா கூறுகின்றார்கள். பிறகு, எப்பொழுது என்பதற்கான கேள்வியே இல்லை. எதுவரை முழு மாலையும் தயாராகவில்லையோ, அதுவரை எப்பொழுது என்பது இருக்கும். இப்பொழுது பெயரை எடுப்பதற்கு அமர்கின்றீர்கள் என்றால் 108ல் கூட இந்தப் பெயரை எழுதலாமா வேண்டாமா என்று யோசிக்கின்றீர்களா? இப்பொழுது 108 மணிமாலையில் கூட அதே 108 பெயர்களை சொல்லலாமா? இல்லை, வித்தியாசம் ஏற்பட்டுவிடும். பாப்தாதா இப்பொழுது கை தட்டினால் உடனடியாக ஆரம்பம் ஆகி விடும் -ஒருபுறம் இயற்கை, இன்னொரு புறம் மனிதர்கள். தாமதமாகுமா என்ன? ஆனால், தந்தைக்கு அனைத்து குழந்தைகள் மீதும் அன்பு உள்ளது. கைபிடித்தால் தானே கூடவே செல்வீர்கள். கைக்குள் கை கோர்ப்பது என்றால் சமமானவர் ஆகுவது என்று அர்த்தம். அனைவரும் சமமாக

அதாவது அனைவரும் முதல் எண்ணில் வர மாட்டார்கள் என்று நீங்கள் கூறுவீர்கள் ஆனால், முதல் எண்ணிற்குப் பிறகு இரண்டாம் எண்ணும் இருக்கும். நல்லது. தந்தைக்கு சமமாக ஆகவில்லை, ஆனால், முதல் எண்ணில் இருக்கும் மணிக்கு சமமாக இருப்பார்கள். மூன்றாவது மணியோ இரண்டாவது மணிக்கு சமமாக இருக்க வேண்டும். நான்காவது மூன்றாவது மணிக்கு சமமாக இருக்க வேண்டும். இவ்வாறு சமம் ஆனால் ஒருவருக்கொருவர் சமீபத்தில் வர வர மாலை தயாராகி விடும். இத்தகைய நிலைவரை வர வேண்டும் அதாவது சமமாக ஆக வேண்டும். 108வது மணி 107வது மணியுடன் சந்திக்கும் அல்லவா. அவர்களிடம் உள்ளது போன்ற விசேஷத்தன்மை வந்து விட்டால் கூட மாலை தயாராகி விடும். வரிசைக்கிரமமாக ஆகத்தான் வேண்டும். புரிந்ததா? ஆம், நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்று இப்பொழுது உத்திரவாதம் கொடுக்கக் கூடியவர்கள் யாராவது இருக்கின்றீர்களா? என்று தந்தை கேட்கின்றார். பாப்தாதாவிற்கோ ஒரு விநாடி தான் ஆகும். கை தட்டியவுடன் தேவதைகள் வந்து விட்டனர் என்ற காட்சி காட்டப்பட்டது அல்லவா. நல்லது.

நாலாபுறங்களிலும் உள்ள பரம பூஜ்ய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, அனைத்து சம்பூரண தூய்மையின் இலட்சியம் வரை சென்றடைந்திருக்கக் கூடிய தீவிர புருஷார்த்தி ஆத்மாக்களுக்கு, சதா ஒவ்வொரு கர்மத்திலும் விதிப்பூர்வமாக கர்மம் செய்யக்கூடிய வெற்றி சொரூப ஆத்மாக்களுக்கு, சதா ஒவ்வொரு சமயமும் தூய்மையின் அலங்காரத்தில் அலங்கரிக்கப்பட்டிருக்கும் விசேˆ ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் சிநேகம் நிறைந்த அன்பு நினைவுகள் உரித்தாகுக.

**குழுவுடன் சந்திப்பு:** 1. விஷ்வத்தில் அனைவரையும் விட அதிக சிரேஷ்டமான பாக்கியவான் என்று தன்னை நினைக்கிறீர்களா? முழு உலகமும் நம்முடைய அதிர்ஷ்டம் திறக்கட்டும் என்று இந்த சிரேஷ்ட மான பாக்கியத்திற்காக அழைத்துக் கொண்டு இருக்கின்றார்கள். உங்களுடைய அதிர்ஷ்டமோ திறந்து விட்டது. இதைவிட பெரிய மகிழ்ச்சிக்கான விசயம் வேறு என்ன இருக்கும்! பாக்கியவிதாதாவே நம்முடைய தந்தை ஆவார் என்ற இந்த போதை உள்ளது அல்லவா. யாருடைய பெயரே பாக்கியவிதாதா என்று இருக்கிறதோ, அவருடைய பாக்கியம் என்னவாக இருக்கும்? இதைவிட பெரிய பாக்கியம் ஏதாவது இருக்க முடியுமா? பாக்கியமோ என்னுடைய பிறப்பதிகாரம் ஆகி விட்டது

என்ற இந்தக் குஷி சதா இருக்க வேண்டும். தந்தையிடம் என்னவெல்லாம் ஆஸ்தி உள்ளதோ, குழந்தைகள் அதனுடைய அதிகாரிகளாக இருப்பார்கள். எனில், பாக்கியவிதாதாவிடம் என்ன உள்ளது? பாக்கியத்தின் பொக்கிஷம். அந்த பொக்கிஷத்தின் மீது உங்களுக்கு அதிகாரம் கிடைத்து விட்டது. எனவே, எப்பொழுதும் ஆஹா! என்னுடைய பாக்கியம் மற்றும் பாக்கியவிதாதா பாபா என்ற இந்தப் பாடலைப் பாடி குஷியில் பறந்து கொண்டே இருங்கள். யாருக்கு இவ்வளவு சிரேஷ்டமான பாக்கியம் கிடைத்து விட்டதோ, அவர்களுக்கு வேறு என்ன வேண்டும்? பாக்கியத்தில் அனைத்தும் வந்து விட்டது. பாக்கியவானிடம் உடல், மனம், செல்வம், உறவினர்கள் ஆகிய அனைத்தும் இருக்கும். சிரேஷ்டமான பாக்கியம் என்றால் இல்லாத பொருள் என்று எந்தப் பொருளும் இருக்காது. ஏதாவது அபிராப்தி இருக்கிறதா? நல்ல வீடு வேண்டும், நல்ல கார் வேண்டும் இப்படி அல்ல. யாருக்கு மனதின் மகிழ்ச்சி கிடைத்து விட்டதோ, அவர்களுக்கு அனைத்து பிராப்திகளும் கிடைத்து விட்டன. கார் என்ன, ஆனால், அளவிட முடியாத பொக்கிஷம் கிடைத்து விட்டது. அபிராப்தியான பொருள் என்று எதுவுமே இருக்காது. அத்தகைய பாக்கியவான் ஆவீர்கள். அழியக்கூடிய ஆசை என்ன வைக்கப்போகிறீர்கள்? இன்று என்ன உள்ளதோ, அது நாளை இருப்பதே இல்லை -இதனுடைய ஆசை என்ன வைப்பீர்கள்? ஆகையால், சதா எந்த அழிவற்ற பொக்கிஷங்கள், இப்பொழுதும் உள்ளனவோ மற்றும் கூடவே வருமோ, அதன் குஷிகளில் இருங்கள். இந்தக் கட்டிடம், கார் மற்றும் பணம் உடன் வராது, ஆனால், இந்த அழிவற்ற பொக்கிஷமானது அனேக ஜென்மங்களுக்கு உடன் வரும். எவரும் பறிக்க முடியாது, எவரும் கொள்ளையடிக்க முடியாது. சுயம் தானும் அமரராகி விட்டீர்கள் மற்றும் பொக்கிஷங்களும் அழிவற்றதாகக் கிடைத்து விட்டன. ஜென்ம ஜென்மங்களுக்கு இந்த சிரேஷ்டமான பிராப்தி கூடவே இருக்கும். எவ்வளவு பெரிய பாக்கியம்! எங்கு எந்த ஆசையும் இல்லையோ, ஆசை என்றால் என்ன வென்று அறியாத நிலை உள்ளதோ, அத்தகைய சிரேஷ்டமான பாக்கியம் பாக்கியவிதாதா தந்தை மூலம் பிராப்தம் ஆகி விட்டது.

2. தங்களை தந்தைக்கு அருகாமையில் இருக்கக்கூடிய சிரேஷ்டமான ஆத்மாக்கள் என்ற அனுபவம் செய்கிறீர்களா? தந்தையினுடையவராக ஆகி விட்டோம் என்ற இந்த குஷி சதா உள்ளதா? துக்கத்தினுடைய

உலகத்தில் இருந்து விடுபட்டு சுகத்தின் உலகத்திற்கு வந்து விட்டீர்கள். உலகம் துக்கத்தில் கூச்சலிட்டுக் கொண்டு இருக்கின்றது ஆனால், நீங்கள் சுகமான உலகத்தில், சுகத்தின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டு இருக்கின்றீர்கள். எவ்வளவு வித்தியாசம் உள்ளது! உலகம் தேடிக் கொண்டு இருக்கிறது மற்றும் நீங்கள் சந்திப்பை கொண்டாடிக் கொண்டு இருக்கின்றீர்கள். எனவே, சதா தன்னுடைய அனைத்து பிராப்திகளையும் பார்த்து மகிழ்ச்சியாக இருங்கள். என்னென்ன கிடைத்துள்ளன, அதன் பட்டியல் போட்டீர்கள் என்றால் மிகவும் நீளமான பட்டியல் ஆகி விடும். என்னென்ன கிடைத்துள்ளன? உடலின் குஷி கிடைத்துள்ளது எனவே, உடலின் ஆராக்கியம் உள்ளது; மனதில் சாந்தி கிடைத்துள்ளது, சாந்தி மனதின் விசேஷத்தன்மை ஆகும் மற்றும் பணத்தில் அவ்வளவு சக்தி வந்து விட்டது. பருப்பு ரொட்டி கூட 36-வகையான உணவிற்கு சமமாக அனுபவம் ஆகிறது. ஈஸ்வரிய நினைவில் பருப்பு ரொட்டி கூட எவ்வளவு சிரேஷ்டமாகத் தோன்றுகிறது! உலகத்தினுடைய 36-வகையான உணவு உள்ளது மற்றும் உங்களுடைய பருப்பு ரொட்டி உள்ளது எனில், எது சிரேஷ்டமானதாகத் தோன்றும்? பருப்பு ரொட்டி நன்றாக உள்ளது அல்லவா, ஏனெனில், விருப்பமானதாக உள்ளது அல்லவா. எப்பொழுது உணவு தயாரிக்கின்றீர்களோ, அப்பொழுது நினைவில் இருந்து தயாராக்கின்றீர்கள், நினைவில் இருந்து சாப்பிடுகின்றீர்கள். எனவே, விருப்பமானதாக ஆகி விட்டது. விருப்பமானதற்கு மகத்துவம் உள்ளது. நீங்கள் அனைவரும் தினமும் பிரசாதம் சாப்பிடுகின்றீர்கள். பிரசாதத்தில் எவ்வளவு சக்தி இருக்கின்றது! எனவே, உடல், மனம், செல்வம் ஆகிய அனைத்திலும் சக்தி வந்து விட்டது. ஆகையினால், பிராமணர்களின் பொக்கிஷங்களில் அபிராப்தி எதுவும் இல்லை என்று கூறுகின்றீர்கள். எனவே, சதா இந்தப் பிராப்திகளை முன்னால் வைத்து குஷியாக இருங்கள், மகிழ்ச்சியாக இருங்கள். நல்லது.

**வரதானம்: கர்மத்தின் மூலம் குணங்களை தானம் செய்யக்கூடிய டபுள் லைட் ஃபரிஷ்தா ஆகுக!**

எந்தக் குழந்தைகள் கர்மத்தின் மூலம் குணங்களை தானம் செய்கின்றார்களோ, அவர்களுடைய நடத்தை மற்றும் முகம் ஆகிய இரண்டுமே ஃபரிஷ்தாக்களைப் போன்று தென்படும். அவர்கள் டபுள் லைட் அதாவது பிரகாசமயமாகவும் மற்றும் இலகுத்தன்மையையும்

அனுபவம் செய்வார்கள். அவர்களுக்கு எந்த சுமையின் உணர்வும் இருக்காது. ஒவ்வொரு கர்மத்திலும் உதவி கிடைக்கும் உணர்வு ஏற்படும். ஏதோ ஒரு சக்தி இயக்கிக் கொண்டிருப்பதாக உணர்வார்கள். ஒவ்வொரு கர்மத்தின் மூலம் மகாதானி ஆகும் காரணத்தினால் அவர்களுக்கு அனைவருடைய ஆசீர்வாதம் மற்றும் அனைவருடைய வரதானங்களும் கிடைப்பதாக அனுபவம் ஆகும்.

**சுலோகன்: சேவையில் வெற்றி நட்சத்திரம் ஆகுங்கள், பலவீனமானவர்களாக அல்ல!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 21.10.1987 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தீபராஜா மற்றும் தீபராணிகளின் கதை!

இன்று எல்லா சைதன்ய அவிநாசி தீபங்களுடைய எஜமானன் தீபராஜா தனது எல்லா தீபராணிகளை சந்திப்பதற்காக வந்துள்ளார். ஏனெனில் நீங்கள் அனைவரும் சங்கம யுகத்தின் ராணிகள், ஒரு தீபராஜா மீது அன்பு செலுத்துபவர்கள். தீபத்தின் விசேஷம் தீபத்தினுடைய அன்பின் மீது ஏற்படுகிறது. தீபராணிகள் நீங்கள் அனைவரும் தீபங்களின் ராஜாவிடம் அன்பில் மூழ்குகின்ற சிரேஷ்ட ஆத்மாக்கள் மற்றும் ஒரு ராம் தந்தையுடன் சதா கூடவே இருக்கக்கூடிய உண்மையான சீதைகள்! ஆதலால் தீபங்களின் எஜமானன் தீபராஜாவுடன் கூடவே தீபங்களுக்கும் மாலையின் ரூபத்தில் மகிமை செய்து கொண்டிருக்கின்றனர்; ஆனால் தீபமாலைக்கு முன்னால், முதலில் ஒரு தீபராஜாவை பெரிய தீபத்தில் ஏற்றுகின்றனர். ஒரு தீபத்தின் மூலம் நீங்கள் அநேக தீபங்களை ஏற்றுகிறீர்கள், எனில் இது உங்கள் அனைவருடைய நினைவுச்சின்னத்தை இன்று வரை கூட கொண்டாடிக் கொண்டுள்ளனர்.

தீபமாலையைப் பார்த்து மனதில் என்ன தோன்றுகிறது? இது எனது தீபத்தினுடைய நினைவுச்சின்னம் என்ற பேராவல் வருகிறதா? தீபம் ஒளிர்வதை மட்டும் பார்த்து விட்டு குஷி அடைகிறீர்களா அல்லது தனது நினைவுச்சின்னம் என புரிந்து கொண்டு குஷி அடைகிறீர்களா? தன்னை அதில் பார்க்கிறீர்களா? நானும் கூட தீபம் இந்த மாலையில் இருக்கிறேன் என்பது தெரியுமா? இந்த தீபமாலை மாலையின் ரூபத்தில் ஏன் காண்பிக்கின்றனர் என்பது தெரியுமா? தீப நாள் என கூறுவதில்லை, தீபமாலையின் நாள் என்று கூறுகிறார்கள்; ஏனென்றால் விசேஷ ஆத்மாக்கள் உங்கள் அனைவருடைய குழுவினுடைய நினைவுச்சின்னம் ஆகும். அநேக தீபங்கள் குழுவின் ரூபத்தில் இருக்கும்போதுதான் மாலை கோர்க்கப்படுகிறது. ஒருவேளை ஒன்று இரண்டு தீபங்கள் மட்டும் எரிந்து கொண்டிருந்தது எனில் மாலை என கூற மாட்டோம். எனில் தீபமாலை அவிநாசியான, அநேக தீபங்கள் ஏற்றப்பட்டதன் நினைவுச்சின்னம் ஆகும்.

எனில் தனது நாளை கொண்டாடிக் கொண்டு இருக்கிறீர்கள். ஒருபக்கம் சைதன்ய தீபங்களின் ரூபத்தில் ஜொலித்தபடியே உலகிற்கு திவ்ய பிரகாசத்தை அளிக்கிறீர்கள், மறுபக்கம் தனது நினைவுச்சின்னத்தையும் கூட பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். பார்த்து பார்த்து மகிழ்ச்சி அடைகிறீர்கள் தானே? இதை தீபங்களின் ரூபத்தில் ஏன் காட்டப்பட்டுள்ளது? ஏனெனில் ஜொலிக்கின்ற ஆத்மாக்கள் உங்களது தீபங்களின் அன்பின் உதாரணமாக காட்டியுள்ளனர், ஏனெனில் ஜொலிக்கின்ற ஆத்மாக்கள் தெய்வீக ஜோதியினுடைய நினைவுச்சின்ன ரூபமாகும். ஒருபுறம் நிராகாரி ஆத்மாவுடைய ரூபத்தின் நினைவுச்சின்னம், மறுபுறம் உங்களுடைய எதிர்கால சாகார திவ்ய சொரூபம் லக்ஷ்மியின் ரூபத்தில் நினைவுச்சின்னம். இந்த தீபமாலைதான் தேவ பதவி அடைகின்றது. ஆதலால் நிராகார் மற்றும் சாகார் -இரண்டு ரூபத்தின் கூடகூடவே நினைவுச்சின்னம் உள்ளது. எனவே இரட்டை ரூபத்தின் நினைவுச்சின்னம்தான் தீபமாலை!

லக்ஷ்மியின் நினைவுச்சின்னம் இரட்டை ரூபத்தில், ஒரு புறம் செல்வத்தின் தேவி அதாவது வள்ளலின் ரூபம் சங்கம யுகத்தின் நினைவுச்சின்னம் ஆகும், அவர் சதா செல்வம் அளித்துக் கொண்டே இருக்கின்றார். இந்த சங்கம யுகத்தில் அவிநாசி செல்வத்தின் தேவியின் ரூபத்தில் சித்திரங்களில் காட்டுகின்றனர். சங்கம யுகத்திலோ பெற்றுக் கொள்பவர் எவருமே இல்லாதபோது யாருக்குக் கொடுப்பார்? இது சங்கம யுகத்தினுடைய சிரேஷ்ட கர்மத்தின் அடையாளம் ஆகும். மேலும் மறு பக்கம், பட்டாபிஷேக (முடிசூட்டு விழா) தினத்தின் ரூபத்தில் கொண்டாடப்படுகிறது. பட்டாபிஷேகம் எதிர்காலத்தின் அடையாளம் மற்றும் செல்வத்தின் தேவி சங்கம யுகத்தின் வள்ளல் ரூபத்தின் அடையாளம் ஆகும். இரண்டு யுகத்தினுடையதையும் கலப்படம் செய்து விட்டனர். ஏனெனில் சங்கம யுகம் சிறிய யுகம் ஆனால் எந்தளவு சிறியதோ அந்தளவு மேன்மையானதாகும். எல்லா மேன்மையான கடமைகள், மேன்மையான ஸ்திதி, மேன்மையான பிராப்தி, மேன்மையான அனுபவம் இந்த சிறிய யுகத்தில் ஆகிறது. நிறைய பிராப்திகள், நிறைய அனுபவங்கள் ஆகின்றன மற்றும் சங்கம யுகத்திற்குப் பின் சத்யுகம் சீக்கிரமாக வந்து விடுகிறது; எனவே சங்கம யுகம் மற்றும் சத்யுகத்தின் சித்திரம் மற்றும் சரித்திரத்தை கலப்படம் செய்து விட்டனர். சித்திரம் சத்யுகத்தினுடையது, சரித்திரம் சங்கம

யுகத்தினுடையதைக் கொடுத்து விட்டனர். இதே போல் தீபமாலையும் உங்களுடைய இரட்டை ரூபம் தான், இரண்டு காலங்களின் நினைவுச்சின்னம் ஆகும். தீபமாலைக்கான முறையை வகுப்பதிலும், அவர்கள் தனித்தனியான முறைகளை கலந்து விட்டனர். ஒருபக்கம், பழைய கணக்கை முடித்து புதியதை ஆரம்பிக்கிறார்கள், மறுபக்கம் தீபமாலையில் புதிய ஆடையை விதிப்பூர்வமாக அணிகிறார்கள். எனில் பழைய கணக்கு வழக்கை முடிப்பது மற்றும் புதிய கணக்கை ஆரம்பிப்பது -இது சங்கம யுகத்தின் நினைவுச்சின்னம் ஆகும். பழையது அனைத்தும் மறந்து விட்டு, புதிய ஜென்மம், புதிய சம்பந்தம், புதிய கர்மம் -எல்லாவற்றையும் மாற்றம் செய்கிறீர்கள். புதிய ஆடை என்றால் புதிய சரீரம், சத்யுகத்தின் அடையாளம். சங்கம யுகத்தில் புதிய சரீரம் கிடைப்பதில்லை, பழைய ஆடையில்தான் இருக்கிறீர்கள். எனில் இரண்டு காலங்களின் முறைகளையும் கலந்து விட்டனர். பொன் ஆடை அதாவது சதோபிரதான சரீரத்தை எதிர்காலத்தில் தாரணை செய்வீர்கள். இப்போதோ ஒட்டுப் போட்ட சரீரம் உள்ளது. அறுவைச்சிகிச்சையில் தைக்கின்றனர் அல்லவா! பெரிய பெரிய அறுவைச்சிகிச்சையில் ஒரு பக்கம் சதையை எடுத்து இன்னொரு பக்கம் வைக்கின்றனர் எனில் ஒட்டுப் போட்ட மாதிரிதானே. பழையதின் அடையாளம் தையல் போட்டிருப்பது! என்றால் இதுவோ ஒட்டுப் போட்ட ஆடை மற்றும் எதிர்காலத்தில் புதிய பொன்னாடை கிடைக்கும், எனில் இது நீங்கள் புத்தாடை அணிவதன் நினைவுச்சின்னம் ஆகும். தேவ ஆத்மாக்கள் ஆகி புத்தாடை அதாவது புதிய சரீரம், பொன்னிறமானது, தங்கத்தைப் போல் இருக்கும்! இன்றைய உலகினத்தினர் இவ்வாறு ஆக முடியாது. ஆதலால் நினைவுச்சின்ன ரூபத்தில் ஸ்தூலத்தில் புத்தாடை அணிந்து மகிழ்கின்றனர். அவர்கள் ஒரு நாளுக்காக குஷியைக் கொண்டாடுகின்றனர், மூன்று நாட்கள் கூட கொண்டாடட்டும் ஆனால் நீங்களோ அழிவற்றதாகக் கொண்டாடுகிறீர்களா. அநேக ஜென்மங்களுக்குக் கொண்டாடிக் கொண்டே இருக்குமாறு அப்படி இந்த சங்கம யுகத்தில் கொண்டாடுகிறீர்கள். சதா ஜொலிக்கின்ற தீபத்தை ஒளிரச் செய்து கொண்டே இருப்பீர்கள். முதலில் இருந்தாலும் விதிப்பூர்வமாக தீபத்தை ஏற்றுவார்கள், அது அணையாமல் சதா எரிந்து கொண்டே இருக்க வேண்டும் என்பதில் கவனம் வைப்பார்கள். நெய் ஊற்றுவார்கள், விதிப்பூர்வமாக ஆவாஹனம் செய்வதில் ஈடுபட்டிருப்பார்கள். இப்போதோ தீபத்திற்குப் பதில் 'பல்ப்' (bulb) எரிய

விடுகின்றனர். தீபமாலையைக் கொண்டாடுவதில்லை, இப்போதோ பொழுதுபோக்கிற்காக என்றாகி விட்டதல்லவா! அந்த மாதிரி விதிப்பூர்வமாக அழைக்கின்ற பழக்கம் எல்லாம் முடிந்து விட்டது. அன்பு முடிந்து போய் சுயநலம் ஆகி விட்டது. பணம் அதிகம் சேர்க்க வேண்டும் -இந்த சுயநலத்துடன் செய்கிறார்கள். பாவனையுடன் அல்ல, ஆசையால் செய்கிறார்கள். ஆரம்பத்தில் பாவனை இருந்தது, இப்போது அந்த பாவனை ஆசையின் ரூபத்தில் மாறி விட்டது. ஆதலால் யதார்த்த வள்ளல் ரூபதாரி லக்ஷ்மி யாரிடமும் வருவதே இல்லை. பணம் வருகிறது என்றாலும்கூட கருப்புப் பணமும் வருகிறது. தெய்வீக செல்வம் வருவதில்லை, அசுர செல்வம் வருகிறது, ஆனால் நீங்கள் அனைவரும் சரியான விதி மூலம் தனது தெய்வீகப் பதவியை ஆவாஹணம் செய்து சுயம் தேவி தேவதா ஆகி விடுகிறீர்கள், எனில் தீபாவளி கொண்டாட வந்துள்ளீர்கள் தானே!

பாம்பேவிற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. பாப்தாதா பாம்பேவை நரதேசம் என்றே கூறுகிறார். தீபாவளியும் செல்வத்தின் தேவியின் நினைவுச்சின்னம்தானே. யாரைக் கொண்டாடுவது என சொல்வது, என்ன செய்யலாம்? மெழுகுவர்த்தி மட்டும் ஏற்றுவோமா, கேக் வெட்டலாமா, நடனமாடலாமா, பாடலாமா? இதுவோ பிராமண வாழ்க்கையின் அதிகாரம் -சதா ஆடுவது பாடுவது, சதா ஜோதியின் மூலம் ஜோதியை எழுப்புவது, ஆனால் சங்கம யுகத்தில் கொண்டாடுவது என்றால் தந்தைக்குச் சமமாக ஆவது. அப்போதுதானே மாலையில் அருகில் வர முடியும்! இதுவும் கூட சங்கம யுகத்தின் மனக்களிப்புதான். நன்றாகக் கொண்டாடுங்கள் ஆனால் தந்தையுடன் சந்திப்பை கொண்டாடிக் கொண்டே பொழுதுபோக்குங்கள். வெறுமனே மனக்களிப்பிற்கான ரூபத்தில் அல்ல ஆனால் மன்மனாபவ ஆகி கொண்டாடுங்கள் ஏனெனில் நீங்கள் அலௌகீகமானவர்களா? என்றால் அலௌகீக விதி மூலம் அலௌகீகத்தின் மனக்களிப்பு அழியாததாகி விடும். உங்கள் அனைவருக்கும் சங்கம யுகத்தின் தீபமாலையினுடைய விதி -பழைய கணக்கை முடிப்பது, ஒவ்வொரு சங்கல்பம், ஒவ்வொரு நேரம், ஒவ்வொரு கர்மம், ஒவ்வொரு வார்த்தை புதியது, அதாவது அலௌகீகமாக இருக்கட்டும் -இந்த விதியை பின்பற்றுவீர்களா? கொஞ்சம் கூட பழைய கணக்கு இருந்து விடக் கூடாது. அவ்வப்பொழுது எப்போது பலவீனம் வந்து விடுகிறதோ அப்போது என்ன கூறுகிறீர்கள்?

விரும்பவில்லைதான் ஆனால் பழைய சம்ஸ்காரம், பழைய சுபாவம் அல்லது பழக்கம், மெல்ல மெல்ல முடிவடைந்து விடும் என -இப்படிக் கூறுகிறீர்களா? எனில் பழைய கணக்கு எங்கிருந்து வந்தது? இதுவரையில் பாதுகாத்து வந்தீர்களா, என்ன? மூட்டை கட்டி வைத்திருந்தால் திருடன் எடுத்து சென்று விடுவான். பழைய கணக்கு ராவணனுடையது! புதிய கணக்கு பிரம்மாதந்தையுடையது அல்லது பிராமணர்களுடைய கணக்கு. ஒருவேளை கொஞ்சமாவது பழைய கணக்கு இருந்தது எனில் அது ராவணன் உடைய பொருள். தனது பொருளை உரிமையுடன் எடுத்துக் கொள்ள முடியும். ஆதலால் மாயா ராவணன் சுற்றிக் கொண்டே இருக்கிறான்; பொருளே இல்லை எனில் ராவணனும் வர மாட்டான்.

எப்படி யாரிடமாவது இரவல் வாங்குவது கடன் என்றாகி விடுகிறது எனில் என்ன செய்கிறார்கள்? அடிக்கடி சுற்றி வந்து கொண்டே இருப்பார்கள், விட மாட்டர்கள். எவ்வளவு தான் ஒத்திப் போட முயற்சித்தாலும் கடன்காரர் தனது கடனை கண்டிப்பாக தீர்க்காமல் விட மாட்டார். ஒருவேளை ஏதாவது பழைய கணக்கில் பழைய சமஸ்காரத்தை இப்போது முடிக்கவில்லை என்றால் இது ராவணனின் கடன் ஆகும். இந்த கடனை நோய் என்றும் கூறுவர். கூறுவார்கள், கடனைப் போன்று பெரிய நோய் எதுவுமில்லை என. எனில் இது ராவணனின் கடன் -பழைய சங்கல்பம், சம்ஸ்காரம், சுபாவம், பழைய நடத்தை -இந்தக் கடன்கள் உங்களை பலவீனமாக்கி விடும். பலவீனம்தான் நோய், நோயுற்றவராக்கி விடுகிறது. ஆதலால் இந்தக் கடனை ஒரு நொடியில் 'இது பழையது, வேறொருவருடையது' என்ற இந்த ஒரு திட சங்கல்பத்தின் மூலம் முடித்து விடுங்கள். இதை எரித்து விடுங்கள். வாணவேடிக்கை (பட்டாசு) கொளுத்துகின்றனர் அல்லவா. இந்நாட்களில் பட்டாசுகளில் 'பாம்ப்' (bombs) கூட தயாரிக்கிறார்கள். நீங்கள் திட சங்கல்பத்தின் தீக்குச்சி மூலம் ஆத்ம -பாம்ப்'பிற்கு நெருப்பு வையுங்கள் இதனால் இந்த எல்லா பழையதும் முடிந்து விடட்டும். அந்த மனிதர்கள் இழப்பார்கள் மற்றும் நீங்கள் சம்பாதிப்பீர்கள். அவர்கள் வாணவேடிக்கைகளில் பணத்தை இழக்கிறார்கள், நீங்களோ வாணவேடிக்கையால் சம்பாதிப்பீர்கள். சம்பாதிப்பதற்கான விளையாட்டு வரும்தானே? அது வாணவேடிக்கை மற்றும் உங்களுடையது பறக்கும் கலையின் விளையாட்டு. இதில் நீங்கள் வெற்றி அடைந்து கொண்டிருக்கிறீர்கள் எனில் இரட்டை லாபம்

அடையுங்கள். எரியுங்கள், சம்பாதியுங்கள் -இந்த விதியைப் பின்பற்றுங்கள், புரிந்ததா? விதியின் மூலம் வெற்றி கிடைக்கிறது. இது ஒரு விதி.

இன்னொரு விதி -தீபமாலையில் ஒவ்வொரு மூலையையும் சுத்தப்படுத்துகிறார்கள். நான்கு மூலையையும் சுத்தப்படுத்துகிறார்கள், இரண்டு அல்லது மூன்று மூலை மட்டும் அல்ல; ஏனென்றால் தூய்மைதான் மேன்மையானது! அவர்கள் ஸ்தூலமாக நான்கு மூலையிலும் சுத்தப்படுத்துகின்றனர், உங்களுடைய சுத்தம் எது? பவித்ரதா! நாலா விதமான தூய்மையும் இருக்கட்டும். முன்பொரு நாள் கூறினேன் தானே, அதே விதி மூலம் தெய்வீகப் பதவி அடைகிறீர்கள். ஒருவேளை ஏதாவது ஒரு தூய்மை இல்லையேல் சிரேஷ்ட தெய்வீகப் பதவியை அடைய முடியாது, உயர்ந்ததிலும் உயர்ந்தவராகும் ஆசை வைக்கிறீர்கள், அது பூர்ணமாக முடியாது. எனில் நாலா வித தூய்மை -இது தான் இரண்டாவது விதி. இதை பின்பற்றுவீர்களா? கேட்டீர்களா -கொண்டாடுவது என்றால் தந்தைக்குச் சமமாவது. பிரம்மாதந்தையைப் பாருங்கள், பழைய கணக்கை முடித்தார் அல்லவா, நாலா வித தூய்மையை ஒவ்வொரு கர்மத்திலும் பார்த்தீர்களா! பிரம்மா சான்றாகி காட்டினார், ஆதலால் நம்பர்-1 நல்ல புத்திரன் ஆனார் மற்றும் நம்பர்-1 பதவியும் அடைந்தார் என்றால் தந்தையைப் பின்பற்ற வேண்டும் அல்லவா! பிரம்மாதந்தை ஒரு நொடியில் சங்கல்பம் செய்தார், பழைய கணக்கு முடிந்தது. ஆகவேதான் தீபமாலையில் இந்த விதி பின்பற்றப்படுகிறது. தீபமாலையின் நாளில் பழைய கணக்கை முடித்து விட்டீர்களா, சமர்ப்பணம் செய்து விட்டீர்களா, பழையது அனைத்தும் ஸ்வாஹா ஆகி விட்டதா? திட சங்கல்பம் என்கிற தீக்குச்சி மூலம் எந்த பட்டாசைக் கொளுத்தினீர்கள்? பறக்கும் கலை விளையாட்டின் பந்தயம் வைத்தீர்களா? ஆதலால் இந்த தினத்தின் நினைவுச்சின்னமாகத் தொடர்கிறது. இந்த விதிகளைப் பின்பற்றுவது என்றால் தீபாவளியைக் கொண்டாடுவதாகும்.

எனில் தீபாவளி கொண்டாடினீர்களா அல்லது கொண்டாடுபவர்களைப் பார்த்து குஷி அடைந்தீர்களா? கொண்டாடுவது என்றால் ஆவது! பிரம்மாதந்தைக்குச் சமமாக ஆவது -இதுதான் தீபாவளியைக் கொண்டாடியதாகும். பாருங்கள் -ஒருபக்கம் பட்டாசு கொளுத்துவது,

இரண்டாவது பக்கம் தீபம் ஏற்றுவது, மூன்றாவது பக்கம் கொண்டாடுவது, இனிப்பு சாப்பிடுவது, புத்தாடை அணிவது மற்றும் நான்காவது பக்கம் சுத்தம் செய்வது! எனில் எரிக்கவும் வேண்டும், கொண்டாடவும் வேண்டும் மற்றும் சுத்தம் செய்யவும் வேண்டும். நான்கு விதமாக செய்ய வேண்டும். செய்வது என்றால் செயலில் காட்டுவது. நான்கு விதமான தீபமாலை ஆனது தானே! அப்படியில்லை செய்ய வருகிறது, கொண்டாட வருகிறது ஆனால் எரிக்க வரவில்லை, சுத்தம் செய்ய வரவில்லை என்பது. இல்லை, நான்கு விஷயங்களிலும் தந்தைக்குச் சமம் ஆக வேண்டும்! புரிந்ததா, தீபாவளியின் அர்த்தம் என்ன என்பது? தீபராணிகள் மற்றும் தீபராஜாவின் கதை இதுதான்! சங்கம யுகத்தில் தான் ராணி ஆகியுள்ளீர்கள் அல்லவா? எல்லையற்ற ராஜாக்களுக்கெல்லாம் ராஜாவுடைய ராணிகள் ஆவீர்கள்! சத்யுகத்தில் நீங்கள் தேவராணிகள் ஆனால் இப்போது பரமாத்ம-ராணிகள். ஆதலால் பட்டத்து ராணிகளைக் காட்டியுள்ளனர். கிருஷ்ணனுக்கு மட்டும், சின்னக் குழந்தைக்கு ராணிகளைக் காட்டியுள்ளனர். கிருஷ்ணனை குழந்தையின் ரூபத்திலும் காட்டுகின்றனர், பின்பு ராணிகளையும் காட்டுகின்றனர். கலப்படம் செய்து விட்டனர். இந்த ராஜாக்களுக்கெல்லாம் ராஜா ஆகக்கூடியவரின் ராணிகள். ராணிகளாகட்டும், சீதைகளாகட்டும், இதுவும் மந்திரம்! இப்போது நீங்கள் சகோதரர் -சகோதரர் என்று சொல்கிறீர்கள் என்றால் நிச்சயம் உங்களை சகோதரர் என்றுதானே கூறுவீர்கள். பின்னர் மறுபக்கம் அனைவருமே சீதைகள் என்றால், ராம் ஒருவரும் இல்லையா. இதுவும் மந்திரம், இதில் தான் வேடிக்கையே உள்ளது. உடனடியாக சகோதரன்-சகோதரி ஆகி விடுங்கள், உடனடியாக சீதை ஆகி விடுங்கள், இப்போது பரிஷ்தா ஆகி விடுங்கள். இந்த ஆன்மீக மந்திரம் மிகவும் மனமகிழ்விற்கானதாகும். மந்திரத்திற்குப் பயப்படுவதில்லைதானே. சுயம் மந்திரவாதி ஆகி விட்டீர்கள்!

தீபாவளி, தீபமாலையின் அவிநாசி வாழ்த்துக்கள்! அவர்களோ ஒரு நாளைக்காகக் கூறுகின்றனர் -'ஹேப்பி தீபாவளி' மற்றும் பாப்தாதா கூறுகின்றார் அவிநாசி, ஹோலி, ஹேப்பி, ஹெல்தி, தீபாவளி! எல்லாமே தேவைதானே. சதா எரிந்து கொண்டிருக்கும் தீபங்களாக இருக்கிறீர்கள். சதா வாய் இனிமையாக உள்ளது. அனைத்தையும் விட சிறந்ததிலும் சிறந்த மிட்டாய் கிடைக்கிறது அதனால் வாய் சதா இனிப்பாக உள்ளது. அது என்ன மிட்டாய்? 'பாபா' -இதுதான் தில்குஷ் மிட்டாய்! இந்த

மிட்டாயோ சதா சாப்பிட்டுக் கொண்டே இருக்கிறீர்கள்; சகஜமான மிட்டாய், செய்யவும் கடினமில்லை. மிட்டாயும் சாப்பிட்டீர்கள், மிலனும் கொண்டாடினீர்கள். உள்நாட்டில் வெளிநாட்டில் இருக்கும் குழந்தைகள் ஆகாரி பரிஷ்தா ரூபத்தில் மதுபன் வந்தடைந்து விட்டீர்கள். எல்லோருடைய மனதும் இங்குள்ளது மற்றும் உடல் சேவையில் உள்ளது. பாப்தாதா இந்த சபையை மட்டும் பார்க்கவில்லை ஆனால் நாலா புறமும் உள்ள பரிஷ்தா ரூபதாரி குழந்தைகளுடன் சந்திப்பைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார். எல்லோரும் ஊக்கம் உற்சாகத்துடன் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். எல்லோருடைய மனதிலும் ஒரே நினைவு தான் உள்ளடங்கி உள்ளது. எல்லோருடைய வாயிலும் இந்த அவிநாசி மிட்டாய்தான் உள்ளது. தீபங்களின் மாலை எவ்வளவு பெரியதாக இருக்கிறது. நாலா புறமும் ஜொலித்துக் கொண்டிருக்கும் தீபங்கள், மாலையின் ரூபத்தில் தந்தையின் முன்னால் உள்ளன மற்றும் ஒவ்வொரு தீபத்தையும் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சி அடைகிறார் மேலும் வாழ்த்துக்களையும் அளிக்கின்றார். புரிந்ததா?

நாலா புறமும் உள்ள தீபராணிகளுக்கு, நாலா புறமும் உள்ள ஜொலித்துக் கொண்டிருக்கும் உலகிற்கு அவிநாசி பிரகாசத்தைத் தரக்கூடிய விசேஷ ஆத்மாக்களுக்கு, நாலா புறமும் உள்ள பாப்தாதாவிற்குச் சமமாக ஆகக்கூடிய, தீபமாலையைக் கொண்டாடக்கூடிய அனைத்து மகான் ஆத்மாக்களுக்கும் பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் பல மடங்கு வாழ்த்துக்கள்!

**மதுபன் நிவாசிகளுடன்:** பாண்டவர்களின் விசேஷம் என்ன? பாண்டவர்கள் யக்ஞ சேவையின் சகயோகிகள். யக்ஞ சேவையின் சகயோகத்தால் சதா சகயோகம் பெறுவதற்குத் தகுதியானவராகிறீர்கள். யார் எந்தளவு உண்மையான மனதுடன், சிநேகத்துடன் சகயோகம் செய்கிறார்களோ, அந்தளவு கோடி மடங்கு தந்தையிடமிருந்து உதவி பெற அதிகாரி ஆகிறார்கள். தந்தை சகயோகத்தின் கணக்கை முழுவதுமாக முடிக்கிறார். பெரிய காரியத்தையும் கூட சகஜமாக்குவதற்காக படத்தில் மலையைக் காட்டுகிறார்கள். (ஒரு விரல் தந்தனர்!). எனில் பாண்டவர்கள் விசேஷ சேவையின் சகயோகி ஆகி எந்த ஒரு காரியத்தையும் சகஜமாக செய்து விடுகின்றனர். எந்தக் காரியத்தை மனிதர்கள் கடினம் என நினைக்கிறார்களோ, அதை சகஜமாகவே விளையாட்டு போல செய்து

விடுகிறீர்களா? சேவை என நினைப்பதில்லை, கடமை என நினைப்பதில்லை ஆனால் ஆன்மீக விளையாட்டின் அனுபவம் செய்கிறீர்கள். விளையாட யாரைக் கூப்பிட்டாலும் வரமாட்டேன் என சொல்வதில்லை மற்றும் ஒருபோதும் களைப்படைவதுமில்லை. எனில் நீங்கள் அனைவருமே யக்ஞ சேவையில் களைப்படைவதில்லைதானே. ஆன்மீக விளையாட்டு ஆதலால் களைப்படைவதில்லை மற்றும் முடியாது என சொல்ல விரும்பினாலும் கூட சொல்ல முடிவதில்லை ஏனெனில் ஈஸ்வரிய பந்தனத்தால் கட்டப்பட்டுள்ளீர்கள். இந்த பந்தனம்தான் சம்பந்தத்தின் அருகில் கொண்டு வரக்கூடியது. யார் எந்தளவு சேவை செய்கிறார்களோ அந்தளவு சேவையின் பலன் -சமீப சம்பந்தத்தில் வருகிறார். இங்குள்ள சேவாதாரி அங்குள்ள ராஜ்ய குடும்பத்தின் அதிகாரி ஆவார். இங்கு எந்தளவு கடின சேவை செய்கிறாரோ அந்தளவு அங்கு ஓய்வின் சிம்மாசனம் மீது அமருவார் மற்றும் இங்கு ஓய்வாக இருந்தால் அங்கு உழைக்க வேண்டி வரும், கணக்குள்ளதல்லவா! ஒவ்வொரு நொடியின், ஒவ்வொரு வேலையின் கணக்கு வழக்கு தந்தையிடம் உள்ளது. எனவே ஒவ்வொரு நொடியின் கணக்கைப் பார்த்து முடிக்கவும் செய்கிறார். எந்தளவு செய்தோமோ அதற்குண்டான கணக்கைத் தருகிறாரா, அப்படி கொடுப்பதில்லை ஆனால் பல மடங்கு தருகிறார். எனில் இன்றைய சேவாதாரி நாளைய ராஜ்ய அதிகாரி ஆகிறார் மற்றும் இன்று ராஜ்யம் செய்பவர் நாளை சேவாதாரி ஆகிறார். சேவை பாவனை சதா உயர தூக்குகிறது. பெயரோ சேவை ஆனால் சேவாதாரியின் கணக்கு சதா பலன்தான். எனில் பலன் அனுபவிக்கும் சேவாதாரி, அந்த மாதிரி சேவாதாரி இல்லை. ஒன்றைக் கொடுத்து, பல மடங்கு பெறுவது என்பது பாண்டவர்களின் மகிமை. சேவை செய்வதில் மிக்க உறுதியாக இருக்கிறீர்கள், ஆதலால் அவர்கள் உறுதியான உடலைக் காண்பிக்கிறார்கள் ஆனால் நீங்களோ உறுதியான இதயம் உள்ளவர்கள், உறுதியான மனம் உள்ளவர்கள். அந்த மனதை, இதயத்தை எப்படிக் காட்ட முடியும், ஆதலால் உடலைக் காட்டுகின்றனர். குஷியின் சத்துணவு நிறைய சாப்பிடுகிறீர்கள் ஆதலால் குண்டாக காட்டுகின்றனர்.

**சகோதரிகளுடன்:** ஒவ்வொரு காரியமும் மதுபனில் மதுபனின் தந்தையுடன் செய்யக்கூடிய இத்தகைய சிரேஷ்ட பாக்கியம் வேறு யாருக்காவது கிடைக்குமா? மதுபனில் நாலா புறமும் தந்தையே தந்தைதான் இருக்கிறாரல்லவா! எனில் மதுபன்வாசிகளின் விசேஷம்

-சதா ஒவ்வொரு செயலையும் தந்தையுடன் இருக்கும் அனுபவம் செய்பவர்கள். யார் ஒவ்வொரு செயலையும் தந்தையுடனே செய்கிறார்களோ அவரது ஒவ்வொரு செயலும் சிரேஷ்டமாகும்தானே. எனில் சிரேஷ்ட கர்மம் செய்யக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களாவீர்கள். சதா இதே அனுபவத்தில் செல்லக்கூடியவர்கள்தான் மதுபன் வாசிகள் எனப்படுவர். எப்போது இந்த அனுபவம் ஏற்படவில்லையோ அப்போது மதுபன்வாசி இல்லை. அந்த நேரம் மதுபனில் இருந்தபோதும் மதுபன்வாசி இல்லை மற்றும் யார் தூரத்திலிருந்தாலும் ஒவ்வொரு செயலும் தந்தையுடன் கூடவே செய்கிறாரோ, அவர் தூரத்திலிருந்தாலும் மதுபன்வாசிதான். மதுபன்வாசிகள் ஒவ்வொரு நடத்தையிலும் உடன் செல்லக்கூடியவர்கள். பாகவதம் மதுபனின் நினைவுச்சின்னம், மதுபனில் தந்தையுடன் எல்லா நடத்தையுடையவர்களின் கதை! அத்தகைய சிரேஷ்ட ஆத்மாக்களைப் பார்த்து எல்லோரும் குஷி அடைகின்றனர். தீபாவளி வாழ்த்துக்கள்!

**விடைபெறும் நேரம்:** பாப்தாதா குழந்தைகளுடைய மகிழ்ச்சியைக் கொண்டாடுகிறார். ஆதலால் மெழுகுவர்த்தி ஏற்றுங்கள் அல்லது கேக் வெட்டுங்கள், என்ன செய்யணுமோ அதைச் செய்யுங்கள். பிராமணர்களைப் போல உற்சவங்களை தேவதைகளால்கூட கொண்டாட முடியாது ஏனெனில் தந்தையுடன் கூடவே கொண்டாடுகிறீர்கள். அதுவோ ஆத்மாக்கள் ஆத்மாக்களுடன் கொண்டாடுவர்; எனில் ஏன் ஆனந்தமாகக் கொண்டாடக்கூடாது. குழப்பத்தில் கொண்டாடக்கூடாது. இந்த அனைத்து படைப்புகளும் சந்தோஷத்தை அனுபவிப்பதற்காகத்தான்! சாப்பிடுங்கள் -குடியுங்கள் சந்தோஷமாய் இருங்கள். சந்தோஷமாய் இருக்கத்தான் வந்திருக்கிறீர்கள். சந்தோஷத்தினால் பலனும் அடைவீர்கள். ஞானத்தைக் கேட்டீர்கள் மற்றும் பிறந்துள்ளீர்கள் எனில் சந்தோஷத்தின் மூலம் பிறந்துள்ளீர்கள் மற்றும் சந்தோஷத்திற்காகவே பிறந்துள்ளீர்கள். சந்தோஷமாகச் செல்வீர்கள், தந்தையுன் கூடவே செல்வீர்கள். ஆதலால் குழந்தைகள் கொண்டாடும்போது பாப்தாதா குஷி அடைகிறார். மனிதர்கள் சந்தோஷத்தின் படைப்பிலேயே மூழ்கி விடுகின்றனர். இந்த இயற்கையும் ஆனந்தம் அனுபவிக்கத்தான் ஆனால் மனித ஆத்மாக்களின் வைப்ரேஷன் வாயுமண்டலத்தைக் கெடுத்து விடுகிறது. வாயுமண்டலத்தின் பிரபாவம் இயற்கை மீது படுகிறது மற்றும் இயற்கையும் குழப்பம் செய்விக்கும் வேலை செய்கிறது. மழை கூட

நிகழ்ச்சிகளைக் கெடுத்து விடுகிறதல்லவா. இயற்கை அதன் பிடிவாதத்தில் உள்ளது, நீங்கள் கொண்டாடுவதில் பிடிவாதமாக இருக்கிறீர்கள். நீங்கள் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள், அது குழம்பிக் கொண்டிருக்கிறது. அது குழம்பட்டும் ஆனால் நீங்கள் நிறுத்தக்கூடியவர்களா, என்ன? இல்லை. அங்கதன் ஆவீர்கள். தண்ணீரில்லை அது, அன்பின் நீர்! ஆதலால் இயற்கையும் கூட பார்க்கிறது, பிரபுவின் குழந்தைகள் இவர்கள் ஒன்றும் குறைந்தவர்களில்லை என்று! நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 25.10.1987 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நான்கு விஷயங்களிலிருந்து விடுபட்டு இருங்கள்!

இன்று பாப்தாதா தனது அனைத்து தாமரை மலரில் அமர்ந்திருக்கும் (கமல ஆசனம்) சிரேஷ்ட மான குழந்தைகளை பார்த்துக் கொண்டிருக்கிறார். தாமரை மலரில் ஆசனம் தான் பிராமண ஆத்மாக்களின் சிரேஷ்ட மனநிலையின் அடையாளமாக இருக்கிறது. ஆசனம் நிலையாக இருப் பதற்கான (அமருவதற்கான) சாதனமாகும். பிராமண ஆத்மாக்கள் பற்றற்ற மனநிலையில் நிலைத் திருக்கிறார்கள், ஆகையால் தாமரை மலரில் வீற்றிருப்பவர் என்று கூறப் படுகிறது. பிராமண நிலையிலிருந்து தேவதை ஆகிறார்களோ, அதேபோன்று ஆசனதாரியாக இருக்கும் (பற்றற்ற) நிலையிலிருந்து சிம்மாசனதாரியாக ஆகிறார்கள். அந்தளவு தான் வெகுகாலமாக அல்லது குறுகிய காலத்திற்கு இராஜ்ய சிம்மாசனதாரி ஆகிறார்கள். தாமரை மலரின் ஆசனம் விசேˆமாக பிரம்மாபாபாவிற்கு சமமாக மிகவும் விடுபட்ட மற்றும் மிகவும் அன்பான மனநிலையின் சின்னமாக (அடையாளமாக) இருக்கிறது பிராமண குழந்தைகளாகிய நீங்கள் தந்தையை பின்பற்றக் கூடியவர்களாக இருக்கிறீர்கள், ஆகையால் பாபாவிற்கு சமமாக தாமரை மலரில் விற்றிருக்கக் கூடியவர்களாக இருக்கிறீர்கள். மிகவும் தனித்துவமானவர்களின் (விடுபட்டவர்கள்) அடையாளம் -அவர்கள் பாபா மற்றும் குடும்பத்திலுள்ள அனைவருக்கும் மிகவும் அன்பானவர்களாக இருப்பார்கள். தனித்துவமானவர்களின் அடையாளம் நாலாப்புறத்திலிருந்தும் விடுபட்டவர்கள்.

1. தனது தேக உணர்விலிருந்து விடுபடுதல் -சாதாரண உலகிய ஆத்மாக்களுக்கு நடந்தாலும், சுற்றினாலும், எந்த காரியம் செய்துக் கொண்டிருந்தாலும் இயல்பாகவே மற்றும் எப்பொழுதுமே தேக உணர்வு இருந்துக் கொண்டே தான் இருக்கிறது. நான் உடல் என்பது முயற்சி செய்யாமலே வந்து விடுகிறது, விரும்பவில்லையென்றாலும் கூட

எளிதாகவே தேகத்தின் நினைவில் இருக்கிறோம். அஞ்ஞானி ஆத்மாக்கள் ஆத்ம அபிமானத் திலிருந்து விடுப்பட்டு இருப்பதை போன்று, தாமரை மலரின் ஆசனதாரியான பிராமண ஆத்மாக்கள் கூட இந்த தேக உணர்விலி ருந்து இயல்பாகவே விடுபட்டிருங்கள். ஆத்ம அபிமானியாகவே இருங்கள், சரீரத்தின் உணர்வு தனது பக்கம் ஈர்க்கவே கூடாது. பிரம்மாபாபாவை பாருங்கள், எந்த காரியம் செய்துக் கொண்டி ருந்தாலும் ஃபரிஸ்தா சொரூபத்தில் மற்றும் தேவதை சொரூபத்தில் இயல்பாகவே நினைவில் இருக்கிறது. இயற்கையாகவே ஆத்ம அபிமான நிலையில் சதா நிலைத்திருங்கள்., இதற்கு தான் தேக அபிமானத்திலிருந்து விடுபட்ட நிலை. என்று சொல்லப் படுகிறது. தேக உணர்விலிருந்து விடுபட்டிருப்பது தான் பரமாத்மாவிற்கு அன்பானவர் ஆவது.

2. இந்த தேகத்தின் என்னவெல்லாம் சம்மந்தங்கள் இருக்கிறதோ, பார்வை மூலம், உள்ளுணர்வு மூலம், செயல் மூலம் -அந்த அனைத்திலிருந்தும் விடுபடுவது. தேகத்தின் உறவுகளை பார்த்தாலும் கூட தானாகவே ஆன்மா மற்றும் ஆத்மீக சம்மந்தம் நினைவில் இருக்க வேண்டும். ஆகையால் தீபாவளிக்கு பிறகு சகோதரத்துவ நாளாக கொண்டாட படுகிறது அல்லவா. ஜொலித்துக் கொண்டிருக்கும் நட்சத்திரம் மற்றும் வண்ணயமான அழிவற்ற ஓளியாகி (தீபம்) விடுகிறீர்கள். எனவே சகோதரன் -சகோதரன் என்ற சம்மந்தம் ஆகி விடுகிறது. ஆத்மா என்ற முறையில் சகோதரன் -சகோதரனாகவும், சாகார பிரம்மா வம்சத்தை சேர்ந்த பிராமணன் என்ற முறையில் சகோதரன் -சகோதரி என்ற சம்மந்ததிலும், உயர்ந்த சுத்த சம்மந்தமாக தானாகவே நினைவில் இருக்கிறது. எனவே விடுபட்ட நிலை என்றால் தேகம் மற்றும் தேகத்தின் சம்மந்தத் திலிருந்து விடுபடுவது.

3. தேகத்தின் அழியக்கூடிய பொருட்களிலிருந்தும் கூட விடுபட்டிருப்பது -ஒருவேளை ஏதாவதொரு பொருள் ஏதாவது கர்மேந்திரியத்தை ஈர்க்கிறது (திசை திருப்புகிறது) என்றால், அதாவது பற்றுதல் ஏற்படுகிறது என்றால் அது விடுபட்ட நிலை அல்ல. சம்மந்தத்தில் இருந்து விடுபட்டிருந்தாலும் கூட ஆறுதலாக (அன்பாக) இருக்கிறார்கள், ஆனால் அனைத்து பொருட்களின் பற்றிலிருந்து விடுபட்டிருப்பது -பற்றற்றவர் ஆவதில் இராயலான முறையில் பற்றுதல் இருந்து விடுகிறது.

பற்றுதலின் தெளிவான உருவம் ஆசையாகும் என்று சொல்லபட்டிருக்கிறது அல்லவா. இந்த ஆசைகளின் சூட்சமமான, நுட்பமான ரூபம் -நன்றாக இருக்கிறது என்ற உணர்வு. ஆசை என்பது இல்லை, ஆனால் நன்றாக இருக்கிறது -இந்த நுட்பமான ரூபம் நன்றாக என்பதற்கு பதிலாக ஆசையின் ரூபமாக மாறிவிடுகிறது. எனவே இந்த பொருட்கள் குறுகிய கால சுகத்தின் சாதனங்கள் ஈர்க்கவில்லை தானே? என்பதை நல்ல முறையில் சோதனை செய்யுங்கள். ஏதாவதொரு சாதனம் சமயத்தில் கிடைக்கவில்லை என்றால் எளிதாக அதாவது சகஜயோகியின் மனநிலை நிலை தடுமாறவில்லை தானே? எந்தவொரு சாதனத்திற்கும் கட்டுபட்டு, பழக்கத்தினால் அடிமையாகவில்லை தானே? ஏனெனில் இந்த அனைத்து பொருட்களும் அதாவது சாதனங்கள், இயற்கையின் சாதனங்களாக இருக்கிறது. எனவே இயற்கையை வென்றவராகிய நீங்கள், அதாவது இயற்கையின் ஆதாரத்திலிருந்து விடுபட்டு தாமரை மலரின் ஆசனத்தில் அமர்ந்திருக்கும் பிராமணர்களாக இருக்கிறீர்கள். மாயாவை வென்றவர் ஆவதன் கூடவே இயற்கையை கூட வென்றவர் ஆகிறீர்கள். மாயாவை வென்றவர் ஆகிறீர்கள் என்றால் மாயா அடிக்கடி விதவிதமான ரூபத்தில் சோதனை செய்கிறது. எனவே இயற்கையின் சோதனை தாள் -சாதனங்களின் மூலம் உங்கள் அனைவரையும் குழப்பத்தில் கொண்டு வரவேண்டும் என்று விதவிதமான சோதனை தாள்களை எடுத்து வருகிறதா? எப்படி தண்ணீரின் மூலம். இப்பொழுது இது ஒன்றும் பெரிய சோதனை தாள் கொண்டு வரவில்லை, ஆனால் தண்ணீரின் மூலம் உருவாகியுள்ள பொருட் களினால், அகினியின் மூலம் உருவாகியுள்ள பொருட்களினால், அவ்வாறு ஒவ்வொரு இயற்கையின் தத்துவங்களினால் உருவாக்கப்பட்ட பொருட்களினால் மனித ஆத்மாக்களின் வாழ்க்கையின் குறுகிய காலத்தின் சுகம் ஆதாரமாக இருக்கிறது. எனவே இந்த அனைத்து தத்துவங்களும் சோதனை தாள்களை கொண்டு வரும். இப்பொழுது தண்ணீரின் பற்றாக்குறை மட்டும் ஏற்பட்டிருக்கிறது, ஆனால் தண்ணீரினால் உருவாக்கப்பட்ட பொருட்கள் கிடைக்காத பொழுது தான் உண்மையான சோதனை தாள் அந்த சமயம் வரும். இந்த இயற்கையினால் சோதனை தாள் கூட அவசியம் தக்க சமயத்தில் வந்தே தீரும். ஆகையால் தேகத்தின் பொருட்கள் பற்றுதல் மற்றும் ஆதாரத்திலிருந்து கூட நிராதார் (எந்த ஆதாரமும் இல்லாத) பற்றற்றவராக இருக்க வேண்டும். இப்பொழுதோ அனைத்து

சாதனங்களும் நல்ல முறையில் கிடைத்துக் கொண்டிருக்கிறது, எந்தவித குறைபாடும் இல்லை ஆனால் சாதனங்கள் (பொருட்கள்) இருந்தாலும் கூட, சாதனங்களை பயன்படுத்தினாலும், யோகத்தின் மனநிலை நிலைகுலையாது. யோகி ஆகி பயன்படுத்த வேண்டும் -இதற்கு தான் விடுபட்டவர் என்று சொல்லப் படுகிறது. எதுவும் இல்லாமல் இருப்பதை, விடுபட்டவர் என்று சொல்ல முடியாது. இருந்தாலும் கூட நிமித்தமாக (கருவியாக) இருந்து, பற்றற்றவர் ரூபத்தில் இருந்து உபயோகப் படுத்துவது, ஆசை மற்றும் நன்றாக இருக்கிறது என்ற உணர்வின் காரணமாக பயன்படுத்தக் கூடாது, இதை சோதனை செய்யுங்கள். எங்கு ஆசை இருக்கிறதோ, எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் நன்மை ஏற்படாது, ஆசை, நல்லவராக மாற விடாது. சோதனை தாள்கள் (பிரச்சனைகள்) வரும் சமயத்தில் முயற்சி செய்வதிலேயே நேரம் சென்றுவிடுகிறது. நீங்கள் சாதனங்கள் (யோகத்தில்) இருப்பதற்கான முயற்சி செய்வீர்களா அல்லது சாதனங்கள் (பொருட்கள்) அதன் பக்கம் கவர்ந்து இழுத்து விடுகிறதா. நீங்கள் போராடி, முயற்சி செய்து சாதனங்களின் ஈர்ப்பை அழிப்பதற்கான முயற்சி செய்கிறீர்கள் என்றால் யுத்தம் புரிவதில் தான் பிரச்சனைகளின் நேரம் சென்று விடுகிறது. ரிசல்ட் (முடிவு) என்னவாகிறது? சாதனங்களை பயன்படுத்தக் கூடியவர்கள் சகஜயோகியாக மனநிலையில் தடுமாற்றம் ஏற்படவில்லை தானே. இயற்கையின் சோதனை தாள் இப்பொழுது மேலும் அதிகமாக வரக்கூடியதாக இருக்கிறது. ஆகையால், ஆரம்பத்திலிருந்தே பொருட்களின் விசேˆமான ஆதாரத்தினால் -உண்பது, குடிப்பது, உடுத்துவது, நடப்பது, இருப்பது மற்றும் தொடர்பில் வருவது -இதில் ஏதாவது விˆயம் நுட்பமான முறையில் கூட தடை ஏற்படுத்துவதில்லையே என்று சோதனை செய்யுங்கள்? இதை இப்பொழுதே சோதனை செய்யுங்கள். பிரச்சனைகள் வரும் சமயத்தில் சோதனை செய்ய வேண்டாம், இல்லையென்றால், தோல்வியின் விளிம்பில் இருப்பீர்கள். யோகத்தின் மனநிலை என்றாலே பயன்படுத்தினாலும் விடுபட்ட மனநிலையில் இருப்பது. சகஜயோகத்தின் பயிற்சி சாதனங்கள் மீது அதாவது இயற்கையின் மேல் வெற்றியடைவது. அவை (சாதனங்கள்) இல்லாமல் வாழலாம், ஆனால் இவை இல்லாமல் இருக்க முடியாது, ஆகையால் மனநிலை தடுமாறி விடுகிறது. இதை விடுபட்ட மனநிலை என்று முடியாது. உங்களுடைய வெற்றியின் மூலம் கிடைக்காத பொருளை கூட கிடைத்தாக அனுபவம் செய்வார்கள், அப்படிப்பட்ட

வெற்றியை அடையுங்கள். ஸ்தாபனையின் ஆரம்பத்தில் பற்றுதல் இருந்ததா, இல்லையா. அதற்காக இடை இடையில் தெரிந்தே சோதனை செய்வதற்கான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யுங்கள். எப்படியென்றால், 15 நாட்களுக்கு மோர் மற்றும் வெண்ணெய் மட்டும் சாப்பிட கொடுக்கப்பட்டது. கோதுமை இருந்தும் கூட இந்த சோதனை நடந்தது. எப்படிப் பட்ட உடல் நிலை குறைபாடு இருந்தாலும் கூட 15 -நாட்களுக்கு இந்த உணவு தான் கொடுக்கப்பட்டது. யாருக்கும் உடல் நிலை குறைபாடு ஏற்படவில்லை. ஆஸ்துமாவால் நோயுற்றவர்கள் கூட குணம் அடைந்து விட்டார்கள் அல்லவா. பாப்தாதா இப்படிப்பட்ட நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து கொடுத்ததற்கு மகிழ்ச்சி அடைந்தார்கள் அல்லவா. பக்தியில் கூட வி˜ம் கூட அமிர்தமாகி விட்டது என்று சொல்கிறார்கள் அல்லவா, இதுவோ மோர் தான். நம்பிக்கை மற்றும் மகிழ்ச்சி ஒவ்வொரு சூழ்நிலையிலும் வெற்றியாளர் ஆக்கி விடுகிறது. எனவே அப்படிப்பட்ட சோதனை தாள்களும் கூட வரும் -காய்ந்த ரொட்டி துண்டு கூட சாப்பிட வேண்டியிருக்கும். இப்பொழுதோ சாதனங்கள் (வசதிகள்) இருக்கிறது. பற்கள் இல்லை, ஜீரணம் ஆவதில்லை என்று சொல்வார்கள். அந்த சமயத்தில் என்ன செய்வீர்கள்? நம்பிக்கை, மகிழ்ச்சி, யோகத்தின் பயிற்சியின் சக்தி இருக்கும், அதனால் காய்ந்த ரொட்டி துண்டு கூட மிருதுவான (மென்மையான) ரொட்டி துண்டாக இருக்கும். வருத்தம் ஏற்படுத்தாது. நீங்கள் வெற்றி சொரூபத்தின் கௌரவத்தில் நிலைத்திருந்தால் எந்தவித வருத்தமும் ஏற்படாது. ஹட யோகிகளுக்கு முன்னால் சிங்கம் கூட பூனை ஆகி விடுகிறது, பாம்பு கூட பொம்மை ஆகி விடுகிறது என்றால், சகஜ இராஜயோகியாகிய, வெற்றி சொரூபமான ஆத்மாக் களாகிய உங்களுக்கு இவை அனைத்தும் பெரிய விஷயமே இல்லை. தாராளமாக பயன்படுத்துங்கள், ஆனால் சமயத்தில் ஏமாற்றி விடக்கூடாது என்பதில் சோதனை செய்யுங்கள். பிரச்சனைகள், தனது மனநிலையை கீழே தள்ளி விடக் கூடாது. தேகத்தின் தொடர்பிலிருந்து கூட விடுபடுவது எளிதாக இருக்கிறது, ஆனால் தேகத்தின் பொருட்களிலிருந்து விடுபடுவது -இதில் மிகவும் நன்றாக கவனம் தேவை.

4. பழைய சுபாவம், சம்ஸ்காரத்திலிருந்து விடுபடுவது -பழைய தேகத்தின் சுபாவம் மற்றும் சம்ஸ்காரம் கூட மிகவும் கடுமையாக இருக்கிறது. மாயாவை வெற்றியடைவதில் இது கூட மிகப் பெரிய தடை ரூபமாக ஆகி

விடுகிறது. பழைய சுபாவம், சம்ஸ்காரம் என்ற பாம்பு முடிந்து (இறந்து) கூட விடுகிறது, ஆனால் அதனுடைய கோடு (ரேகை) இருந்து விடுகிறது என்பதை பாப்தாதா பலமுறை பார்க்கிறார். இது சமயத்தில் ஏமாற்றத்தை ஏற்படுத்திவிடுகிறது. இது மிகவும் கடுமையான சுபாவம் மற்றும் சம்ஸ்காரம் பலமுறை மாயாவிற்கு அடிபணிய வைத்து விடுகிறது. அவர்கள் தவறை தவறாக புரிந்து கொள்வதில்லை. உணர்தலின் சக்தி முடிவடைந்து விடுகிறது. இதிலிருந்து விடுபடுவது -இதற்கும் கூட நல்ல முறையில் சோதனை செய்ய வேண்டும். உணரும் சக்தி முடிந்து போய்விடுவதால் மேலும் கூட ஒரு பொய்க்கு பின்னால் ஆயிரம் மடங்கு பொய்கள் தனது விˆயத்தை நிரூபணம் செய்வதில் பேச (விவாதம்) வேண்டியிருக்கிறது. அந்தளவு மன அழுத்தம் ஏற்படுகிறது. தன்னை உண்மை என நிரூபணம் செய்வது -இது கூட பழைய சம்ஸ்காரத்தின் அடிமையாவதின் அடையாளமாகும். ஒன்று யதார்த்தமாக (சரியாக) விˆயத்தை தெளிவுப்படுத்துவது, மற்றொன்று தன்னை வலுகட்டாயமாக நிரூபணம் செய்வது. எனவே வலுகட்டாயமாக நிரூபணம் செய்யக்கூடியவர்கள் ஒருபொழுதும் வெற்றி சொரூபம் ஆக முடியாது. ஏதாவது பழைய சுபாவம், சம்ஸ்காரம் சிறிதளவு கூட மறைமுகமான ரூபத்தில் இல்லை தானே என்பதை கூட சோதனை செய்யுங்கள். புரிந்ததா?

யார் இந்த நான்கு விஷயங்களிலிருந்து மட்டும் விடுபட்டவராக இருக்கிறார்களோ, அவர்களைத் தான் பாபாவிற்கு அன்பானவர்கள், குடும்பத்திற்கு அன்பானவர்கள் என்று சொல்வார்கள். அப்படி தாமரை மலரின் ஆசனத்தில் அமர்ந்திருப்பவர் ஆகி விட்டீர்களா? இதைத் தான் தந்தையை பின்பற்றுபவர்கள் என்று சொல்லப்படுகிறது. பிரம்மாபாபா கூட தாமரை மலரின் ஆசனத்தில் அமர்ந்தவர் ஆன பிறகு தான் நம்பர் ஒன் தந்தைக்கு அன்பானவராகவும், பிராமணர்களுக்கு அன்பானவராகவும் ஆனார். சாகார ரூபத்திலும் சரி, அவ்யக்த ரூபத்தில் இருந்தாலும் சரி, இப்பொழுது கூட ஒவ்வொரு பிராமணர்களின் மனதிலிருந்து என்ன வெளிப்படுகிறது? நம்முடைய பிரம்மாபாபா. நாங்கள் சாகார ரூபத்தில் பார்க்கவே இல்லை என்ற அனுபவம் ஏற்படுவதில்லை ஆனால் கண்களினால் பார்க்கவில்லை, மனதின் மூலம் பார்க்கிறோம், புத்தியின் தெய்வீக கண்கள் மூலம் பார்க்கிறோம், அனுபவம் செய்கிறீர்கள் தானே. ஆகையால், ஒவ்வொரு

பிராமணர்களின் மனதிலிருந்து சொல்கிறார்கள் -என்னுடைய பாபா (மேரா பாபா). இது அன்பின் அடையாளமாகும். நாலா பக்கத்திலுமுள்ள விடுபட்டிருப்பவர்கள் தான், உலகத்திற்கு அன்பிற்குரியவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் அவ்வாறே நாலாபக்கதிலுமுள்ள விடுபட்டவர்களாகவும் அனைவருக்கும் அன்பானவர்கள் ஆகுங்கள். புரிந்ததா?

குஜராத்தை சேர்ந்தவர்கள் அருகில் இருக்கிறார்கள், எனவே பின்பற்றுவதிலும் கூட நெருக்கத்தில் இருக்கிறார்கள். இருப்பிடம் மற்றும் மனநிலை இரண்டிலும் அருகாமையில் இருப்பவர் ஆவது -இது தான் சிறப்பம்சமாக இருக்கிறது. பாப்தாதா எப்பொழுதுமே குழந்தைகளை பார்த்து புன் முறுவல் செய்கிறார். நல்லது.

நாலாபக்கத்திலுமுள்ள தாமரை மலரில் வீற்றிருக்கும், விடுபட்டவர் மற்றும் பாபாவிற்கு அன்பான குழந்தைகளுக்கு, சதா மாயாவை வென்ற, இயற்கையை வென்ற விசேஷ ஆத்மாக்களுக்கு, சதா தந்தையை பின்பற்றக்கூடிய விசுவாசமான குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நிறைந்த, அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**மதுபனிற்கு வந்துள்ள சேவாதாரி சகோதர, சகோதரிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் அன்பு நினைவுகள்:** எந்தளவு மதுபனில் சேவை செய்கிறீர்களோ, அந்தளவு நிரந்தர யோகத்தின் அனுபவம் செய்கிறீர்களா? நினைவு துண்டிக்கப்படவில்லை தானே? மதுபனில் சேவாதாரி ஆவது என்றாலே நிரந்தர யோகி, சகஜயோகியின் அனுபவம் செய்வது. இந்த சிறிது காலத்தின் அனுபவம் கூட சதா நினைவில் இருக்கும் அல்லவா. சிறிதளவு பிரச்சனைகள் வரும் பொழுதெல்லாம் மனதினால் மதுபனை வந்தடைந்து விடுங்கள். ஆகையால் மதுபனை சேர்ந்தவர் ஆவதின் மூலம் சூழ் நிலைகள் மற்றும் பிரச்சனைகள் முடிந்து விடுகிறது, மேலும் நீங்கள் சகஜயோகி ஆகி விடுகிறீர்கள். இந்த அனுபவத்தை எப்பொழுதும் உங்களுடன் வைத்துக் கொள்ளுங்கள். எனவே அனுபவத்தை நினைவு செய்வதினால் சக்தி வந்து விடுகிறது. சேவையின் அனுபவம் அழியாதது. நல்லது. இந்த வாய்ப்பு கிடைப்பது கூட குறைந்தது அல்ல. மிகப் பெரிய வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

# 1987 அவ்யக்த முரளி

சேவாதாரி என்றாலே சதா பாபாவிற்கு சமமாக நிமித்தமாக (கருவியாக) ஆகக்கூடிய, பணிவாக இருக்கக் கூடியவர்கள். பணிவு தான் அனைத்தையும் விட உயர்ந்த வெற்றியின் சாதனமாகும். எந்தவொரு சேவைக்கும் வெற்றிக்கான சாதனம் கருணை உணர்வு, நிமித்த உணர்வாகும். எனவே இந்த விசேஷத் தன்மைகளோடு சேவை செய்தீர்களா? அவ்வாறு சேவையில் சதா வெற்றியும் கிடைக்கிறது, மேலும் சதா மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. சங்கமயுகமே மகிழ்ச்சியை கொண்டாடுவது, ஆகையால் சேவை, சேவையாக தோன்றாது. எப்படி யாராது மல்யுத்தம் (குத்து சண்டையில்) செய்கிறார்கள் என்றால், அவர்கள் அதை குதுகுலமாக (மகிழ்ச்சியாக) புரிந்துகொண்டு விளையாடுகிறார்கள். அதில் களைப்போ அல்லது வலியோ ஏற்படுவதில்லை, ஏனெனில் பொழுதுபோக்கு எனப் புரிந்து கொள்கிறார்கள். மகிழ்ச்சியை கொண்டாடுவதற்காக செய்கிறார்கள். அவ்வாறு ஒருவேளை உண்மையான சேவாதாரியின் விசேˆத்தன்மை மூலம் சேவை செய்தால், ஒருபொழுதும் களைப்பு ஏற்படாது. புரிந்ததா? சேவையாக தோன்றாது, ஆனால் விளையாடிக் கொண்டிருக்கிறோம் என்று சதா தோன்றும். எனவே எந்த சேவை கிடைத்தாலும், இந்த இரண்டு விசேˆத்தன்மைகளோடு வெற்றியை அடைந்துக் கொண்டேயிருக்க வேண்டும். இதனால் சதா வெற்றி சொரூபமாகி விடலாம். நல்லது.

2. உண்மையாக தபஸ்யா செய்வதினால், சதா காலத்திற்கு உண்மையான தங்கமாகவே மாற்றிவிடுகிறது, இதில் சிறிது கூட கலப்படம் இருக்க கூடாது. தபஸ்யா எப்பொழுதும் ஒவ்வொரு வரையும் தகுதியுடைவராக மாற்றிவிடுகிறது, அது குடும்பத்திலும் மற்றும் பாக்கியத்தை அடைவதிலும் வெற்றி பெற செய்கிறது. அப்படிப்பட்ட தபஸ்வி ஆகி விட்டீர்களா? தபஸ்யா செய்யக் கூடியவர்களை தான் இராஜயோகிகள் என்று சொல்லப்படுகிறது. எனவே நீங்கள் அனைவரும் இராஜயோகிகளாக இருக்கிறீர்கள். ஒருபொழுதும் எந்தவித சூழ்நிலையிலும் தடுமாற்றம் ஏற்படவில்லை தானே? அதனால் சதா தன்னை இந்த முறையில் சோதனை செய்யுங்கள், மற்றும் சோதனை செய்த பிறகு தன்னை மாற்றிக் கொள்ளுங்கள். சோதனை மட்டும் செய்வதினால் மனமுடைந்து போய்விடுகிறது, நம்மிடம் இந்த மாதிரியான குறைகள் இருக்கின்றன, இவை சரியாகுமா அல்லது சரியாகாதா என்றே தெரியவில்லையே என்று வருத்தம் ஏற்படும். எனவே

சோதனை கூட செய்யுங்கள், மேலும் சோதனையின் கூட மாற்றத்தையும் கொண்டு வாருங்கள். பலவீனம் ஆகி விட்டால், நேரம் கடந்து விடும், ஆனால் சமயத்திற்கு தகுந்தபடி கடமையை செய்யக் கூடியவர்கள் சதா வெற்றியடைகிறார்கள். ஆகவே அனைவரும் சதா வெற்றியடைந்தவர்களாக, உயர்ந்த ஆத்மாக்களாக இருக்கிறீர்களா? அனைவரும் சிரேஷ்ட மானவர்களா அல்லது நம்பர்வாராக (வரிசைகிரமம்) இருக்கிறீர்களா? ஆனால் எந்த எண்ணில் இருக்கிறீர்கள்? எத்தனை நம்பர் இருக்கும் என்று கேட்டால் அனைவருமே நம்பர் ஒன் என்று சொல்வீர்கள்? ஆனால் அது ஒன்றா அல்லது அனேகமா? முதல் நம்பரில் அனைவரும் வர முடியாது, ஆனால் முதல் டிவிசனில் (தலைமுறையில்) வரமுடியும் அல்லவா? முதல் நம்பரில் ஒருவர் தான் இருக்க முடியும், ஆனால் முதல் டிவிசனில் பலர் வர முடியும். ஆகையால் முதல் நம்பரில் வரக்கூடியவர் ஆக முடியும். இராஜ்ய சிம்மாசனத்தில் ஒருவர் தான் அமர முடியும், ஆனால் (இராஜ்ய சபையில்) மற்றவர்கள் கூட இணையாக இருப்பார்கள் அல்லவா எனவே இராயல் குடும்பத்தில் வருவது கூட இராஜ்ய அதிகாரி ஆவதாகும். எனவே முதல் டிவிசன் அதாவது நம்பர் ஒன்னில் வருவதற்கான முயற்சி செய்யுங்கள். இதுவரை இரண்டு மூன்று சிம்மாசனங்களை தவிர வேறு எதுவும் தேர்வாகவில்லை. இப்பொழுது என்ன விரும்புகிறீர்களோ, எந்தளவு முயற்சி செய்ய விரும்புகிறீர்களோ, அந்தளவு செய்ய முடியும். இப்பொழுது தாமதம் ஆகி விட்டது, ஆனால் வெகுநேரம் ஆகவில்லை. ஆகையால் அனைவரும் முன்னேறுவதற்கான வாய்ப்பிருக்கிறது. வெற்றியடைந்து நம்பர் ஒன்னில் வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. எனவே எப்பொழுதும் ஊக்க உற்சாகத்துடன் இருக்க வேண்டும். யாரோ நம்பர் ஒன் ஆகட்டும், நான் இரண்டாவது நம்பரில் வருவது கூட சரியே என்பது அல்ல. இதைத் தான் பலவீனமான முயற்சியாளர் என்று சொல்லப்படுகிறது. நீங்கள் அனைவரும் தீவிர முயற்சி செய்கிறீர்கள் தானே? நல்லது.

**வரதானம்: புத்திசாலி ஆகி மூன்று விதமான சேவையை ஒன்றாக செய்யக் கூடிய வெற்றி மூர்த்தி ஆகுக!**

தற்சமயத்தில் மனம், சொல் மற்றும் செயலில் மூன்று விதமான சேவையை ஒட்டுமொத்தமாக செய்ய வேண்டும். வார்த்தை மற்றும் செயலின் கூடவே மனதின் சுபமான எண்ணம் மற்றும் சிரேஷ்ட

உள்ளுணர்வு மூலம் சேவை செய்துக் கொண்டிருந்தால் உடனடி பலன் கிடைக்கிறது, ஏனெனில் மனம் சக்திசாலியாக இருந்தால் தான் வார்த்தையில் சக்தி வருகிறது, இல்லையென்றால் வார்த்தைகளை பேசக்கூடியவர்கள் பண்டிதர்களுக்கு சமமானவர்களாக ஆகி விடுகிறார்கள். ஏனெனில் கிளியை போன்று படிப்பதை திரும்ப சொல்கிறார்கள். ஞானம் நிறைந்தவர் அதாவது புத்திசாலிகள் மூன்றுவிதமான சேவையை ஒட்டுமொத்தமாக செய்து மற்றும் வெற்றியின் வரதானத்தை அடைய முடியும்.

**சுலோகன்: தனது பேச்சு, கர்மம் மற்றும் பார்வையின் மூலம் அமைதி, சக்தி மற்றும் குஷியின் அனுபவம் செய்ய வைப்பது தான் மகான் ஆத்மாக்களின் பெருந்தன்மை!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 29.10.1987 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உடல், மனம், செல்வம் மற்றும் சம்மந்தத்தின் சக்தி!

இன்று சர்வ சக்திவான் பாபா தம்முடைய சக்திசாலிக் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு பிராமண ஆத்மாவும் சக்திசாலி ஆகியிருக்கிறார் ஆனால் நம்பர்வார் உள்ளனர். சர்வ சக்திகள் பாபாவின் ஆஸ்தி மற்றும் வரங்களை வழங்கும் வள்ளலின் (வரதாதாவின்) வரதானம். தந்தை மற்றும் வரங்களை வழங்கும் வள்ளல் -இந்த இரட்டை சம்மந்தத்தின் மூலம் ஒவ்வொரு குழந்தைக்கும் இந்த சிரேஷ்ட பிராப்தி ஜென்மத்திலிருந்தே உள்ளது. ஜென்மத்திலிருந்தே பாபா சர்வ சக்திகளின், அதாவது பிறப்புரிமையின் அதிகாரி ஆக்கி விடுகிறார். அதனுடன் கூடவே வரதாதா என்ற நிலையில், ஜென்மம் எடுத்ததுமே மாஸ்டர் சர்வசக்திவான் ஆக்கி, சர்வசக்தி பவ என்ற வரதானத்தைக் கொடுத்து விடுகிறார். குழந்தைகள் அனைவர்க்கும் ஒருவர் மூலமாக ஒரே மாதிரி யான இரட்டை அதிகாரம் கிடைக்கிறது ஆனால் தாரணை செய்வதற்கான சக்தி நம்பர்வார் ஆக்கி விடுகிறது. பாபா அனைவரையும் சதா மற்றும் சர்வ சக்திசாலி ஆக்கி விடுகிறார் ஆனால் குழந்தைகள் அவர்களது சக்திக்கேற்றவாறு ஆகி விடுகின்றனர். அது போல் லௌகிக வாழ்க்கையில் அல்லது அலௌகிக வாழ்க்கையில் வெற்றிக்கான ஆதாரம் சக்திகள் தாம். எவ்வளவு சக்திகளோ அவ்வளவு வெற்றி. முக்கியமான சக்திகள் -உடலின், மனதின், செல்வத்தின் மற்றும் சம்மந்தத்தின் சக்திகள் -நான்குமே அவசியம். நான்கில் ஒரு சக்தி குறைவாக இருந்தாலோ, வாழ்க்கையில் சதா மற்றும் சர்வ வெற்றி கிடைப்பதில்லை. அலௌகிக வாழ்க்கையில் கூட நான்கு சக்திகளும் அவசியம்.

இந்த அலௌகிக வாழ்க்கையில் ஆத்மா மற்றும் இயற்கை (சரீரம்) இரண்டின் ஆரோக்கியமும் அவசியம். ஆத்மா ஆரோக்கியமாக உள்ளதென்றால் உடலின் கணக்கு -வழக்கு அல்லது உடலின் நோய்,

ஈட்டியிலிருந்து முள்ளாகி விடுகிற காரணத்தால், சுய ஸ்திதியின் காரணத்தால் ஆரோக்கி யத்தை அனுபவம் செய்கிறது. அவர்களின் வாயில், முகத்தில் நோயின் கஷ்டத்தினுடைய சின்னம் இருப்பதில்லை. வாயில் ஒரு போதும் நோய் பற்றிய வர்ணனை செய்யப்படுவதில்லை. கர்ம போகத்தின் வர்ணனைக்கு பதிலாக கர்மயோகத்தின் ஸ்திதியினுடைய வர்ணனை செய்கின்றனர். ஏனென்றால் நோயின் வர்ணனையும் கூட நோயை அதிகப் படுத்துவதற்கான காரணம் ஆகி விடுகிறது. அவர்கள் ஒரு போதும் நோயின் கஷ்டத்தை அனுபவம் செய்ய மாட்டார்கள். மற்றவர் களுக்கு கஷ்டத்தைப் பற்றிச் சொல்லி கஷ்டத்தின் அலையைப் பரப்ப மாட்டார்கள். மேலும் மாற்றம் செய்யும் சக்தி மூலம் கஷ்டத்தைத் திருப்தியாக மாற்றம் செய்து திருப்தியாக இருந்து, மற்றவர் களிடமும் திருப்தியின் அலை பரவச் செய்வார்கள். அதாவது மாஸ்டர் சர்வசக்திவான் ஆகி, சக்தியின் வரதானங்களில் சமயத்தின் பிரமாணம் பொறுமை சக்தி, உள்ளடக்கும் சக்தியைப் பிரயோகம் செய்வார்கள். மேலும் சமயத்தில் சக்திகளின் வரதானம் மற்றும் ஆஸ்தியைக் காரியத்தில் கொண்டு வருவது -இது தான் அவர்களுக்கு வரதானம். அதாவது ஆசிர்வாதம் மருந்தின் வேலையைச் செய்யும். ஏனென்றால் சர்வசக்திவான் தந்தை மூலம் கிடைக்கும் சர்வ சக்திகளை, எப்படி பரிஸ்திதி, எப்படி சமயம் மற்றும் எந்த விதி மூலம் நீங்கள் காரியத்தில் ஈடுபடுத்த விரும்புகிறீர்களோ, அதே ரூபத்தில் இந்த சக்திகள் உங்களுக்கு சகயோகி ஆகி விடும். இந்த சக்திகளை அல்லது பிரபு -வரதானத்தை எந்த ரூபத்தில் விரும்புகிறீர்களோ, அந்த ரூபத்தில் தாரணை செய்ய முடியும். அவ்வப் போது குளிர்ச்சியின் ரூபத்தில், அவ்வப்போது எரிக்கும் (அக்னி) ரூபத்தில். நீரின் குளிர்ச்சியையும் கூட அனுபவம் செய்விக்க முடியும். நெருப்பு எரிப்பதையும் அனுபவம் செய்விக்க முடியும். மருந்தின் வேலையும் செய்ய முடியும் மற்றும் சக்திசாலி ஆக்குவதற்கான லேகியத்தின் (சத்து மருந்து) வேலை செய்ய முடியும். சமயத்தில் காரியத்தில் ஈடுபடுத்துவதற்கான அத்தாரிட்டியாக மட்டும் ஆகுங்கள். இந்த சர்வ சக்திகள், மாஸ்டர் சர்வசக்திவானாகிய உங்களுக்கு சேவாதாரிகள். எப்போது எதைக் கட்டளையிடுகிறீர்களோ, அப்போது அது இதோ ஆஜர் பிரபு என்று சொல்லி சகயோகி ஆகி விடும் ஆனால் வேலை வாங்குபவரும் கூட அவ்வளவு சாமர்த்தியசாலியாக இருக்க வேண்டும். ஆக, உடலின் சக்தி, ஆத்மிக சக்தியின் ஆதாரத்தில்

சதா அனுபவம் செய்ய முடியும். அதாவது சதா ஆரோக்கியமாக இருப்பதாக அனுபவம் செய்ய முடியும்.

இந்த அலௌகிக பிராமண வாழ்க்கையே சதா ஆரோக்கியமான வாழ்க்கை. வரங்களை வழங்கும் வள்ளலிடம் இருந்து சதா ஆரோக்கியவான் ஆகுக என்ற வரதானம் கிடைத்துள்ளது. பாப்தாதா பார்க்கிறார் -கிடைத்துள்ள வரதானங்களை அநேக குழந்தைகள் சமயத்தில் காரியத்தில் கொண்டு வந்து லாபமடைய முடிவதில்லை அல்லது இப்படிச் செய்கிறார்கள் -அதாவது சக்திகளிடமிருந்து, அதாவது சேவாதாரிகளிடம் இருந்து தங்களின் விசாலத் தன்மை மற்றும் விசால புத்தி மூலம் சேவை பெற்றுக் கொள்வதில்லை. மாஸ்டர் சர்வசக்திவான் என்ற ஸ்திதி ஒன்றும் குறைந்ததில்லை. இது சிரேஷ்ட ஸ்திதியாகவும் உள்ளது, அதனுடன் கூடவே நேரடியாகப் பரமாத்மா மூலம் பரம டைட்டிலும் கூட. டைட்டிலின் நஷா எவ்வளவு வைக்கின்றனர்! டைட்டில் எவ்வளவு காரியங்களைப் பயனுள்ளதாக்கி விடுகிறது! ஆக, இது பரமாத்ம டைட்டில், இதில் எவ்வளவு குஷி மற்றும் சக்தி நிறைந்துள்ளது! இந்த ஒரு டைட்டிலின் ஸ்திதி என்ற இருக்கையில் செட்டாகி அமர்ந்து விட்டால் இந்த சர்வ சக்திகள் சேவைக்காக சதா ஆஜராகி இருப்பதாக அனுபவம் ஆகும் -உங்கள் கட்டளைக்காகக் காத்திருக்கும். ஆகவே வரதானங்களை அல்லது ஆஸ்தியைக் காரியத்தில் ஈடுபடுத்துங்கள். மாஸ்டர் சர்வசக்திவான் என்ற சுவமானத்தில் நிலைத்திருக்கவில்லை என்றால் சக்திகளைக் கட்டளைப்படி நடத்துவதற்கு பதிலாக அடிக்கடி பாபாவிடம் வேண்டுதல் வைத்துக் கொண்டே இருக்கின்றனர் -அதாவது இந்த சக்தியைக் கொடுங்கள், இந்த எனது காரியத்தைச் செய்து கொடுங்கள், இது நடந்து விட வேண்டும், இப்படி ஆகி விட வேண்டும். ஆக, கோரிக்கை அல்லது வேண்டுதல் வைப்பவர்கள் ஒரு போதும் சதா திருப்தியடைந்தவராக இருக்க முடியாது. ஒரு விஷயம் பூர்த்தியாகும், இரண்டாவது ஆரம்பமாகி விடும். ஆகவே மாலிக் ஆகி. யோகயுக்த் ஆகி, யுக்தியுக்த் சேவையை (சக்திகளாகிய) சேவாதாரிகளிடமிருந்து பெற்றுக் கொள்வீர்களானால் சதா ஆரோக்கிய மாக இருப்பதாக தானாகவே அனுபவம் செய்வீர்கள். இதைத் தான் உடலின் சக்தியினுடைய பிராப்தி எனச் சொல்வது.

அதைப் போலவே மனதின் சக்தி, அதாவது சிரேஷ்ட சங்கல்ப சக்தி, மாஸ்டர் சர்வசக்திவானின் ஒவ்வொரு சங்கல்பத்திலும் அவ்வளவு சக்தி உள்ளது -அதன் மூலம் எந்தச் சமயம் எதை விரும்புகிறார்களோ, அதைச் செய்ய முடியும் மற்றும் செய்விக்கவும் முடியும். ஏனென்றால் அவர்களின் சங்கல்பம் சதா சுப, சிரேஷ்ட மற்றும் நன்மை செய்வதாக இருக்கும். ஆகவே எங்கே சிரேஷ்ட நன்மையின் சங்கல்பம் உள்ளதோ, அது அவசியம் வெற்றி பெறும் மற்றும் மாஸ்டர் சர்வசக்திவானாக இருப்பதால் மனம் ஒரு போதும் எஜமானுக்கு ஏமாற்றம் தர முடியாது. துக்கத்தை அனுபவம் செய்விக்க முடியாது. மனம் ஏகாக்ர நிலையில் -அதாவது ஓரிடத்தில் நிலைத்திருக்கும், அலையாது. எங்கே விரும்புகிறீர்களோ, எப்போது விரும்புகிறீர்களோ, மனதை அங்கே நிலைநிறுத்த முடியும். ஒரு போதும் மனம் சோர்வடையாது. ஏனென்றால் அந்த சேவாதாரி தாசராகி விடுவார். இது தான் மனதின் சக்தி -இது அலௌகிக வாழ்க்கையில் ஆஸ்தி அல்லது வரதானமாகக் கிடைத்துள்ளது.

இதே விதமாக, மூன்றாவது செல்வத்தின் சக்தி -ஞான செல்வம் இருந்தால் அது ஸ்தூல செல்வத்தின் பிராப்தியைத் தானாகவே செய்விக்கிறது. எங்கே ஞான செல்வம் உள்ளதோ, அங்கே இயற்கை தானாகவே தாசி ஆகி விடும். இந்த ஸ்தூல செல்வம் இயற்கையின் சாதனத்திற்காகத் தான். ஞான செல்வத்தின மூலம் இயற்கையின் அனைத்து சாதனங்களும் தானாகவே கிடைத்து விடும். ஆகவே ஞான செல்வம் அனைத்து செல்வங்களின் ராஜாவாக உள்ளது. எங்கே ராஜா இருக்கிறாரோ, அங்கே சர்வ பதார்த்தங்களும் தானாகவே கிடைத்து விடும். முயற்சி செய்ய வேண்டியதில்லை. எந்த ஒரு லௌகிகப் பதார்த்தத்தையும் அடைவதில் முயற்சி செய்ய வேண்டி உள்ளது என்றால் இதன் காரணம் ஞான செல்வத்தின் குறைபாடு தான். உண்மையில் ஞானசெல்வம் பல கோடிக்கு அதிபதி ஆக்கக் கூடியது. பரமார்த்த விவகாரத்தைத் தானாகவே வெற்றி பெறச் செய்கிறது. ஆக, பரமாத்ம செல்வம் (ஞான செல்வம்) உள்ளவர்கள் பரமார்த்தி (ஆன்மிக உண்மையை நாடுபவர்) ஆகி விடுகின்றனர். சங்கல்பம் செய்வதற்கும் கூடத் தேவை இல்லை. தானாகவே அனைத்துத் தேவைகளும் பூர்த்தியாகிக் கொண்டே இருக்கும். செல்வத்திற்கு அவ்வளவு சக்தி உள்ளது -அநேக ஜென்மங்கள் இந்த ஞான செல்வம் ராஜாவுக்கெல்லாம்

மேலான ராஜாவாக ஆக்கி விடுகிறது. ஆக, செல்வத்தின் சக்தியும் சகஜமாகக் கிடைத்து விடுகிறது.

இதே போல் சம்மந்தத்தின் சக்தி. சம்மந்தத்தின் சக்தியின் பிராப்திக்கான சுய இச்சை ஏற்படுவது ஏனென்றால் சம்மந்தத்தில் சிநேகம் மற்றும் சகயோகத்தின் பிராப்தி உள்ளது. இந்த அலௌகிக வாழ்க்கையில் சம்மந்தத்தின் சக்தி இரட்டை ரூபத்தில் கிடைக்கிறது. நீங்கள் அறிவீர்கள், இரட்டை சம்மந்தத்தின் சக்தி எப்படிக் கிடைக்கிறது என்று. ஒன்று -தந்தை மூலம் சர்வ சம்மந்தம், இரண்டாவது தெய்விகப் பரிவாரத்தின் மூலம் சம்மந்தம். ஆக, இரட்டை சம்மந்தம் ஆகி விட்டது இல்லையா? -தந்தையோடும் மற்றும் தங்களுக்குள்ளும் (பரிவாரத்துடன்). ஆக, சம்மந்தத்தின் மூலம் சதா சுயநலமற்ற அன்பு, அவிநாசி அன்பு மற்றும் அவிநாசி சகயோகம் சதா பிராப்தியாகிக் கொண்டே இருக்கிறது. ஆக, சம்மந்தத்தின் சக்தியும் உள்ளது இல்லையா? அதே போல் தந்தை, குழந்தையை ஏன் விரும்புகிறார் அல்லது குழந்தை, தந்தையை ஏன் விரும்புகிறது? சகயோகத்திற்காக, சமயத்தில் சகயோகம் கிடைக்க வேண்டும் என்பதற்காகத் தான். ஆகவே இந்த அலௌகிக வாழ்க்கையில் நான்கு சக்திகளின் பிராப்தி வரதான ரூபத்தில், ஆஸ்தியின் ரூபத்தில் உள்ளது. எங்கே நான்கு விதமான சக்திகள் கிடைக்கின்றனவோ, அவர்களின் ஒவ்வொரு நேரத்தின் ஸ்திதி எப்படி இருக்கும்? சதா மாஸ்டர் சர்வசக்திவான் என்ற ஸ்திதியின் இருக்கையில் சதா நிலைத்திருக்கிறீர்களா? இதைத் தான் வேறு சொற்களில் சுயத்தின் ராஜா அல்லது ராஜயோகி என்று சொல்வது. இராஜாக்களின் கஜானா சதா நிறைந்திருக்கும். ஆக, இராஜயோகி என்றால் சதா சக்திகளின் கஜானா நிறைந்தவராக இருப்பார். புரிந்ததா? இது தான் சிரேஷ்ட பிராமண அலௌகிக வாழ்க்கை எனச் சொல்லப்படும். சதா மாலிக் ஆகி சர்வ சக்திகளைக் காரியத்தில் ஈடுபடுத்துங்கள். சக்திக்கேற்றவாறு என்பதற்கு பதிலாக சதா சக்திசாலி ஆகுங்கள். வேண்டுதல் வைப்பவராக இல்லாமல், சதா திருப்தியானவராக ஆகுங்கள். நல்லது.

மதுபனுக்கு வருவதற்கான வாய்ப்போ அனைவருக்கும் கிடைத்துக் கொண்டிருக்கிறது இல்லையா? கிடைத்துள்ள இந்த பாக்கியத்தை சதா கூடவே வைத்துக் கொள்ளுங்கள். பாக்கியவிதாதாவை உடன் வைத்துக் கொள்வது என்றால் பாக்கியத்தை உடன் வைத்துக் கொள்வதாகும்.

மூன்று மண்டலங் களைச் சேர்ந்தவர்கள் வந்திருக்கிறீர்கள். வெவ்வேறு இடங்களின் மூன்று நதிகள் வந்து ஒன்று சேர்ந்திருக்கின்றன. இதைத் திரிவேணி சங்கமம் எனச் சொல்கின்றனர். பாப்தாதாவோ வரதாதா ஆகி அனைவர்க்கும் வரதானம் கொடுக்கிறார். வரதானங்களைக் காரியத்தில் ஈடுபடுத்துவது என்பது ஒவ்வொருவர் மீதும் உள்ளது. நல்லது.

நாலாபுறமும் உள்ள அனைத்து ஆஸ்தி மற்றும் வரதானங்களுக்கு அதிகாரிகளாகிய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சர்வ மாஸ்டர் சர்வசக்திவான் சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா திருப்தியின் அலையைப் பரப்புகின்ற திருப்தி நிறைந்த ஆத்மாக்களுக்கு, சதா பரமார்த்தத்தின் மூலம் விவகாரத் தில் சித்தி பெறக்கூடிய மகான் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் சிநேகம் மற்றும் சக்தி நிறைந்த அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

அனைவரின் சகயோகத்தின் மூலம் சுகமய உலகம் என்ற நிகழ்ச்சி (புரோகிராம்) பற்றிய பாப்தாதாவின் பிரேரணைகள்: இந்த விசயம் அப்படிப்பட்டது -சுயம் அனைவரும் சகயோகம் தருவதற்கு முன்வருவார்கள். சகயோகத்தின் மூலம் பிறகு சம்மந்தத்திலும் கூட வருவார்கள். ஆகவே தாங்களாகவே முன்வருவார்கள். சுப பாவனை, சுப விருப்பம் நிறைந்த சேவையில் சேவாதாரிகள் முன்னேற வேண்டும். சுப பாவனையின் பலன் கிடைக்கவில்லை என்பது இருக்கவே முடியாது. சேவாதாரிகளின் சுப பாவனை, சுப விருப்பத்தின் பூமி சகஜமாக பலனளிப்பதற்கு நிமித்தமாகி விடும். பலன் தயாராக உள்ளது. பூமியைத் தயார் செய்வதில் மட்டும் கொஞ்சம் தாமதமாகிறது. பலனோ உடனடியாக வெளிப்படும் ஆனால் அதற்காகத் தகுதியுள்ள பூமி வேண்டும். இப்போது அந்த பூமி தயாராகிக் கொண்டிருக்கிறது.

அது போல் சேவையோ அனைவருக்காகவும் செய்ய வேண்டியது அவசியம் ஆனால் பிறகும் கூட யார் விசேஷஅதிகாரிகளாக உள்ளனரோ, அவர்களில் யாரும் சமீபத்தில் வரவில்லை. இராஜ்ய அதிகாரிகளுக்கு சேவை நடந்திருந்தாலும் சரி, அல்லது தர்மத் தலைவர்களுக்கு நடந்திருந்தாலும் சரி, ஆனால் சகயோகி ஆகி முன்னால் வர வேண்டும். சமயத்தில் சகயோகி ஆக வேண்டும் என்ற அவசியம் உள்ளது. அதற்காக சக்திசாலி அம்பை எய்த வேண்டியிருக்கும். யாரிடம் சர்வ ஆத்மாக்களின்

சகயோக பாவனை உள்ளதோ, குஷியின் பாவனை உள்ளதோ, சத்பாவனை (நல்லெண்ணம்) உள்ளதோ, அவர் தாம் சக்திசாலி அம்பாகப் பார்க்கப் படுகிறார். இதன் மூலம் ஒவ்வொரு காரியமும் சகஜமாக வெற்றி பெறும். இப்போது செய்யும் சேவையை நீங்கள் தனித் தனியாகச் செய்கிறீர்கள் ஆனால் எப்படி முன்பெல்லாம் யாராவது ஒரு காரியம் செய்வதற்குச் செல்கிறார் என்றால் முழுப் பரிவாரத்தின் ஆசிர்வாதம் பெற்றுச் செல்வார். அந்த ஆசிர்வாதம் தான் காரியத்தை சகஜமாக்கி விடுகிறது. ஆகவே இப்போதைய சேவையில் அதை (ஆசிர்வாதத்தை)க் கூடுதலாகச் சேர்க்க வேண்டும். ஆக, எந்த ஒரு காரியத்தையும் தொடங்குவதற்கு முன்னால் அனைத்து சுப பாவனைகள், சுப விருப்பங்களைப் பெறுங்கள். அனைவருடைய திருப்தியின் பலத்தை நிரப்புங்கள். அப்போது சக்திசாலி பலன் வெளிப்படும். இப்போது அவ்வளவு முயற்சி செய்வதற்குத் தேவையில்லை. அனைவரும் உள்ளீடற்ற வெறும் கூடாக ஆகி விட்டுள்ளனர். முயற்சி செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஊதினால் போதும், பறந்து இங்கே வந்து விழுந்து விடுவார்கள். அந்த மாதிரி வெறும் கூடாக உள்ளனர். மேலும் தற்பொழுதோ அனைவரும் புரிந்து கொண்டிருக்கிறார்கள் -கட்டுப்படுத்துவதற்கு இன்னும் ஏதாவது சக்தி வேண்டும் -இராஜ்யத்தின் அல்லது தர்மத்தின் சக்தி. உள்ளுக்குள் தேடிக் கொண்டே இருக்கிறார்கள். பிராமண ஆத்மாக்களின் சேவைக்கான விதியில் மட்டும் வித்தியாசம் வேண்டும். அதுவே மந்திரமாகி விடும். இப்போதோ மந்திரம் சொல்லுங்கள், உடனே வெற்றி கிடைக்க வேண்டும். 50 வருட முயற்சி செய்தீர்கள். இவையனைத்தும் நடக்கத் தான் செய்தது. அனுபவி ஆகி விட்டீர்கள். இப்போது ஒவ்வொரு காரியத்திலும் இதே லட்சியம் வையுங்கள் -அனைவரின் சகயோகத்தின் மூலம் வெற்றி -பிராமணர்களுக்காக இந்தத் தலைப்பு. மற்றப்படி உலக மக்களுக்காகத் தலைப்பு -அனைவரின் சகயோகத்தால் சுகமய உலகம்.

நல்லது. இப்போதோ உங்கள் அனைவரின் வெற்றியினுடைய பிரத்தியட்ச ரூபம் காணப்படும். ஏதாவது கெட்டுப்போன காரியமும் கூட உங்கள் திருஷ்டியால், உங்கள் சகயோகத்தால் சகஜமாக முடிந்து விடும். இதன் காரணத்தால் பக்தியில் போற்றி போற்றி எனச் சொல்லி அழைப்பார்கள். இந்த அனைத்து வெற்றிகளும் கூட உங்கள் முன்னால் பிரத்தியட்ச ரூபத்தில் வரும். எந்த ஒரு சித்தியின் ரீதியிலும் நீங்கள்

சொல்ல மாட்டீர்கள் -ஆம், இது நடந்து விடும் என்று ஆனால் உங்கள் வழி காட்டுதல் தானாகவே வெற்றி பெற வைத்துக் கொண்டே இருக்கும். அப்போது தான் பிரஜைகள் சீக்கிரம் -சீக்கிரமாகத் தயாராவார்கள். அனைத்துத் தரப்பிலும் இருந்து வெளிப்பட்டு உங்கள் பக்கம் வருவார்கள். இந்த சித்தியின் பாகம் (நினைத்ததை நடத்திக் காட்டும் வித்தை) இப்போது நடைபெறும் ஆனால் முதலில் அவ்வளவு சக்திசாலி ஆகுங்கள் -சித்தியை ஸ்வீகாரம் செய்யாதீர்கள். அப்போது தான் இந்தப் பிரத்தியட்சதா (வெளிப்படுத்துதல்) நடைபெறும். இல்லையென்றால் சித்தி கொடுப்பவரே சித்தியில் சிக்கிக் கொள்வாரானால் பிறகு என்ன செய்வீர்கள்? ஆக, இந்த அனைத்து விஷயங்களும் இங்கிருந்தே தொடங்க வேண்டும். பாபாவுக்கான மகிமை -அதாவது அவர் சர்ஜனாகவும் இருக்கிறார், இஞ்சினியராகவும் இருக்கிறார், வக்கீலாகவும் இருக்கிறார், நீதிபதியாகவும் இருக்கிறார் என்பத னுடைய நடைமுறை அனைத்தும் அனுபவம் செய்வார்கள். அப்போது அனைத்துத் தரப்பிலிருந்தும் புத்தியை நீக்கி ஒரு பக்கமாகச் செலுத்துவார்கள். இப்போதோ உங்களுக்குப் பின்னால் பெருங்கூட்டம் கூடப்போகிறது. பாப்தாதாவோ இந்தக் காட்சியைப் பார்க்கிறார் மற்றும் அவ்வப்போது இப்போதைய காட்சியையும் பார்க்கிறார் -அதற்கும் இதற்கும் அதிக வேறுபாடு உள்ளது. நீங்கள் யாரென்பது பாபாவுக்குத் தெரியும். மிகமிக அற்புதமான பாகம் இப்போது நடைபெறப் போகிறது. அது உங்கள் நினைவிலோ கனவிலோ கூட இருந்திருக்காது. கொஞ்சம் நின்று போயிருக்கிறது, அவ்வளவு தான். எப்படி திரை அவ்வப்போது தடைப்பட்டு விடுகிறது இல்லையா? கொடியையும் ஏற்றி வைக்கிறீர்கள் என்றால் அதுவும் சில நேரம் தடைப்பட்டு விடுகிறது. நீங்கள் யாராக இருக்கிறீர்கள், எப்படி இருக்கிறீர்கள் -மிகப் பெரிய மகான்கள் நீங்கள். உங்கள் விசேஷத் தன்மை பிரத்தியட்சமாகும் போது இஷ்டதேவ் -தேவி ஆவீர்கள். கடைசியிலோ பக்த மாலையும் பிரத்தியட்சமாகும் இல்லையா? ஆனால் முதலில் சிலை அலங்கரிக்கப்பட்டுத் தயாராக வேண்டும் -அப்போது தான் பக்தர்கள் வருவார்கள் இல்லையா? நல்லது.

**வரதானம்: தனது ஓய்வைக் கூடத் தியாகம் செய்து சேவை செய்யக்கூடிய சதா திருப்தியான, சதா மகிழ்ச்சியானவர் ஆகுக!**

சேவாதாரி தனது இரவு -பகல் ஓய்வையும் கூடத் தியாகம் செய்து சேவையிலேயே ஓய்வை அனுபவம் செய்வார்கள். அவர்களின் தொடர்பில் இருப்பவர்கள் அல்லது சம்மந்தத்தில் வருபவர்கள் அந்த மாதிரி சமீபத்தின் அனுபவம் செய்வார்கள் -எப்படி குளிர்ச்சி மற்றும் சக்தி, சாந்தியின் அருவிக்குக் கீழே அமர்ந்திருப்பது போல். சிரேஷ்ட சரித்திரவான் சேவாதாரிகள் காமதேனு ஆகி, சதா காலத்திற்கும் அனைவரின் மன விருப்பங்களைப் பூர்த்தி செய்வார்கள். அத்தகைய சேவாதாரிகளுக்கு சதா மகிழ்ச்சியாக, சதா திருப்தியாக இருப்பதற்கான வரதானம் தானாகவே கிடைத்து விடும்.

**சுலோகன்: ஞான சொரூபம் ஆக வேண்டுமானால் ஒவ்வொரு சமயமும்படிப்பின் மீது கவனம் வையுங்கள். பாபா மற்றும்படிப்பின் மீது சமமான அன்பு இருக்க வேண்டும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 02.11.1987 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சுயமாற்றத்திற்கு ஆதாரம் -உண்மையான உள்ளத்துடன் உணருதல்!

இன்று உலகை மாற்றுபவர், உலகிற்கு நன்மை செய்பவர் பாப்தாதா தனது அன்பான, சகயோகி, உலகை மாற்றும் குழந்தைகளை பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொருவரும் சுய மாற்றத்தின் மூலம் உலகை மாற்றும் சேவையில் ஈடுபட்டிருக்கிறீர்கள். இந்த உலகை மாற்றியே தீர வேண்டும் என்ற ஒரே ஒரு ஆர்வம் -உற்சாகம் தான் அனைவரின் மனதில் இருக்கிறது. மேலும் மாற்றம் நடந்தே தீரும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது. அதாவது மாற்றம் ஏற்பட்டு விட்டது என்றே கூறலாம். நிமித்தமானவர்களாக ஆகி பாப்தாதாவிற்கு சகயோகிகளாக, சகஜயோகிகளாக ஆகி நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தைத சிரேஷ்டமானதாக ஆக்கிக் கொண்டிருக்கிறீர்கள்.

இன்று பாப்தாதா நாலா புறங்களிலும் உள்ள உலக மாற்றத்திற்கு நிமித்தமாக இருக்கும் குழந்தை களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். விசே'மாக ஒரு விசயத்தை பார்த்துக் கொண்டிருந்தார் -அனைவரும் ஒரே ஒரு காரியத்திற்குத் தான் நிமித்தமாக இருக்கிறீர்கள், இலட்சியமும் அனைவருக்கும் சுயமாற்றம் மற்றும் உலக மாற்றமாகத் தான் இருக்கிறது. ஆனாலும் சுயமாற்றம் மற்றும் உலக மாற்றத்திற்கு நிமித்தமாக இருந்தாலும் வரிசைக்கிரமம் ஏன் ஏற்படுகிறது? சில குழந்தைகள் சுயமாற்றம் வெகு எளிதாக மற்றும் விரைவில் செய்து கொள்கின்றனர். சிலர் மாறுவதற்கான சங்கல்பம் செய்கின்றனர் ஆனால் சுயத்தின் சன்ஸ்காரம் அல்லது மாயை மற்றும் இயற்கையின் மூலம் வரக் கூடிய பிரச்சனைகள் அல்லது பிராமண குடும்பத்தின் மூலம் தீர்க்க வேண்டிய கணக்கு வழக்கு போன்றவைகள் சிரேஷ்ட மாற்றத்தின் ஆர்வத்தை பலவீனமாக ஆக்கி விடுகிறது. சில குழந்தைகள் மாற்றம்

கொண்டு வரும் தைரியத்தில் பலவீனமாக இருக்கின்றனர். எங்கு தைரியம் இல்லையோ, அங்கு ஆர்வம், உற்சாகம் இருக்காது. மேலும் சுயமாற்றம் இன்றி உலக மாற்றத்திற்கான காரியத்தில் விரும்பிய வெற்றி கிடைக்காது. ஏனெனில் இந்த அலௌகீக ஈஸ்வரிய சேவையானது ஒரே நேரத்தில் மூன்று வகையான சேவையின் பலனாகும். அந்த மூன்று வகையான சேவை எது? ஒன்று -விருத்தி, இரண்டாவது -வைபிரேசன், மூன்றாவது -வார்த்தை. மூன்றும் சக்திசா -யாக, நிமித்தமாக, நிர்மாணம் (உருவாக்குதல்) மற்றும் சுய நலமின்றி இருத்தல் -இதன் ஆதாரத்தில் தான் விரும்பிய வெற்றி கிடைக்கும். இல்லையெனில் சேவை நடைபெறும், தனக்கும், பிறருக்கும் சேவையின் வெற்றிக்கான குஷி சிறிது காலத்திற்கு ஏற்படும் ஆனால் பாப்தாதா கூறும் விரும்பிய வெற்றி கிடைக்காது. குழந்தைகளின் குஷியில் பாப்தாதாவும் குஷியடைந்து விடுகின்றார் ஆனால் திலாராமின் உள்ளத்தில் உண்மையான ரிசல்ட் அவசியம் குறிக்கப்படுகிறது. சபாஷ், சபாஷ் என்று அவசியம் கூறுவார். ஏனெனில் தந்தை ஒவ்வொரு குழந்தையின் மீதும் வரதானி திருஷ்டி மற்றும் விருக்தி வைத்திருக்கின்றார் -இந்த குழந்தை இன்று இல்லையெனில் நாளை வெற்றி சொரூபமான வராக ஆகியே தீருவார் ஆனால் வரதாதாவின் கூடவே ஆசிரியராகவும் இருக்கின்றார். ஆகையால் வரக் கூடிய நாட்களுக்காக கவனமும் ஏற்படுத்துகின்றார்.

இன்று பாப்தாதா உலக மாற்றத்திற்கான காரியம் மற்றும் உலகை மாற்றும் குழந்தைகளின் ரிசல்ட் பார்த்துக் கொண்டிருந்தார். விருத்தி ஆகிக் கொண்டிருக்கிறது, ஓசை நாலா புறமும் பரவிக் கொண்டிருக்கிறது, பிரத்ட்சதாவின் திரை திறக்கவும் ஆரம்பமாகி விட்டது. நாலா புறங்களிலும் உள்ள ஆத்மாக்களிடம் இப்போது ஆசை உருவாகிக் கொண்டிருக்கிறது -அருகில் சென்ற பார்க்க வேண்டும். கேட்ட விசயங்களை இப்போது பார்க்க வேண்டும் என்ற மாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இவ்வாறு அனைத்தும் மாறிக் கொண்டிருக்கிறது. இருப்பினும் நாடகப்படி இன்று வரை தந்தை மற்றும் நிமித்தமாக இருக்கும் சில ஆத்மாக்களின் சக்திசா -யான பிரபாவம் தான் இப்போது தென்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒருவேளை அதிகபட்சமானவர்கள் இந்த விதியின் மூலம் வெற்றியை பிராப்தியாக அடைந்து விட்டால் மிக விரைவில் அனைத்து பிராமணர்களும் வெற்றி சொரூபமாக பிரத்ட்சம்

ஆகி விடுவீர்கள். பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார் -மனதிற்குப் பிரியமான, உலகிற்குப் பிரியமான, தந்தைக்குப் பிரியமான வெற்றிக்கு ஆதாரம் “சுயமாற்றத்தில்” இப்போது குறை இருக்கிறது. மேலும் சுயமாற்றத்தில் ஏன் குறை இருக்கிறது? அதற்கு மூல ஆதாரம் ஒரு விசேஷ சக்தி யில் குறை இருக்கிறது. அந்த விசேஷ சக்தி உணரும் சக்தியாகும். (ரியலைசேஷசன்).

எந்த ஒரு மாற்றத்திற்கும் எளிய ஆதாரம் உணரும் சக்தியாகும். எதுவரை உணரும் சக்தி வர வில்லையோ, அதுவரை அனுபவம் ஏற்படாது. மேலும் எதுவரை அனுபவம் இல்லையோ, அதுவரை பிராமண வாழ்க்கையின் விசே‘தா என்ற அஸ்திவாரம் உறுதியாக இருக்காது. ஆரம்பத்தி -ருந்து தனது பிராமண வாழ்க்கையை எதிரில் கொண்டு வாருங்கள்.

முதல் மாற்றம் -நான் ஆத்மா, தந்தை என்னுடையவர் -இந்த மாற்றம் எதன் ஆதாரத்தில் ஏற்பட்டது? நான் ஆத்மா, இவர் தான் என்னுடைய தந்தை என்பதை உணரும் போது. ஆக உணருதல் என்பது அனுபவத்தை ஏற்படுத்துகிறது. அப்பொழுது தான் மாற்றம் ஏற்படுகிறது. எதுவரை உணர வில்லையோ, அதுவரை சாதாரண முறையில் நடந்து கொள்கிறீர்கள். எந்த நேரத்தில் உணரும் சக்தி அனுபவியாக ஆக்குகிறதோ, அப்போது தீவிர முயற்சியாளர்களாக ஆகி விடுகிறீர்கள். இவ்வாறு எந்த ஒரு மாற்றத்திற்கான விசே‘ விசயம் -அது படைப்பவரைப் பற்றி இருக்கலாம், படைப்புகளைப் பற்றி இருக்கலாம், எதுவரை ஒவ்வொரு விசயத்தையும் உணரவில்லையோ -ஆம், இது அதே நேரமாகும், அதே யோகா ஆகும், நானும் அதே சிரேஷ்ட ஆத்மா -அதுவரை ஆர்வம், உற்சாகத்துடன் நடந்து கொள்ள முடியாது. சிலருக்கு சூழ்நிலையின் பிரபாவத்தினால் சிறிது காலத்திற்கு மாற்றம் ஏற்படும் ஆனால் சதா காலத்திற்கு இருக்காது. உணரும் சக்தியானது சதா காலத்திற்கும் எளிதாக மாற்றம் செய்து விடும்.

இதே போன்று சுய மாற்றத்திலும் எதுவரை உணரும் சக்தியில்லையோ, அதுவரை சதா காலத்திற்கான சிரேஷ்ட மாற்றம் ஏற்பட முடியாது. இதற்கு விசே‘மாக இரண்டு விசயங்களை உணர வேண்டும். ஒன்று தனது பலவீனங்களை உணர வேண்டும். இரண்டாவது -எந்த ஒரு பிரச்சனை அல்லது மனிதன் நிமித்தமாக இருக்கிறாரோ, அவரது ஆசை மற்றும்

அவரது மனதின் பாவனை அல்லது அவரது பலவீனம் அல்லது அவரது மயக்க நிலையை உணருதல். பிரச்சனைகள் என்ற பேப்பரின் காரணத்தை அறிந்து தன்னை தேர்ச்சியாக்கும் சிரேஷ்ட சொரூபத்தை உணர வேண்டும் -நான் சிரேஷ்டமானவன், சுய ஸ்திதி சிரேஷ்டமானது, பிரச்சனைகள் டெஸ்ட் பேப்பர் ஆகும். இதை உணரும் போது மாற்றம் எளிதாக ஏற்பட்டு விடும், மேலும் தேர்ச்சி அடைந்து விடுவீர்கள். மற்றவர்களது ஆசை மற்றும் மற்றவர்களது சுய முன்னேற்றத்தை உணருவதும் தனது சுய முன்னேற்றத்திற்கு ஆதாரமாக இருக்கிறது. ஆக சுய முன்னேற்றம் என்பது உணரும் சக்தியில்லாமல் ஏற்பட முடியாது. இதிலும் ஒன்று உண்மையான உள்ளத்துடன் உணருதல், மற்றொன்று சாமர்த்தி யமான உணருதலும் இருக்கிறது. ஏனெனில் அதிகம் ஞானம் நிறைந்தவர்களாக ஆகி விட்டீர்கள். ஆக நேரத்தைப் பார்த்து தனது காரியத்தை நிறைவேற்றிக் கொள்ள, தனது பெயரை பிரபலபடுத்திக் கொள்வதற்காக அந்த நேரத்தில் உணரவும் செய்கிறீர்கள் ஆனால் அந்த உணர்த -ல் மாறக் கூடிய அளவிற்கு சக்தி இருப்பது கிடையாது. எனவே உள்ளப்பூர்வமான உணர்தல் திலாராமின் ஆசிர்வாதம் செய்ய வைக்கிறது, சாமர்த்தியமான உணர்தல் சிறிது காலத்திற்காக மற்றவர்களை குஷிப்படுத்தி விடுகிறது, தன்னையும் குஷிப்படுத்தி விடுகிறது.

மூன்றாவது வகையான உணர்தல் -இது சரியல்ல என்று மனம் ஏற்றுக் கொள்கிறது, இது யதார்த்தம் அல்ல என்று விவேகம் கூறுகிறது. ஆனாலும் வெளியில் தன்னை மகாரதி என்று நிரூபணம் செய்வதற்காக, குடும்பத்தினரிடம் தனது பெயரை குறைத்துக் கொள்ளாமல் இருப்பதற்காக விவேகத்தை கொன்று விடுகின்றனர். இவ்வாறு விவேகத்தை கொல்வதும் பாவமாகும். எவ்வாறு தற்கொலை செய்து கொள்வது மகாபாவமோ, அவ்வாறு இதுவும் பாவக் கணக்கில் சேர்ந்து விடுகிறது. ஆகையால் பாப்தாதா புன்னகைத்துக் கொண்டே இருக்கின்றார். மேலும் அவர்களது மன உரை யாடலையும் கூறிக் கொண்டிருக்கின்றார். மிக அழகான உரையாடல் ஆகும். மூல விசயம் என்னவெனில் யாருக்கு என்ன தெரியும், இவ்வாறு தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது ...... என்று நினைக்கின்றனர் ஆனால் ஒவ்வொரு இலையைப் பற்றி தந்தைக்குத் தெரியும். வாயின் மூலம் கூறினால் தெரியும் என்பது கிடையாது. தந்தை அறிந்திருந்தாலும் அறியாதவர்

போல்கள்ளங்கபட மற்ற போலாநாத் ரூபத்தில் குழந்தைகளை நடத்துகின்றார். அறிந்திருந்தும் ஏன்கள்ளங்கபடமற்று இருக்கின்றார்? ஏனெனில் தந்தை கருணையுள்ளம் உடையவர். மேலும் பாவம் அதிகரித்து விடக் கூடாது என்று கருணை காட்டுகின்றார். புரிந்ததா? இப்படிப்பட்ட குழந்தைகள் சாமர்த்தியமுள்ள தந்தையிடத்திலும் அதாவது நிமித்த ஆத்மாக்களிடத்திலும் மிகவும் சாமர்த்தியமானவர்களாக ஆகி விடுகின்றனர். ஆகையால் தந்தை கருணை உள்ளமுடையவராக,கள்ளங்கபடமற்றவராக ஆகி விடுகின்றார்.

பாப்தாதாவிடம் ஒவ்வொரு குழந்தையின் கர்மம், மனதின் சங்கல்பங்களின் கணக்குகள் ஒவ்வொரு நேரத்திலும் தெளிவாக இருக்கிறது. உள்ளத்தை அறிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை ஆனால் ஒவ்வொரு குழந்தையின் உள்ளம் பட படக்கும் சித்திரம் தெளிவாகவே இருக்கிறது. அதனால் தான் -நான் ஒவ்வொரு குழந்தையின் உள்ளத்தை அறிந்து கொள்ளவில்லை என்று கூறுகின்றார். ஏனெனில் அறிந்து கொள்ள வேண்டிய அவசியமே கிடையாது, தெளிவாக இருக்கிறது. ஒவ்வொரு நேரத்திலும் உள்ளத்தின் பட படப்பு மற்றும் மனதில் சங்கல்பங்களின் சார்ட் பாப்தாதாவின் எதிரில் இருக்கிறது. சொல்ல முடியாது என்று கிடையாது. நேரம், சொல்லவும் முடியும். நாள், நேரம், இடம் மற்றும் என்ன என்ன செய்தீர்கள் -அனைத்தும் கூறி விட முடியும் ஆனால் அறிந்திருந்தாலும் அறியாதவர் போன்று இருக்கின்றேன். ஆக இன்று முழு சார்ட் பார்த்தார்.

சுய மாற்றம் தீவிர வேகத்தில் ஏற்படாததற்குக் காரணம் “உண்மையான உள்ளத்துடன் உணர்தல்” என்பதில் குறை இருக்கிறது. உணரும் சக்தியானது மிகவும் இனிய அனுபவம் செய்விக்கிறது என்பதை உணர்கிறீர்கள் தானே! சில நேரம் தன்னை தந்தையின் கண்ணின் மணியான ஆத்மா அதாவது கண்ணுக்குள் கலந்திருக்கும் சிரேஷ்ட பிந்து என்று உணருங்கள். கண்களில் பிந்து தான் கலந்திருக்க முடியும், சரீரம் கலந்திருக்க முடியாது. சில நேரம் தன்னை நெற்றியில் ஜொ -க்கும் நெற்றி மணி, ஜொ -க்கும் நட்சத்திரம் என்பதை உணருங்கள். சில நேரங்களில் தன்னை பிரம்மாபாபாவின் சகயோகி, வலது கரமாக, சாகார பிராமண ரூபத்தில் பிரம்மாவின் புஜங்களாக அனுபவம் செய்யுங்கள், உணருங்கள். சில நேரங்களில் அவ்யக்த பரிஸ்தா சொரூபத்தை

உணருங்கள். இவ்வாறு உணரும் சக்தியின் மூலம் அதிக விசித்திரமான, அலௌகீக அனுபவம் செய்யுங்கள். ஞானத்தின் ரீதியில் வர்ணனை மட்டுமே செய்யாதீர்கள், உணருங்கள். இந்த உணர்தல் சக்தியை அதிகப்படுத்துங்கள். அப்போது பலவீனங்களை உணர்தல் என்பது தானாகவே தெளிவாகி விடும். சக்திசா -யான கண்ணாடிவில் ஒரு சிறிய கறை கூட தெளிவாக தென்படும், மேலும் மாற்றம் செய்து விடுவர். ஆக புரிந்து கொண்டீர்களா, சுய மாற்றத்திற்கு ஆதாரம் உணர்தல் சக்தியில் இருக்கிறது. சக்தியை காரியத்தில் பயன்படுத்துங்கள், எண்ணிக்கையில் குஷியடைந்து விடாதீர்கள் -ஆம், இந்த சக்தியும் இருக்கிறது, இந்த சக்தியும் இருக்கிறது ஆனால் தனக்காக, அனைவருக்காக, சேவைக்காக சதா ஒவ்வொரு காரியத்திலும் பயன்படுத்துங்கள். புரிந்ததா? தந்தை இந்த காரியம் மட்டுமே செய்து கொண்டு இருக்கின்றாரா என்ன? என்று சில குழந்தைகள் கேட்கின்றனர் ஆனால் தந்தை என்ன செய்வார்? தன்னுடன் அழைத்து சென்றே ஆக வேண்டும். கூடவே அழைத்துச் செல்ல வேண்டும் எனில் கூட செல்பவர்களும் இவ்வாறு இருக்க வேண்டும் அல்லவா! ஆகையால் தான் பார்த்துக் கொண்டிருக்கின்றார் மற்றும் செய்திகளை கூறிக் கொண்டிருக்கின்றார் -துணையாக வருபவர்கள் சமமாக ஆகி விட வேண்டும். பின்னால் வருபவர்களுக்கான விசயமே கிடையாது, அவர்கள் அதிகமானவர்களாக இருப்பார்கள் ஆனால் கூடவே இருப்பவர்கள் சமமாக இருக்க வேண்டும் அல்லவா! நீங்கள் கூடவே வருபவர்களா? அல்லது ஊர்வலத்தில் வருபவர்களா? ஊர்வலம் மிகவும் நீளமாக இருக்கும். அதனால் தான் சிவனின் ஊர்வலம் மிகவும் பிரபலமானதாக இருக்கிறது. ஊர்வலத்தில் பல விதங்கள் இருக்கும் ஆனால் கூட இருப்பவர்கள் அவ்வாறு இருக்க வேண்டும் அல்லவா! நல்லது.

இது ஈஸ்டர்ன் ஜோன். ஈஸ்டர்ன் ஜோன் என்ன செய்து கொண்டிருக்கிறது? பிரத்யட்சதா என்ற சூரியன் எங்கிருந்து உதயம் செய்ய வைப்பீர்கள்? தந்தையிடம் பிரத்யட்சதா ஏற்பட்டு விட்டது. அந்த விசயம் இப்போது பழசாகி விட்டது ஆனால் இப்பொழுது என்ன செய்வீர்கள்? பழைய சிம்மாசனம் -இந்த போதை நன்றாக இருக்கிறது ஆனால் இப்பொழுது என்ன செய்வீர்கள்? இப்பொழுது ஏதாவது புதுமை என்ற சூரியனை உதயமாக்குங்கள். அனைவரின் வாயிசிருந்தும் இந்த ஈஸ்டர்ன் ஜோனி -ருந்து புதுமை என்ற சூரியன் உதயமாகியிருக்கிறது வெளிப்பட

வேண்டும். எந்த ஒரு காரியம் இது வரை யாரும் செய்யவில்லையோ அதை இப்பொழுது செய்து காண்பியுங்கள். நிகழ்ச்சி, செமினார் செய்திருக்கிறீர்கள், முக்கிய நபர்களுக்கு (ஐ.பி) சேவை செய்தீர்கள், செய்தித்தாள்களில் வெளியிட்டீர்கள் -இதை அனைவரும் செய்கின்றனர் ஆனால் புதுமைக்கான ஜொ -ப்பு ஏதாவது செய்து காட்டுங்கள். புரிந்ததா!

தந்தையின் வீடு தனது வீடு ஆகும். ஓய்வான அனைவரும் வந்து சேர்ந்து விட்டீர்கள். உள்ளத்தின் ஓய்வு ஸ்தூல ஓய்வு கொடுக்கிறது. உள்ளத்தில் ஓய்வு இல்லையெனில் ஓய்விற்கான சாதனங்கள் இருந்தாலும் ஓய்வின்றி இருப்பீர்கள். உள்ளத்தின் ஓய்வு என்றால் உள்ளத்தில் சதா இராமர் சதா துணையாக இருக்கின்றார். ஆகையால் எந்த ஒரு பிரச்சனையின் போதும் ஓய்வை அனுபவம் செய்கிறீர்கள். ஓய்வாக இருக்கிறீர்கள் அல்லவா! அல்லது வந்து செல்வது ஓய்வற்றதாக தோன்றுகிறதா? இருப்பினும் இனிமையான நாடகம் என்பதை புரிந்து கொள்ளுங்கள். மேளா கொண்டாடிக் கொண்டு இருக்கிறீர்கள் அல்லவா! தந்தையை சந்திப்பது, பரிவாரத்தை சந்திப்பது -இந்த மேளா செய்வதும் நிச்சயிக்கப்பட்ட இனிமையான ஒன்றாகும். நல்லது.

சர்வசக்திசாலியான சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, ஒவ்வொரு சக்தியையும் தகுந்த நேரத்தில் காரியத்தின் பயன்படுத்தக் கூடிய அனைத்து தீவிர முயற்சியாளர் குழந்தைகளுக்கு, சதா சுய மாற்றத்தின் மூலம் சேவையின் மனம் விரும்பும் வெற்றி அடையக் கூடிய தில்குஷ் குழந்தைகளுக்கு, சதா திலாராம் தந்தையிடம் உண்மையான உள்ளத்துடன் தெளிவாக இருக்கக் கூடிய வெற்றி சொரூப சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு திலாராம் பாப்தாதாவின் உள்ளப்பூர்வமான அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

**பார்ட்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:** சதா தன்னை தந்தையின் நினைவு என்ற குடைக்குள் இருக்கக் கூடிய விசேஷ ஆத்மா என்று அனுபவம் செய்கிறீர்களா? எங்கு தந்தையின் குடை இருக்கின்றதோ, அங்கு சதா மாயையிடமிருந்து பாதுகாப்பாக இருப்பீர்கள். குடைக்குள் மாயை வரவே முடியாது. கடின உழைப்பிலிருந்து தானாகவே தூர விலகி விடுவீர்கள். சதா போதையுடன் இருப்பீர்கள். ஏனெனில் எப்போது கடின உழைப்பு ஏற்படுகிறதோ, அந்த உழைப்பானது போதையின் அனுபவம் செய்விக்காது. குழந்தைகள்

படிக்கின்றனர் எனில் படிப்பில் உழைப்பு இருக்கும் அல்லவா! தேர்வுக்கான நேரம் எனில் அதிக உழைப்பு செய்கின்றனர், மகிழ்ச்சியாக விளையாடமாட்டார்கள். எப்போது உழைப்பு நின்று விடுகிறதோ, தேர்வு முடிவடைந்து விடுகிறதோ, அப்போது மகிழ்ச்சியாக இருக்கின்றனர். ஆக எங்கு கடின உழைப்பு இருக்கிறதோ, அங்கு மகிழ்ச்சி இருக்காது. எங்கு மகிழ்ச்சி இருக்கிறதோ, அங்கு கடின உழைப்பு இருக்காது. குடைக்குள் இருக்கிறீர்கள் என்றால் சதா மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள். ஏனெனில் இங்கு உயர்ந்த படிப்பு படிக்கிறீர்கள் ஆனால் உயர்ந்த படிப்பாக இருந்தாலும் கூட நாம் தான் வெற்றி யாளர்கள், தேர்ச்சி கிடைத்தே விட்டது என்ற நிச்சம் இருக்கிறது. ஆகையால் மகிழ்ச்சியாக இருக்கின்றோம். கல்ப கல்பத்திற்கான படிப்பாகும், புது விசயமல்ல. ஆக சதா மகிழ்ச்சியாக இருங்க, மேலும் மற்றவர்களுக்கும் மகிழ்ச்சிக்கான செய்தி கொடுத்துக் கொண்டே இருங்கள், சேவை செய்து கொண்டே இருங்கள். ஏனெனில் சேவைக்கான பலன் இந்த நேரத்திலும் கிடைக்கிறது, எதிர்காலத் திலும் அடைகின்றோம். சேவை செய்தால் தான் பலன் கிடைக்கும்.

**விடைபெறும் நேரத்தில் -முக்கிய சகோதர, சகோதரிகளுடன்:**
பாப்தாதா அனைத்து குழந்தைகளையும் சமம் ஆக்குவதற்கான சுப பாவனையுடன் முன்னேற்ற விரும்புகின்றார். நிமித்தமாக இருக்கும் சேவாதாரிகள் பாப்சமான் ஆகியே தீர வேண்டும். எப்படி யாவது பாபாவினுடையவர்களாக ஆக்கியே தீர வேண்டும். எப்படியாவது தந்தையினுடையவர்களாக ஆக்கியே தீர வேண்டும். ஏனெனில் இப்படி அப்படி என்று இருப்பவர்களை கூடவே அழைத்துச் செல்லமாட்டார். தந்தைக்கும் கௌரவம் இருக்கிறது அல்லவா! தந்தை சம்பன்னமாக இருக்கின்றார், ஆனால் கூட இருப்பவர்கள் முடமாக, கூனியாக இருந்தால் அழகாக இருக்காது. முடம், கூனியாக இருப்பவர்கள் ஊர்வலத்தில் வருவார்கள், கூடவே வரமாட்டார்கள். அதனால் தான் சிவனின் ஊர்வலத்தில் கூனி, முடம் என்று காண்பித்திருக்கின்றனர். ஏனெனில் சில பலவீன ஆத்மாக்கள் தர்மராஜபுரியை கடந்து சென்ற தகுதியானவர்களாக ஆவார்கள். நல்லது.

# 1987 அவ்யக்த முரளி

**வரதானம்: சேவையின் மேடையில் கரைத்துக் கொள்ளும் சக்தியின் (அனுசரிக்கும் சக்தியின்) மூலம் வெற்றி மூர்த்தியாக ஆகக் கூடிய மாஸ்டர் வள்ளல் ஆகுக!**

சேவையின் மேடைக்கு வரும் பொழுது பல விதமான விசயங்கள் வருகின்றன, அந்த விசயங்களை தனக்குள் கரைத்துக் கொண்டார் (அனுசரித்துக் கொண்டால்) வெற்றி மூர்த்திகளாக ஆகி விடுவீர்கள். கரைப்பது என்றால் சங்கல்பத்திலும் எந்த வீண் விசயங்கள் மற்றும் உணர்வுகள் துளியளவும் இருக்கக் கூடாது. நன்மையற்ற விசயங்களை நமைக்குரியதாக மாற்றி விடுங்கள், அதாவது நன்மையற்ற வார்த்தைகள் ஒன்றும் இல்லை என்றாகி விட வேண்டும். அவகுணங்களை குணங்களாக, நிந்தனையை புகழாக மாற்றி விடுங்கள். அப்போது தான் மாஸ்டர் கடல் என்று கூற முடியும்.

**சுலோகன்: விஸ்தாரத்தைப் பார்க்காமல் சாரத்தை பார்ப்பது மற்றும் தனக்குள் கரைத்துக் கொள்பவர்களே தீவிர முயற்சியாளர்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 06.11.1987 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நிரந்தர சேவாதாரி ஆவதற்கான சாதனம் -நான்கு விதமான சேவைகள்!

இன்று விஷ்வ கல்யாணக்காரி (உலகத்திற்கு நன்மை செய்யக் கூடிய). விஷ்வ சேவாதாரி யான பாபா தனது ஒவ்வொரு குழந்தைகளும் நிரந்தர சகஜயோகியின் கூடவே எந்தளவு நிரந்தர சேவாதாரியாக இருக்கிறார்கள்? என்று விஷ்வ சேவாதாரி, சகபோகியான அனைத்து குழந்தை களையும் பார்த்துக் கொண்டிருந்தார். ஏனெனில் நினைவு மற்றும் சேவை -இரண்டின் பேலன்ஸ் (சமநிலை) சதா பிராமண வாழ்க்கையில் பாப்தாதா மற்றும் அனைத்து சிரேஷ்ட பிராமண ஆத்மாக்கள் மூலம் ஆசீர்வாதத்திற்கு தகுதியுடைவராக மாற்றுகிறது. இந்த சங்கமயுகத்தி மட்டும் தான் பிராமண வாழ்க்கையில் பரமாத்மாவின் ஆசீர்வாதமும், பிராமண குடும்பத்தின் ஆசீர்வாத மும் அடைய முடியும். ஆசையால் இந்த சிறிய கால வாழ்க்கையில் அனைத்து பிராப்திகளையும் சதா காலத்தின் பிராய்திகள் எளிதாக கிடைத்து விடுகிறது. இந்த சங்கமயுகத்தை விசேஷமாக ஆசீர்வாதங்களின் யுகம் என்று சொல்லப்படுகிறது. ஆகையால் தான் இந்த யுகத்தை மகான் யுகம் என்று சொல்லபடுகிறது. சுயம் தந்தை ஒவ்வொரு சிரேஷ்ட கர்மத்தின். ஒவ்வொரு சிரேஷ்ட எண்ணத்தின் ஆதாரத்தில் ஒவ்வொரு பிராமணர் குழந்தைகளுக்கும் ஒவ்வொரு சமயமும் மனகார ஆசீர்வாதம் கொடுத்துக் கொண்டேயிருக்கிறார். இந்த பிராமண வாழ்க்கையில் பரமாத்மா ஆசீர்வாதத்தின் பாலணையின் (வளர்ப்பு) மூலம் வளர்ச்சியை அடையக் கூடிய வாழ்க்கையாக இருக்கிறது.கள்ளம் கபடமற்ற பாபா அனைவருக்கு ஆசர்வாதங்களின் பைகளை திறந்த மனதோடு குழந்தைகளுக்கு கொடுத்துக் ன்டிருக்கிறார். னால் அனைத்து ஆசீர்வாதங் களையும் பெறுவதற்கான ஆதாரம் -நினைவு மற்றும் சேலையின் சமநிலையாகும். ஒருவேளை நிரந்தர போசி ஆகவேண்டுமென்றால் கூடவே நிரந்து சேவாதரியாகவும் இருக்க வேண்டும், சேவையின் மகத்துவம் சதா புத்தியில் இருக்கிறதா?

# 1987 அவ்யக்த முரளி

-சேவையின் வாய்ப்பு கிடைக்கும் பொழுது, அல்லது ஏதாவது சாதனம் மற்றும் சமயம் கிடைக்கும் பொழுது தான் சேவை செய்ய முடியும் என்று பல குழந்தைகள் புரிந்து கொள்கிறார்கள் ஆனால் பாப்தாதா நிரந்தரமான நினைவை எளிதாக அனுபவம் செய்ய வைப்பதை போன்று, சேவையை கூட நிரந்தரமாகவும் சகஜமாகவும் செய்ய முடியும். எனவே இன்று பாப்தாதா சேவாதாரி குழந்தைகளின் சேவைக்கான சார்டை பார்த்துக் கொண்டிருந்தார். நிரந்தர சேவாதாரி ஆகாதவரை சதா ஆசீர்வாதங்களின் அனுபவசாலி ஆக முடியாது. நேரத்திற்கு தகுந்தபடி, சேவையின் வாய்ப்பிற்கு தகுந்தபடி, நிகழ்ச்சிகளுக்கு தகுந்தபடி சேவை செய்கிறீர்கள், அந்த சபாயத்தில் சேவையின் பலனை பயாவின் மூலம் குடும்பத்தின் ஆசீர்வாதம் மற்றும் வெற்றியை அடைகிறீர்கள், ஆனால் அது சதா காலத்திற்காக அல்ல, எனவே அவ்வப்பொழுது ஆசீர்வாதத்தின் காரணத்தினால் எளிதாகவே தானாகவே சேவையில் முன்னேற்றத்தை அனுபவம் செய்கிறீர்கள், மேலும் அவ்வப்பொழுது கடின முயற்சிக்கும் பிறகு வெற்றியை அனுபவம் செய்கிறீர்கள், ஏனென்றால் நிரந்தர நினைவு மற்றும் சேலையின் சமநிலை இருப்பதில்லை. இன்று அந்த சேவையின் மகத்துவத்தை சொல்லிக் கொண்டிருக்கிறார்.

முழு நாளில் வித விதமான முறையில் சேவை செய்ய முடியும். இதில் முதலாவது -சுயத்தின் சேவை அதாவது தன்மீது சம்பன்ன மானவராகவும் சம்பூரணமமானவராகவும் ஆவதற்கான சதா கவனம் வைப்பது, உங்களுடைய இந்த படிப்பில் என்னவெல்லாம் முக்கிய பாடங்களாக இருக்கிறதோ, அந்த அனைத்திலும் தன்னை பாஸ் வித் (தகுதியுடன் தேர்ச்சி பெறுதல்) ஆனராக ஆக்க வேண்டும். இதில் ஞான சொரூபம். நினைவு சொரூபம், தாரணை சொரூபம் -அனைத்திலும் முழுமையானவர் ஆவது. இந்த சுய சேவை சதா புத்தியில் இருக்க வேண்டும். இந்த சுய சேவை தானாகவே உங்களின் சம்பன்ன (முழுமையான செமரூபத்தின் மூலம் சேவை செய்ய வைக்கிறது, ஆனால் இதற்கான விதி -கவனம் மற்றும் சோதனை செய்து கொள்வது. தன்னை சோதனை செய்ய வேண்டும், மற்றவர்களை செய்ய வேண்டாம். இரண்டாவது -உலக சேவையில் வித விதமான சாதனங்கள் மூலம். பல விதமான முறையில், வார்த்தைகள் மூலம் மற்றும் சம்மந்தம் தொடர்பின் மூலம் என்னவெல்லம் செய்ய வேண்டுமோ, இதை நல்ல முறையில் தெரிந்திருக்கிறோம்.

மூன்றாவது -யக்ஞ சேவை உடல் மற்றும் செல்வதில் மூலம் என்ன செய்து கொண்டிருக்கிறீர்களோ.

நான்காவது -மனதின் சேவை. தனது சுப பாவணை, சிரேஷ்ட விருப்பம், சிரேஷ்ட உள்ளுணர்வு, சிரேஷ்ட வைப்ரேஷன் மூலம் எந்த இடத்தில் இருந்தாலும் அநேக ஆத்மாக்களுக்கு சேவை செய்ய முடியும். இதற்கான விதி -லைட் ஹவுஸ், மைட் ஹவுஸ் ஆவது. லைட் ஹவுஸ் ஒரே இடத்தில் நிலையாக இருந்தாலும் கூட வெகு தொலைவிற்கு சேவை செய்கிறது. அதுபோல நீங்கள் அனைவரும் கூட ஒரே இடத்தில் இருந்துக் கொண்டே பலருக்கு சேவைக்காக நிமித்தம் ஆக முடியும். இந்த சக்திகளின் பொக்கிஷங்கள் சேமிப்பு ஆகியிருக்கிறது என்றால் எளிதாகவே செய்ய முடியும். இதில் ஸ்துவமான சாதனம் மற்றும் வாய்ப்பு அல்லது நேரத்தின் பிரச்சனை கிடையாது. லைட் மைட்டில் நிறைந்தவம் ஆவதின் அவசியம் தான் இருக்கிறது. சதா மனம் மற்றும் புத்தி வீணாக யோசிப்பதிலிருந்து விடுபட்டு இருக்க வேண்டும், மன்மனா பவ என்ற மந்திரத்தின் சொரூபம் எளிதாக ஆகி விட வேண்டும். இந்த நான்கு விதமான சேவையை நிரந்தரமாக செய்ய முடியாதா என்ன? நான்கு விதமான சேவைகளிலிருந்து ஒவ்வொரு நேரமும் ஏதாவதொரு சேலையை செய்துக் கொண்டேயிருந்தால், சகஜமாக நிரந்தர சேவாதாரி ஆகி விடலாம், மேலும் நிரந்தர சேவைகளில் தற்சமயம் இருக்கும் காரணத்தினால், சதா பிஸியாக இருக்கும் காரணத்தினால் எளிதாகவே மாயாவை வென்றவர் ஆகி விடலாம். நான்கு விதமான சேவைகளில் எந்த நேரம் எந்த சேவையை செய்ய முடியுமோ, அதை செய்யுங்கள், ஆனால் ஒரு நிமிடம் கூட சேவையின்றி இருந்து விடாதீர்கள். 24-மணி நேரமும் சேவாதாரியாக இருக்க வேண்டும். 8-மணி நேரம் யோசி மற்றும் சேவாதரியாக இருப்பதல்ல, ஆனால் நிர்ந்தர சேவபதழி. எளிதாக இருக்கிறதல்லவா? மேலும் இல்லையென்றாலும் சுயத்தின் சேவை நன்றாக இருக்கிறது. எந்த சமயம் என்ன வாய்ப்பு கிடைக்கிறதோ. அந்த சேவையை செய்ய முடியும்.

பல குழந்தைகள் சரீரத்தின் காரணத்தினால் அல்லது நேரம் கிடைக்காமல் இருக்கும் காரணத்தினால் நம்மால் சேவை செய்ய முடியாது என்று புரிந்து கொள்கிறார்கள் ஆனால் ஒருவேளை நான்கு விதமான சேவைகளிலிருந்து ஏதாவதொரு சேவையில் முறைபடி

பிஸியாக இருந்தீர்கள் என்றால் சேவையின் பாடத்தில் மதிபெண் சேமிப்பாகி விடுகிறது. மேலும் இதில் கிடைத்துள்ள நம்பர் இறுதி முடிவில் சேமிப்பாகி விடும். வார்த்தையின் மூலம் சேவை செய்யக் கூடியவர்களின் மதிபெண் சேமிப்பாவதைப் போல யக்ஞ சேவையில் மற்றும் சுய சேவை மற்றும் மனதின் சேவை -இதற்கு கூட அந்தளவு பதிப்பு இருக்கிறது, இதில் கூட இந்தளவு மதிபெண் சேமிப்பாகிறது. ஒவ்வொரு விதமான சேவையின் நம்பர் இந்தளவு கிடைக்கிறது ஆனால் யார் நான்கு விதமான சேவை செய்கிறார்களோ, அவர்களுக்கு அந்தளவு மதிப்பெண் கிடைக்கிறது. யார் ஒன்று அல்லது இரண்டு விதமான சேவை செய்கிறீர்கள், அதற்கான மதிபெண் அதற்கு தகுந்தபடி சேமிப்பாகும். ஆனாலும் கூட, ஒருவேளை நான்கு விதமான முறையில் செய்ய முடியவில்லை, இரண்டு விதமான முறையில் செய்ய முடியுமென்றால் கூட நிரந்தர சேவதாரியாக ஆகி விடலாம். எனவே நிரந்தரமாக இருக்கும் காரணத்தினால் நம்பர் அதிகரித்து விடும். ஆகையால் பிராமண வாழ்க்கை அதாவது நிரந்தர சேவாதாரி மற்றும் சகஜயோகியாக இருப்பது.

சதா நினைவில் தொடர்பு இணைந்திருக்க வேண்டுமென்று நிரந்தர நினைவிற்கு கவனம் வைப்பதைப் போன்று சேவையிலும் கூட சதா தொடர்பு இணைந்திருக்க வேண்டும். நினைவில் கூட வித விதமான மனநிலையின் அனுபவம் செய்கிறீர்கள் -அவ்வப்பொழுது விதை சொரூபம், அவ்வப்பொழுது ஃபரிஸ்தா சொரூபத்தின், மனன (சிந்தனை) சக்தியின், ஆன்மீக உரையாடல் செய்வது, ஆனால் ஸ்திதி வெவ்வேறாக இருந்தாலும் நினைவின் பாடத்தில் நிரந்தரமாக நினைவில் சேமிப்பாகிறது. அதுபோல இது கூட வித விதமான சேவையின் ரூபமாகும் ஆனால் சேவை இல்லாமல் வாழ்க்கையே இல்லை. ஒவ்வொரு மூச்சு காற்றிலும் நினைவும், ஒவ்வொரு மூச்சு காற்றிலும் சேவை செய்ய வேண்டும் -இதற்கு தான் சமநிலை என்று சொல்லபடுகிறது. அப்பொழுது தான் ஒவ்வொரு நேரத்திலு ஆசீர்வாதத்தை அடைந்துக் கொண்டிருப்பதின் அனுபவத்தை எப்பொழுதுமே செய்து கொண்டேயிருப்பீர்கள். மேலும் மனதார சதா தானாகவே ஆசீர்வாதங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்ற வார்த்தை வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கும். ஆசீர்வாதத்தின் மூலம், பறக்கும் கலையின் அனுபவத்தின் மூலம் பறந்து கொண்டேயிருக்கிறோம்.

உழைப்பிலிருந்தும் யுத்தம் செய்வதிலிருந்தும் விடுபட்டு விடுவீர்கள். என்ன, ஏன். எப்படி -இந்த கேள்விகளிலிருந்து விடுபடுகிறீர்கள், சதா மகிழ்ச்சியாகவும் இருக்கிறீர்கள். வெற்றி என்பது பிறப்பு உரிமை என்ற அதிகாரத்தில் அனுபவம் செய்துக் கொண்டேயிருப்பீர்கள். என்ன ஆகுமென்று தெரியவில்லையே. வெற்றி கிடைக்குமா கிடைக்காதா? நாம் முன்னால் போக முடியுமா, முடியாதா என்றே தெரியவில்லையே? -இந்த தெரியவில்லையே என்ற எண்ணங்கள் மாற்றி அமைத்து மாஸ்டர் திரிகாலதரிசி மனநிலையின் அனுபவம் செய்யுங்கள். வெற்றி அடைந்தே தீருவேன் -இந்த நம்பிக்கை மற்றும் நஷா சதா அனுபவம் ஆகும். இது தான் ஆசீர்வாதத்தின் அடையாங்களாக இருக்கிறது. புரிந்ததா?

பிராமண வாழ்க்கையில், மகான் தன்மையுடைய யுகத்தில் பாப்தாதாவின் அதிகாரியாக இருந்தாலும் முயற்சி செய்ய வேண்டியிருக்கிறது, எப்பொழுதுமே போராடும் மனநிலையிலேயே வாழ்க்கையை கழித்தால் -இது குழந்தைகளின் போராடும் வாழ்க்கை பாப்தாதாவினால் பார்க்க முடியவில்லை. ஆகையால் நிரந்தர யோசி, நிரந்தர சேவாதாரி ஆகுங்கள். புரிந்ததா? நல்லது.

பழைய குழந்தைகளின் ஆசைகள் பூர்த்தி அடைந்து விட்டது அல்லவா. தண்ணீருக்காக சேவை செய்யக் கூடிய சேவாதாரி குழந்தைகளுக்கு சபாஸ் (நன்றாக செய்கிறீர்கள்) அவர்கள் பல குழந்தைகளின் ஆசைகளை நிறைவேற்றுவதில் இரவும் பகலும் உதவியாளர்களாக இருக்கிறார்கள். துக்கத்தையும் கூட வென்றவர் ஆகி விட்டீர்கள், இயற்கையையும் கூட வென்று விட்டீர்கள். எனவே மதுபன் சேவமதரிகளுக்கு, திட்டத்தை உருவாக்கியவர்களாக இருந்தாலும், தண்ணீர் கொண்டு வருபவர்களாக இருந்தாலும், வருபவர்களை அன்பாக வரவேற்பவர்களாக இருந்தாலும். உணவை சமயத்தில் தயார் செய்யக் கூடியவர்களாக இருந்தாலும் -யாரெல்லாம் பலவிதமான சேவைகளில் பொறுப்பானவர்களுக்கு, அவர்கள் அனைவருக்கும் நன்றி கொடுத்தார். பார்தாதா தான் கொடுத்துக் கொண்டிருக்கிறார் அவ்லவா ஊகத்தில் தண்ணீர் தண்ணீர் என்று அலறிக் கொண்டிருக்கிறார்கள், மேலும் பாபாவின் குழந்தைகள் எவ்வளவு எளிதாக காரியத்தை செய்துக் கொண்டிருக்கிறார்கள். பாப்தாதா அனைத்து சேவாதாரி குழந்தைகளையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். எவ்வளவு அமைதியாக

# 1987 அவ்யக்த முரளி

உங்கள் அனைவருக்கும் மதுபன் நிவாசிகள் நிமித்தமாகி வாய்ப்பு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்களும் கூட உதவியாளர் ஆகியிருக்கிறீர்கள் அல்லவா? எப்படி அவர்கள் சகயோகியாகி இருக்கிறார்கள், அதனால் அவர்களுக்கு உங்களின் சகயோகம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதுபோல நீங்களும் கூட அனைவருக்கும் ஒவ்வொரு காரியத்திலும் நேரத்திற்கு தகுந்தவாறு நடந்துக் கொண்டிருக்கிறீர்கள். எனவே உங்களுக்கும் சகயோகத்தின் பலன் மற்றும் பிராமணர்களுக்கும் கூட கிடைத்துக் கொண்டிருக்கிறது.

பாப்தாதா புன்முறுவல் செய்துக் கொண்டிருந்தார் -சத்யுகத்தில் பாலாறுகளின் நதிகள் ஓடும், ஆனால் சங்கமயுகத்தில் தண்ணீர், நெய்யாக மாறி விடுகிறது அல்லவா. நெய்யாறு குழாயில் வந்துக் கொண்டிருக்கிறது. தண்ணீர் நெய் ஆகி விடுகிறது என்றால் மதிப்புடையதாகி விட்டது அல்லவா. இந்த விதியின் பலருக்கு வாய்ப்பு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் கூடபாருங்கள் உலகினருக்கும். உங்களுக்கு எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது அல்லவா. பல இடங்களிலிருந்தும் கூட உங்கள் அனைவருக்கும் மிகவும் ஒய்வு கிடைக்கிறது மேலும் பயிற்சியும் செய்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆகையால் இராஜயுக்த் (இரகசியத்தின் நுட்பத்தை தெரிந்தவர்) ஆகி ஒவ்வொரு சூழ்நிலையிலும் திருப்தியாக இருப்பதற்கான பயிற்சியை அதிகரியுங்கள். நல்லது.

அனைத்து நிரந்தர யோகி, நிரந்தர சேவாதாரியான சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா திரிகாலதரிசி ஆகி வெற்றியின் அதிகாரியாக அனுபவம் செய்யக் கூடிய, சதா மகிழ்ச்சியான, திருப்தியான சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, ஒவ்வொரு நொடியும் ஆசீர்வாதங்களின் அனுபவம் செய்யக் கூடிய குழந்தைகளுக்கு விதியை உருவாக்கக் கூடிய, வரத்தை அளிக்கக்கூடிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**தாதிஜி அவர்களிடம்**: எண்ணம் வந்தது மற்றும் அனைவருக்கும் உயர்ந்த எண்ணங்களுக்கும் பலன் கிடைத்து விடுகிறது. எவ்வளவு ஆசீர்வாதங்களின் மாலைகள் வந்தடைகிறது. யார் நிமித்தமாக இருக்கிறார்களோ அவர்களுக்கு கூட, பாபாவின் கூடவே குணத்தை வர்ணனை (புகழ் பாடுகிறார்கள் செய்கிறார்கள். எனவே தான் பாபாவின்

கூடவே குழந்தைகளையும் சேர்த்து பூஜை செய்யபடுகிறது. தனியாக பாபாவிற்கு பட்டும் நடைபெறுவதில்லை, அனைவருக்கும் எவ்வளவு குஷி கிடைத்துக் கொண்டிருக்கிறது. இந்த ஆசீர்வாதங்களின் மாலைகள் பக்தியில் மாலைகளின் அதிகாரி ஆக்கி விடுகிறது.

**பார்ட்டிகளோடு அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:** **1**. சிரேஷ்ட ஆத்மாகளாகிய நீங்கள் அனைவரும், அனைவருடைய தாகத்தை தணிக்கக் கூடியவர்களாக இருக்கிறீர்கள் அல்லவா? அவர்களிடம் ஸ்துலமான தண்ணீர், மேலும் உங்களிடம் இருப்பது -ஞான அபிம்தம். தண்ணீர் குறுகிய காலத்தின் தாகத்தை தணித்து திருப்தியான ஆத்மாவாக மாற்றி விடுகிறது. எனவே அனைத்து ஆத்மாக்களுக்கும் அமிர்தத்தின் மூலம் திருப்தி செய்வதற்கு நிமித்தமாகியிருக்கிறீர்கள் அல்லவா. இந்த உற்சாகம் சதா இருக்கிறது அல்லவா. ஏனெனில் தாகம் தீர்ப்பது -மகான் புண்ணியமாகும். தாகத்தில் இருப்பவரின் தாகத்தை தணிக்கக் கூடியவர்களை புண்ய ஆத்மா என்று சொல்லப் படுகிறது. நீங்கள் கூடமகான் புண்ணிய ஆத்ன ஆகி அனைவருணடய தாகத்தை தணிக்கக் கூடியவர்களாக இருக்கிறீர்கள். தாகத்தினால் மனிதர்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை தண்ணீர் கிடைக்க வில்லையென்றால், தாகத் தினால் தவித்து விடுகிறோம் அல்லவா. அதுபோல, ஞான அமிர்த்ததின் கிடைக்காத காரணத் தினால் ஆத்மாக்கள் துக்கம் அசாந்தியில் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு ஞான அமிர்தம் கொடுத்து தாகத்தை தணிக்கக் கூடிய புண்ணிய ஆத்மாக்களாக இருக்கிறீர்கள். எனவே புண்ணியத்தின் கணக்கை பல ஜென்மங்களுக்காக சேமித்துக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? ஒரே ஜென்மத்தில் தான் பல ஜென்மங்களின் கணக்கு. பல ஜென்மங்களுக்காக சேமித்துக் கொண்டிருக்கிறீர்களா? ஒரு ஜென்மத்தில் தான் பல ஜென்மங்களின் கணக்கு சேமிப்பு ஆகிறது. எனவே நீங்கள் இந்தளவு சேமிப்பு செய்திருக்கிறீர்கள் அல்லவா? மற்றவர்களுக்கும் கூட பகிர்ந்தளிக்குமளவிற்கு செல்வந்தராகி விட்டீர்களா, தனக்காக சேபித்துக் கொள்ளுங்கள் மற்றும் மற்றவர்களுக்கும் கூட தரக்கூடிய வள்ளல் ஆகுங்கள். எனவே முழு நாளில் புண்ணிய ஆத்மாவாகி, புண்ணியத்தின் காரியம் செய்கிறீர்களா என்று சோதனை செய்யுங்கள். அல்லது தனக்காக மட்டும் சாப்பிட்டீர்கள் -அருந்தினீர்கள் மகிழ்ச்சியாக இருந்தீர்களா? சேமிக்கக் கூடியவர் களை

தான் புத்திசாலி என்று சொல்ல படுகிறது, யார் சம்பாதிக்கிறார்கள் மேலும் சாப்பிட்டு விடுகிறார்கள் அவர்களை புத்திசாலி என்று சொல்ல முடியாது. உணவு உண்ணும் பொழுது நேரத்தை ஒதுக்குகிரோம். ஏனெனில் அவசியமாக இருக்கிறது. அதுபோல இந்த புண்ணியம் காரியம் செய்வது கூட அவசியமாக இருக்கிறது. எனவே எப்பொழுதுமே புண்ணிய ஆத்மாவாக இருங்கள், அவ்வப்பொழுது அல்ல. வாய்ப்பு கிடைத்தால் செய்வேன் என்பது அல்ல. வாய்ப்பை எடுத்துக் கொள்ள வேண்டும். நேரம் கிடைக்கும் என்பது அவ், நேரத்தை ஒதுக்க வேண்டும். அப்பொழுது சேபிப்பு செய்ய முடியும். இந்த சம்யம் எந்தளவு பாக்கியம் என்ற ரேகையை வரையை விரும்புகிறீர்களோ, அந்தளவு வரைய முடியும். ஏனெனில் பாபா பாக்கியத்தை உருவாக்கக் கூடிய மற்றும் வரத்தை அளிக்கக் கூடியவராக இருக்கிறார். சிரேஷ்ட ஞானம் என்ற பேனாவை பாபா தனது குழந்தைகளுக்கு கொடுத்திருக்கிறார். இந்த பேனாவின் மூலம் எந்தளவு கோடு -ஐ இழுக்க வேண்டுமோ, இழுக்க முடியும். நல்லது.

2. அனைவரும் இராஜரிஷியாக இருக்கிறீர்கள் அல்லவா? இராஜ் என்றால் அதிகாரி மற்றும் ரிஷி என்றால் தபஸ்யா ஆகும். தபஸ்யாவின் பலம் எளிதாக மாற்றம் செய்வதற்கான ஆதாரமாகும். பரமாத்மாவின் அன்பின் மூலம் தன்னையும் உலகத்தையும் சதா காலத்திற்காக தடைகளற்றவர்களாக மாற்றிவிட முடியும். தடைகளற்றவர் ஆவது மற்றும் தடைகளற்றவர் ஆக்குவது இது தான் சேவை செய்கிறதல்லவா. -பலவிதமான தடைகளிலிருந்து அனைத்து ஆத்மாக்களையும் முக்தி கொடுக்கக் கூடியவர்களாக இருக்கிறீர்கள். எனவே ஜீவன்முக்கியின் ஆசிர்வாதம் பயாலி பிருந்து பெற்று மற்றவர்களுக்கும் கூட கொடுக்க கூடியவர்களாக இருக்கிறீர்கள் அல்லவா. பந்தனமற்றவர் என்றாலே ஜீவன் முக்தி.

3. தைரியமுள்ள குழந்தைகளுக்கு பாபாவின் உதவி கிடைக்கும். குழந்தைகளின் தைரியத்தில் சதா பாபாலின் உதவி பலமடங்கு கிடைக்கிறது. கமைகள் பாபாலின் மீது தான் இருக்கிறது ஆனால் டிரஸ்டி (நிபித்தம்) ஆகி சதா பயாவின் நினைவு மூலம் முன்னேறிக் கொண்டேயிருங்கள். பாபமவின் நினைவு தான் குடைநிழலாக இருக்கிறது. பழைய கணக்கு மிகப் பெரிய சிலுவையாக இருக்கிறது ஆனால் பாபாவின் உதவி முள்ளாக மாற்றிவிடுகிறது. பிரச்சனைகள்

அவசியம் வரத்தான் செய்யும், ஏனெனில் இங்கு தான் முடிக்க வேண்டும் ஆனால் பாபாவின் உதவி முள்ளாக மாற்றி விடுகிறது. பெரிய விஷயத்தை சிறியதாக பாற்றிவிடுகிறது. ஏனெனில் பெரிய பாபாவின் (சிவபயா) துணை இருக்கிறது. சதா நம்பிக்கையோடு முன்னேறிக் கொண்டேயிருங்கள். ஒவ்வொரு அடியிலும் டிரஸ்டி, டிரஸ்டி என்றால் அனைத்தும் உன்னுடையது, என்னுடையது அனைத்து முடிந்து விடும். இல்லறம் என்றாலே என்னுடையது. உன்னுடையது (பாபா) என்றாலே பெரிய விஷயம் சிறியதாகி விடும். மேலும் என்னுடையது என்றாலே சிறிய விஷயம் கூட பெரியதாகி விடும். உன்னுடையது (பாபா) என்ற மனநிலை இலேசாக மாற்றி விடுகிறது. மேலும் என்னுடையது சுமையாக்கி விடுகிறது, அதனால் எப்பொழுதெல்லாம் சுமையின் அனுபவம் ஏற்படுகிறது என்றால் எங்கு என்னுடையது என்பது இருக்கிறது என்பதை சோதனை செய்யுங்கள். என்னுடையதை உன்னுடையதாக மாற்றி விட்டால், அந்த நிமிடம் இலேசான அனுபவம் ஏற்படும், அனைத்து சுமைகளும் ஒரு நொடியில் முடிந்து விடும். நல்லது.

**வரதானம்: திருப்தியின் விசேஷத்தன்மை மற்றும் சிரேஷ் தன்மை மூலம் அனைவருக்கும் இஷ்டமானவர் ஆகக் கூடிய வரதானி மூர்த்தி ஆகுக!**

யார் சதா தன்னிடம் மற்றும் அனைவரிடமும் திருப்தியாக இருக்கிறார்களோ, அவர்கள் தான் பல ஆத்மாக்களின் இஷ்ட தேவதை மற்றும் அஷ்ட தேவதை ஆகி முடியும். அனைத்தையும் விட பெரியதிலும் பெரிய குணம் என்றும் சொல்வாம், தானம் என்றும் சொல்லாம், அல்லது விசேஷத்தன்மை மற்றும் உயர்ந்த தன்மை என்றும் கூட சொல்லாம் -அது தான் திருப்கி ஆகும். திருப்தியான ஆத்மா தான் பிரபுவிற்கு பிரியமானவராகவும். உலகத்திற்கு பிரியமானவராகவும். தனக்கு பிடித்தமானவராகவும் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட திருப்தியான ஆத்மா தான் வரதானி ரூபத்தில் பிரபலமாகும். இப்பொழுது இந்த கடைசி சமயத்தில் மகாதானியைவிட அதிகமாக வரதானி ரூபத்தின் மூலர் சேவை ஆகும்.

**சுலோகன்: யாருடைய நெற்றியில் சதா வெற்றியின் திலகம் ஜொலித்துக் கொண்டிருக்கிறதோ, அவர்கள் தான் வெற்றி இரத்தினம் ஆவர்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 10.11.1987 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சுபசிந்தக்மணி ஆகி விஷ்வத்தை கவலைகளிலிருந்து விடுவித்து விடுங்கள்!

இன்று இரத்தினாகர் (இரத்தின வியாபாரி) தந்தை தன்னுடைய நாலாபுறங்களிலும் உள்ள விசேஷ சுபசிந்தக்மணிகளைப் (சுபசிந்தனை செய்யும் மணிகள்) பார்த்துக் கொண்டு இருக்கின்றார். இரத்தினாகர் தந்தையினுடைய மணிகள் விஷ்வத்தை தங்களுடைய சுபசிந்தனை கிரணங்களால் பிரகாசமாக ஆக்கிக் கொண்டு இருக்கின்றார்கள். ஏனெனில், இன்றைய இந்த செயற்கையான ஜொலிப்புடைய விஷ்வத்தில் அனைத்து ஆத்மாக்களும் சிந்தாமணியாக (சிந்தா -கவலை) இருக் கின்றனர். அத்தகைய அல்பகாலத்திற்கு ஜொலிக்கக்கூடிய சிந்தாமணிகளை சுபசிந்தக் மணி களாகிய நீங்கள் தங்களுடைய சுபசிந்தனையின் சக்தி மூலம் பரிவர்த்தனை (மாற்றம்) செய்து கொண்டு இருக்கின்றீர்கள். எவ்வாறு சூரியனின் கிரணங்கள் வெகு தூரம் வரை இருளை அகற்று கின்றதோ, அவ்வாறு சுபசிந்தக் மணிகளுடைய சுபசங்கல்பம் என்ற ஒளி என்று கூறினாலும் சரி, கிரணங்கள் என்று கூறினாலும் சரி, அது விஷ்வத்தின் நாலாபுறங்களிலும் பரவிக் கொண்டு இருக்கின்றது. ஏதோ ஒரு ஆன்மிக ஒளி மறைமுகமாக தனது காரியத்தை செய்து கொண்டு இருக்கின்றது என்று தற்சமயம் சில ஆத்மாக்கள் புரிந்து இருக்கின்றனர் ஆனால், அந்த ஒளி எங்கிருந்து காரியம் செய்து கொண்டு இருக்கின்றது என்பதை அறிய முடியவில்லை. ஏதோ ஒன்று இருக்கின்றது என்பதை உணரும் நிலை ஆரம்பம் ஆகி விட்டது. தேடித் தேடி இறுதியில் சரியான இடத்திற்கு வந்து சேர்ந்து விடுவார்கள். இந்த உணர்வு நிலையானது, சுபசிந்தக் மணிகளாகிய உங்களுடைய சிரேஷ்ட சங்கல்பத்தின் ஜொலிப்பாகும். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் நெற்றி மணியின் ஜொலிப்பைப் பார்க்கின்றார்கள், ஏனெனில்,

ஜொலிப்பானது வரிசைக்கிரமமாக உள்ளது. அனைவருமே சுபசிந்தக் மணிகளே ஆவீர்கள், ஆனால், ஜொலிப்பு வரிசைக்கிரமமாக உள்ளது.

சுபசிந்தக் ஆகுவது என்ற இதுவே சுலபமான முறையில் மனதால் செய்யப்படும் சேவை (மனசா சேவை) ஆகும், இதை எங்கு போகும்போதும், வரும்போதும் ஒவ்வொரு பிராமண ஆத்மா மற்றும் ஞானம் அறிந்திராத ஆத்மாக்களுக்காக செய்ய முடியும். நீங்கள் அனைவரும் சுபசிந்தக் ஆகுவதனால் பரவும் அதிர்வலைகள் வாயுமண்டலத்தை மற்றும் சிந்தாமணி (கவலையான) ஆத்மாக்களின் விருத்தியை மிகவும் சுலபமாக மாற்றிவிடும். இன்றைய மனித ஆத்மாக்களின் வாழ்வில், நாலாபுறங்களில் இருந்தும் மனிதர்கள் மூலமும், வைபவங்கள் மூலமும், மனித ர்களிடத்தில் சுயநலம் இருக்கும் காரணத்தினால், வைபவங்களில் அல்பகால பிராப்தி கிடைக்கும் காரணத்தினால் கொஞ்ச சமயத்திற்காக சிரேஷ்ட பிராப்திகளின் அனுபவம் கிடைக்கிறது, ஆனால், அல்பகாலத்திற்கான குஷி சிறிது காலத்திற்குப் பின்பு கவலையாக மாறிவிடுகிறது அதாவது வைபவங்கள் மற்றும் மனிதர்கள் கவலையை போக்குபவர்களாக அல்லாமல் கவலையை ஏற்படுத்துவதற்கு நிமித்தம் ஆகி விடுகின்றனர். அத்தகைய ஏதாவதொரு கவலையில் துயரமடைந் திருக்கும் ஆத்மாக்களுக்கு மிகவும் குறைவான சுபசிந்தக் ஆத்மாக்களே தென்படுகின்றனர். எனவே, இன்று விஷ்வத்திற்கு சுபசிந்தக் ஆத்மாக்களின் தேவை உள்ளது. ஆகை யினால், சுபசிந்தக் மணிகளான ஆத்மாக்களான நீங்கள் விஷ்வத்திற்கு மிகவும் பிரியமானவர்கள் ஆவீர்கள். எப்பொழுது தொடர்பில் வருவார்களோ, அப்பொழுது உலகத்தில் இத்தகைய சுபசிந்தக் வேறு எவரும் தென்படவில்லை என்று அனுபவம் செய்வார்கள். எப்பொழுதும் சுபசிந்தக்காக இருக்க வேண்டும். இதற்கான விசேஷ ஆதாரம் சுபசிந்தனை ஆகும். யாருக்கு சதா சுபசிந்தனை உள்ளதோ, அவர்கள் அவசியம் சுபசிந்தக்காக இருப்பார்கள். ஒருவேளை, அவ்வப்பொழுது வீண் சிந்தனை அல்லது பரசிந்தனை வருகிறது என்றால் சதா சுபசிந்தக்காக இருக்க முடியாது. சுபசிந்தக் ஆத்மாக்கள் பிறருடைய வீண் சிந்தனை, பரசிந்தனையை சமாப்தி செய்பவர்கள் ஆவார்கள். எனவே, ஒவ்வொரு சிரேஷ்ட சேவாதாரி அதாவது சதா சுபசிந்தக் மணியினுடைய சுபசிந்தனை என்ற சக்திசாலி பொக்கிஷமானது எப்பொழுதும் நிறைந்திருக்கும் காரணத் தினாலேயே அவர்களால் பிறருக்காகவும்

சுபசிந்தக்காக ஆகமுடிகிறது. சுபசிந்தக் என்றால் அனைத்து ஞான இரத்தினங்களால் நிறைந்திருக்கும் நிலையாகும். மேலும், அத்தகைய ஞானம் நிறைந்தவர்கள் வள்ளலாகி பிறருக்காக சதா சுபசிந்தக் ஆகமுடியும். எனவே, முழு நாளில் அதிக நேரம் சுபசிந்தனை உள்ளதா அல்லது பரசிந்தனை உள்ளதா? என்று சோதனை செய்யுங்கள். சுபசிந்தனை உள்ளவர்கள் சதா தன்னுடைய நிறைந்திருக்கும் நிலையின் (சம்பன்னதா) போதையில் இருப்பார்கள். ஆகையினால், சுபசிந்தக் சொரூபத்தின் மூலம் பிறருக்கும் கொடுத்துக் கொண்டே செல்வார்கள் மற்றும் நிறைந்துகொண்டே இருக்கும். பரசிந்தனை அல்லது வீண் சிந்தனை செய்பவர்கள் சதா காலியாக இருக்கும் காரணத்தினால் தன்னை பலவீனமாக அனுபவம் செய்வார்கள். ஆகையால், சுபசிந்தக் ஆகி பிறருக்குக் கொடுப்பதற்குத் தகுந்தவராக ஆகமுடியாது. நிகழ்காலத்தில் அனைவருடைய கவலையை நீக்குவதற்கு நிமித்தம் ஆகக்கூடிய சுபசிந்தக் மணிகளின் அவசியம் உள்ளது. இவர்களே பிறரை, கவலைக்குப் பதிலாக சுபசிந்தனை செய்யும் விதியை அனுபவம் செய்பவராக ஆக்கமுடியும். எங்கு சுபசிந்தனை இருக்குமோ, அங்கு கவலை தானாகவே முடிவடைந்து விடும். எனவே, சதா சுபசிந்தக் ஆகி மறைமுகமான சேவை செய்து கொண்டு இருக்கின்றீர்கள் அல்லவா?

எல்லையற்ற விஷ்வ சேவைக்கான திட்டம் என்ன தீட்டியிருக்கின்றீர்களோ, அந்த திட்டத்தை சகஜமாக வெற்றிகரமானதாக ஆக்குவதற்கான ஆதாரம் கூட சுபசிந்தக் ஸ்திதி ஆகும். விதவிதமான ஆத்மாக்கள் சம்பந்தம், தொடர்பில் வருவார்கள். அப்பேற்பட்ட ஆத்மாக்களுக்காக சுபசிந்தக் ஆகவேண்டும். அதாவது அந்த ஆத்மாக்களுக்கு தைரியம் என்ற இறக்கை கொடுக்க வேண்டும். ஏனெனில், அனைத்து ஆத்மாக்களும் கவலை என்ற சிதையில் இருக்கும் காரணத்தால் அவர்களுடைய தைரியம், ஊக்கம், உற்சாகம் என்ற இறக்கைகள் பலவீனம் ஆகி விட்டன. சுபசிந்தக் ஆத்மாக்களாகிய உங்களுடைய சுபபாவனை அவர்களுடைய இறக்கைகளில் சக்தியை நிரப்பும். மேலும், உங்களுடைய சுபசிந்தக் பாவனைகளின் ஆதாரத்தில் பறக்க ஆரம்பித்து விடுவார்கள். அதாவது சகயோகி ஆகி விடுவார்கள். சிறந்ததொரு உலகை (சுகமயமான உலகை) உருவாக்குவதற்கு ஆத்மாக் களாகிய நமக்குள் என்ன சக்தி உள்ளது? என்று மனச்சோர்வு அடைந்து விட்டனர். யாரால் தன்னையே உருவாக்க முடியவில்லையோ, அவர்கள்

விஷ்வத்தை என்ன உருவாக்குவார்கள்? விஷ்வத்தை மாற்றுவது மிகவும் கடினம் என்று நினைக்கின்றனர். ஏனெனில், நிகழ்காலத்தில் அனைத்து சக்திகளின் ரிசல்ட்டை பார்த்தாகி விட்டது, ஆகவே, கடினம் என்று நினைக்கின்றனர். அத்தகைய உள்ளச் சோர்வு அடைந்த ஆத்மாக்களை கவலையின் சிதையில் அமர்ந்திருக்கும் ஆத்மாக்களை உங்களுடைய சுபசிந்தக் சக்தியானது உள்ளச்சோர்வில் இருந்து மகிழ்ச்சி நிறைந்த உள்ளம் உடையவர்களாக ஆக்கி விடும். எவ்வாறு மூழ்கிக் கொண்டி ருக்கும் மனிதருக்கு ஒரு துரும்பு கூட உள்ளத்தை மகிழ்ச்சி அடையச் செய்கிறது, தைரியத்தை ஏற்படுத்துகிறது. எனவே, உங்களுடைய சுபசிந்தக் ஸ்திதியானது அவர்களுக்கு ஆதரவாக அனுபவம் ஆகும், எரிந்து கொண்டு இருக்கும் ஆத்மாக்களுக்கு குளிர்ந்த நீர் கிடைத்தது போன்ற அனுபவம் ஏற்படும்.

அனைவருடைய சகயோகத்தைப் பிராப்தியாக அடைவதற்கான ஆதாரம் கூட சுபசிந்தக் ஸ்திதியாகும். யார் அனைவருக்காகவும் சுபசிந்தக்காக இருக்கின்றார்களோ, அவர்களுக்கு அனைவரிடமிருந்தும் தானாகவே சகயோகம் கிடைக்கின்றது. சுபசிந்தக் பாவனை பிறருடைய மனதில் சகயோகத்தின் பாவனையை சகஜமாக மற்றும் தானாக உருவாக்கும். சுபசிந்தக் ஆத்மாக்கள் மீது ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் அன்பு தோன்றுகிறது மற்றும் அன்பு தான் சகயோகியாக ஆக்குகின்றது. எங்கு அன்பு உள்ளதோ, அங்கு சமயம், செல்வம், சகயோகம் ஆகிய வற்றை கொடுப்பதற்கு சதா தயாராக இருப்பார்கள். எனவே, சுபசிந்தக் அன்பானவர்களை உருவாக்குவார்கள் மற்றும் அன்பு அனைத்து வித சகயோகத்தைக் கொடுக்கச் செய்யும். ஆதலால், சதா சுபசிந்தனையில் நிறைந்திருங்கள், சுபசிந்தக் ஆகி அனைவரையும் சினேகியாக, சகயோகியாக ஆக்குங்கள். சுபசிந்தக் ஆத்மா அனைவரிடமிருந்தும் திருப்தியின் சான்றிதழை சுலபமாகப் பெற முடியும். சுபசிந்தக் தான் சதா மகிழ்ச்சியான பர்சனாலிட்டியுடன் (தோற்றத்துடன்) இருக்கமுடியும், விஷ்வத்திற்கு முன்பு விசேஷ பர்சனாலிட்டி உடையவர்களாக ஆக முடியும். தற்காலத்தில் பர்சனாலிட்டி உடைய ஆத்மாக்கள் புகழ் பெற்றவர்களாக மட்டும் ஆகின்றார்கள். அதாவது பெயர் புகழடைகின்றது ஆனால், ஆன்மிக பர்சனாலிட்டி உடைய நீங்கள் புகழ் பெற்றவர்களாக அதாவது மகிமைக்குத் தகுந்தவராக மட்டும் அல்ல, ஆனால், மகிமைக்குத் தகுந்தவராகுவதன் கூடவே பூஜைக்குத் தகுந்தவர்களாகவும்

ஆகின்றீர்கள். தர்ம சேத்திரம், இராஜ்ய சேத்திரம், விஞ்ஞான சேத்திரத்தில் பர்சனாலிட்டி உடையவர்கள் எவ்வளவு பெரிய புகழ் பெற்றவர்களாக இருந்தாலும் சரி ஆனால், ஆன்மிக பர்சனாலிட்டி உடைய உங்களுக்கு சமமாக 63 -பிறவிகளுக்கு பூஜைக்குரிய வர்கள் ஆகவில்லை. ஆகையினால், இது சுபசிந்தக்காக ஆகுவதன் சிறப்புத்தன்மை ஆகும். அனை வருக்கும், குஷி, ஆதரவு, தைரியத்தின் இறக்கைகள், ஊக்கம் உற்சாகத்தின் பிராப்தி என்ன கிடைக்கிறதோ, அந்த பிராப்தியின் ஆசீர்வாதங்கள் சிலரை அதிகாரி குழந்தைகள் ஆக்கி விடுகின்றன, இன்னும் சிலரை பக்த ஆத்மாக்கள் ஆக்கி விடுகின்றன, ஆகையால், அனேக பிறவிகள் பூஜைக்ககுரியவர்கள் ஆகி விடுகின்றனர். சுபசிந்தக் என்றால் நீண்டகால பூஜைக்குரிய ஆத்மாக்கள் என்று அர்த்தம். ஆகையால், இந்த விசாலமான காரியத்தை ஆரம்பம் செய்வதன் கூடவே எவ்வாறு மற்ற நிகழ்ச்சிகளை உருவாக்குகின்றீர்களோ, அதன் கூடவே தனக்காகவும் இந்த நிகழ்ச்சியை உருவாக்குங்கள்: -

1. சதா காலத்திற்காக ஒவ்வொரு ஆத்மா மீதும் மற்ற அனைத்து வித பாவனைகளை மாற்றி ஒரு சுபசிந்தக் பாவனையை எப்பொழுதும் வைப்பேன்.
2. அனைவரையும் தன்னை விட முன்னேற்றுவதற்கான, முன்னால் வைப்பதற்கான சிரேஷ்ட சகயோகம் சதா கொடுத்துக் கொண்டே இருப்பேன்.
3. பெட்டர் வேர்ல்டு அதாவது சிரேஷ்டமான உலகை உருவாக்குவதற்காக சிரேஷ்ட காமனா (விருப்பம்) மூலம் அனைவருடைய சகயோகி ஆவேன்.
4. சதா வீண் சிந்தனை, பரசிந்தனையை முடித்து அதாவது முடிந்து போன விசயங்களுக்கு புள்ளி வைத்து, புள்ளி அதாவது மணி ஆகி சதா விஷ்வத்திற்கும், அனைவருக்கும் தன்னுடைய சிரேஷ்ட பாவனை, சிரேஷ்ட காமனா, அன்பான பாவனை, சக்திசாலி ஆக்கும் பாவனையின் கிரணங்களால் வெளிச்சம் கொடுத்துக் கொண்டே இருப்பேன்.

இந்த சுயத்திற்கான நிகழ்ச்சியே அனைத்து நிகழ்ச்சிகளின் வெற்றிக்கான அஸ்திவாரம் ஆகும். இந்த அஸ்திவாரத்தை சதா உறுதியானதாக வைக்க வேண்டும், அப்பொழுது பிரத்யட்சதாவின் சப்தம் தானாகவே உரக்க ஒலிக்கும். புரிந்ததா? அனைவரும் இந்த காரியத்திற்கு நிமித்தமான வர்கள் ஆவீர்கள் அல்லவா. விஷ்வத்தை சகயோகி ஆக்குகின்றீர்கள் எனில், முதலில் நீங்கள் நிமித்தமாக இருக்கின்றீர்கள்.

சிறியவர்களோ, பெரியவர்களோ, வியாதியஸ்தரோ அல்லது ஆரோக்கியமானவரோ, மகாரதியோ (யானைப்படை), குதிரைப்படையோ -அனைவருமே சக யோகிகள் ஆவீர்கள். காலாட்படையோ கிடையவே கிடையாது. எனவே, அனைவருடைய விரலும் தேவை. ஒவ்வொரு செங்கலுக்கும் மகத்துவம் உள்ளது. ஒன்று அஸ்திவாரத்தின் செங்கலாக இருக்கும், மற்றொன்று மேல் சுவரின் செங்கலாக இருக்கும், ஆனால், ஒவ்வொரு செங்கலும் மகத்துவமானதாகும். நாம் நிகழ்ச்சியை (புரோகிராம்) செய்து கொண்டிருக்கின்றோம் என்று நீங்கள் அனைவரும் புரிந்திருக்கின்றீர்களா அல்லது நிகழ்ச்சியை நடத்துபவர்கள் உருவாக்கு கின்றார்கள், நிகழ்ச்சியை உருவாக்குபவர்களின் நிகழ்ச்சியாகும் என்று புரிந்திருக்கின்றீர்களா? நம்முடைய நிகழ்ச்சி என்றே கூறுகின்றீர்கள் அல்லவா. எனவே, பாப்தாதா குழந்தைகளுடைய விசாலமான காரியத்தை, நிகழ்ச்சியைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார்கள். உள்நாடு, மேலை நாடுகளில் விசால காரியத்திற்கான ஊக்க உற்சாகம் நன்றாக உள்ளது. தந்தை தன்னுடைய காரியத்தை செய்து கொண்டு இருக்கின்றார் என்ற தந்தையினுடைய பிரத்யட்சதாவின் இந்த சப்தத்தை நம்முடைய அனைத்து சகோதர சகோதரிகளும் கேட்க வேண்டும் என்று ஒவ்வொரு பிராமண ஆத்மாவிற்குள்ளும் விஷ்வத்தின் ஆத்மாக்கள் மீது கருணை உள்ளது, இரக்கம் உள்ளது. நெருக்கத்தில் வரட்டும், சம்பந்தத்தில் வரட்டும், அதிகாரி ஆகட்டும், பூஜைக்குரிய தேவதை யாகட்டும் அல்லது 33-கோடி பெயரை மகிமை பாடுபவர்களாக ஆகட்டும், ஆனால், சப்தத்தை கண்டிப்பாக கேட்க வேண்டும். அத்தகைய ஊக்கம் உள்ளது அல்லவா? இப்பொழுதோ, 9-இலட்சம் கூட உருவாக்கவில்லை. எனவே, தன்னுடைய நிகழ்ச்சி என்ன என்பது புரிந்ததா? தன்னுடையது என்பதுவே தன்னுடைய நிகழ்ச்சியில் தன்னுடைய விஷ்வத்தை உருவாக்கும். நல்லது.

இன்று ஐந்து இடங்களில் இருந்தும் பார்ட்டிகள் வந்திருக்கின்றனர். திரிவேணி என்று கூறுவார்கள், ஆனால், இது பஞ்சவேணி ஆகி விட்டது. ஐந்து இடங்களிலிருந்து நதிகள் கடலை வந்தடைந்து விட்டன. எனவே, நதி மற்றும் கடலினுடைய சந்திப்பானது சிரேஷ்டமான திருவிழா ஆகும். புதியவர்கள், பழையவர்கள் என அனைவரும் குஷியில் நடனம் ஆடிக் கொண்டு இருக்கின்றார்கள். எப்பொழுது நம்பிக்கையற்ற நிலையில் இருந்து நம்பிக்கை ஏற்பட்டுவிடுகின்றதோ, அப்பொழுது இன்னும்

அதிகக் குஷி ஏற்படுகின்றது. பழையவர்களுக்குக் கூட திடீரென வாய்ப்பு கிடைத்துள்ளதால் இன்னும் அதிகக் குஷி இருக்கின்றது. எப்பொழுது சந்திப்போம் என்பது தெரியவில்லை என்று யோசித்துக் கொண்டு இருந்தீர்கள். இப்பொழுது சந்திப்போம் என்பதை நினைத்து கூட பார்க்கவில்லை. எப்பொழுது என்பதில் இருந்து இப்பொழுது என்று ஆகி விடுகிறது என்றால் மகிழ்ச்சியின் அனுபவம் தனிப்பட்டதாக இருக்கும். நல்லது. இன்று அயல்நாட்டினரும் கூட விசேஷமான அன்பு நினைவுகள் கொடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள். விசேஷ சேவாதாரி (ஜெயந்தி சகோதரி) வந்திருக்கின்றார் அல்லவா. அயல்நாட்டு சேவைக்கு முதலில் நிமித்தம் ஆனார்கள் அல்லவா. விருட்சத்தைப் பார்த்து விதை நினைவுக்கு வருகின்றது. விதை ரூப குடும்பத்தினரான இவர்கள் அயல்நாட்டு சேவைக்கு நிமித்தம் ஆனார்கள். எனவே, முதலில் நிமித்தமான குடும்பத்திற்கு நினைவுகள் கொடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

அயல்நாட்டின் அனைத்து நிமித்தமாகி இருக்கும் சேவாதாரி குழந்தைகள் சதா தந்தையை பிரத்யட்சம் செய்யக்கூடிய பிரயத்தனத்தில் ஊக்க உற்சாகத்துடன் இரவு பகலாக ஈடுபட்டு இருக்கின்றனர். அயல்நாட்டிலிருந்து வெளிப்படும் உரத்த ஒலி மூலம் பாரதத்தில் தந்தையை பிரத்யட்சம் செய்ய வேண்டும் என்ற இந்த சப்தமானது அவர்களது காதுகளில் அடிக்கடி ஒலிக்கின்றது. இந்த சப்தமானது சேவைக்கான அடியை சதா முன்னேற்றிக் கொண்டு செல்கின்றது. விசேஷ சேவையின் ஊக்க உற்சாகத்திற்கான காரணம் தந்தை மீது உள்ளத்தின் அன்பு, சினேகம் ஆகும். ஒவ்வொரு அடியிலும் ஒவ்வொரு நொடியும் வாயில் பாபா பாபா என்ற வார்த்தை வருகிறது.. எப்பொழுதாவது யாராவது கார்டு (வாழ்த்து அட்டை) அல்லது பரிசு அனுப்பு கின்றார்கள் என்றால் அதில் உள்ளம் (இருதயம்) போன்ற சித்திரத்தை அவசியம் உருவாக்கு கின்றார்கள். இதற்கான காரணம் உள்ளத்தில் சதா திலாராம் (உள்ளத்தைக் கொள்ளை கொண்டவர்) இருப்பதுவே ஆகும். உள்ளத்தைக் கொடுத்திருக்கின்றீர்கள் மற்றும் (தந்தையினுடைய) உள்ளத்தைப் பெற்றிருக்கின்றீர்கள். கொடுப்பது மற்றும் பெறுவதில் புத்திசாலிகள் ஆவீர்கள். ஆகையினால், உள்ளத்தின் வியாபாரம் செய்வதன், உள்ளத்தால் நினைவு செய்வதன் அடையாள மாக தன்னுடைய உள்ளத்தையே அனுப்புகின்றார்கள். மேலும், இந்த

# 1987 அவ்யக்த முரளி

உள்ளத்தின் நினைவு மற்றும் உள்ளத்தின் அன்பானது பெரும்பான்மையினருக்கு தொலைவில் இருந்தாலும் அருகாமையில் இருக்கும் அனுபவத்தை செய்விக்கின்றது. பிரம்மாதந்தை மீது அதிக அன்பு உள்ளது என்பதையே அனைத்தையும் விட விசேஷமான சிறப்புத்தன்மையாக பாப்தாதா பார்க்கின்றார்கள். தந்தை மற்றும் தாதாவினுடைய ஆழமான இரகசியத்தை மிகவும் சுலபமாக அனுபவத்தில் கொண்டு வருகின்றீர்கள். பிரம்மாபாபாவினுடைய சாகார பாலனையினுடைய நடிப்பு இல்லாதபோதும் அவ்யக்த பாலனையின் அனுபவத்தை நன்றாக செய்து கொண்டு இருக்கின்றீர்கள். தந்தை மற்றும் தாதா ஆகிய இருவரின் சம்பந்தத்தை அனுபவம் செய்வது என்ற இந்த விசேஷத்தன்மையின் காரணத்தினால் தன்னுடைய வெற்றியில் மிக சுலபமாக முன்னேறிச் சென்று கொண்டு இருக்கின்றீர்கள். ஒவ்வொரு தேசத்தினரும் அவரவர் பெயர் முதலில் இருப்பதாகப் புரிந்து கொள்ளுங்கள்.ஒவ்வொரு குழந்தையும் தன்னுடைய பெயருக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் கிடைப்பதாக நினைத்து அன்பு நினைவுகளை சுவீகாரம் செய்ய வேண்டும். புரிந்ததா?

திட்டத்தை உருவாக்கிக் கொண்டு இருக்கின்றீர்கள். உள்நாடு மற்றும் வெளிநாட்டின் பழக்க வழக்கத்தில் கொஞ்சம் வித்தியாசம் உள்ளது ஆனால், அன்பின் காரணத்தினால் பழக்க வழக்கத்தின் வித்தியாசம் கூட ஒன்றாக ஆகி விடுகின்றது. அயல்நாட்டின் திட்டமோ அல்லது பாரதத்தின் திட்டமோ, எதுவாயினும் திட்டமோ ஒன்று தான். செய்யும் முறையை மட்டும் கொஞ்சம் மாற்ற வேண்டியதாக உள்ளது. உள்நாடு மற்றும் வெளி நாட்டின் சகயோகமானது இந்த விசால காரியத்திற்கு சதா வெற்றியை கிடைக்க வைத்துக் கொண்டே இருக்கும். வெற்றியோ சதா குழந்தைகளுக்கு உண்டு. உள்நாட்டினரின் ஊக்க உற்சாகம் மற்றும் அயல் நாட்டினரின் ஊக்க உற்சாகம் ஆகிய இரண்டும் இணைந்து காரியத்தை முன்னேற்றிக் கொண்டு இருக்கின்றது மற்றும் சதா முன்னேற்றிக் கொண்டே இருக்கும். நல்லது.

பாரதத்தின் நாலாபுறங்களிலும் இருக்கக்கூடிய சதா சிநேகி, சகயோகி குழந்தைகளின் அன்பு, சகயோகத்தின் சுபசங்கல்பம், சுபமான சப்தம் பாப்தாதாவிடம் சதா வந்து கொண்டே இருக்கின்றது. உள்நாடு, வெளிநாடு ஒன்றைவிட ஒன்று சிறந்தது. .ஒவ்வொரு இடத்தின்

சிறப்புத்தன்மையும் தனித்தனியானது. பாரதம் தந்தையின் அவதார பூமியாகும் மற்றும் பாரதம் பிரத்யட்சத்தின் சப்தத்தை உரக்க ஒலிக்கச் செய்வதற்கு நிமித்தமான பூமியாகும். பாரதத்தில் தான் ஆதி மற்றும் அந்திமத்தின் நடிப்பு உள்ளது. அயல்நாட்டின் சகயோகமானது பாரதத்தில் பிரத்யட்சம் செய்விக்கும் மற்றும் பாரதத்தின் பிரத்யட்சத்தின் ஒலியானது அயல்நாடு வரை சென்ற டையும். ஆகையினால், பாரதக் குழந்தைகளின் சிறப்புத்தன்மை எப்பொழுதும் சிரேஷ்டமானது ஆகும். பாரதத்தினர் ஸ்தாபனைக்கு ஆதாரமாக ஆனார்கள். ஸ்தாபனையின் ஆதாரமூர்த்தி பாரதத்தின் குழந்தைகளே ஆவார்கள். ஆகையினால், பாரதவாசி குழந்தைகளுடைய பாக்கியத்தின் மகிமையை அனைவரும் பாடுகின்றார்கள். நினைவு மற்றும் சேவையில் சதா ஊக்க உற்சாகத்துடன் சதா முன்னேறிக் கொண்டு இருக்கின்றீர்கள் மற்றும் முன்னேறிக் கொண்டே இருப்பீர்கள். ஆகையினால், பாரதத்தின் ஒவ்வொரு குழந்தையும் அவரவர் பெயருக்கு பாப்தாதா அன்பு நினைவுகள் கொடுப்பதை சுவீகாரம் செய்ய வேண்டும். உள்நாடு, வெளிநாட்டில் உள்ள எல்லையற்ற தந்தை யின் எல்லையற்ற சேவாதாரி குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: அனைத்து ஆத்மாக்களுக்கும் சக்திகளின் தானம் கொடுக்கக்கூடிய மாஸ்டர் விதை ரூபம் ஆகுக!**

அனேக பக்த ஆத்மாக்கள் என்ற இலைகள் யார் காய்ந்து விட்டார்களோ, வாடிப்போய்விட்டார்களோ, அவர்களுக்கு மீண்டும் தன்னுடைய விதை ரூப ஸ்திதி மூலம் சக்திகளின் தானம் கொடுங்கள். உங்களுடைய ஆசை என்றாலே என்னவென்று அறியாத ஸ்திதியே அவர்களை சர்வ பிராப்திகளையும் அடையச் செய்வதற்கான ஆதாரம் ஆகும். எப்பொழுது சுயம் ஆசை என்றால் என்னவென்று அறியாமல் இருப்பீர்களோ, அப்பொழுதே மற்ற ஆத்மாக்களுடைய அனைத்து ஆசைகளையும் பூர்த்தி செய்ய முடியும். ஆசை என்றால் என்னவென்று அறியாத நிலை என்றால் சம்பூரணமான சக்திசாலியான விதை ரூப ஸ்திதி என்பதாகும். எனவே, மாஸ்டர் விதை ரூபம் ஆகி பக்தர்களின் கூக்குரலைக் கேளுங்கள், பிராப்தியைக் கொடுங்கள்.

**சுலோகன்: சதா பரம ஆத்மாவின் குடை நிழலுக்குள் இருப்பதுவே அலௌகீக வாழ்க்கையின் பாதுகாப்பு சாதனம் ஆகும்!**

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

# 14.11.1987 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பூஜைக்குரிய தேவ அத்மா ஆவதற்கான சாதனம் -பவித்ரதாவின் சக்தி!

இன்று ஆன்மிக ஜோதி தம்முடைய ஆன்மிக விட்டில் பூச்சிகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வோர் ஆன்மிக விட்டில் பூச்சியும் தன்னுடைய ஊக்கம் -உற்சாகத்தின் இறக்கைகள் மூலம் பறந்து இந்த ஆன்மிகக் குழுவில் வந்து சேர்ந்துள்ளது. இந்த ஆன்மிகக் கூட்டம் விசித்திரமான அலௌகிகக் கூட்டமாகும். இதை ஆன்மிகத் தந்தை அறிவார் மற்றும் ஆன்மிகக் குழந்தைகள் அறிவார்கள். இந்த ஆன்மிகக் கவர்ச்சியின் முன் மாயாவின் அநேக விதமான கவர்ச்சிகள் துச்சமாகத் தோன்றுகின்றன. சாரமற்றதாக அனுபவம் ஆகின்றது. இந்த ஆன்மிகக் கவர்ச்சி சதா காலத்திற்கும், நிகழ்காலம் மற்றும் வருங்காலத்தின் அநேகப் பிறவிகளுக்கு மகிழ்ச்சி நிறைந்தவர்களாக ஆக்குவதாகும். அநேக விதமான துக்கம் -அசாந்தியின் அலைகளிலிருந்து விடுவிப்ப தாகும். ஆகவே அனைத்து ஆன்மிக விட்டில் பூச்சிகளும் இந்தக் கூட்டத்தில் வந்து சேர்ந்திருக்கிறார்கள்.

பாப்தாதா விட்டில் பூச்சிகள் அனைவரையும் பார்த்து மகிழ்ச்சியடைகிறார். அனைவரின் நெற்றி யின் மீது பவித்திர அன்பு, பவித்திர அன்பின் சம்மந்தம், பவித்திர வாழ்க்கையின் பவித்திர திருஷ்டி -விருத்தியின் அடை யாளங்கள் ஜொலித்துக் கொண்டிருக்கின்றன. அனைவர் மீதும் இந்த அனைத்துப் பவித்திர அடையாளங்களின் சின்னமாகிய ஒளிக்கிரீடம் ஜொலித்துக் கொண்டிருக் கிறது. சங்கமயுக பிராமண வாழ்க்கையின் விசேஷம் -பவித்திரதாவின் அடையாளம், ஒவ்வொரு பிராமண ஆத்மாவுக்கும் பாபா மூலமாகக் கிடைக்கின்றது. மகான் ஆத்மா, பரமாத்ம -பாக்கியவான் ஆத்மா, உயர்ந்தவரிலும் உயர்ந்த ஆத்மாவுக்கு இந்தக் கிரீடம் அடையாளமாகும். ஆக, நீங்கள் அனைவரும் அந்த மாதிரிக் கிரீடதாரி ஆகியிருக்கிறீர்களா? பாப்தாதா அல்லது தாய் -தந்தை ஒவ்வொரு குழந்தைக்கும் பிறவியிலிருந்தே பவித்திர பவ என்ற

வரதானம் கொடுக்கின்றனர். பவித்திரதா இல்லை என்றால் பிராமண வாழ்க்கை இல்லை. ஸ்தாபனையின் ஆரம்பத்திலிருந்து இது வரை பவித்திரதாவின் மீது விக்னங்கள் அநேகம் வந்துள்ளன. ஏனென்றால் பவித்திரதாவின் அஸ்திவாரம் 21-பிறவிகளுக்கான அஸ்தி வாரமாகும். பவித்திரதாவின் பிராப்தி பிராமண ஆத்மாக்களாகிய உங்களைப் பறக்கும் கலையின் பக்கம் சுலபமாகக் கொண்டு செல்வதற்கான ஆதாரமாகும்.

எப்படி கர்மங்களின் விளைவு மிக ஆழமானதாக உள்ளது எனப் பாடப் பட்டுள்ளதோ, அப்போது பவித்திரதாவின் உட்பொருளும் கூட மிக ஆழமானதாகும். பவித்திரதா மாயாவின் அநேக விக்னங்களிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கான குடைநிழலாகும். பவித்திரதா தான் சுகம் -சாந்தியின் தாய் எனச் சொல்லப் படுகின்றது. எந்த விதமான அபவித்திரதாவும் (தூய்மையின்மை) துக்கம் அசாந்தியின் அனுபவம் செய்விக்கிறது. ஆகவே நாள் முழுவதும் சோதித்துப் பாருங்கள் -எந்தச் சமயத்திலாவது துக்கம் அசாந்தியின் அலை அனுபவமாகிறதா? அதன் விதை அபவித்திர தாவாகும். அது முக்கியமாக விகாரங்களின் காரணத்தால் இருக்கலாம். அல்லது விகாரங்களின் சூட்சும ரூபத்தின் காரணமாக இருக்கலாம். பவித்திர வாழ்க்கை என்றால் துக்கம் அசாந்தியின் பெயர் அடையாளம் இருக்காது. எந்த ஒரு காரணத்தாலும் கொஞ்சமாவது துக்கத்தின் அனுபவம் இருக்குமானால் சம்பூர்ண பவித்திரதாவின் குறை உள்ளது. பவித்திர வாழ்க்கை என்றால் பாப்தாதா மூலம் கிடைத்துள்ள வரதானி வாழ்க்கை. பிராமணர்களின் சங்கல்பத்தில் அல்லது வாயில் இந்த வார்த்தை ஒரு போதும் இருக்கக் கூடாது -இந்த விஷயத்தின் காரணத்தால் அல்லது இந்த மனிதரின் காரணத்தால் எனக்கு துக்கம் ஏற்படுகிறது." சில நேரம் சாதாரண ரீதியில் இத்தகைய வார்த்தையைப் பேசவும் செய்கின்றனர். அல்லது அனுபவமும் செய் கின்றனர். இது பவித்திர பிராமண வாழ்க்கையின் பேச்சாகாது. பிராமண வாழ்க்கை என்றால் ஒவ்வொரு நொடியும் சுகமய வாழ்க்கை. துக்கத்தின் காட்சியும் கூட இருக்கலாம் ஆனால் எங்கே பவித்திர தாவின் சக்தி உள்ளதோ, அவர்கள் ஒரு போதும் துக்கத்தின் காட்சியில் துக்கத்தை அனுபவம் செய்ய மாட்டார்கள் ஆனால் துக்கத்தைப் போக்கி சுகம் கொடுக்கும் தந்தைக்கு சமமாக துக்கத்தின் வாயுமண்டலத்தில் துக்கமய மனிதர்களுக்கு சுகம் சாந்தியின் வரதானி ஆகி, சுகம் சாந்தியின்

அஞ்சலி (துளி) கொடுப்பார்கள். மாஸ்டர் சுகம் கொடுப்பவர் ஆகி, துக்கத்தை ஆன்மிக சுகத்தின் வாயுமண்டலமாக மாற்றியமைப்பார்கள். அவர்கள் தாம் துக்கத்தைப் போக்கி சுகம் கொடுப்பவர் எனச் சொல்லப் படுவார்கள்.

விஞ்ஞானத்தின் சக்தி அல்ப காலத்திற்கு யாராவது ஒருவரின் துக்கம் -வேதனையை முடித்து விடுகிறது என்றால், பவித்திரதாவின் சக்தி -அதாவது அமைதியின் சக்தி துக்கம் -வேதனையை முடித்து விட முடியாதா? விஞ்ஞானத்தின் மருந்தினால் அல்ப காலத்தின் சக்தி உள்ளதென்றால், பவித்திரதாவின் ஆசிர்வாதத்தில் எவ்வளவு பெரிய சக்தி இருக்கும்? சமயத்தின் பிரமாணம் இன்றைய மனிதர்கள் மருந்துகளால் காரணத்துடனோ காரணமில்லாமலோ, துன்பமடைவார்கள், நோய்கள் அதிக பட்சத்தில் செல்கிறதென்றால் சமயத்தில் பவித்திர தேவ-தேவிகளாகிய உங்களிடம் ஆசிர்வாதம் பெறுவதற்காக வருவார்கள் -எங்களை துக்கம் அசாந்தியிலிருந்து சதா காலத்திற்கும் விடுவியுங்கள்.

பவித்திரதாவின் திருஷ்டி -விருத்தி என்பது சாதாரண சக்தி கிடையாது. இந்தக் கொஞ்ச நேரத்தின் சக்திசாலி திருஷ்டி மற்றும் விருத்தி சதா காலத்தின் பிராப்தி செய்விப்பதாகும். எப்படி இப்போது உலகாயத டாக்டர்கள் மற்றும் சரீரத்திற்கான மருத்துவமனைகள் அவ்வப்போது அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. பிறகும் கூட டாக்டர்களுக்கு நேரம் இருப்பதில்லை, மருத்துவமனை களில் இடம் இல்லை. நோயாளிகளின் வரிசை சதா இருந்து கொண்டுள்ளது. அது போல் இனி போகப்போக மருத்துவமனைகளுக்கு அல்லது டாக்டர்களிடம் செல்வதற்கு, மருந்து எடுத்துக் கொள்வதற்கு விரும்பினாலும் கூடப் போக முடியாது. பெரும்பான்மையோர் நம்பிக்கை இழந்து விடுவார்கள், அப்போது என்ன செய்வார்கள்? மருந்தின் மீது நம்பிக்கை இழந்து விட்டால் பிறகு எங்கே செல்வார்கள்? உங்களுக்கு முன்னாலும் வரிசை நிற்கும். எப்படி இப்போது உங்களுடைய அல்லது தந்தையின் ஜட சித்திரங்களின் முன்னால் ஓ! தயாளு, தயை செய்யுங்கள்" எனச் சொல்லி தயா மற்றும் ஆசிர்வாதம் வேண்டுகிறார்கள், அது போல் சைதன்ய, பவித்திர, பூஜைக் குரிய ஆத்மாக்களாகிய உங்களிடம் ஓ பவித்திர தேவிகளே அல்லது தேவர்களே! எங்கள் மீது கருணை காட்டுங்கள்

-இவ்வாறு வேண்டுவதற்காக வருவார்கள். இன்று அல்பகால சித்தி உள்ளவர்களிடம் உடல்நலம் வேண்டுவதற்கு அல்லது சுகம் -சாந்தியின் கருணை பெறுவதற்கு எவ்வளவு அலைந்து கொண்டே இருக்கிறார்கள்! தூரத்திலிருந்தே திருஷ்டி பட்டால் போதும் என நினைக்கின்றனர். ஆக, நீங்கள் பரமாத்ம விதி மூலம் சித்தி சொரூபம் ஆகியிருக்கிறீர்களா? அல்பகாலத்தின் உதவி முடிந்து போகுமானால் எங்கே செல்வார்கள்?

அல்பகால சித்தி உள்ளவர்கள் அனைவரும் அல்பகாலத்திற்கு ஏதாவது பவித்திரதாவின் விதிகள் மூலம் அல்பகால சித்தியை அடைகிறார்கள். இது சதா காலத்திற்கும் செல்லுபடியாகாது. இதுவும் கூட பொற்கால ஆத்மாக்களின், அதாவது கடைசி நேரத்தில் மேலிருந்து வந்துள்ள ஆத்மாக்களுக்கு, பவித்திர முக்திதாமத்திலிருந்து வந்திருக்கும் காரணத்தினால் மற்றும் டிராமாவின் நிச்சயத்தின் பிரமாணம், சதோப்ரதான ஸ்டேஜ் பிரமாணம் பவித்திரதாவின் பலன் சொரூபமாக அல்பகாலத்தின் சித்திகள் பிராப்தியாகின்றன ஆனால் கொஞ்ச சமயத்திலேயே சதோ, ரஜோ, தமோ -மூன்று நிலைகளையும் கடந்து செல்லும் ஆத்மாக்கள் ஆகையால் சதா காலத்தின் சித்தி இருப்பதில்லை. பரமாத்ம விதி மூலம் அந்த சித்தி இல்லை. அதனால் எங்காவது சுயநலம் அல்லது அபிமானம் சித்தியை முடித்து விடும் ஆனால் பவித்திர ஆத்மாக்கள் நீங்கள் சதா சித்தி சொரூபமானவர்கள். சதா காலத் திற்கான பிராப்தி அடைபவர்கள். வெறுமனே விந்தையைக் காட்டுபவர் இல்லை ஆனால் ஜொலிக்கும் ஜோதி சொரூபமாக ஆக்குபவர்கள் நீங்கள். அவிநாசி பாக்கியத்தின் ஜொலிக்கின்ற நட்சத்திரத்தை உருவாக்குபவர்கள். அதனால் இந்த அனைத்து உதவிகளும் இப்போது கொஞ்ச சமயத்திற்காக மற்றும் கடைசியில் பவித்திர ஆத்மாக்களாகிய உங்களிடம் தான் அஞ்சலி (துளி) பெறுவதற்காக வருவார்கள். ஆக, அந்த அளவு சுகம் -சாந்தியின் ஜனனி (பிறப்பிப்பவர்கள்) பவித்திர ஆத்மா ஆகியிருக்கிறீர்களா? அந்த அளவுக்கு ஆசிர்வாதங்களின் ஸ்டாக் சேமித்திருக்கிறீர்களா? அல்லது தனக்காகவும் இது வரை ஆசிர்வாதத்தை வேண்டிக் கொண்டே இருக்கிறீர்களா?

அநேகக் குழந்தைகள் இப்போதும் கூட அடிக்கடி பாபாவிடம் வேண்டிக் கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள் -இந்த விஷயத்தில் கொஞ்சம் ஆசிர்வதியுங்கள், ஆசி வழங்கி விடுங்கள். ஆக, வேண்டிக்

கொண்டிருப்பவர்கள் எப்படி வள்ளல் ஆவார்கள்? ஆகவே பவித்திரதா சக்தியின் மகான் தன்மையை அறிந்து கொண்டு, பவித்திரமான, அதாவது பூஜைக்குரிய தேவாத்மாக்களாக இப்போதிருந்து ஆகுங்கள். கடைசியில் ஆகி விடுவோம் என்று அப்படியல்ல. இந்த நீண்ட காலம் சேமிக்கப் பட்டுள்ள சக்தி கடைசியில் பயன்படும். ஆக, பவித்திரதாவின் ஆழமான விளைவு என்னவென்று புரிந்ததா? சதா சுகம் -சாந்தியைப் பிறப்பிக்கும் ஜனனி ஆத்மா -இது தான் பவித்திர தாவின் ஆழமான தன்மையாகும். சாதாரண விஷயம் இல்லை. பிரம்மச்சாரிகளாக இருக்கிறீர்கள். பவித்திரமாக ஆகி விட்டீர்கள் ஆனால் பவித்திரதா என்பது ஜனனி ஆகும். சங்கல்பத்தாலோ, விருத்தி மூல மாகவோ, வாயுமண்டலத்தின் மூலமாகவோ, தொடர்பின் மூலமாகவோ, சுகம் -சாந்தியின் ஜனனி ஆவது -இதைத் தான் பவித்திர ஆத்மா எனச் சொல்வது. ஆக, எது வரை ஆகியிருக்கிறீர்கள் -இதைத் தனக்குத் தானே சோதித்துப் பாருங்கள். நல்லது. இன்று அநேகர் வந்திருக்கிறீர்கள். எப்படி தண்ணீரின் அணை உடைபடுகிறது, அது போல் இது விதிமுறை என்ற அணை உடைபட்டு வந்திருக்கிறீர்கள். பிறகும் விதிமுறைகளில் பயனோ இருக்கவே செய்கிறது. யார் விதிமுறைகளோடு வருகிறார்களோ, அவர்களுக்கு அதிகம் கிடைக் கிறது மற்றும் யார் அலையில் ஆடியவாறு வருகிறார்களோ, அப்போது சமயப் பிரமாணம் பிறகு இவ்வளவு தான் கிடைக்கும் இல்லையா? பிறகும் கூடப் பாருங்கள், பந்தனமற்ற பாப்தாதாவும் கூட பந்தனத்தில் வருகின்றனர். சிநேகத்தின் பந்தனம். அன்போடு கூடவே சமயத்தின் பந்தனமும் உள்ளது. சரீரத்தின் பந்தனமும் உள்ளது ஆனால் இது அன்பான பந்தனம். அதனால் பந்தனத்தில் இருந்தாலும் சுதந்திரம். பாப்தாதாவோ சொல்வார் -நல்லது, வந்திருக்கிறீர்கள். தங்களின் வீடு வந்து சேர்ந்திருக்கிறீர்கள். நல்லது.

நாலாபுறம் உள்ள அனைத்து பரம பவித்திர ஆத்மாக்களுக்கு, சதா சுகம் -சாந்தியின் ஜனனி பாவன ஆத்மாக்களுக்கு, சதா பவித்திரதாவின் சக்தி மூலம் அநேக ஆத்மாக்களுக்கு, துக்கம் -வேதனை யிலிருந்து விடுவிக்கக்கூடிய தேவாத்மாக்களுக்கு பாப்தாதாவின் சிநேகம் நிறைந்த அன்பு நினைவுகள்.

**ஹாஸ்டல் குமாரிகளுடன் (இந்தூர் குரூப்):** அனைவரும் பவித்திர மகான் ஆத்மாக்கள் தாம் இல்லையா? இப்போது மகாத்மா எனச்

சொல்லிக் கொள்பவர்களை விடவும் அநேக தடவை சிரேஷ்டமானவர்கள் நீங்கள். பவித்திர குமாரிகளுக்கு எப்போதும் பூஜை நடைபெறுகிறது. ஆக, நீங்கள் அனைவரும் பாவன, பூஜைக்குரிய, சதா சுத்த ஆத்மாக்கள் தாம் இல்லையா? எந்த ஓர் அசுத்தமும் இல்லை தானே? சதா உங்களுக்குள் ஒரே வழி, சிநேகி, சகயோகியாக இருக்கக்கூடிய ஆத்மாக்கள் தாம் இல்லையா? சம்ஸ்காரங்களில் இணங்கிச் செல்ல வருகிறது இல்லையா? ஏனென்றால் சம்ஸ்காரங்களில் இணக்கமாக இருப்பது தான் மகான் தன்மையாகும். சம்ஸ்கார மோதல் இருக்கக் கூடாது ஆனால் சதா சம்ஸ்கார நல்லிணக்கத்தின் ராஸ் (நடனம்) ஆடிக் கொண்டே இருங்கள். மிக நல்ல பாக்கியம் கிடைத்துள்ளது -சிறு வயதில் மகான் ஆகியிருக்கிறீர்கள். சதா குஷியாக இருக்கிறீர்கள் இல்லையா? ஒரு போதும் யாரும் மனதால் அழுவதில்லை தானே? மோகமற்றவராக இருக்கிறீர்களா? எப்போதாவது லௌகிகப் பரிவாரம் நினைவு வருகிறதா? இரண்டு படிப்புகளிலும் சாமர்த்தியசாலிகளாக இருக்கிறீர்களா? இரண்டு படிப்புகளிலும் சதா நம்பர்வார் உள்ளனர் இல்லையா? எப்படி தந்தை முதல் நம்பராக இருக்கிறார். அது போல் குழந்தைகளும் நம்பர் ஒன்னில், அனைவரிலும் நம்பர் ஒன் -அந்த மாதிரிக் குழந்தைகள் சதா பாபாவுக்குப் பிரியமானவர்கள். புரிந்ததா? நல்லது.

**பார்ட்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:** சதா தன்னை சிரேஷ்ட பாக்கியவான் எனப் புரிந்து கொண்டிருக்கிறீர்களா? வீட்டில் அமர்ந்தவாறு பாக்கியவிதாதா மூலம் சிரேஷ்ட பாக்கியம் கிடைத்து விட்டது. வீட்டில் அமர்ந்தவாறு பாக்கியம் கிடைப்பது -இது எவ்வளவு குஷியின் விஷயம்! அவிநாசி தந்தை, அவிநாசி பிராப்தி செய்விக்கிறார். ஆக, அவிநாசி என்றால் சதா, அவ்வப்போது இல்லை. ஆக, பாக்கியத்தைப் பார்த்து சதா குஷியாக இருக்கிறீர்கள் இல்லையா? ஒவ்வொரு சமயமும் பாக்கியம் மற்றும் பாக்கியவிதாதா -இரண்டுமே தானாக நினைவிருக்க வேண்டும். சதா ஆஹா எனது சிரேஷ்ட பாக்கியம் -இதே பாடலைப் பாடிக் கொண்டே இருங்கள். இது மனதின் பாடல். எவ்வளவு இந்தப் பாடலைப் பாடுகிறீர்களோ, அவ்வளவு சதா பறக்கும் கலையின் அனுபவம் செய்து கொண்டே இருப்பீர்கள். முழுக் கல்பத்திலும் இந்த மாதிரி பாக்கியத்தை அடைவதற்கான சமயம் இது ஒன்று தான். அதனால் ஸ்லோகனும் உள்ளது -இப்போது இல்லையேல் இனி எப்போதும் இல்லை. சிரேஷ்ட

காரியம் என்னென்ன செய்ய வேண்டுமோ, அதை இப்போதே செய்ய வேண்டும். ஒவ்வொரு காரியத்திலும் ஒவ்வொரு சமயமும் இதை நினைவு வையுங்கள் -இப்போது இல்லையென்றால் இனி எப்போதுமே இல்லை. யாருக்கு இது நினைவில் இருக்கிறதோ, அவர்கள் ஒரு போதும் சமயம், சங்கல்பம் அல்லது கர்மத்தை வீணாக விட மாட்டார்கள். சதா சேமித்துக் கொண்டே இருப்பார்கள். விகர்மத்தின் விஷயமோ இல்லை ஆனால் வீண் கர்மமும் கூட ஏமாற்றி விடுகிறது. ஆக, ஒவ்வொரு நொடியின் ஒவ்வொரு சங்கல்பத்தின் மகத்துவத்தை அறிவீர்கள் இல்லையா? சேமிப்புக் கணக்கு சதா நிரம்பிக் கொண்டே இருக்க வேண்டும். ஒவ்வொரு விநாடி. ஒவ்வொரு சங்கல்பத்தையும் சிரேஷ்டமாக சேமிக்கிறீர்கள், வீணாக்குவதில்லை என்றால் 21-பிறவிகளுக்குத் தனது கணக்கை சிரேஷ்டமாக ஆக்கி விடுகிறீர்கள். ஆக, எவ்வளவு சேமிக்க விரும்புகிறீர்களோ, அவ்வளவு சேமித்துக் கொண்டிருக்கிறீர்களா? இந்த விஷயத்தின் மீது இன்னும் அடிக்கோடிடுங்கள் -ஒரு விநாடி கூட, சங்கல்பம் கூட வீணாகக் கூடாது. வீணானவை முடிந்து போகு மானால் சதா சமர்த் (சக்திசாலி) ஆகி விடுவீர்கள். நல்லது. ஆந்திரப் பிரதேசத்தில் ஏழ்மை அதிகம் உள்ளது இல்லையா? நீங்கள் பிறகு இவ்வளவு செல்வந்தராக இருக்கிறீர்கள். நாலாபுறமும் ஏழ்மைத் தன்மை அதிகரித்துக் கொண்டே போகிறது. உங்களுக்கு இங்கே செல்வம் அதிகரித்துக் கொண்டே போகிறது. ஏனென்றால் ஞான செல்வம் வருவதால் இந்த ஸ்தூலமான பருப்பு-ரொட்டியும் கூட தானாகவே கிடைத்து விடுகிறது. பிராமணர் யாராவது பட்டினியாக இருக்கிறார்களா? ஆக, ஸ்தூல செல்வத்தின் ஏழ்மையும் கூட முடிந்து போகிறது. ஏனென்றால் புத்திசாலி ஆகி விடுகின்றனர். வேலை செய்து தனக்குத் தானே உணவளித்துக் கொள்வதற்காக அல்லது பரிவாரத்திற்கு உணவளிப்பதற்காகவும் புரிதல் வந்து விடுகிறது. அதனால் இரட்டை செல்வம் வந்து விடுகிறது. சரீரத்திற்கும் நல்லது, மனதுக்கும் கூட நல்லது. பருப்பு-ரொட்டி எளிதாகக் கிடைத்துக் கொண்டிருக்கிறது இல்லையா? பிரம்மாகுமார்-குமாரி ஆனதால் ராயலாகவும் ஆகி விட்டீர்கள், செல்வந்தராகவும் ஆகி விட்டீர்கள். இன்னும் அநேக ஜென்மங்களுக்கு மிகப்பெரும் செல்வந்தர்களாக இருக்கப் போகிறீர்கள். எப்படி முதலில் நடந்தீர்கள், இருந்தீர்கள், அணிந்தீர்கள் அதிலிருந்து இப்போது எவ்வளவு இராயலாக ஆகி விட்டீர்கள்! இப்போது சதா தூய்ம்மாக இருக்கிறீர்கள். முதலில் துணிமணி கூட அழுக்காக

அணிவீர்கள். இப்போது உள்ளும் புறமும் சுத்தமாகி விட்டீர்கள். ஆக, பிரம்மாகுமார் ஆனதால் நன்மையாகி விட்டது இல்லையா? அனைத்தும் மாறி விடுகிறது. பரிவர்த்தன் ஆகி விடுகிறது. முதலில் இருந்த முகத்தோற்றம், புத்தி -பாருங்கள் மற்றும் இப்போதும் பாருங்கள், அப்போது வித்தியாசம் தெரிந்து விடும். இப்போது ஆன்மீகத்தின் பொலிவு வந்து விட்டது. அதனால் முகத் தோற்றமே மாறி விட்டது. ஆகவே சதா இது போல் குஷியில் ஆடிக் கொண்டே இருங்கள்.

**இரட்டை வெளிநாட்டினர் சகோதர -சகோதரிகளுடன்:** இரட்டை வெளிநாட்டினராக இருக்கிறீர்களா? அப்படிப் பார்த்தால் பிராமண ஆத்மாக்கள் இதே பாரத தேசத்தைச் சேர்ந்தவர்கள். அநேக ஜென்மங்கள் பாரதவாசிகளாக இருந்திருக்கிறீர்கள். இதுவோ சேவைக்காக அநேக இடங் களுக்குச் சென்றிருக்கிறீர்கள். அதனால் இந்த அடையாளம் -எப்போது பாரதத்திற்கு வருகிறீர்களோ, அதாவது மதுபன் பூமியில் அல்லது பிராமணப் பரிவாரத்தில் வருகிறீர்களோ, அப்போது நம்முடையவர் என்ற அனுபவம் செய்கிறீர்கள். அது போல் வெளிநாட்டின் வெளிநாட்டு ஆத்மாக்கள் எவ்வளவு தான் சமீபமான தொடர்புள்ள ஆத்மாக்களாக இருந்தாலும் அவ்வளவு நம்முடையவர் என்ற உணர்வு அதிகமாக இருக்கும். யோசிக்க வேண்டியது இருக்காது -நான் இருந்தேனா அல்லது என்னால் ஆக முடியுமா என்று. ஒவ்வொரு ஸ்தூல பொருளும் மிகப் பிரியமானதாகத் தோன்றும். எப்படி ஏதாவது தன்னுடைய பொருளாக இருக்கிறது இல்லையா, அது போல. தன்னுடைய பொருள் என்றால் எப்போதுமே பிரியமானதாக இருக்கும். ஆக, இவை யெல்லாம் அடையாளங்கள். பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார் -தூரத்தில் இருந்தாலும் மனதால் சதா அருகில் இருப்பவர்கள். முழுப் பரிவாரமும் உங்களை இந்த சிரேஷ்ட பாக்கியவான் பார்வையில் பார்க்கிறார்கள்.

**வரதானம்: யுத்தத்தில் பயப்படுவதற்கு அல்லது பின்வாங்குவதற்கு பதிலாக பாபாவின் துணை மூலமாக சதா வெற்றியாளர் ஆகுக!**

சேனையில் யுத்தம் செய்யக்கூடிய போர்வீரர்கள் இருக்கிறார்கள். அவர்களின் ஸ்லோகனாக இருக்கும் -தோல்வியடைவது அல்லது பின்வாங்குவது பலவீனத்தின் காரியம்; போர்வீரர் என்றால் சாவது

மற்றும் சாகடிப்பது. நீங்களும் ஆன்மிகப் போர்வீரர்கள். நீங்கள் பயப்படுவதோ பின்வாங்குவதோ இல்லை. சதா முன்னேறிச் சென்று வெற்றியாளர் ஆகிறவர்கள். எது வரை யுத்தம் செய்வது என யோசிக்க வேண்டாம். இதுவோ முழு வாழ்க்கையின் விஷயம் ஆனால் 5000 -ஆண்டுகளின் கணக்குப்படி இது ஒரு விநாடியின் விஷயம். விசால புத்தி உள்ளவராக மட்டும் ஆகி எல்லையற்ற கணக்கின் படி பாருங்கள். மேலும் பாபாவின் நினைவு மற்றும் துணையின் அநுபூதி மூலம் வெற்றியாளர் ஆகுங்கள்.

**சுலோகன்: சதா நம்பிக்கை மற்றும் விசுவாசத்தின் ஆதாரத்தில் வெற்றியாளர் ஆகுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 18.11.1987 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அந்தர்முகி மற்றும் ஏகாந்தவாசி ஸ்திதி!

இன்று சர்வசக்திவான் பாப்தாதா தனது சக்தி சேனையை பார்த்துக் கொண்டிருக்கின்றார். இந்த ஆன்மீக சக்தி சேனையானது விசித்திரமான சேனையாகும். பெயர் ஆன்மீக சேவையாகும் ஆனால் விசேடமாக அமைதிசக்திக்கானது, அமைதி கொடுக்கக் கூடிய அகிம்சை சேனையாகும். எனவே இன்று பாப்தாதா அமைதி கொடுக்கும் ஒவ்வொரு குழந்தைகளையும் பார்த்துக் கொண்டிருக்கின்றார் -ஒவ்வொருவரும் எந்த அளவிற்கு அமைதிசக்தியை சேமித்திருக்கிறீர்கள்? இந்த அமைதிசக்தியானது இந்த ஆன்மீக சேனையின் விசேட ஆயுதமாகும். அனைவரும் ஆயுதத்துடன் தான் இருக்கிறீர்கள், ஆனால் வரிசைக் கிரமமாக இருக்கிறீர்கள். அமைதிசக்தி யானது முழு உலகையும் அசாந்தியிலிருந்து அமைதியாக ஆக்கக் கூடியது. மனித ஆத்மாக்களை மட்டுமின்றி இயற்கையையும் மாற்றக் கூடியதாகும். அமைதிசக்தியைப் பற்றி மேலும் ஆழமான ரூபத்தில் அறிந்து கொள்ள வேண்டம் மற்றும் அனுபவம் செய்ய வேண்டும். இந்த சக்தியில் எந்த அளவிற்கு சக்திசாலியாக ஆவீர்களோ, அந்த அளவிற்குத் தான் அமைதிசக்தியின் மதிப்பை, மகான் நிலையை அதிகமாக அனுபவம் செய்து கொண்டே செல்வீர்கள். இப்போது வார்த்தைகளின் சக்தியின் மூலம் சேவைக்கான சாதனங்களின் சக்தியை அனுபவம் செய்து கொண்டிருக்கிறீர்கள். மேலும் இந்த அனுபவத்தின் மூலம் வெற்றியையும் பலனாக அடைந்து கொண்டிருக்கிறீர்கள் ஆனால் வார்த்தைகளின் சக்தி அல்லது ஸ்தூல சேவைக்கான சாதனங்களை விட அமைதிசக்தி மிகவும் சிரேஷ்டமானது. அமைதிசக்திக்கான சாதனங்களும் சிரேஷ்டமானது. எவ்வாறு சேவைக்கான சாதனங்களாக சித்திரங்கள், புரஜெக்டர் அல்லது வீடியோ போன்றவைகளை உருவாக்குகிறீர்கள், அவ்வாறு அமைதிசக்திக்கான சாதனம் -சுப சங்கல்பம், சுப பாவனை மற்றும் பார்வையின் மொழியாகும். எவ்வாறு வார்த்தைகளின் மூலம் தந்தையின் அல்லது படைப்பின் அறிமுகம் கொடுக்கிறீர்களோ, அவ்வாறு அமைதிசக்தியின் ஆதாரத்தில்

பார்வையின் மூலம் தந்தையின் அனுபவத்தை செய்விக்க முடியும். எவ்வாறு புரஜெக்டர் மூலம் சித்திரங்களை காண்பிக்கிறீர்களோ, அவ்வாறு உங்களது நெற்றியின் நடுவில் ஜொலிக்கும் உங்களது அல்லது தந்தையின் சித்திரத்தை தெளிவாக காண்பிக்க முடியும். எவ்வாறு நிகழ்காலத் தில் வார்த்தைகளின் மூலம் நினைவு யாத்திரையின் அனுபவத்தை செய்விக்கிறீர்களோ, அவ்வாறு அமைதிசக்தியின் மூலம் உங்களது முகம் நினைவிற்கான வித விதமான நிலைகளை அனுபவம் செய்விக்கும். அனுபவம் செய்பவர்களுக்கு இது எளிதாக உணர முடியும் -இந்த நேரத்தில் விதை ரூப நிலையின் அனுபவம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது அல்லது பரிஸ்தா ரூபத்தின் அனுபவம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது அல்லது வித விதமான குணங்களின் அனுபவம் உங்களது இந்த சக்திசாலியான முகத்தின் மூலம் தானாகவே ஏற்பட்டுக் கொண்டிருக்கும்.

எவ்வாறு வார்த்தைகளின் மூலம் ஆத்மாக்களுக்கு அன்பான சகயோகத்தின் பாவனைகளை உருவாக்குகிறீர்களோ, அவ்வாறு நீங்கள் சுப பாவனை, அன்பான பாவனைக்கான ஸ்திதியில் நிலைத்திருக்கும் போது உங்களது பாவனையைப் போன்று அவர்களுக்குள்ளும் உருவாகி விடும். உங்களது சுப பாவனை அவர்களது பாவனையை பிரகாசமாக்கி விடும். எவ்வாறு ஒரு தீபம் மற்றொரு தீபத்தை ஏற்றி விடுகிறதோ, அதே போன்று உங்களது சக்திசாலியான சுப பாவனை மற்றவர்களுக்குள்ளும் சர்வ சிரேஷ்ட பாவனையை எளிதாக உருவாக்கி விடும். எவ்வாறு வார்த்தைகளின் மூலம் இப்போது ஸ்தூல காரியங்கள் அனைத்தும் செய்கிறீர்களோ, அவ்வாறு அமைதிசக்திக்கான சிரேஷ்ட சாதனம் -சுப சங்கல்பத்தின் சக்தியின் மூலம் ஸ்தூல காரியங் களையும் எளிதாக்கி விட முடியும் அல்லது செய்விக்க முடியும். எவ்வாறு விஞ்ஞானத்தின் சாதனம் டெலிபோன், வயர்லெஸ் இருக்கிறதோ, அதே போன்று இந்த சுப சங்கல்பமானது எதிரில் பேசுவது போன்ற அல்லது டெலிபோன், வயர்லெஸ் மூலமாக காரியம் செய்விக்கும் அனுபவம் செய்விக்கும். இவ்வாறு அமைதிசக்தியில் விசேஷதா இருக்கிறது. அமைதிசக்தி குறைந்தது கிடையாது ஆனால் இப்பொழுது வார்த்தைகளின் சக்தியை, ஸ்தூல சாதனங்களை அதிகமாக காரியத்தில் பயன்படுத்துகிறீர்கள், ஆகையால் இது எளிதாக தோன்றுகிறது. அமைதிசக்திக்கான சாதனங்களை உபயோகப்படுத்தவில்லை. ஆகையால் இதன் அனுபவம்

இல்லை. அது எளிதாக தோன்றுகிறது, இது கடினமாக தோன்றுகிறது ஆனால் கால மாற்றத்தின் படி இந்த அமைதிசக்தியின் சாதனங்களை உபயோகப்படுத்தியே ஆக வேண்டும். ஆகையால் ஹே சாந்தி தேவர்களே, சிரேஷ்ட ஆத்மாக்களே! இந்த அமைதிசக்தியை அனுபவத்தில் கொண்டு வாருங்கள். எவ்வாறு வார்த்தைகளுக்கான பயிற்சி செய்து செய்து வார்த்தைகள் சக்திசாலியாக ஆகி விட்டதோ, அவ்வாறு அமைதிசக்தியிலும் பயிற்சியாளர்களாக ஆகிக் கொண்டே செல்லுங்கள். நாளடைவில் வார்த்தைகள் அல்லது ஸ்தூல சாதனங்கள் மூலம் சேவைக்கான நேரம் கிடைக்காது. அப்படிப்பட்ட நேரத்தில் அமைதிசக்தியின் சாதனங்கள் அவசியமானதாக இருக்கும். ஏனெனில் எந்த அளவிற்கு யார் மகான் சக்திசாலியாக ஆகிறார்களோ, அவர்கள் மிகவும் சூட்சும மாக இருப்பார்கள். ஆக வார்த்தைகளை விட சுத்த சங்கல்பங்கள் சூட்சுமமானது. ஆகையால் சூட்சுமத்தின் தாக்கம் சக்திசாலியாக இருக்கும். இப்பொழுதும் அனுபவிகளாக இருக்கிறீர்கள் லி வார்த்தைகளின் மூலம் ஏதாவது காரியத்தில் பலன் கிடைக்கவில்லையெனில், இவர்கள் வார்த்தைகளினால் புரிந்து கொள்ளமாட்டார்கள், சுப பாவனையின் மூலம் மாறி விடுவார்கள் என்று கூறுகிறீர்கள். எங்கு வார்த்தைகள் காரியத்தில் வெற்றியாக்கவில்லையோ, அங்கு அமைதிசக்தியின் சாதனங்களான சுப சங்கல்பம், சுப பாவனை, பார்வையின் மொழியின் மூலம் கருணை மற்றும் அன்பின் அனுபவம் காரியத்தில் வெற்றியாக்கி விடும். எவ்வாறு இப்பொழுதும் வாதம் -விவாதம் செய்யும் ஒருவர் வருகிறார் எனில் வார்த்தைகளினால் மேலும் அதிகமாக வாதம் -விவாதத்தில் வந்து விடுகின்றார். அவரை நினைவில் அமர வைத்து அமைதிசக்தியின் அனுபவத்தை ஏற்படுத்துகிறீர்கள் அல்லவா! ஒருவேளை ஒரு விநாடி நினைவின் மூலம் அமைதியின் அனுபவம் செய்து விட்டால் தானாகவே தனது வாதம்லிவிவாத புத்தியை அமைதியின் அனுபவத்தின் முன் சரண்டர் ஆக்கி விடுவர். எனவே இந்த அமைதிசக்தியின் அனுபவத்தை அதிகப்படுத்திக் கொண்டே செல்லுங்கள். இப்போது இந்த அமைதிசக்தியின் அனுபவம் மிகவும் குறைவாக இருக்கிறது. அமைதிசக்தியின் ரசனையை இப்போது வரை அதிக பட்சம் பேர் துளியளவு தான் அனுபவம் செய்திருக்கின்றனர். ஹே சாந்தி தேவர்களே! உங்களது பக்தர்கள் உங்களது ஜடச் சித்திரத்திடம் அமைதியைத் தான் அதிகமாக கேட்கின்றனர். ஏனெனில் அமைதியில் தான் சுகம்

நிறைந்திருக்கிறது. அதை அல்ப காலத்திற்கும் அனுபவம் செய்கின்றனர். ஆக அமைதிசக்தியின் அனுபவி ஆத்மாக்கள் எத்தனைப் பேர் இருக்கின்றனர்? வர்ணனை செய்யக் கூடியவர்கள் எத்தனைப் பேர் இருக்கின்றனர்? என்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருந் தார். இதற்கு அகநோக்குப் பார்வை (அந்தர்முக்தா) மற்றும் தனிமையில் (ஏகாந்தவாசி) இருப்பது அவசியமாகும். வெளிநோக்கில் வருவது மிகவும் எளிது, ஆனால் அகநோக்கின் பயிற்சி இப்போது நேரத்தின் அநுசாரமாக அதிகம் தேவைப்படுகிறது. ஏகாந்தவாசி ஆவதற்கு நேரம் கிடைப்பதில்லை, அகநோக்குடன் இருப்பதற்கு நேரம் கிடைக்கவில்லை என்று சில குழந்தைகள் கூறுகின்றனர். ஏனெனில் சேவையின் இல்லறம், வார்த்தைகளின் சக்திக்கான இல்லறம் அதிகரித்து விட்டது ஆனால் இதற்கு ஒரே நேரத்தில் அரை மணி நேரம் அல்லது ஒரு நேரம் ஒதுக்க வேண்டிய அவசிய மில்லை. சேவைக்கான இல்லறத்தில் இருந்து கொண்டே இடையிடையில் நேரம் ஒதுக்கி ஏகாந்தவாசி ஆவதற்கான அனுபவம் செய்யுங்கள்.

ஏகாந்தவாசி என்றால் ஏதாவது ஒரு சக்திசாலியான ஸ்திதியில் நிலைத்து இருப்பதாகும். விதை ரூப ஸ்திதியில் நிலைத்து விடுங்கள், லைட் ஹவுஸ், மைட் ஹவுஸ் ஸ்திதியில் நிலைத்து விடுங்கள், அதாவது உலகிற்கு ஒளிலிசக்தி கொடுக்கக் கூடியவர் லி இந்த அனுபவத்தில் நிலைத்து விடுங்கள். பரிஸ்தா ஸ்திதியின் மூலம் மற்றவர்களுக்கும் அவ்யக்த ஸ்திதியின் அனுபவத்தை செய்வியுங்கள். ஒருவேளை ஒரு விநாடி அல்லது ஒரு நிமிடம் இந்த ஸ்திதியில் ஒருநிலைப்பாட்டுடன் நிலைத்து விட்டால் இந்த ஒரு நிமிட ஸ்திதி தனக்கும் மற்றவர்களுக்கும் அதிக இலாபத்தைக் கொடுக்கும். இதற்கான பயிற்சி இருந்தால் போதும். ஒரு நிமிட நேரத்திற்கும் நேரமில்லை என்பவர்கள் யாராவது இருக்கிறீர்களா? முன்பு டிராபிக் கண்ட்ரோலுக்கான ஏற்பாடு செய்யப்பட்ட போது இது எப்படி சாத்தியமாகும்? என்று சிலர் நினைத்தனர். சேவையின் இல்லறம் மிகவும் பெரியது, பிசியாக இருக்கிறீர்கள் ஆனால் இலட்சியம் வைத்தீர்கள், நடந்து கொண்டி ருக்கிறது அல்லவா! சென்டரில் இந்த டிராபிக் கண்டரோல் நடந்து கொண்டிருக்கிறதா? அல்லது சில நேரம் தவற விட்டுவது, சில நேரம் செய்வது என்று இருக்கிறீர்களா? இது பிராமண குலத்தின் நியமம், முறையாகும். எவ்வாறு மற்ற நியமங்கள் அவசியம் என்று புரிந்திருக்கிறீர்களோ, அவ்வாறு இதுவும் சுய

முன்னேற்றத்திற்கு அல்லது சேவையில் வெற்றி பெறுவதற்கு, சேவை நிலையத்தின் சூழ்நிலைகளுக்கு அவசியமாகும். இவ்வாறு அகநோக்குடன் இருப்பது, ஏகாந்தவாசி ஆவதற்கான பயிற்சிக்கான இலட்சியம் பெற்று தனது உள்ளப்பூர்வமான ஈடுபாட்டுடன் இடை யிடையில் நேரத்தை ஒதுக்குங்கள். மதிப்பு அறிந்தவர்களுக்கு நேரமும் தானாகவே கிடைத்து விடும். மதிப்பில்லை எனில் நேரமும் கிடைக்காது. ஒரு சக்திசாலியான ஸ்திதியில் தனது மனம், புத்தியை நிலைத்திருக்கச் செய்வது தான் ஏகாந்தவாசி ஆவதாகும். சாகார பிரம்மாபாபாவைப் பார்த்திருக்கிறீர்கள், சம்பூர்ன நிலையின் நெருக்கத்தின் அடையாளம் லி சேவை செய்து கொண்டி ருந்தாலும், செய்திகளை கேட்டுக் கேட்டு ஏகாந்தவாசியாக ஆகி விடுவார். இந்த அனுபவம் செய்திருக்கிறீர்கள் அல்லவா! ஒரு மணி நேரத்திற்கான செய்தியையும் 5 நிமிடத்தில் சாரமாக புரிந்து கொண்டு குழந்தைகளையும் குஷிபடுத்தினார், மேலும் தனது அகநோக்கு, ஏகாந்தவாசி ஸ்திதியையும் அனுபவம் செய்வித்தார். சம்பூர்ன நிலையின் அடையாளம் லி அகநோக்கு, ஏகாந்தவாசி ஸ்திதியை நடந்தாலும், சுற்றினாலும், கேட்டாலும், செய்தாலும் அனுபவம் செய்தீர்கள். ஆக தந்தையை பின்பற்ற முடியாதா? பிரம்மாபாபாவை விட அதிக பொறுப்பு யாருக் காவது இருக்கிறதா என்ன? நான் மிகவும் பிசியாக இருக்கின்றேன் என்று ஒருபோதும் பிரம்மாபாபா கூறியதில்லை ஆனால் குழந்தைகளின் முன் உதாரணமானவராக ஆனார். இவ்வாறு இப்போது நேரத்தின் அநுசாரமாக இந்த பயிற்சி அவசியமாகும். சேவைக்கான சாதனங்கள் அனைத்தும் இருந்தாலும் கூட அமைதிசக்தியின் சேவை அவசியமானதாக இருக்கும். ஏனெனில் அமைதிசக்தியானது அனுபவம் செய்விக்கும் சக்தியாகும். வார்த்தை சக்தியின் அம்பு புத்தி வரை சென்றடைகிறது ஆனால் அனுபவத்தின் அம்பு உள்ளம் வரை சென்றடைகிறது. எனவே நேரத்தின் அநுசாரமாக ஒரு விநாடியில் அனுபவம் செய்வியுங்கள் லி இந்த கூக்குரல் இருக்கும். கேட்டு கூறி களைப்படைந்தவர்கள் வருவார்கள். அமைதிசக்தியின் சாதனங்களின் மூலம் பார்வையின் மூலம் பலியாக்கி விட முடியும். சுப சங்கல்பத்தின் மூலம் ஆத்மாக்களின் வீண் சங்கல்பங்களை அழித்து விடுவீர்கள். சுப பாவனையின் மூலம் தந்தையின் மீது அன்பான பாவனையை உருவாக்கி விடுவீர்கள். இவ்வாறு அந்த ஆத்மாக்களுக்கு அமைதிசக்தியின் மூலம் திருப்திப்படுத்துவீர்கள். அப்போது தான் சாந்தி தேவ ஆத்மாக்களின் முன் சாந்தி தேவர்களே, சாந்தி தேவர்களே என்று

கூறி மகிமை செய்வார்கள். மேலும் இதையே கடைசி சன்ஸ்காரமாக கொண்டு செல்லும் காரணத்தினால் துவாபரத்தில் பக்த ஆத்மாவாக ஆகி உங்களது ஜடச் சிலைகளிடம் இந்த மகிமை செய்வார்கள். இந்த டிராபிக் கண்ட்ரோல் மகிமையும் எவ்வளவு உயர்வாக இருக்கிறது! மேலும் எவ்வளவு அவசியமானதாகவும் இருக்கிறது என்பதை பிறகு கூறுகின்றேன் ஆனால் அமைதிசக்தியின் மதிப்பை சுயம் அறிந்து கொள்ள வேண்டும் மற்றும் சேவையில் ஈடுபடுத்த வேண்டும். புரிந்ததா?

இன்று பஞ்சாப் வந்திருக்கிறது அல்லவா! பஞ்சாபில் சேவையின் மகத்துவம் அமைதியில் இருக்கிறது. அமைதிசக்தியின் மூலம் இம்சை விருத்தியுடையவர்களை அகிம்சையானவர்களாக ஆக்கி விட முடியும். ஸ்தாபனைக்கான ஆரம்பத்தில் பார்த்தீர்கள் லி இம்சையான விருத்தியுடையவர்கள் ஆன்மீகச் சக்தியின் முன் பரிவர்த்தனை ஆகி விட்டார்கள் அல்லவா! ஆக இம்சை விருத்தியுடையவர்களை அமைதியானவர்களாக ஆக்கக் கூடியது அமைதிசக்தியாகும். முரளி கேட்பதற்கு தயாராக இருப்பதே கிடையாது. இயற்கை சக்தியின் மூலம் வெப்பம் அல்லது குளிரின் அலைகளை நாலாபுறமும் பரப்ப முடிகிறது எனில் இயற்கைக்கு அதிபதியாக (பிரகிருத்திபதி) இருப்பவர்களின் அமைதியின் அலைகள் நாலாபுறமும் பரப்ப முடியாதா? விஞ்ஞான சாதனங்களே வெப்பத்தை குளிரான சூழ்நிலையாக மாற்ற முடிகிறது எனில், ஆன்மீக சக்தி ஆத்மாக்களை மாற்றி விட முடியாதா? ஆக பஞ்சாப் ஆத்மாக்கள் என்ன கேட்டீர்கள்? அனைவருக்கும் வைபிரேசன் வர வேண்டும் -யாரோ ஒருவர் அமைதியின் கிரணங்களை கொடுத்துக் கொண்டு இருக்கின்றார். இவ்வாறு சேவை செய்வதற்கான நேரம் பஞ்சாப்பிற்கு கிடைத்திருக்கிறது. நிகழ்ச்சி, கண்காட்சி போன்றவைகளை செய்து கொண்டு தான் இருக்கிறீர்கள் ஆனால் இந்த சக்தியின் அனுபவம் செய்யுங்கள் மற்றும் செய்வியுங்கள். அதற்கு தனது ஏகாக்ர விருத்தி, சக்திசாலியான விருத்தி தேவை. கலங்கரை விளக்கு எந்த அளவிற்கு சக்திசாலியாக இருக்குமோ, அந்த அளவிற்கு வெகு தூரம் வரை லைட் கொடுக்க முடியும். ஆக பஞ்சாப் ஆத்மாக்களுக்கு இந்த சக்தியை பிரயோகப் படுத்துவதற்கான நேரம் இதுவாகும். புரிந்ததா? நல்லது.

ஆந்திர பிரதேசத்தின் குழுவும் இருக்கிறது. நீங்கள் என்ன செய்வீர்கள்? புயலை அமைதியாக்குவீர்களா? ஆந்திராவில் புயல்கள் அதிகம் வருகின்றன. புயல்களை அமைதியாக்குவதற்கும் அமைதிசக்தி தேவை. புயலின் போது மனித ஆத்மாக்கள் அலைந்து கொண்டிருப்பர். ஆக அலையக் கூடிய ஆத்மாக்களுக்கு அமைதிக்கான அடைக்கலம் கொடுப்பது லி இது ஆந்திராவில் உள்ளவர்களின் விசேட சேவையாகும். ஒருவேளை சரீர ரூபத்தில் அலைந்து கொண்டிருந்தாலும், முதலில் மனம் அலைகிறது, பிறகு சரீரம் அலைகிறது. மனம் அடைக்கலம் அடையும் போது சரீரம் அடைக்கலம் அடைவதற்கு புத்தி வேலை செய்யும். ஒருவேளை மனம் அடைக்கலம் அடையவில்லையெனில், சரீர சாதனங்களுக்காகவும் புத்தி வேலை செய்யாது. ஆகையால் அனைவரின் மனதையும் அடைக்கலம் அடையச் செய்வதற்காக இந்த சக்தியை காரியத்தில் ஈடுபடுத்துங்கள். இரண்டையும் புயலிலிருந்து காப்பாற்ற வேண்டும். அங்கு இம்சைக்கான புயல் இருக்கிறது, அங்கு கடலின் புயல் இருக்கிறது, அங்கு மனிதர்களுக்கான புயல் இருக்கிறது, அங்கு இயற்கையின் புயல் இருக்கிறது. புயலில் மாட்டிக் கொண்டவர்களுக்கு அமைதி என்ற தென்றல் கொடுங்கள். தென்றல் புயலை மாற்றி விடும். நல்லது.

நாலாபுறமும் சாந்தி தேவர்கள் சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, நாலாபுறமும் உள்ள அகநோக்குப் பார்வையுடைய மகான் ஆத்மாக்களுக்கு, சதா ஏகாந்தவாசி ஆகி காரியங்கள் செய்யக் கூடிய கர்ம யோகி சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா அமைதிசக்தியை பிரயோகப்படுத்தக் கூடிய சிரேஷ்ட யோகி ஆத்மாக்களக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

**தாதிஜீ ராஜ்பீபல்(குஜராத்) மேளாவிற்கு செல்ல ஒரு நாள் விடுப்பு கேட்டுக் கொண்டிருக்கின்றார்:** விசேட ஆத்மாக்களின் ஒவ்வொரு அடியிலும் பல மடங்கு வருமானம் இருக்கிறது. பெரியவர்களின் உதவியும் குடை நிழலாக ஆகி விடுகிறது. எங்கு சென்றாலும் அங்கு ஒவ்வொரு வருக்கும் பெயர் சகிதமாக அன்பு நினைவுகள் கொடுக்கவும். பெயர்களின் மாலையை குழந்தைகள் பக்தியில் அதிகம் ஜெபித்திருக்கிறீர்கள். இப்போது தந்தை இந்த மாலை ஆரம்பித்தால் மிகப் பெரிய மாலை ஆகி விடும். ஆகையால் குழந்தைகள் (விசேஷ

ஆத்மாக்கள்) எங்கு சென்றாலும் அங்கு விசேடமாக ஆர்வம், உற்சாகம் அதிகரித்து விடுகிறது. விசேஷ ஆத்மாக்கள் செல்கின்றனர் எனில் சேவையில் மேலும் விசேஷதா ஏற்படும். இங்கிருந்து ஆரம்பமாகிறது பூமிச் சுற்றிச் சென்றால் போதும். இங்கு சேவைக்காக சுற்றுகிறீர்கள், அங்கு பக்தியில் அவர்கள் சரணம் பதித்ததற்கு மகத்துவம் உருவாக்கியிருக்கின்றனர் ஆனால் அனைத்தும் ஆரம்பம் இங்கிருந்து தான் ஏற்படுகிறது. அரை மணி நேரத்திற்கு சென்றாலும், ஒரு மணி நேரம் மட்டுமே சென்றாலும் அனைவரும் குஷியடைந்து விடுகின்றனர் ஆனால் இங்கு சேவை ஏற்படுகிறது. பக்தியில் சரணம் படுவதால் மட்டுமே குஷியின் அனுபவம் செய்கின்றனர். அனைத்து ஸ்தாபனையும் இங்கிருந்து தான் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. முழு பக்தி மார்கத்திற்கான அஸ்திவாரம் இங்கிருந்து தான் ஏற்படுகிறது, ரூபம் மட்டும் மாறி விடுகிறது. ஆக யாரெல்லாம் மேளா சேவைக்கு நிமித்தமாக ஆகியிருக்கிறார்களோ அதாவது சந்திப்பு செய்யும் சேவைக்கு நிமித்தமாக ஆகியிருக்கிறார்களோ, அவர்கள் அனைவருக்கும் பாப்தாதா, மேளாவிற்கு முன்பாகவே சந்திப்பு மேளா கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். இது தந்தை மற்றும் குழந்தைகளின் மேளா ஆகும், அது சேவைக்கான மேளா ஆகும். ஆக அனைவருக்கும் உள்ளப்பூர்வமான அன்பு நினைவுகள். நல்லது. உலகில் இரவு விடுதிகள் இருக்கும், இது அமிர்தவேளை விடுதியாகும். (தாதிகளிடம்) நீங்கள் அனைவரும் அமிர்தவேளை விடுதியின் அங்கத்தினர்களாக இருக்கிறீர்கள். அனைவரும் பார்த்து குஷியடை கின்றனர். விசேட ஆத்மாக்களைப் பார்த்து குஷியடைகின்றனர். நல்லது.

**விடைபெறும் நேரத்தில்: சத்குரு நாளிற்கான அன்பு நினைவுகள் (காலை 6-மணி):** விருட்சபதி நாளன்று விருட்சத்தின் ஆதி, முதல் இலைக்கு விருட்சபதி தந்தையின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே. அனைத்து சிரேஷ்ட ஆத்மாக்களுக்கும் குரு திசையானது நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. இராகு திசை, மேலும் மற்ற பல திசைகள் அழிந்து விட்டது. இப்போது ஒரே ஒரு விருட்சபதி, குரு திசை ஒவ்வொரு பிராமண ஆத்மாவிடத்திலும் சதா இருக்கிறது. ஆக குரு திசையும் நடைபெறுகிறது, மேலும் இன்றைய நாளும் குரு நாளாகும். விருட்சபதி தனது விருட்சத்தின் ஆதி இலைகளுடன் சந்திப்பு செய்து கொண்டிருக்கின்றார். ஆக சதா நினைவில் இருக்கிறீர்கள் மற்றும் சதா நினைவில் இருப்பீர்கள். சதா

அன்பில் மூழ்கியிருக்கிறீர்கள் மற்றும் சதா அன்பாகவே இருப்பீர்கள். புரிந்ததா!

**வரதானம்: சக்திசாலியான பிரேக் மூலம் வரதானி ரூபத்தில் சேவை செய்யக் கூடிய லைட், மைட் ஹவுஸ் ஆகுக!**

வரதானி ரூபத்தில் சேவை செய்வதற்காக முதலில் தனக்குள் சுத்த சங்கல்பங்கள் வேண்டும். மேலும் மற்ற சங்கல்பங்களை விநாடியில் கட்டுப்படுத்தும் விசேஷ பயிற்சி தேவை. முழு நாளும் சுத்த சங்கல்பங்களின் கடலில் விளையாடிக் கொண்டே இருங்கள், மேலும் எப்போது தேவையோ அப்போது சுத்த சங்கல்பங்கள் என்ற கடலின் ஆழத்தில் சென்று அமைதி சொரூபமாக ஆகி விடுங்கள். இதற்கு பிரேக் சக்திசாலியாக இருக்க வேண்டும். சங்கல்பங்களின் மீது முழு கட்டுப்பாடு இருக்க வேண்டும். மேலும் புத்தி அல்லது சன்ஸ்காரத்தின் மீது முழு அதிகாரம் இருக்க வேண்டும். அப்போது தான் லைட், மைட் ஹவுஸ் ஆகி வரதானி ரூபத்தில் சேவை செய்ய முடியும்.

**சுலோகன்: சங்கல்பம், நேரம் மற்றும் வார்த்தைகளில் சிக்கனம் செய்யுங்கள், அப்போது பாபாவின் உதவி பெற முடியும்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 22.11.1987 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உதவி செய்யும் கடலிடமிருந்து பலமடங்கு உதவியை பெறுவதற்கான விதி!

இன்று பாப்தாதா தனது நாலா பக்கமுள்ள தைரியசாலியான குழந்தைகளை பார்த்துக் கொண்டிருக்கிறார். தொடக்கத்திலிருந்து இதுவரை ஒவ்வொரு பிராமண ஆத்மாவும் தைரியத்தின் ஆதாரத்தினால் பாப்தாதாவின் உதவிக்கு தகுதியுடையவராக இருக்கிறார்கள், மேலும் தைரியமான குழந்தைகளுக்கு பாபாவின் உதவி என்ற ஆசீர்வாதத்தின் ஆதாரத்தில் முயற்சியில் நம்பர்வார் முன்னேறிக் கொண்டேயிருக்கிறார்கள். குழந்தைகளின் தைரியம் என்ற ஒரு அடி மற்றும் பாபாவின் பலமடங்கு உதவி ஒவ்வொரு குழந்தைகளும் அடைகிறார்கள். ஏனெனில் இதை பாப்தாதாவின் உறுதிமொழி என்றும் சொல்லாம், ஆஸ்தி என்றும் சொல்லாம், அனைத்துமே குழந்தைகளுக்காக இருக்கிறது, மேலும் இந்த சிரேஷ்ட ஆஸ்தியை எளிதாக அடையும் காரணத் தினால் தான் 63 -ஜென்மங்களின் பலமிழந்த ஆத்மாக்களை சக்திசாலியாக ஆக்கி முன்னேறிக் கொண்டே இருக்கிறது. பிராமண பிறவி எடுத்துடனே முதலாவது தைரியம் என்ன தாரணை செய்கிறோம்? முதலாவது தைரியம் -எதை அசம்பவத்தை (முடியாத விஷயத்தை) சம்பவமாக (முடியும் என்று) செய்து காட்டியது, தூய்மையின் விசேஷ தாரணையை செய்தது. தைரியத்தோடு நாங்கள் தூய்மையாக இருப்போம் என்று உறுதியான எண்ணத்தை கொண்டு வந்தீர்கள், மேலும் பாபா பலமடங்கு உதவி செய்தார். ஆத்மாக்களாகிய நீங்கள் அனாதி -ஆதி (பரந்தாமம், சத்யுகம்) தூய்மையாக இருந்தீர்கள், பலமுறை தூய்மையாக வாழ்ந்துள்ளீர்கள், மேலும் வாழ்ந்துக் கொண்டிருக்கிறீர்கள். புது விஷயம் கிடையாது. பலமுறை செய்த சிரேஷ்டமான மனநிலையை திரும்பவும் மீண்டும் செய்துக் கொண்டிருக்கிறீர்கள். இப்பொழுது,ம் கூட தூய்மையான ஆத்மாக்களாகிய உங்களுடைய பக்தர்கள், உங்களின்

ஜடசித்திரத்திற்கு முன்பாக தூய்மையின் சக்தியை கொடுங்கள் என்று யாசித்துக் கொண்டி ருக்கிறார்கள். உங்களுடைய தூய்மையின் தன்மைக்கு புகழ் பாடிக் கொண்டிருக்கிறார்கள். கூடவே உங்களுடைய தூய்மையின் அடையாளமாக ஒவ்வொரு பூஜைக்குரிய ஆத்மாக்களின் தலையில் ஒளியின் கீரிடம் இருக்கிறது. அவ்வாறு நினைவின் மூலம் சக்திசாலி ஆனீர்கள், அதாவது பாபாவின் உதவியின் மூலம் பலமிழந்த ஆத்மாக்களுக்கு சக்திசாலியாக மாற்றினீர்கள். நாங்கள் உலகத்தை தூய்மையாக மாற்றி காட்டு வோம் என்று உலகத்திற்கு சவாலுக்கு நிமித்தம் ஆகுங்கள், அந்தளவிற்கு சக்திசாலியாகுங்கள். யாரெல்லாம் துவாபர் யுகத்தில் புகழ்பெற்ற ரிஷிகள், முனிவர்கள், மகான் ஆத்மாக்கள் இல்லறத்தில் இருந்துக் கொண்டே தூய்மையாக இருப்பது என்பது அசம்பவமானது என்று எந்த விஷயத்திற்கு மறுப்பு தெரிவித்திருத்தார்களோ, மேலும் இன்றைய காலகட்டத்திலும் கூட தனக்காக (சன்னியாசி) கடினமானது என்று புரிந்திருக்கிறார்களோ, பலமிழந்த நிலையிலிருந்து பலசாலி ஆகுங்கள், மேலும் அவர்களுக்கு முன்னால் இது ஆத்மாவின் அனாதி, ஆதி உண்மை யான சொரூபமாக இருக்கிறது என்று இயல்பாகவே வர்ணணை செய்கிறீர்கள். இதில் கடினத் தன்மை இருக்கிறதா என்ன? இதற்கு தான் சொல்லபடுகிறது -தைரியமான குழந்தைகளுக்கு பாபாவின் உதவி கிடைக்கிறது. அசம்பவமானது (முடியாதது) அது எளிதாக அனுபவம் ஆகிறது, மேலும் ஆகிக் கொண்டேயிருக்கிறது. எந்தளவு அவர்கள் அசம்பவம் என்று சொன்னார்களோ, அந்தளவு நீங்களும் மிகவும் மிகவும் எளிது என்று சொல்கிறீர்கள். எனவே பாபாவின் ஞானத்தின் சக்தியின் உதவி மற்றும் நினைவு மூலம் ஆத்மாவின் தூய்மையான மனநிலையின் அனுபவத் தினுடைய சக்தியின் உதவியினால் மாற்றம் ஏற்பட்டுவிட்டது. இது தான் முதலாவது அடியின் தைரியத்திற்கு பாபாவின் பலமடங்கு உதவியாகும்.

அது போன்றே மாயாஜீத் ஆவதற்காக எவ்வளவு தான் வித விதமான ரூபத்தில் மாயா யுத்தம் செய்வதற்காக ஆரம்பத்திலிருந்து இதுவரை வந்து கொண்டிருக்கிறது. அவ்வப்பொழுது இராயல் ரூபத்தில் வருகிறது, அவ்வப் பொழுது தெரிந்த ரூபத்தில் வருகிறது, அவ்பொழுது மறைமுகமான ரூபத்தில் வருகிறது, மேலும் சில சமயம் செயற்கையான முறையில் ஈஸ்வரிய ரூபத்தில் வருகிறது. 63-ஜென்மமாக மாயாவிற்கு துணையாக இருந்து வந்தீர்கள். உறுதியான நண்பர்களை விடுவது கூட

கடினமாக தான் இருக்கிறது. ஆகையால் வித விதமான ரூபத்தினால் அது (மாயாவும்) கூட யுத்தம் செய்வதற்கு கட்டாயப்படுத்தப்படுகிறது, மேலும் நீங்களும் கூட இங்கே சக்திசாலியாக இருக்கிறீர்கள். இத்தனை தாக்குதல் நடந்தாலும் கூட யார் தைரியசாலியான குழந்தைகளாக இருக்கிறார்களோ, மற்றும் பாபாவின் பலமடங்கு உதவிக்கு தகுதியுடையவர்களாக இருக்கிறார்களோ, உதவி கிடைப்பதினால் மாயாவிடம் சவால் விடுகிறீர்கள் -உங்களுடைய (மாயாவின்) வேலை வருவது, மேலும் எங்களுடைய (தைரியசாலி குழந்தைகள்) வேலை வெற்றியடையவது. மாயாவின் தாக்குதலை விளையாட்டாக புரிந்திருக்கிறீர்கள், மாயா என்ற சிங்கத்தை எறும்பு என்று புரிந்திருக்கிறீர்கள். ஏனெனில் இந்த மாயாவின் இராஜ்யம் இப்பொழுது முடிவடைய போகிறது என்று தெரிந்திருக்கிறீர்கள். மேலும் நாமும் பலமுறை வெற்றி யடைந்த ஆத்மாக்களின் வெற்றியும் கூட 100% உறுதியானது. ஆகையால் இந்த உறுதி செய்யப்பட்டது என்ற நஷா (குஷி), பாபாவின் பல மடங்கு உதவியின் அதிகாரத்தை அடைய வைக்கிறது. எனவே எங்கு தைரியசாலி குழந்தைகளுக்கு சர்வசக்திவான் பாபா உதவி செய்கிறார். அங்கு அசம்பவத்தை சம்பவமாக செய்வது மற்றும் மாயாவிற்கு, உலகத்திற்கு சவால் விடுவது ஒன்றும் பெரிய விஷயமில்லை. அவ்வாறு புரிந்திருக்கிறீர்கள் அல்லவா?

ஆரம்பத்திலிருந்து இதுவரை ஒவ்வொரு குழந்தைகளின் தைரியத்தின் ஆதாரத்தில் உதவிக்கு தகுதியுடைவர் ஆகியிருக்கிறார்கள் சகஜ முயற்சியாளர்களாக எந்தளவு ஆகியிருக்கிறீர்கள் எந்தளவு வந்து சேர்ந்துள்ளீர்கள் என்ற ரிசல்டை பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார். எனவே எதை பார்த்தார்? பாபாவின் உதவி என்றாலே வள்ளலின் கொடுத்தல், ஆசீர்வாதம் அளிக்கக்கூடிய ஆசீர்வாதம் என்பது கடலை போன்றதாகும் ஆனால் கடலிடமிருந்து பெற்ற சில குழந்தைகள் கடலுக்கு சமமாக நிரம்பியவராகி மற்றவர்களையும் கூட உருவாக்குகிறீர்கள், மேலும் சில குழந்தைகள் உதவியின் விதியை தெரிந்து கொள்ளாத காரணத்தினால் உதவி பெறுவதற்கு பதிலாக தனது கடின உழைப்பில் அவ்வப்பொழுது தீவிரமாகவும், அவ்வப்பொழுது மன முடைந்து போகும் விளையாட்டில் கீழும் -மேலுமாக இருக்கிறார்கள். மேலும் சில குழந்தைகள் அவ்வப்பொழுது உதவியை பெறுகிறார்கள், அவ்வப்பொழுது கடின உழைப்பு செய்கிறார்கள். பல நேரம் உதவி கூட

பெறுகிறார்கள், ஆனால் ஒரு சில இடத்தில் பொறுப்பற்ற தன்மையின் காரணத்தினால் உதவியை பெறுவதற்கான விதியை தகுந்த நேரத்தில் மறந்து விடுகிறார்கள். மேலும் தைரியம் வைப்பதற்கு பதிலாக பொறுப்பற்ற தன்மையின் காரணத்தினால் நாங்கள் எப்பொழுதும் தகுதியானவர்களாக தான் இருக்கிறோம், பாபா எங்களுக்கு உதவி செய்யவில்லையென்றால் வேறு யாருக்கு செய்வார், பாபா கட்டுபட்டுள்ளார் என்று அபிமானத்தில் வந்து விடுகிறார்கள். இந்த அபிமானத்தின் காரணத்தினால் தைரியத்தின் மூலம் உதவியின் விதியை மறந்து விடுகிறார்கள். முரண்பாடான பெருமையும், தன்னை கவனித்துக்கொள்வதற்கான பெருமையும் தான் உதவியை இழப்பதற்கான காரணமாகி விடுகிறது. இப்பொழுது அதிகளவில் நினைவு செய்து விட்டோம், ஞானம் நிறைந்த ஆத்மாவாகி விட்டோம், யோகியாகவும் ஆகி விட்டோம், சேவையில் கூட பெயர் பிரபலமாகி விட்டது, சென்டர் பொறுப்பாளராகவும் ஆகி விட்டோம், சேவையின் இராஜ்யமும் கிடைத்து விட்டது, இயற்கையும் கூட சேவைக்கு தகுதியுடையதாக விட்டது, ஒய்வாக வாழ்க்கையை வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம் என்று புரிந்துகொள்கிறார்கள். இதில் தான் கவனம் வைப்பதற்கு பதிலாக அலட்சியம் (பொறுப்பற்ற நிலை) வந்து விடுகிறது. எனவே எதுவரை வாழ்கிறோமோ, அதுவரை படிப்பு மற்றும் சம்பூரணம் ஆவதற்கான கவனம், எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கிய உள்ளுணர்வு உருவாக்குவதற்கான கவனம் தர வேண்டும். இதை மறந்து விடுகிறார்கள். பிரம்மாபாபாவை பார்த்தீர்களா, கடைசி முழுமையான கர்மாதீத் நிலையை அடையும் வரை தன்மீது, சேவையில், எல்லைக்கு அப்பாற்பட்ட உள்ளுணர்வு மீது, மாணவ வாழ்க்கை என்ற முறையில் கவனம் கொடுத்து நிமித்தமாக இருந்துக் காட்டினார். ஆகையால் ஆரம்பத்திலிருந்து கடைசி வரை தைரியமாக இருந்து, தைரியம் கொடுப்பதற்கான நிமித்தமாக இருந்தார். எனவே பாபாவின் நம்பர் ஒன் உதவிக்கு தகுதியுடையவராகி நம்பர் ஒன் பிராப்தியை (பிரம்மாபாபா) அடைந்தார். எதிர்காலம் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தாலும் கூட அலட்சியமாக இருக்கக் கூடாது. சதா தனது தீவிர முயற்சியின் அனுபவம் குழந்தைகளுக்கு முன்னால் இறுதி வரை கற்றுக் கொடுத்தார். உதவி அளிக்கும் கடலிடம் மூழ்கி விடுங்கள், அவர் (பிரம்மா) இப்பொழுது கூட பாபாவிற்கு சமமாக ஒவ்வொரு குழந்தைகளுக்கும் அவ்யக்த ரூபத்தில் இருந்துக் கொண்டு உதவி செய்கிறார். இதற்கு தான் ஒரு அடி

தைரியமாக வையுங்கள், மேலும் பலமடங்கு உதவிக்கு தகுதியுடைவர் ஆகி விடுவீர்கள் என்று சொல்லப்படுகிறது.

எனவே பல குழந்தைகள் உதவி பெறுவதற்கு தகுதியுடைவராக இருந்தலும் கூட உதவி பெறுவதை இழந்து விடுகிறார்கள்? எனபதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். இதற்கான காரணம் -தைரியத்தின் விதியை மறந்து விடும் காரணத்தினால், அபிமானம் என்றாலே அலட்சியம் மற்றும் தன்மீது கவனக்குறைவு தான் காரணமாக இருக்கிறது. விதிமுறை இல்லையென்றால் ஆசீர்வாதம் பெறுவதை இழந்து விடுகிறீர்கள். கடலின் குழந்தையாக இருந்தாலும் கூட சின்னஞ்சிறு குளமாக மாறிவிடுகிறீர்கள். எப்படி குளத்தின் தண்ணீர் இடையில் நின்றுவிடுவதை போன்று, முயற்சியில் அது (அபிமானம்) இடையில் நின்று விடுகிறது. அதனால் தான் அவ்வப்பொழுது கடின உழைப்பிலும், அவ்வப்பொழுது குஷியில் இருக்கிறார்கள். இன்றைக்கு பார்த்தால் அதீத மகிழ்ச்சியில் இருக்கிறார்கள், அடுத்தநாள் சிறிய உலோகம் (கல்) இடையில் வந்து விடும் காரணத்தினால் அதை நீக்குவதற்கான உழைப்பில் ஈடுபடுகிறார்கள். மலை கூட அல்ல, சின்னஞ்சிறு கல் தான் இருக்கிறது. மகாவீர் பாண்டவ சேனைகளாக இருக்கிறார்கள், ஆனால் சின்னஞ்சிறு கூழாங்கல் போன்ற கற்கள் கூட மலை போன்று ஆகி விடுகிறது. அதை நீக்குவதற்கான முயற்சியில் இருந்து விடுகிறார்கள். பிறகு மிகவும் நகைக்கிறார்கள் (சிரிக் கிறார்கள்). ஒருவேளை அவர்களிடம் யாராவது இது மிகவும் சிறிய கூழாங்கல்லாக இருக்கிறது, இதில் நகைப்பதற்கான விஷயம் என்ன இருக்கிறது? என்று கேட்டால், உங்களுக்கு என்ன தெரியும், உங்கள் முன்னால் வந்தால் தான் தெரிய வரும். பாபாவிற்கு கூட சொல்கிறார்கள் -நீங்கள் நிராகாராக இருக்கிறீர்கள். உங்களுக்கு என்ன தெரியும்! பிரம்மாபாபாவிற்கும் கூட சொல் கிறார்கள் -உங்களுக்கு பாபாவின் லிப்ட் (உதவி) கிடைத்திருக்கிறது, உங்களுக்கு தான் என்ன தெரியும்? மிகவும் நல்ல நல்ல விஷயங்களை பேசுகிறார்கள் ஆனால் இதற்கு சின்னஞ்சிறு தவறு தான் காரணமாக இருக்கிறது. தைரியமான குழந்தைகளுக்கு கடவுளின் உதவி கிடைக்கிறது -இந்த இரகசியத்தை மறந்து விடுகிறார்கள். இது நாடகத்தின் ஒரு ஆழமான கர்மத்தின் இரகசிய மாக இருக்கிறது. தைரியமான குழந்தைகளுக்கு கடவுளின் உதவி கிடைக்கும், ஒருவேளை இந்த சட்டம் இல்லையென்றால் அனைவரும் உலகத்தின் முதலாவது

இராஜாவாகி விடுவார்கள். ஒரே நேரத்தில் அனைவரும் சிம்மாசனத்தில் அமருவார்களா என்ன? நம்பர்வார் ஆவதற்கான சட்டம் இந்த விதியின் காரணத்தினால் தான் உருவாகிறது. இல்லையென்றால், பிரம்மாவை ஏன் முதல் நம்பரில் உருவாக்கினீர்கள்? நாங்களும் கூட ஆக முடியுமல்லவா? என்று அனைவரும் பாபாவிடம் புகார் கூறுவார்கள். ஆகையால் இந்த ஈஸ்வரிய சட்டம் நாடகப்படி உருவாக்கப்பட்டிருக்கிறது. ஒரு அடி தைரியத்தினுடையது மேலும் பலமடங்கு உதவி கிடைக்கும் என்ற சட்டம் இதன் பொருட்டு உருவாக்கப்பட்டிருக்கிறது. உதவி அளிக்கும் கடல் இருந்தாலும் கூட இந்த சட்டத்தின் விதி நாடகத் திட்டப்படி உருவாகியிருக்கிறது. எனவே எந்தளவு தைரியம் வைக்கிறீர்களோ, அந்தளவு உதவி பெறுவீர்கள். இதில் யாருக்கும் குறை வைப்பதில்லை. ஒரு வருட குழந்தையாக இருந்தாலும் சரி, 50-வருட குழந்தையாக இருந்தாலும் சரி, சரண்டராக இருந்தாலும் சரி, இல்லற மார்க்கத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி -அதிகாரத்திற்கு உரியவர்களாக இருக்கிறார்கள் ஆனால் விதியின் மூலம் தான் பிராப்தி அடைய முடியும். எனவே ஈஸ்வரிய சட்டத்தை புரிந்து கொண்டீர்கள் அல்லவா!

தைரியம் நன்றாக வைத்துள்ளீர்கள். இதுவரை தைரியம் வைத்ததால் தான் வந்து சேர்ந்துள்ளீர்கள் அல்லவா. பாபாவினுடையவர் ஆவதற்காக தைரியம் வைத்ததால் தான் ஆனீர்கள் அல்லவா. எப்பொழுதும் தைரியத்தின் விதி மூலம் உதவிக்கு தகுதியுடையவராகி ஆவது, மற்றும் அவ்வப் பொழுது விதியின் மூலம் வெற்றி அடைவது -இதில் வேறுபாடு இருக்கிறது அல்லவா! சதா ஒவ்வொரு அடியிலும் தைரியத்தோடு உதவிக்கு தகுதியுடையவர் ஆகி நம்பர் ஒன் ஆவதற்கான இலட்சியத்தை அடையுங்கள். நம்பர் ஒன் ஒரு பிரம்மா ஆகி விட்டார், ஆனால் முதல் டிவிசினில் (பிரிவில்) எண்ணிக்கை (இடம்) இருக்கிறது. ஆகையால் நம்பர் ஒன் என்று சொல்கிறார்கள். புரிந்ததா? முதல் டிவிசனில் வர முடியுமல்லவா? இதை தான் நம்பர் ஒன்னில் வருவது என்று சொல்லப்படுகிறது. அவ்வப்பொழுது அலட்சியத்தன்மையின் லீலை (விளையாட்டை) குழந்தைகள் கேட்கிறார்கள். மிகவும் நன்றாக லீலை செய்கிறீர்கள். பாப்தாதா எப்பொழுதும் குழந்தைகளின் லீலையை பார்த்துக் கொண்டிருக்கிறார். அவ்வப்பொழுது தீவிர முயற்சியின் லீலையை கூட பார்க்கிறார், அவ்வப்பொழுது அலட்சியத்தன்மையின் லீலையை பார்க்கிறார். நல்லது.

கர்நாடகாவை சேர்ந்தவர்களின் விசேஷத்தன்மை என்ன? ஒவ்வொரு மண்டலத்தை சேர்ந்தவர் களுக்கும் அவரவர்களின் சிறப்பு தன்னை இருக்கிறது. கர்நாடகாவை சேர்ந்தவர்களுக்கு தனது மொழி நன்றாக இருக்கிறது -உணர்வு பூர்வமான மொழியில் புத்திசாலியாக இருக்கிறார்கள். இவர்கள் இந்தியை குறைவாக புரிந்திருக்கிறீர்கள், ஆனால் கர்நாடகாவை சேர்ந்தவர்களின் விசேஷத்தன்மை உணர்வுகளின் மொழியில் நம்பர் ஒன்னாக இருக்கிறார்கள். ஆகையால் உணர்வுகளின் பலன் எப்பொழுதுமே கிடைக்கிறது. வேறு எதுவும் பேசுவதில்லை, ஆனால் சதா பாபா -பாபா என்று தான் சொல்கிறார்கள். இந்த பாவணையின் உயர்ந்த மொழியை தெரிந்திருக்கி றீர்கள். பாவணையின் பூமி அல்லவா! நல்லது.

நாலாபக்கமுள்ள தைரியமான குழந்தைகளுக்கு, சதா பாபாவின் உதவிக்கு தகுதியானவராக ஆகக்கூடிய ஆத்மாக்களுக்கு, சதா சட்டத்தை தெரிந்துகொண்டு விதிப்படி வெற்றியை அடையக் கூடிய சிரேஷ்ட ஆத்மாக் களுக்கு, சதா பிரம்மாபாபாவிற்கு சமமாக இறுதிவரை படிப்பு மற்றும் முயற்சியின் முறைபடி செல்லக் கூடிய உயர்ந்த, மகான் தன்மையுடைய பாபாவிற்கு சமமான குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டியில் உள்ளவர்களுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு**: தனது டபுள் லைட் ஃபரிஸ்தா நிலையை அனுபவம் செய்கிறீர்களா? டபுள் லைட் மனநிலை தான், ஃபரிஸ்தாவின் மனநிலையாகும். ஃபரிஸ்தா என்றாலே லைட் (ஒளி). பாபாவினுடையவர் ஆகி விட்டீர்கள் என்றால் அனைத்து சுமைகளையும் பாபாவிற்கு கொடுத்து விட்டீர்களா? சுமை இலேசாகி விட்டது என்றால் ஃபரிஸ்தாவாகவும் ஆகி விட்டீர்கள். பாபா வருவதே சுமைகளை சமாப்தி செய்வதற்காக, அதனால் பாபா சுமையை சமாப்தி செய்யக் கூடியவராக இருக்கிறார், அதனால் நீங்கள் அனைவரும் சுமையை சமாப்தி செய்து விட்டீர்களா? எந்தவித சின்னஞ்சிறிய மூட்டையையும் மறைத்து வைத்துக் கொள்ளவில்லையே? அனைத்தும் கொடுத்து விட்டீர்களா அல்லது சிறிது நேரத்திற்காக வைத்திருக்கிறீர்களா? கொஞ்சமாவது பழைய சம்ஸ்காரம் இருக்கிறதா அல்லது அது கூட முடித்து விட்டீர்களா? பழைய சம்ஸ்காரம் மற்றும்

பழைய சுபாவம், இவை கூட பொக்கிஷம் அல்லவா? இதை கூட கொடுத்து விட்டீர்களா? ஒருவேளை கொஞ்சம் மிச்சம் இருந்து விட்டால், மேலிருந்து கீழே வந்து விடுவீர்கள், ஃபரிஸ்தா ஆகி பறக்கும் கலையை செய்யவிடாது. அவ்வப்பொழுது மேலே, அவ்வப்பொழுது கீழே வந்து விடுகிறீர்கள். ஆகையால் அனைத்தையும் கொடுத்து விடுங்கள் என்று பாப்தாதா சொல்கிறார். இது ராவணனின் சொத்தாக இருக்கிறதா அல்லவா. ராவணனின் சொத்தை தன்னிடம் வைத்துக் கொள்வதால் துக்கம் தான் அடைகிறார்கள். ஃபரிஸ்தா என்றாலே கொஞ்சம் கூட ராவணனின் சொத்து இருக்கக் கூடாது. பழைய சுபாவம் மற்றும் சம்ஸ்காரம் வருகிறது அல்லவா? (பழைய சம்ஸ்காரத்தை கொண்டு வர) விருப்பம் இல்லை தான் ஆனால் வந்து விடுகிறது, செய்து விடுகிறோம் அல்லது ஆகி விடுகிறது என்று சொல்கிறீர்கள் அல்லவா. எனவே இதன் மூலம் சின்னஞ்சிறிய பழைய மூட்டையை வைத்துள்ளீர்கள் என்பது நிரூபணம் ஆகிறது அல்லவா? மணல் துகளின் மூட்டையை வைத்திருக்கிறீர்கள் அதனால் சதா காலத்திற்காக ஃபரிஸ்தா ஆவதாகும் -இது தான் பிராமண வாழ்க்கையாகும். நடந்தது முடிந்து விட்டது. பழைய கணக்கு சாம்பலாகி விடுகிறது. இப்பொழுது புது விஷயம், புது கணக்கு. ஒருவேளை கொஞ்சமாவது பழைய கடன் இருக்கிறது என்றால் சதா காலத்திற்கு மாயாவின் நோய் ஏற்படுகிறது, ஏனெனில் கடனை நோய் என்று சொல்லப்படுகிறது. ஆகையால் அனைத்து கணக்கும் முடிந்து போகும். புது வாழ்க்கை கிடைத்து விட்டது என்றால் பழையது அனைத்தும் முடிந்து விடும்.

சதா ஆஹா ஆஹா என்ற பாடலை பாடக்கூடியவர்களா இருக்கிறீர்களா? ஹய்யோ ஹய்யோ என்ற பாடல் முடித்து விட்டீர்கள் மற்றும் ஆஹா ஆஹா என்ற பாடல் எப்பொழுதும் மனதால் பாடிக் கொண்டே இருங்கள். யாரெல்லாம் உயர்ந்த காரியம் செய்கிறீர்கள் என்றால் மனதிலிருந்து என்ன வருகிறது? ஆஹா என்னுடைய சிரேஷ்ட காரியம். மற்றும் ஆஹா சிரேஷ்ட காரியம் கற்பிக்கக் கூடிய பாபா! மற்றும் ஆஹா சிரேஷ்ட நேரம் (சங்கமயுகம்), சிரேஷ்ட காரியம் செய்விக்கக் கூடியவர், எனவே எப்பொழுதுமே ஆஹா, ஆஹா! என்ற பாடலை பாடக்கூடிய ஆத்மாக்களாக இருக்கிறீர்களா? ஒருபொழுதும் தவறுதலாக கூட ஐயோ என்று வராமல் இருக்கிறதா? ஐயோ, இது என்ன நடந்தது -அல்ல. ஏதாவது துக்கத்தின் காட்சியை பார்த்தாலும் கூட ஐயோ என்ற வார்த்தை

வரக்கூடாது. நேற்று (கலியுகம்) ஐயோ -ஐயோ என்ற பாடலை பாடினீர்கள், மேலும் இன்று (சங்கமயுகம்) ஆஹா ஆஹா என்ற பாடலை பாடுகிறீர்கள். இந்தளவு வித்தியாசம் ஆகி விட்டது! இது யாருடைய சக்தி? பாபாவினுடையதா அல்லது நாடகத் தினுடையதா? (பாபாவின்) பாபாவும் கூட நாடகத்தின் காரணத்தினால் தான் வருகிறார் அல்லவா. அதனால் நாடகம் கூட சக்திசாலி ஆகி விட்டது. ஒருவேளை நாடகத்தில் நடிப்பே இல்லையென்றால் பாபாவும் கூட என்ன செய்வார்? பாபாவும் கூட சக்திசாலியாக இருக்கிறார் மற்றும் நாடகமும் கூட சக்திசாலியாக இருக்கிறது. எனவே இரண்டின் பாடலை பாடிக் கொண்டே இருங்கள் -ஆஹா டிராமா ஆஹா. எதை கனவில் கூட நினைக்கவில்லை, அது சாகாரத்தில் வந்து விட்டது. வீட்டில் இருந்தபடியே அனைத்தும் கிடைத்து விடுகிறது. வீட்டில் அமர்ந்தபடியே பாக்கியம் கிடைத்து விட்டது -இதற்கு டைமண்ட் லாட்டரி என்று சொல்லப்படுகிறது.

சங்கமயுகம் சுயராஜ்ய அதிகாரி ஆத்மாக்கள் ஆகி விட்டீர்களா? ஒவ்வொரு கர்மேந்திரியங்களின் மீதும் நீங்கள் இராஜ்யம் செய்கிறீர்களா? எந்தவொரு கர்மேந்திரியமும் ஏமாற்றவில்லை தானே? ஒருபொழுதும் எண்ணத்திலும் கூட தோல்வி ஏற்படவில்லையே? எப்பொழுதாவது வீணான எண்ணங்கள் உருவாவதில்லையே? சுயராஜ்ய அதிகாரி ஆத்மாக்களாக இருக்கிறார்களா -இந்த மகிழ்ச்சி மற்றும் நம்பிக்கையின் மூலம் சதா சக்திசாலியாகி மாயாவை வென்றவராகி உலகத்தை வென்றவர் ஆகுங்கள். சுயராஜ்ய அதிகாரி ஆத்மாக்கள் சகஜயோகியாகவும், நிரந்தர யோகியாகவும் ஆக முடியும். சுயராஜ்ய அதிகாரியின் மகிழ்ச்சி மற்றும் நம்பிக்கையினால் முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். தாய்மார்கள் பற்றற்றவராக இருக்கிறீர்களா அல்லது பற்று இருக்கிறதா? பாண்டவர்களுக்கு எப்பொழுதாவது கோபத்தின் ஒரு பகுதியாக ஆவேசம் வருகிறதா? எப்பொழுதாவது ஏதாவது மேலும் கீழும் செய்து விட்டால், கோபம் வருகிறதா? கொஞ்சம் சேவையின் வாய்ப்பு குறைவாக கிடைத்து விட்டது, மற்றவருக்கு அதிகமாக கிடைத்து விட்டால், சகோதரிகள் மீது -இவர் என்ன செய்கிறார் என்று ஆவேசம் வருகிறதா? பாருங்கள், பேப்பர் (பிரச்சனை) வரும். ஏனெனில் சிறிதளவு தேக அபிமானம் வருகிறது என்றால் அதனால் ஆவேசம் மற்றும் கோபம் எளிதாக வந்து விடுகிறது. ஆகையால் சதா சுயராஜ்ய அதிகாரி அதாவது எப்பொழுதும் நிர் அகங்காரி, எப்பொழுதும்

பணிவுடையவராகி சேவாதாரி ஆகக் கூடியவர், மோகத்தின் பந்தனம் கூட முடிந்து விடும். நல்லது,

**வரதானம்: பாபாவிற்கு சமமாக தனது ஒவ்வொரு வார்த்தை மற்றும் கர்மமும் நினைவு சின்னமாக ஆக்கக் கூடிய இதய சிம்மாசனதாரி மற்றும் இராஜ்ய அதிகாரி ஆகுக!**

பாபாவிடமிருந்து என்னவெல்லாம் வார்த்தைகள் வருகிறதோ, அவை அனைத்தும் நினைவு சின்னம் ஆகி விடுவதை போல, யார் பாபாவிற்கு சமமாக இருக்கிறார்களோ, அவர்கள் என்ன வார்த்தைகளை பேசுகிறார்களோ, அவை அனைவரின் மனதிலும் கலந்து விடுகிறது, அதாவது நினைவுசின்னமாக இருந்து விடுகிறது. யார் எந்த ஆத்மாவிற்காக எண்ணங்களை உருவாக்கு கிறார்களோ, அது அவர்களின் மனதில் பதிந்து விடுகிறது. அவர் களுடைய இரண்டு வார்த்தைகள் கூட மனதின் துக்கத்தை நீக்கக் கூடியதாக இருக்கிறது. அவர்களிடம் நெருக்கத்தின் அனுபவம் ஏற்படுகிறது, ஆகையால் அனைவரையும் தன்னுடையவராக புரிந்து கொள்கிறார்கள். அப்படி சமமான குழந்தை தான் இதயசிம்மாசனதாரி மற்றும் இராஜ்ய அதிகாரியாகவும் ஆகி விடுகிறார்கள்.

**சுலோகன்: தனது பறக்கும் கலை மூலம் ஒவ்வொரு பிரச்சனைகளையும் எந்த வித தடைகளும் இல்லாமல் கடக்கக் கூடிய பறக்கும் பறவை ஆகுங்கள்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 27.11.1987 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எல்லையற்ற வைராக்கியம் உடையவர்களே உண்மையான இராஜரிஷி!

இன்று பாப்தாதா அனைத்து இராஜரிஷிகளின் தர்பாரைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். முழு கல்பத்தில் இராஜாக்களுடைய தர்பார் அநேக முறை கூடுகிறது ஆனால், இந்த இராஜரிஷிகளின் தர்பார் இந்த சங்கம யுகத்தில் மட்டுமே கூடுகிறது. நீங்கள் இராஜாவும் ஆவீர்கள், ரிஷியும் ஆவீர்கள். இந்த சமயத்தின் இந்த தர்பாரினுடைய இந்த சிறப்புத்தன்மை மகிமை பாடப்பட்டுள்ளது. ஒருபுறம் இராஜ்யம் அதாவது அனைத்து பிராப்திகளின் அதிகாரி மற்றும் இன்னொரு புறம் ரிஷி அதாவது எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய விருத்தி உடையவர்கள். ஒருபுறம் அனைத்து பிராப்திகளின் அதிகாரத்தினுடைய போதை மற்றும் மறுபுறம் எல்லையற்ற வைராக்கியத்தின் அலௌகீக போதை. எந்தளவு சிரேஷ்ட பாக்கியமோ, அந்தளவே சிரேஷ்ட தியாகம் இருக்க வேண்டும். இரண்டினுடைய சமநிலை இருக்க வேண்டும். இத்தகையவர்களையே இராஜரிஷி என்று கூறப்படுகிறது. அத்தகைய இராஜரிஷி குழந்தைகளுடைய சமநிலையைப் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். அவ்வப்போது அதிகாரி நிலையின் போதை மற்றும் அவ்வப் போது வைராக்கிய விருத்தியின் போதை -இந்தப் பயிற்சியில் எந்தளவு நிலைத்திருக்க முடிகிறது அதாவது இரண்டு ஸ்திதிகளையும் எந்தளவு சமமாகப் பயிற்சி செய்துகொண்டு இருக்கின்றார்கள்? இதை சோதனை செய்துகொண்டு இருந்தார்கள். அனைத்து குழந்தைகளும் வரிசைக்கிரமமான பயிற்சியாளர்களே ஆனால், சமயத்தின் அனுசாரம் இந்த இரண்டு பயிற்சிகளையும் இன்னும் அதிகத்திலும் அதிகமாக அதிகரித்துக் கொண்டே செல்லுங்கள். எல்லையற்ற வைராக்கிய விருத்தி என்பதன் அர்த்தமே -வைராக்கியம் என்றால் ஒதுக்குவது கிடையாது, ஆனால், அனைத்து பிராப்திகள் இருந்தபோதிலும்

எல்லைக்குட்பட்ட கவர்ச்சியானது மனம் மற்றும் புத்தியை கவர்ச்சிக்காத நிலையாகும். எல்லயைற்ற நிலை என்றால் நான் சம்பூரண சம்பன்ன ஆத்மா தந்தைக்கு சமமாக சதா அனைத்து கர்மேந்திரியங்களின் இராஜ்ய அதிகாரி, இந்த சூட்சும சக்திகளான மனம், புத்தி, சம்ஸ்காரத்திற்கும் கூட அதிகாரி, எண்ணத்தளவில் கூட அடிமைத்தனம் இல்லாத நிலை என்பதாகும். இதையே இராஜரிஷி அதாவது எல்லையற்ற வைராக்கிய விருத்தி என்று கூறப் படுகிறது. இந்தப் பழைய தேகம் மற்றும் தேகத்தின் பழைய உலகம் மற்றும் வியக்த உணர்வு, வைபவங்களின் உணர்வு -இந்த அனைத்து கவர்ச்சிகளில் இருந்தும் சதா மற்றும் சகஜமாக விலகி இருப்பவர்களே இராஜரிஷிகள்.

எவ்வாறு அறிவியல் சக்தி பூமியின் ஈர்ப்பில் இருந்து கடந்து செல்ல வைக்கிறதோ, அவ்வாறு அமைதியின் சக்தி இந்த எல்லைக்குட்பட்ட அனைத்து கவர்ச்சிகளில் இருந்தும் விலக்குகிறது. இதையே சம்பூரண சம்பன்ன தந்தைக்கு சமமான ஸ்திதி என்று கூறப்படுகிறது. எனவே, அத்தகைய ஸ்திதியின் பயிற்சியாளராக ஆகியிருக்கின்றீர்களா? ஸ்தூல கர்மேந்திரியங்கள் என்பது மிகப் பெரிய விசயமாகும். கர்மேந்திரியத்தை வென்றவராகுவது என்பது கூட சகஜ மானது ஆனால், மனம், புத்தி, சம்ஸ்காரம் ஆகிய இந்த சூட்சும சக்திகள் மீது வெற்றியாளர் ஆவது என்பது சூட்சும பயிற்சியாகும். எந்த சமயத்தில் எந்த சங்கல்பம், எந்த சம்ஸ்காரத்தை வெளிக் கொண்டு வர விரும்புகின்றீர்களோ, அதே சங்கல்பம், அதே சம்ஸ்காரத்தை சகஜமாக தன்னுடையதாக ஆக்க முடிய வேண்டும், இதையே சூட்சும சக்திகள் மீது வெற்றியடைதல் அதாவது இராஜரிஷி ஸ்திதி என்று கூறப்படுகிறது. எவ்வாறு ஸ்தூல கர்மேந்திரியங்களுக்கு இதைச் செய், இதைச் செய்யாதே என்று கட்டளை பிறப்பிக்கின்றீர்கள். கையைக் கீழே போடுங்கள், மேலே உயர்த்துங்கள் என்றால் மேலே உயர்ந்து விடுகிறது அல்லவா. அவ்வாறே சங்கல்பம் மற்றும் சம்ஸ்காரம் மற்றும் நிர்ணய சக்தியான புத்தி இதேபோன்று கட்டளைப்படி நடக்க வேண்டும். ஆத்மா அதாவது இராஜா மனதிற்கு அதாவது சங்கல்ப சக்திக்கு, இப்பொழுதே ஒருமுகப்பட்டுவிடு, ஒரு சங்கல்பத்தில் நிலைத்து விடு என்ற கட்டளை பிறப்பித்தால் இராஜாவின் கட்டளையை அந்த விநாடியே கட்டளையின்படி ஏற்றுக் கொள்ள வேண்டும், இதுவே இராஜ அதிகாரியின் அடையாளமாகும். மூன்று, நான்கு நிமிட பயிற்சிக்குப் பிறகு மனம் ஏற்றுக்கொள் கிறது என்பது

கூடாது. ஒருமுகப்படுவதற்குப் பதிலாக தடுமாற்றத் திற்குப் பிறகு ஒருமுகப் படுகிறது என்றால் இதை என்னவென்று சொல்லலாம்? அதிகாரி என்று கூறமுடியுமா? எனவே, இவ்வாறு சோதனை செய்யுங்கள். ஏனெனில், இறுதி நேரத்தின் இறுதி ரிசல்ட்டிற்கான சமயம் ஒரு விநாடிக்கான கேள்வி ஒன்று தான் இருக்கும் என்று முன்னரே சொல்லப்பட்டுள்ளது. இந்த சூட்சும சக்திகளின் அதிகாரி ஆவதற்கான பயிற்சி ஒருவேளை இல்லை என்றால் அதாவது உங்களுடைய மனம் இராஜாவாகிய உங்களுடைய கட்டளையை ஒரு விநாடிக்குப் பதிலாக மூன்று விநாடிகள் கழித்து கேட்கிறது என்றால் உங்களை இராஜ்ய அதிகாரி என்று அழைக்க முடியுமா? மற்றும் ஒரு விநாடிக்கான இறுதித் தேர்வில் தேர்ச்சி பெறுவீர்களா? எத்தனை மதிப்பெண்கள் கிடைக்கும்?

இதுபோன்று புத்தி அதாவது நிர்ணய சக்தி மீதும் கூட அதிகாரம் இருக்க வேண்டும் அதாவது எந்த சமயம் என்ன சூழ்நிலை உள்ளதோ, அதன் அனுசாரம் அந்த விநாடி நிர்ணயம் செய்ய வேண்டும். இதையே புத்தியின் மீது அதிகாரம் கொண்டிருப்பது என்று கூறலாம். சூழ்நிலை அல்லது சமயம் கடந்து விட்டது, பிறகு இவ்வாறு நடந்திருக்கக் கூடாது, ஒருவேளை இந்த நிர்ணயம் செய்திருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும் என்று சிந்திப்பது கூடாது. எனவே, தக்கசமயத்தில் சரியான நிர்ணயம் செய்வது -இது இராஜ்ய அதிகாரி ஆத்மாவின் அடையாளம் ஆகும். முழு நாளில் இராஜ்ய அதிகாரி அதாவது இந்த சூட்சும சக்திகளைக் கூட எந்தளவு கட்டளைப்படி நடத்துபவராக இருக்கின்றேன்? என்று சோதனை செய்யுங்கள். தினமும் தன்னுடைய பணியாளர்களின் தர்பார் கூட்டுங்கள். ஸ்தூல கர்மேந்திரியங்கள் மற்றும் சூட்சும கர்மேந்திரியங்கள் ஆகிய இந்த பணியாளர்கள் கட்டுப்பாட்டிற்குள் இருந்தார்களா அல்லது இல்லையா? என்று சோதனை செய்யுங்கள். இப்பொழுதிலிருந்தே இராஜ்ய அதிகாரி ஆவதற்கான சம்ஸ்காரம் அநேக ஜென்மங்களுக்கு இராஜ்ய அதிகாரியாக ஆக்கும். புரிந்ததா? இவ்விதமாக, சம்ஸ்காரம் ஏமாற்றம் கொடுப்பதில்லை தானே? ஆதி, அனாதி சம்ஸ்காரம் அதாவது அனாதி சம்ஸ்காரமானது சுத்தமான, சிரேஷ்டமான பாவனமான சம்ஸ்காரம், சர்வகுண சொரூப சம்ஸ் காரம் ஆகும் மற்றும் ஆதி சம்ஸ்காரமானது தேவ ஆத்மாவின் இராஜ்ய அதிகாரி நிலையின் சம்ஸ்காரம், சர்வ பிராப்தி சொரூபத்தின் சம்ஸ்காரம், சம்பன்ன, சம்பூரண நிலையின் இயற்கை யான சம்ஸ்காரம் ஆகும்.

எனவே, சம்ஸ்கார சக்தியின் மீது இராஜ்ய அதிகாரி சம்ஸ்காரம் அதாவது சதா அனாதி, ஆதி சம்ஸ்காரம் எமர்ஜாகி (வெளிப்பட்டு) இருக்க வேண்டும். இயற்கை யான சம்ஸ்காரமாக இருக்க வேண்டும். மத்திம சம்ஸ்காரம் அதாவது துவாபர யுகத்தில் இருந்து பிரவேசமாகி இருக்கும் சம்ஸ்காரம் தன்பக்கம் கவர்ச்சிக்கக் கூடாது. சம்ஸ்காரங்களுக்கு வசமாகி வேறுவழியற்றவராக ஆகக்கூடாது. என்னுடைய பழைய சம்ஸ்காரம் என்று கூறுகின்றீர்கள் அல்லவா. உண்மையில் அனாதி மற்றும் ஆதி சம்ஸ்காரமே பழைய சம்ஸ்காரம் ஆகும். இதுவோ மத்திமம், துவாபர யுகத்தில் இருந்து வந்திருக்கும் சம்ஸ்காரம் ஆகும். எனவே, பழைய சம்ஸ்காரம் என்பது ஆதியில் வந்த சம்ஸ்காரமா அல்லது மத்திமத்தில் வந்த சம்ஸ்காரமா? எந்தவொரு எல்லைக்குட்பட்ட கவர்ச்சியில் கவர்ச்சிக்கப்படும் சம்ஸ்காரமானது ஒருவேளை தன்பக்கம் ஈர்க்கிறது என்றால் சம்ஸ்காரங்கள் மீது இராஜ்யம் செய்யும் அதிகாரி என்று கூற முடியுமா? இராஜ்யத்திற்குள் ஒரு சக்தி அதாவது ஒரு கர்மேந்திரியம் என்ற பணியாள் கூட ஒருவேளை கட்டளைப்படி நடக்கவில்லை எனில், அந்த அதிகாரியை சம்பூரண இராஜ்ய அதிகாரி என்று கூறமுடியுமா? குழந்தைகளாகிய நீங்கள் அனைவரும், நாங்கள் ஒரு இராஜ்யம், ஒரு தர்மம், ஒரு வழியை ஸ்தாபனை செய்பவர்கள் என்று சவால் விடுகின்றீர்கள். அனைத்து பிரம்மா குமார் மற்றும் பிரம்மாகுமாரிகள் இந்த சவால் விடுகின்றீர்கள் அல்லவா; அது எப்பொழுது ஸ்தாபனை ஆகும்? எதிர்காலத்தில் ஸ்தாபனை ஆகுமா? ஸ்தாபனைக்கு நிமித்தமானவர் யார்? பிரம்மாவா அல்லது விஷ்ணுவா? பிரம்மா மூலம் ஸ்தாபனை ஆகிறது அல்லவா. எங்கு பிரம்மா இருக்கின்றாரோ, அங்கு பிராமணர்களும் உடன் இருக்கின்றார்கள். பிரம்மா மூலம் அதாவது பிராமணர்கள் மூலம் ஸ்தாபனை -இது எப்பொழுது ஏற்படும்? சங்கமயுகத்திலா அல்லது சத்யுகத்திலா? அங்கேயோ பாலனை நடைபெறும் அல்லவா. பிரம்மா அல்லது பிராமணர்கள் மூலம் ஸ்தாபனை -இது இப்பொழுது நடைபெற வேண்டும். எனவே, முதலில் சுயத்தின் இராஜ்யத்தில், ஒரு இராஜ்யம், ஒரு தர்மம் (தாரணை), ஒரு வழி உள்ளதா? என்று பாருங்கள். ஒருவேளை, ஒரு கர்மேந்திரியம் கூட மாயையின் வழிப்படி நடக்கிறது என்றால் ஒரு இராஜ்யம், ஒரு வழி என்று கூறமுடியாது. எனவே, ஒரு இராஜ்யம், ஒரு தர்மத்தை சுயத்தின் இராஜ்யத்தில் ஸ்தாபனை செய்து விட்டேனா அல்லது அவ்வப்போது மாயை சிம்மாசனத்தில் அமர்ந்து விடுகிறது, அவ்வப்போது நீங்கள்

அமருகின்றீர்கள் என்ற நிலை உள்ளதா? என்பதை முதலில் சோதனை செய்யுங்கள். சவாலை நடைமுறையில் கொண்டு வந்திருக்கின்றேனா அல்லது இல்லையா? என்பதை சோதனை செய்யுங்கள். நீங்கள் அனாதி சம்ஸ்காரத்தை வெளிப்படுத்த விரும்புகின்றீர்கள் ஆனால், வெளிப்பட்டதோ மத்திம சம்ஸ்காரம் எனில், இது அதிகாரி நிலை இல்லை அல்லவா.

எனவே, இராஜரிஷி என்றால் அனைத்தினுடைய இராஜ்ய அதிகாரி என்பதாகும். எப்பொழுது ரிஷி அதாவது எல்லையற்ற வைராக்கிய விருத்தியின் பயிற்சியாளராக இருப்பீர்களோ, அப்பொழுதே இராஜ்ய அதிகாரி நிலையானது சதா மற்றும் சகஜமாக இருக்கும். வைராக்கியம் என்றால் பற்றற்ற நிலையாகும். சதா தந்தையின் அன்பிற்குரிய நிலையாகும். இந்த அன்பான நிலையே பற்றற்ற வராக ஆக்குகிறது. தந்தையின் அன்பானவராகி, பற்றற்றவராக ஆகி காரியம் செய்ய வேண்டும் -இந்த நிலையையே எல்லையற்ற வைராக்கியம் உடைய நிலை என்று கூறுகின்றார்கள். தந்தையின் அன்பானவர் ஆகவில்லை எனில் பற்றற்றவராகவும் ஆக முடியாது, பற்றில் வந்து விடுவார்கள். தந்தையின் மீது அன்பு கொண்டவரோ, வேறு எந்த மனிதன் அல்லது பொருள் மீது அன்பு செலுத்துபவராக ஆகமுடியாது. அவர்கள் சதா கவர்ச்சியில் இருந்து கடந்திருப்பார்கள் அதாவது பற்றற்றவராக இருப்பார்கள். இதையே நிர்லேப் (எதுவும் ஒட்டாத) ஸ்திதி என்று கூறுகின்றார்கள். அவர்கள் எந்தவொரு எல்லைக்குட்பட்ட கவர்ச்சியின் பக்கம் வருபவர்கள் அல்ல. படைப்பு மற்றும் சாதனங்களை பற்றற்றவராகி காரியத்தில் பயன்படுத்த வேண்டும். இத்தகைய எல்லையற்ற வைராக்கியம் உடையவராக, உண்மையான இராஜரிஷியாக ஆகியிருக்கின்றீர்களா? ஒன்று அல்லது இரண்டு பலவீனங்கள் மட்டும் தங்கி விட்டன, ஒரு சூட்சும சக்தி அல்லது கர்மேந்திரியம் மட்டும் கட்டுப்படுவதில்லை, மற்ற அனைத்தும் சரியாக உள்ளது என்று நினைக்கக்கூடாது ஆனால், எங்கு ஒரே ஒரு பலவீனம் இருக்கிறதோ, அங்கு அதுவே மாயையின் வாசலாக ஆகி விடுகிறது. சிறிய கதவோ, பெரிய கதவோ ஆனால், அது கதவு தான் அல்லவா. ஒருவேளை, கதவு திறந்திருந்தால் மாயையை வென்றவர்களாக, உலகை வென்றவர்களாக எவ்வாறு ஆக ,முடியும்?

ஒருபுறம் ஒரு இராஜ்யம், ஒரு தர்மத்தினுடைய பொன்னுலகை வரவேற்பு செய்து கொண்டு இருக்கின்றீர்கள் மற்றும் அதன் கூடவே பலவீனம் அதாவது மாயையை வரவழைக்கின்றீர்கள் எனில், ரிசல்ட் என்னவாகும்? குழப்பத்தில் வந்து விடுவீர்கள். ஆகையினால், இதை சின்ன விசயமாக நினைக்காதீர்கள். சமயம் உள்ளது, செய்து விடலாம், பிறரிடமோ அநேகம் உள்ளது, என்னிடமோ ஒரு விசயம் மட்டுமே உள்ளது. இவ்வாறு பிறரைப் பார்த்து பார்த்து சுயம் பின்தங்கி விடாதீர்கள். தந்தை பிரம்மாவைப் பாருங்கள் என்று சொல்லப்பட்டுள்ளது, தந்தையைப் பின்பற்றுங்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. அனைவருடைய சகயோகியாக, சினேகியாக அவசியம் ஆகுங்கள், குணத்தை கிரஹிப்பவராக அவசியம் ஆகுங்கள், ஆனால், தந்தையைப் பின்பற்றுங்கள். தந்தை பிரம்மாவினுடைய இறுதி நிலையாக இராஜரிஷி நிலையைப் பார்த்தீர்கள். குழந்தைகள் மீது மிகவும் அன்பானவராக இருந்தபோதிலும், எதிரில் பார்த்துக் கொண்டிருந்த போதிலும் பற்றற்ற நிலையில் இருந்ததைப் பார்த்தீர்கள் அல்லவா. எல்லையற்ற வைராக்கிய ஸ்திதியை நடைமுறையில் பார்த்தீர்கள். கர்ம வினைப்பயன் இருந்தபோதிலும் கர்மேந்திரியங்கள் மீது அதிகாரி ஆகி அதாவது இராஜரிஷி ஆகி சம்பூரண ஸ்திதியின் அனுபவத்தை செய்வித்தார். ஆகையினாலேயே, தந்தையைப் பின்பற்றுங்கள் என்று சொல்கின்றார்கள். எனவே, தன்னுடைய இராஜ்ய அதிகாரிகள், இராஜ்ய காரியஸ்தர்களை சதா பார்க்க வேண்டும். எந்தவொரு இராஜ்ய காரியஸ்தரும் ஏமாற்றத்தை கொடுத்து விடக்கூடாது. புரிந்ததா? நல்லது.

இன்று வெவ்வேறு இடங்களில் இருந்து ஒரு இடத்திற்கு வந்திருக்கின்றீர்கள். இதையே நதி மற்றும் கடலினுடைய சந்திப்பு திருவிழா என்று சொல்லப்படுகிறது. திருவிழாவில் சந்திப்பும் நடைபெறுகிறது மற்றும் பொருளும் கிடைக்கிறது, ஆகையினால், அனைவரும் திருவிழாவிற்கு வந்திருக்கின்றீர்கள். இது புதிய குழந்தை களுடைய சீசனின் கடைசி குழுவாகும். பழையவர் களுக்கும் கூட புதியவர்களுடன் சேர்த்து வாய்ப்பு கிடைத்து விட்டது. இயற்கை கூட இப்பொழுது வரை அன்போடு சகயோகம் கொடுத்துக் கொண்டு இருக்கிறது ஆனால், இதை அனுகூலமாக எடுத்துகொள்ளக் கூடாது. இல்லையெனில், இயற்கை கூட புத்திசாலியாக உள்ளது. நல்லது.

நாலாபுறங்களிலும் இருக்கக்கூடிய சதா இராஜரிஷி குழந்தைகளுக்கு, சதா சுயத்தின் மீது இராஜ்யம் செய்யக்கூடிய சதா வெற்றியாளர் ஆகி தடையற்ற இராஜ்ய காரியத்தை நடத்தக்கூடிய இராஜ்ய அதிகாரி குழந்தைகளுக்கு, சதா எல்லையற்ற வைராக்கிய விருத்தியில் இருக்கக்கூடிய, சதா ரிஷிகுமாரர், குமாரிகளுக்கு, சதா தந்தையின் அன்பானவராகி பற்றற்று காரியம் செய்யக் கூடிய பற்றற்ற மற்றும் அன்பான குழந்தைகளுக்கு, சதா தந்தை பிரம்மாவை பின்பற்றக்கூடிய நம்பிக்கைக்குரிய குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:** 1. அனேக முறை வெற்றியடைந்த ஆத்மாக்கள் என்ற அனுபவம் செய்கின்றீர்களா? வெற்றியாளராக ஆவது கடினமாகத் தோன்றுகிறதா அல்லது சுலபமாக உள்ளதா? ஏனெனில், எந்த விசயம் சுலபமானதாக இருக்குமோ, அது எப்பொழுதும் நிலைத்திருக்க முடியும், கடினமான விசயம் சதா (எப்பொழுதும்) இருக்க முடியாது. அனேக முறை எந்த காரியம் செய்யப்பட்டு இருக்கிறதோ, அது தானாகவே சுலபமானதாக ஆகி விடுகிறது. எப்பொழுதாவது ஏதாவது புதிய காரியம் செய்யப்படுகிறது என்றால் முதலில் கடினமாகத் தோன்றுகிறது, ஆனால், எப்பொழுது செய்யப்பட்டுவிடுகிறதோ, அப்பொழுது அதே கடினமான காரியம் சுலபமாகத் தோன்றுகிறது. எனவே, நீங்கள் அனைவரும் இந்த ஒரு முறை வெற்றியடைந்த வெற்றி யாளர்கள் அல்ல, அனேக முறை வெற்றி பெற்றவர்கள் ஆவீர்கள். அனேக முறை வெற்றி பெற்றவர்கள் என்றால் சதா சுலபமாக வெற்றியின் அனுபவத்தை செய்பவர்கள் என்று அர்த்தம். யார் சுலபமான வெற்றியாளர்களோ, அவர்களுக்கு ஒவ்வொரு அடியிலும் இந்த அனைத்து காரியங்களும் நடந்தேறி இருக்கின்றன, ஒவ்வொரு அடியிலும் வெற்றி நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது என்ற அனுபவம் ஏற்படும். நடக்குமா அல்லது நடக்காதா என்ற இந்த சங்கல்பம் கூட எழமுடியாது. அனேக முறை வெற்றி பெற்றவர் என்ற இந்த நம்பிக்கை எப்பொழுது இருக்குமோ, அப்பொழுது நடக்குமா அல்லது நடக்காதா என்ற கேள்விக்கே இடம் இல்லை. நம்பிக்கையின் அடையாளம் போதை மற்றும் போதையின் அடையாளம் குஷி ஆகும். யாருக்கு போதை இருக்குமோ அவர்கள் சதா குஷியாக இருப்பார்கள். எல்லைக்குட்பட்ட வெற்றியாளரிடம் கூட எவ்வளவு குஷி இருக்கிறது! எப்பொழுதாவது

வெற்றியை அடைகின்றார்கள் என்றால் வாத்தியங்கள் இசைக்கின்றார்கள் அல்லவா. எனவே, யாருக்கு போதை உள்ளதோ, அவர்களிடம் அவசியம் குஷி இருக்கும். அவர்கள் சதா குஷியில் நடனமாடிக் கொண்டே இருப்பார்கள். சரீரத்தால் சிலர் ஆட முடியும், சிலரால் ஆட முடியாது, ஆனால், மனதில் குஷியின் நடனம் ஆடுவது -இது படுக்கையில் இருக்கும் நோயாளி கூட ஆட முடியும். யாராக இருந்தாலும் சரி, இந்த நடனம் அனைவருக்குமே சுலபமானதாகும். ஏனெனில், வெற்றியாளர் ஆவது என்றால் தானாகவே குஷியின் வாத்தியம் இசைப்பது என்பதாகும். எப்பொழுது வாத்தியங்கள் இசைக்கப்படுகின்றனவோ, அப்பொழுது கால்கள் தானாகவே நடனமாடுகின்றன. நடனமாடத் தெரியாதவர்களும் கூட அமர்ந்த வண்ணம் ஆடிக் கொண்டே இருப்பார்கள். கால் அசையும், தலை அசையும். எனவே, நீங்கள் அனைவரும் அனேக முறை வெற்றி பெற்றவர்கள் ஆவீர்கள் -இந்தக் குஷியில் சதா முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். உலகத்தில் அனைவருக்கும் அவசியமாக இருப்பதுவே குஷி தான். அனைத்து பிராப்திகள் இருந்தபோதிலும், குஷி என்ற பிராப்தி இல்லை. எனவே, எந்த அழிவற்ற குஷி உலகத்திற்கு அவசியமானதாக உள்ளதோ, அந்தக் குஷியை சதா பகிர்ந்து கொண்டே இருங்கள்.

2. தன்னை பாக்கியவான் எனப் புரிந்து ஒவ்வொரு அடியிலும் சிரேஷ்ட பாக்கியத்தை அனுபவம் செய்கின்றீர்களா? ஏனென்றால், இந்த சமயம் தந்தை பாக்கியவிதாதா ஆகி பாக்கியத்தை கொடுப்பதற்காக வந்திருக்கின்றார். பாக்கியவிதாதா பாக்கியத்தை கொடுத்துக் கொண்டிருக்கின்றார். பாக்கியத்தை கொடுக்கும் சமயத்தில், யார் எவ்வளவு பெற விரும்பு கின்றார்களோ, அவ்வளவு பெற முடியும். அனைவருக்கும் அதிகாரம் உள்ளது. யார் வேண்டு மானாலும் பெற்றுக் கொள்ளலாம், எவ்வளவு வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளலாம். எனவே, இப்பேற்பட்ட சமயத்தில் எவ்வளவு பாக்கியத்தை உருவாக்கி இருக்கின்றீர்கள் என்பதை சோதனை செய்யுங்கள். ஏனெனில், இப்பொழுது இல்லையேல் பிறகு எப்பொழுதும் இல்லை. ஆகையால், ஒவ்வொரு அடியிலும் பாக்கியத்தின் ரேகையை வரைவதற்கான பேனாவை தந்தை, அனைத்து குழந்தைகளுக்கும் கொடுத் திருக்கின்றார். பேனா கையில் உள்ளது மற்றும் ரேகையை எவ்வளவு நீளமாக வரைய

விரும்புகின்றீர்களோ, அவ்வளவு வரைவதற்கான அனுமதியும் உள்ளது. எவ்வளவு நல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது! எனவே, சதா இந்த பாக்கியவான் சமயத்தின் மகத்துவத்தை அறிந்து அந்தளவு சேமிப்பு செய்கின்றீர்கள் அல்லவா? மிகவும் விரும்பினேன், ஆனால், செய்யமுடியவில்லை; செய்ய வேண்டிதோ அதிகம் இருந்தது, ஆனால், இவ்வளவு தான் செய்தேன் என்பது கூடாது. தன்னைப் பற்றிய இந்தப் புகார் இருக்கக் கூடாது. புரிந்ததா? எனவே, பாக்கியத்தின் ரேகையை சிரேஷ்டமானதாக ஆக்கிக் கொண்டே செல்லுங்கள் மற்றும் பிறருக்கும் கூட இந்த சிரேஷ்ட பாக்கியத்தின் அறிமுகத்தைக் கொடுத்துக் கொண்டே செல்லுங்கள். ஆஹா, என்னுடைய சிரேஷ்டமான பாக்கியம்! இந்தக் குஷியின் பாடலை சதா பாடிக்ககொண்டே இருங்கள்.

3. சதா தங்களை சுயதரிசன சக்கரதாரி சிரேஷ்ட ஆத்மாக்கள் என்று அனுபவம் செய்கின்றீர்களா? சுயதரிசன சக்கரம் என்றால் சதா மாயையின் அனேக சக்கரங்களில் இருந்து விடுவிக்கக் கூடியது என்று அர்த்தம். சுயதரிசன சக்கரமானது சதா காலத்திற்கும் இராஜ்ய பாக்கியத்தின் அதிகாரி ஆக்கி விடுகிறது. இந்த சுயதரிசன சக்கரத்தைப் பற்றிய ஞானம் இந்த சங்கமயுகத்தில் தான் கிடைக்கிறது. நீங்கள் பிராமண ஆத்மாக்கள் ஆவீர்கள், ஆகையால், சுயதரிசன சக்கரதாரி ஆவீர்கள். பிராமணர்களை சதா உச்சிக் குடுமியில் காண்பிக்கின்றார்கள். குடுமி என்றால் உயர்ந்த நிலை. பிராமணன் என்றால் சதா சிரேஷ்ட கர்மம் செய்யக்கூடியவர்கள், பிராமணன் என்றால் சதா சிரேஷ்ட தர்மத்தைக் (தாரணைகளை) கடைபிடிப்பவர்கள் -நீங்கள் அப்பேற்பட்ட பிராமணர்கள் ஆவீர்கள் அல்லவா? பெயரளவில் பிராமணன் அல்ல, காரியம் (செயல்) செய்யக்கூடிய பிராமணன், ஏனெனில், பிராமணர்களுக்கு இப்பொழுது இறுதி சமயத்தில் கூட எத்தனை பெயர்கள் உள்ளன! உண்மையான பிராமணர் களாகிய உங்களுடைய இந்த நினைவுச்சின்னமானது இப்பொழுது வரை இருந்துவருகிறது. எந்தவொரு உயர்ந்த காரியம் ஆனாலும் பிராமணர்களைத் தான் அழைப்பார்கள், ஏனெனில், பிராமணர்களே அந்தளவு உயர்ந்தவர்கள் ஆவார்கள். எனவே, எந்த சமயத்தில் இவ்வளவு சிரேஷ்டமானவர்களாக ஆகியிருக்கின்றீர்கள்? இப்பொழுது ஆகியிருக்கின்றீர்கள், ஆகையினால், இப்பொழுது வரை சிரேஷ்ட காரியத்தின் நினைவுச்சின்னமானது இருந்து வருகிறது. ஒவ்வொரு சங்கல்பம்,

ஒவ்வொரு வார்த்தை, ஒவ்வொரு கர்மத்தை சிரேஷ்ட மாக ஆக்கக்கூடிய, அத்தகைய சுயதரிசன சக்கரதாரி சிரேஷ்ட பிராமணன் என்ற நினைவில் சதா இருங்கள். நல்லது.

**வரதானம்: தன்னுடைய பூஜைக்குரிய நிலையை நினைவில் வைத்து ஒவ்வொரு கர்மத்தையும் பூஜைக்குரியதாக ஆக்கக்கூடிய பரம பூஜைக்குரியவர் ஆகுக!**

குழந்தைகளாகிய உங்களுடைய ஒவ்வொரு சக்திக்கும் தேவி தேவதைகளின் ரூபத்தில் பூஜை நடை பெறுகிறது. சூரிய தேவன், வாயு தேவன், பூமாதேவி இவ்வாறே பயமின்மை என்ற சக்திக்கு காளி ரூபத்திலும், எதிர்கொள்ளும் சக்திக்கு துர்க்கை ரூபத்திலும் பூஜை நடைபெறுகிறது. திருப்தியாக இருக்கும் மற்றும் திருப்திபடுத்தும் சக்திக்கு சந்தோஷிமாதா என்ற ரூபத்தில் பூஜை நடைபெறுகிறது. காற்றுக்கு சமமாக இலகுவாக ஆகும் சக்திக்கு வாயு புத்திரன் (ஹனுமார்) ரூபத்தில் பூஜை நடைபெறுகிறது. எனவே, தன்னுடைய இந்த பூஜைக்குரிய நிலையை நினைவில் வைத்து ஒவ்வொரு கர்மத்தையும் பூஜைக்குரியதாக ஆக்குங்கள், அப்பொழுதே பரம பூஜைக்குரியவர் ஆவீர்கள்.

**சுலோகன்: வாழ்வில் திருப்தி மற்றும் எளிமையினுடைய சமநிலை வைப்பதுவே அனைத்தையும் விட பெரிய விசேஷத்தன்மை ஆகும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 06.12.1987 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வெற்றிக்கான ஆதாரம் -சிரேஷ்ட விருத்தி (உள்ளுணர்வு)!

இன்று பாப்தாதா தம்முடைய நாலாபுறம் உள்ள புனித அன்னப்பறவைகளின் சபையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வோர் அன்னப்பறவையும் தனது சிரேஷ்ட ஸ்திதியின் ஆசனத்தின் மீது அமர்ந்துள்ளார். அனைத்து ஆசனதாரி புனித அன்னப்பறவைகளின் சபை முழு கல்பத்திலும் அலௌகிகமானதும் தனிப்பட்டதும் ஆகும். ஒவ்வோர் அன்னப்பறவையும் தன்னுடைய விசேஷதாக்களால் மிக அழகாக அலங்கரிக்கப் பட்டுள்ளார். விசேஷதாக்கள் சிரேஷ்ட அலங்காரமாகும். அலங்கரிக்கப்பட்ட அன்னப்பறவைகள் எவ்வளவு பிரியமானவர்களாக உள்ளனர்! பாப்தாதா ஒவ்வொருவரின் விசேஷதாக்களின் அலங்காரத்தையும் பார்த்து மகிழ்ச்சியடைகிறார். அலங்கரிக்கப் பட்ட சபை, ஏனென்றால் பாப்தாதா பிராமண ஜென்மம் எடுத்ததுமே, குழந்தைப் பருவத்திலிருந்தே விசேஷ ஆத்மா பவ என்ற வரதானத்தைக் கொடுத்து விட்டார். வரிசைக்கிரமமாக இருந்த போதிலும் கடைசி நம்பரும் கூட விசேஷஆத்மா தான். பிராமண வாழ்க்கையில் வருவது என்றாலே விசேஷ ஆத்மாவில் வந்தே விட்டார். பிராமணப் பரிவாரத்தில் கடைசி நம்பராக இருந்தாலும் உலகத்தின் அநேக ஆத்மாக்களோடு ஒப்பிடும் போது அவரும் விசேஷமானவராகப் பாடப்படுகிறார். ஆகவே கோடியில் சிலர், அந்தச் சிலரிலும் ஒரு சிலர் எனப் பாடப்பட்டுள்ளனர். ஆக, பிராமணர்களின் சபை என்றால் விசேஷ ஆத்மாக்களின் சபை.

இன்று பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார் -விசேஷதாக்களின் அலங்காரத்தையோ பாப்தாதா அனைவருக்கும் ஒரே சமமமாகத்தான் செய்வித்துள்ளார் ஆனால்சிலர் அந்த அலங்காரத்தை தாரணை செய்து சமயப் பிரமாணம் காரியத்தில் ஈடுபடுத்துகின்றனர். மற்றும் சிலரோ தாரணை செய்ய முடிவதில்லை, அல்லது சிலர் சமயத்தின் பிரமாணம்

காரியத்தில் ஈடுபடுத்த முடிவதில்லை. எப்படி இப்போதைய ராயல் குடும்பத்தினர் சமயப் பிரமாணம் அலங்கரித்துக் கொள்கின்றனர் என்றால் எவ்வளவு நன்றாக உள்ளது! எப்படி சமயமோ அப்படி அலங்காரம். இதைத் தான் ஞானம் நிறைந்தவர் எனச் சொல்வது. தற்போது அலங்காரத்தின் வெவ்வேறு செட்களை (அணிகலன்கள்) வைத்துள்ளனர் இல்லையா? ஆக, பாப்தாதா அநேக விசேஷதாக்களின், அநேக சிரேஷ்ட குணங்களின் எத்தனை விதமான செட்கள் கொடுத்துள்ளார்? எவ்வளவு தான் விலைமதிக்க முடியாத அலங்காரமாக இருந்தாலும் சமயப் பிரமாணம் இல்லை என்றால் என்னவாகத் தோன்றும்? அந்த மாதிரி விசேஷதாக் களின், குணங்களின், சக்திகளின், ஞான ரத்தினங்களின் அநேக அலங்காரங்களை பாபா அனைவருக்குமே கொடுத்துள்ளார் ஆனால் சமயத்தில் காரியத்தில் ஈடுபடுத்துவதில் வரிசைக்கிரமமாக ஆகி விடுகின்றனர். இவை அனைத்துமே அலங்காரங்கள் தாம் என்றாலும் ஒவ்வொரு விசேஷதா அல்லது குணங்களின் மகத்துவம் சமயத்தின்படி ஏற்படுகிறது. இருந்த போதிலும் சமயத்தில் காரியத்தில் ஈடுபடுத்தவில்லை என்றால் விலைமதிக்க முடியாததாக இருந்த போதிலும் அதற்கு மதிப்பு இருப்பதில்லை. எந்தச் சமயம் எந்த விசேஷதாவை தாரணை செய்வதற்கான காரியம் உள்ளதோ, அந்த விசேஷதாவுக்குத் தான் மதிப்பு உள்ளது. எப்படி அன்னம், கற்கள் மற்றும் ரத்தினங்கள் -இரண்டையும் கண்டறிந்து வேறுபடுத்தி தாரணை செய்கிறது. கல்லை விட்டு விடுகிறது. மற்றப்படி ரத்தினங்கள் -முத்துகளை தாரணை செய்கிறது. அது போல் புனித அன்னப்பறவை என்றால் சமயப் பிரமாணம் விசேஷதா அல்லது குணத்தைக் கண்டறிந்து, அதே சமயத்தில் பயன்படுத்த வேண்டும். அவர்கள் தாம் கண்டறியும் சக்தியுள்ள புனித அன்னப்பறவை எனச் சொல்லப் படுவார்கள். ஆக, கண்டறிவது மற்றும் நிர்ணயம் செய்வது -இந்த இரண்டு சக்திகள் தாம் நம்பரை முன்னால் கொண்டு செல்கின்றன. எப்போது இந்த இரண்டு சக்திகளும் தாரணை ஆகின்றனவோ, அப்போது சமயப் பிரமாணம் அதே விசேஷதா மூலம் காரியமாற்ற முடியும். ஆகவே ஒவ்வொரு புனித அன்னப் பறவையும் தன்னுடைய இந்த இரண்டு சக்திகளையும் சோதித்துப் பாருங்கள். இரண்டு சக்திகளும் சமயத்தில் ஏமாற்றாமல் உள்ளனவா? சமயம் கடந்து போன பிறகு கண்டறிந்தீர்கள், நிர்ணயமும் செய்தீர்கள் ஆனால் சமயமோ கடந்து போய் விட்டது இல்லையா? யார் நம்பர் ஒன் புனித அன்னமாக

உள்ளனரோ, அவர்களுக்கு இந்த இரண்டு சக்திகளும் சதா சமயத்தின் பிரமாணம் காரியம் செய்கின்றன. சமயத்திற்குப் பிறகு இந்த சக்திகள் காரியமாற்றுமானால் இரண்டாவது நம்பரில் வந்து விடுவார்கள். மூன்றாம் நம்பரின் விஷயத்தையோ விட்டு விடுங்கள். மேலும் யாருடைய புத்தி பவித்திரமாக உள்ளதோ, அவர்கள் தாம் சமயத்தில் இந்தக் காரியத்தைச் செய்ய முடியும்.

ஹோலி என்பதன் அர்த்தம் சொல்லப்பட்டுள்ளது இல்லையா? ஒன்று, ஹோலி என்றால் பவித்திரமானவர். மற்றும் இந்தியில் ஹோ லீ என்றால் நடந்தது நடந்து முடிந்து விட்டது. ஆக, யாருடைய புத்தி ஹோலியாக, அதாவது தூய்மையாக உள்ளதோ மற்றும் சதா எந்த விநாடி, எந்தச் சூழ்நிலை கடந்து சென்று விட்டதோ, அது முடிந்து போனது என்ற இந்த அப்பியாசம் உள்ளதோ, அத்தகைய புத்தி உள்ளவர்கள் சதா ஹோலியாக, அதாவது ஆன்மிக நிறத்தினால் நிறமேற்றப் பட்டவராக இருப்பார்கள். சதா பாபாவின் துணையின் நிறத்தினால் நிறம் ஏற்றப்பட்டிருப்பார்கள். ஆக, ஒரே ஹோலி என்ற சொல் மூன்று ரூபத்தில் பயன்படுகிறது. இதில் இந்த மூன்று அர்த்தங்களின் விசேஷதாக்களும் உள்ளன. அதாவது எந்த அன்னப் பறவைகளுக்கு இந்த விதி வருகிறதோ, அவர்கள் ஒவ்வொரு சமயமும் வெற்றியடைகின்றனர். ஆக, இன்று பாப்தாதா புனித அன்னப்பறவைகளின் சபையில் புனித அன்னப்பறவைகள் அனைவரின் இந்த விசேஷதாவைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். ஸ்தூல காரியம் என்றாலும் சரி, ஆன்மிகக் காரியம் என்றாலும் சரி, இரண்டிலும் வெற்றிக்கான ஆதாரம் கண்டறியும் மற்றும் நிர்ணயம் செய்வதற்கான சக்திகள். யாருடைய தொடர்பில் வந்தாலும், எது வரை அவர்களின் உணர்வு மற்றும் பாவனையைக் கண்டறிய முடியவில்லையோ, அப்போது இரண்டு காரியங்களிலும் வெற்றி கிடைப்பதில்லை -மனிதராக இருந்தாலும் சரி, சூழ்நிலையாக இருந்தாலும் சரி, ஏனென்றால் மனிதர்களின் சம்மந்தத்தில் வர வேண்டி உள்ளது மற்றும் பரஸ்திதிகளையும் கடந்து செல்ல வேண்டி உள்ளது. வாழ்க்கையில் இந்த இரண்டு விஷயங்களுமே வருகின்றன. ஆகவே நம்பர் ஒன் புனித அன்னப் பறவை என்றால் இரண்டு விசேஷதாக்களும் நிறைந்தவர்கள். இது தான் இன்றைய இந்த சபையின் செய்தி. இந்த சபை, அதாவது வெறுமனே முன்னால் அமர்ந்திருப்பவர்கள் மட்டுமல்ல. பாப்தாதாவின் முன்னாலோ உங்களோடு கூடவே நாலாபுறமும் உள்ள குழந்தைகளும்

கூட இமர்ஜ் ஆகின்றனர். எல்லையற்ற பரிவாரத்தின் நடுவில் பாப்தாதா சந்திப்பை நிகழ்த்துகிறார் அல்லது ஆன்மிக உரையாடல் செய்கிறார். பிராமண ஆத்மாக்கள் தங்கள் நினைவின் சக்தி மூலம் தாங்களும் மதுவனத்தில் ஆஜராகியுள்ளனர். மற்றும் பாப்தாதாவும் இந்த விசேஷ விஷயத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அதாவது ஒவ்வொரு குழந்தையின் விதியின் ரேகை மற்றும் சித்தியின் லைன், இந்த இரண்டு ரேகைகளும் எவ்வளவு தெளிவாக உள்ளன? ஆரம்பத்திலிருந்து இது வரை விதி எப்படி இருந்துள்ளது மற்றும் விதியின் பலன் சொரூபமாக சித்தி எவ்வளவு அடைந்துள்ளோம்? இரண்டு ரேகைகளும் எவ்வளவு தெளிவாக உள்ளன மற்றும் எவ்வளவு நீளமாக, அதாவது விதி மற்றும் சித்தியின் கணக்கு எவ்வளவு யதார்த்த ரூபத்தில் சேமிப்பாகியுள்ளது? விதியின் ஆதாரம் சிரேஷ்ட விருத்தியாகும். சிரேஷ்ட விருத்தி (உள்ளுணர்வு) உள்ளதென்றால் யதார்த்த விதியும் உள்ளது மற்றும் யதார்த்த விதி உள்ளதென்றால் சித்தி சிரேஷ்டமாகவே இருக்கும். ஆக, விதி மற்றும் சித்தியின் விதையாக விருத்தி உள்ளது. சிரேஷ்ட விருத்தி -சதா சகோதர -சகோதரன் என்ற ஆத்மிக விருத்தி இருக்க வேண்டும். இதுவோ முக்கிய விஷயம் தான் ஆனால்அதோடு கூடவே தொடர்பில் வந்து கொண்டே ஒவ்வோர் ஆத்மாவிடமும் நன்மையின், அன்பின், சகயோகத்தின், சுயநலமற்ற தன்மையின் நிர்விகல்ப விருத்தி (தீய சங்கல்ப மல்லாத உள்ளுணர்வு) இருக்க வேண்டும். வீண் அல்லாத சங்கல்ப விருத்தி இருக்க வேண்டும். அநேக தடவை எந்த ஓர் ஆத்மாவின் மீதும் வீண் சங்கல்பம் அல்லது விகல்பத்தின் விருத்தி இருக்குமானால், விருத்தி எப்படியோ, அது போலவே அந்த ஆத்மாவின் காரியம், கர்மத்தின் சிருஷ்டி காணப்படும். அவ்வப்போது குழந்தைகள் சொல்வதைக் கேட்கவும் செய்கின்றனர் மற்றும் பார்க்கவும் செய்கின்றனர். விருத்தியின் காரணத்தால் வர்ணனையும் செய்கின்றனர். அவர்கள் எவ்வளவு தான் நல்ல காரியம் செய்தாலும் விருத்தி வீணானதாக இருக்கும் காரணத்தால் சதா அந்த ஆத்மாவின் முன்பாக வார்த்தையும் அந்த மாதிரி வெளிப்படுகிறது -இவரோ இப்படித் தான், இருப்பதோ அது போலத் தான் என்று. ஆக, இந்த விருத்தி அவர்களின் கர்ம ரூப சிருஷ்டி அது போலவே அனுபவம் செய்விக்கிறது. எப்படி நீங்கள் இந்த உலகத்தில் கண்களின் பார்வைக்கான கண்ணாடியின் உதாரணம் சொல்கிறீர்கள் -எந்த நிறத்தின் கண்ணாடி அணிவீர்களோ, காட்சியும் அதே நிறத்தில் தான் காணப்படும். அது போல இதில் எப்படிப்பட்ட விருத்தி இருக்கிறதோ,

விருத்தி திருஷ்டியை மாற்றி விடுகிறது. விருத்தியின் விதை சதா சிரேஷ்டமானதாக இருக்குமானால் விதி மற்றும் சித்தி வெற்றி பூர்வமானதாக இருக்கவே செய்யும். ஆகவே முதலில் விருத்தியின் அஸ்திவாரத்தை சோதித்துப் பாருங்கள். அது சிரேஷ்ட விருத்தி எனச் சொல்லப்படும். ஏதேனும் சம்மந்தம் -தொடர்பில் சிரேஷ்ட விருத்திக்கு பதிலாக கலப்படமாக இருக்குமானால், எவ்வளவு தான் விதியைக் கையாண்டாலும் சித்தி ஏற்படாது. ஏனென்றால் விதையாக இருப்பது விருத்தி மற்றும் விருட்சம் என்பது விதி மற்றும் பழம் (பலன்) சித்தியாகும். விதை பலவீனமாக இருக்குமானால் விருட்சம் எவ்வளவு தான் விஸ்தார மாக இருந்தாலும் சித்தி ரூப பழம் இருக்காது. இந்த விருத்தி மற்றும் விதியினைப் பற்றி பாப்தாதா குழந்தைகளிடம் ஒரு விசேஷ ஆன்மிக உரையாடல் செய்து கொண்டிருந்தார்.

சுய முன்னேற்றத்திற்காக அல்லது சேவையின் வெற்றிக்காக ஒரு ரமணீகரமான ஸ்லோகன் நினைவுள்ளதா? ஒன்று முதலில் தாங்கள் -இந்த ஸ்லோகன் நினைவுள்ளது இல்லையா? ஒன்று முதலில் தாங்கள். இரண்டாவது முதலில் நான். இரண்டு ஸ்லோகன்கள் -முதலில் தாங்கள் மற்றும் முதலில் நான். இரண்டுமே அவசியம் ஆனால் பாப்தாதா ஆன்மிக உரையாடல் செய்து கொண்டே புன்சிரித்துக் கொண்டிருந்தார். எங்கே முதலில் நான் என்பது இருக்க வேண்டுமோ, அங்கே முதலில் தாங்கள் எனச் சொல்லி விடுகிறார்கள். எங்கே முதலில் தாங்கள் எனச் சொல்ல வேண்டுமோ, அங்கே முதலில் நான் எனச் சொல்லி விடுகின்றனர். மாற்றி விடுகின்றனர். எப்போது ஏதாவது சுய மாற்றத்தின் விஷயம் வருகிறதோ, அப்போது முதலில் தாங்கள் எனச் சொல்கிறீர்கள். இவர் மாறினால் நான் மாறுவேன். அப்போது முதலில் தாங்கள் என்று ஆகிறதல்லவா? மேலும் எப்போது ஏதாவது சேவையின் அல்லது ஏதாவது அந்த மாதிரி பரிஸ்திதியை எதிர்கொள்வதற்கான வாய்ப்பு உருவாகிறது என்றால் முயற்சி செய்கின்றனர் -முதலில் நான், நானும் இருக்கிறேன், எனக்கும் ஏதாவது கிடைத்தாக வேண்டும். ஆக, எங்கே முதலில் தாங்கள் எனச் சொல்ல வேண்டுமோ, அங்கே நான் எனச் சொல்லி விடுகின்றனர். சதா சுவமானத்தில் நிலைத்திருந்து மற்றவர்களுக்கு மதிப்பளித்தல் வேண்டும். அதாவது முதலில் தாங்கள் எனச் சொல்ல வேண்டும். வெறுமனே வாயினால் முதலில் தாங்கள் எனச் சொல்லிக் கொண்டு, கர்மத்தில் வேறு மாதிரி இருக்கக் கூடாது. சுவமானத்தில் நிலைத்திருந்து

சுவமான் கொடுக்க வேண்டும். சுவமான் கொடுப்பது அல்லது சுவமானத்தில் நிலைத்திருப்பது என்பதன் அடையாளம் என்னவாக இருக்கும்? அதில் இரண்டு விஷயங்களை சதா சோதனை பண்ணுங்கள்.

ஒன்று, அபிமானத்தின் விருத்தி, இரண்டாவது அவமானத்தின் விருத்தி. யார் சுவமானத்தில் நிலைத்திருக்கிறார்களோ, மற்றும் மற்றவர்களுக்கு சுவமான் தரக்கூடியவராக இருக்கிறார்களோ, அவர்களிடம் இந்த இரண்டு விருத்திகளும் இருக்காது -அபிமானத்தின் விருத்தியும் இருக்காது, அவமானத்தின் விருத்தியும் இருக்காது. இவரோ இப்படித் தான் செய்கிறார், இவர் இப்படித் தான் இருக்கிறார் -ஆக, இதுவும் ராயல் ரூபத்தில் அந்த ஆத்மாவுக்கு அவமானமாகும். சுவமானத்தில் நிலைத்திருந்து சுவமான் கொடுப்பது -இது தான் முதலில் தாங்கள் எனச் சொல்வதாகும். புரிந்ததா? மேலும் சுய முன்னேற்றத்தின் விஷயங்கள் என்ன உள்ளனவோ, அதில் சதா முதலில் நான் என்ற ஸ்லோகன் நினைவிருக்குமானால் ரிசல்ட் என்னவாகும்? முதலில் நான் என்றால் ஓட்டே ஸோ அர்ஜுன் (சேவை, புருஷார்த்தம் முதலியவற்றில் நான் முதலில் என்று தன்னை முன்னிறுத்தி முதல் நம்பரில் வருபவர்). அர்ஜுன் என்றால் விசேஷ ஆத்மா. அர்ஜுன் என்றால் அசாதாரணமான ஆத்மா, அலௌகிக ஆத்மா, அலௌகிக விசேஷ ஆத்மா. எப்படி பிரம்மாபாபா சதா முதலில் நான் என்ற ஸ்லோகன் மூலம் அர்ஜுன் ஆனார் இல்லையா? அதாவது நம்பர் ஒன் ஆத்மா. நம்பர் ஒன் பற்றி சொல்லப்பட்டது -நம்பர் ஒன் டிவிஷன். அது போல் நம்பர் ஒன்னாகவோ ஒருவர் தாம் இருப்பார் இல்லையா? ஆக, இரண்டு ஸ்லோகன்களுமே அவசியம் ஆனால்கேட்டீர்கள் இல்லையா -நம்பர் எந்த ஆதாரத்தில் உருவாகிறது என்று? யார் சமயப் பிரமாணம் எந்த ஒரு விசேஷதாவையும் காரியத்தில் ஈடுபடுத்துவதில்லையோ, அப்போது நம்பர் முன்னே பின்னே ஆகி விடுகிறது. சமயத்தில் யார் காரியத்தில் ஈடுபடுத்துகிறார்களோ, அவர்கள் வெற்றி (வின்) பெறுகிறார்கள். அதாவது ஒன் ஆகி விடுகிறார்கள். ஆகவே இதைச் செக் பண்ணுங்கள் -ஏனென்றால் இவ்வருடம் சுயத்தைச் சோதிப் பதற்கான விஷயங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். வெவ்வேறு விஷயங்கள் சொல்லப்பட்டன இல்லையா? ஆக, இன்று இந்த விஷயங்களை சோதித்துப் பாருங்கள் -தாங்கள் என்பதற்கு பதிலாக நான், நான் என்பதற்கு பதிலாக தாங்கள் என்று சொல்லாமல் இருக்கிறீர்களா? இது தான் யதார்த்த விதி எனச் சொல்லப்படும். எங்கே

யதார்த்த விதி உள்ளதோ, அங்கே சித்தி இருக்கவே செய்யும். மேலும் இந்த விருத்திக்கான (உள்ளுணர்வு) விதி சொல்லப்பட்டது -இரண்டு விஷயங்களை சோதித்துப் பார்க்க வேண்டும் -அபிமானத்தின் விருத்தியும் இருக்கக் கூடாது, அவமானத்தின் விருத்தியும் இருக்கக் கூடாது. எங்கே இந்த இரண்டும் இல்லாதிருக்கிறதோ, அங்கே தான் சுவமானத்தின் பிராப்தி உள்ளது. நீங்கள் சொன்னாலும் சொல்லாவிட்டாலும், யோசித்தாலும் யோசிக்கா விட்டாலும், மனிதர், இயற்கை -இரண்டுமே சதா தாமாகவே சுவமான் கொடுத்துக் கொண்டே இருக்கும். சங்கல்பத்தில் கூட சுவமானத்தின் பிராப்திக்கான ஆசையினால் சுவமான் கிடைக்காது. (நிர்மான்) பணிவுள்ளவர் ஆக வேண்டும். அதாவது முதலில் தாங்கள் எனச் சொல்ல வேண்டும். பணிவான ஸ்திதி தானாகவே சுவமான் கிடைக்கச் செய்யும். சுவமானத்தின் பரிஸ்திதிகளில் முதலில் தாங்கள் எனச் சொல்வது என்றால் பாப்-சமான் ஆவதாகும். எப்படி பிரம்மாபாபா சதா சுவமான் கொடுப்பதில் முதலில் ஜெகதம்பா, முதலில் சரஸ்வதியாகிய அம்மா, பின்னால் பிரம்மாதந்தையை வைத்தார். பிரம்மா மாதாவாக இருந்தாலும் சுவமான் கொடுப்பதற்காக ஜெகதம்பா அம்மாவை முன்னால் வைத்தார். ஒவ்வொரு காரியத்திலும் குழந்தைகளை முன்னால் வைத்தார். மற்றும் புருஷார்த்தத்தின் ஸ்திதியில் சதா தன்னை முதலில் நான் என்று இஞ்சின் (engine) ரூபத்தில் பார்த்தார். இஞ்சின் முன்னால் உள்ளது இல்லையா? சதா இந்த சாகார் (பிரம்மா) வாழ்க்கையில் பார்த்தோம் -அதாவது நான் எதைச் செய்கிறேனோ, என்னைப் பார்த்து அனைவரும் செய்வார்கள். ஆக, விதியில், சுய முன்னேற்றத்தில் அல்லது தீவிர புருஷார்த்தத்தின் வரிசையில் சதா முதலில் நான் என்பதை வைத்தார். ஆக, இன்று விதி மற்றும் சித்தியின் ரேகைகளை சோதித்துக் கொண்டிருந்தார். புரிந்ததா? ஆக, மாற்றி விடக் கூடாது. இந்த மாற்றி விடுதல் என்றால் பாக்கியத்தை மாற்றுவதாகும். சதா புனித அன்னப்பறவை ஆகி, நிர்ணய சக்தி, கண்டறியும் சக்தியை சமயத்தில் காரியத்தில் கொண்டுவரக் கூடிய விசால புத்தி உள்ளவர் ஆகுங்கள். மேலும் சதா விருத்தி ரூப விதையை சிரேஷ்டமாக்கி, விதி மற்றும் சித்தியை சதா சிரேஷ்டமானதாக அனுபவம் செய்து கொண்டே செல்லுங்கள்.

# 1987 அவ்யக்த முரளி

இதற்கு முன்பும் சொல்லியிருக்கிறோம், அதாவது பாப்தாதாவுக்குக் குழந்தைகள் மீது அன்பு உள்ளது. அன்பின் அடையாளம் என்ன? அன்புள்ளவர் சிநேகியின் குறையைப் பார்க்க முடிவதில்லை. சதா தன்னை மற்றும் சிநேகி ஆத்மாவை சம்பன்ன சமான் ஆத்மாவாகப் பார்க்க விரும்புவார். புரிந்ததா? ஆகவே அடிக்கடி கவனத்தை ஈர்க்கிறார், செக்கிங் செய்விக்கிறார் -இது தான் சம்பன்னமாக்கு வதற்கான உண்மையான அன்பாகும். நல்லது.

இப்போது எல்லாப் பக்கங்களில் இருந்தும் பழைய குழந்தைகள் பெரும்பான்மையாக வந்துள்ளனர். பழையவர் என்று யாரைச் சொல்கிறார்கள்? அர்த்தத்தை அறிவீர்கள் இல்லையா? பாப்தாதா பழையவர்களுக்குச் சொல்கிறார் -அனைத்து விஷயங்களிலும் பக்கா. பழையவர் என்றால் பக்கா. அனுபவமும் பக்கா ஆக்குகிறது. மாயா என்ற பூனை வருகிறது என்றால் பயந்து விடுகிற அந்த மாதிரி கச்சா (பக்குவமடையாதவர்) இல்லை. அனைவரும் பழையவர்கள், பக்காவாக இருப்பவர்கள் வந்திருக்கிறீர்கள் இல்லையா? சந்திப்பதற்கான வாய்ப்பை எடுத்துக் கொள்வதற்காக அனைவரும் முதலில் நான் என்று சொல்வார்களானால் அதற்கு எந்த ஒரு தடையும் இல்லை ஆனால்ஒவ்வொரு காரியத்திலும் விதிமுறையும் உள்ளது, லாபமும் உள்ளது. அவ்யக்த வதனத்தில் விதிமுறையின் விஷயம் கிடையாது. அங்கே விதியை உருவாக்க வேண்டியதில்லை. அவ்யக்த சந்திப்பிற்காக முயற்சி செய்ய வேண்டி உள்ளது. சாகார் சந்திப்பு சகஜமாக உள்ளது. அதனால் ஓடி வருகிறீர்கள் ஆனால் சமயப் பிரமாணம் எவ்வளவு விதிமுறையோ அவ்வளவு லாபம் உள்ளது. பாப்தாதா கொஞ்சம் சமிக்ஞை கொடுத்தாலும் புரிந்து கொள்கின்றனர் -இப்போது என்ன ஆகுமோ தெரியவில்லை. ஏதேனும் நடக்க வேண்டும் என்றாலும் சொல்லிக் கொண்டு வருவதில்லை. சாகார் பாபா அவ்யக்தமானார் என்றால் சொல்லி விட்டுப் போனாரா என்ன? எது திடீரென நடக்கிறதோ, அது அலௌகிக அன்பானதாக இருக்கும். அதனால் பாப்தாதா சொல்கிறார் -சதா எவர் -ரெடியாக இருங்கள். எது நடக்குமோ, அது நல்லதிலும் நல்லதாகவே நடக்கும். புரிந்ததா? நல்லது.

அனைத்து புனித அன்னப் பறவைகளுக்கும், அனைத்து விசால புத்தி உள்ள, சிரேஷ்ட தூய்மையான புத்தியை தாரணை செய்யக்கூடிய,

# 1987 அவ்யக்த முரளி

புத்திவான் குழந்தைகளுக்கு, சர்வ சக்திகளை, சர்வ விசேஷதாக்களை சமயப் பிரமாணம் காரியத்தில் கொண்டு வரக்கூடிய ஞானம் நிறைந்த ஆத்மாக்கள், யோகம் நிறைந்த ஆத்மாக்களுக்கு, சதா பாப்சமான் சம்பன்னமாகக் கூடிய, ஊக்கம் -உற்சாகத்தில் இருக்கக்கூடிய சம்பன்ன குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் நமஸ்தே.

**வரதானம்: எஜமான் தன்மையின் நினைவு மூலம் மிக உயர்ந்த அத்தாரிட்டியின் அனுபவம் செய்யக்கூடிய இணைந்த சொரூபதாரி ஆகுக!**

முதலில் தன்னுடைய சரீரம் மற்றும் ஆத்மாவின் இணைந்த ரூபத்தை நினைவில் வையுங்கள். சரீரம் என்பது படைப்பு, ஆத்மா படைப்பவர். இதனால் எஜமான் தன்மை தானாகவே நினைவில் இருக்கும். எஜமான் தன்மையின் நினைவு மூலம் தன்னை மிக உயர்ந்த அத்தாரிட்டியாக அனுபவம் செய்வீர்கள். சரீரத்தை நடத்துபவராக இருப்பீர்கள். இரண்டாவது -பாபா மற்றும் குழந்தை (சிவசக்தி) என்ற இணைந்த சொரூபத்தின் நினைவினால் மாயாவின் விக்னங்களை அத்தாரிட்டியுடன் கடந்து செல்வீர்கள்.

**சுலோகன்: விஸ்தாரத்தை ஒரு விநாடியில் சுருக்கி ஞானத்தின் சாரத்தை அனுபவம் செய்யுங்கள் மற்றும் செய்வியுங்கள்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 10.12.1987 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உடல், மனம்,பொருள் மற்றும் சம்பந்தத்தின் சிரேஷ்ட வியாபாரம்!

இன்று அனைத்து பொக்கிஷங்களின் கடலான, ரத்தின வியாபாரியான தந்தை தனது குழந்தைகளைப் பார்த்து புன்முறுவல் செய்து கொண்டிருக்கின்றார் -அனைத்து பொக்கிஷங்களின் சுரங்கமான தந்தையின் வியாபாரிக் குழந்தைகள் அதாவது வியாபாரம் செய்பவர் யார்? மேலும் யாரிடம் வியாபாரம் செய்கிறீர்கள்? பரமாத்மா பொருட்களை கொடுக்கக் கூடியவர், மேலும் பரமாத்மாவிடம் வியாபாரம் செய்யக் கூடியவர்கள் எவ்வளவு கள்ளங்கபடமற்றவர்களாக இருக்கின்றனர்! மேலும் எவ்வளவு உயர்ந்த வியாபாரம் செய்கின்றனர்! இவர்கள் இந்த அளவிற்கு பெரிய வியாபாரம் செய்யக் கூடிய வியபாரி ஆத்மாக்கள் என்பதை உலகத்தினர்களால் புரிந்து கொள்ள முடியாது. உலகத்தினர் எந்த ஆத்மாக்களை நம்பிக்கையற்றவர்கள், மிகவும் ஏழைகள் என்று புரிந்திருக்கிறார்களோ, இந்த கன்னிகைகள், தாய்மார்கள் பரமாத்ம பிராப்திகளுக்கு எப்படி அதிகாரிகளாக ஆக முடியும்? அசம்பவம் என்று நினைத்து தூரமாக்கி விட்டார்கள் ஆனால் தந்தை முதலில் தாய்மார்களை, கன்னிகைகளைத் தான் இவ்வளவு பெரியதிலும் பெரிய வியாபாரம் செய்யக் கூடிய சிரேஷ்ட ஆசாமிகளாக ஆக்கி விட்டார். ஞானக் கலசத்தை முதலில் தாய்மார்கள், கன்னிகைகளின் மீது வைத்து விட்டார். ஏழைக் கன்னிகையான ஜெகதம்பாவை யக்ஞ மாதாவாக ஆக்கினார். தாய்மார்களிடத்திலும் மறைத்து வைக்கப்பட்ட சொத்துக்கள் ஏதாவது இருக்கும் ஆனால் கன்னிகைகள் தாய்மார்களை விட ஏழைகளாக இருக்கின்றனர். ஆக தந்தை ஏழையிலும் ஏழையாக இருப்பவர்களை முதலில் வியாபாரிகளாக ஆக்கினார், மேலும் எவ்வளவு பெரிய வியாபாரம் செய்தார்! ஏழைக் குமாரியிலிருந்து ஜெகதம்பாவாக, பிறகு செல்வத்தின் தேவி லக்ஷ்மியாக மாற்றி விட்டார். இன்றைய நாள் வரையிலும் எவ்வளவு தான் கோடிஸ்வரர்களாக இருந்தாலும் லக்ஷ்மியிடம் அவசியம் செல்வம் கேட்பர், அவசியம் பூஜை செய்வர்.

# 1987 அவ்யக்த முரளி

இரத்தின வியாபாரியான தந்தை தனது வியாபாரி குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றார். ஒரு பிறப்பில் வியாபாரம் செய்வதனால் அநேக பிறவிகளுக்கு சதா செல்வம் நிறைந்தவர்களாகி விடுகிறீர்கள். மற்ற வியாபாரம் செய்பவர்கள் மிகப் பெரிய வியாபாரியாக இருக்கலாம், ஆனால் அவர்கள் செல்வம் மட்டுமே கொடுப்பவர்களாக, பொருட்களை கொடுக்கும் வியாபாரம் செய்வார்கள். ஒரே ஒரு எல்லையற்ற தந்தை மட்டும் தான் செல்வம் கொடுக்கும் வியாபாரமும் செய்கின்றார். மனதிற்கான வியாபாரமும் செய்கின்றார். உடலுக்கான மற்றும் சதா சிரேஷ்ட சம்பந்தத்திற்கான வியாபாரமும் செய்கின்றார். இப்படிப்பட்ட வள்ளலை யாராவது பார்த்திருக்கிறீர்களா? நான்கு வகையான வியாபாரமும் செய்திருக்கின்றார் அல்லவா! உடல் சதா ஆரோக்கியமாக இருக்கும், மனம் சதா குஷியாக இருக்கும், செல்வம் நிறைந்திருக்கும் மற்றும் சம்பந்தத்தில் சுய நலமற்ற அன்பு இருக்கும், மேலும் உத்திரவாதமும் இருக்கிறது. இன்றைய நாட்களில் மதிப்பான பொருட்களுக்கு உத்திரவாதம் கொடுக்கின்றனர். 5-ஆண்டுகள், 10-ஆண்டுகளுக்கான உத்திரவாதம் கொடுக்கின்றனர், வேறு என்ன செய்வார்கள்? ஆனால் ரத்தின வியாபாரி தந்தை எவ்வளவு காலத்திற்கு உத்திரவாதம் கொடுக்கின்றார்? பல பிறவிகளுக்கான உத்திரவாதம் கொடுக்கின்றார். நான்கில் ஒன்று கூட குறை இருக்க முடியாது. பிரஜைக்கும் பிரஜையாக ஆகக் கூடியவராக இருக்கலாம் ஆனால் அவருக்கும் கடைசிப் பிறவி வரை அதாவது திரேதாவின் கடைசி வரையிலும் இந்த நான்கு விசயங்களும் பிராப்தியாக கிடைக்கும். இப்படிப்பட்ட வியாபாரம் எப்பொழுதாவது செய்திருக்கிறீர்களா? இப்பொழுது வியாபாரம் செய்கிறீர்கள் அல்லவா? பக்கா வியாபாரம் செய்கிறீர்களா? அல்லது அரை குறையாக செய்கிறீர்களா? பரமாத்மாவிடம் எவ்வளவு எளிய வியாபாரம் செய்கிறீர்கள்! எதை கொடுத்தீர்கள்? உபயோகமான பொருட்கள் எதையாவது கொடுத்தீர்களா?

அயல்நாட்டினர் பாப்தாதாவிற்கு எப்பொழுதும் உள்ளம் வரைந்து அனுப்புகின்றனர். கடிதமும் உள்ளத்தின் சித்திரத்திற்குள் எழுதுகின்றனர். உள்ளம் பரிசாக அனுப்புகின்றனர் ஆக உள்ளம் கொடுத்து விட்டீர்கள் தானே! ஆனால் எப்படிப்பட்ட உள்ளத்தை கொடுத்திருக்கிறீர்கள்? ஒரு உள்ளம் எத்தனை துண்டுகளாக

துண்டிக்கப்பட்டு இருந்தது? தாய், தந்தை, மாமா, சித்தப்பா என்று மிக நீண்ட பட்டியல் இருக்கிறது? ஒருவேளை சம்பந்தத்தின் பட்டியல் எடுத்துக் கொண்டால் கலியுகத்தில் எவ்வளவு நீண்ட பட்டியல் இருக்கும்! ஒன்று சம்பந்தத்தில் உள்ளத்தை கொடுத்தீர்கள். இரண்டாவது பொருட்களிடத்திலும் உள்ளத்தை கொடுத்தீர்கள் ஆக உள்ளத்தை கொடுத்த பொருட்கள் எத்தனை? மனிதர்கள் எத்தனை பேர்? அனைத்திலும் உள்ளம் ஈடுபடுத்தி உள்ளம் துண்டு துண்டாக ஆக்கி விட்டீர்கள். தந்தை அநேக துண்டுகளான உள்ளத்தை ஒன்றாக இணைத்து விட்டார். ஆக கொடுத்தது என்ன? மற்றும் அடைந்தது என்ன? மேலும் வியாபாரம் செய்வதற்கான விதியும் எவ்வளவு எளிதாக இருக்கிறது! விநாடிக்கான வியாபாரம் அல்லவா! பாபா என்ற சப்தம் தான் விதியாகும். ஒரு சப்தம் தான் விதியாகும். இதற்கு எவ்வளவு நேரம் தேவைப்படுகிறது? உள்ளப்பூர்வமாக பாபா என்று கூறினால் போதும். ஆக விநாடியில் வியாபாரம் ஆகி விட்டது. எவ்வளவு எளிய விதியாகும்! இவ்வளவு எளிய வியாபாரம் இந்த சங்கமயுகம் தவிர வேறு எந்த யுகத்திலும் செய்ய முடியாது. ஆக வியாபாரிகளின் முகம், தோற்றத்தை பார்த்துக் கொண்டிருந்தார். உலகாய கணக்கில் எவ்வளவுகள்ளங் கபடமற்றவர்களாக இருக்கிறீர்கள்! ஆனால் இந்தகள்ளங் கபடமற்றவர்கள் தான் அதிசயம் செய்திருக்கின்றனர். வியாபாரம் செய்வதில் புத்திசாலிகளாக ஆகி விட்டீர்கள் அல்லவா! இன்றைய நாட்களில் பெரிய பெரிய புகழ் பெற்ற செல்வந்தர்கள் செல்வம் சம்பாதிப்பதற்குப் பதிலாக செல்வத்தை பாதுகாக்கும் குழப்பத்தில் இருக்கின்றனர். அந்த குழப்பத்தில் தந்தையை அறிந்து கொள்வதற்கு நேரமே கிடைப்பதில்லை. தன்னை காப்பாற்றிக் கொள்ள, செல்வத்தை பாதுகாத்துக் கொள்ளவதற்கே நேரம் சென்று விடுகிறது. ஒருவேளை சக்ரவர்த்தியாக இருந்தாலும், கவலையான சக்ரவர்த்திகளாக இருக்கின்றனர். ஏனெனில் கருப்புப் பணம் அல்லவா! ஆகையால் கவலையான சக்ரவர்த்திகளாக இருக்கின்றனர் ஆனால் நீங்கள் வெளியில் ஒன்றும் இல்லாதவர்களாக இருக்கிறீர்கள், உள்ளுக்குள் கவலையற்ற சக்ரவர்த்திகளாக இருக்கிறீர்கள். யாசிப்பவர்களாக (பிச்சைக்காரர் போன்று) இருந்தாலும் சக்ரவர்த்திகள் ஆரம்ப காலத்தில் கையெழுத்து எப்படி போடுவீர்கள்? யாசிப்பதிலிருந்து இளவரசர் இப்பொழுதும் சக்ரவர்த்திகளாக இருக்கிறீர்கள் மற்றும் எதிர்காலத்திலும் சக்ரவர்த்திகளாக இருப்பீர்கள். இன்றைய நாட்களில் நம்பர் ஒன்

செல்வந்தராக இருப்பவரின் எதிரில் உங்களுடைய திரேதாவின் கடைசிப் பிரஜையும் அதிக செல்வந்தராக இருப்பர். இன்றைய நாளின் எண்ணிக்கையின் கணக்கு சிந்தித்துப் பாருங்கள் அதே செல்வம் தான் இருக்கும், மேலும் உள்ளே மறைந்திருக்கும் செல்வங்களும் வெளிப்படும். ஆக எவ்வளவு பெரிய எண்ணிக்கையோ, அந்த அளவிற்கு செல்வம் பிரிக்கப்பட்டிருக்கும் ஆனால் அங்கு எண்ணிக்கை எவ்வளவு இருக்கும்? இந்த கணக்கில் பார்க்கின்ற போது எவ்வளவு செல்வம் இருக்கும்! பிரஜையிடத்திலும் எந்த பொருளின் குறையும் இருக்காது. ஆக சக்ரவர்த்தி ஆகி விடுகிறார் அல்லவா! சக்ரவர்த்தி என்றால் அரியனையில் அமருவது என்று பொருள் அல்ல. சக்ரவர்த்தி என்றால் நிறைந்திருப்பது, எந்த குறையுமின்றி இருப்பதாகும். ஆக அப்படிப்பட்ட வியாபாரம் செய்து விட்டீர்களா? அல்லது செய்து கொண்டு இருக்கிறீர்களா? அல்லது இப்பொழுது தான் யோசித்துக் கொண்டிருக்கிறீர்களா? ஏதாவது ஒரு பெரிய பொருள் மலிவான விலைக்குக் கிடைத்து விட்டால் இது சரியானதா? இல்லையா? என்ற குழப்பத்தில் வந்து விடுவர். இவ்வாறு குழப்பத்தில் இல்லை தானே? ஏனெனில் பக்தி மார்கத்தினர் எளிதானதை அந்த அளவிற்கு கடினமாக ஆக்கியதுடன் குழப்பத்தில் விழ வைத்து விட்டனர். இன்றைய நாள் வரை தந்தையை அதே ரூபத்தில் தேடிக் கொண்டே இருக்கின்றனர். சிறிய விசயத்தை பெரிய விசயமாக ஆக்கி விட்டனர். ஆகையால் குழப்பத்தில் வந்து விடுகின்றனர். உயர்ந்ததிலும் உயர்ந்த பகவானை சந்திக்கும் விதியையும் மிகப் பெரியதாக கூறிவிட்டனர். அதே சக்கரத்தில் பக்த ஆத்மாக்களும் சிந்தனையில் மூழ்கியிருக்கின்றனர். பகவான் பக்தியின் பலன் கொடுப்பதற்காகவும் வந்து விட்டார் ஆனால் பக்த ஆத்மாக்கள் குழப்பத்தின் காரணத்தினால் ஒவ்வொரு இலைக்கும் தண்ணீர் கொடுப்பதில் 'பிஸி'யாக இருக்கின்றனர். நீங்கள் எவ்வளவு தான் செய்தி கொடுத்தாலும் என்ன கூறுகின்றனர்? இவ்வளவு உயர்ந்த பகவான், இவ்வாறு எளிதாக வருவது இது முடியாத விசயமாகும். ஆகையால் தந்தை புன்முறுவல் செய்கின்றார் இன்றைய நாட்களில் புகழ் வாய்ந்த பக்தர்கள், புகழ் வாய்ந்த செல்வந்தர்கள், எந்த ஒரு தொழில் செய்வதில் பிரபலமானவராக இருப்பவர் அவரவர்களது காரியத்தில் பிசியாக இருக்கின்றனர் ஆனால் சாதாரண ஆத்மாக்களாகிய நீங்கள் தந்தையிடம் வியாபாரம் செய்து விட்டீர்கள். பாண்டவர்கள் பக்காவாக வியாபாரம் செய்து வீட்டீர்கள் தானே? இரட்டை அயல்நாட்டினர் வியாபாரம்

செய்வதில் புத்திசாலிகளாக இருக்கின்றனர். அனைவரும் வியாபாரம் செய்திருக்கிறீர்கள் ஆனால் அனைத்து விசயங்களிலும் வரிசைக்கிரமம் இருக்கிறது. தந்தை அனைவருக்கும் ஒன்று போல அனைத்து பொக்கிஷங்களும் கொடுத்திருக்கின்றார். ஏனெனில் அளவற்ற கடலாக இருக்கின்றார். கொடுப்பதில் தந்தைக்கு வரிசைக்கிரமமாக கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

இன்றைய நாட்களில் விநாசம் செய்யக் கூடிய ஆத்மாக்கள் கூறும் பொழுது பல உலகங்களை அழிக்கக் கூடிய அளவிற்கு பொருட்கள் தயாரித்து வைத்திருக்கின்றோம். தந்தையும் கூறுகின்றார் தந்தையிடத்திலும் அந்த அளவிற்கு பொக்கிஷங்கள் உள்ளன, முழு உலக ஆத்மாக்களும் உங்களைப் போன்று புத்திசாலிகளாக ஆகி வியாபாரம் செய்தாலும் குறைவற்றதாக இருக்கும். பிராமணர்களாகிய உங்களது எண்ணிக்கை எவ்வளவு இருக்கிறதோ, இதை விட பல மடங்கு வந்து விட்டாலும் எடுத்துக் கொள்ள முடியும். அந்த அளவிற்கு அளவற்ற பொக்கிஷம் இருக்கிறது ஆனால் அடைபவர்களில் வரிசைக்கிரமம் ஆகி விடுகிறது. திறந்த மனதுடன் வியாபாரம் செய்யும் தைரியசாலிகள் மிகவும் குறைவாக வெளிப்படுகின்றனர். ஆகையால் இரண்டு வகையான மாலைகள் பூஜிக்கப்படுகின்றன. அஷ்ட இரத்தினங்கள் எங்கு இருக்கின்றன! 16-ஆயிரம் எங்கு இருக்கின்றன! எவ்வளவு வித்தியாசம் ஏற்பட்டு விட்டது! வியாபாரம் செய்வது ஒரே மாதியாகத் தான். கடைசி நம்பரும் பாபா என்று கூறுகின்றார். முதல் நம்பரும் பாபா என்று கூறுகின்றார். சப்தத்தில் எந்த வேறுபாடும் இல்லை. வியாபாரம் செய்வதற்கான விதி ஒன்று மாதிரியாகத் தான் இருக்கிறது. மேலும் கொடுக்கக் கூடிய வள்ளலும் ஒரே மாதிரியாகத் தான் கொடுக்கின்றார். ஞான பொக்கிஷம் அல்லது சக்திகளின் பொக்கிஷம், சங்கமயுகத்தின் பொக்கிஷங்கள் என்று எதையெல்லாம் அறிவீர்களோ, அனைவரிடத்திலும் ஒரே மாதிரியாகத் தான் இருக்கிறது. சிலருக்கு சர்வ சக்திகள் கொடுத்திருக்கின்றார், சிலருக்கு ஒரு சக்தி கொடுத்திருக்கின்றார், சிலருக்கு ஒரு குணம் கொடுத்திருக்கின்றார் அல்லது சிலருக்கு சர்வ குணங்களைக் கொடுத்திருக்கின்றார் இந்த வேறுபாடு கிடையாது. அனைவருக்கும் ஒரே பட்டம் தான் முதல், இடை, கடையின் ஞானத்தை அறிந்த திரிகாலதர்சி, மாஸ்டர் சர்வசக்திவான் ஆகும். சிலர் சர்வசக்திவான், சிலர் சக்திவான் என்று கிடையாது.

இல்லை. அனைவரையும் சர்வ குண சம்பன்னம் ஆகக் கூடிய தேவ ஆத்மாக்கள் என்று கூறுகின்றார், குண மூர்த்தி என்று கூறுகின்றார். அனைவரிடத்திலும் பொக்கிஷங்கள் இருக்கின்றன. ஒரு மாதமாக ஞானப் படிப்பு படிப்பவர் கூட ஞான வர்ணனை செய்து 50-ஆண்டுகள் உடையவரைப் போன்று வர்ணனை செய்கின்றார். ஒருவேளை ஒவ்வொரு குணம், சக்தியைப் பற்றி சொற்பொழிவு செய்யுமாறு கூறினால் மிகவும் நன்றாக சொற்பொழிவு செய்ய முடியும். புத்தியில் இருப்பதனால் தான் செய்ய முடியும் அல்லவா! ஆக பொக்கிஷம் அனைவரிடத்திலும் இருக்கிறது. பிறகு ஏன் வேறுபாடு ஏற்படுகிறது? நம்பர் ஒன் வியாபாரி பொக்கிஷத்தை சிந்தனை செய்து தனது காரியத்தில் பயன்படுத்துவர். அந்த அனுபவ அதாரிட்டியினால் அனுபவியாக ஆகி மற்றவர்களுக்கு கொடுப்பர். காரியத்தில் பயன்படுத்துவது என்றால் பொக்கிஷங்களை அதிகப்படுத்துவதாகும். ஒன்று வர்ணனை மட்டும் செய்யக் கூடியவர்கள், மற்றொருவர் சிந்தனை செய்யக் கூடியவர். சிந்தனை செய்பவர் யாருக்கு கொடுத்தாலும் அவர் சுயம் அனுபவியாக இருக்கின்ற காரணத்தினால் மற்றவர்களையும் அனுபவிகளாக ஆக்கி விட முடியும். வர்ணனை செய்பவர்கள் மற்றவர்களையும் வர்ணனை செய்பவர்களாக ஆக்கி விடுகின்றனர். மகிமை செய்து கொண்டிருப்பர், ஆனால் அனுபவியாக ஆக மாட்டார்கள். சுயம் மகான் ஆக மாட்டார்கள், ஆனால் மகிமை செய்பவர்களாக ஆவார்கள்.

ஆக நம்பர் ஒன் என்றால் சிந்தனை சக்தியின் மூலம் பொக்கிஷங்களின் அனுபவியாக ஆகி அனுபவி களாக ஆக்கக் கூடியவர்கள், அதாவது மற்றவர்களையும் செல்வந்தர்களாக ஆக்கக் கூடியவர்கள். ஆகையால் அவர்களது பொக்கிஷங்கள் சதா அதிகரித்துக் கொண்டே செல்லும். மேலும் தகுந்த நேரத்தில் தனக்காகவும், மற்றவர்களுக்காகவும் காரியத்தில் பயன்படுத்துவதன் மூலம் சதா வெற்றி சொரூபமாக இருப்பார்கள். வர்ணனை மட்டுமே செய்பவர்கள் மற்றவர்களையும் செல்வந்தர்களாக ஆக்க முடியாது, மேலும் தனக்காகவும் தகுந்த நேரத்தில் எந்த சக்தி, குணம், ஞானத்தின் விசயங்களை பயன்படுத்த வேண்டுமோ அதை அந்த நேரத்தில் பயன்படுத்த முடியாது. ஆகையால் பொக்கிஷங்கள் நிறைந்த சொரூபத்தின் சுகம் மற்றும் வள்ளலாகி கொடுக்கும் அனுபவம் செய்ய முடியாது. செல்வம் இருந்தும் செல்வத்தின்

சுகம் அடைய முடியாது. சக்தி இருந்தாலும் தகுந்த நேரத்தில் சக்தியின் மூலம் வெற்றி அடைய முடியாது. குணம் இருந்தாலும் தகுந்த நேரத்தில் அந்த குணத்தை பயன்படுத்த முடியாது. வர்ணனை மட்டுமே செய்ய முடியும். செல்வம் அனைவரிடத்திலும் இருக்கிறது, ஆனால் செல்வத்தின் சுகம் தகுந்த நேரத்தில் பயன்படுத்துவதன் மூலம் அனுபவம் ஆகும். இன்றைய நாட்களில் அழியக் கூடிய செல்வந்தர்களின் செல்வமும் வங்கியில் இருக்கும், அலமாரியில் இருக்கும் அல்லது மெத்தையின் அடியில் இருக்கும். தானும் காரியத்தில் பயன்படுத்த மாட்டார்கள், மற்றவர்களையும் பயன்படுத்த விட மாட்டார்கள். சுயம் இலாபம் அடைய மாட்டார்கள், மற்றவர்களை இலாபம் அடைய விட மாட்டார்கள். ஆக செல்வம் இருந்தும் சுகம் அடையவில்லை அல்லவா! மெத்தையின் அடியிலேயே இருந்து விடும். தானாகவே சென்று விடும். ஆக வர்ணனை செய்வது என்றால் பயன்படுத்தவில்லை, சதா ஏழையாகவே தென்படுவர். இந்த செல்வமும் தனக்கா மற்றும் பிறருக்காக தகுந்த நேரத்தில் பயன்படுத்தவில்லை, வெறும் புத்தியில் மட்டுமே வைத்திருந்தால் தானும் அழிவற்ற செல்வத்தின் போதை, குஷியில் இருக்க மாட்டார்கள், மற்றவர்களுக்கும் கொடுக்க முடியாது. சதா என்ன செய்வது? எப்படி செய்வது? இந்த விதியிலேயே நடந்து கொண்டிருப்பார்கள். ஆகையால் இரண்டு மாலைகள் உருவாகி விடுகிறது அவர்கள் சிந்தனை செய்யக்கூடியவர்கள், இவர்கள் வெறும் வர்ணனை செய்யக் கூடியவர்கள். ஆக எப்படிப்பட்ட வியாபாரிகளாக இருக்கிறீர்கள்? நம்பர் ஒன்னாக இருக்கிறீர்களா? அல்லது இரண்டாம் நம்பரா? இந்த பொக்கிஷங்களுக்கான நியமம் இது தான் -எந்த அளவிற்கு மற்றவர்களுக்குக் கொடுப்பீர்களோ, எந்த அளவிற்க காரியத்தில் பயன்படுத்துவீர்களோ, அந்த அளவிற்கு அதிகரிக்கும். விருத்தி அடைவதற்கான விதி இது தான். இதில் விதியை நடைமுறைப்படுத்தாத காரணத்தினால் தனக்குள்ளும் விருத்தி ஏற்படுவது கிடையாது, மற்றவர்களுக்கு சேவை செய்வதிலும் விருத்தி ஏற்படுவது கிடையாது. எண்ணிக்கை அதிகமாவது கிடையாது, சம்பன்னம் ஆக்கக் கூடிய விருத்தி. சில மாணவர்களின் எண்ணிக்கை எண்ணி விட முடிகிறது, ஆனால் யோகா என்றால் என்ன? என்று புரியவில்லை, தந்தையை எப்படி நினைவு செய்வது? என்று இன்று வரையும் கூறிக் கொண்டிருக்கின்றனர். இப்பொழுது சக்தி கிடையாது. ஆக மாணவர்கள் வரிசையில் இருக்கின்றனர், பதிவேட்டில் பெயர் இருக்கிறது ஆனால்

செல்வந்தர்களாக ஆகவில்லை அல்லவா! யாசித்துக் கொண்டே இருப்பார்கள். சிலர் சில நேரங்களில் டீச்சரிடம் சென்ற உதவி செய்யுங்கள் என்றும், சில நேரங்களில் தந்தையிடம் உதவி செய்யுங்கள் என்று உரையாடல் செய்வார்கள். ஆக நிறைந்து இருக்கவில்லை அல்லவா! யார் சிந்தனைச் சக்தியின் மூலம் தனக்குள் செல்வத்தை நிறைத்துக் கொள்கிறார்களோ, அவர்கள் மற்றவர்களையும் செல்வத்தில் முன்னேற்றி விட முடியும். சிந்தனை சக்தி என்றால் செல்வத்தை அதிகப்படுத்துவது. ஆக செல்வந்தருக்கான குஷி, செல்வந்தருக்கான சுகம் அனுபவம் செய்ய வேண்டும். புரிந்ததா? சிந்தனைச் சக்திக்கான மகத்துவம் அதிகமாக இருக்கிறது. முன்பும் சிறிது கூறியிருந்தேன். சிந்தனை சக்தியின் மகத்துவத்தை பிறகு கூறுகின்றேன். சோதனை செய்வதற்கான காரியம் கொடுத்துக் கொண்டிருக்கின்றேன். ரிசல்ட் வெளிப்பட்டப் பிறகு எங்களுக்குத் தெரியாது, இந்த விசயத்தை பாப்தாதா கூறவில்லை என்று நீங்கள் கூறுவீர்கள். ஆகையால் தினமும் கூறிக் கொண்டிருக்கின்றேன். சோதித்துக் கொள்வது என்றால் மாறுவதாகும். நல்லது.

அனைத்து சிரேஷ்ட வியாபாரி ஆத்மாக்களுக்கு, சதா அனைத்துப் பொக்கிஷங்களை தகுந்த நேரத்தில் காரியத்தில் பயன்படுத்தக் கூடிய மகான் விசால புத்தியுடைய குழந்தைகளுக்கு, சதா தன்னை மற்றும் அனைவரையும் சம்பன்ன அனுபவம் செய்து, செய்விக்கக் கூடிய அனுபவத்தின் அதாரிட்டியுடைய குழந்தைகளுக்கு அல்மைட்டி அதாரிட்டி பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

**ஈஸ்டர்ன் மண்டலத்தின் சகோதர, சகோதரிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:** ஈஸ்டனிலிருந்து சூரியன் உதயம் ஆகிறது அல்லவா! ஆக ஈஸ்டர்ன் மண்டலம் என்றால் சதா ஞான சூரியன் உதயம் ஆகியே இருக்கிறது. ஈஸ்டனில் இருப்பவர்கள் என்றால் சதா ஞான சூரியனின் வெளிச்சத்தின் மூலம் ஒவ்வொரு ஆத்மாவையும் வெளிச்சத்தில் கொண்டு வரக் கூடியவர்கள், இருளைப் போக்கக் கூடியவர்கள். சூரியனின் காரியம் இருளை போக்குவதாகும். ஆக நீங்கள் அனைவரும் மாஸ்டர் ஞான சூரியன் அதாவது நாலா புறங்களிலும் உள்ள அஞ்ஞானத்தை அழிக்கக் கூடியவர்கள் தானே! அனைவரும் இதே சேவையில் பிஸியாக இருக்கிறீர்களா அல்லது தனது மற்றும் குடும்பப்

பிரச்சனைகளின் சண்டையில் மாட்டிக் கொண்டிருக்கிறீர்களா? சூரியனின் காரியம் வெளிச்சம் கொடுக்கும் காரியத்தில் பிஸியாக இருப்பதாகும். இல்லறத்தில் இருந்தாலும், எந்த காரியம் செய்தாலும், எந்த பிரச்சனை எதிரில் வந்தாலும் சூரியன் வெளிச்சம் கொடுக்கும் காரியம் செய்யாமல் இருக்க முடியாது. ஆக மாஸ்டர் ஞான சூரியனாக இருக்கிறீர்களா? அல்லது சில நேரங்களில் குழப்பத்தில் வந்து விடுகிறீர்களா? முதல் கடமை ஞானம் வெளிச்சம் கொடுக்க வேண்டும். பரமாத்ம சக்தியின் மூலம் காரிய விவகாரம் மற்றும் குடும்பம் இரண்டையும் சிரேஷ்டமாக ஆக்க வேண்டும் என்ற நினைவு இருக்கும் போது இந்த சேவை தானாகவே நடைபெறும். எங்கு பரமாத்ம சக்தி இருக்கிறதோ, அங்கு காரியத்தில் வெற்றி மற்றும் எளிதாகி விடும். மேலும் பரமாத்ம சக்தியின் பாவனையின் மூலம் குடும்பத்திலும் உண்மையான அன்பு, ஒற்றுமை தானாகவே வந்து விடுகிறது. ஆக குடும்பமும் சிரேஷ்டம் மற்றும் காரியமும் சிரேஷ்டமாகி விடுகிறது. பரமாத்ம சக்தியானது காரியத்திலிருந்து தூர விலக்குவது கிடையாது. பரமாத்மக் காரியத்தில் பிசியாக இருப்பதன் மூலம் குடும்பம் மற்றும் காரியத்தில் உதவி கிடைத்து விடுகிறது. ஆக பரமாத்ம சக்தியினால் சதா முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். நேபாளத்தினர்களின் அடையாளத்திலும் சூரியன் காண்பிக்கின்றனர் அல்லவா! இராஜாக்களிலும் சூரியவம்சி இராஜாக்கள் பிரசித்தமானவர்கள், சிரேஷ்டமானவர்கள் என்று நினைக்கின்றனர். ஆக நீங்களும் மாஸ்டர் ஞான சூரியன் அனைவருக்கும் வெளிச்சம் கொடுக்கக் கூடியவர்கள். நல்லது.

**வரதானம்: சங்கமயுகத்தில் ஒவ்வொரு காரியத்தையும் கலையின் ரூபத்தில் செய்யக் கூடிய 16-கலைகள் நிறைந்தவர் ஆகுக!**

சங்கமயுகம் விசேஷமாக காரியங்கள் என்ற கலையை காண்பிக்கக் கூடிய யுகமாகும். யாருடைய ஒவ்வொரு காரியமும் கலையின் ரூபத்தில் இருக்குமோ, அவர்களது ஒவ்வொரு காரியம் மற்றும் குணத்திற்கு மகிமை ஏற்படும். 16-கலைகள் நிறைந்தவர் என்றால் ஒவ்வொரு நடத்தையும் சம்பூர்ன கலையின் ரூபத்தில் தென்பட வேண்டும் இதுவே சம்பூர்ன நிலையின் அடையாளமாகும். எவ்வாறு சாகாரத்தில் (பாபாவின்) பேசுவது, நடந்து கொள்வது... அனைத்திலும் விசேஷதாவைப்

பார்த்தீர்கள் ஆக இது கலை ஆகி விடுகிறது. எழுந்திருக்கும் -அமரும் கலை, பார்க்கும் கலை, நடந்து கொள்ளும் கலை இருந்தது. அனைத்திலும் விடுபட்ட நிலை மற்றும் விசேஷதா இருந்தது. ஆக இவ்வாறு தந்தையைப் பின்பற்றி 16-கலைகள் நிறைந்தவர்களாக ஆகுங்கள்.

**சுலோகன்: யார் உடனுக்குடன் கண்டறிந்து முடிவெடுத்து விடுகிறார்களோ அவர்கள் தான் சக்திசாலிகள் ஆவர்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 14.12.1987 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சங்கமயுகத்தின் பிராமண வாழ்க்கையின் மூன்று சிறப்பு அம்சங்கள்!

இன்று பாப்தாதா தனது அனைத்து எப்பொழுதும் துணையாக இருக்கக் கூடிய, சதா உதவியாளராக இருக்கக் கூடிய, சேவைக்கு துணையாக இருந்து சேவை செய்யக் கூடிய மேலும் கூடவே இருக்கக் கூடிய சிரேஷ்ட குழந்தைகளைப் பார்த்து புன்முறுவல் செய்துக் கொண்டிருக்கிறார். துணையாக இருக்கக்கூடியவர் என்றாலே எளிதாக இயல் பான யோகி ஆத்மாக்களாக இருப்பர். சதா சேவை யில் உதவியாளராகவும் துணையாகவும் இருந்து நடக்கக் கூடிய அதாவது ஞானம் நிறைந்த ஆத்மாக்கள், உண்மையான சேவாதாரிகள். கூடவே இருப்பவர்கள் என்றால் சமமானவர்களாகவும் நிறைந்தவர்களாகவும் கர்மாதீத் நிலையை அடையும் ஆத்மாக்கள். பாப்தாதா அனைத்து குழந்தைகளிடத்தில் இந்த மூன்று விஷயங்களின் சிறப்பு அம்சங்களை பார்த்துக் கொண்டிருக்கிறார், இந்த மூன்று விஷயங்களில் எந்தளவு சம்பூரண நிலை (முழுமை) அடைந்திருக்கிறார்கள்? சங்கம யுகத்தின் சிரேஷ்ட பிராமண வாழ்க்கையின் விசேஷத் தன்மைகளில் இந்த மூன்று விஷயங்கள் அவசியமாக இருக்கிறது. யோகி ஆத்மா (நினைவு சொரூபமானவர்), ஞானம் நிறைந்த ஆத்மா மற்றும் பாபாவிற்கு சமமாக கர்மாதீத் நிலையை அடையக்கூடிய ஆத்மா -ஒருவேளை இந்த மூன்று விஷயங்களில் ஏதாவது ஒன்றில் குறை இருக்கிறது என்றாலும் கூட பிராமண வாழ்க்கை யின் விசேஷத் தன்மைகளின் அனுபவசாலி ஆக முடியாது. அதாவது சம்பூரண பிராமண வாழ்க்கையின் சுகம் மற்றும் பிராப்திகளை இழக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் சம்பூரணமாக (முழுமையாக) அடைய வேண்டும் என்ற வரதானம் கொடுத்திருக்கிறார். சக்திக்கு ஏற்றவாறு யோகி ஆகுங்கள், மற்றும் சக்திக்கு ஏற்றவாறு ஞானத்தின் சொரூபம்

ஆகுங்கள் என்று வரதானம் கொடுக்கவில்லை. இதன் கூடவே முழு கல்பத்தில் சங்கமயுகம் தான் விசேஷமான யுகமாக இருக்கிறது. இந்த யுகம் அதாவது இந்த நேரத்தையும் கூட ஆசீர் வாதம் அளிக்கும் நேரம் என்று சொல்லப்படுகிறது. ஏனெனில் வரத்தை அளிக்கும் தந்தை வரத்தை அளிப்பதற்காக இந்த சமயத்தில் தான் வருகிறார். வரத்தை அளிக்கும் வள்ளல் வருவதன் காரணத்தினால் நேரம் கூட வரம் நிறைந்தாக ஆகி விட்டது. இந்த நேரத்திற்கான வரதானம் இதுவே. அனைத்து பிராப்திகளிலும் முழுமையானவர் ஆவதற்கான காலமாகவும் இருக்கிறது. நிறைவான மனநிலையை அடைவதற்காகவும் கூட ஆசிர்வாதம் அளிக்கும் நேரமாக இருக்கிறது. மேலும் முழு கல்பமும் செயலுக்கு தகுந்தபடி வெகுமதி (பலனை) அடைகிறார்கள், அல்லது எப்படி செயலோ, அதற்கு பலன் தானாகவே கிடைக்கிறது, ஆனால் இந்த வரமளிக்கும் நேரத்தில் ஒரு அடி உங்களின் செயலுக்கு மேலும் பல மடங்கு பாபாவின் உதவி எளிதாகவே கிடைக்கிறது. சத்யுகத்தில் ஒன்றுக்கு பல மடங்கு பலன் கிடைப்பதில்லை ஆனால் இப்பொழுது கிடைத்துள்ள பலன்களை அனுபவம் செய்வதற்கான அதிகாரி ஆகிறீர்கள். (மற்ற யுகங்களில்) சேமித்து வைத்துள்ள பலன்களின் கணக்கு குறைந்துக் கொண்டே மட்டும் தான் வருகிறது. கலைகள் குறைகிறது. ஒரு யுகம் முடிந்த பிறகு கலைகள் கூட 16-கலைகளிலிருந்து 14-கலையாக ஆகி விடுகிறது அல்லவா ஆனால் எந்த சமயத்தில் 16-கலைகளும் முழுமையானவர்களாக ஆகிறீர்கள்? அதை அடைவதற்கான நேரம் இந்த சங்கமயுகமாகத் தான் இருக்கிறது. இந்த சமயத்தில் பாபா திறந்த உள்ளத்தோடு அனைத்து பொக்கிஷங்களின் கிடங்கு (சுரங்கம்) வரமாக, ஆஸ்தியின் ரூபத்தில் மேலும்படிப்பிற்கு பலனளிக்கும் ரூபத்தில், மூன்று விதமான உறவின் மூலம் மூன்று விதமாக விசேஷமாக திறந்த பொக்கிஷமாக, நிறைவான (அள்ள அள்ள குறையாத) பொக்கிஷமாக குழந்தைகளுக்கு முன்பாக வைக்கிறார். கணக்கில்லாமல், ஒன்றுக்கு பல மடங்கு வரவு வைக்கிறார். முயற்சிக்கு தகுந்த பலன் கிடைத்தது என்று சொல்வதில்லை, ஆனால் கருணை மனமுடைவராகி, வள்ளலாகி, விதியை உருவாக்குபவராகி, அனைத்து சம்மந்தங்களிலும் சுயம் அவரே ஒவ்வொரு வினாடியும் உதவியாளர் ஆகிறார். ஒரு வினாடியின் தைரியம் மற்றும் பல வருட கடின உழைப்பிற்கு உதவியின் ரூபத்தில் எப்பொழுதும் உதவியாளராக இருக்கிறார். ஏனெனில் பல பிறவிகளாக அலைந்து திரிந்து பலமில்லாத

ஆத்மாக்களாக இருக்கிறார்கள், களைப்படைந்திருக்கிறார்கள் என்பதை தெரிந்திருக்கிறார்.

அனைத்து விதமான சுமைகளையும் என்னிடம் (பாபாவிடம்) கொடுங்கள் என்று அவரே முன் வருகிறார். சுமைகளை ஏற்பதற்காக (சுமப்பதற்காக) முன வருகிறார். பாக்கியத்தை அளிக்கும் வள்ளலாகி ஞானம் நிறைந்தவராக மாற்றுகிறார், உயர்ந்த செயல் செய்வதற்கான ஞானத்தை தெளிவாக புரிய வைத்து, பாக்கியத்தின் ரேகையை எந்தளவு இழுக்க (அதிகரிக்க) வேண்டுமோ அந்தளவு அதிகரித்துக் கொள்ளலாம் என்று அதற்கான பேனாவையும் உங்களிடம் தருகிறார். அனைத்து பொக்கிஷங்களின் சாவி உங்களுடைய கைகளில் கொடுத்திருக்கிறார். மேலும் சாவி கூட மிகவும் எளிதாக இருக்கிறது. மேலும் மாயாவின் புயல் வருகிறது என்றாலும் கூட குடை நிழலாக இருந்து பாதுகாப்பாகவும் வைக்கிறார். எங்கு குடை நிழல் (பாபா) இருக்கிறாரோ, அங்கு புயல் வந்து என்ன செய்யும்? சேவாதாரியாகவும் இருக்கிறார், ஆனால் கூடவே புத்தி நிறைந்தவர்களுக்கெல்லாம் புத்தியாக இருந்து, ஆத்மாக்களுக்கு 'டச்' (புரிய வைக்கவும்) செய்கிறார், இதன் மூலம் குழந்தைகளுக்கு பெயரும் கிடைக்கிறது, பாபா எளிதாக காரியத்தை செய்து விடுகிறார். அந்தளவு நேசத்துடனும் அன்புடனும் செல்லக் குழந்தைகளாக மாற்றி வளர்க்கிறார், அது எப்பொழுதும் பலரை ஊஞ்சலில் ஊஞ்சலாட்டுகிறது. பாதங்கள் கீழே வைக்கவிடுவதில்லை. சில சமயம் குஷி என்ற ஊஞ்சலில், சில சமயம் சுகம் என்ற ஊஞ்சலில், சில நேரங்களில் பாபாவின் மடி என்ற ஊஞ்சலில், ஆனந்தம், அன்பு, அமைதி என்ற ஊஞ்சலில் ஊஞ்சலாட்டிக் கொண்டே இருக்கிறார். ஊஞ்சாலாட்டுவது என்றாலே மகிழ்ச்சியில் முழ்குவது. இந்த அனைத்து பிராப்திகளும் இந்த வரமளிக்கும் நேரத்தின் சிறப்பாகும். இந்த சமயம் வரமளிப்பவரே படைப்பவராக இருக்கும் காரணத்தினால், பாபா மற்ற அனைத்து சம்மந்தங்களிலும் இருக்கும் காரணத்தினால் தந்தை கருணையுள்ளம் கொண்டவராக இருக்கிறார். ஒன்றுக்கு பல மடங்கு கொடுப்பதற்கான விதி இந்த நேரத்திற்கானது. கடைசியில் கணக்கு வழக்கு முடிக்கக் வைக்கக் கூடியவர்களின் தனது உதவியாளர்களை பயன்படுத்துகிறார். உதவியாளர்கள் யார் என்று தெரிந்திருக்கிறீர்கள் அல்லவா? பிறகு இந்த ஒன்றுக்கு பல மடங்கு என்ற கணக்கு (சலுகை) முடிந்து விடும். இப்பொழுது கருணையுள்ளமுடையவராக இருக்கிறார், பிறகு கணக்கு வழக்கு

ஆரம்பாகும். இந்த நேரம் மன்னிப்பும் கூட கிடைத்து விடுகிறது. கடுமையான தவறைக் கூட மன்னித்து, மேலும் உதவியாளராகி முன்னேற்றுகிறார். இதய பூர்வமாக (செய்த தவறுகளை) உணர்வது என்றாலே மன்னிப்பு கிடைத்து விடுகிறது. உலகத்தினர் மன்னிப்பு கேட்பது போன்று, இங்கு அந்த விதிமுறையில் மன்னிப்பு கேட்க வேண்டாம். தவறுகளை உணர்தல் என்ற விதிப்படி மன்னிப்பு கிடைக்கிறது. எனவே இதய பூர்வமாக உணர்வது, யாராவது சொல்வதினால், நேரத்திற்கு தகுந்தாற்போல் நடந்து கொள்வது, இந்த மாதிரி மன்னிப்பு கோருதல் ஏற்றுக் கொள்ளப்படாது. பல குழந்தைகள் தந்திரமாகவும் இருக்கிறார்கள். சூழ்நிலையை பார்த்து சொல்கிறார்கள் -இப்பொழுது உணர்ந்து விடலாம், மன்னிப்பு கேட்டு விடலாம், பிறகு பார்த்துக் கொள்ளலாம் ஆனால் பாபாவும் கூட ஞானம் நிறைந்தவராக இருக்கிறார், தெரிந்திருக்கிறார், பிறகும் புன்னகைத்துக் கொண்டே கண்டு கொள்ளாமல் விட்டு விடுகிறார், ஆனால் மன்னிப்பு கேட்பதை ஏற்றுக் கொள்வதில்லை. விதி இல்லாமல் (முறை தவறி) வெற்றி கிடைக்காது அல்லவா. விதி என்பது ஒரு அடியாக இருக்கிறது, மேலும் வெற்றி என்பது பல மடங்கு கிடைக்கிறது ஆனால் ஒரு அடி என்கின்ற விதி (நியமம்) யதார்த்தமானது அல்லவா. எனவே இந்த நேரத்தின் விசேஷத்தன்மை எந்தளவு இருக்கிறது, வரமளிக்கும் சமயம் எப்படி இருக்கிறது என்பதை பாபா விளக்கமாக கூறினார்.

வரமளிக்கும் நேரத்திலும் கூட ஆசிர்வாதங்கள் பெறவில்லை என்றால் பிறகு எப்பொழுது பெறுவீர்கள்? நேரம் முடிந்து விடும், மேலும் சமயத்திற்கு தகுந்தாற்போல் இந்த நேரத்தின் சிறப்பம்சங்களும் கூட அனைத்தும் முடிந்து விடும். ஆகையால் என்ன செய்ய வேண்டுமோ, எதைப் பெற வேண்டுமோ, என்ன ஆக வேண்டுமோ, அதை இப்பொழுது ஆசிர்வாதங்கள் பெறும் ரூபத்தில் பாபாவின் உதவியாளராகி சமயத்தில் செய்து விடுங்கள், அமைத்துக் கொள்ளுங்கள். பிறகு இந்த வைரமான வாய்ப்பு கிடைக்காது. நேரத்தின் சிறப்பம்சங்களை கேட்டீர்கள். சமயத்தின் விசேஷத் தன்மையின் ஆதாரத்தில் பிராமண வாழ்க்கையின் மூன்று சிறப்பம்சங்களை கூறினார் -இந்த மூன்றிலும் முழுமையானவர் ஆகுங்கள். உங்கள் அனைவரின் விசேஷமான சுலோகன் கூட இது தான் -யோகி ஆகுங்கள், தூய்மை ஆகுங்கள். ஞானம் நிறைந்தவராகுங்கள், கர்மாதீத் நிலையை அடையுங்கள், கூடவே செல்ல வேண்டுமென்றால்

சதா கூடவே இருக்கக் கூடியவர்கள் தான் கூடவே செல்வார்கள். யார் கூடவே இருப்பதில்லையோ, அவர்கள் எவ்வாறு கூடவே செல்வார்கள்? கூடவே செல்வதற்கு நேரத்தில் தயாராகவில்லை. ஏனெனில் பாபாவிற்கு சமமாக ஆவது என்றாலே தயாராக இருப்பது. சமமாக இருப்பது தான் கையோடு கை கோர்த்து இருப்பது மற்றும் கூடவே (துணை) இருப்பது. (சமமாக) இல்லையென்றால் என்னாகும்? முன்னும் பின்னும் பார்த்துக் கொண்டே இருந்தால், இவர்களை துணைவர் என்று சொல்ல முடியாது. துணை என்றால் கூடவே செல்ல வேண்டும். நெடுங்காலமாக துணையாக இருப்பது, துணை ஆகி உதவி செய்வது -இந்த நெடுங்காலத்தின் சம்ஸ்காரம் தான் துணையாக இருந்து கூடவே சேர்ந்து போவதாகும். இப்பொழுதும் கூட கூடவே இல்லையென்றால், இதிலிருந்து தொலைவில் இருப்பது நிரூபணமாகிறது. எனவே தொலைவாக இருப்பதின் சம்ஸ்காரம் கூடவே செல்லும் சமயமும் கூட காலதாமதமாவது போன்றே அனுபவமாகும். ஆகையால் இப்போதிருந்தே மூன்று விதமான விசேஷத் தன்மைகளை சோதனை செய்யுங்கள். எப்பொழுதும் கூடவே இருங்கள். சதா பாபாவிற்கு துணையாக இருந்து சேவை செய்யுங்கள். செய்விப்பவர் பாபா, நிமித்தமாக (கருவியாக) இருந்து நான் செய்கிறேன். ஆகையால் ஒருபொழுதும் சேவையில் குழப்பத்தில் வர மாட்டீர்கள். தனியாக உணரும் பொழுது நான் என்பதில் வந்து விடுகிறீர்கள், பிறகு மாயா என்ற பூனை மியாவ் -மியாவ் என்று சொல்கிறது. நீங்கள் நான் -நான் என்று சொல்கிறீர்கள், அது (மாயா) சொல்கிறது, நான் வருகிறேன், நான் வருகிறேன். மாயாவை பூனை என்று சொல்லப்படுகிறது அல்லவா. எனவே துணையாக இருந்து சேவை செய்யுங்கள். கர்மாதீத் ஆவதற்கான வரைமுறையும் மிகவும் ஆழமானதாக இருக்கிறது, அதைப் பற்றி பிறகு சொல்கிறேன்.

இன்று இந்த மூன்று விஷயங்களை மட்டும் சோதனை செய்ய வேண்டும். மேலும் காலத்தின் சிறப்பம்சங்களின் பயனை எந்தளவு பெற்றுள்ளீர்கள்? ஏனெனில் காலத்தின் முக்கியத்துவத்தை தெரிந்து கொள்வது என்றாலே மகான் ஆவது. தன்னைப் பற்றி தெரிந்து கொள்வது, தந்தையைப் பற்றி தெரிந்து கொள்வது -இவற்றிற்கு எந்தளவு முக்கியத்துவம் இருக்கிறதோ, அந்தளவு காலத்தை பற்றி தெரிந்து கொள்வதும் அவசியமாகும். ஆகவே புரிந்ததா, என்ன செய்ய வேண்டும்? பாப்தாதா அமர்ந்து முடிவுகளை சொல்லட்டுமா? -இதற்கு முன்பாக தன்னுடைய (ரிசல்ட்) முடிவுகளை தாமே

வெளியிடுங்கள். ஏனெனில் பாப்தாதா முடிவுகளை அறிவித்து விட்டால், முடிவுகளை கேட்டு விட்டு, இப்பொழுது முடிவுகள் முடிவாகி விட்டது, இப்பொழுது என்ன செய்யலாம்? இப்பொழுது எப்படி இருக்கிறேனோ, என்னவாக இருக்கிறேனோ, அது போதும் என்று யோசிப்பீர்கள். ஆகையால் பாப்தாதா இதை சோதனை செய்யுங்கள், இதை சோதனை செய்யுங்கள் என்று மீண்டும் சொல்கிறார். இவர் (பாபா) மறைமுகமாக முடிவுகளை சொல்லிக் கொண்டிருக்கிறார். ஏனெனில் முடிவுகளை சொல்லப்படும் மற்றும் கால அவகாசமும் கொடுக்கப்படும் என்று முன்னதாகவே சொல்லியிருக்கிறார். சில சமயம் 6-மாதங்கள், சில சமயம் 1-வருடம் என்று கொடுக்கப்படுகிறது. பிறகு 6-மாத அவகாசம் முடிந்து விட்டது, ஒன்றுமே சொல்லவில்லையே என்று பலர் நினைக்கிறார்கள் ஆனால் இப்பொழுது மீண்டும் சிறிது காலம் கருணையுள்ளம், வரமளிக்க வேண்டியிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறதல்லவா! இப்பொழுது சித்திரகுப்தன், மறைமுகமாக இருக்கிறார். பின்பு வெளிப்படுவார். ஆனாலும் கூட மீண்டும் பாபாவிற்கு இரக்கம் வருகிறது -மேலும் ஒரு வருடம் அவகாசம் கொடுத்து விடலாம், ஏனென்றால் குழந்தைகள் அல்லவா. பாபா நினைத்தால் என்ன செய்ய முடியாது? அனைவரை பற்றியும் ஒவ்வொரு விஷயங்களையும் அறிவிக்க முடியும். பலர் (பாபாவை) கள்ளம் கபடமற்றவர் (அப்பாவி) என்று புரிந்து கொள்கிறார்கள் அல்லவா. ஆனாலும் பல குழந்தைகள் இப்பொழுதும் கூட பாபாவை ஏமாளியாக ஆக்குகிறார்கள். கள்ளம் கபடமற்றவர் தான், ஆனாலும் மகா காலானாகவும் (காலனுக்கெல்லாம் காலன்) இருக்கிறார். இப்பொழுதும் அந்த ரூபத்தை குழந்தைகளுக்கு முன்னால் காட்டுவதில்லை. இல்லையென்றால் (பாபாவிற்கு) முன்னால் நிற்க முடியாது. ஆகையால் அனைத்தும் தெரிந்தும் கூட கள்ளம் கபடமற்றவராகவும், எதுவும் தெரியாதவராகவும் இருந்து விடுகிறார். இருப்பினும் யாருக்காக? குழந்தைகளை முழுமையாக்குவதற்காக. புரிந்ததா? பாப்தாதா இந்த அனைத்து காட்சிகளையும் பார்த்து புன்னகைக்கிறார். என்னவெல்லாம் விளையாட்டு காட்டுகிறார்கள் -அனைத்தையும் பார்க்கிறார். ஆகையால் பிராமண வாழ்க்கையின் சிறப்பம்சங்களை தன்னிடத்தில் சோதனை செய்யுங்கள், மேலும் தன்னை நிரம்பியவராக்குங்கள்.

நல்லது. நாலாபக்கமுள்ள அனைத்து நினைவு சொரூபமான ஆத்மா, ஞானம் நிறைந்த ஆத்மா, பாபாவிற்கு சமமாக கர்மாதீத் நிலையை அடையக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா தன்னை அறிந்து, நேரத்தின் முக்கியத்துவத்தை தெரிந்து கொண்டு மகான் ஆகக்கூடிய மகான் ஆத்மாக்களுக்கு, சதா பாபாவின் அனைத்து சம்மந்தங்களையும், பிராப்தியின் பலனை பெறக்கூடிய புத்திசாலியான பரந்த மனமுடைய, தூய்மையான புத்தியுடைய, சதா தூய்மை நிறைந்த குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு:** சதா தன்னை அனைத்து சக்திகளினால் நிறைவு பெற்று மாஸ்டர் சர்வ சக்திவான் ஆத்மாவாக அனுபவம் செய்கிறீர்களா? பாபா அனைத்து சக்தி களின் பொக்கிஷங்களின் ஆஸ்தியாக கொடுத்து விட்டார். எனவே அனைத்து சக்திகளும் தன்னுடைய சொத்து அதாவது பொக்கிஷமாகும். தனது பொக்கிஷத்தை கூடவே வைத்திருக்கிறீர்கள் அல்லவா. பாபா கொடுத்திருக்கிறார், குழந்தைகளுடையது ஆகி விட்டது. எனவே எந்தவொரு பொருள் தன்னுடையதாக இருக்கிறதோ, அது இயல்பாகவே நினைவில் இருக்கிறது. அது என்ன பொருளாக இருந்தாலும் அழியக் கூடியதாக இருக்கிறது, ஆனால் இந்த ஆஸ்தி மற்றும் சக்திகள் அழிவற்றதாகும். இன்று சொத்து கிடைக்கிறது, நாளையே அழிந்து விடுகிறது, அப்படி அல்ல. இன்று பொக்கிஷமாக இருக்கிறது, நாளை யாராவது எரித்து விடுவார்கள், கொள்ளையடித்து விடுவார்கள், -அப்படிப்பட்ட பொக்கிஷமாக இல்லை. எந்தளவு செலவு செய்கிறீர்களோ, அந்தளவு அதிகரித்துக் கொண்டேயிருக்கும். எந்தளவு ஞானத்தின் பொக்கிஷங்களை பகிர்ந்தளிக்கிறீர்களோ, அந்தளவு அதிகரிக்கிறது. அனைத்து சாதனங்களும் கூட தானாகவே கிடைத்து விடுகிறது. எனவே சதா காலத்திற்காக ஆஸ்தியின் அதிகாரி ஆகி விட்டீர்கள் -இந்த குஷி இருக்கிறதல்லவா. ஆஸ்தியும் எந்தளவு உயர்ந்தாக இருக்கிறது. எந்த பொருளும் கிடைக்கவில்லை என்று இல்லை, அனைத்து பிராப்திகளும் இருக்கிறது. நல்லது.

**அமிர்தவேளை விடைபெறும் நேரத்தில் தாதிகளுடன் மற்றும் தாதி நிர்மல் சாந்தா அவர்களுடன் பாப்தாதாவின் சந்திப்பு:** மகாரதிகளின் ஒவ்வொரு அடியிலும் சேவை அடங்கியிருக்கிறது. பேசிக்

கொண்டிருந்தாலும் பேசவில்லையென்றாலும் ஒவ்வொரு செயலிலும், ஒவ்வொரு நடவடிக்கையிலும் சேவை இருக்கிறது. சேவை இல்லாமல் ஒரு நொடியும் இருக்க முடியாது. மனதின் மூலமாக சேவை செய்வது, வார்த்தைகளின் மூலம் சேவை செய்வது, சம்மந்தம் மற்றும் தொடர்பின் மூலம் சேவை செய்வது -ஆனால் நிரந்தர யோகியாகவும் இருக்கிறீர்கள், நிரந்தர சேவாதாரியாகவும் இருக்கிறீர்கள். நல்லது, யார் மதுபனில் பொக்கிஷத்தை சேமித்துள்ளீர்கள், அதை அனைவருக்கும் பகிர்ந்தளிப்பதற்காக செல்கிறீர்கள். மகாரதிகளின் இருப்பிடத்தில் இருந்தாலும் கூட பல ஆத்மாக்களுக்கு ஸ்தூலமாக ஆதரவு கிடைக்கிறது. எப்படி பாபா குடை நிழலாக இருக்கிறாரோ, அதேபோல பாபாவிற்கு சமமாக குழந்தைகளும் கூட குடை நிழலாக இருக்கிறார்கள். அனைவரும் பார்த்து எவ்வளவு குஷி அடைகிறார்கள். எனவே அனைத்து மகாரதிகளுக்கும் இந்த ஆசீர்வாதம் இருக்கிறது. கண்களின் (திருஷ்டி) வரதானம், நெற்றியின் (ஆத்மாவின்) வரதானம், எத்தனை வரதானம் இருக்கிறது. காரியங்கள் செய்யக் கூடிய கருவிகளாக இருக்கக் கூடிய கர்மேந்திரியங்களுக்கும் வரதானம் இருக்கிறது. கண்களின் மூலம் பார்க்கிறீர்கள் என்றால் என்ன புரிந்திருக்கிறீர்கள்? பாபாவின் பார்வை இந்த ஆத்மாக்களின் கண்கள் மூலம் அனுபவம் ஆகிறது என்று அனைவரும் புரிந்திருக்கிறார்கள். அது கண்களுக்குண்டான ஆசீர்வாதம் ஆகி விட்டது. இந்த வாய் வரதானமாக இருக்கிறது, இந்த முகம் வரதானமாக இருக் கிறது, ஒவ்வொரு அடிக்கும் வரதானமாக இருக்கிறது. எத்தனை ஆசீர்வாதங்கள், எண்ணி விட்டீர்களா? மற்றவர்களுக்கு ஆசீர்வாதம் அளிக்கிறீர்கள், ஆனால் உங்களுக்கு தொடக்கத்திருந்தே ஆசீர்வாதம் கிடைத்து கொண்டேயிருக்கிறது. நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் ஆசீர்வாதங்கள் நிரம்பியிருக்கிறது. லக்ஷ்மியை காட்டுகிறார்கள் அல்லவா -அவர்களுடைய கைகளிலிருந்து செல்வம் அனைவருக்கும் கிடைத்து கொண்டேயிருக்கிறது. சிறிது காலத்திற்காக மட்டும் அல்ல, சதா காலத்திற்கும் செல்வத்தின் தேவி ஆகி செல்வம் கொடுத்துக் கொண்டேயிருக்கிறார்கள். எனவே இது யாருடைய சித்திரமாக இருக்கிறது?

எனவே எத்தனை வரதானங்கள் இருக்கிறது. பாபா சொல்கிறார் -எந்த வரதானங்களையும் வைத்துக் கொள்வதில்லை. பிறகு என்ன கொடுக்கிறார்? வரதானங்களின் மூலம் அலங்கரித்துக்

கொண்டிருக்கிறீர்கள் சொல்லப்படுகிறதல்லவா -கையை சுழற்றினால் ஆசீர்வாதம் கிடைத்து விடுகிறது. எனவே பாபா சமமானவர் ஆகுக என்ற வரதானம் கொடுத்து விட்டார், இதனால் அனைத்து வரதானம் கிடைத்து விடுகிறது. பாபா அவ்யக்தம் ஆனவுடன் அனைவருக்கும் சமமானவர் ஆகுக என்ற ஆசீர்வாதம் கொடுத்து விட்டார் அல்லவா. முன்னால் இருப்பவர்களுக்கு மட்டுமல்ல, அனைவருக்கும் கொடுக்கிறார். சூட்சம ரூபத்தில் அனைவருக்கும் மகாவீரர் ஆகிய பாபாவிற்கு முன்னால் இருந்தால் வரதானம் கிடைத்து விடுகிறது. நல்லது.

உங்களுடன் கூடவே மற்ற அனைவருக்கும் ஆசீர்வாதம் கூடுதலான மருந்தாகவே இருக்கிறது. ஆகையால் மிகப் பெரிய நோய் கூட சிறியதாகி விடுகிறது. (மாயா) வெளி தோற்றத்தை மட்டும் காட்டுகிறது, ஆனால் தனது தந்திரத்தை காட்ட இயலாது. இது மிகப் பெரிய சூலத்திற்குப் (ஈட்டி) பதிலாக முள்ளாக மாறி விடுகிறது. மற்றபடி பாபாவின் கை மற்றும் துணை எப்பொழுதும் இருக்கிறது. ஒவ்வொரு அடியிலும், ஒவ்வொரு வார்த்தையிலும் பாபாவின் ஆசீர்வாதம் -மருந்து கிடைத்து கொண்டேயிருக்கிறது. ஆகையால் கவலையற்றவராக இருங்கள். (இதிலிருந்து எப்பொழுது விடுபட்டு இருப்பீர்கள்?) அப்படி விடுபட்டு விட்டால், சூட்சமவதனத்திற்கு சென்று விடுங்கள். இதனால் மற்றவர்களுக்கும் கூட சக்தி கிடைக்கிறது. உங்கள் அனைவருக்கும் இந்த வியாதிகள் கூட சேவை செய்கிறது. எனவே நோய் என்பது நோயே இல்லை. சேவையின் சாதனமாக (கருவியாக) இருக்கிறது. இல்லையென்றால் மற்ற அனைவரும் இவ்வாறு புரிந்து கொள்கிறார்கள் -இவர்களுக்கு உதவியும் கிடைக்கிறது, இவர்களுக்கு அனுபவமும் சிறிதளவும் இருக்கிறது ஆனால் அனுபவம் நிறைந்தவர்களாக்கி மற்றவர்களுக்கு தைரியம் கொடுப்பதற்கான சேவைக்காக சிறிய பாதையாக காட்டப்படுகிறது. இல்லையென்றால் அனைவரும் மனமுடைந்து போய் விடுவார்கள். நீங்கள் அனைவரும் எடுத்துக்காட்டாக இருந்து உங்கள் மூலம் சாரத்தை அறிந்தால் அனைத்தும் முடிந்து போய்விடும். எல்லை கோடு மட்டும் தான் இருக்கிறது. நல்லது.

**வெளிநாட்டை சேர்ந்தவர்களுடன்:** மனதார ஒவ்வொரு ஆத்மாவிற்காகவும் சுபபாவணை வைக்க வேண்டும் -இது தான் மனதார நன்றி கூறுவது. பாபாவின் ஒவ்வொரு அடியிலும் ஒவ்வொரு

குழந்தைகளுக்கும் நன்றி கிடைத்துக் கொண்டேயிருக்கிறது. சங்கமயுகத்தில் அனைத்து ஆத்மாக்களுக்காக எப்பொழுதும் நன்றி உணர்வுடன் இருப்பதற்கான காலம் என்று சங்கமயுகம் சொல்லப்படுகிறது. சங்கமயுகம் முழுவதுமே நன்றியின் நாள் என்று சொல்லப்படுகிறது. சதா ஒருவர் மற்றவருக்காக நல்ல விருப்பம், நல்ல உணர்வு கொடுத்துக் கொண்டேயிருங்கள் மற்றும் பாபாவும் கூட கொடுத்துக் கொண்டேயிருக்கிறார். நல்லது.

**வரதானம்: குஷியின் கூடவே சக்திகளையும் தாரணை செய்து தடைகளை கடந்துச் செல்லக்கூடிய தடைகளை வென்றவர் ஆகுக!**

எந்த குழந்தைகள் சேமிப்பு செய்ய அறிந்துள்ளார்களோ, அவர்கள் சக்திசாலி ஆகிறார்கள். ஒருவேளை அவ்வப்பொழுது சம்பாதிக்கிறார்கள், அவ்வப்பொழுது பகிர்ந்தளிக்கிறார்கள், தன்னிடத்தில் சேமித்துக் கொள்ளவில்லை என்றால் சக்திகளும் இருக்காது. பகிர்ந்தளிப்பதினாலோ அல்லது தானம் கொடுப்பதினாலோ மட்டும் குஷி ஏற்படுகிறது. குஷியின் கூடவே சக்திகளும் இருந்தால் எளிதாகவே தடைகளை கடந்து தடைகளை வென்றவர் ஆகி விடலாம். பிறகு எந்தவொரு தடையும் தந்தையிடம் ஈடுபாட்டில் லயித்திருப்பதை தொல்லை செய்வதில்லை, ஆகையால் முகத்தின் மூலம் குஷியின் ஜொலிப்பு தென்படுகிறது, அதுபோல சக்திகளின் ஜொலிப்பும் கூட தென்படும்.

**சுலோகன்: சூழ்நிலைகளினால் பயப்படுவதற்கு பதிலாக அதை பாடம் எனப் புரிந்துகொண்டு பாடத்தை கற்றுக்கொள்ளுங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 18.12.1987 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# கர்மாதீத் நிலையின் ஆழமான விளக்கம்!

இன்று விதேகி (தேகமற்ற) பாப்தாதா தங்களுடைய விதேகி ஸ்திதியில் நிலைத்து இருக்கக்கூடிய சிரேஷ்டமான குழந்தைகளைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். ஒவ்வொரு பிராமண ஆத்மாவும் விதேகி ஆவதற்கான மற்றும் கர்மாதீத் ஆவதற்கான சிரேஷ்ட இலட்சியம் வைத்து சம்பூரண நிலைக்கு அருகாமையில் வந்துகொண்டு இருக்கின்றார்கள். யார் யார் எவ்வளவு அருகாமையில் வந்துள்ளார்கள், தந்தை பிரம்மாவை எந்தளவு பின்பற்றி இருக்கின்றார்கள் மற்றும் இப்பொழுதும் பின்பற்றிக் கொண்டு இருக்கின்றார்கள் என்று பாப்தாதா குழந்தைகளுடைய கர்மாதீத் விதேகி ஸ்திதியின் நெருக்கமான நிலையைப் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். தந்தைக்கு அருகாமையில் வருவதும் சமமாக ஆவதுமே அனைவருக்கும் இலட்சியமாக உள்ளது ஆனால், நடை முறையில் வரிசைக்கிரமமாக ஆகி விடுகின்றனர். இந்த தேகத்தில் இருந்து கொண்டே விதேகி அதாவது கர்மாதீத் ஆவதற்கான உதாரணமாக சாகாரத்தில் தந்தை பிரம்மாவைப் பார்த்திருக்கின்றீர்கள். எனவே, கர்மாதீத் ஆவதற்கான விசேஷத்தன்மை என்ன? எதுவரை இந்த தேகம் உள்ளதோ, கர்மேந்திரியங்களுடன் இந்தக் கர்மசேத்திரத்தில் நடிப்பு நடித்துக் கொண்டு இருக்கின்றீர்களோ, அதுவரை கர்மம் (செயல்) செய்யாமல் ஒரு நொடி கூட இருக்க முடியாது. கர்மாதீத் என்றால் கர்மம் செய்தாலும் கர்மத்தின் பந்தனத்தில் இருந்து கடந்த நிலை என்று அர்த்தம். ஒன்று பந்தனம் மற்றும் இரண்டாவது சம்பந்தம். கர்மேந்திரியங்கள் மூலம் கர்மத்தின் சம்பந்தத்தில் வருவது என்பது வேறு, கர்மத்தின் பந்தனத்தில் மாட்டிக் கொள்வதென்பது வேறு. கர்மபந்தனமானது கர்மத்தின் எல்லைக்குட்பட்ட பலனுக்கு வசமாக்கி விடுகிறது. வசமாகுதல் என்ற வார்த்தையே ஏதாவது ஒன்றினுடைய கட்டுப்பாட்டில் வந்து விடுவது என்பதை நிரூபிக் கிறது. கட்டுப் பாட்டில் வரக்கூடியவர்கள் பூதத்திற்கு சமமாக அலைந்து திரிபவர்களாக ஆகி

விடுகின்றார்கள். அசுத்த ஆத்மா பூதம் ஆகி எப்பொழுது பிரவேசம் செய்கிறதோ, அப்பொழுது மனித ஆத்மாவின் நிலை என்னவாகிறது? தன் வசத்தை இழந்து அலைந்து திரிவார்கள். இவ்வாறு கர்மத்திற்கு வசமானவர்கள் என்றால் கர்மத்தின் அழியக்கூடிய பலனுடைய இச்சைக்கு வசமானவர்கள் என்று அர்த்தம். எனவே, கர்மம் கூட பந்தனத்தில் கட்டுப்படுத்தி புத்தி மூலம் அலைய வைக்கிறது. எது தன்னையும் துன்பப்படுத்துகிறது மற்றும் பிறரையும் துன்பப்படுத்துகிறதோ, அதையே கர்மபந்தனம் என்று கூறப்படுகிறது. கர்மாதீத் என்றால் கர்மத்திற்கு வசமாகுபவர்கள் அல்ல, ஆனால், எஜமானன் ஆகி, அதிகாரி ஆகி கர்மேந்திரியங்களின் சம்பந்தத்தில் வருவது, அழியக்கூடிய விருப்பத்தில் இருந்து விடுபட்டு கர்மேந்திரியங்கள் மூலம் கர்மம் செய்விப்பது என்பதாகும். எஜமான ராகிய ஆத்மாவை கர்மம் தனது அடிமை ஆக்கக் கூடாது, ஆனால், ஆத்மா அதிகாரி ஆகி கர்மம் செய்விக்க வேண்டும். கர்மேந்திரியங்கள் தன்னுடைய கவர்ச்சியில் கவர்ச்சிக் கின்றன அதாவது ஆத்மாக்கள் கர்மத்திற்கு வசமாகி விடுகின்றனர், அடிமை ஆகி விடுகின்றனர், பந்தனத்தில் கட்டப்பட்டு விடுகின்றனர். கர்மாதீத் என்றால் இவற்றிலிருந்து விடுபட்ட நிலை என்று அர்த்தம். கண்ணின் வேலை பார்ப்பது, ஆனால், பார்க்கும் கர்மத்தை செய்விப்பது யார்? கண் கர்மம் செய்யக்கூடியது மற்றும் ஆத்மா கர்மம் செய்விக்கக் கூடியதாகும். எனவே, செய்விக்கக் கூடிய ஆத்மா, செய்யக்கூடிய கர்மேந் திரியத்திற்கு வசமாகு வது என்பதையே கர்ம பந்தனம் என்று கூறப்படுகிறது. செய்விப்பவராகி கர்மம் செய்வியுங்கள், இதையே கர்மத்தின் சம்பந்தத்தில் வருவது என்று கூறப்படுகிறது. கர்மாதீத் ஆத்மா சம்பந்தத்தில் வரும் ஆனால், பந்தனத்தில் வராது. அவ்வப்பொழுது, பேச விரும்பவில்லை ஆனால் பேசி விட்டேன், செய்ய விரும்பவில்லை ஆனால் செய்து விட்டேன் என்று கூறுகின்றீர்கள் அல்லவா. இப்பேற்பட்டவர்களை கர்மத்தின் பந்தனத்திற்கு வசமான ஆத்மா என்று சொல்லப்படுகிறது. இத்தகைய ஆத்மாவை கர்மாதீத் ஸ்திதிக்கு நெருக்கத்தில் இருப்பவர்கள் என்று கூறலாமா? அல்லது தொலைவில் இருப்பவர்கள் என்று கூறலாமா?

கர்மாதீத் என்றால் தேகம், தேகத்தின் சம்பந்தம், பொருள், லௌகீகம் மற்றும் அலௌகீகம் ஆகிய இரண்டு சம்பந்தங்களில் இருந்தும்,

பந்தனத்தில் இருந்தும் விடுபட்டவர்கள் ஆவார்கள். தேகத்தின் சம்பந்தம், தேகத்தின் உறவுகளுடைய சம்பந்தம் என்ற வார்த்தை பேச்சு வழக்கில் வருகிறது, ஆனால், தேகத்தில் அல்லது சம்பந்தத்தில் ஒருவேளை அடிமைத்தனம் உள்ளது என்றால் சம்பந்தம் கூட பந்தனம் ஆகி விடுகிறது. சம்பந்தம் என்ற வார்த்தை பற்றற்ற மற்றும் அன்பான நிலையை அனுபவம் செய்விக்கக் கூடியது. இன்றைய அனைத்து ஆத்மாக்களின் சம்பந்தம் பந்தனமாக மாறி விட்டது. எப்பொழுது சம்பந்தமானது பந்தனமாக மாறி விடுகிறதோ, அப்பொழுது பந்தனம் சதா தனக்கு ஏதாவது ஏதாவது தொந்தரவு செய்து கொண்டே இருக்கும், துக்கத்தின் அலையை அனுபவம் செய்விக்கும், துயரத்தின் அனுபவம் செய்விக்கும். அழியக்கூடிய பிராப்திகள் கிடைத்திருக்கும்போதிலும் அல்ப காலத்திற்காக அந்த பிராப்திகளின் சுகத்தை அனுபவம் செய்வார்கள். சுகத்தின் கூடவே அவ்வப்போது பிராப்தி சொரூபத்தின் அனுபவம் ஏற்படும், அவ்வப்போது பிராப்திகள் கிடைத்தாலும் அபிராப்தி நிலையின் அனுபவம் ஏற்படும். நிறைந்த நிலையில் இருந்தபோதிலும் தன்னை காலியாக அனுபவம் செய்வார்கள். அனைத்தும் இருந்தபோதிலும் இன்னும் வேண்டும் என்ற அனுபவம் செய்து கொண்டே இருப்பார்கள் மற்றும் எங்கு வேண்டும் வேண்டும் என்பது உள்ளதோ, அங்கு ஒருபொழுதும் திருப்தி இருக்காது. மனமும் திருப்தியாக இருப்பது, உடலும் திருப்தியாக இருப்பது, பிறரும் திருப்தியாக இருப்பது என்பது சதா காலமும் இருக்க முடியாது. ஏதாவது ஏதாவது விசயத்தில் தன் மீது கோபம் அல்லது பிறர் மீது கோபம் மனம் விரும்பாமலேயே வருகிறது. ஏனெனில், கோபம் கொள்வது என்றால் இரகசியத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்று அர்த்தம். அதிகாரியாகி கர்மேந்திரியங்கள் மூலம் கர்மம் செய்விக்கக் கூடிய இரகசியத்தைப் புரிந்து கொள்ளவில்லை எனில் கோபம் தான் வரும் அல்லவா. கர்மாதீத் நிலையில் இருக்கும் ஆத்மாக்கள் ஒருபொழுதும் கோபப் பட மாட்டார்கள். ஏனெனில், அவர்கள் கர்ம சம்பந்தம் மற்றும் கர்மபந்தனத்தின் இரகசியத்தை அறிந்துள்ளார்கள். கர்மம் செய்யுங்கள் ஆனால், வசமாகி செய்யாதீர்கள், அதிகாரியாகி எஜமானன் ஆகி செய்யுங்கள். கர்மாதீத் என்றால் தனது பழைய கர்மங்களின் கணக்கு வழக்கினுடைய பந்தனத்திலிருந்து கூட விடுபட்ட நிலை என்பதாகும். பழைய கர்மங்களின் கணக்கு வழக்கினுடைய பலன் சொரூபமாக உடல் நோய் வருகிறது, தனது மனதின் சம்ஸ்காரங்களால் பிற ஆத்மாக்களின்

சம்ஸ்காரங்களோடு மோதல் ஏற்படுகிறது ஆனால், கர்மாதீத் நிலை அடைந்தவர்கள் கர்மவினைப் பயனுக்கு வசமாகாமல் எஜமானன் ஆகி அதை முடிவடையச் செய்வார்கள். கர்மயோகி ஆகி கர்ம வினைப் பயனை முடிவடையச் செய்வது என்பது கர்மாதீத் ஆவதன் அடையாள மாகும். யோகத்தின் மூலம் கர்ம வினைப் பயனை, புன்னகைத்துக் கொண்டே கழுமரத்திலிருந்து முள்ளாக ஆக்கி எரித்து விட வேண்டும் அதாவது கர்மவினைப் பயனை முடித்து விட வேண்டும். வியாதியின் ரூபமாக ஆகக்கூடாது. யார் வியாதியின் ரூபமாக ஆகி விடுகின்றார்களோ, அவர்கள் சுயம் சதா வியாதியைப் பற்றியே வர்ணனை செய்து கொண்டே இருப்பார்கள். மனதிலும் வர்ணனை செய்வார்கள், வாயினாலும் வர்ணனை செய்வார்கள். இரண்டாவது விசயம் -வியாதியின் ரூபமாக ஆன காரணத்தினால் தானும் துன்பப்படுவார்கள் மற்றும் பிறரையும் தொந்தரவு செய்வார்கள். அவர்கள் கூச்சலிடுவார்கள் மற்றும் கர்மாதீத் நிலையில் இருப்பவர்கள் அதை சமாளிப்பார்கள். சிலருக்கு கொஞ்சம் வலி ஏற்பட்டாலும் அதிகமாகக் கூச்சலிடுவார்கள் மற்றும் சிலர் அதிக வலி இருந்தாலும் சமாளித்துக் கொள்வார்கள். கர்மாதீத் நிலையில் இருப்பவர்கள் தேகத்தின் எஜமானனாக இருக்கும் காரணத்தினால் கர்ம வினைப் பயன் இருந்தபோதிலும் கூட விடுபட்டவராக ஆகுவதற்கான பயிற்சியாளராக இருப்பார்கள். இடை இடையில் அசரீரி ஸ்திதியின் அனுபவமானது வியாதியின் உணர்விலிருந்து கடந்து செல்ல வைத்து விடுகிறது. எவ்வாறு அறிவியல் சாதனத்தின் மூலம் மூர்ச்சை அடையச் செய்து விடுகின்றனர், அப்பொழுது வலி இருந்தாலும் அதை மறந்து விடுகிறார்கள், வலியை உணர்வதில்லை, ஏனெனில், மருந்தின் போதை இருக்கும். கர்மாதீத் நிலையில் இருப்பவர்கள் அசரீரி ஆவதற்கான பயிற்சியாளராக இருக்கும் காரணத்தினால் இடை இடையில் இந்த ஆன்மிக ஊசி (இன்ஜெக்சன்) போடுவது போன்று ஆகிறது. இந்தக் காரணத்தினால் கழுமரத்திலிருந்து முள் போன்று அனுபவம் ஆகிறது. மற்றுமொரு விசயம் -தந்தையைப் பின்பற்றுபவராக இருக்கும் காரணத்தினால் விசேஷமாக கட்டளைப்படி நடப்பவராக இருப்பதற்கான பிரத்யட்ச பலனாக தந்தையிடமிருந்து விசேஷமாக உள்ளத்தின் ஆசீர்வாதங்கள் கிடைக்கின்றன. ஒன்று -தன்னுடைய அசரீரி ஆவதற்கான பயிற்சி, இரண்டாவது -கட்டளைப்படி நடப்பவராக ஆவதற்கான பிரத்யட்ச பலனாகக் கிடைக்கும் தந்தையின் ஆசீர்வாதங்கள் ஆகிய இவை இரண்டும் அந்த வியாதி அதாவது கர்ம

வினைப் பயனை கழுமரத்திலிருந்து முள்ளாக ஆக்கி விடுகிறது. கர்மாதீத் நிலை அடைந்த சிரேஷ்ட ஆத்மாக்கள் கர்ம வினைப் பயனை கர்மயோக ஸ்திதியில் மாற்றி விடுவார்கள். இவ்வாறு அனுபவம் ஆகிறதா? அல்லது மிகப் பெரிய விசயம் என நினைக்கின்றீர்களா? சுலபமானதா? அல்லது கடினமானதா? சிறிய விசயத்தைப் பெரிய விசயமாக ஆக்குவது அல்லது பெரிய விசயத்தை சிறிய விசயமாக ஆக்குவது என்பது தன்னுடைய ஸ்திதியின் ஆதாரத்தில் உள்ளது. துக்கப்படுவது அல்லது தன்னுடைய அதிகாரி நிலையின் பெருமையில் இருப்பதென்பது தன்னிடமே உள்ளது. என்ன இப்படி ஆகி விட்டது என்றோ அல்லது என்ன நடந்ததோ, அது நல்லது தான் நடந்தது என்றோ புரிந்து கொள்வது தன் கையில் உள்ளது. இந்த நம்பிக்கையானது தீயதைக் கூட நல்லதாக மாற்ற முடியும். ஏனெனில், கணக்கு வழக்கு முடிவடையும் காரணத்தினால் மற்றும் அவ்வப்போது நடைமுறைத் தேர்வு நாடகத்தின் அனுசாரமாக வரும் காரணத்தினால் சில விசயங்கள் நல்ல ரூபத்தில் முன்னால் வரும் மற்றும் சில நேரம் நல்ல ரூபமாக இருந்தபோதிலும் வெளியில் தென்படும் ரூபத்தில் நஷ்டமாகத் தோன்றும். இதையே, இந்த ரூபத்தில் சரியாக நடக்கவில்லை என்று கூறுகிறீர்கள். விசயங்கள் வரும், இப்பொழுது வரை கூட அத்தகைய விசயங்கள் வந்துகொண்டே இருக்கின்றன மற்றும் வந்து கொண்டே இருக்கும் ஆனால், நஷ்டத்தின் திரைக்குள்ளே இலாபம் மறைந்திருக்கிறது. வெளித்திரை நஷ்டமானதாகத் தென்படும். சிறிது நேரத்திற்கு பொறுமையான மனோநிலையோடு, சகித்துக்கொள்ளும் மனோநிலையோடு உள்நோக்குமுகம் உடைய வராகிப் பாருங்கள், அப்பொழுது வெளித்திரைக்குள் என்ன மறைந்திருக்கிறதோ, அது உங்களுக்குத் தென்படும், மேலோட்டமாகப் பார்த்தாலும் பார்க்க மாட்டீர்கள். தூய அன்னப்பறவை ஆவீர்கள் அல்லவா? அந்த அன்னப்பறவையால் கூழாங்கல் மற்றும் இரத்தினத்தை தனித்தனியாகப் பிரிக்க முடிகிறது. தூய அன்னப்பறவைகள் போன்று இருப்பவர்கள் மறைந்திருக்கும் இலாபத்தை எடுத்துக் கொள்வார்கள், நஷ்டத்திற்கு நடுவில் இலாபத்தைத் தேடுவார்கள். புரிந்ததா? விரைவில் பயந்து விடுகிறீர்கள் அல்லவா. இதனால் என்ன ஆகிறது? நல்லது என்ன சிந்திக்கின்றீர்களோ, அதுவும் பயத்தின் காரணத்தினால் மாறி விடுகிறது. எனவே, பயப்படாதீர்கள். கர்மத்தைப் பார்த்து கர்மத்தின் பந்தனத்தில் மாட்டிக் கொள்ளாதீர்கள். என்ன ஆனது, எப்படி ஆனது, அப்படி

ஆகியிருக்கக்கூடாது, எனக்கு மட்டும் ஏன் நடக்கிறது, ஒருவேளை என்னுடைய பாக்கியமே இதுதானோ என்று தோன்றுகிறது -இந்தக் கயிறுகளால் கட்டிக்கொள்கிறீர்கள். இந்த சங்கல்பம் கூட கயிறுகள் ஆகும். ஆகையினால், கர்மத்தின் பந்தனத்தில் வந்து விடுகிறீர்கள். வீண் எண்ணங்களே கர்மபந்தனத்தின் சூட்சுமக் கயிறுகள் ஆகும். என்ன நடக்கிறதோ, அது நல்லதே நடக்கிறது, நானும் நன்றாக இருக்கின்றேன், தந்தையும் நல்லவர், நாடகமும் நன்றாக உள்ளது என்று கர்மாதீத் ஆத்மா கூறுவார். இது பந்தனத்தைத் துண்டிக்கக்கூடிய கத்தரிக்கோலாக வேலை செய்கிறது. பந்தனம் அறுபட்டு விட்டால் கர்மாதீத் ஆகி விட்டீர்கள் என்பதாகும் அல்லவா. கல்யாணகாரி தந்தையினுடைய குழந்தைகளாக இருக்கும் காரணத்தினால் சங்கமயுகத்தின் ஒவ்வொரு வினாடியும் கல்யாணகாரி (நன்மை நிறைந்தது) ஆகும். உங்களுடைய தொழிலே ஒவ்வொரு வினாடியும் நன்மை செய்வதாகும், உங்களுடைய சேவையே நன்மை செய்வதாகும். பிராமணர்களுடைய தொழிலே விஷ்வ பரிவர்த்தக் (உலகை மாற்றுபவர்), விஷ்வகல்யாணி (உலகத்திற்கு நன்மை செய்பவர்) என்பதாகும். அத்தகைய நிச்சயபுத்தி உடைய ஆத்மாவிற்கு ஒவ்வொரு நொடியும் உறுதியாக நன்மை நிறைந்ததாக இருக்கும். புரிந்ததா?

கர்மாதீத் என்பதன் விளக்கம் நிறைய உள்ளது. எவ்வாறு கர்மங்களின் நிலை (பலன்) ஆழமானதோ, அவ்வாறு கர்மாதீத் நிலையின் விளக்கமும் மிகவும் மகான் தன்மை உடையதாகும். மேலும், கர்மாதீத் ஆக வேண்டியது அவசியம் ஆகும். கர்மாதீத் ஆகாமல் (தந்தையுடன்) இணைந்து செல்ல முடியாது. தந்தையுடன் யார் செல்வார்கள்? யார் சமமாக இருப்பார்களோ, அவர்களே செல்வார்கள். கர்மாதீத நிலையை எவ்வாறு பிராப்தியாக அடைந்தார் என்று தந்தை பிரம்மாவைப் பார்த்திருக்கிறீர்கள். கர்மாதீத் ஆகுவதற்காக பின்பற்றுவது என்றால் இணைந்து செல்வதற்குத் தகுதியானவர் ஆவதாகும். இன்று இவ்வளவு மட்டும் சொல்கின்றார்கள், இவற்றை சோதனை செய்ய வேண்டும், பிறகு, இன்னும் சொல்வார்கள். நல்லது.

சர்வ அதிகாரி ஸ்திதியில் நிலைத்திருக்கக் கூடிய, கர்மபந்தனத்தை கர்மசம்பந்தமாக மாற்றக் கூடிய, கர்மவினைப் பயனை கர்மயோக ஸ்திதியில் கழுமரத்தை முள்ளாக மாற்றக்கூடிய, ஒவ்வொரு வினாடியும்

# 1987 அவ்யக்த முரளி

நன்மை செய்யக்கூடிய, சதா தந்தை பிரம்மாவிற்கு சமமாக கர்மாதீத் நிலையின் நெருக்கத்தை அனுபவம் செய்யக்கூடிய, அத்தகைய விசேஷ ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடனான அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு: 1**. சதா தன்னை, சக்திசாலியான தந்தையினுடைய சக்திசாலியான குழந்தையாக அனுபவம் செய்கின்றீர்களா? அவ்வப்போது சக்திசாலி நிலை, அவ்வப்போது பலவீன மான நிலை -இவ்வாறு இல்லை தானே? சக்திசாலி என்றால் சதா வெற்றியாளர். சக்திசாலியாக இருப்பவர் ஒரு பொழுதும் தோல்வி அடைய முடியாது. கனவில் கூட தோல்வி அடைய முடியாது. கனவு, சங்கல்பம் மற்றும் கர்மம் ஆகிய அனைத்திலும் சதா வெற்றியாளராக இருப்பதையே சக்திசாலி நிலை என்று கூறுகின்றார்கள்.அத்தகைய சக்திசாலியாக இருக்கின்றீர்களா? ஏனெனில், யார் இப்போதைய வெற்றியாளராக இருக்கின்றார்களோ, அவர்களே நீண்டகாலத்திற்கு வெற்றிமாலையில் மகிமைக்கும் பூஜைக்கும் தகுதியானவர்களாக ஆகின்றார்கள். ஒருவேளை, நீண்ட கால வெற்றியாளராக இல்லையென்றால், சக்தி இல்லை என்றால் நீண்ட கால மகிமைக்கும் பூஜைக்கும் தகுதியானவர் ஆகவில்லை என்று அர்த்தம். யார் சதா மற்றும் நீண்ட கால வெற்றியாளர்களோ, அவர்களே நீண்ட காலத்திற்கு வெற்றிமாலையில் மகிமைக்கும் பூஜைக்கும் தகுதியானவர்கள் ஆகின்றார்கள். மேலும், யார் அவ்வப்பொழுது வெற்றியாளர்களாக இருக்கின்றார்களோ, அவர்கள் அவ்வப்போது அதாவது 16000-மணி மாலையில் வருவார்கள். எனவே. நீண்ட காலத்திற்கான கணக்கும் உள்ளது மற்றும் சதா காலத்திற்கான கணக்கும் உள்ளது. 16000-மணி மாலை அனைத்து கோவில்களிலும் இருப்பதில்லை, ஏதோ சில இடங்களில் இருக்கிறது.

2. அனைவரும் தங்களை இந்த விசாலமான நாடகத்தில் ஹீரோ (கதாநாயகன்) கதாபாத்திரம் ஏற்று நடிக்கும் ஆத்மாக்கள் என்று அனுபவம் செய்கின்றீர்களா? உங்கள் அனைவருக்கும் ஹீரோ பாகம் கிடைத்துள்ளது. ஏன் ஹீரோ நடிகர் ஆகியிருக்கிறீர்கள்? ஏனெனில், உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தை யார் ஜீரோவாக (பூஜ்யம் -புள்ளி) இருக்கின்றாரோ, அவருடன் பாகம் ஏற்று நடிப்பவர்கள் ஆவீர்கள். நீங்கள் கூட ஜீரோ அதாவது புள்ளி ஆவீர்கள் ஆனால், நீங்கள் சரீரம் தரித்தவர்கள்

ஆகின்றீர்கள் மற்றும் தந்தை எப்பொழுதும் ஜீரோவாக இருக்கின்றார். எனவே, ஜீரோவுடன் நடிப்பு நடிக்கக் கூடிய ஹீரோ நடிகர் நான் என்ற இந்த நினைவு இருந்தது என்றால் சதா சரியான நடிப்பு நடிப்பீர்கள், தானாகவே கவனம் ஏற்படும். எவ்வாறு எல்லைக்குட்பட்ட நாடகத் தில் ஹீரோ நடிகருக்கு எவ்வளவு கவனம் இருக்கிறது! அனைவரையும் விட பெரியதிலும் பெரிய ஹீரோ நடிப்பு உங்கள் அனைவருடையது ஆகும். ஆஹா, முழு விஷ்வத்தின் ஆத்மாக்களும் அடிக்கடி மறுபடியும் வாருங்கள் என்று சொல்லும்படியானது என்னுடைய ஹீரோ நடிப்பு -சதா இந்த போதை மற்றும் குஷியில் இருங்கள். துவாபர யுகத்தில் இருந்து கீர்த்தனை என்ன பாடுகிறார்களோ, அது உங்களுடைய இந்த சமயத்தின் ஹீரோ நடிப்பினுடைய நினைவுச்சின்னம் ஆகும். எவ்வளவு நினைவுச்சின்னம் உருவாக்கப்பட்டுள்ளது! நீங்கள் சுயம் ஹீரோ ஆகியிருக்கின்றீர்கள், ஆகையினால், உங்களுக்குப் பின்னர் இப்பொழுது வரை கூட உங்களது மகிமை இருந்து வருகிறது. கடைசி பிறவியில் கூட தன்னுடைய மகிமையைக் கேட்டுக் கொண்டே இருக்கின்றீர்கள். கோபி வல்லபருக்கும் கூட மகிமை உள்ளது, கோபாலருக் கும் மகிமை உள்ளது, கோபிகைகளுக்கும் மகிமை உள்ளது. தந்தைக்கு சிவன் ரூபத்தில் மகிமை உள்ளது எனில், குழந்தைகளுக்கு சக்திகள் ரூபத்தில் மகிமை உள்ளது. எனவே, சதா ஹீரோ நடிப்பு நடிக்கக் கூடிய சிரேஷ்ட ஆத்மாக்கள் ஆவோம் என்ற இந்த நினைவில் குஷியில் முன்னேறிக் கொண்டே செல்லுங்கள்.

**குமாரர்களுடன்**: 1) சகஜயோகி குமாரர் ஆவீர்கள் அல்லவா? நிரந்தர யோகி குமார், கர்மயோகி குமார் ஏனெனில், குமாரர் எந்தளவு தன்னை முன்னேற்ற விரும்புகிறீர்களோ, அந்தளவு முன்னேற்ற முடியும். ஏன்? பந்தனமற்றவர்களாக இருக்கின்றீர்கள், சுமை கிடையாது மற்றும் பொறுப்பு கிடையாது, ஆகையினால், இலகுவாக இருக்கின்றீர்கள். இலகுவாக இருக்கும் காரணத்தினால் எவ்வளவு மேலே (உயர்வாக) செல்ல விரும்புகிறீர்களோ, செல்ல முடியும். நிரந்தர யோகி, சகஜயோகி -இதுவே உயர்ந்த ஸ்திதியாகும், இதுவே உயரச் செல்வதாகும். அவ்வாறு உயர்ந்த ஸ்திதி உடையவர்கள் வெற்றிக் குமாரர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். வெற்றியாளர்களாக இருக்கிறீர்களா அல்லது அவ்வப்போது தோல்வி, அவ்வப்போது வெற்றி என்ற இந்த விளையாட்டு விளையாடுவதில்லை தானே? ஒருவேளை, அவ்வப்போது தோல்வி,

அவ்வப்போது வெற்றியின் சம்ஸ்காரம் இருக்குமானால் ஏக்ரஸ் ஸ்திதியின் அனுபவம் ஏற்படாது. ஒருவருடைய அன்பில் மூழ்கியிருக்கும் அனுபவம் செய்யமுடியாது.

2) சதா ஒவ்வொரு கர்மத்தில் அதிசயம் செய்யக்கூடிய குமாரர்கள் ஆவீர்கள் அல்லவா. எந்தவொரு கர்மமும் சாதாரணமாக இருக்கக் கூடாது, அதிசயமானதாக இருக்க வேண்டும். எவ்வாறு தந்தையின் மகிமை பாடுகிறீர்கள், தந்தையின் அதிசயத்தைப் பாடுகிறீர்கள். அது போன்று குமாரர் என்றால் ஒவ்வொரு கர்மத்திலும் அதிசயத்தைக் காண்பிக்கக் கூடியவர்கள். சில நேரம் ஒரு மாதிரி, சில நேரம் வேறொரு மாதிரி இருப்பவர்கள் அல்ல. எங்கேயாவது யாராவது இழுத்தார்கள் என்றால் அங்கே சென்று விடுவது -இப்பேற்பட்டவர்கள் அல்ல. உருண்டு விழக்கூடிய குவளை அல்ல. சில நேரம் ஒரு இடத்தில் உருண்டு விழுவது, சில நேரம் இன்னொரு இடத்தில் உருண்டு விழுவது -இப்பேற்பட்டவர்கள் அல்ல. அதிசயம் செய்யக் கூடியவர்கள் ஆகுங்கள். அழிவற்றவர்கள், அழிவற்றதை உருவாக்கக் கூடியவர்கள் -இத்தகைய சவால் விடக் கூடியவர்கள் ஆகுங்கள். ஒவ்வொரு குமாரரும் நடமாடும் ஃபரிஷ்தா ஆக வேண்டும், தொலைவில் இருந்தே ஃபரிஷ்தா நிலையின் ஜொலிப்பின் அனுபவம் ஏற்பட வேண்டும். இத்தகைய அதிசயம் செய்து காண்பியுங்கள். வார்த்தைகள் மூலம் செய்யப்படும் சேவையின் நிகழ்ச்சிகள் அனேகம் உருவாக்கி விட்டீர்கள், அதை மேலும் செய்வீர்கள், ஆனால், தற்சமயம் பிரத்யட்ச சான்றை (ஃப்ரூப்) விரும்புகின்றார்கள். பிரத்யட்ச சான்றே அனைத்தையும் விட சிரேஷ்டமான சான்றாகும். இத்தனை பேரும் பிரத்யட்ச சான்றாக ஆகி விட்டால் சேவை எளிதாக நடந்தேறி விடும். ஃபரிஷ்தா நிலையில் சேவை செய்யுங்கள், அப்பொழுது உழைப்பு குறைவாகவும் வெற்றி அதிகமாகவும் கிடைக்கும். வார்த்தை களால் மட்டும் சேவை செய்யாதீர்கள், ஆனால், மனம், பேச்சு மற்றும் கர்மம் ஆகிய மூன்றையும் இணைத்து சேவை செய்யுங்கள். இதையே அதிசயம் என்று கூறப்படுகிறது. நல்லது.

**விடைபெறும் சமயம்:** நாலாபுறங்களிலும் உள்ள தீவிர முயற்சியாளர்கள், சதா சேவாதாரிகள், சதா டபுள் லைட் ஆகி பிறரையும் டபுள் லைட் ஆக்கக்கூடிய, வெற்றியை அதிகாரமாக அடையக் கூடிய, சதா தந்தைக்கு சமமாக முன்னேறக்கூடிய மற்றும் பிறரையும்

முன்னேற்றக்கூடிய, அத்தகைய சதா ஊக்க உற்சாகத்தில் இருக்கக் கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சினேகி குழந்தைகளுக்கு பாப்தாதாவின் மிக மிக அன்புடன் கூடிய அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம்.

**வரதானம்: அடி அடியில் கவனம் வைத்து பலகோடி மடங்கு வருமானத்தை சேமிப்பு செய்யக்கூடிய பதம்பதி ஆகுக!**

தந்தை குழந்தைகளுக்கு மிக உயர்ந்த நிலையில் இருப்பதற்கான எச்சரிக்கை கொடுத்துக் கொண்டு இருக்கின்றார். ஆகையினால், இப்பொழுது சிறிதளவு கூட கவனக்குறைவாக இருப்பதற்கான சமயம் அல்ல. இப்பொழுது அடி அடியிலும் எச்சரிக்கை வைத்து, ஒரு அடியில் பல கோடிகளின் வருமானம் செய்து பதம்பதி (கோடீஸ்வரர்) ஆகுங்கள். உங்களுக்கு பத்மாபதம் பாக்கியசாலி என்ற பெயர் உள்ளது என்றால் அதற் கேற்றவாறு செயலும் செய்ய வேண்டும். ஒரு அடி கூட கோடி வருமானம் இல்லாமல் இருந்து விடக் கூடாது. எனவே, மிகவும் யோசித்து புரிந்து ஸ்ரீமத் அனுசாரம் ஒவ்வொரு அடியும் எடுத்து வையுங்கள். ஸ்ரீமத்தில் மன வழியைக் கலப்படம் செய்யாதீர்கள்.

**சுலோகன்: மனதை கட்டளைப்படி நடத்துங்கள், அப்பொழுது மன்மனாபவ என்ற ஸ்திதி தானாக ஏற்படும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 23.12.1987 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சிந்தனை சக்தி மற்றும் மூழ்கிய நிலை!

இன்று இரட்டைக் கிரீடதாரியாக, இரட்டை ராஜ்ய அதிகாரியாக ஆக்குபவராகிய தந்தை விசேஷ மாகத் தம்முடைய இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளுடன் சந்திப்பதற்காக வந்துள்ளார். பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார் -நாலாபுறமும் உள்ள இரட்டை வெளிநாட்டு குழந்தைகள் அன்பான, சகயோகி, சதா சேவையின் ஊக்கம்-உற்சாகத்துடன் அன்பு மற்றும் சேவை, இரண்டிலும் முன்னேறிச் சென்று கொண்டே இருக்கின்றனர். ஒவ்வொருவர் மனதிலும் இந்த உற்சாகம் உள்ளது -நாம் பாப்தாதாவைப் பிரத்தியட்சம் செய்வதற்கான கொடியைப் பறக்க விட வேண்டும். ஒவ்வொரு நாளும் உற்சாகத்தின் காரணத்தால் சங்கமயுகத்தை உற்சவத்தைப் போல் அனுபவம் செய்து கொண்டு, பறந்து சென்று கொண்டே இருக்கின்றனர். ஏனென்றால் எங்கே ஒவ்வொரு சமயமும் உற்சாகம் உள்ளதோ, பாப்தாதாவுடன் நினைவின் மூலம் சந்திப்பைக் கொண்டாடுவதற்கானதாக இருந்தாலும் சரி, சேவை மூலம் பிரத்தியட்ச பலனை அடைவதற்கான அனுபவத்தின் உற்சாகத்தில் என்றாலும் சரி -இரண்டு உற்சாகங்களும் ஒவ்வொரு கணம், ஒவ்வொரு நாளும் உற்சாகத்தின் அனுபவம் செய்விக்கிறார். உலகத்தின் மனிதர்கள் விசேஷ உற்சவ நாட்களில் உற்சாகத்தை அனுபவம் செய்கின்றனர் ஆனால் பிராமண ஆத்மாக்களுக்கு சங்கமயுகம் தான் உற்சாகத்தின் யுகமாகும். ஒவ்வொரு நாளும் புதிய உற்சாகம், ஊக்கம் -உல்லாசம் தானாகவே அனுபவம் ஆகிக் கொண்டே இருக்கிறது. ஆகவே சங்கம யுகத்தின் ஒவ்வொரு நாளும் குஷியின் சத்துணவை அருந்தி, பாபா மூலம் கிடைக்கும் அநேக பிராப்திகளின் குணங்களைப் பாடிக் கொண்டு டபுள் லைட் ஆகி, சதா உற்சாகத்தில் நடனமாடிக் கொண்டே இருக்கின்றனர். உற்சவத்தில் என்ன செய்கின்றனர்? சாப்பிடுகின்றனர், பாடுகின்றனர் மற்றும் நடனமாடுகின்றனர். இப்போது வெளிநாடுகளில் விசேஷமாகக் கிறிஸ்துமஸ் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் செய்து

கொண்டுள்ளனர். சாப்பிடுவது, பாடுவது, வாத்தியம் இசைப்பது மற்றும் நடனமாடுவது -இதைத் தான் செய்வார்கள் இல்லையா? மற்றும் சந்திப்பைக் கொண்டாடுவார்கள். நீங்கள் ஒவ்வொரு நாளும் என்ன செய்கிறீர்கள்? அமிர்தவேளை தொடங்கி இரவு வரை இதே வேலையைத் தான் செய்கிறீர்கள் இல்லையா? சேவையும் செய்கிறீர்கள், சேவை என்றால் ஞான நடனம் ஆடுகிறீர்கள். பாப்தாதாவின் குணங்களின் பாடலை ஆத்மாக்களுக்குச் சொல்கிறீர்கள். ஆக, தினந்தோறும் உற்சவம் கொண்டாடுகிறீர்கள் இல்லையா? உண்மையான பிராமணர்கள் இந்தக் காரியத்தைச் செய்யாத நாள் என்று எதுவும் இருக்காது. சங்கமயுகத்தின் ஒவ்வொரு நாளும் உற்சாகம் நிறைந்த உற்சவத்தின் நாள். அவர்களோ, ஓரிரு நாள் மட்டுமே கொண்டாடுகின்றனர் ஆனால் பாப்தாதா பிராமணக் குழந்தைகள் அனைவரையும் அந்த மாதிரி சிரேஷ்டமாக ஆக்குகிறார், அத்தகைய பொன்னான பரிசைத் தருகிறார், அதனால் சதா காலத்திற்கும் சம்பன்னம், சதா நிறைவானவராக ஆகி விடுகிறீர்கள். அந்த மக்கள் கிறிஸ்துமஸ் நாளுக்காகக் காத்திருக்கின்றனர் -கிறிஸ்துமஸ் ஃபாதர் வந்து இன்று பரிசு தருவார். அவர்கள் கிறிஸ்துமஸ் ஃபாதரை நினைவு செய்கின்றனர். நீங்கள் கிஸ்மிஸ் போன்று இனிமையானவராக ஆக்குபவராகிய தந்தையை நினைவு செய்கிறீர்கள். அவ்வளவு பரிசுகள் கிடைக்கின்றன; 21-பிறவிகளுக்கு அந்தப் பரிசுகள் தொடர்ந்து கொண்டிருக்கும். அந்த அழியக்கூடிய பரிசு கொஞ்ச நேரத்துக்கு இருந்து முடிந்து போகும். இந்த அழியாத பரிசு அநேகப் பிறவிகளுக்கு உங்களோடு இருக்கும். எப்படி அவர்கள் கிறிஸ்துமஸ் மரத்தை அலங்கரிக்கின்றனர். பாப்தாதா இந்த எல்லையற்ற உலக மரத்தில், ஜொலிக்கின்ற நட்சத்திரங்களாகிய உங்களுக்கு, சத்யுக சிரேஷ்ட பூமியின் நட்சத்திரங்களுக்கு அவிநாசி லைட் மைட் சொரூபத்தில் நிலைத்திருப்பதற்கான அனுபவம் செய்விக்கிறார். அவர்களும் நட்சத்திரத்தை ஏற்றுக் கொள்கின்றனர். நட்சத்திரங்களால் அலங்கரிக்கின்றனர். நட்சத்திரங்களாகிய உங்களது நினைவுச்சின்னத்தை ஸ்தூலமாக ஜொலிக்கின்ற தீபங்களின் ரூபத்தில் காட்டுகின்றனர். அல்லது தீபங்களால் அலங்கரிக்கின்றனர் அல்லது மலர்களால் அலங்கரிக்கின்றனர். இது யாருடைய நினைவுச்சின்னம்? ஆன்மிக நறுமணமுள்ள மலர்கள் -பிராமண ஆத்மாக்களின் நினைவுச்சின்னமாகும். இந்த உற்சவங்கள் அனைத்தும் சங்கமயுக பிராமணர்களாகிய உங்களின் உற்சாகம் நிறைந்த உற்சவங்களின்

நினைவுச்சின்னங்களாகும். சங்கமயுகத்தில் கல்ப விருட்சத்தின் ஜொலிக்கின்ற நட்சத்திரங்கள், ஆன்மிக ரோஜாக்கள் பிராமணக் குழந்தைகளாகிய நீங்கள் தாம். உங்களுடைய நினைவுச்சின்னத்தை நீங்களே பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். இரட்டை ரூபத்தின் நினைவுச்சின்னங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். சங்கமயுக ரூபத்தின் நினைவுச்சின்னம் பல வித ரூபங்களில், ரீதியில் காண்பிக்கின்றனர் மற்றும் இரண்டாவது வருங்கால தேவ பதவியின் நினைவுச்சின்னங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். தனது ரூபத்தின் நினைவுச்சின்னத்தை மட்டும் பார்க்கிறீர்கள் என்பதில்லை, ஆனால் சிரேஷ்ட ஆத்மாக்களாகிய உங்களது சிரேஷ்ட கர்மத்திற்கும் நினைவுச்சின்னம் உள்ளது. தந்தை மற்றும் குழந்தைகளின் சரித்திரத்திற்கும் கூட நினைவுச்சின்னம் உள்ளது. ஆக, தனது நினைவுச்சின்னத்தைப் பார்த்து சகஜமாக நினைவு வருகிறது இல்லையா -அதாவது ஒவ்வொரு கல்பமும் நாம் இத்தகைய விசேஷ ஆத்மா ஆகிறோம். ஆகியிருந்தோம், ஆகியிருக்கிறோம், இனி மேலும் ஆகிக் கொண்டே இருப்போம்.

பாப்தாதா அந்த மாதிரி சதா நினைவில் இருக்கக் கூடிய, யாருடைய நினைவுச்சின்னம் இப்போது உள்ளதோ, அப்படிப்பட்ட குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறார். நினைவில் இருப்பவர்களின் நினைவுச்சின்னம் இது. நினைவின் மகத்துவமாகிய நினைவுச்சின்னத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆக, இரட்டை வெளிநாட்டினராகிய குழந்தைகளுக்குத் தங்களின் நினைவுச்சின்னத்தைப் பார்த்துக் குஷி ஏற்படுகிறது இல்லையா? பாப்தாதாவுக்கு இரட்டை வெளி நாட்டினரைப் பார்த்து இரட்டைக் குஷி ஏற்படுகிறது. ஏன்? ஒன்று, உலகின் ஒவ்வொரு மூலையிலும் கல்பத்திற்கு முன் பிரிந்து சென்று விட்ட, காணாமல் போன குழந்தைகள் மீண்டும் கிடைத்து விட்டனர். காணாமல் போன பொருள் மீண்டும் கிடைத்து விட்டால் மகிழ்ச்சி ஏற்படுகிறது இல்லையா? பாபாவோ குழந்தைகள் அனைவரையும் பார்த்து மகிழ்ச்சியடைகிறார், பாரதவாசிகளாக இருந்தாலும் சரி, வெளிநாட்டினராக இருந்தாலும் சரி. இரண்டாவது விஷயம், வெளிநாட்டுக் குழந்தைகளினுடையது -பல வித தர்மங்கள், பல வித வழக்கங்களின் திரைக்குள் இருந்த போதிலும், இந்தத் திரையை சகஜமாக விலக்கி விட்டு, பாபாவுடையவர்களாக ஆகி விட்டனர். இது

திரையை விலக்குவதற்கான விசேஷதா. திரைக்குள் இருந்தும் கூட பாபாவை அறிந்து கொள்வதற்கான விசேஷதா இரட்டை வெளிநாட்டினருடையது. ஆக, இரட்டைக் குஷி ஆகி விட்டது இல்லையா? இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளின் நிச்சயம் மற்றும் நஷா அலௌகிகமானதாகும். பாப்தாதா இன்று நாலாபுறம் உள்ள இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு, விசேஷமாக சதா உற்சாகத்தில் இருக்கக் கூடிய, ஒவ்வொரு நாளும் உற்சவம் கொண்டாடக் கூடிய, ஒவ்வொரு நாளும் வரதாதா பாபா மூலம் விசேஷ வரதானம் அல்லது விசேஷ ஆசிர்வாதம் பெறுவதற்கான வைரப் பரிசைப் பெரிய மனதோடு, பெரிய நாளுக்காக (கிறிஸ்துமஸ்) அளித்துக் கொண்டிருக்கிறார் -சதா உற்சவம் நிறைந்த வாழ்க்கை ஆகுக, சதா சகஜமாகப் பறக்கும் கலையின் அனுபவி சிரேஷ்ட வாழ்க்கை ஆகுக. நல்லது.

இன்று பாப்தாதா வதனத்தில் மூன்று விதமான குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். மூன்று விதமாக என்ன பார்த்தார்? 1. வர்ணனை செய்பவர் 2. சிந்தனை செய்பவர் 3. அனுபவத்தில் மூழ்கியிருப்பவர். இந்த மூன்று விதமான குழந்தைகளை, இந்த தேசம் மற்றும் வெளிநாடுகளின் அனைத்துக் குழந்தைகளுக்குள்ளும் பார்த்தார். வர்ணனை செய்யக்கூடிய அநேக பிராமணர்களைப் பார்த்தார். சிந்தனை செய்யக்கூடியவர்களை இடைப்பட்ட எண்ணிக்கையில் பார்த்தார். அனுபவத்தில் மூழ்கி இருப்பவர்களை, அதிலும் குறைவான எண்ணிக்கையில் பார்த்தார். வர்ணனை செய்வது மிகவும் சுலபம். ஏனென்றால் 63-பிறவிகளின் சம்ஸ்காரமாக உள்ளது. ஒன்று கேட்பது, மற்றொன்று கேட்டதை வர்ணனை செய்வது. இதைச் செய்தே வந்திருக்கிறீர்கள். பக்தி மார்க்கம் என்பது, கீர்த்தனை மூலம் அல்லது பிரார்த்தனை மூலம் கேட்டதை வர்ணனை செய்வது. அதோடு கூடவே தேக அபிமானத்தில் வருகிற காரணத்தால் வீணாகப் பேசுவது என்பது பக்கா சம்ஸ்காரமாக ஆகி விட்டுள்ளது. எங்கே வீண் பேச்சு உள்ளதோ, அங்கே விஸ்தாரம் என்பது தானாகவே ஆகி விடுகிறது. சுய சிந்தனை, உள்முக நோக்கு உள்ளவராக ஆக்குகிறது. பரசிந்தனை, வர்ணனை செய்வதற்கான விஸ்தாரத்தில் கொண்டு செல்கிறது. ஆக, வர்ணனை செய்வதற்கான சம்ஸ்காரம் அநேகப் பிறவிகளாக இருக்கிற காரணத்தால் பிராமண வாழ்க்கையிலும் கூட அஞ்ஞானத்திலிருந்து மாறி ஞானத்திலோ வந்து விடுகின்றனர். ஞானத்தை வர்ணனை

செய்வதில் சீக்கிரத்தில் திறமைசாலி ஆகி விடுகின்றனர். வர்ணனை செய்பவர்கள் வர்ணனை செய்யும் போது வரை குஷி அல்லது சக்தியை அனுபவம் செய்கின்றனர் ஆனால் சதா காலத்துக்கும் இல்லை. வாயின் மூலம் ஞான வள்ளல் பற்றி வர்ணனை செய்கிற காரணத்தால் சக்தி மற்றும் குஷி -இந்த ஞானத்தின் பிரத்தியட்ச பலன் கிடைக்கிறது ஆனால் சக்திசாலி சொரூபம், சதா குஷி சொரூபமாக ஆக முடிவதில்லை. பிறகும் கூட ஞான ரத்தினங்கள், நேரடி பகவான் வாக்கு என்பதால் அவர்களின் சக்திக்கேற்றவாறு பிராப்தி சொரூபம் ஆகி விடுகின்றனர்.

சிந்தனை செய்பவர்கள் சதா என்ன கேட்கிறார்களோ, அதைச் சிந்தனை செய்து, தானும் ஒவ்வொரு ஞான பாயின்ட் சொரூபம் ஆகின்றனர். மனன் (சிந்தனை) சக்தி உள்ளவர்கள் குண சொரூபம், சக்தி சொரூபம், ஞான சொரூபம் மற்றும் நினைவு சொரூபமாகத் தானாகவே ஆகி விடுகின்றனர். ஏனென்றால் சிந்தனை செய்வது என்றால் புத்தி மூலம் ஞானத்தின் உணவைச் செரிக்கச் செய்வ தாகும். இது போல் வர்ணனை செய்வோருக்கும் கூட ஞானம் வாய் வரை மட்டுமே இருந்து விடுகிறது ஆனால் அவர்கள் புத்தி மூலம் மனன் சக்தி மூலம் தாரணை செய்து சக்திசாலி ஆகி விடுகின்றனர். மனன் சக்தி உள்ளவர்கள் அனைத்து விஷயங்களின் சக்திசாலி ஆத்மாக்களாக ஆகின்றனர். மனன் சக்தி உள்ளவர்கள் சதா சுய சிந்தனையில் பிஸியாக இருப்பதால் மாயாவின் அநேக விக்னங்களில் இருந்து சகஜமாக விடுபட்டு விடுகின்றனர். ஏனென்றால் புத்தி பிஸியாக உள்ளது. ஆக, மாயாவும் பிஸியாக இருப்பதைப் பார்த்து விலகிச் சென்று விடுகிறது. இரண்டாவது விஷயம் -மனன் செய்வதால் சக்திசாலி ஆவதன் காரணத்தால் சுய ஸ்திதி எந்த ஒரு பரிஸ்திதியிலும் தோல்வியடையச் செய்யாது. ஆக, மனன் சக்தி உள்ளவர் உள்முகநோக்கு உள்ளவராக சதா சுகமாக இருப்பார். சமய பிரமாணம் சக்திகளைக் காரியத்தில் கொண்டு வருவதற்கான சக்தி இருக்கும் காரணத்தால், எங்கே சக்தி உள்ளதோ, அங்கே மாயாவிடமிருந்து விடுபட்ட நிலை. ஆகவே அத்தகைய குழந்தைகள் வெற்றியாளர் ஆத்மாக்களின் பட்டியலில் வருகின்றனர்.

மூன்றாவது குழந்தைகள் -சதா சர்வ அனுபவங்களில் மூழ்கி இருப்பவர்கள். சிந்தனை செய்வது இரண்டாவது நிலையாகும் ஆனால் சிந்தனை செய்து கொண்டே மூழ்கிய நிலையில் இருப்பது முதல்

நிலையாகும். மூழ்கி இருப்பவர்கள் தாமாகவே நிர்விக்னமாக இருக்கவே செய்கிறார்கள் ஆனால் அதைக் காட்டிலும் உயர்ந்த விக்ன விநாசக் ஸ்திதி அமைகின்றது. அதாவது சுயம் நிர்விக்னமாகி மற்றவர்களுக்கும் விக்ன -விநாசக் ஆகி சகயோகி ஆகின்றனர். அனுபவம் என்பது அனைத்திலும் பெரியதிலும் பெரிய அத்தாரிட்டி ஆகும். அனுபவத்தின் அத்தாரிட்டி மூலம் பாப் -சமான் மாஸ்டர் அல்மைட்டி அத்தாரிட்டி ஸ்திதியை அனுபவம் செய்கின்றனர். மூழ்கிய அவஸ்தா உள்ளவர்கள் தங்கள் அனுபவத்தின் ஆதாரத்தினால் மற்றவர்களை நிர்விக்னமாக்குவதற்கான உதாரணம் ஆகின்றனர். ஏனென்றால் பலவீனமான ஆத்மாக்கள் அவர்களின் அனுபவத்தைப் பார்த்துத் தாங்களும் தைரியம் வைக்கின்றனர். உற்சாகத்தில் வருகின்றனர் -நாமும் இது போல் ஆக முடியும் என்று. மூழ்கிய நிலையில் இருக்கும் ஆத்மாக்கள் பாப் -சமான் இருக்கும் காரணத்தால் தாமாகவே எல்லையற்ற வைராக்கிய விருத்தி உள்ளவராக, எல்லையற்ற சேவாதாரியாக மற்றும் எல்லையற்ற பிராப்தியின் நஷாவில் இருப்பவராக சகஜமாகவே ஆகி விடுகின்றனர். மூழ்கிய நிலையில் இருக்கும் ஆத்மாக்கள் சதா கர்மாதீத், அதாவது கர்ம பந்தனங்களில் இருந்து விடுபட்டவராக மற்றும் சதா பாபாவுக்குப் பிரியமானவராக இருப்பார்கள்.

மூழ்கிய ஆத்மா சதா திருப்தியான ஆத்மா, சந்துஷ்ட ஆத்மா, சம்பன்ன ஆத்மா, சம்பூர்ண நிலையின் மிக சமீபமான ஆத்மா ஆவார். சதா அனுபவத்தின் அத்தாரிட்டியின் காரணத்தால் சகஜ யோகி, இயல் பான யோகி, அத்தகைய சிரேஷ்ட வாழ்க்கை, விலகிய மற்றும் அன்பான வாழ்க்கையை அனுபவம் செய்கின்றனர். அவர்களின் வாயிலிருந்து அனுபவத்தின் வார்த்தைகள் வருவதால் மனதில் நிறைத்துக் கொள்கின்றனர் மற்றும் வர்ணனை செய்பவர்களின் வார்த்தை புத்தி வரை அமர்கின்றது. ஆக, புரிந்ததா, முதல் ஸ்டேஜ் என்ன என்று? சிந்தனை செய்பவர்களும் வெற்றியாளர், ஆனால் சகஜமான மற்றும் சதா என்பதில் வித்தியாசம் உள்ளது. மூழ்கிய நிலையில் இருப்பவர் சதா பாபாவின் நினைவில் மூழ்கி இருப்பார்கள். ஆகவே அனுபவத்தை அதிகப் படுத்துங்கள் ஆனால் முதலில் வர்ணனையிலிருந்து சிந்தனைக்கு வாருங்கள். சிந்தனை சக்தியானது மூழ்கிய ஸ்திதியை சகஜமாகவே அடையச் செய்கிறது. சிந்தனை செய்து -செய்தே அனுபவம்

தானாகவே அதிகரித்துக் கொண்டே செல்லும். சிந்தனை செய்வதற்கான அப்பியாசம் செய்ய வேண்டியது மிகவும் அவசிய மாகும். ஆகவே சிந்தனை சக்தியை அதிகப் படுத்துங்கள். கேட்பது மற்றும் சொல்வதோ மிகவும் சுலபம். சிந்தனை சக்தி உள்ளவர்கள், மூழ்கி இருப்பவர்கள் சதா பூஜைக்குரியவராகவும், வர்ணனை செய்பவர்கள் வெறுமனே மகிமைக்குரியவராகவும் உள்ளனர். எனவே சதா தன்னை மகிமை -பூஜைக்குரியவராக ஆக்கிக் கொள்ளுங்கள். புரிந்ததா? சேவாதாரிகளோ மூவரும் தாம் ஆனால் சேவையின் பிரபாவம் நம்பர்வார் உள்ளது. நம்பர்வாரில் வரக் கூடாது. நம்பர் ஒன் ஆக வேண்டும். நல்லது.

சதா தன்னை இரட்டை ராஜ்ய அதிகாரி, இரட்டைக் கிரீடதாரி சிரேஷ்ட ஆத்மா என அனுபவம் செய்யக் கூடிய, சதா சிந்தனை சக்தி மூலம் மூழ்கிய ஸ்திதியை அனுபவம் செய்யக் கூடிய, சதா பாப்சமான் அனுபவி, மாஸ்டர் அல்மைட்டி அத்தாரிட்டி ஸ்திதியின் அனுபவி மூர்த்தி ஆகக் கூடியவர், சதா தனது சக்திசாலி பூஜைக்குரிய ஸ்திதியை அடையக்கூடிய -அத்தகைய நம்பர் ஒன், சதா வெற்றியாளர் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் நமஸ்தே.

**வெளிநாட்டு சகோதர -சகோதரிகளின் குரூப்புடன்:** வெளிநாட்டில் இருந்தாலும் சுயதேசம், சுயசொரூ பத்தின் ஸ்மிருதியில் சதா இருப்பவர் தாம் இல்லையா? எப்படி பாபா பரந்தாமத்திலிருந்து இந்தப் பழைய, வேறு தேசத்தில் பிரவேசமாகி வருகிறார். அது போல் நீங்கள் அனைவரும் கூட பரந்தாம நிவாசி சிரேஷ்ட ஆத்மாக்கள், சகஜயோகி ஆத்மாக்கள் அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்கள் -நாமும் கூட பரந்தாம நிவாசி ஆத்மாக்கள் இந்த சாகார சரீரத்தில் பிரவேசமாகி உலகத்தின் காரியத்தில் நிமித்தமாக இருக்கிறோமா? நீங்களும் கூட அவதரித்திருக்கும் பிராமண ஆத்மாக்கள் தாம். சூத்திர வாழ்க்கை முடிந்தது. இப்போது சுத்த பிராமண ஆத்மாக்கள் நீங்கள். பிராமணர்கள் ஒரு போதும் அபவித்திரமாக இருக்க மாட்டார்கள். பிராமணர் என்றாலே பவித்திரமானவர்கள். ஆக, நீங்கள் பிராமணர்களா, கலப்படமா? இரண்டு படகுகளில் கால் வைப்பவர்கள் இல்லையே? ஒரே படகில் இரண்டு கால்களையும் வைப்பவர்கள். ஆக, பிராமண ஆத்மாக்கள் அவதரித்த ஆத்மாக்கள். அப்படியும் எந்த ஆத்மாக்கள் அவதாரமாகி வந்திருக்கிறார்களோ, அவதார ரூபத்தால் புகழ் பெற்றிருக்கிறார்களோ,

அவர்கள் எதற்காக வருகிறார்கள்? சிரேஷ்ட மாற்றத்தைச் செய்வதற்காக. ஆக, அவதாரங்களாகிய உங்கள் வேலை என்ன? உலக மாற்றம் செய்வது, இரவைப் பகலாக்குவது, நரகத்தை சொர்க்கமாக்குவது. இவ்வளவு பெரிய காரியத்தைச் செய்வதற்காக அவதரித்திருக்கிறீர்கள், அதாவது பிராமணர் ஆகியிருக்கிறீர்கள். இந்தக் காரியம் நினைவிருக்கிறது இல்லையா? லௌகிக சேவை கூட எதற்காகச் செய்கிறீர்கள்? வருமானம் கூட எங்கே ஈடுபடுத்துவதற்காக? சென்டர் திறப்பதற்காகச் செய்கிறீர்களா அல்லது லௌகிகப் பரிவாரத்திற்காகச் செய்கிறீர்களா? வருமானம் ஈட்டுவதும் கூட ஈஸ்வரிய காரியத்தில் ஈடுபடுத்துவதற்காகத் தான் என்ற லட்சியம் உள்ளதென்றால் லௌகிகக் காரியம் செய்தாலும் சேவை தான் நினைவிருக்கிறது இல்லையா? மற்றும் யாருடைய வழிகாட்டுதல்படி செய்கிறீர்கள்? இப்போது பாபாவின் ஸ்ரீமத்படி செய்கிறீர்கள் என்றால் யாருடைய ஸ்ரீமத்தோ அவர் தாம் நினைவுக்கு வருவார் இல்லையா? அதனால் பாப்தாதா சொல்கிறார், லௌகிகக் காரியம் செய்தாலும் கூட சதா தன்னை டிரஸ்டி என உணருங்கள். டிரஸ்டியாகவும் இருக்கிறீர்கள், வாரிசாகவும் இருக்கிறீர்கள். எங்கே இருந்தாலும் சரி, மனதால் சமர்ப்பணமாகி இருக்கிறீர்கள் என்றால் வாரிசாக இருக்கிறீர்கள். வாரிசு என்பதன் அர்த்தம் மதுபனில் வந்து இருக்க வேண்டும் என்பதில்லை ஆனால் சேவையின் சேத்திரத்தில் இருந்தாலும் மனதால் நான் என்பது இல்லை, அதாவது சமர்ப்பணமாகி இருக்கிறீர்கள் என்றால் நீங்கள் வாரிசு. ஆக, சமர்ப்பணமானவரா அல்லது இப்போது கர்ம பந்தனத்தின் கீழே இருக்கிறீர்களா? மனதால் எப்போது சமர்ப்பணமாகி விட்டீர்களோ, அப்போது சமர்ப்பணமாகி விட்ட ஆத்மாவுக்கு பந்தனம் இருக்காது. ஏனென்றால் சமர்ப்பணமாகி விட்டீர்கள் என்றால் அனைத்து பந்தனங்களையும் கூட சமர்ப்பித்து விட்டீர்கள். மனதை ஏதேனும் பந்தனம் ஈர்க்கிறது என்றால் பந்தனம் உள்ளது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். மற்றப்படி வருகிறது, பிறகு சென்று விடுகிறது என்றால் பந்தனம் இல்லை. ஆக, நாம் அவதாரம், மேலே இருந்து வந்திருக்கிறோம் -இதை சதா நினைவில் வையுங்கள். அவதாரமெடுத்துள்ள ஆத்மாக்கள் ஒரு போதும் சரீரத்தின் கணக்கு -வழக்கின் பந்தனத்தில் வர மாட்டார்கள். விதேகி ஆகிக் காரியம் செய்வார்கள். சரீரத்தின் ஆதாரம் எடுக்கிறார்கள், ஆனால் சரீரத்தின் பந்தனத்தில் கட்டுண்டு விடுவதில்லை. ஆக, அந்த மாதிரி ஆகியிருக்கிறீர்களா? ஆக, சதா தன்னை சரீரத்தின் பந்தனத்தில் இருந்து விலகியவராக ஆக்குவதற்கு அவதாரம் எனப் புரிந்து

கொள்ளுங்கள். இந்த விதியின் படி நடந்து கொண்டே இருப்பீர்களானால் சதா பந்தனத்திலிருந்து விடுபட்டு விலகியவராகவும் பாபாவுக்குப் பிரியமானவராகவும் ஆகி விடுவீர்கள்.

**வரதானம்: தனது வெற்றியை நிச்சயிக்கப்பட்டது எனப் புரிந்து கொண்டு சதா கவலையற்று இருக்கக் கூடிய நிச்சயபுத்தி உள்ளவர் ஆகுக!**

எந்தக் குழந்தைகள் சதா பாபா மீது, தனது பார்ட் மீது மற்றும் டிராமாவின் ஒவ்வொரு விநாடியின் நடிப்பின் மீது 100-சதவிகிதம் நிச்சயபுத்தி உள்ளவராக இருக்கிறார்களோ, அவர்களது விஜய் அல்லது வெற்றி நிச்சயிக்கப்பட்டதாகும். நிச்சயிக்கப்பட்ட வெற்றியாக இருக்கும் காரணத்தால் அவர்கள் சதா கவலையற்று இருக்கிறார்கள். அவர்களின் முகத்திலிருந்து கவலையின் ரேகையும் தென்படாது. அவர்களுக்கு சதா நிச்சயம் இருக்கும் -இந்தக் காரியம் அல்லது இந்த சங்கல்பம் வெற்றியடைந்தே விட்டது. அவர்களுக்கு ஒரு போதும் எந்த ஒரு விஷயத்திலும் கேள்வி எழ முடியாது.

**சுலோகன்: கேட்பது மற்றும் சொல்வதில் பாவனை மற்றும் நோக்கத்தை மாற்றி விடுவது தான் வாயுமண்டலத்தைக் கெடுப்பதாகும்!**

✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷

# 27.12.1987 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நிச்சய புத்தி வெற்றி ரத்தினங்களின் அடையாளங்கள்!

இன்று பாப்தாதா நாலாபுறமும் உள்ள தனது நிச்சயத்துடன் வெற்றி பெறும் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு குழந்தையிடமும் உள்ள நம்பிக்கைக்கான அடையாளங்களை பார்க்கின்றார். (1) எந்தளவு நம்பிக்கையோ அந்தளவு செயலிலும், சொல்லிலும் ஒவ்வொரு நேரமும் முற்றிலும் ஆன்மீக போதை தென்படும்.
(2) ஒவ்வொரு செயல், எண்ணம் அனைத்திலும் வெற்றி சுலபமாகவே வெளிப்படையாக அதிகாரப் பூர்வமாக அனுபவம் ஆகும்.
(3) தனது உன்னதமான பாக்கியம், உயர்ந்த வாழ்க்கை, பாபா மற்றும் பரிவாரத்தின் தொடர்பில் ஒரு சதவீதம் கூட எண்ணத்தின் அளவில் சிறிதும் சந்தேகம் எழாது
(4) கேள்வி முடிந்து ஒவ்வொரு விசயத்திலும் புள்ளியாகி, புள்ளி வைப்பவர் ஆவர்.
(5) நம்பிக்கை புத்தி உள்ளவர் தன்னைத்தான கவலையில்லா இராஜாவாக எப்போதும் உணர்வார்கள். ஏனென்றால் மீண்டும் மீண்டும் நினைவு படுத்த வேண்டிய கடினம் இராது. நான் பாதுஷா இப்படி சொல்வதில் கூட கடினம் இல்லை. ஏனெனில், எப்போது மனோ நிலை என்ற உயர்ந்த ஆசனத்தில், சிம்மாசனத்தில் வீற்றிருப்பவராகின்றாரோ லௌகீக வாழ்வில் இன்னல்களுக்களுக்கேற்ப மனோ நிலை மாறுகிறது. துக்கம், சுகம் என மாறும் பொழுது அதற்கேற்ப அனுபவம் இயல்பாகிறது. மீண்டும் மீண்டும் நான் துக்கம் அடைந்துள்ளேன் சுகம் பெறுகிறேன் என்ற உணர்வுகளை வெளிப்படுத்துவது எந்த முயற்சியின்றி நடைபெறுகிறது. கவலையில்லா இராஜா என்பதற்கான மனோ நிலையும் சுலபமாகவே அனுபவம் ஆகிறது. அஞ்ஞான வாழ்வில் இன்னல்களுக்கேற்ப நிலை அமைகிறது ஆனால் சக்தி வாய்ந்த அலௌகீக பிராமண வாழ்வில் இன்னல்களுக்கேற்ப மனோநிலை மாறுவதில்லை ஆனால் கவலையற்ற மனோ நிலை உன்னத நிலை

பாப்தாதா மூலமாக கிடைத்த ஞானத்தின் ஒளி, சக்தி மூலமாக நினைவின் சக்தி மூலமாக அமைகிறது. ஞானம், யோகத்தின் சக்திகள் ஆஸ்தியாக பாபா மூலமாக கிடைக்கிறது. பிராமண வாழ்வில் தந்தையின் ஆஸ்தி மூலமாக சத்குருவின் வரதானம் மூலமாக பாக்கிய வள்ளல் மூலமாக பெறப்பட்ட சிரேஷ்ட பாக்கியத்தின் மூலமாக மனோ நிலை அமைகிறது. மாறாக இன்னல் களின் அடிப்படையில் மனோ நிலை அமைந்தால் சக்தி வாய்ந்தவர் யார்? இன்னல்களே சக்தி வாய்ந்த தாகி விடுமல்லவா? அப்படி இன்னல்களுக்கேற்ப தனது நிலையை மாற்றிக் கொள்பவர் ஆடாது, அசையாது உறுதி பெற முடியாது. அஞ்ஞான வாழ்வில் நேரத்திற்கு நேரம் குஷிவந்தால் குதிப்பதும், சோகம் என்றால் துவண்டு போவதுமாக இருப்பார்கள். அலௌகீக வாழ்வில் அப்படிப்பட்ட மனோ நிலை இருக்காது. இன்னலுக்கேற்ப அல்லாமல் தனது ஆஸ்தி, வரதானம் ஆதாரத்தாலும் தனது சிரேஷ்ட நிலையிலும் இன்னலையே மாற்றியமைப்பவர் ஆவீர்கள். நம்பிக்கை புத்தி யுள்ளவர்கள் சதா கவலையற்றவராக இருக்கின்றார். ஏனெனில் ஏதேனும் குறைவோ, இல்லாமையோ இருந்தால் தானே கவலை ஏற்படும். அனைத்து பிராப்திகளும் கிடைக்கப்பெற்றவர்கள் சர்வ சக்திவானின் குழந்தை ஆகும் பொழுது கவலை எதற்காக?

(6) நம்பிக்கை என்றாலே தந்தையின் பேரில் முழு பலியாவதாகும். பலியாவது யாதெனில் அர்ப்பணித்தேன் என்ற எண்ணத்தையும் அர்ப்பணிப்பது, மறந்து விடுவது. அது தேக உணர்வுகளின் விகாரத்தின் வம்சமோ, தேக உறவுகளின் வம்சமோ, அழியும் பதார்த்தங்களின் மீதுள்ள ஆசையின் வம்சமோ இவை அனைத்தும் அதனுள் அடங்கும். அனைத்தையும் சமர்ப்பணம் செய்வது என்றாலும், தியாகம் செய்வது என்றாலும் ஒன்றே. மதுபனிலேயே அமர்ந்து விடுவதோ, சேவை நிலையத்திலேயே அமர்ந்து விடுவதோ சமர்ப்பணமாகாது. இது ஒரு படி தான். அர்ப்பண வாழ்விற்கு ஆனால் அனைத்தையும் அர்ப்பணம் செய்வது என்பது படிகளின் உன்னத முடிவாகும். ஒரு படி ஏறி விட்டீர்கள் ஆனால் முடிவை எட்ட நம்பிக்கையின் அடையாளம் மூன்றையுமே வம்சம் உட்பட அர்ப்பணம் செய்தல். மூன்றையும் தெளிவாக தெரிந்து கொண்டீர்கள் அல்லவா! கனவிலும் நினைவிலும் அம்சமும் இல்லாத நிலையே வம்சமே முடிந்ததாகும். அம்சம் இருந்தாலும் வம்சம் வளரும். எனவே அனைத்தும் அர்ப்பணம் என்பதன் உட்பொருள் மிகவும் ஆழமானது. அதனையும் எப்போதாவது சொல்வோம்.

(7) நம்பிக்கை புத்தியுள்ளவர்கள் எப்போதும் கவலையற்றவராக இருப்பார்கள். ஒவ்வொரு விசயத்திலும் வெற்றி நிச்சயம் என்ற ஆன்மீக அனுபவம் செய்வர். நம்பிக்கை, கவலையின்மை, நடந்தே தீரும் இதனை எந்த நேரமும் அனுபவம் செய்வார்கள்.

(8) அவர்கள் தானும் போதையில் இருப்பார்கள், அவரை பார்க்கும் பிறருக்கும் அந்த ஈஸ்வரிய போதை அனுபவம் ஆகும். தந்தையின் உதவியாலும் தனது மனோ நிலையாலும் பிறருக்கும் அந்த ஆன்மீக போதையை அனுபவம் செய்விப்பர். நம்பிக்கை புத்தி மற்றும் ஆன்மீக போதையில் இருப்பவரின் வாழ்வில் என்ன சிறப்பம்சங்கள் காணப்படும்? முதல் விசயம் எந்தளவிற்கு உன்னத போதையோ அந்தளவு நான் நிமித்தமான கருவியே என்ற நிலை ஒவ்வொரு செயலிலும் வாழ்க்கை முழுவதும் ஏற்படும். அதனால் புத்தியிலும் பணிவே தென்படும். புத்தியின் மீது கவனம் தருவது என்பது எந்தளவு பணிவான புத்தியோ அந்தளவு புத்துலகிற்கான செயலும் நடைபெறும். ஆக பணிவும் இருக்கும் புத்தாக்கமும் இருக்கும். இந்த விசேசங்கள் இருப்பதுவே நம்பிக்கையே வெற்றி என்பதாகும். நிமித்தம் (கருவி), நிர்மான் (பணிவு) நிர்மான் (புத்தாக்கம்) நம்பிக்கை புத்தியின் மொழி வார்த்தை எப்படி இருக்கும். இனிமையாக பேசுவார்கள் அது பொதுவான விசயம் தான் ஆனால் பிறரை முன்னேற்றுபவராக இருப்பார்கள். தாங்கள் முதலில் என்பார்கள். நான், நான் என்பது கிடையாது. உதாரணமானவர்கள் அதாவது பிறரை முன்னால் வைப்பவர்கள். பிரம்மாபாபா எப்போதுமே தன்னை விட முன்னேற்றத்தில் இருப்பவர் மம்மா மற்றும் குழந்தைகள் என்று அவர்களையே முன்னால் வைத்தார். இதுவே உதாரணத்தின் மொழி. பிறரை முன்னால் வைக்கும் குணம் இருந்தால் தானாகவே மனம் விரும்பிய பலன் கிடைத்து விடும். அந்தளவு ஆசை என்றாலே என்னவென்று தெரியாத நிலை இருந்தால் பாபாவும், பரிவாரமும் தகுதியுணர்ந்து அவரையே முன்னால் வைப்பர். பிறரை மனதார முன்னால் வைப்பவர் ஒருபோதும் பின்தங்கி இருப்பதில்லை, மனதார பிறரை முன்னால் வைத்தால் எல்லோரும் அவரை முன்னால் வைப்பர். ஆசையிருந்தால் அது முடியாது. நம்பிக்கை புத்தி என்றாலே எப்போதும் பிறரை முன்னேற்றுபவர், திருப்தியானவர், அனைவர் பொருட்டும் நம்மை செய்பவர். அப்படி உள்ளவரே, நம்பிக்கையே வெற்றி என்பதற்கு உதாரணம் ஆவார். அனைவரும் நம்பிக்கை புத்தியுள்ளவர்தானே? ஏனெனில் நம்பிக்கையே அஸ்திவாரம் ஆனால் இன்னல்கள், மாயை,

சம்ஸ்காரங்கள், விதவிதிமான சுபாவங்கள் எனும் புயல் வீசுகையில் தான் அஸ்திவாரம் எவ்வளவு வலிமையாக உள்ளதென தெரிய வருகிறது. இப்பழைய உலகில் விதவிதமான புயல் வருவது போன்று காற்று, கடல் இவைகளால், அது போன்று இங்கும் கூட விதவிதமான புயல் வருகிறது. புயல் என்ன செய்யும்? முதலில் பறக்கச் செய்யும் பிறகு வீசி எறிந்து விடும். அவ்வாறே இந்த புயலும் முதலில் ஆனந்தத்தில் பறக்கச் செய்யும். புத்திசாலி, நம்பிக்கை புத்தியுள்ளவர்கள் மூன்றாவது கண் கொண்டிருப்பதுடன் மூன்று காலத்தையும் பார்ப்பதால் ஒருபோதும் எமாற்றமடைய மாட்டார்கள். புயல் வரும் தருணம் நம்பிக்கை கண்டறியப்படும். புயல் வந்து மிகப் பழைய மரங்களையும் வேறுடன் சாய்த்து விடும். அவ்வாறு மாயை எனும் புயலும் நம்பிக்கையெனும் அஸ்திவாரத்தை சாய்த்து விட முயற்சி செய்யும் ஆனால் விளைவு யாதெனில் சாய்ந்து விடுபவர் குறைவு தான், அனேகர் அசைந்து விடுகின்றனர். அசைந்தாலும் அஸ்திவாரம் வலுவிழந்தே போகிறது. அது போன்ற நேரத்தில் தன் நிலையை சோதனை செய்துப் பாருங்கள். யாரையாவது நம்பிக்கை உறுதியாக உள்ளதா என கேட்டால் என்ன சொல்வார்கள்? சொற்பொழிவு மிக நன்றாக செய்வார்கள். நம்பிக்கையோடு இருப்பது நன்றாக உள்ளது. தக்க சமயத்தில் நம்பிக்கை அசைகிறது என்றால் பல பிறவிக்கு பலனிலிருந்து அசைந்து விடுவதாகும். ஆகவே புயல் வீசும் பொழுது சோதியுங்கள் லி யாரேனும் மரியாதை கௌரவம் தராத பொழுது வீண் எண்ணமான மாயை வருகிறதா, தான் விரும்பியது நடக்காதப்பொழுது சக்தி வாய்ந்த தந்தையின் சக்திசாலியான குழந்தை ஆத்மா நான் என்ற நினைவு வருகிறதா? அல்லது வீண் எண்ணம் சக்தி வாய்நதவரை வெற்றி கொள்கிறதா? அப்படி வீண் எண்ணம் வெற்றிக் கொண்டால் அஸ்திவாரமான நம்பிக்கை அசைந்து விடும். சக்திவான் என்பதற்கு பதிலாக தன்னை பலவீனமானவராக அனுபவம் செய்வர். மனமுடைந்து போவார்கள். எனவே புயல் வரும் நேரம் சோதனை செய்து எல்லைக்குட்பட்ட மரியாதை, கௌரவம், நான் என்பதெல்லாம் ஆன்மீக பெருமிதத்திலிருந்து கீழே கொண்டு வரும். எல்லைக்குட்பட்ட எந்த ஆசையும், ஆசை என்றாலே என்னவென்று தெரியாத நிலையிலிருந்து கீழே கொண்டு வரும். நான் தேகமல்ல, ஆத்மா என்பது மட்டும் நம்பிக்கையாகாது. நான் எப்படிப்பட்ட ஆத்மா, அந்த போதை, சுய மரியாதை, தக்க நேரத்தில் அனுபவம் ஆவது இதுவே நம்பிக்கையே

வெற்றி என்பதாகும். சோதனையே இல்லாமல் நான் மதிப்புடன் தேர்ச்சி பெற்று விட்டேன் என்றால் யார் ஏற்றுக் கொள்வார்கள்? சான்றிதழ் வேண்டுமல்லவா? என்ன தான் தேர்ச்சி பெற்றுபட்டமே பெற்றாலும் சான்றிதழ் பெறாமல் மதிப்பு இராது. சோதனை வரும்போது வெற்றி பெற்று சான்றிதழ் பெற வேண்டும். பாபாவிடம் பரிவாரத்திடமிருந்து சான்றிதழ் பெறும் பொழுதே நிச்சய புத்தி வெற்றி என சொல்லக்கூடும். புரிந்ததா? அஸ்திவாரத்தையும் சோதனை செய்து கொண்டேயிருங்கள். நிச்சய புத்தியின் விசேசங்களை கேட்டீர்களா? சமயத்திற்கேற்ப ஆன்மீக போதை வாழ்வில் தென்பட வேண்டும். தான் மட்டும் மகிழ்ந்தால் போதாது. மக்களும் மகிழ வேண்டும். இவர் ஆன்மீக போதையில் உள்ளவர் என்பதை அனைவரும் அனுபவம் செய்ய வேண்டும். தனக்கு மட்டும் பிரியமான வரல்லாமல் மக்களுக்குப் பிரியமானவர், தந்தைக்குப் பிரியமானவர் என்றிருக்க வேண்டும். அதுவே வெற்றி. நல்லது!

**அயல் நாட்டவருடன் பாப்தாதாவின் சந்திப்பு:** தன்னை அருகே உள்ள ரத்தினமாக அனுபவம் செய்கிறீர்களா? அருகே உள்ளவரின் அடையாளம் என்ன? அவர்கள் எப்போதும் சுலபமாக இயல்பாகவே ஞானி, யோகி, குண மூர்த்தியாக அனுபவம் செய்வார்கள். அருகே உள்ளவர்களிடம் ஒவ்வொரு அடியிலும் இந்த நான்கு சிறப்பம்சமும் அனுபவம் ஆகும். ஒன்று கூட குறையாது, ஞானத்தில் குறைவு, யோகத்தில் தெளிவு, தெய்வீக குணத்தில் பலவீனம் என்றில்லாமல் எல்லா வற்றிலும் எப்போதும் சுலபமாக அனுபவம் செய்வர். சமீபத்தில் உள்ள ரத்தினம் எந்த விதத்திலும் உழைப்பின்றி சுலபமாக வெற்றியை அனுபவம் செய்வார்கள். ஏனெனில் பாப்தாதா சங்கமயுகத்தில் குழந்தைகளை உழைப்பிலிருந்து விடுவித்து விட்டார். 63-பிறவியாக உடலாலும், மனதாலும் உழைத்தீர்கள். தந்தையை அடைய வேண்டி பலப்பல வழிகளை கையாண்டீர்கள். இது மனதின் உழைப்பு., பணத்திற்காகவும், எவ்வளவு உழைத்தீர்கள். இப்போது அரை கல்பத்திற்கு இவையனைத்திலிருந்தும் விடுதலை. லௌகீக வேலையும் இல்லை, பக்தியும் இல்லை. இரண்டிலிருந்தும் முக்தி. இப்போதும் கூட லௌகீக வேலை செய்தாலும் பிராமணன் ஆன பிறகு வேறுபாடு உள்ளதல்லவா? டபுள் லைட்டாக உடலாலும், மனதாலும் லேசாக உள்ளீர்கள்? ஏன்? ஏனெனில் லௌகீக கரியமேயானாலும் இது அலௌகீக சேவையாக செய்கிறேன் என்ற உணர்வு. தன் சுய விருப்பமில்லை. எங்கே விரும்பி

செய்வோமோ அங்கே வேதனை. இப்போது ஒரு கருவியாக செய்கிறீர்கள். ஏனெனில் தெரியும் உடல், மனம், பொருட்கள் பயன்படுத்தும்பொழுது பல மடங்கு அழியாத வங்கியில் சேமிப்பாகிக் கொண்டிருக்கிறது. பிறகு சேமிப்பை சாப்பிட்டுக் கொண்டேயிருப்பீர்கள். நினைவு செய்ய வேண்டும், ஞானம் கேட்க வேண்டும், சொல்ல வேண்டும் இவற்றிலிருந்து விடுதலை. சில சமயங்களில் வகுப்பு கேட்டு கேட்டு களைத்து விடுகிறீர்கள் தானே! அங்கே லௌகீக இராஜ கல்வியும் விளையாட்டாக நடைபெறும். இவ்வளவு புத்தகம் இருக்காது. அனைத்து உழைப்பும் முடிவு பெறும். சிலருக்கு படிப்பே பெரும் சுமையாக உள்ளது. சங்கமயுகத்தில் உழைப்பிலிருந்து விடுபடும் சம்ஸ்காரம் நிரப்பப்படுகிறது. மாயையின் புயலே வந்தாலும் அந்த மாயையினை வெற்றி கொள்வதும் ஒரு விளையாட்டாக புரிகிறது. உழைப்பில்லை. விளையாட்டாகிறதா? அல்லது பெரிய விசயமாக தெரிகிறதா? மாஸ்டர் சர்வ சக்திவான் என்ற நிலையில் நிலைத்திருந்தால் விளையாட்டாகும். மேலும் அரை கல்பத்திற்கு விடைபெற்று சென்று விடு என்று சவால் விடுகின்றீர்கள். எனவே முடிவு நாளை கொண்டாட வருகிறதேயன்றி சண்டை போடுவதற்காக அல்ல. வெற்றி ரத்தினம் ஒவ்வொரு செயலிலும் ஒவ்வொரு நேரமும் வெற்றி, வெற்றி தானே (ஆம்) அப்படியென்றால் அங்கு சென்ற பிறகும் ஆம் சொல்லுங்கள். ஆயினும் பலசாலியாகி விட்டீர்கள், முன்பெல்லாம் உடனேயே பயந்தீர்கள் இப்போது பலசாலியாகி விட்டீர்கள். இப்போது அனுபவி ஆகி விட்டீர்கள். அனுபவத்தின் அத்தாரிட்டியும் கூடவே கண்டறியும் சக்தியும் வந்து விட்டது. எனவே பயமில்லை. அனேக முறை வெற்றியடைந்துள்ளீர்கள். இப்பவும் வெற்றி இனி எப்போதும் வெற்றியே. இதனையே எப்போதும் நினைவில் கொள்க.

**விடைபெறும் நேரம்: தாதிமார்களுடன் (தாதி ஜானகி பம்பாயிலிருந்து 3-4 நாட்கள் முன் வந்தார்கள்**). இப்போதே சக்கரவர்த்தி ஆகி விட்டார். நல்லது. இங்கும் சேவை அங்கும் சேவை. இங்கு இருக்கு மிடத்திலும், செல்லும் இடம் யாவும் சேவையே சேவை தான். சேவைக்கான ஒப்பந்தம் மிகப் பெரிய அளவில் எடுத்துள்ளார். பெரிய ஒப்பந்தக்காரர் அல்லவா! சிறிய சிறிய ஒப்பந்தக்காரர்கள் அனேகர் உள்ளனர் ஆனால் பெரிய ஒப்பந்தக்காரர் பெரிய வேலை செய்ய வேண்டும். (பாபா இன்று முரளி கேட்கையில் மிகவும் ஆனந்தம் வந்தது) என்றும் ஆனந்தமே நல்லது. நீங்கள் நன்கு புரிந்து கொண்டு

பிறருக்கும் புரிய வைக்கலாம். எல்லோரும் ஒரே மாதிரி புரிவதில்லை. ஜகதம்பா எப்படி முரளி நன்கு கேட்டு தெளிவு படுத்தி அனைவரையும் தாரணையும் செய்ய வைத்தார். அவ்வாறே இப்போது நிமித்தம் நீங்களே! கடைசியில் அமர்ந்தவர்களை பார்க்கவில்லை. எல்லோரையும் எதிரில் வைக்கின்றார். ஆயினும் மிக நெருக்கமானவர்கள் எதிரில் உள்ளனர். அப்போது எதிரில் இருப்பவர்களுக்காக வெளிப்படுகிறது. நீங்கள் படித்து புரிந்து கொள்வீர்கள். நல்லது.

**வரதானம்: வீண் எனும் கசிவை முடித்து விட்டு சக்தி வாய்ந்தவராக ஆகி குறைந்த செலவில் அதிக இலாபம் பெறுபவராகுக!**

சங்கமயுகத்தில் பாப்தாதா மூலமாக கிடைத்த அத்தனை பொக்கிஷங்களையும் வீண்னாகாமல் மீதப்படுத்தினால் குறைந்த செலவில் அதிக இலாபம் ஈட்டுபராவீர்கள். வீணாகாமல் மீதப்படுத்துவதே சக்தி பெறுவதாகும். எங்கு சக்தியோ அங்கே வீண் என்பதே கிடையாது. மாறாக வீண் எனும் கசிவு இருந்தால் என்ன தான் முயற்சி செய்தாலும் உழைத்தாலும் சக்தி வாய்ந்தவராக முடியாது. எனவே கசிவை சோதனை செய்து முடித்து விட்டு வீண் என்பதிலிருந்து சக்தி வாய்ந்தவராகி விடுவீர்கள்.

**சுலோகன்: இல்லறத்தில் இருந்து கொண்டே பரிபூரணத் தூய்மையை கையாளுவது என்பது ஞானி, யோகி ஆத்மாக்களாகிய உங்களின் ஒரு சவால்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 31.12.1987 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# புதிய வருடம் -தந்தைக்கு நிகராக மாறவேண்டிய வருடம்!

இன்று திரிமூர்த்தி தந்தை மூன்று சங்கமத்தை முக்கூடலை பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஒன்று தந்தை மற்றும் குழந்தைகளின் சங்கமம் இரண்டாவது யுகத்தின் சங்கமம், மூன்றாவது வருடத்தின் சங்கமம். மூன்று சங்கமமும் தனக்கே உரிய தனித்தன்மைகளை பெற்றது. ஒவ்வொரு சங்கமமும் மாற்றத்திற்கான அறிவுரை தருகிறது. சங்கமயுகம் உலக மாற்றத்திற்கான அறிவுரை தருகிறது. தந்தை மற்றும் குழந்தைகளின் சங்கமம் மிக உன்னதமான பாக்யம் மற்றும் உன்னத மான பிராப்திகளையும் செய்ய வைக்கிறது. வருடத்தின் சங்கமம் புதுமைக்கான அறிவுரை தருகிறது. மூன்று சங்கமமும் ஆனதற்கே உரிய பொருளுடன் மகிமை வாய்ந்தது. இன்று உள்நாடு வெளிநாட்டின் குழந்தைகள் விசேசமாக பழைய உலகில் புதிய ஆண்டை கொண்டாட வந்துள்ளார்கள். பாப்தாதா உடலாலும் (சாகாரம்) மனதாலும் (ஆகாரம்) புத்தி எனும் விமானத்தில் வந்துள்ள குழந்தைகளை பார்த்துக் கொண்டிருக்கின்றனர். மேலும் புத்தாண்டை கொண்டாட முகமாக வைரத்தையொத்த வாழ்த்துக்களையும் தருகின்றார். ஏனெனில் குழந்தைகள் அனைவரும் வைரத்திற்குச் சமமான வாழ்வை அடைந்துள்ளார்கள். இரட்டை கதாநாயகனாகி உள்ளீர்களா? ஒன்று தந்தையின் விலைமதிப்பற்ற இரத்தினம் வைரமாகி உள்ளீர்கள் மற்றொன்று நடிகனமாகி உள்ளீர்கள். எனவே பாப்தாதா ஒவ்வொரு நொடிக்கும், ஒவ்வொரு எண்ணத்திற்கும், ஒவ்வொரு பிறவிக்கும் அழிவிலாத வாழ்த்துக்களை வழங்கிக் கொண்டிருக்கின்றார். சிரேஸ்ட பாக்கியம், சிரேஷ்ட பிராப்தியின் ஆத்மக்களாகிய உங்களுக்கு இன்றைய நாள் மட்டும் வாழ்த்துக்குறிய நாள் அல்ல ஆனால் ஒவ்வொரு நேரமும் காரணத்தால் பாபாவிற்கு குழந்தைகளும் குழந்தைகள் பாபாவிற்கும் வாழ்த்துக்களை வழங்கிய வண்ணம் எப்போதும் பறக்கும் கலையில் அழைத்து சென்று கொண்டிருக்கின்றது. இந்த புதிய வருடத்தின் இந்த

புதுமையை வாழ்வில் அனுபவம் செய்யுங்கள். ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு எண்ணத்தாலும் தந்தைக்கு வாழ்த்து தெரிவிக்கின்றீர்கள் இருப்பினும் பிராமண ஆத்மாக்கள் தங்களுக்குள்ளும், அறிந்தவரோ, அறியாதவரோ தொடர்பில் வருபவர் எவராயினும் ஞானமேயில்லாதவராயினும் தந்தையைப் போன்று ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு ஆத்மாவிற்காகவும் உள்ளத்திலிருந்து மகிழ்ச்சியுடன் கூடிய வாழ்த்துக்கள் வந்த வண்ணம் இருக்கட்டும், ஒருவர் எப்படிப்பட்டவராகயிருப்பினும் உங்களது மகிழ்ச்சியுடன் கூடிய வாழ்த்துக்கள் அவர்களுக்கும் மகிழ்ச்சியினை அனுபவம் செய்ய வைக்கட்டும். வாழ்த்து தெரிவிப்பது மகிழ்வை பரிமாறிக் கொள்வதாகும். எப்போதேனும் எவருக் கேனும் வாழ்த்து தெரிவிப்பீர்களெனில் அது மகிழ்வை வழங்குவதாகும். துக்கமான தருணத்தில் வாழ்த்து தருவதில்லை. எனவே ஒவ்வொரு ஆத்மாவையும் பார்த்து மகிழ்வது, மகிழ்வை தருவது. இதுவே உளப்பூர்வமான வாழ்த்தாகும். பிறர் உங்களுடன் எப்படி நடந்து கொண்டாலும் பாப்தாதாவிடமிருந்து ஒவ்வொரு நேரமும் வாழ்த்தை பெற்றுக் கொண்டிருக்கும் உன்னதமான ஆத்மாக்கள் நீங்கள் எப்போதும் எல்லோர் பொருட்டும் மகிழ்வையே வழங்குங்கள். பிறர் உங்களுக்கு முள்ளையே கொடுத்தாலும் அதற்கு கைமாறாக ஆன்மீக ரோஜா மலரையே வழங்குங்கள். அவர்கள் துக்கமே கொடுத்தாலும் சுகவள்ளலின் குழந்தைகள் நீங்கள் சுகமே வழங்குங்கள். அவர்களைப்போன்றே நீங்களும் மாறிவிடக்கூடாது. ஞானமில்லாதவருடன் நீங்களும் ஞானமில்லாதவராக (அஞ்ஞானி) ஆகி விடக்கூடாது. சமஸ்காரத்திற்கோ, சுபாவத்திற்கோ வசமாயிருக்கும் (வசிபூத்) ஆத்மாக்களுடன் நீங்களும் வசமாகி விடக்கூடாது.

சிரேஷ்ட ஆத்மாக்களான உங்களுடைய ஒவ்வொரு எண்ணத்திலும் அனைவரது நன்மைக்கும், உயர்ந்த மாற்றத்திற்கும் வசியத்தில் இருப்பவர்களை சுதந்திரமடையச் செய்வதற்கான ஆசிர்வாதமும் மகிழ்வு நிறைந்த வாழ்த்துக்களும் இயல்பாகவே தென்பட வேண்டும். ஏனெனில் நீங்கள் அனைவரும் வள்ளல் என்றால் தேவதைகள், வழங்குபவர்கள். எனவே இந்த புதிய வருடத்தில் விசேசமாக மகிழ்வு நிறைந்த வாழ்த்துக்களை வழங்கிய வண்ணம் இருங்கள். இன்றும் நாளையும் வழியில் பார்ப்பவருக்கெல்லாம் வாய் மூலம் வாழ்த்து சொல்வதல்ல. மனதார சொல்லுங்கள். முழு வருடமும் சொல்லுங்கள் இரண்டு நாட்கள்

மட்டுமல்ல. மனமுவந்து வாழ்த்து கூறுகையில் வாழ்த்து பெறுபவர் மனமகிழ்ந்து போவார். அப்பொழுது ஒவ்வொரு நேரமும் தில்குஷ் மிட்டாய் வழங்கியவராவீர்கள். ஒருநாள் மட்டுமல்ல. நாளைய தினம் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு தானும் உண்டு பிறருக்கும் இனிப்பு வழங்குங்கள். இப்படி ஒவ்வொரு நாளும் செய்தால் எவ்வளவு மகிழ்வாயிரக்கும், இப்போதெல்லாம் இனிப்பு என்றாலே சாப்பிட யோசிக்கிறார்கள், பயப்படுகிறார்கள் ஆனால் இந்த தில்குஷ் மனதை மகிழ்விக்கும் வார்த்தைகள் எனும் இனிப்பு எவ்வளவு வேண்டுமாயினும் சாப்பிடலாம் பிறருக்கும் வழங்கலாம், நோய் வராது ஏனெனில் பாப்தாதா குழந்தைகளை தன்னைப் போல் மாற்றுகிறார். முக்கியமாக இந்த வருடம் பாப்சமான் ஆக வேண்டும். இந்த ஒரு விசேசத்தன்மையினையே உலகிற்கும் பிராமண பரிவாரத்திற்கு முன்பாகவும் காண்பியுங்கள். எப்படி ஒவ்வொரு ஆத்மாவும் பாபா எனும் பொழுதே இனிமையை, குஷியை அனுபவம் செய்கிறார்கள். ஆஹா பாபா என்றவுடனேயே வாய் இனிப்பாகிறது ஏனெனில் பிராப்தி கிடைக்கிறது. அவ்வாறே ஒவ்வொரு பிராமண ஆத்மாவும் யாரேனும் ஒரு பிராமணனின் பெயரை உச்சரித்த மாத்திரமே இனிமை அனுபவம் ஆக வேண்டும். ஏனெனில் நீங்கள் அனைவரும் பாபாவிடம் கிடைக்கப்பெற்ற பிராப்திகளை ஒருவருக்கொருவர் பரிமாறுபவர்கள் அல்லவா. ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு நல்கி முன்னேற்றம் தருகிறீர்கள். வாழ்க்கைத் துணையாகாதீர்கள் ஆனால் செய்யும் செயலில் துணையாயிருங்கள், ஒவ்வொரு ஆத்மாவும் தனக்கு கிடைத்த சிறப்பம்சங்களால் ஒருவருக்கொருவர் மகிழ்ச்சியை வழங்குகிறீர்கள். இவ்வாறே சதாகாலமும் செய்துக் கொண்டு இருங்கள். எப்படி பாபா என்று நினைத்த மாத்திரமே குஷியில் நடனமாடுகிறார்கள் அவ்வாறே ஒவ்வொரு பிராமண ஆத்மாவையும் நினைத்த கனமே குஷி அனுபவம் ஆக வேண்டும். உலகாயத குஷி அல்ல. ஒவ்வொரு நேரமும் தந்தையிடமிருந்து பெற்ற பிராப்திகளையெல்லாம் நிஜ வாழ்வில் நிமித்தமாக அனுபவம் செய்யட்டும். இதனையே ஒவ்வொரு நேரமும் ஒவ்வொருவருக்கும் வாழ்த்து என சொல்லப்படும். அனைவருக்கும் பாப்சமான் ஆக வேண்டும் என்ற ஒரே இலட்சியமே உள்ளது. ஏனெனில் சமமாகாமல் தந்தையுடன் இணைந்து இராஜ்யத்திலும் வர முடியாது. யார் பாப்தாதாவுடன் தமது வீடு செல்வார்களோ அவர்களே பிரம்மாவுடன் ராஜ்யத்தில் வருவார்கள். மேலிருந்து கீழே இறங்குவார்கள் அல்லவா.

உடன் செல்வது மட்டுமல்ல உடன் வருவார்கள். பூஜைக்குரிய வராகவும் பூஜாரியாகவும் பிரம்மாபாபாவுடனேயே வருவார்கள். அனேக பிறவிகளுக்கு இணைந்தே வருவார்கள் ஆனால் அதற்கு ஆதாரம் இப்போது பாப்சமான் ஆகி இணைந்தே செல்ல வேண்டும்.

இந்த வருடத்தின் (1988) சிறப்பம்சம் பாருங்கள். எண்ணும் 8, 8 அல்லவா. 8க்கு எவ்வளவு மதிப்பு உள்ளது. தமது பூஜைக்குரிய ரூபத்தை பார்த்தாலும் எட்டு கரங்கள், எட்டு சக்திகளையே நினைவு செய்யப்படுகிறது. அஷ்ட ரத்தினம், அஷ்ட ராஜதானியம் 8க்கு விதவிதமான வகையில் மகிமை உள்ளது. எனவே இந்த ஆண்டினை பாப்சமான் ஆகியேத் தீர வேண்டும் என்ற திட எண்ணத்துடன் கொண்டாடுங்கள். எந்த செயலும் தந்தையைப் போலவே செய்யுங்கள். நினைத்தாலும், பேசினாலும், தொடர்பில் வந்தாலும் பாப்சமான் பிரம்மாபாபாவிற்கு நிகராக மாறுவது சுலபம் தானே ஏனெனில் மனித உருவில் உள்ளார் 84-பிறவி எடுப்பவர். பூஜாரியோ பூஜைக்குரியவரோ அனைத்திலும் அனுபவம் வாய்ந்தவர், பழைய உலகம், பழைய சம்ஸ்காரம், பழைய கணக்கு.வழக்கு குழுவில் வாழ்வது அரவணைத்து செல்வது அனைத்திலும் அனுபவம் வாய்ந்த வரை பின்பற்றுவது கடினமில்லையே, மேலும் பாபா சொல்வது என்னவென்றால் பிரம்மாபாபாவின் ஒவ்வொரு அடிமீதும் அடிவைத்து செல்லுங்கள். புதிய வழியை உருவாக்க வேண்டாம். அடிமீது அடிவைத்தால் போதும். பிரம்மாவை காப்பி செய்யுங்கள், அந்தளவிற்கு புத்தி உள்ளது தானே, இணைந்து சென்றாலே போதும், ஏனெனில் பாப்தாதா இருவரும் உங்களுடன் செல்லவே காத்திருக்கிறார்கள். நிராகார தந்தை பரந்தாமவாசி தான் ஆயினும் சங்கம யுகத்தில் மனிதர் மூலமாக நடிக்க வேண்டியுள்ளது. எனவே இந்த கல்பத்தில் உங்களது நடிப்பு முடிவடைவது போலவே பாப்தாதா இருவர் நடிப்பும் முடிவடையும் நேரமிது. பிறகு கல்பம் மீண்டும் ஆரம்ப மாகும், ஆகவே நிராகார தந்தையும் உங்களுடன் நடிப்பில் கட்டுப்பட்டுள்ளார். இது சுபமான பந்தனமே. நடிப்பிற்கான பந்தனம் உள்ளது. சினேக பந்தனம், சேவையின் பந்தனம் ஆனால் இனிமையான பந்தனம். கர்மவினை என்ற கடுமையான பந்தனம் அல்ல.

புதிய வருடம் எப்போதுமே வாழ்த்துக்குரிய வருடமாகும். புதிய வருடம் எப்போதுமே பாப்சமான் ஆவதற்கான வருடமாகும். புதிய வருடம்

பாபாவை பின்பறுவதற்கான வருடமாகும். புதிய வருடம் தந்தையுடன் இனிமையான வீட்டிலும் இராஜாங்கத்திலும் உடன் இருப்பதற்கான வரதானம் பெறும் ஆண்டாகும். ஏனெனில் இப்போதிருந்தே எப்போதும் உடனிருப்பீர்கள். இப்போது உடன் இருப்பதே எப்போதும் உடன் இருப்பதற்கான வரதானமாகும். இல்லையேல் நெருங்கிய உறவுக்கு பதிலாக ரத்த சம்பந்தத்திலேயே வர நேரிடும். எப்போதாவது சந்திப்பீர்கள். எப்போதாவது சந்திப்பவர் அல்லவே நீங்கள் முதல் பிறவியில் முதல் இராஜயத்தின் சுகம் முதல் நம்பரில் இராஜ்ய அதிகாரி விவ மகாராஜா விஷ்வ மகாராணியுடனான இராயல் சம்பந்தம் அதனுடைய பொலிவின் தெளிவே வேறுபட்டது. இரண்டாம் நம்பரில் விஷ்வ மகாராஜா மகாராணியின் ராயல் குடும்பத்தில் வந்தாலும் அந்த சம்பந்தமே வேறுதான். ஒரு பிறவியேனும் வித்தியாசம் காணப்படும். இதனையும் உடனிருப்பவர் என சொல்ல முடியாது எந்த ஒரு புதிய பொருளேயாயினும் ஒரு முறை பயன்படுத்திவிட்டாலும் ஒரு முறை பயன்படுத்திய பொருள் என்று தானே சொல்வோம். புதியது என்று சொல்ல மாட்டோமே. உடன் செல்வது, உடன் வருவது, முதல் பிறவி யில் ராஜாவின் ராயல் குடும்பத்திலும் வர வேண்டும். இதுவே சமநிலை என்று சொல்லப்படும். என்ன செய்ய வேண்டும், சமநிலை பெற வேண்டும் ஊர்வலத்தில் எங்கோ ஒருவராக வர வேண்டுமா!

பாப்தாதா ஞானிகள் அஞ்ஞானிகள் (ஞானமில்லாதவர்கள்) இவர்களுக்கிடையே ஒரு வித்தியாயசத்தைக் கண்டார். ஒரு காட்சியாக கண்டார். தந்தையின் குழந்தைகள் யார் அஞ்ஞானி யார் இன்றைய உலகில் விகாரி ஆத்மாக்கள் எப்படியிருக்கின்றார்கள் மிகப் பெரிய தொழிற்சாலைகளில் புகைக்கூண்டு சதா புகையை வெளியிட்டுக் கொண்டே இருக்கும் அதுபோலவே இன்றைய மனிதர்கள் விகாரிகளான காரணத்தால் எண்ணம் மற்றும் சொற் களால் பொறாமை வெறுப்பு போன்று ஏதேனும் ஒர விகார புகையை வெளியிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். கண்களிலிருந்தம் விகார புகை வெளிவந்த வண்ணம் உள்ளது. ஞானி குழந்தை களின் எண்ணம் மற்றும் சொற்களால் பரிஸ்தாவிற்கான ஆசிகளே வெளிப்படுகின்றது. அவர்களிடமிருந்து சதா விகாரப் புகை மற்றும் உங்களிடமிருந்து சதா பரிஸ்தாவிற்கான விகாரத்தின் வசமாகி விகார அக்னியின் புகை வெளியிடக்கூடாது. சதா ஆசியே வெளி வரட்டும். எப்போதாவது ஆசிக்கு மாறாக விகாரப்புகை

வெளியாகிறதா? என சோதனை செய்யுங்கள். பரிஸ்தாக்கள் என்றாலே ஆசீர்வாதங்களின் சொரூபம் ஆவீர்கள். அப்படி ஒரு சமயம் எண்ணமோ சொல்லோ அவ்வாறு வெளிபட்டால்தான் பரிஸ்தாவிலிருந்து மாறி விடவில்லையே என பாருங்கள். வீண் எண்ணங்களும் ஒரு வித புகையே. அது எரியும் நெருப்பின் புகை, இது பாதி நெருப்பின் புகை. நெருப்பு முழுமையாக எரியாதபொழுதும் புகை வரும் அல்லவா எனவே நீங்கள் எப்போதும் பரிஸ்தா ரூபத்தில் ஆசிகளையே வெளியிடுங்கள். அப்படிப் பட்டவர்களே கருணையுள்ளம், இரக்க மனமுள்ளவர் ஆவார்கள். இப்போது இவ்வாறு நடியுங்கள். தன் மீதும் பிறர் மீதும் கருணை காண்பியுங்கள். பார்த்ததை, கேட்டதை வர்ணனையும் செய்யாதீர்கள், சிந்திக்கவும் செய்யாதீர்கள், வீணானதை சிந்திக்காது, பார்க்காது இருப்பதே தன் மீது செய்யும் கருணையாகும். மேலும் யார் அப்படி செய்தார்களோ அவர்கள் பொருட்டும் இரக்கம் காண்பியுங்கள் அதாவது வீணானவற்றை பேசியவர், பார்த்தவர் மீதும் சுபபாவனை வைப்பதும் ஒரு வித கருணையேயாகும். மாறாக பார்த்த கேட்ட வீண் விசயங்களை வர்ணனை செய்வது விதையை மரமாக வளர்ப்பதாகும், வாயுமண்டலத்தில் பரப்புவதாகும். அது மரமாகிறது ஏனெனில் கேட்ட பார்த்த வீண் விசயத்தை தன் மனதில் வைக்கமுடியாதது ஒன்று, பிறருக்கு சொல்வது வர்ணனை செய்வது. ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு செல்லும் போது என்னவாகும் ஒன்று பலவாகும் அல்லவா. ஒன்றோடு ஒன்று மற்றொன்று என சேர சேர மாலையாகும். மேலும் அதை செய்தவர் வீண் விசயத்தை தெளிவு படுத்துவதில் உறுதியாகி விடுவார். அப்போது வாயுமண்டலத்தில் என்ன பரவும் வீண் விசயம்தான் பரவும் அல்லவா. இது புகை போட்டதாகும். இது ஆசியா? புகையா? ஒருவரிலிருந்து பலருக்கு தெரிய வருகிறது. எனவே வீணானவற்றை பார்த்தாலும் கேட்டாலும் அன்புடன் சுபபாவனையுடன் உள்ளடக்கி விடுங்கள், விரிவு படுத்தாதீர்கள். இதுவே நீங்கள் பிறர் மீது காட்டும் கருணை மற்றும் ஆசியாகும் தனக்கு சமமாக மாற்றி தன்னுடன் இருப்பதற்கும் செல்வதற்குமாக தயார் செய்யுங்கள். இல்லையேல் சற்று இருக்க விரும்புகிறீர்களா, சற்று இருக்க விரும்பினாலும் பாப்சமான் ஆன பிறகு இருக்கலாமே. அப்படியே இருந்து விடாதீர்கள் பாப்சமான் ஆன பிறகே பொருத்திருங்கள். அனுமதி தரப்படுகிறது. நீங்கள் எவரெடிதானே சேவையோ, டிராமாவோ காலதாமதப்படுத்தலாம் அது வேறு விசயம் ஆனால் காலதாமதத்திற்கு நீங்கள் காரணம் ஏற்படுத்துபவர்

அல்லதானே. கர்மங்களின் கணக்கு வழக்கின், கணக்கேடு தெள்ளத்தெளிவாக இருக்க வேண்டும். புரிந்ததா, நல்லது.

**இரட்டை அயல்நாட்டவருடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு: -**எப்போதும் தன்னை சங்கமயுகத்தின் சிரேஷ்ட ஆத்மாக்களாக அனுபவம் செய்கிறீர்களா சிரேட ஆத்மாக்களின் ஒவ்வொரு எண்ணமும், சொல்லும், செயலும் இயல்பாகவே சிரேஷ்டமானதாகும். ஒவ்வொரு செயலும் உயர்வாகி உள்ளதா? ஒருவர் எப்படிப்பட்டவரோ அவரது செயலும் சிரேஷ்டமாகத்தானே இருக்கும். எப்படி நினைவோ அப்படியே மனோநிலை. உயர்ந்த மனோநிலை என்பது இயற்கை யானது, ஏனெனில் நீங்களே விசேஷ ஆத்மாக்கள். உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தையின் குழந்தைகள் தந்தையைப் போன்றே குழந்தைகளும் உயர்ந்தவர்களே. தந்தையைப் போல் பிள்ளை என சொல்வதுண்டு. நீங்கள் அப்படிதானே உங்கள் அனைவர் உள்ளத்திலும் இருப்பவர் யார் உள்ளத்தில் உறைந்திருப்பவரே புத்தியிலும், சொல்லிலும், எண்ணத்திலும் இருப்பாரல்லவா. நீங்களும் வாழ்த்து அட்டைகளை இதய வடிவில் கொண்டு வருகிறீர்கள். பரிசாகவும் இதய வடிவத்தையே வழங்குகிறீர்கள். தனது மனோநிலையை படமாக பிடித்து அனுப்புகிறீர்கள். தந்தையின் உள்ளத்தில் இருக்கும் ஒருவர் பேசுவது, செய்வது யாவும் எப்போதும் பாப்சமானாகவே இருக்கும். பாப்சமானாவது கடினமல்லவே ஒரு புள்ளியை நினைவு செய்தாலே கடினம் இல்லையென்றாகி விடும். ஒரு டாட் (dot) நினைத்தால் பிரச்சனை நாட் (not) ஆகி விடும். புள்ளியை மறப்பதால் தொல்லை மறப்பதில்லை. புள்ளி வைப்பது எவ்வளவு சகஜம். முழு ஞானமும் ஒரு புள்ளியில் தான் அடங்கி உள்ளது. நீங்களும் புள்ளி பாபாவும் புள்ளி, முடிந்தவற்றிற்கும் வைக்கவேண்டியது புள்ளி. அவ்வளவு தான். சின்னஞ்சிறு குழந்தை கூட எழுத ஆரம்பிக்கும் பொழுது பென்சில் பேப்பர் கையில் கொடுத்து பென்சிலை வைத்தவுடனேயே புள்ளி விழுந்து விடும். புள்ளி விழுமல்லவா? இதுவும் குழந்தைகளின் விளையாட்டே. இந்த ஞானப் படிப்பு முழுவதுமே விளையாட்டு தான். கடினமான வேலை தரவில்லை. வேலையும் சுலபமே நீங்கள் சகஜயோகி தான். பெயர் பலகையில் கூட சகஜ ராஜயோகம் என எழுதப்பட்டுள்ளது. ஆகவே சகஜமாகவே அனுபவம் செய்யுங்கள். இதுவே ஞானம் என்று சொல்லப்படும். ஞானம் நிறைந்தவர் இயல்பாகவே சக்தி நிறைந்தவராகவும் இருப்பார். ஏனெனில் ஞானத்தை

ஒளியும் சக்தியுமாக சொல்லப்படும். ஞானம் நிறைந்த ஆத்மாக்கள் சுலபமாகவே பவர்புல்லாக இருப்பதால் அனைத்து விசயத்திலும் சுலபமாகவே முன்னேறிச் செல்வார்கள். இந்தக் குழுவில் அனைவரும் சகஜயோகிகளே. இப்படியே எப்போதும் சகஜயோகியாகவே இருங்கள். நல்லது.

**வரதானம்: சந்தேகமான எண்ணங்களை முடித்து விட்டு மாயையினை வென்று வெற்றி இரத்தினம் ஆகுக!**

ஒருபோதும் நான் தோல்வியடைந்து விடுவேனோ என்று தெரியவில்லையே என முன்னதாகவே சந்தேகத்திற்குரிய எண்ணங்களை உருவாக்காதீர்கள். சந்தேகம் வந்தாலே தோல்வியே வந்து சேரும். எனவே எப்போதும் வெற்றி அடைந்தே தீருவேன் என்ற எண்ணம் வையுங்கள். வெற்றி எனது பிறப்புரிமை, இப்படி அதிகாரி ஆகி செயல்படுவதால் வெற்றிக்கான அதிகாரம் கிடைத்தே தீரும். இதனாலேயே வெற்றி ரத்தினமாவீர்கள். எனவே ஞானக்கடலின் குழந்தைகள் வாயிலிருந்து தெரியவில்லையே என்ற வார்த்தையே வெளிவரக் கூடாது.

**சுலோகன்: இரக்க உணர்வு சுலபமாகவே நிமித்தமாக முன்னின்று செயல்படும் தன்மை வெளிக்கொணரும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂